
www.padippakam.com

குமாரதுரை அருணாசலம்



# இலங்கை அரசியல் வரலாறு

## – இழப்புகளும் பதிவுகளும் –

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அரசியல் வரலாறு

## - இழப்புகளும் பதிவுகளும் -

குமாரதுரை அருணாசலம்

மகாவெலி வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை அரசியல் வரலாறு
- இழப்புகளும் பதிவுகளும் -

© குமாரதுரை அருணாசலம்

A. Kumarathurai
Stampes - vej 24 ST - TV
8260 Aarhus - J
Denmark
+004561305721
kumarathurai@kumarathurai.com

Published By
Mahaveli Publishers

First Edition - April 2012

Cover Design & Layout
Nawas Sawfi

Printed by
Design World Printers - Sainthamaruthu
077 6401296, 071 8217910

Pages - 516

Price - 800/=

படிப்பகம்

www.padippakam.com



உரிமை, தனித்துவம், தாயகம் என்ற
போராட்டத்தின் பின்னால்
உருவான அதிகாரமற்றுப்போன அரசியலிலும்
அரசியல்வாதிகளிலும் நம்பிக்கை இழந்து
அரசியல் சதிகாரர்களால் தன் உயிரையும் இழந்த
நமது அரசியல் அடையாளம்
எனது அன்புச் சகோதரர்
அருணாசலம் தங்கத்துரை அவர்கட்கு

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் தேசிய அரசியலில் நீண்டகாலமாக கட்டமைக்கப்பட்ட தேசியம், தாயகம், விடுதலை என்கின்ற பல புனிதங்களை கேள்விக்குள்ளாக்குதல்.

இலங்கையின் அரசியல் வரலாறு இழப்புகளும் பதிவுகளும் எனும் தலைப்பில் வெளிவரும் இன்நூல் எதிர்கால சமூகத்தினருக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாய் இருக்கும். அரசியல் வரலாறு எனும் பெயரில் சிங்கள மொழியில் எழுதப்படும் நூல்களில் பெரும்பாலானவை சிங்கள இனம் சார்ந்ததாகவும், தமிழில் எழுதப்படுகின்ற நூல்களில் பெரும்பாலானவை தமிழர்களின் அரசியல் சார்பானவையாகவும் இருந்துவருவது குறித்து இருபுறமும் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இந்த நிலையில் சிங்கள அரசியல் செயற்பாடுகளில் காணப்படுகின்ற நியாயத்தன்மைகள் தமிழர் தரப்பு வாசிப்பிற்கு நீண்டகாலமாகவே மறுக்கப்பட்டு வருகின்றது. அதேபோன்று தமிழர் தரப்பு அரசியல் செயற்பாடுகளின் பிழையான போக்குகள் எழுத்து முயற்சிகளில் அம்பலப்படுத்தப்படக் கூடாது என்கின்ற சுயதணிக்கை ஒன்றை தமிழ் எழுத்தாளர்களில் பலர் மேற்கொண்டுவருகின்றனர். இந்த மரபுகளைக் கடந்து குமாரதுரை அவர்களால் இலங்கையின் அரசியல் வரலாறு எனும் நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

1947 ஆம் ஆண்டு இடம்பெற்ற முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் இருந்து இனறுவரையான சகல தேர்தல்களும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளதோடு ஒவ்வொரு தேர்தலைத் தொடர்ந்தும் ஏற்பட்டுவந்த அரசியல் மாற்றங்கள் அலசப்பட்டுள்ளன. குறிப்பாக தென்னிலங்கை கட்சிகளின் அரசியல் செயற்பாடுகளும்

அதையொட்டிய கிழக்கு, வடக்கு அரசியல் கட்சிகளின் எதிர்வினைகளும் ஒருமித்த பார்வைக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளின் பின்னணியில் இருந்த வரலாற்றுக் காரணங்களும் இனவாத அணுகுமுறைகளும் தமிழ் சிங்கள வேறுபாடு களைக் கடந்து ஒப்புவிக்கப்பட்டிருப்பது இந்நூலில் விசேட அம்சமாகும்.

புலமைசார் நூல்களின் கிடைக்கின்ற வரலாற்றுத் தகவல்களையும் ஆவணங்களையும் வரிசைப்படுத்துவது என்கின்ற வழமைகளை மீறி குமாரதுரை அவர்களின் எழுத்துக்கள் இலங்கையில் வரலாற்று நிகழ்வுகளை விமர்சனப் பாங்கோடு அணுகுகின்றன. இதன் காரணமாக தமிழ் தேசிய அரசியலில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்டு வந்த தேசியம், தாயகம், விடுதலை என்கின்ற பல புனிதங்களை கேள்விக்குள்ளாக்குவதில் இவரது எழுத்துக்கள் வெற்றிபெற்றிருக்கின்றன.

தமிழில் எழுதப்படும் வரலாற்று நூல் எல்லாம் யாழ்ப்பாணத்தை சுற்றியே மையங்கொண்டிருக்கும் இருள்வெளியைத் தாண்டி முஸ்லிம்களினதும் கிழக்கு மாகாண மக்களினதும் மனச்சாட்சிகளாக இலங்கையினது வரலாறும் விமர்சனங்களும் தொகுக்கப்பட்டிருப்பது இந்நூலுக்குரிய மேலும் ஒரு சிறப்பம்சமாகும்.

திருகோணமலை மாவட்டம் கிளிவெட்டி கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட குமாரதுரை அவர்கள் 25.05.1939 பிறந்தவர். தனது சிறுவயது முதற்கொண்டே தமிழரசுக்கட்சி அரசியல் சூழலில் வளர்ந்த இவர் கிழக்கிலங்கையின் முதுபெரும் அரசியல்வாதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

ஆயுதப்போராட்டம் உருக்கொண்ட காலங்களில் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர் பல சித்திரவதைகளை அனுபவிக்க நேர்ந்தது. 1975–1976 ஆம் ஆண்டுகளில் சுமார் 11 மாதங்கள் மட்டக்களப்பு சிறையிலும் 1984 – 1986 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சுமார் இரண்டுவருடங்கள் வெலிக்கடைச் சிறையிலும் அடைக்கப் பட்டிருந்தார்.

1986 ஆம் ஆண்டு இலங்கையை விட்டு வெளியேறி டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கோர நேர்ந்த வேளையிலும் பொது அரசியல் வாழ்வில் இருந்து தன்னை விலக்கிக்கொள்ள அவரால் முடியவில்லை. மிதவாத,

www.padippakam.com

ஆயுதப்போராட்ட தலைமைகளாக இருந்த பல தமிழ் தலைவர்களுடன் நெருங்கி பழகிய, செயற்பட்ட அனுபவங்கள் நிறைந்த இவர் இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காக ஓயாது உழைத்து வருபவர். ஐரோப்பிய வானொலிகளில் இடம்பெறும் அரசியற் கருத்தாடல்களில் இவரது சிம்மக்குரல் புகலிடத்தமிழர்களிடையே மிகவும் பரிட்சயமானது. முகவரி இல்லாத பல நூறு இணையத்தளங்களுக்குள்ளும் சொந்தப் பெயருடன் எழுதிவரும் வெகு சிலரில் இவரும் ஒருவர். அதுமட்டுமன்றி கடந்த சில வருடங்களாக இலங்கையின் அரசியல் களசெயற்பாடுகளில் நேரடியாக தமது பங்களிப்பையும் செலுத்திவரும் குமாரதுரை அவர்கள் எழுதி வெளியிடும் முதலாவது நூல் இதுவாகும்.

பலநூறு அனுபவங்களினதும் பட்டறிவுகளினதும் விளைச்சலாக வெளிவரும் இந்த நூல் எதிர்காலத்தில் இலங்கை அரசியல் குறித்து ஆர்வம் கொண்ட அனைவருக்கும் ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று எண்ணுகின்றேன். கடந்த 30 வருடகால யுத்தத்தில் விளைவுகளில் ஒன்றாக அரசியல் படிப்பதும் பேசுவதும் மரணதண்டனைக்குரிய குற்றமாக இருந்து வந்தது. இன்று அந்தநிலை மாறி இளைஞர் சமூதாயத்தினர் இடையே அரசியல் அக்கறை பெருகிவருகின்றது. இந்தநிலையில் தமிழ் பேசும் எமது இளம் சமூதாயம் நிச்சயமாக குமாரதுரை அவர்களின் இந்த நூலை செவ்வனே பயன்படுத்துவார்கள் என்று நம்புகின்றேன்.

எம்.ஆர்.ஷ்ராலின்
*16.04.2012*

படிப்பகம்

www.padippakam.com

## அரசியலில்
## ஒரு புதுமையான எழுத்து அரசியல்.

இலங்கை வரலாற்றில் ஆட்சியும், அதிகாரமும், அரசியலும் வரலாற்றின் தொடக்கத்திலிருந்து போராட்டத்தின் மூலமே பெறப்பட்டு வந்திருகிறது.

விஜயனுக்குப் பிறகான மன்னர்களின் இராச்சிய காலப் போராட்டங்கள் அதனைத் தொடர்ந்து போத்துக்கீசரின் ஆக்கிரமிப்பு, அவர்களுடன் போராடி ஆட்சிபிடித்த ஒல்லாந்தரின் ஆட்சி, அவர்களை விரட்டி பின் ஆட்சிக்கு வந்த பிரித்தானியர் என்று ஜனநாயகத்திற்கு முன்னரான ஆட்சி அதிகாரத்தின் போராட்டம் அமைந்தது.

ஜனநாயகமும் சுதந்திரமும் பெறப்பட்ட பின்னரான இலங்கையின் ஆட்சியிலும் அரசியலிலும் போராட்டத்தின் குணம் மாறாமலும் கொள்கை மாறாமலும் வரலாறு நெடுகிலும் அது தொடர்வதாகவே இருக்கிறது.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஆட்சியாளர்கள்தான் மாறிக்கொண் டிருக்கின்றார்கள் போராட்டம் மாறவில்லை. போராட்டத்தை தவிர்த்து இலங்கையின் அரசியல் வரலாற்றை யாரும் எழுதிவிட முடியாது.

அத்தகையதொரு போராட்ட அரசியலின் ஒரு யுகத்தை, குமாரதுரை அருணாசலம் அவர்கள் தனக்கிருந்த தேர்ந்த அரசியல் வரலாற்று அனுபவத்தின் மூலம் பெறுமதிமிக்க ஓர் எழுத்துப் பணியாக வரலாறு போற்றும் வகையில் படைத்திருக்கிறார். இந்நூலில் பல சிறப்புக்களை காணமுடிகிறது.

படிப்பகம்

குறிப்பாக வரலாற்றை எதுழுகின்றவர்கள் தான் சார்ந்து அல்லது தனது சமூகம் சார்ந்து அல்லது தனது தேசம் சார்ந்து தமது தகவல் வைப்புக்களை வைப்பார்கள். அதற்கு மாற்றமாக குமாரதுரை அவர்கள் நிஜமான ஒரு வரலாற்றை அவ்வாறே பிரதி எடுத்ததுபோன்று எதுவித பக்கச் சார்புகளு மில்லாமல், மிகைப்படுத்துகின்ற புனைவுகளுமில்லாமல், யாருக்கும் அஞ்சாமல் புதுமையான எழுத்து வைப்பாக இந்நூலை எழுதியிருக்கன்றார்.

பின்நவீனத்துவ வாசிப்பில் படைப்பு என்ற விடயம் நாவல், சிறுகதை, கவிதை என்ற வடிவ வேறுபாடுகளுக்கப்பால் பிரதி (Text) என்ற ஒற்றையான வடிவில் பார்க்கப்படுகிறது. இத்தகைய வாசிப்பினை இவ் வரலாற்று நூலில் காணமுடிகிறது. சிலஇடங்களில் நாவலாக சில இடங்களில் சிறுகதையாக சில இடங்களில் திகிலூட்டும் துப்பறியும் கதையாக என்று பன்முக எழுத்து முறை சீரான தன்மையுடன் இடைவிடாத வாசிப்பிற்கு ஏற்றவாறு வைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பின்நவீன வரலாற்று நூலாக இதனைக் கூறலாம்.

இலங்கையின் அரசியல் வரலாறு – இழப்புகளும் பதிவுகளும் என்ற தலைப்பில் அமைந்த இந்த நூலின் உள்ளடக்கம் குமாரதுரை அருணாசலம் என்ற தமிழனின் சமூகம் சார்ந்த இழப்புகளாகவும் பதிவுகளாகவும் இல்லாமல் சிங்கள முஸ்லிம் மலையக மக்கள் என்ற பல்லின சமூக இருப்புகளும் இழப்புகளும் நேர்மையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ் தேசியத்தின் போருக்கு முந்திய காலம், போர்க்காலம், போருக்குப் பிந்திய காலம் என்ற மூன்று யுகங்களிலும் தமிழ் சமூகத்தின் இருப்பும் அரசியலும் எத்தகைய சம்பவங்களால் தொகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு காரணகர்த்தாக்கள் யார்? அவர்களுக்கெல்லாம் இறுதியில் என்ன நடந்தது? இனி நமது எதிர்காலம் எத்தகையதாக அமைய வேண்டும்? என்ற கேள்விகளுக்கான விடைகளைத் தேடுகின்ற இன்றைய பரம்பரையினருக்கான சிந்தனைகளை வழங்குகின்ற ஒரு புதிய அரசியல் வரலாற்றை இந்நூல் தொடங்கிவைக்கும் என்று நான் நம்புகிறேன்.

**நவாஸ் சௌபி**
***03.05.2012***

# இழப்புகளுக்கும் பதிவுகளுக்குமான எனது சாட்சியம்

சுமார் 400 ஆண்டுகாலம் ஐரோப்பிய எகாதிபத்தியங்ளின் ஆக்கிரமிப்பின் கீழ் ஆளுமை செய்யப்பட்ட இலங்கை 1948ம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. பெறப்பட்ட சுதந்திரம் அன்றைய சுதந்திரதினை பெறுவதற்கு தம்மை தயார் படுத்திய முதலாவது பாராளுமன்றத்தின் ஆட்சியாளர்களாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதமர் திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களின் ஆலோசனைக்கமைய அவரது கட்சியினைச் சார்ந்த பெரும்பாலானோரும் ஏனைய அரசியல் கட்சிகளைச் சார்ந்த தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் பேக்கர்கள் போன்ற சிறுபான்மை இனத்தவர்களும் இணைந்தே ஏறக்குறைய அந்நாட்டில் வாழ்ந்த பத்துலட்சம் தோட்டத் தொழிலாளர்களான மலையக மக்களுக்கிருந்த வாக்குரிமை என்னும் சுதந்திரத்தினை இல்லாதொழித்தனர். இந்நிலையில் இலங்கைக்கு வழங்கப்பட்ட சுதந்திரம் யார், யாருக்கு என்னும் வினா அன்றே எழுப்பப்படலாயிற்று. இச்சம்பவத்திற்கு இலங்கையில் வாழ்ந்த அனைத்துச் சிங்களமக்களும், அதாவது மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்தில் அங்கம்வகித்த பெரும்பான்மை இனத்தைச் சார்ந்தவர்களும் தமது ஆதரவினை வழங்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அன்றைய பாராளுமன்றத்தில் தொண்ணூற்றைந்து உறுப்பினர்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களில் இந்திய தோட்டத் தொழிலாள மக்களின் குடியுரிமையினை இல்லாதொழிப்பதற்கான சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தவர்கள் ஐம்பத்திரெண்டு பிரதிநிதிகள் மட்டுமே.

மேற்கூறிய ஐம்பத்திரெண்டு உறுப்பினர்களில் எத்தனை உறுப்பினர்கள் பெரும்பான்மை இனத்தினைச் சார்ந்தவர்கள் என்பதும் இங்கு கவனிக்கப்படவேண்டிய விடயமாகும். இவர்களில் முப்பத்திமூன்று உறுப்பினர்கள் மட்டுமே பெரும்பான்மை இனத்தினைச் சார்ந்தவர்கள் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ள அதேவேளை, பத்தொன்பது உறுப்பினர்கள் சிறுபான்மை இனத்தினைச் சார்ந்தவர்கள் என்பது வேதனையான விடயமாகவே அமைந்துள்ளது. அதேவேளை மேற்படி சட்டமூலத்தினை எதிர்த்து இருபத்திரெண்டு பெரும்பான்மை இனத்தினைச் சார்ந்த சிங்களப் பிரதிநிதிகள் வாக்களித்திருப்பதும் இங்கு ஞாபகமூட்டப்படவேண்டிய விடயமாகும்.

இந்நிலையில் மேற்கூறிய மலையக மக்களின் குடியுரிமையினை இல்லாதொழிக்கும் நடவடிக்கைக்கு பொறுப்பானவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பீடமும், சிறுபான்மை இனத்தைச் சார்ந்த ஒரு சாராருமே தவிர ஒட்டுமொத்தமான சிங்கள மக்களும் இப்பிரச்சினைக்கு உடந்தையானவர்கள் அல்ல என்பது தெளிவாகின்றது. இதன்மூலம் அரசியல் என்பது எவ்வளவு சதிவேலைகளையும், ஏமாற்று வேலைகளையும் கொண்டது என்பது தெளிவாகின்றது. மேற்கூறிய சட்டமூலத்திற்கு சிறுபான்மை இனத்தவர்கள் அன்று வாக்களியாது ஒதுங்கியிருந்தால் சட்டமூலம் நிறைவேறியிருக்க முடியாது. அதேவேளை சட்டமூலம் தோல்வியுற்றிருந்தால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருக்கும். அவ்வாறான ஒரு சம்பவத்திற்கு சிறுபான்மை இனத்தவர்கள் வழிவகுத்திருப்பார்களேயானால் இலங்கையில் இனப்பிரச்சினை என ஒன்று தோன்றியிருக்காது இதுவே யதார்த்தமாகும்.

ஈரான் யுத்தத்தில் சதாம் உசைனைத் தட்டிக் கொடுத்த அமெரிக்காவிற்கு 1991ல் அவர் பெரும் எதிரியானார். அவரிடம் உலகை அழிக்கக்கூடிய பயங்கரமான ஆயுதங்கள் இருப்பதாக்கூறி அமெரிக்க அரசும், பிரித்தானிய அரசும் இணைந்து மேற்குலக நாடுகள் சிலவற்றினையும் தம்முடன் இணைத்துக்கொண்டு ஈராக் என்னும் நாட்டினைனயே ஒரு குட்டிக் கிரோசிமாவாக மாற்றியமைத்தார்கள். அதனை நிறைவேற்றியதன் பின்னர் தமது உள்ளவுத் துறையினரால் வழங்கப்பட்ட தகவல்கள் பிழையானதென அறிக்கைவேறு வெளியிட்டார்கள். ஆப்கானிஸ்தான் நாட்டில் ரஸ்யப்படைகள் நிலைகொண்டிருந்த காலத்தில் ஒசாமா பீன்லேடனைத் தட்டிக்கொடுத்து அளவிற்கதிகமான ஆயுதங்களையும், நிதியினையும் வழங்கிய அமெரிக்காவிற்கு கடந்த ஒரு தசாப்த காலமாக அவர் உலகின் முன்னணிப் பயங்கரவாதியாக அமெரிக்காவின் பட்டியலில் முதன்மை வகித்தார். சீக்கிய

அகாலித கட்சியை ஒழிப்பதற்காக திருமதி இந்திரா காந்தி பிந்திரன்வாலேயை தட்டிக் கொடுத்தார். முடிவு இந்திரா காந்தியின் உயிருக்கே உலையானது. ஒரு காலத்தில் இலங்கையில் எவராலும் வெற்றிகொள்ளமுடியாதென மேற்குலக ஏகாதிபத்திய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினை, இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கைக்கமைய இலங்கையில் அமைதியினை நிலைநாட்டுவதற்கு இரு நாடுகளினதும் இணக்கத்துடன் இலங்கையில் தமிழ்மக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்காக வருகைகதந்திருந்த இந்திய அமைதி காக்கும் படையினரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கென இலங்கையின் அன்றைய ஐ.தே.கட்சியின் ஜனாதிபதியான திரு பிரேமதாசா நண்பர்களாக்கினார் முடிவு அவரின் உயிரினையே பலி கொண்டது. இலங்கையில் தமிழ் மக்கள் பாதிப்பிற்குள்ளானபோது அவர்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யவென இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதம். பணம் பயிற்சிக்கான தளம்போன்ற அனைத்தினையும் கொடுத்து உதவியமைக்காகவே திரு ராஜீவ் காந்தி அவர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்.

உலகப் பயங்கரவாதிகளாக பட்டியலிடப்பட்டவர்கள் அரச விமானங்களில் கௌரவ பிரசைகளாக வலம் வந்தனர். மீண்டும் பயங்கரவாதிகளாயினர். அரசுடன் இணைந்திருந்த காலப்பகுதியில் தமது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு துணைபோக மறுத்த அரசியல் தலைவர்களையும் தம்மைப்போன்று ஆயுதம் ஏந்திய பல நூற்றுக்கணக்கான மாற்று இயக்கங்களின் இளைஞர்களையும் துப்பாக்கிகொண்டு துவேசம் செய்தனர். இந்நிலையில் யார் துரோகிகள் யார் தியாகிகள்.? இலங்கை அரசுடன் கூடிக்குலாவாத, விருந்து உண்ணாத இலங்கை அரசிடம் பணம் வாங்காத, இலங்கை அரசின் விமானங்களிலும், ஹெலிகப்டர்களிலும் அரச வாகனங்களிலும், உலாவராத இலங்கை அரசின் உதவியுடன் மற்றைய இயக்கங்களை அழித்தொழிக்காத இயக்கம் ஏதேனும் இலங்கையில் உண்டென தமிழ் மக்கள் யாரேனும் அடையாளங் காட்டுவீர்களா? ஈழத்துக் காந்தி என தமிழ் மக்கள் பலராலும் அன்று போற்றிப் புகழப்பட்ட தந்தை செல்வாவின் வாரிசுகள் தாங்களே எனக்கூறி தமிழ் மக்களின் வாக்குகளைப்பெற்று தம்மை பொருளாதாரரீதியாக வளர்த்துக்கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு சம்பந்தன், தமிழரசுக் கட்சியின் செயலாளர் திரு மாவை சேனாதிராசா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு அப்பாத்துரை விநாயகமூர்த்தி போன்றவர்களும் அவர்களின் கையாட்களும் விடுதலைப் புலிகளாலும்

www.padippakam.com

ஏனைய ஆயுத அமைப்புக்களாலும் மேற்கொள்ளப்பட்ட பல்லாயிரக் கணக்கான அப்பாவிகளினதும் அரசியல்வாதிகளினதும், மதத் தலைவர்களினதும், கொலைகளை அங்கீகரித்து பயங்கரவாதிகளுடன் தேன் நிலவு கொண்டாடினார்களே அது தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டமா? மேற்படி தகவல்களை மறுப்பவர்கள், விமர்சனங்களை முன்வைக்க விரும்புபவர்கள் அனைவரும் எம்முடன் தொடர்பு கொள்வதற்கான வசதிகளை நாம் வழங்கியுள்ளோம். அதனை பயன்படுத்தத் தவறின் அனைவரும் இந்த உண்மையை ஒப்புக்கொண்டே ஆகவேண்டும். இச்சம்பவங்களே இலங்கைவாழ் தமிழ் மக்களின் வாழ்வு சீரழிவதற்கு வழிகோலியது!

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் பலதரப்பட்ட அரசியல் ஆய்வலர்களாலும், பல்கலைக்கழக பேராசிரியர்களாலும் இன்றுவரை இலங்கையின் அரசியல் வரலாறு தொடர்பான பல நூல்கள் வெளிவந்துள்ளன. அந்நூல்களில் 1980 காலப்பகுதிக்கு முன்னரான நூல்கள் பலவும் இலங்கையின் யதார்த்த அரசியலை வெளிக்கொணர்வதற்கான தகவல்களுக்கு முன்னுரிமை வழங்கியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. அதன்பின்னர் வெளியிடப்பட்ட நூல்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தினை நியாயப்படுத்துபவையாக ஒரு பிரிவினராலும், அவர்களுக்கு அஞ்சியநிலையில் உண்மை நிலைமையினை வெளிக்கொணர முடியாதவாறான வெளியீடுகளும் வெளிவந்துள்ளன. இவை அனைத்திற்கும் மாறாக இந்நூல் பிரசுரமாகின்றது என்பதனை வாசகர்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

உண்மை மௌனிப்பதுண்டு, மரணிப்பதில்லை.
பொய் குதூகலிப்பதுண்டு, நிலைத்திருப்பதில்லை.

குமாரதுரை அருணாசலம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

பெரும்பான்மை அரசியலை ஆதரிப்பதாகவே
ஆரம்பித்த சிறுபான்மை அரசியல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# பெரும்பான்மை அரசியலை ஆதரிப்பதாகவே ஆரம்பித்த சிறுபான்மை அரசியல்

இலங்கைத் திருநாட்டின் அரசியல் நிகழ்வுகள் தொடர்பாக அக்கறை கொண்டவர்களுக்கும், இலங்கையைத் தாயகமாகக் கொண்ட தமிழ் மக்களின் அறிதலுக்கும். இலங்கையின் அரசியல் வரலாறுகள் நூல் வடிவில் வெளியிடப்படும் அதேவேளை விரைவில் இலத்திரனியல் ஊடகத்தினூடாகவும் வெளியிடுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளோம்.
ஆசிரியர் மஹாவலி. கொம்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற அரசியல் ரீதியான தகவல்களை பல அரசியல் ஆய்வலர்கள் நூல்களாக (புத்தகங்களாக) வெளியிட்டுள்ளார்கள். மேற்படி நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் வாசகர்களுக்கு ஏற்படும் விளக்கக்குறைவான விடயங்கள் அல்லது தவறானதென அவர்களால் கருதப்படும் விடயங்கள் மற்றும் மேலதிகமாக அறிய விரும்பும் விடயங்களுக்கான விடைகளை சம்பந்தப்பட்ட நூலினை வெளியிட்ட ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவுபெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் சிரமமானதாக அமைந்துள்ளது. இந்நிலையில் மேற்படி வரலாற்றினை சுருக்கமாகவும், தெளிவாகவும் நாம் வெளியிட்டுள்ள அதேவேளை இத்தகவல்களை வாசிப்பவர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும், விளக்கமின்மையான விடயங்களையும், தவறானதெனக் கருதும் விடயங்களையும் (E.Mail) மின்னஞ்சல் மூலம் எம்முடன் தொடர்பு கொண்டு



படிப்பகம்

www.padippakam.com

தமக்கான விளக்கங்களையும், குறிப்பிடத் தவறிய விடயங்களையும் அறிந்து கொள்ளும் நோக்குடன் எம்மால் எழுதப்பட்டுள்ள அரசியல் வரலாற்றினை இலத்திரனியல் ஊடகத்தின்மூலமும் (இணையத்தளத்தின்மூலம்) பிரசுரிக்க உள்ளோம்.

இதன்மூலம் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மொழியினைக் கற்றுள்ள அனைத்து வாசகர்களும் தகவல்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பினையும், இந்நூல் தொடர்பிலும், அரசியல் தொடர்பாக விளக்கப்படாத விடயங்களுக்கான மேலதிக தகவல்களையும் அறிந்து கொள்ளக்கூடிய வழிவகைகளையும் நாம் வழங்குவதற்கும் தயாராகவுள்ளோம். இந்நடைமுறையானது எவ்வித பணச் செலவுமின்றி (கணனி) வசதியுள்ள அனைத்து வாசகர்களின் இல்லங்களையும் நாடிச் செல்வதுடன் அரசியல் தொடர்பான ஆர்வமுள்ள அனைவருக்கும் ஓர் வரப்பிரசாதமான விடயமாகவே அமையுமென நாம் கருதுகின்றோம்.

இலங்கை அரசியலில் காலத்திற்குக் காலம் ஆட்சிபீடத்தில் அமர்பவர்களும், எதிர்க்கட்சி வரிசையில் அமர்பவர்களும் தமது அரசியல் ஆசனங்களை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்வதற்காக தாம் சார்ந்த அரசியல் கட்சிகளின் பெயர்களை காலத்திற்கேற்றவாறு மாற்றிக்கொள்வது நடைமுறையான விடயமாக இன்று இடம்பெறுகின்றது. அதற்கமைய பிரதான அரசியல் கட்சிகள் எவ்வாறு தமது அடையாளங்களை மாற்றியுள்ளார்கள் என்னும் விபரத்தினையும் இங்கு தருகின்றோம்.

1. ஐ.தே.கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி, ஜனநாயக தேசிய முன்னணி.
2. ஸ்ரீ.ல.சு.கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, ஐக்கிய சோஷலிச முன்னணி, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு.
3. தமிழரசுக் கட்சி, தமிழர் கூட்டணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு.

மேற்படி பெயர் மாற்றங்கள் அனைத்தும் தத்தமது பதவிகளை பாதுகாத்துக் கொள்வதற்காகவே மேற்கொள்ளப்பட்டவையாகும். (உதாரணமாக) மாறுபட்ட கருத்துக்களை உள்ளடக்கிய அரசியல் கட்சிகளையும் தம்முடன் இணைத்து



படிப்பகம்

பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களை தமதாக்கிக் கொள்வதன்மூலம் ஆட்சி அதிகாரத்தினை தாம் கைப்பற்றுவதற்கான ஓர் இலகுவான நடைமுறையாகவே இதனைக் கையாள்கின்றனர். ஆனால் அங்கும் பெரும்பான்மையான ஆசனங்களை எந்தக் கட்சி பெற்றிருக்கின்றதோ அவர்களின் ஆதிக்கமே கோலோச்சுவது நடைமுறையாகும்.

முஸ்லிம் மக்களின் அரசியல் கட்சிகள் பற்றியும், மலையக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகள் பற்றியதுமான வரலாறுகள் இங்கு சுருக்கமாகவே எழுதப்பட்டுள்ளது. காரணம் அவர்கள் தமது மக்களின் உரிமைகளையும், தேவைகளையும் தேசியக் கட்சிகளான பெரும்பான்மைக் கட்சிகளுடன் இணைத்து காலத்திற்கு ஏற்றவாறு தமது மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதால் இலங்கைத் தமிழர்களைப் போன்ற அரசியல் பின்னடைவு அவர்களுக்கு ஏற்படவில்லை. அதன் காரணமாகவே அவர்களின் அரசியல் தொடர்பில் நாம் இங்கு சுருக்கமான தகவல்களை தெரிவித்துள்ளோம்.

## ஜனநாயகம் என்றால் என்ன?

ஜனநாயகம் என்பது மக்களுடைய வாக்குகளினால், மக்களின் நலன்களைப் பேணுவதற்காக மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளால் நடாத்தப்படும் ஆட்சியென ஆபிரகாம் லிங்கன் அவர்கள் விபரித்துள்ளார். சகல ஜனநாயக கட்டமைப்புகளிலும் பெரும்பான்மை பலத்தின்மூலம் பிரஜைகள் சுதந்திரமாக அரசியல் தீர்வுகளை மேற்கொள்கின்றனர். ஆனால் பெரும்பான்மைபலம் என்பது எப்பொழுதும் ஜனநாயகமாக அமையாது. பெரும்பான்மைப் பலத்தின்பேரால் 85 சதவீதத்தினர் 15 சதவீதத்தினரின் எதிர்பார்ப்புகளையும், உரிமைகளையும் ஒடுக்குவது ஒரு நீதியான, நியாயமான நடைமுறையெனக் கொள்ளமுடியாது. ஒரு ஜனநாயக சமூகத்தில் பெரும்பான்மை ஆட்சியானது தனிநபர்களின் மனித உரிமைகளையும் உத்தரவாதபடுத்தக்கூடிய வகையில் மட்டுப்படுத்தப்படல் வேண்டும். விசேடமாக இன, மத, மொழி அல்லது அரசியல் சிறுபான்மையினர், அல்லது இலகுவாக கூறுவதானால் ஒரு முரண்பாடான சட்டத்தை நிறைவேற்றும்போது அதில் தோல்வியைத் தழுவக்கூடியவர்களின் தேவைகள் உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும்.

www.padippakam.com

சிறுபான்மையினரின் உரிமைகள் பெரும்பான்மையினரின் தயவில் தங்கியிருக்கக்கூடாது. சிறுபான்மையினரின் உரிமைகளை பெரும்பான்மையினரின் வாக்குப்பலத்தினால் இல்லாமற்செய்ய இடமளிப்பது ஜனநாயகமாகாது. ஜனநாயகச்சட்டங்களும் நிறுவகங்களும் எல்லாப் பிரசைகளினதும் உரிமைகளையும் பாதுகாக்கக்கூடியது என்றவகையில் சிறுபான்மையினரின் உரிமைகளும் பாதுகாக்கப்படல்வேண்டும். மனித உரிமை சர்வ வியாபகத்தன்மை கொண்டவை, பாகுபாடுபடுத்த முடியாதவை இதனை இன்றைய அரசியல்வாதிகள் அனைவரும் அறிந்துகொள்வது அவசியமாகும்.

## மக்களின் தலைவர்கள் யார்?

தலைவர்கள் எப்போதும் உண்மைக்காக வாதாட தயாராக இருக்கவேண்டும் காரணம் உண்மை என்பது எப்போதும் மக்கள் நலன்களுக்கு சாதகமானது.

தலைவர்கள் எப்போதும் தமது தவறுகளைத் திருத்த தயாராக இருக்க வேண்டும் காரணம் தவறுகள் எப்போதும் மக்கள் நலன்களுக்கு பாதகமானவை.

இலங்கை அரசியலில் தமிழ் மக்களின் இன்றைய நிகழ்வுகளுக்கு வழிகோலியவர்கள் யார்? என்னும் வரலாற்றினை சுருக்கமாகவும், விளக்கமாகவும் இங்கு தருகின்றோம். தகவல்களின் அடிப்படையில் யார், யார் இதுபோன்ற நிலைக்கு தமிழ் மக்களின் வாழ்வு பின்னடைவதற்கான வழிகளுக்கு உந்துகோலானார்கள் என்பதற்கான தீர்ப்பினை வாசகர்களாகிய நீங்களே தீர்மானிக்கலாம்.

## இலங்கை தேசிய காங்கிரஸ் (19.11.1919)



இலங்கைத் தேசிய காங்கிரஸ் நிறுவப்பட்டதிலிருந்து மறுசீரமைப்புக்கான கோரிக்கைகளை தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து முன்வைத்தனர். இதற்காக 1920ல் வழங்கப்பட்ட இணக்கம் அவர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்வதாக இருக்கவில்லை.



படிப்பகம்

இதனைத் தொடர்ந்து மற்றொரு சட்டசபைக்கான இணக்கம் 1920ம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது. இது மிகவும் வரையறுக்கப்பட்ட வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்யப்படும் பிராந்திய ரீதியிலான ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சபையாகவிருந்தது. இலங்கைத் தேசியகாங்கிரஸ் அமைக்கப்பட்டு இரண்டு வருடங்களிலேயே முக்கியமான சிங்கள, தமிழ் உறுப்பினர் களுக்கிடையே ஒரு பிளவு ஏற்பட்டது. அதற்கமைய 1921 இல் சேர். பொன். அருணாசலமும் பல தமிழ் உறுப்பினர்களும் அதிலிருந்து வெளியேறினார்கள்.

சிங்கள மக்கள் பெரும்பான்மையாகவும், தமிழ் மக்கள் சிறுபான்மையாகவும் வாழ்ந்த மேல்மாகாணத்தில் தமிழர்களுக்கென ஓர் இடம் ஒதுக்கப்பட வேண்டுமெனும் அவர்களின் கோரிக்கைக்கு இணக்கம் ஏற்படாமையே அவர்கள் அமைப்பிலிருந்து வெளியேறுவதற்கு காரணமாக அமைந்தது. சட்டசபைக்கான கொழும்பு நகர தொகுதியிலிருந்து தேர்தலுக்கு சேர். பொன். அருணாசலம் அவர்கள் போட்டியிடுவதை பிரபல சிங்களத்தலைவர்கள் ஏற்றுக்கொள்ளாததும் இதற்கு வழிவகுத்ததாக கருதப்பட்டது. இச்சம்பவம் தாம் சிறுபான்மையினர் என்னும் எண்ணத்தை தமிழர்கள் மத்தியில் தோற்றுவித்தது.

இலங்கைத் தேசிய காங்கிரஸில் பிளவு ஏற்பட்டதைத் தொடர்ந்து சேர். பொன். அருணாசலம் அவர்களும் அவரது சகோதர்ரான சேர் பொன் இராமநாதன் அவர்களும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக என தமிழ் மகாஜன சபா என்னும் பெயரிலான அமைப்பை ஆரம்பித்தனர். இருந்தும் சில தமிழர்கள் இலங்கைத் தேசியகாங்கிரஸில் தொடர்ந்தும் அங்கம் வகித்தனர். எனினும் பிளவையடுத்து கீழ்நாட்டுச் சிங்களவர்களின் ஆதிக்கமே இலங்கைத் தேசியகாங்கிரஸில் அதிகளவு காணப்பட்டது.

பிரிந்துசென்ற தமிழ் உறுப்பினர்களை மீள இணைப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலவும் தோல்வியடைந்தன. அதன்பின்னர் 1924 இல் சட்டசபைக்குச் செய்யப்பட்ட ஓர் விசேட திருத்தத்தின் மூலம் மேல் மாகாணத்தில் தமிழர்களுக்கென தனியான இடம் ஒன்று ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் அவ்விடத்திற்கு சேர். பொன். இராமநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

www.padippakam.com

## ஐ.தே.கட்சியினரின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளும், இலங்கையின் தேசியரீதியான அபிவிருத்திப் பணிகளும்.

இலங்கையை தமது குடியேற்ற நாடாக ஆக்கிரமிப்புச் செய்திருந்த பிரித்தானியரிடமிருந்து இலங்கைக்கான விடுதலையைப் பெறுவதற்காக அன்றைய நிலையில் ஜனநாயக மரபுகளுக்கமைய போராடிய நடவடிக்கைகளில் இலங்கையில் வாழ்ந்த சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய அனைத்து மக்களும் இனம், மொழி, மதம் என்னும் வேறுபாடுகளுக்கு அப்பால் இலங்கையர்கள் என்னும் தேசியப்பற்றுடன் ஒன்றிணைந்து செயலாற்றியமையின் வெளிப்பாடே இலங்கை சுதந்திரநாடாக இரத்தம் சிந்தாது அமைவதற்கான வாய்ப்புகள் உருவாகின.

அதற்கமைய நடைபெறவேண்டியிருந்த முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் பங்குகொள்வதற்காக அவசர, அவசரமாக ஐக்கிய தேசியக் கட்சி என்னும் பெயரிலான திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களை தலைமையாகக் கொண்ட (அரசியல் கட்சி 06.02.1946ல்) உருவாக்கப்பட்டது. மேற்படி கட்சியின் உருவாக்கத்தின்போது திரு டி.எஸ் சேனநாயக்கா, திரு எஸ்.டபிள்.யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா, சேனநாயக்கா அவர்களின் புதல்வர் திரு டட்லி சேனநாயக்கா மற்றும் திரு ஜே.ஆர்.ஜயவர்தனா ஆகியோர் கட்சியின் உருவாக்கத்தின் முக்கிய பிரமுகர்களாக இணைந்திருந்தனர். இந்நிலையில் (23.06.1947ல்) இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான சம்மதத்தினை பிரித்தானிய மகாராணியின் நிர்வாகம் அறிவித்தது.


முதலாவது சட்டசபையை அமைப்தற்கான தேர்தல் 1947ம் ஆண்டில் நடைபெற்றது அப்போதிருந்த தேர்தல் தொகுதிகளின் எண்ணிக்கை 89ஆகும். மேற்படி 89 தொகுதிகளிலிருந்து (95) பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படுவதுடன் (6) பிரதிநிதிகள் பிரித்தானிய அரசாங்கத்தினாலும் நியமிக்கப்பட்டனர். 1947ம் ஆண்டு யூலை மாதம் 9ந் திகதிய 9732 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் முதலாவது பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டது. அதற்கமைய அவ்வாண்டு யூலை மாதம் 23ந் திகதி முதல் ஆகஸ்ட் 26ந் திகதிவரை நியமனப்பத்திரங்கள் மாவட்டக் கச்சேரிகளில் ஏற்கப்பட்டு 19 நாட்கள் தேர்தல் நடைபெற்றன.



படிப்பகம்

அதாவது (23.08.1947 முதல் 20.09.1947வரை) இடம்பெற்ற தேர்தல் முடிவுகளின்படி (95) பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் (42) உறுப்பினர்களை மட்டும் ஐ.தே.கட்சியினர் பெற்ற நிலையில் தனிக்கட்சிப் பெரும்பான்மையைப் பெறாதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் மேலும் சில சிறுபான்மைக் கட்சிகளை தம்முடன் இணைத்து அரசாங்கத்தினை அமைத்தனர்.

தேர்தல் முடிவுகளுக்கமைய (26.09.1947ல்) இலங்கையின் முதலாவது பிரதமராக திரு.டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் பதவிப்பிரமாணத்தினை மேற்கொண்டு பிரதமராக பதவியேற்ற பின்னர் அமைச்சரவையினையும் தெரிவுசெய்தார். மேற்படி அமைச்சரவையில் தமிழர்களின் சார்பில் திரு சி.சுந்தரலிங்கம் (வவுனியா) வர்த்தக வாணிபத்துறை அமைச்சராகவும்,



**1947 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்ட அமைச்சரவை**

திரு சி சிற்றம்பலம் (மன்னார்) தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் இருவரும் ஏற்கனவே இடம்பெற்ற தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களாக களமிறங்கி வெற்றியீட்டியிருந்தனர்.

www.padippakam.com

## இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள்.
மொத்த வாக்காளர். 3.048.145

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர் எண்ணிக்கை | ஆசனங்கள் | வாக்குகள் |
|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 98 | 42 | 751,432 |
| ல.ச.சமாஜ கட்சி | 28 | 10 | 204,020 |
| தமிழ் காங்கிரஸ் | 9 | 7 | 82,499 |
| இந்திய இலங்கை காங்கிரஸ் | 7 | 6 | 72,230 |
| வொலிசிவிக் லெனினிஸ்ட் கட்சி | 10 | 5 | 113,193 |
| கம்யூனிஸ்ட்கட்சி | 13 | 3 | 70,331 |
| தொழிலாளர் கட்சி | 9 | 1 | 38.932 |
| ஐக்கிய இலங்கை காங்கிரஸ் | 2 | 0 | 3,953 |
| சுவராஜ் கட்சி | 3 | 0 | 1,393 |
| சுயேச்சைகள் | 181 | 21 | 549.381 |
| **மொத்தம்** | **360** | **95** | **1.887.364** |

### தொகுதிரீதியான பார்வை

| தொகுதி | பெயர் | சின்னம் | வாக்குகள் | மொத்த வாக்காளர் |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | ஏ.தம்பையா | தராசு | 5.562 | 33.045 |
| வட்டுக்கோட்டை | கே. கனரெத்தினம் | யானை | 11.722 | 37.334 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | திறப்பு | 12.126 | 38.871 |
| யாழ்ப்பாணம் | ஜி.ஜி பொன்னம்பலம் | பைசிக்கல் | 14.324 | 42.546 |
| கோப்பாய் | கு.வன்னியசிங்கம் | யானை | 9.619 | 32.999 |
| பருத்தித்துறை | ரீ. ராமலிங்கம் | தராசு | 10.396 | 41.682 |
| சாவகச்சேரி | வி. குமாரசாமி | தராசு | 11.813 | 28.377 |
| மன்னார் | சி.சிற்றம்பலம் | திறப்பு | 5.877 | 14.587 |
| வவுனியா | சி. சுந்தரலிங்கம் | மரம் | 4.026 | 11.099 |
| திருகோணமலை | எஸ்.சிவபாலன் | வீடு | 5.252 | 18.421 |
| மூதூர் | ஏ.ஆர்.எம். அபூபக்கர் | யானை | 3.480 | 16.649 |
| கல்குடா | வி.நல்லையா | கை | 5.559 | 22.030 |
| மட்டக்களப்பு | ஏ.எல் சின்னலெவ்வை | மரம் | 4.740 | 27.409 |
| பட்டிருப்பு | எஸ்.யூ எதிர்மனசிங்கம் | பறவை | 5.632 | 22.358 |
| கல்முனை | எம்.எஸ் காரியப்பர் | திறப்பு | 6.886 | 22.753 |
| பொத்துவில் | எம்.எம். இப்றாகிம் | தராசு | 7.407 | 18.164 |
| புத்தளம் | எச்.எஸ் இஸ்மாயில் | | போட்டியின்றி | தெரிவு |
| **மொத்த வாக்காளர்கள்** | **உறுப்பினர்கள் 17** | | **124.421** | **428.234** |



படிப்பகம்

www.padippakam.com

முதலாவது இடம்பெற்ற (23.08.1947) பாராளுமன்ற பொதுத் தேர்தலில் வடமாகாணத்திலிருந்து மேற்குறிப்பிட்டவர்கள் தெரிவாகினர். அன்றைய நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசியல்வாதிகள் எவரும் வடமாகாண அரசியல்வாதிகளுடன் இணைவதற்கு விரும்பாமையால் அவர்கள் அனைவரும் தமக்கான தனிவழியில் பயணித்தனர்.

இந்நிலையில் பிரித்தானியரின் ஆட்சியின்போது இலங்கை அரசியல் இயந்திரத்தின் ஆளுமைமிக்கவர்களாக செயலாற்றிய தமிழர்களின் அதிகாரபீடத்தினை எவ்வாறு இல்லாதொழிப்பது என்னும் செயற்பாட்டினை முடுக்கிவிட்ட திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களை பிரதமராகக்கொண்ட ஐ.தே.கட்சி தலைமையிலான அரசாங்கம் தமது முதலாவது நடவடிக்கையாக அரசாங்கம் அமைக்கப்பட்டு 15 மாதகால இடைவெளியில் அதாவது (15.11.1948ல்) இலங்கையில் வாழ்ந்த (975 000) இந்திய வம்சாவளி மக்களான தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையினை இல்லாதொழிப்பதற்கான சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் நிறேவேற்றியது. மலையகப் பிரதேசங்களிலமைந்திருந்த தேயிலை, இறப்பர் மற்றும் கொக்கோ போன்ற பிரதான ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்திசெய்தவர்கள் அம்மக்களே. இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களின் மூலமே அன்று இலங்கை தனது அன்னிய செலாவணியில் 46% வீதமான நிதியினை ஈட்டியமை பிரதான விடயமாகும். இந்நிலையில் அம்மக்களை நாடுகடத்தும்பட்சத்தில் அவர்களின் பணியினை மேற்கொள்வதற்கு சிங்கள மக்கள் முன்வரத் தயாரின்மையால் அம்மக்களை குடியுரிமையற்றவர்களாக இலங்கையில் வசிப்பதற்கு அனுமதியளிப்பதன் மூலமே இலங்கையின் பொருளாதாரம் பாதுகாக்கப்படுமென கருதிய ஐ.தே.கட்சியினர் இலங்கையில் அவர்கள் தொடர்ந்தும் வாக்குரிமை யற்றவர்களாக வசிப்பதற்கு அங்கீகாரம் வழங்கினர்.

மேற்படி சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு அதே காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவிவகித்து அரசாங்கத்தில் அமைச்சர்களாக பதவியேற்றிருந்த திரு.சி. சுந்தரலிங்கம், சி.சிற்றம்பலம் (சுயேச்சை) ஆகிய இருவரும் மேற்படி சட்டமூலத்தினை நிறைவேற்ற முன்வராது வெளிநடப்புச் செய்தனர். அதேவேளை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்தனர். இந்நிலையில் சட்டமூலத்தினை ஆதரிககாமையால் மேற்படி இருவரும் திருடட்லி சேனநாயக்க அவர்களால் அரசாங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி தமிழ் பிரதிநிதிகள் அரசாங்கத்திலிருந்து வெளியேறியமை பிரதமர் திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களுக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாக அமைந்தது. காரணம் முதலாவது அமைக்கப்பட்ட அரசின் மந்திரிசபையில் தமிழர்களின் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளதென்பதனை பிரித்தானிய அரசுக்கு வெளிக்காட்டிய ஐ.தே கட்சி அரசின் அரசியல் நடவடிக்கைகள் தமிழர்களுக்கு விரோதமானது என்னும் காரணங்களை வெளிக்காட்டி சுயேச்சை உறுப்பினர்களான அமைச்சர்கள் வெளியேறியமையாகும்.

## திரு. டி.எஸ்.சேனநாயக்க அவர்களின் தலைமையிலான முதலாவது அமைச்சரவை

| | |
|---|---|
| D. S. Senanayake (MP for Mirigama) | Prime Minister/ Defence & External Affairs |
| S. W. R. D. Bandaranaike (Attanagalla) | Health & Local Government |
| Sir Oliver Goonetilleke (Senator) | Home Affairs & Rural Development |
| J. L. Kotelawela (Dodangaslanda) | Transport & Works |
| T. B. Jayah (Colombo Central) | Labour & Social Services |
| L. A. Rajapakse (Senator) | Justice |
| George E. de Silva (Kandy) | Industries & Fisheries |
| C. Suntharalingam (Vavuniya) | Commerce & Trade |
| J. R. Jayewardene (Kelaniya) | Finance |
| C. Sittampalam (Mannar) | Posts & Telecommunications |
| Dudley Senanayake (Dedigama) | Agriculture & Lands |
| Major E. A. Nugawela (Kadugannawa) | Education |
| A. Ratnayake (Wattegama) | Food & Cooperatives |
| R. S. S. Gunawardena (Gampola) | Minister without Portfolio |
| S. W. R. D. Bandaranaike was named | Leader of the House. |
| R. S. S. Gunawardena was appointed | Chief Government Whip. |

மேற்படி அமைச்சுப் பதவி வகித்த திரு. பண்டாரநாயக்க அவர்கள் ஒரு வருடகால இடைவெளியில் சபாநாயகராக மாற்றப்பட்டார். இந்நிலையில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான சேர் ஒலிவர் குணதிலகா அவர்களை திரு ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களிடம்



படிப்பகம்

www.padippakam.com

தூது அனுப்பி அரசாங்கத்தில் இணைத்துக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைக்கு திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதற்கமைய ஜி.ஜி பொன்னம்பலம் அவர்கள் சம்மதம் தெரிவித்தமையைத் தொடர்ந்து திரு ஜி.ஜி பொன்னம்பலம் அவர்கள் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சராகவும், திரு கே கனகரெத்தினம் அவர்கள் உதவிக் கல்வி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களின் ஆதரவு அரசுக்கு கிடைத்தது. இச்சம்பவத்தினை எதிர்த்த ஏனைய உறுப்பினர்களில் திரு எஸ்.ஜே.வி செல்வநாயகம், திரு ஈ.எம்.வி நாகநாதன் மற்றும் திரு சிவபாலன் ஆகியோர் முக்கியமானவர்களாவர். மேற்படி இருவரும் அரசாங்கத்தில் இணைந்ததன்பின்னர் இந்திய – பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் (10.12.1948ல்) பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோதும் திருவாளர்கள் ஜி.ஜி பொன்னம்பலம் ராமலிங்கம் மற்றும் கனகரெத்தினம் ஆகிய மூவரும் அப்பிரரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர். திருவாளர்கள் எஸ்.ஜே.வி செல்வநாயகம். கு வன்னியசிங்கம், சிவபாலன் ஆகிய மூவரும் எதிர்த்து வாக்களித்தனர். இச்சம்பவம் தமிழ் காங்கிரஸ் கட்சியினர் மத்தியில் கருத்து முரண்பாட்டினை உருவாக்கியதற்கமைய திரு செல்வநாயகம் அவர்களின் தலைமையில் மேற்குறிப்பிட்ட மூவரும் கட்சியிலிருந்து வெளியேறினர்.

**ஆதரவாக வாக்களித்தவர்கள்**

Hon. Mr. D.S.senanayake.
J.Aubry Martensz
C.E.Attegalle.
Hon.Mr.Goonesinha.
Ivan.T.Dasanaike
J.W.Oldfield
Hon.Mr.J.R.Jayewardene
M.M.Ebrahim
Hon.E.A.Nugawela
Albert.F.peiris
T.B.Poholiyadde Dissawa
Hon.Mr.A.Ratnayake
F.H.Griffith
D.S.Goonesekera
M.D.Banda
D.P.Jayasuriya
H.D.Z Sriwardena
Hon. Mr.S.W.R.D.Bandaranayanaike
G.A.D.Zoysa Mudaliyar
S.A.Pakeman.
Hon..Mr.Jayah
T.B.Panabokke
Mudaliyar. M.M.Ebrahim
S.H.Mahadiulwewa
S.W.Ethirmanasingham
Hon.Mr.G.G.Ponnampalam
J.J.Fernando
H.R.U.Premachandra
Hon.Mr.Dudley Senanayake
T.Ramalingam
Mudaliyar
J.A.Rambukpota



படிப்பகம்

www.padippakam.com

P.B.Bulankullame Dissawa
H.L..Ratwatte
T.F.Jayewardena
H.S.Ismail
A.Sinalebbe
D.D.karunarathne
A.L.Thambiayah
H.B.Tenne
K.Kanagaratnam
V.T.Nanayakkara
V.Nalliah

V.G.W,Ratnayake
G.R.D.Silva
M.Senanayake
Major.Montague Jayawickrema
K.V.D.Sugathadasa
E.E.Spencer
N.H.Keerthiratna
Mudaliyar.M.S,Kariapper
A.P.Jayasooriya
E.W.Mathew

**எதிராக வாக்களித்தவர்கள்**

H.D.Abey goonewardena
D.Ramanujam
S.J.V.Chelvanayakam
Florence Senanayake
K.Kumaravelu
R.S.Pelpole
Colvin R.D.Silva
T.B.Subasinghe
Wilmot A.Perera
P.B.R.Gunawardena
L.Rajapaksa
I.M.R.A.Iriyagolla
W.P.A.Wickremasinghe
H.Sri Nissanka
Lakshman Rajapakse

P.Kumarasiri
Somawera Chandrasiri
S.A.Silva
G.R.Motha
W.Dahanayake
S.Sivapalan
A.Reginald Perera
Cholmondeley Goonewardena
S.Thondaman
K.Ramalingam
Kusumsiri Gunawardena
D.F.Hettiarachchi
M.H.Peiris
S.V.Velupillai
J.C.T.Kotalawela

அதன்பின்னர் 1952ம் ஆண்டுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்ற காலப்பகுதியில் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட 100வது நாளை ஞாபகப்படுத்துமுகமாக பிரதமரின் காரியாலயத்திற்கு முன்பாக இலங்கை இந்தியர் காங்கிரஸ் உறுப்பினர்களும் இல.கம்யூனிஸ்ட் கட்சியினரும் (பீற்றர் கெனமன் உட்பட) திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களும் கலந்துகொண்டு சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடாத்தினர் இவர்களின் அப்போராட்டத்திற்கு ஆதரவாக கம்பொலவையைச் சேர்ந்த Prabuddha Bhikshu



படிப்பகம்

Mandalaya என்னும் பௌத்த பிக்குகளின் அமைப்பு வணக்கத்திற்குரிய K.Indasara Thero அவர்களின் தலைமையில் 29 பிக்குமார் உட்பட அவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக கலந்துகொண்டனர் அதனைத்தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்திரசார தேரோ அவர்கள் உரையாற்றும்போது பின்வருமாறு கூறினார்.

It is our earnest wish that as an enlightened statesman . and a Buddhist called up on yo quide the destinies of Lanka at such a critical time . you will view the whole matter not in a formal or legal menner. but from the human angle.... The Indians who are here are a vital part of the agriculture and industry of our land . Moreover they were brought here by the British rulers of old and have directly or Indirectly helped the development of our land . it seems a gross injustice to treat them now as unwanted foreigners. our country is utilising their services to maintain our economy. let us then give them the fundamental rights they are appealing for.
(Congress News 26 .May. 1952.)

## இந்திய வம்சாவழி மலையகத் தமிழர்கள்

இந்நிலையில் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட தொழிலாளர்கள் அங்கு அடிமைகள்போலவே நடாத்தப்பட்டனர் அவர்களுக்கான குடியிருப்பு, சுகாதாரம், கல்விவசதிகள் மிகவும் பரிதாபத்திற்குரியதாகவே அமைந்திருந்தது அவர்களுக்கு நாளாந்த வேதனமாக ஆண்களுக்கு நாளொன்றிற்கு 33 சதமும் பெண்களுக்கு 25 சதமும் பிள்ளைகளுக்கு 12 சதமுமே வழங்கப்பட்டது அத்துடன் பிரிட்டிஸாரின் (Kankani) கங்காணி என்னும் மேற்பார்வையாளர்களின் ஆதிக்கத்தில் மேலும் அவர்கள் மேலும் துன்புறுத்தப்பட்டனர்..

அன்றைய இனவிகிதாசாரத்திற்கமைய இலங்கையின் பூர்வீகக்குடிகளில் ஒருசாராரான இலங்கைத் தமிழர்களின் எண்ணிக்கை (10.9.%) வீதமாகவும் மலையகத் தமிழர்களின் எண்ணிக்கை (11.7%)வீதமாகவும் அமைந்திருந்ததுடன் இலங்கையின் முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் அம்மக்களின் சார்பில் (6) பிரதிநிதிகளும் மலையக மக்களின் வாக்குகளின்

www.padippakam.com

ஆதரவுடன் (10) ல.ச.சமாஜ கட்சியின் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டமை திரு.டி.எஸ்.சேனநாயக்கா மற்றும் திரு ஜி.ஜி பொன்னம்பலம் போன்றவர்களுக்கு அச்சநிலையைத் தோற்றுவித்தது. எதிர்காலத்தில் இந்திய வம்சாவழியினரின் பிரதிநிதித்துவம் உயர்வடைந்தால் பூர்வீகத் தமிழர்களென கூறும் இலங்கைத் தமிழர்கள் இரண்டாமிடத்திற்கு தள்ளப்படாலாமென்னும் எண்ணப்பாடே பிரஜாவுரிமைச் சட்டம் நிறைவேறுவதற்கு திரு பொன்னம்பலம் அவர்கள் ஆதரவு வழங்கினாரென கருத்துக்கள் வெளியாகின.

1927 ல் டொனமூர் அரசியலமைப்பு அன்றைய பிரித்தானிய தொழிற்கட்சியினால் அறிமுகப்படுத்தப்பட்டதற்கமைய 21 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் வாக்களிக்கும் உரிமையைப்பெற்றனர் இந்நிலையில் மலையக மக்களுக்கு வாக்குரிமை வழங்குவதை திரு.டி.எஸ்.சேனநாயக்கா அவர்கள் முழுமனதாக எதிர்த்தார் அவர் வெளியிட்ட அறிக்கையொன்று பின்வருமாறு அமைந்தது.

இந்திய வம்சாவழி மக்கள் தொடர்பில் திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களின் கருத்து எவ்வாறு ஏற்கனவே அமைந்திருந்தது என்பதற்கான சில ஆதாரங்களை இங்கு தருகின்றேன்

The sinhalese are an unfortunate community the sinhalese have been misunderstood and even thir generosity forgotten I do not think there is any other community like the sinhalese who have consented to penalise themselves in order to give privileges to others. The Indians have a big country . we have only this small bit of land for ourselvfs we want this country for ourselves .(Hansard 08 Nov. 1928 emphasis added)

அப்போதைய அரசாங்க சபையின் உத்தியாகபூர்வ அறிக்கையாகும். பின்னர் மலையக மக்களின் வாக்குரிமையும், குடியுரிமையும் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர் திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய சிறு உரை.

It is quite a simple Bill but a very important Bill. we are not prejudicing the interests of anyone. we are only trying to confer Ceylon citizenship on people in Ceylon who are not



படிப்பகம்

www.padippakam.com

பின்னர் திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய சிறு உரை.

It is quite a simple Bill but a very important Bill. we are not prejudicing the interests of anyone. we are only trying to confer Ceylon citizenship on people in Ceylon who are not cetizens of another country... It is necessary that we should have our own citizenship laws (Hansard. 19 Aug. 1949.)



அதனைத் தொடர்ந்து லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரான திரு என்.எம் பெரேரா அவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்.

I thought that racialism of this type ended with Houston Chamberlain and Adolph Hitler...I did not believe it possible that any person claiming to be a statesman....would ask us to accede to a Bill of this nature ....we cnnot proceed as if we are God"s chosen race quite apert from the rest of the world. that we and we alone have the right to be the citizens of this country.

If an unemployed so-called sinhalese man is fit enough to get rights why should an Indian who has no income be deprived of those rights.? If that is the criterion. is that not racial prejudice of the worst type.? Racial prejudice does not come from the bottom...It always comes from the top. (Hansard 19. Aug 1948)



திரு கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்கள் ஆற்றிய கருத்து

If you look at the background....the political motivation and social objectives of this Bill-it will be found that it is a



படிப்பகம்

www.padippakam.com

சேனநாயக்கா அவர்கள் நடாத்திய கருத்தரங்கொன்றில் பின்வரும் கருத்தினைத் தெரிவித்திருந்தார். ஆனால் ஆட்சியமைத்து (1947) இருவருடகாலப்பகுதியில் இலங்கையில் வாழ்ந்த சிங்களவரல்லாதோரின் உரிமைகளை இல்லா தொழிப்பதற்கான ஐந்து சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார்.

We dont consder the Indians as aliens we tell them become part of ourselves become Ceylonese and then share in the government of the country.

பிரதமராக பதவிவகித்த திரு. டி. எஸ். சேனநாயக்கா அவர்கள் குதிரைச்சவாரி செய்வதில் அதிக பிரியமுள்ளவராகவும் ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் காலிமுகத்திடலில் (Galle Face) குதிரைச்சவாரி செய்வது வழமையாகும். ஒருநாள் சவாரிசெய்து கொண்டிருந்தவேளை குதிரையிலிருந்து தவறி விழுந்ததில் 1952 மார்ச் மாதம் 22 ந் திகதி மரணமானார். திரு.டி.எஸ் சேனநாயக்கா அவர்களின் அகாலமரணத்தைத் தொடர்ந்து அவரின் புதல்வரான திரு டட்லி சேனநாயக்கா அவர்கள் (26.03.1952ல்) பிரதமராக பதவியேற்றார். அவர் பதவியேற்று ஒரு வாரகாலப்பகுதியில் பாராளுமன்றத்தின் ஆயுட் காலம் மேலும் ஐந்து மாதங்கள்வரை இருந்தநிலையில் பாராளுமன் றத்தினை கலைத்தார்.

## ஐ.தே கட்சி அரசாங்கத்திலிருந்து வெளியேறிய திரு பண்டாரநாயக்கா



திரு. டி.எஸ். சேனநாயக்கா அவர்களைத் தொடர்ந்து பிரதமர் பதவியினை தாம் வகிக்கமுடியுமென கருதிய திரு பண்டாரநாயக்கா அவர்கள் டட்லி சேனநாயக்கா, திரு ஜே.ஆர் ஜயவர்தனா போன்றோரின் அரசியல் ரீதியான காய்நகர்த்தல்களை அவதானித்தநிலையில் தனிவழி அரசியலை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கத்திலிருந்தபோதே திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மேற்கொள்ளலானார்.

அதற்கமைய சிங்கள மஹாஜன ரபா என்னும் அமைப்பின்மூலம் தமது அரசியல் பணியில் காலடிபதித்த திரு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் 1946ம் ஆண்டு பெப்ருவரி மாதம் (06.02.1946) ஆரம்பிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து செயற்பட முன்வந்தார். அதற்கமைய (23.08.1947ல்) இடம்பெற்ற இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலில் அத்தனகல தொகுதியில் (கை) சின்னத்தில் போட்டியிட்ட திரு பண்டாரநாயக்கா அவர்கள் வெற்றிபெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவானார். பாராளுமன்றத்திற்கு தெரிவான அமைச்சர்களில் திரு. பண்டாரநாயக்கா அவர்கள் சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்டு குறுகியகால இடைவெளியில் திரு டி.எஸ். சேனநாயக்கா அவர்களின் அரசாங்கத்திலிருந்து (12.07.1951ல்) வெளியேறினார்.

அரசாங்கத்தினைவிட்டு வெளியேறிய அவர் குறுகியகால இடைவெளியில் அதாவது (02.09.1951ல்) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்னும் பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றினை ஸ்தாபித்தார். இக்கட்சியின் ஸ்தாபகர்களாக திரு. பண்டாரநாயக்கா திரு. டி.ஏ. ராஜபக்ஸ அவர்களும் செயற்பட்டனர். அதற்கமைய 1952 ம் ஆண்டு மே மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் முதல்தடவையாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் 48 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய நிலையில் (9) தொகுதிகளில் மட்டும் வெற்றிபெற்றனர்.

## இரண்டாவது பாராளுமன்றத் தேர்தல் தமிழ், சிங்களம் மற்றும் புள்ளிவிபரம்

1952ம்ஆண்டு முந்திய பாராளுமன்ற காலத்திலுள்ள அளவிலான 95 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான தேர்தலுக்குரிய நியமனப்பத்திரங்கள் 1952 ஏப்ரல் 8ந் திகதி முதல் 28ந் திகதி வரை ஏற்கப்படுமென அறிவிப்பு விடுக்கப்பட்டு வாக்கெடுப்பு (24.05முதல் 30.05.1952 வரை) நடாத்தப்பட்டது தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களின் அகால மரணத்தினைத் தொடர்ந்து அவரின் அனுதாப வாக்குகளை பயன்படுத்திக் கொள்ளும் நோக்குடனேயே உடனடியாக பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தலுக்கான திகதியும் அறிவிப்பு விடுக்கப்பட்டு தேர்தல் இடம்பெற்றது. அதற்கமைய தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மொத்த வாக்காளர் 2,990,912 முன்னைய தேர்தலில் வாக்களித்த வாக்காளர்களைவிட (57,233) வாக்காளர்கள் இத்தேர்தலில் குறைந்தமைக்கான காரணம் மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டமையே ஆகும்.

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித்தவர்கள் | பெற்ற ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 81 | 1,026,005 | 54 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 48 | 361,250 | 09 |
| ல.ச.சமாஜ கட்சி | 39 | 305,133 | 09 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, விப்லவாகரி ல.ச.சமாஜ கட்சி | 19 | 134,528 | 04 |
| அ.இ.த.காங்கிரஸ் | 07 | 64,512 | 04 |
| அ.இ.தஅரசுக் கட்சி | 07 | 45,331 | 02 |
| தொழிலாளர் கட்சி | 05 | 27,096 | 01 |
| சுயேச்சைகள் | 88 | 326,783 | 12 |
| **செல்லுபடியான வாக்குகள்** | | **2,290,638** | **95** |

தேர்தல் முடிவுகளுக்கமைய பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற ஐ.தே.கட்சியினர் திரு. டட்லி சேனநாயக்கா அவர்களை பிரதமராகக் கொண்ட அரசாங்கத்தினை அமைத்தனர். மலையக மக்களின் வாக்குரிமை (15.11.1948ல்) பறிக்கப்பட்டமையால் அம்மக்களின் சார்பில் பாராளுமன்றத்திற்கு எவரும் அத்தேர்தலில் தெரிவாகவில்லை.

| வருடம் | மொத்தம் | சிங்களவர் | இல.தமிழர் | இந்.தமிழர் | முஸ்லிம் | பறங்கியர் | மலேயர் | வேறு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1911 | 4,106,400 | 66.1 | 12.5 | 12.9 | 6.5 | 0.7 | 0.3 | 0.6 |
| 1921 | 4,898,600 | 67.1 | 11.5 | 13.4 | 6.3 | 0.6 | 0.3 | 0.8 |
| 1931 | 5,306,900 | 65.5 | 11.3 | 15.4 | 6.1 | 0.6 | 0.3 | 0.8 |
| 1946 | 6,657,300 | 69.4 | 10.9 | 11.7 | 6.2 | 0.6 | 0.3 | 0.5 |
| 1953 | 8,097,900 | 69.0 | 10.9 | 12.0 | 6.3 | 0.6 | 0.3 | 0.1 |
| 1963 | 11,582,000 | 71.0 | 11.0 | 10.6 | 6.5 | 0.4 | 0.3 | |
| 1971 | 12,698,800 | 72.0 | 11.2 | 9.3 | 6.7 | 0.4 | 0.1 | |
| 1981 | 14,850,000 | 74.0 | 12.6 | 5.5 | 7.1 | 0.3 | 0.2 | |
| 1997 | 18,552,000 | | | | | | | |
| 1998 | 18,774,000 | | | | | | | |
| 1999 | 19,043,000 | | | | | | | |



படிப்பகம்

## இரண்டாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் (வட,கிழக்கு) மே மாதம் (24, 26, 28, 30) 1952

| தொகுதிகள் | வெற்றி பெற்றோர் | சின்னம் | வாக்களித் தவர்கள் | மொத்த வாக்காளர் |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | ஏ. தம்பையா | யானை | 9.517 | 30.138 |
| வட்டுக்கோட்டை | வி.வீரசிங்கம் | பைசிக்கல் | 5.687 | 34.135 |
| காங்கேசன்துறை | எஸ்.நடேசன் | திறப்பு | 15.377 | 38.439 |
| யாழ்ப்பாணம் | ஜி.ஜி.பொன்னம்பலம் | குடை | 12.726 | 24.489 |
| கோப்பாய் | கு.வன்னியசிங்கம் | சாவி | 9.410 | 32.903 |
| பருத்தித்துறை | ரீ.ராமலிங்கம் | கண் | 11.609 | 43.219 |
| சாவகச்சேரி | வி.குமாரசாமி | தராசு | 14.801 | 30.692 |
| மன்னார் | சி.சிற்றம்பலம் | சாவி | 5.876 | 14.959 |
| வவுனியா | சி.சுந்தரலிங்கம் | நட்சத்திரம் | 6.019 | 13.093 |
| திருமலை | என்.ஆர்.இராஜவரோதயம் | வீடு | 4.450 | 14.272 |
| மூதூர் | எம்.ஈ.எச்.முகமதலி | தராசு | 6.050 | 16.705 |
| கல்குடா | வி.நல்லையா | குடை | 7.559 | 22.285 |
| மட்டுநகர் | ஆர்.வி.கதிர்காமர் | யானை | 11.420 | 24.947 |
| பட்டிருப்பு | எஸ்.எம்.இராசமாணிக்கம் | மூ.கண்ணாடி | 7.672 | 23.440 |
| கல்முனை | ஏ.எம் மிர்ஸா | நட்சத்திரம் | 6.078 | 22.120 |
| பொத்துவில் | இப்றாஹிம்.ஹாசிம் | தராசு | 8.093 | 21.187 |
| புத்தளம் | ஜே.எச்.குசைன் சீக் | தராசு | 9.117 | 15.247 |
| மொத்தம் | 17 உறுப்பினர்கள் | | 151.461 | 402.270 |

மேற்படி தேர்தலில் முதற் தடவையாக களமிறங்கிய தமிழரசுக் கட்சியினர் (2) பிரதிநிதிகளை மட்டும் பெற்றனர். அதற்கமைய திருகோணமலையில் என்.ஆர். இராஜவரோதயம், கோப்பாய் தொகுதியில் கு.வன்னியசிங்கம் ஆகிய இவருமே தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

புதிய பாராளுமன்றத்தில் (10.06.1952ல்) பிரதமராக பதவியேற்ற திரு. ட்ட்லி சேனநாயக்கா அவர்கள் தமிழர்களின் சார்பில் திரு.ஜி.ஜி. பொன்னம்பலம்

www.padippakam.com

திரு. கே. கனகரெத்தினம் ஆகிய இருவரையும் மீண்டும் அமைச்சர்களாக நியமித்தார். அதற்கமைய புதிய அமைச்சரவை (19.06.1952ல்) பதவியேற்றது.

## அரிசியின் விலையேற்றத்தினால் ஏற்பட்ட அபரீத விளைவு



திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் ஆட்சியின்போது 1953ல் மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட ஒரு கொத்து அரிசியின் விலையை 25 சதத்திலிருந்து 75 சதமாகவும் சீனியின்விலையை 15 சதத்தினாலும் உயர்த்தியபோது அதனை எதிர்த்து இடதுசாரிகளும், எதிர்க்கட்சிகளும் நாடளாவியரீதியில் 1953 ஆகஸ்ட் 12ந் திகதியன்று நடாத்தப்பட்ட ஹர்த்தால் போராட்டத்தின்போது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியதில் 9 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் பலர் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இச்சம்பவத்திற்கு தாமே காரணகர்தாவென ஏற்றுக்கொண்ட திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் தமது பதவியை இராஜினாமாச் செய்தார் அதனைத் தொடர்ந்து அவரின் வெற்றிடத்திற்கு திரு சேர். ஜோன் கொத்தலாவலை அவர்கள் 1953 அக்டோபர் மாதம் 12ந் திகதி பிரதமராக நியமிக்கப்பட்டார்.



அதனைத் தொடர்ந்து பிரதமராக திரு சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் (12.10.1953ல்) பதவியேற்றார். பிரதமராகப் பதவியேற்ற திரு. சேர் ஜோன் கொத்தலாவலை அவர்களுக்கும் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுக்குமிடையில் இடம்பெற்ற கருத்து முரண்பாடு காரணமாக திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் மற்றும் திரு கனகரெத்தினம் அவர்களும் (1954ல்) அரசாங்கத்தினை விட்டு முழுமையாக வெளியேறினர். இருந்தும் தமிழர்களை அரசாங்கத்தில் இணைப்பதனை ஆரம்பகாலம் முதலே விரும்பாத திரு சேர் ஜோன் கொத்தலாவலை அவர்கள் அதனை நிறைவேற்றுவதற்காகவே திரு ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களுடன் முரண்பட்டமை பின்னர் வெளியாகியது.



படிப்பகம்

www.padippakam.com

## பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியின் உருவாக்கம்

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வெளியேறிய திரு பண்டாரநாயக்கா அவர்கள் தமது அரசியல் கட்சியினை பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டதற்கமைய அடுத்து இடம்பெறவிருந்த (1956) பொதுத்தேர்தலில் வெற்றியீட்டும் குறிக்கோளுடன் திரு என்.எம் பெரேரா தலைமையிலான இலங்கை சம சமாஜக் கட்சி, திரு பிலிப் குணவர்தனா அவர்களின் தலைமையிலான விப்லவக்காரி, டபிள்யூ தஹாநாயக்கா அவர்களின் தலைமையிலான மொழிகள் முன்னணி. ஐ.எம்.ஆர்.ஏ. ஈரியகொல்ல அவர்களின் தலைமையிலான சமஜவாதி மஹாஜன பெரமுன ஆகிய அமைப்புக்களையும் தம்முடன் இணைத்துக் கொண்ட திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மக்கள் ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் அடுத்ததேர்தலில் களமிறங்குவதற்கான அணி ஒன்றினை உருவாக்கியதற்கமைய தேர்தலில் களமிறங்கினார். இத்தேர்தல் பிரச்சாரங்களின்போது தாம் வெற்றியீட்டியதும் (24) மணி நேரத்தில் சிங்கள மொழியினை அரசகரும மொழியாக பிரகடனஞ் செய்வதாகவும், திருமலையிலும், கட்டுநாயக்காவிலும் நிலைகொண்டிருக்கும், பிரித்தானியரின் கடற்படையினரையும், விமானப்படையினரையும் இலங்கையைவிட்டு அகற்றுவதாகவும் வாக்காளர்களுக்கு உறுதி வழங்கினார். இந்நிலையில் (91) பாராளுமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் 51 உறுப்பினர்களைப் பெற்று வெற்றியீட்டினார். அதற்கமைய தம்மை பிரதமராக்கிய (13.04.1956ல்) அவர் தனது தலைமையில் அரசாங்கத்தினை (18.04.1956ல்) அமைத்தார்.

பொதுத் தேர்தலின்போது பெரும்பான்மையினரான சிங்களமக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய (05.06.1956ந்) திகதியன்று சிங்களம் மட்டும் அரச கருமமொழி என்னும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அதே மாதம் (15.06.1956) சட்டமூலமாக்கப்பட்டது. சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்னும் சட்டத்தினை எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் அன்றைய பாராளுமன்றத்திற்கு முன்னால் அமைந்திருந்த காலி முகத்திடலில் அஹிம்சை வழியில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர். அதனை அனுமதிக்கவிரும்பாத சிங்கள இனத்தவர்களில் ஒருசாராரான காடையர்கள் சத்தியாக்கிரகிகளுக்கு எதிரான வன்முறையினை மேற்கொண்டு தாக்குதல்



படிப்பகம்

www.padippakam.com

நடாத்தியதில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குகொண்ட பலர் பலத்த காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்நிலையில் இதுவிடயத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்திய ஐ.தே.கட்சியினர் திரு பண்டாரநாயக்கா அவர்களின் அரசாங்கத்தினருக்கு எதிராக ஐ.தே.கட்சியினர் தமது ஆதரவு காடையர்களை ஏவிவிட்டு கலவர சூழலை ஏற்படுத்தினர். இதுவே இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான முதலாவது இனக்கலவரமாக மே மாதம் 26, மற்றும் 27 ந் திகதிகளில் இடம்பெற்றது.

## மூன்றாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் (1956 ஏப்ரல் 5,7,10.ந்) திகதிகளில் இடம்பெற்றது.

**மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3.464.159**

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித் தவர்கள் | விகிதம் | வெற்றி பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| மக்கள் ஐக்கிய முன்னணி<br>மொழிகள் முன்னணி ஸ்ரீ.ல.சு.கட்சி<br>விப்லவக்காரி சமசமாஜ கட்சி | 60 | 1,046,277 | 39.52% | 51 |
| ல.ச.சமாஜ கட்சி | 21 | 274,204 | 10.56% | 14 |
| இல.த.அரசுக் கட்சி | 14 | 142,758 | 5.39% | 10 |
| இல.கம்யூனிஸ்ட் கட்சி | 09 | 119,715 | 4.52% | 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 | 8,914 | 0.34% | 01 |
| சுயேச்சைகள் | 68 | 316,569 | 11.96% | 08 |
| ஐ.தே.கட்சி | 76 | 738,810 | 27.09% | 08 |
| மொத்தம் | 249 | 2,647,247 | | 95 |

**1956ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரமும் கட்சிகளும்**



படிப்பகம்

| தொகுதிகள் | தெரிவான பிரதிநிதிகள் | சின்னம் | பெற்ற வாக்குகள் | மொ. வா வாக்களித்தவர்கள் | மொ. வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | வி.ஏ.கந்தையா | வீடு | 16,308 | 23,096 | 32,410 |
| வட்டுக்கோட்டை | அ.அமிர்தலிங்கம் | வீடு | 14,937 | 26,148 | 35,927 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி செல்வா | வீடு | 14,855 | 27,673 | 40,964 |
| சாவகச்சேரி | வி.என். நவரெத்தினம் | வீடு | 15,952 | 24,835 | 35,922 |
| பருத்தித்துறை | பி. கந்தையா | நட்சத்திரம் | 14,381 | 28,621 | 44,603 |
| யாழ்ப்பாணம் | ஜி.ஜி. பொன்னம்பலம் | சைக்கிள் | 8,914 | 22,178 | 34,804 |
| கோப்பாய் | கு.வன்னியசிங்கம் | வீடு | 12,804 | 24,091 | 34,465 |
| மன்னார் | வி.ஏ.அழகக்கோன் | வீடு | 6,726 | 12,766 | 15,819 |
| வவுனியா | சி.சுந்தரலிங்கம் | மரம் | 6,853 | 8,778 | 15,946 |
| திருமலை | என்.ஆர்.இராஜவராதயம் | வீடு | 7,048 | 12,449 | 16,093 |
| மூதூர் | எம்.ஈ.எச் முகம்மதலி | தராசு | 10,549 | 12,565 | 22,177 |
| கல்குடா | ஏ.எம்.மாக்கான் மரைக்கார் | குடை | 6,719 | 16,252 | 26,732 |
| மட்டுநகர் | செ.இராசதுரை | வீடு | 9,300 | 18,156 | 29,486 |
| பட்டிருப்பு | யூ.எஸ் எதிர்மனசிங்கம் | விளக்கு | 9,528 | 19,172 | 25,849 |
| கல்முனை | எம்.எஸ் காரியப்பர் | வீடு | 9,464 | 19,984 | 27,841 |
| பொத்துவில் | எம்.எம் முஸ்தபா | வீடு | 8,355 | 16,126 | 25,273 |
| புத்தளம் | எச்.சீக் இஸ்மாயில் | சக்கரம் | 6,524 | 11,941 | 17,354 |
| | | | 179,217 | | 481,685 |

மேலே விபரிக்கப்பட்டுள்ள வெற்றிபெற்றவர்களில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டவர்கள் தமிழரசுக் கட்சியிலும் ஏனையோர் சுயேச்சைகளாகவும் களமிறங்கினர்.

தேர்தல் முடிவுகளுக்கமைய திரு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களைப் பிரதமராகக் கொண்டு (18.04.1956)ஆட்சி அமைக்கப்பட்டது. ஆட்சி அமைத்து இரு மாதகாலப் பகுதியில் அதாவது (05.06.1956ல்)

www.padippakam.com

சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்னும் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து 15.06.1956ல் நிறைவேற்றினார். மேற்படி சட்டமூலம் நிறைவேற்றப்பட்டபோது வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஒன்று ஏற்பட்டமையைத் தொடர்ந்து திரு எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்களுக்கும் தமிழரசுக்கட்சியின் தலைவரான திரு எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களுக்குமிடையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி முறைபோன்ற ஓர் நிர்வாகத்தினை அமுல்படுத்துவதற்கும், அப்பிரதேசங்களின் நிர்வாக மொழியாக தமிழ் மொழியினை அங்கீகரிப்பதற்குமாக பண்டா – செல்வா உடன்படிக்கை என்னும் பெயரில் ஓர் உடன்படிக்கை (27.07.1957ல்) கைச்சாத்திடப்பட்டது. அச்சட்டமூலத்தினை அமுல்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலிருந்து பௌத்த மக்களின் பிரதான வணக்கத் தலமான தலதாமாளிகைக்கு (04.10.1957ல்) எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றினை திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் மேற்கொண்டார்.

இவ்வூர்வலம் கம்பஹா மாவட்டத்தின் இம்புல்கொடை என்னுமிடத்தில்வைத்து அன்றைய சிறீ.ல.சு.கட்சியின் கம்பஹா பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி.பண்டாரநாயக்கா அவர்களால் தடைசெய்யப்பட்டமையைத் தொடர்ந்து அன்றிரவு அங்குள்ள ஐ.தே.கட்சியின் ஆதரவாளர் ஒருவரின் வீட்டில் தங்கியிருந்த ஜே.ஆர். தலைமையிலான குழுவினர் மறுநாள் வாகனத்தின்மூலம் தலதா மாளிகைக்குச்சென்று அங்கிருந்து உடன்படிக்கைக்கு எதிரான தமது அறிக்கையினை வெளியிட்டனர்.

இந்நடவடிக்கையின்மூலம் அவ்வுடன்படிக்கை ரத்துச்செய்யப்பட்டது. அத்துடன் திருப்தியடையாத திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் சில பௌத்த மத குருமாருடன் இணைந்து திரு பண்டாரநாயக்கா அவர்களை படுகொலை செய்வதற்கான ஒத்துழைப்புக்களையும் வழங்கியதாக அன்றைய தகவல்கள் சில தெரிவித்திருந்தன. (18.02.1956ல்) அரச கரும மொழியாக சிங்கள மொழியினை அமுல்படுத்தவேண்டுமென தமது கட்சியின் 10 வது மகாநாட்டில் தீர்மானித்த திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களும், அவர் சார்ந்த கட்சி உறுப்பினர்களும் மேற்படி சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்னும் சட்டமூலத்தினை ஆதரித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைத் தமிழர்களின் தனி வழி அரசியல்





இலங்கைத் தமிழர்களின் அரசியலை வழிநடாத்தி வந்ததில் கடந்த சுமார் எண்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத் தமிழர்களே முதன்மை பெற்று வந்துள்ளனர்.சேர் பொன் அருணாச்சலம், சேர் பொன் இராமநாதன், திரு.சி. சுந்தரலிங்கம், திரு ஜி.ஜி. பொன்னம்பலம், திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அவர்களைத் தொடர்ந்து திரு அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் போன்றவர்கள் மிதவாதத் தலைவர்களாக இருந்து வந்துள்ளனர்.

அதன் பின்னர் தமிழ் மக்களின் அபிலாசைகளை தமிழீழத்தின் மூலமே அடையமுடியும் என்று தமிழர்களுடைய அரசியல் தீவிரவாதமாக பர்ணமித்தது. இந்தத் தீவிரப் போராட்டத்தின் முக்கிய தலைவர்களாக திரு. சிறீ சபாரெத்தினம், திரு. உமா மகேஸ்வரன், திரு. பத்மநாபா, திரு. பாலகுமார் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்றவர்கள் வழிநடாத்தினர். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் ஜனநாயக வழிகளின்மூலமும், ஆயுதப் போராட்டத்தின் மூலமும் முன்னெடுக்கப்பட்ட போதும் அனைத்தும் தோல்வியிலேயே முடிவுற்றது. காரணம் மேற்படி போராட்டங்களின் கதாநாயகர்களாக செயற்பட்டவர்கள் அனைவருமே யாழ் மேலாதிக்க பிரபுத்துவ வர்க்கங்களைச் சார்ந்தவர்களாக இருந்தமையே ஆகும். பரந்துபட்ட அடிமட்ட மக்களின் எதிர்காலம்பற்றிய சிந்தனை அவர்களிடம் இல்லாமையே அனைத்து நடவடிக்கைகளும் தோல்வியைத் தழுவியதன் அடிப்படையாகும்.

இங்கு இறுதியாக ஆயுதப் போராட்டத்தின்மூலம் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களையும், யுவதிகளையும் விடுதலைப் போராட்டமென்னும் மாயையில் பலிகொடுக்கப்பட்டனர். அவர்களின் ஞாபகார்த்தமாக கல்லறைகள்



படிப்பகம்

www.padippakam.com

அமைத்தபோது அவர்கள் அனைவரும் விதைக்கப்பட்டவர்களே தவிர, புதைக்கப்பட்டவர்கள் அல்ல என்னும் மாயை மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு அவர்களெல்லாம் மாவீரர்களென பட்டமளிப்பும் வழங்கப்பட்டது. இந்நிலையிலேயே கடந்த (18.05.2009ல்) ஆயுதப் போராட்டம் செய்தவர்கள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதியுமென தனக்குத் தானே பட்டமளிப்புச் செய்துகொண்ட திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் இலங்கைப் பாதுகாப்புப்படையினரிடம் இறுதியில் சரணடைந்து தமது வரலாற்றினை முள்ளிவாய்க்காலில் முடித்துவிட்ட சம்பவம் இடம்பெற்றது.

இவரால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் திசை திரும்பி அரசியலற்ற இராணுவத் தன்மை நிறைந்த பயங்கரவாதமாக மாற்றமடைந்தது. இதன் காரணமாகவே திரு பிரபாகரன் அவர்கள் கொல்லப்பட்ட பின்னர் அந்த அமைப்பிலிருந்து தமிழ் மக்களுக்கான புதிய தலைமைகள் உருவாகாமல் போனது. தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக நடாத்தப்பட்ட போராட்டமாக அப்போராட்டம் ஆரம்பித்திருப்பின் மேற்கூறிய (18.05.2009ந்) திகதியுடன் அப்போராட்டம் நிறைவுபெற்றதன் மர்மமென்ன? இதனூடாக இடம்பெற்றது ஓர் விடுதலைப் போராட்டமல்ல அது ஒரு தனிமனிதன் மூலம், நிலப்பிரதேசமொன்றினை ஆளுமை செய்வதற்காக முன்னெடுக்கப்பட்ட ஆயுத வன்முறை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்னும் பெயரில் தமிழ் மக்கள் மத்தியில் உலாவரும் கூட்டமைப்பினரும் பிரபாகரனின் அடாவடித்தனமூடாக உருவாக்கப்பட்டு பயங்கரவாதத்திற்கு தமது பூரண பங்களிப்பினை வழங்கியவர்களே என்பதனை தமிழ் மக்கள் அறிந்து செயற்படத்தவறும் பட்சத்தில் தமிழ் மக்களின் வாழ்வில் ஒளிவீசுவது கற்பனையே!

இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்குப்பலம் பெறும் சின்னமாக அமைந்துள்ளது. வீட்டுச் சின்னமாகும். இச்சின்னம் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரான திரு செல்வநாயகம் அவர்களாலோ அன்றி ஏனைய வடமாகாண அரசியல்வாதிகளாலோ அறிமுகப்படுத்தப்பட்டதல்ல என்பதும் இங்கு முக்கியமானதாகும். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக பாராளுமன்ற தேர்தலின்மூலம் முதன்முதல் களமிறங்கியவர்களில் (1947) திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு சிவபாலன் அவர்களால் அன்று தமது வாக்காளருக்கான சின்னமாக தேர்ந்தெடுக்கப்பட்டதே (வீடு) இவ்வீட்டுச் சின்னமே என்பது பலரும்



படிப்பகம்

www.padippakam.com

அறியாத செய்தியாகும். அத்தோடு தமிழ் மக்களின் உரிமைகளை வழங்கமறுத்த சிங்கள ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக கறுப்புக்கொடிப் போராட்டம் நடாத்தப்பட்டபோது இலங்கையின் ஒன்பதாவது சுதந்திர தினமான (1957.02.04ந்) திகதியன்று திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கறுப்புக் கொடி கட்டிய 22 வயதான திரு நடராஜன் கொல்லப்பட்டார். அவர்மீது சிங்களத் தீவிரவாதியான எப்.ஜி.மனுவல் டி சில்வா என்னும் காடையன் ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இவரே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக முதன்முதலாக உயிர்நீத்த தியாகி திருமலை நடராஜன் என அழைக்கப் படுபவராகும்.

## தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் கட்சி

திரு.ஜி.ஜி பொன்னம்பலம், திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. ஈ.எம்.வி நாகநாதன், திரு. கு. வன்னியசிங்கம் மற்றும் திரு. எஸ். சிவபாலன் ஆகியோர் இணைந்து ( 27.10.1944ம்) ஆண்டு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்னும் பெயரில் தமிழ்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நோக்குடன் அரசியல்கட்சி ஒன்றினை உருவாக்கினர்.

அதனைத் தொடர்ந்து இலங்கைப் பாராளுமன்றத்திற்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான முதலாவது பொதுத் தேர்தல் 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் திகதி முதல் செப்டம்பர் 20ந் திகதிவரை இடம்பெற்றது.

இத்தேர்தலின்போது வட மாகாணத்தில் போட்டியிட்ட தமிழர்கள் ஒரே சின்னத்தில் போட்டியிடும் அளவிற்கு அவர்களுக்குள் தமிழர்கள் என்னும் ரீதியிலோ, அன்றி கட்சி என்னும் பெயரிலோ ஒருமைப்பாடு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முதலாவது பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்ற தமிழ், முஸ்லிம் வேட்பாளர்களின் விபரம் பின்வருமாறு அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

| தொகுதி | பெயர் | சின்னம் | பெற்ற வாக்குகள் | மொத்த வாக்காளர் |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | ஏ.தம்பையா | தராசு | 5.562 | 33.045 |
| வட்டுக்கோட்டை | கே கனரெத்தினம் | யானை | 11.722 | 37.334 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி.செல்வநாயகம் | திறப்பு | 12.126 | 38.871 |
| யாழ்ப்பாணம் | ஜி.ஜி பொன்னம்பலம் | சைக்கில் | 14.324 | 42.546 |
| கோப்பாய் | கு.வன்னியசிங்கம் | யானை | 9.619 | 32.999 |
| பருத்தித்துறை | ரீ. ராமலிங்கம் | தராசு | 10.396 | 41.682 |
| சாவகச்சேரி | வி. குமாரசாமி | தராசு | 11.813 | 28.377 |
| மன்னார் | சி.சிற்றம்பலம் | திறப்பு | 5.877 | 14.587 |
| வவுனியா | சி. சுந்தரலிங்கம் | மரம் | 4.026 | 11.099 |
| திருகோணமலை | எஸ். சிவபாலன் | வீடு | 5.252 | 18.431 |
| மூதூர் | ஏ.ஆர்.எம்.அபூபக்கர் | யானை | 3.480 | 16.649 |
| கல்குடா | வி.நல்லையா | கை | 5.559 | 22.030 |
| மட்டக்களப்பு | ஏ.எல் சின்னலெவ்வை | மரம் | 4.740 | 27.409 |
| பட்டிருப்பு | எஸ்.யூ. எதிர்மனசிங்கம் | பறவை | 5.632 | 22.358 |
| கல்முனை | எம்.எஸ் காரியப்பர் | திறப்பு | 6.886 | 22.753 |
| பொத்துவில் | எம்.எம். இப்றாகிம் | தராசு | 7.407 | 18.164 |
| புத்தளம் | எச்.எஸ் இஸ்மாயில் | | போட்டியின்றி தெரிவு | |
| மொத்தவாக்காளர்கள் | உறுப்பினர்கள் – 17 | | | 428.234 |

## தமிழரசுக் கட்சியின் முதலாவது தேசிய மகாநாடு

திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியினரின் முதலாவது தேசிய மகாநாடு 1951ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13,14,15,ந் திகதிகளில் அங்கு நடாத்தப்பட்டது. அங்கு இடம்பெற்ற மகாநாட்டில் திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்கள் மீண்டும் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தலைவர் தமது உரையில் முதலாவது மகாநாடு நடாத்துவதற்கான இடமாக திருகோணமலையை தெரிந்தெடுத்ததற்கான காரணங்கள்பற்றி விளக்கும்போது கீழ்கண்ட விடயங்களை முன்வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1. திருகோணமலை சரித்திரச் சிறப்புப்பெற்ற நகரமாக இருந்தமை.

2. தமிழ் இனம் பல நூற்றாண்டுகாலமாக செழிப்பாக வாழ்ந்த பிரதேசமாக இருந்தமை.

3. இயற்கையின் எழில்மிகு சூழலை தம்வசம் உள்ளடக்கிய நகரமாக இருக்கின்றமை.

4. தமிழ்பேசும் மக்கள் வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மத்தியில் அமைந்துள்ளமை.

5. திருகோணமலை மக்கள் விடுதலை உணர்வில் உறுதியும், கொள்கைப்பற்றும் கொண்டுள்ளமை.

6. தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசமான திருகோணமலை சிங்கள குடியேற்ற ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பமை மேற்கூறிய காரணங்களின் நிமிர்த்தமே நாம் திருகோணமலையைத் தேர்ந்தெடுத்தோமென குறிப்பிட்டார்.

**அதனைத் தொடர்ந்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.**

1. தமிழ்பேசும் மக்கள் ஒரு தேசிய இனமெனவும் அவர்கள் அரசியல் ரீதியாக சுயாதீனம் பெறுவதற்கும் சிங்கள மக்களுடன் சமஸ்டி அமைப்பு முறைமின்கீழ் இணைந்து வாழ்வதற்கும் விருப்பம் உள்ளவர்களெனவும் இம்மகாநாடு பிரகடனப்படுத்துகிறது

2. சோல்பரி அரசியலமைப்பு தமிழ்பேசும் இனத்தை அடிமைப்படுத்துவதற்கு வழிகோலுகின்றதெனவும், தற்போதைய அரசியல் திட்டத்தின் கீழும் அரசாங்கத்தின்கீழும் தமிழ் மொழியும் கலாச்சாரமும் ஆபத்தை எதிர்நோக்குகின்றதெனவும் அத்துடன் அரசாங்கத்தின் காணிப்பங்கீடு., குடியேற்றத் திட்டக்கொள்கை இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் தாயக பிரதேசத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்திமிருக்கின்றது. அவற்றை மாற்றியமைக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

3. இலங்கைமின் அதிகாரபூர்வமான தேசியக்கொடி தமிழ்பேசும் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளென வெளிக்காட்டிருப்பவைபோன்ற விடயங்களை இம்மகாநாடு கண்டிப்பதுடன் தமிழ் மக்களுக்கான சமஸ்டி



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் அமைப்புமுறை மூலம் அனைவருக்கும் சுதந்திரம், சமத்துவம், சமஉரிமை, நீதி என்னும் உயர்ந்த இலட்சியங்களை நடைமுறைப் படுத்துவதற்கு பின் குறிப்பிடும் செயற்பாடுகள் ஊடாக இது நடைமுறைப்படுத்தப்படுமெனவும் குறிப்பிடப்பட்டது.

1. சுவிஸ்லாந்து நாட்டின் அரசியல் திட்டத்தில் மாகாண அமைப்பு முறையில் உள்ளதுபோல திட்டமிட்ட பிரதேசங்களை சுயாட்சி மாவட்டங்களாகக்கொண்ட ஒரு பரந்த அடிப்படையிலான அமைப்பினை நிறுவுதல்.

2. பூரண சோஷலிஸ பொருளாதாரம் என்னும் கோட்பாட்டினை பின்பற்றுதல்.

3. சுயாதீன தமிழரசின் அரசியல் அமைப்புத் திட்டத்தில் ஜனநாயக கோட்பாடுகளை எழுத்திலும் செயலிலும் கண்டிப்பாக கடைப்பிடித்தல்.

மேற்கூறிய செயற்பாடுகளின்மூலம் இன, மத, மொழி, என்னும் பேதமற்ற ஓர் சமத்துவ சமுதாயத்தை உருவாக்கமுடியுமெனவும் முன்வைக்கப்பட்டது. அத்தோடு முஸ்லிம் மக்களின் விடயத்தில் திரு. எஸ்.ஜே.வி. அவர்களின் நிலைப்பாடு பின்வருமாறு அமைந்தது.

கிழக்கு மாகாணம் முழுவதையும் தமிழ்பேசும் மக்களின் பிரதேசமாக உருவாக்கவேண்டுமானால் தமிழ்பேசும் இருசாராரும் தமிழர்களும். முஸ்லிம்களும் ஒன்றுசேரவேண்டும் ஆனால் தமிழரசுக் கட்சியின் கொள்கைப்படி முஸ்லிம்கள் வாழும் பகுதிகள் தமிழ்ப் பிரதேசத்துடன் இணைந்து இருக்கவேண்டுமா அல்லது சிங்களம் பேசும் பிரதேசத்துடன் இணைந்திருக்கவேண்டுமா என்பதை முஸ்லிம் மக்களே தீர்மானிப்பதற்கான பூரண சுதந்திரம் இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது என பிரகடனப்படுத்தப்பட்டது.

## 1956ம் ஆண்டு பொதுத்தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விபரமும் கட்சிகளும்.



படிப்பகம்

www.padippakam.com

| தொகுதிகள் | தெரிவான பிரதிநிதிகள் | சின்னம் | பெற்ற வாக்குகள் | மொ. வாக்களித் தவர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | வி.ஏ.கந்தையா | வீடு | 16.308 | 23.096 | 32.410 |
| வட்டுக்கோட்டை | அ.அமிர்தலிங்கம் | வீடு | 14.937 | 26.148 | 35.927 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி செல்வா | வீடு | 14.855 | 27.673 | 40.964 |
| சாவகச்சேரி | வி.என். நவரெத்தினம் | வீடு | 15.952 | 24.835 | 35.922 |
| பருத்தித்துறை | பி. கந்தையா | நட்சத்திரம் | 14.381 | 28.621 | 44.603 |
| யாழ்ப்பாணம் | ஜி.ஜி. பொன்னம்பலம் | சைசிக்கல் | 8.914 | 22.178 | 34.804 |
| கோப்பாய் | கு.வன்னியசிங்கம் | வீடு | 12.804 | 24.091 | 34.465 |
| மன்னார் | வி.ஏ.அழகக்கோன் | வீடு | 6.726 | 12.766 | 15.819 |
| வவுனியா | சி.சுந்தரலிங்கம் . | மரம் | 6.853 | 8.778 | 15.946 |
| திருமலை | என்.ஆர் இராஜவராதயம் | வீடு | 7.048 | 12.449 | 16.093 |
| மூதூர் | எம்.ஈ.எச் முகம்மதலி | தராசு | 10.549 | 12.565 | 22.177 |
| கல்குடா | ஏ.எம்மாக்கான் மரைக்கார் | குடை | 6.719 | 16.252 | 26.732 |
| மட்டுநகர் | செ.இராசதுரை | வீடு | 9.300 | 18.156 | 29.486 |
| பட்டிருப்பு | யூ.எஸ் எதிர்மனசிங்கம் | விளக்கு | 9.528 | 19.172 | 25.849 |
| கல்முனை | எம்.எஸ் காரியப்பர் | வீடு | 9.464 | 19.984 | 27.841 |
| பொத்துவில் | எம்.எம் முஸ்தபா | வீடு | 8.355 | 16.126 | 25.273 |
| புத்தளம் | எச்.சீக் இஸ்மாயில் | சக்கரம் | 6.524 | 11.941 | 17.354 |
| | | | 179.217 | | 481.665 |

மேலே விபரிக்கப்பட்டுள்ள வெற்றிபெற்றவர்களில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டவர்கள் தமிழரசுக் கட்சியிலும் ஏனையோர் சுயேச்சைகளாகவும் களமிறங்கினர்.

மூன்றாவது பாராளுமன்றத்திற்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான நியமனப்பத்திரங்கள் 1956 பெப்ருவரி 18ந் திகதி முதல் மார்ச் 8ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு வாக்கெடுப்பு ஏப்ரல் 5,7,10 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது.



படிப்பகம்

www.padippakam.com

## மூன்றாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் (1956 ஏப்ரல் 5,7,10.ந்) திகதிகளில் இடம்பெற்றது.

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித்தவர்கள் | விகிதம் | வெற்றி பெற்றவர்கள் |
|---|---|---|---|---|
| மக்கள் ஐக்கிய முன்னணி மொழிகள் முன்னணி ஸ்ரீ.ல.சு.கட்சி விப்லவக்காரி சமசமாஜ கட்சி | 60 | 1,046,277 | 39.52 | 51 |
| ல.ச.சமாஜ கட்சி | 21 | 274,204 | 10.56 | 14 |
| இல.த.அரசுக் கட்சி | 14 | 142,758 | 5.39 | 10 |
| இல.கம்யூனிஸ்ட் கட்சி | 09 | 119,715 | 4.52 | 03 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 01 | 8,914 | 0.34 | 01 |
| சுயேச்சைகள் | 68 | 316,569 | 11.96 | 08 |
| ஐ.தே.கட்சி | 76 | 738,810 | 27.09 | 08 |
| மொத்தம் | 249 | 2,647,247 | | 95 |

தேர்தல் முடிவுகளுக்கமைய திரு.எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா அவர்களைப் பிரதமராகக்கொண்டு (12.04.1956ல்) ஆட்சி அமைக்கப்பட்டது. ஆட்சி அமைத்து ஒரு மாதகாலப் பகுதியில் அதாவது (05.06.1956ல்) சிங்களம் மட்டும் அரசகரும மொழி என்னும் சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து (15.06.1956ல்) நிறைவேற்றினார்.

## சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டம் தொடர்பான பெரும்பான்மைக் கட்சிகளின் செயற்பாடு

1956ம் ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலுக்கு நான்கு மாதங்களுக்கு முன்னர் அதாவது (17.12.1955ல்) நிட்டம்புவ என்னுமிடத்தில் இடம் பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில் சிங்கள மொழியினை அரச கரும மொழியாக பிரகடனஞ் செய்வதெனவும் அதேவேளை தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

மொழிக்கும் நியாயமான இடத்தினை வழங்குவதென்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. அதேவேளை தேர்தலுக்கு இரு மாதங்களுக்கு முன்னர் (18.02.1956ல்) நடைபெற்ற ஐ.தே.கட்சியினரின் களனி மகாநாட்டில் சிங்கள மொழியினை மட்டும் அரச கரும மொழியாக அங்கீகரிப்பதென்னும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு. பண்டாரநாயக்கா அவர்களின் அரசாங்கத்தினால் சிங்களம் மட்டும் சட்டமூலம் கொண்டுவரப்பட்டதையடுத்து யூன் மாதம் 5ந் திகதி திரு.எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களின் தலைமையில் சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட தமிழ்மக்களும் அரசியல்வாதிகளும் இணைந்து சத்தியாக்கிரகப் போராட்டமொன்றினை காலிமுகத்திடலில் (கொழும்பு) காலை 8.30 மணிமுதல் நண்பகல் 1.30 வரை நடாத்தினர் அதேவேளை பிக்கு பெரமுனையைச் சேர்ந்த பெரும் அளவிலான பிக்குமார் சிங்களம் மட்டும் சட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்த நியாயமான அளவு தமிழ் உபயோகத்திற்கு வகைசெய்யும் சரத்து நீக்கப்படவேண்டும் எனக்கோரி பாராளுமன்றத்தை நோக்கி ஊர்வலம் ஒன்றினை மேற்கொண்டனர். இவர்களைத் தொடர்ந்து சிங்களம் மட்டும் சட்டமூலத்தின் ஆதரவாளர்களும் ஆயிரக்கணக்கில் பாராளுமன்றத்திற்கு ஊர்வலமாக சென்றனர். அவ்வேளை காலிமுகத்திடலில் தமிழ் தலைவர்கள் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை கண்ணுற்ற சிங்களம் மட்டும் ஆதரவாளர்கள் அவர்கள்மீது தாக்குதல்களை மேற்கொண்டனர் இவர்களின் இத்தாக்குதல்களை தடுத்து நிறுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டநிலையிலும் வன்முறையாளர்களினால் சத்தியாக்கிரகிகள் பலத்த தாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் பல தமிழர்கள் தாக்கப்பட்டு காலிமுகத்திடலைத் தொடர்ந்து பாராளுமன்றக் கட்டிடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள ஏரிக்குள் தூக்கி எறியப்பட்டனர் அடுத்த நடவடிக்கையாக வீதியில் காணப்பட்ட தமிழர்கள் அனைவரும் சிங்கள காடையர்களால் தாக்கப்பட்டனர். இச்சம்பவத்தின்போது திருவாளர்கள் அமிர்தலிங்கம் நாகநாதன் ஆகியோர் நெற்றியில் பலத்ததாக்குதலுக்கு ஆளாக்கப்பட்டு இரத்தம் தோய்ந்த நிலையில் பாராளுமன்றம்சென்று சட்டமூலத்தை எதிர்த்து உரையாற்றியமை அவர்களின் விடுதலை உணர்வையும் வீரத்தையும் வெளிக்காட்டியது. இதன் பின்னணியில்



படிப்பகம்

www.padippakam.com

நாடு முழுவதும் பரவிய கலவரத்தில் தமிழ் மக்களின் வீடுகள் வாகனங்கள் போன்றனவும் தீயிட்டு எரிக்கப்பட்டன தமிழர்கட்கும் சிங்களவர்கட்கும் இடையேயான இந்த இனக்கலவரத்தில் ஏறக்குறைய 150 தமிழ் மக்கள்வரை கொல்லப்பட்டதாக புள்ளி விபரங்கள் வெளிக்காட்டின. இக்கலவரம் நாட்டிலுள்ள மக்களை இனத்துவரீதியாக மேலும் வேறு படுத்துவதற்கு காரணியாக அமைந்தது அத்துடன் கிழக்கு மாகாணத்தில் திரு.டி.எஸ்.சேனநாயக்கா அவர்களினால் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்ட சிங்கள குடியேற்றத்திட்டமான கல்லோயாவிலும் இனக்கலவரம் தூண்டிவிடப்பட்டு அருகருகே வாழ்ந்த தமிழரும் சிங்களவரும் பிரச்சினைக்கு உட்படுத்தப்பட்டு அங்கிருந்து தமிழர்கள் வெளியேறினர். மேற்படி சம்பவமே தமிழ் மக்களுக்கு எதிராக முதன்முதலாக பெரும்பான்மை இனத்தவரால் முன்னெடுக்கப்பட்ட இன வன்முறையாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இச்சட்டமூலத்தை எதிர்த்து உரையாற்றிய இடதுசாரிக் கட்சியின் தலைவரான கொல்வின் ஆர் டி சில்வா அவர்கள் உரையாற்றும்போது ஒரு மொழியானால் இரண்டு நாடு இரு மொழியானால் ஒரு நாடு என்பதை சுட்டிக்காட்டினார் அவர் கூறியதன் அர்த்தம் ஒரு மொழியை மட்டும் அரசகரும மொழியாக்கினால் நாடு பிளவுபடுவதற்கான காரணிகள் உருவாகும். தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளையும் அரசகரும மொழியாக்கினால் இன ஒற்றுமை பாதுகாக்கப்பட்டு பிரிவினைவாதம் தலைதூக்காது மக்கள் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்வார்கள் என்பதையே வலியுறுத்தியது

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் 1956 இல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது ஒரு மொழியானால் இரண்டு நாடுகள் இரு மொழியானால் ஒரு நாடு எனக்கூறிய திரு. கொல்வின் ஆர்.டி சில்வா அவர்களேதான் புதிய குடியரசு அரசியலமைப்பை (1972ல்) உருவாக்கி சிங்களம் மட்டும் சட்டத்தையும் பௌத்த மதம் அரசாங்க மதம் என்னும் சரத்தையும் உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது

## சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்னும் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்த சிறுபான்மை இனத்தவர்கள்:



படிப்பகம்

www.padippakam.com

C.S.A. Marikkar
J.R. Murray
Dr. M.P.Drahaman
R.S.V.Poulier (appointed Burgher members)
R.P.Gaddum
Sir. Razik Fareed
R. Singleton-Salmon
Rosslyn Koch

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஒன்று ஏற்பட்டமையைத் தொடர்ந்து திரு.எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா அவர்களுக்கும் தமிழரசுக்கட்சியின் தலைவரான திரு எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களுக்கு இடையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி முறைபோன்ற ஓர் நிர்வாகத்தினை அமுல்படுத்துவதற்கும், அப்பிரதேசங்களின் நிர்வாக மொழியாக தமிழ் மொழியினை அங்கீகரிப்பதற்குமாக பண்டா – செல்வா உடன்படிக்கை என்னும் பெயரில் ஓர் உடன்படிக்கை(27.07.1957ல்) கைச்சாத்திடப்பட்டது.

## இலங்கையில் இடம்பெற்ற முதலாவது இனக்கலவரம் (1915)

இனரீதியான வன்முறைகள் 1915 வரை நடைபெற்றதாகத் தெரியவில்லை. அரசியல் ரீதியான ஆதிக்கமே காலத்துக்குக் காலம் யுத்தங்கள் நடைபெறப் பிரதானமான காரணமாக இருந்தன என்பது நோக்கத்தக்கது. ஐரோப்பியர் இலங்கையை ஏறத்தாழ 450 வருடகாலம் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து ஆட்சி செலுத்தினர். ஆங்கிலேயர் 1796 இல் இலங்கையில் தமது ஆட்சியை நிறுவிய பின்னர் 1815இல் கண்டி உட்பட முழுநாட்டையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இவர்கள் அதிகாரம் செலுத்திய காலத்திலேதான் இரண்டு இனங்களுக்கிடையிலான இனவன்முறை மோதல் முதன் முதலாக நடைபெற்றது. இது முஸ்லிம், சிங்கள இனங்களுக்கிடையிலான கலவரமாகும். எனவே முதல் இனரீதியான அடி தமிழருக்கு அல்ல மாறாக 1915 இல் சிங்களவர்களால் முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டதென்பது உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

1833 இல் ஆங்கிலேயரால் சட்டசபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதே ஆண்டில் பிரித்தானியரின் ஆட்சியின்கீழ் நிர்வகிக்கப்பட்ட உத்தியோக மொழியாக ஆங்கிலம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கமைய இலங்கையில் வாழும் மக்களுடனான தொடர்புகளை மேற்காள்வதற்காக 1835 இல் அரசாங்க மொழி பெயர்ப்பாளர்களாக சிங்களவர் ஒருவர், தமிழர், பறங்கியர் ஆகிய இனத்தவர்களில் தலா ஒவ்வொருவர் வீதம் மொத்தம் மூன்று உறுப்பினர்கள் இனரீதியில் நியமிக்கப்பட்டனர். இனரீதியான நியமனங்கள் 1835 ஆம் ஆண்டுதான் முதன்முதலாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டதென்பது மற்றோர் முக்கிய விடயமாகும். இந்தச் சட்டசபையில் பல்வேறு மாற்றங்களை மேற்கொள்ளவேண்டித் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. இனரீதியான பிரதிநிதித்துவத்தின் ஆபத்தினை உணர்ந்ததாலோ என்னவோ 1910 இல் பிராந்திய பிரதிநிதித்துவத்தினை இலங்கையர் கோரலாயினர். இக்கோரிக்கையினை ஆங்கிலம் கற்ற வகுப்பினர் மேற்கொண்டனர். இதற்காக அகிம்சைப் போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும் அவர்கள் நடத்தினர். 1833 இல் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பில் திருத்தங்கள் கோரி தொடர்ச்சியாக ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகளில் ஈடுபட்ட காலம். 1910 –1915 இல் இக்கிளர்ச்சி தீவிரமடைந்திருந்தது.

1915 இல்பௌத்த மத ஊர்வலம் ஒன்றை நடத்துவதற்கு பௌத்த பிக்குகள் ஒருசாரார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இதனை அறிந்த முஸ்லிம்கள் மேற்படி ஊர்வலத்தின்போது தமது பள்ளிவாசல் பிரதேசத்தினைக் கடந்துபோகும்போது பௌத்தர்கள் முஸ்லிம்களுக்கு எதிரான சுலோகங்களை ஒலிக்க ஒழுங்குகள் செய்திருப்பதாக அறிந்தனர். அதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் அது சிங்கள மக்களுக்கும், தமக்குமிடையில் இருக்கும் ஒற்றுமையினை சீரழிக்க வழிகோலுமென அஞ்சினர். அதனால் அதுபோன்ற விடயங்களை தவிர்த்துக் கொள்வதற்காக ஏற்கனவேயே நீதிமன்றத்தின் உதவியை நாடினர். அதற்கமைய நீதிமன்ற கட்டளையின்படி குறிப்பிட்ட கம்பளை முஸ்லிம் பள்ளிவாசலைக் கடக்கும் சந்தர்ப்பத்தில் 100 யார் தூரத்துக்கு எந்தவித ஆரவாரமும் இன்றிச் செல்ல வேண்டுமென்று உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் அத்தீர்ப்பிற்கு மதிப்பளிக்காது ஊர்வலத்தில் ஈடுபட்ட பௌத்த சிங்களவர்கள் செயற்பட்டுக் கொண்டனர். இதனால் இந்திய முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்குமிடையே மோதல்கள்



படிப்பகம்

www.padippakam.com

வெடித்தன. ஏற்கனவே முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் சமூக, பொருளாதார ரீதியாகக் காணப்பட்ட போட்டியானது இந்தக் கலவரத்திற்கு மற்றொரு காரணமாகவும் கூறப்படுகின்றது. எது எவ்வாறாக இருந்தபோதும் சமயம் சம்பந்தமான இந்த முரண்பாடானது முஸ்லிம்களுக்கு எதிரான வன்செயலுக்கு காரணமாயிற்று. இந்த வன்செயலினால், கம்பளையிலுள்ள முஸ்லிம்களின் கடைகள், சொத்துக்கள் அடித்து நொறுக்கப்பட்டன, கொள்ளையடிக்கப்பட்டன. இந்த வன்செயல் கொழும்பு, குருநாகல் போன்ற இடங்களுக்கும் பரவிக்கொண்டது.

இந்த நிலையைக் கண்டு ஆங்கில அரசு அச்சமடைந்தது. இந்த அச்சத்திற்கு மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. அப்போது முதலாம் உலக மகாயுத்தம் தீவிரமடைந்திருந்தது. இந்த யுத்தத்தில் பிரித்தானியா முக்கிய பங்கு வகித்திருந்தது. இதனால் சிங்கள முஸ்லிம் குழப்பத்தின் பின்னணியில் அரசாங்கத்திற்கு விரோதமான சக்திகள் இருப்பதாக ஆளுநர் றொபட் தோமஸ் என்பவர் அச்சமும், ஐயமும் கொண்டார். இதனை அடக்க கடும் நடவடிக்கை எடுத்தார். ஏறக்குறைய நாட்டில் எல்லாப் பகுதிகளுக்கும் பரவிய முஸ்லிம்களுக்கெதிரான வன்செயல்களை அடக்க இராணுவச் சட்டத்தை (மார்ஷல்லோ) பிரகடனப்படுத்தினார். இவ்விடயம் தொடர்பாக மிகையாக அச்சமடைந்த பிரித்தானிய அரசு யுத்தகாலத்தில் அரசுக்கெதிராக ஏற்படுத்தப்பட்ட ஒரு சதியென இதனை எண்ணியதாக பி. எச். பாமர் என்னும் பிரிட்டிஷ் ஆய்வாளர் 'டிலைடெட் நேசன்' என்னும் தமது நூலில் குறிப்பிட்டிருந்தார்.

பிரித்தானிய அரசு இவ்வாறு கருதியமையே அக்காலகட்டத்தின்போது பிரபல சிங்களத் தலைவர்களாக இருந்த திரு. டி. எஸ். சேனநாயக்கா, எப்.ஆர் சேனநாயக்கா சீ பட்டுவன்துடாவே சீ.ஏ ஹேவாவிதாரண ஏ.ஈ குணசிங்கா சேர். பாரன் ஜெயதிலகா, டபிள்யூ. ஏ. டி. சில்வா ஆகியோர் பிரித்தானிய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட காரணமாக அமைந்தது.

அதுமட்டுமல்ல கலகத்தை அடக்க எடுத்த கடும் நடவடிக்கையினால் வில்லியம் பதிரிஸ் உட்பட பல சிங்களவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மேற்படி முஸ்லிம் சிங்கள இனமோதல் மூலம் அவர்களிடையே காணப்பட்ட உறவுகள் திருப்தியற்றனவாக மாறிக்கொண்டன.



படிப்பகம்

ஆனால் அதன்பின்னர் (41) நாற்பத்தொரு ஆண்டுகள் கடந்த நிலையில் இலங்கையில் தமிழர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட (1956ல்) வன்முறையானது சிங்களவர்களாலும் அவர்களின் ஆட்சியாளர்களினாலும் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்து விடப்பட்டன என்பது தெளிவானது. ஆனால் 1915 இல் இடம்பெற்ற முஸ்லிம் சிங்கள வன்முறையானது தாய்நாட்டவர்களுக்கிடையிலானதாக அமைந்த போதும் அவற்றினை அடக்கியவர்கள் அந்நியரான ஆங்கில ஆட்சியாளர்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இலங்கையின் இனரீதியான வன்முறையானது தமிழருக்கு எதிராக அல்லாமல் முதன் முதல் முஸ்லிம்களுக்கெதிராகவே நடத்தப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. சிங்களவர்கள், சிறுபான்மைத் தமிழர்களுக்கெதிராக இன்று மேற்கொள்ளும் இனவன்முறையின் முதற்படி 1915 இல் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களால் நடத்திக் காட்டப்பட்டதென்பதும் சுட்டிக் காட்டத்தக்கது.

சிங்களம் அரசமொழிச் சட்டமும் தமிழர்களுக்கு எதிரான முதல் இனக்கலவரமும் 1956 இலங்கை சுதந்திரமடைந்த பின்பு சிறுபான்மையினர் புறக்கணிக்கப்பட்ட முதல் வரலாற்றுச் சம்பவம் 1956 இல் கொண்டுவரப்பட்ட சிங்களம் அரசமொழியென உருவாக்கப்பட்ட சட்டமாகும். அப்போதைய பிரதம மந்திரி எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் அரசமொழி என்னும் சட்டத்தைக் கொண்டுவந்து கறைபடிந்த இலங்கை வரலாற்றை உருவாக்கினார். இதன் மூலம் தமிழ் மொழியையும் புறக்கணித்தனர். இதனை எதிர்த்து 1956 ஜூன் 5 ஆம் நாள் காலிமுகத்திடலில் உண்ணாவிரதம் இருந்த தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் சிங்களமொழி மட்டும் சட்டத்திற்கு ஆதரவான குண்டர்களினால் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டனர். தமிழர்கள் பலர் கொல்லப்பட்டனர். தமிழர்களுடைய சொத்துக்கள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டன. சுதந்திர இலங்கையில் சிறுபான்மை இனத்தவரான தமிழருக்கு எதிராக சிங்களவர் மேற்கொண்ட முதல் இனக்கலவரம் இதுவாகும்.

இதன் பின்பு இரண்டு இனங்களும் இரு துருவங்களாக ஒருவரை ஒருவர் சந்தேகத்துடன் நோக்கும் நிலை தொடரும் நிலை ஏற்பட்டுக்கொண்டது.

www.padippakam.com

# பண்டா - செல்வா உடன்படிக்கை (27.07.1957)



சிங்களம் மட்டும் அரசகரும மொழியாக்கப்பட்டதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பெரும்பான்மையாக அன்று வாழ்ந்த வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு. பின்வரும் நடைமுறைகளை அமுலாக்க திரு பண்டாரநாயக்கா அவர்கள் இணக்கம் தெரிவித்தார்.

1. வட மாகாணம் ஒரு பிராந்திய சபையாகவும், கிழக்கு மாகாணம் இரண்டிற்கு மேற்பட்ட பிராந்திய சபைகளை உள்ளடக்கியதாக அமையுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

2. வடக்கு, கிழக்கின் நிர்வாக அலுவல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் நடைபெறுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3. கூட்டுறவு, நில அபிவிருத்தி குடியேற்றம், கல்வி, சுகாதாரம், கைத் தொழில், வீடமைப்பு, சமூகசேவை, மின்சாரம், நீர்ப்பாசனம் வீதிகள் போன்ற அனைத்தும் பிராந்திய சபைகளின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவருதல்.

4. குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படும்போது அந்தந்த மாவட்ட மக்களுக்கு முதலாவது இடமும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

மக்களுக்கு இரண்டாவது இடமும், ஏனைய மாவட்டத்தில் வசிக்கும் ஏனைய இன மக்களுக்கு மூன்றாவது இடமும் வழங்குதல்.

5. மத்திய அரசு பிராந்திய சபைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதுடன், பிராந்திய சபைகள் வரி அறவிடவும், கடன்பெறுவதற்கான வசதிகளையும் ஏற்படுத்துதல்.

6. இந்திய வம்சாவழி மக்களின் குடியுரிமைப் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணுதல்.

மேற்படி விடயங்களைக் கண்டித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சியினரின் தலைமையில் ஆர்ப்பாட்டங்கள் மேற் கொள்ளப்பட்டதுடன் இலங்கையின் (9)வது சுதந்திர தினமான (04.02.1957ந்) திகதியை துக்க தினமாக அனுஸ்டிக்கும்படி த.அ.கட்சியினர் தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இத்தினத்தினை துக்கதினமாக திருகோணமலை மக்கள் அனுஸ்டித்த நிலையில் திருமலை நகரில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் ஏறி கறுப்புக் கொடியினை கட்டிய (22) வயதான நடராஜன் என்பவர்மீது அங்கு மரக்கறிச் சந்தையினை நடாத்திய சிங்கள இனத்தவர்களில் ஒருவரான சிங்களத் தீவிரவாதியான எப்.ஜி.மனுவல் டி சில்வா என்னும் காடையன் ஒருவன் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இவரே தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்காக முதன்முதலாக உயிர்நீத்த தியாகி திருமலை நடராஜன் என அழைக்கப்படுபவராகும்.

அடுத்த நடவடிக்கையாக 1958ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 9ந் திகதி முதல் இலங்கையில் பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அனைத்திற்கும் இலக்கத் தகடுகளில் பொறிக்கப்பட்ட ஆங்கில (CEY) எழுத்துக்களுக்கு பதிலாக சிங்கள ஸ்ரீ எழுத்தினை பாவிப்பதற்கான தீர்மானத்தை திரு பண்டாரநாயக்கா அவர்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றினார். சிங்களம் மட்டும் அரசகரும மொழிச் சட்டத்தை அமுலாக்கியதனால் ஏற்பட்ட விளைவுகளின் அனர்த்தங்கள் ஓய்வதற்கு முன் மற்றுமொரு அனர்த்தம் நடைபெற்றது. சிங்கள ஸ்ரீ சட்டத்தை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்த்து தமிழ்பகுதிகளில் தமிழ்மக்களின் வாகனங்களுக்கு தமிழ்மொழியிலான ஸ்ரீ எழுத்தினை பாவிக்க த.அ.கட்சியினர் மேற்கொண்ட முயற்சியினால் 1956ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்மக்களுக்கெதிரான வன்முறைகளைவிட இம்முறை மேற்கொண்ட வன்செயல்கள் பலமடங்காக அதிகரித்தது. அதனடிப்படையில் தமிழ்மக்கள் சிதறி வாழ்ந்த பகுதிகளான கொழும்பு, பதுளை, குருணாகலை, பாணந்துறை, காலி, மாத்தறை ஆகிய பகுதிகளில் மே மாதம் 26, 27ந் திகதிகளில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளில் ஏறக்குறைய 12,000 தமிழ் மக்கள் வீடுவாசல்களையும் உடமைகளையும் இழந்து அகதிகளாக்கப்பட்டனர் இக்கலவரம் நான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றது. இச்சம்பவத்தின்போது தமிழ் தலைவர்கள் பலர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு தடுப்புகாவலில் வைக்கப்பட்டார்கள்.

இனக்கலவரம் இடம்பெற்றுக் கெடிண்டிருந்த அதேவேளை சிங்களப் பிரதேசங்களில் பாதைப்போக்குவரத்து வழிகாட்டிகளில் எழுதப்பட்டிருந்த தமிழ் மொழியிலான பெயர்ப் பலகைகளை சிங்களத் தீவிரவாதிகள் தார்பூசி (tar) ஒருவித கறுப்பு திரவகம் பாதைகள் அமைப்பதற்கு பாவிப்பது. அழித்தனர். அதேபோன்று தமிழ் பிரதேசங்களிலமைந்திருந்த சிங்கள மொழியிலான வீதி அறிவிப்பு பலகைகளும் அதேபாணியில் தமிழ் இளைஞர்களால் அழிக்கப்பட்டன. இந்நிலையிலேயே கலவரம் நாடுதழுவியரீதியில் மே மாதம் 25, 26, 27, மற்றும் 28 ஆகிய திகதிகளில் இடம்பெற்றது. இக்கலவரத்தில் (150)பேர்வரை கொல்லப்பட்டு (10,000) வரையான தமிழ் மக்கள் கொழும்பில் அகதிமுகாங்களில் தங்கவைக்கப்பட்டு நிலைமை சீரடைந்ததும் அவரவர் இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்நிலையில் அரசாங்கத்தில் அங்கம்வகித்த கூட்டுக்கட்சிகளுக்கிடையேயான பிளவு ஒருபக்கம் சிங்கள மொழியைமட்டும் அரசமொழியாக்கியதன் விளைவாக நாட்டிலேற்பட்ட அமைதியின்மை காரணமாக அரசாங்கம் அமைத்து இருவருட காலஎல்லையினுள் இரண்டு கலவரங்களுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை மறுபக்கமாக அரசியல் ஸ்திரமற்றநிலை காணப்பட்டதுடன் திரு பண்டாரநாயக்கா அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிக்கு அவரின் ஆளுங்கட்சியினர் மத்தியிலேயே பலத்த எதிர்ப்பு உருவாகியதுடன் எதிர்க்கட்சியினரும் இச்சம்பவத்தை தமக்கு சாதகமாக



படிப்பகம்

பயன்படுத்தினர் பலமுனையில் மேற்கோள்ளப்பட்ட எதிர்ப்பினை சமாளிக்கமுடியாதநிலையில் ஒப்பந்தம் உருவாக்கிய பிரதமரினாலேயே அது கிழித்தெறியப்பட்டது

## பண்டாரநாயக்காவின் படுகொலை

திரு. பண்டாரநாயக்கா அவர்கள் அவரின் உத்தியோக வாசஸ்தலமான றோஸ்மீட் பிளேஸில்வைத்து 1959 செப்டம்பர் மாதம் 25ந் திகதி தல்துவே சோமராம ஹிமி என்னும் பௌத்தபிக்கு ஒருவரால் சுடப்பட்டு 26ந் திகதி மரணமானார். கொலைக்குற்றச்சாட்டுப் பத்திரத்தில் இவர் நான்காம் எதிரியாகவும் இரண்டாவது எதிரியாக ஹேமச்சந்திர பியசேன ஜயவர்தனாவும் முதலாவது சந்தேக நபராக களனி ரஜமகா விகாரையின் விகாராதிபதி மாப்பிட்டிகம புத்தரகித்ததேரோவும் குற்றஞ்சாட்டப்பட்டனர் இவருக்கும் விமலா வியஜவர்தனாவிற்கும் தொடர்புகள் இருந்ததாக செய்திகள் வெளியாகிய அதேவேளை ஹேமச்சந்திர பியசேன ஜயவர்தன என்பவர் சுதந்திரக் கட்சியின் ஸ்தாபர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. பண்டாரநாயக்கா அவர்களின் படுகொலையினைத் தொடர்ந்து (26.09.1959) கலாநிதி டபிள்யூ தஹநாயக்கா அவர்கள் பிரதமராக பதவியேற்றார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சியில் இடம்பெற்ற நிகழ்வுகள்.

1. சிங்களம் மட்டும் அரச கருமமொழி என்னும் சட்ட அமுலாக்கல் (15.06.1956)

2. இலங்கையில் பாவனையிலுள்ள அனைத்து வாகனங்களுக்கும் பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தின்போது பயன்படுத்தப்பட்ட இலக்கங்களுக்கு முன்னால் அமைந்திருந்த C.E.Y) என்னும் ஆங்கில எழுத்துக்கள் நீக்கப்பட்டு (1958 ஏப்ரல் மாதம் 9ந் திகதி முதல்) சிங்கள மொழியிலான ஸ்ரீ எழுத்துக்கள் பாவனைக்கு அறிமுகப்படுத்தப் பட்டது அப்போதைய அரசாங்கத்தில் போக்குவரத்து அமைச்சராகவிருந்த திரு.மைத்திரிபால சேனநாயக்கா அவர்களின் தலைமையில் மேற்படி சம்பவம் முன்னெடுக்கப்பட்டது.

3. திரு பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சியின்போது தனியார் பஸ் சேவைகள் அரசுடமையாக்கப்பட்டதுடன். கத்தோலிக்க மிஷனரிப்

பாடசாலைகள், காப்புறுதிக் கூட்டுத்தாபனம், வங்கிகள் போன்றவை தேசியமயமாக்கப்பட்டமை, தனியாரிடமிருந்த அதிகாரங்கள் மக்கள் மயமாக்கப்பட்டது. இவற்றுடன் காலங்காலமாக ஆங்கில மொழியில் நடாத்தப்பட்டுவந்த பாராளுமன்ற உரைகளும், பதிவேடுகளும் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் நடைபெறுவதற்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு அவை செயற்படுத்தப்பட்டன.

அத்துடன் திரு.பண்டாரநாயக்கா அவர்களின் தனித்துவமான அரசியல் பிரவேசத்தினைத் தொடர்ந்து பாராளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகள் முறைமையில் பாரிய மாற்றமேற்பட வழியமைத்தது. (1947 முதல் 1956 வரை) பாராளுமன்றத்திற்கு தெரிவானோர் இலங்கை சமூகத்தின் உயர்வர்க்கங்களிலிருந்தும், பிரபல்யமான ஆங்கிலப் பாடசாலைகளில் கல்விகற்றவர்களுமாகவும், பெரும் நில உடமையாளர் களாகவும், அத்துடன் வாத்தகத் துறைகளின் அதிபர்களாக செயற்பட்டவர்களுமாகவே காணப்பட்டனர். இந்நிலையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு (1956)ற்குப் பின்னர் மக்கள் மத்தியில் செல்வாக்குள்ள சாதாரண கீழ் மட்டத்திலுள்ளவர்களும் பாராளுமன்ற பிரதி நிதித்துவத்தினைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

4. கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே திரு டி.எஸ் சேனநாயக்கா அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட கல்லோயா அபிவிருத்தித் திட்டம், பெரும்பான்மை இனமக்களை குடியமர்த்துவதற்கான நோக்குடன் பதவியாத் திட்டம் (1954) போன்ற குடியேற்றத் திட்டங்களைப்போன்று, அல்லை – கந்தளாய் குடியேற்றத் திட்டம்(1958) மற்றும் கந்தளாய் கரும்புப்பண்ணை உருவாக்கம் ஆகியவை ஸ்ரீ.ல.சு கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டன.

1959ம் ஆண்டு அமைக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணய சபையினரின் அறிக்கைக்கமைய ஏற்கனவே (95) உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்த பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் தொகை (151)ஆக உயர்த்தப்பட்டது. அத்துடன் வட மாகாணத்தில் உடுவில், உடுப்பிட்டி, நல்லூர் மற்றும் கிளிநொச்சி ஆகிய நான்கு புதிய தேர்தல் தொகுதிகளும் கிழக்கு மாகாணத்தில் (3) இரட்டை அங்கத்தவர் தொகுதிகளும் அதாவது மூதூர், மட்டக்களப்பு மற்றும் பொத்துவில் ஆகிய புதிய தொகுதிகளும் உருவாக்கப்பட்டன.

www.padippakam.com

## நான்காவது பொதுத் தேர்தல் (19.03.1960)

நான்காவது பாராளுமன்றத்தை தீர்மானிப்பதற்கான பொதுத்தேர்தல் 1960ம் ஆண்டு மார்ச் 19ந் திகதி நடாத்தப்பட்டது அத்தேர்தலின்போது 95ஆக இருந்த பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 151ஆக உயர்த்தப்பட்டது. 1959 டிசம்பர் 05ந் திகதி முதல் 1960 ஜனவரி 04ந் திகதி வரை நியமனப்பத்திரங்கள் கோரப்பட்டிருந்தன. இத்தேர்தலின்போது முக்கியவிடயம் என்னவெனில் 19நாட்கள் 04நாட்கள் 03 நாட்கள் என்றவகையில் 95 பேரை தெரிவு செய்வதற்காக எற்கனவே நடாத்தப்பட்டுவந்த பொதுத்தேர்தல் 1960இல் (19.03.1960) ஒருநாளில் வாக்கெடுப்பு நடாத்தி முடிக்கப்பட்டது.

அதற்கமைய 1960 ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போதிய பெரும்பான்மையினை பெறமுடியாதிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினர் தமிழரசுக் கட்சியினர் தமக்கு ஆதரவு வழங்குவார்களெனக் கருதிய நிலையில் புதிய மந்திரிசபையினை (23.03.1960ல்) அறிவித்து நான்காவது புதிய பாராளுமன்றத்தினைக் கூட்டினார் இப்பாராளுமன்றமானது 30.03.1960ல் திரு டட்லி சேனநாயக்கா அவர்களை பிரதமராகக் கொண்டு கூட்டப்பட்டது ஆனாலும் அன்றைய சிம்மாசனப் பிரசங்கம் முடிவுற்று அரசாங்கத்தின் பெரும்பான்மையினை நிரூபிப்பதற்கான வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது அரசதரப்பினருக்கு பெரும்பான்மை இல்லாது போனது அந்நிலையில் எதிர்க்கட்சியினரான ஸ்ரீ.ல.சு.கட்சியினர் தம்மிடம் பெரும்பான்மை இருப்பதாகவும் தாம் அரசாங்கத்தினை அமைப்பதற்கு கால அவகாசம் தருமாறும் அன்றைய தேசாதிபதியாக பணியாற்றிய திரு. ஒலிவர் குணதிலகா அவர்களிடம் வேண்டுகாள் விடுத்தனர்.அதனை ஏற்கமுன்வராத தேசாதிபதி அவர்கள் உடனடியாகவே பாராளுமன்றத்தினை கலைத்து தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

## நான்காவது பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள் (20.03.1960) மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 3.724.507



படிப்பகம்

www.padippakam.com

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித்தவர்கள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 127 | 909,043 | 29.89 | 50 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 108 | 647,175 | 21.28 | 46 |
| இ.த.அரசுக் கட்சி | 19 | 176,444 | 5.80 | 15 |
| ல.ச.சமாஜ கட்சி | 101 | 325,286 | 10.70 | 10 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 89 | 324,332 | 10.66 | 10 |
| இலங்கை ஜனநாயக் கட்சி | 101 | 135,138 | 4.44 | 04 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 53 | 147,612 | 4.85 | 03 |
| தேசிய விடுதலை முன்னணி | 02 | 11,201 | 0.37 | 02 |
| அ.இ.த.காங்கிரஸ் | 08 | 38,275 | 1.26 | 01 |
| போஸத் பண்டாரநாயக்க பெரமுன | 01 | 9,749 | 0.03 | 01 |
| சமாஜவாதி மஹாஜன பெரமுன | 40 | 23,253 | 0.76 | 01 |
| ஸ்ரீ.ல.ஜா. பெரமுன | 01 | 11,115 | 0.37 | 01 |
| சுயேச்சைகள் | 167 | 282,797 | 9.30 | 07 |
| மொத்தம் | 817 | 3,041,420 | | 151 |

## வடகிழக்கு மாகாண தேர்தல் முடிவுகள் தமிழர் தரப்பு (19.03.1960)

| தொகுதி | உறுப்பினர் | பெற்ற வாக்குகள் | மொத்தமாக அளிக்கப்பட்ட வாக்குகள் | மொத்த வாக்காளர் |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | வி.ஏ கந்தையா | 10,820 | 19,296 | 25,616 |
| வட்டுக்க கோட்டை | ஏ.அமிர்தலிங்கம் | 11,524 | 21,822 | 28,955 |
| காங்கேசன்துறை | எஸ்.ஜே.வி | 13,545 | 20,279 | 28,473 |
| உடுவில் | வி.தர்மலிங்கம் | 9,053 | 20,710 | 27,278 |
| யாழ்ப்பாணம் | ஏ.ரீ.துரையப்பா | 6.201 | 17,473 | 24,299 |
| நல்லூர் | ஈ.எம்.வி நாகநாதன் | 9,651 | 19,717 | 26,966 |
| கோப்பாய் | எம்.பாலசுந்தரம் | 10,279 | 21,487 | 27,858 |
| உடுப்பிட்டி | எம்.சிவசிதம்பரம் | 7,365 | 21,420 | 28,620 |
| பருத்தித்துறை | கே.துரைரெத்னம் | 5,679 | 14,231 | 19,408 |
| சாவகச்சேரி | வி.என் நவரெத்னம் | 13,907 | 21,483 | 25,822 |
| கிளிநொச்சி | ஏ.சிவசுந்தரம் | 3,741 | 9,079 | 13,991 |
| மன்னார் | வி.ஏ.அழகக்கோன் | 6,465 | 13,771 | 16,936 |
| வவுனியா | ரீ.சிவசிதம்பரம் | 5,370 | 12,515 | 18,469 |
| திருமலை | என்.ஆர்.இராஜவராதயம் | 8,872 | 12,548 | 19,024 |
| மூதூர் | ரீ.ஏகாம்பரம் | 10,685 | 41,127 | 28,520 |
| கல்குடா | பி.மாணிக்கவாசகர் | 7,318 | 15,299 | 18,330 |
| மட்டுநகர் | செ.இராஜதுரை | 28,309 | 60,408 | 37,832 |
| அம்பாறை | வி.விஜோர்த்ன | 4,237 | 13,961 | 19,935 |
| பட்டிருப்பு | எஸ்.எம். இராசமாணிக்கம் | 10,799 | 17,469 | 19,429 |
| கல்முனை | எம்.எஸ்.காரியப்பர் | 5,743 | 14,104 | 17,762 |
| நிந்தவூர் | எம்.எல்.எம் மஜீத் | 10,017 | 18,395 | 21,087 |
| பொத்துவில் | எம்.ஏ அப்துல் மஜீத் | 9,874 | 14,103 | 18,250 |
| புத்தளம் | எம்.எச்.நைனாமரைக்கார் | 7,344 | 14,613 | 17,736 |
| | | | 216,798 | 530,596 |



படிப்பகம்

www.padippakam.com

## 33 நாட்கள் மட்டும் ஆட்சி நடாத்திய அரசு

சிம்மாசனப் பிரசங்கம் என்பது இலங்கை ஜனநாயக சோஷசலிஸக் குடியரசு என்னும் அந்தஸ்தைப் பெறும்வரை (1978) அரசாங்கம் அமைக்கும் எந்தவொரு கட்சியினராக இருந்தாலும் தமது முதலாவது பாராளுமன்றம் கூட்டப்படும் தினத்தன்று பாராளுமன்றத்தில் தமது அரசின் கொள்கைவிளக்கம் பற்றி ஆற்றும் உரையினை சிம்மாசனப் பிரசங்கம் என அழைப்பது சம்பிரதாயமாகும். அந்த உரையின்போது அரசாங்கத்தின் எதிர்கால வேலைத்திட்டங்கள் நடவடிக்கைகளை சபையினருக்கு தெரிவிப்பதுடன் அப்பேச்சுக்கள் முடிவுற்றதும் நடைபெறும் வாக்கெடுப்பில் தமது அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெருமபான்மைப் பலத்தை கொண்டுள்ளது என்பதனை சம்பந்தப்பட்ட அரசாங்கம் நிரூபிப்பதற்காக நடாத்தப்படும் வாக்கெடுப்பில் அவர்கள் அதனை செயற்படுத்துவதே சிம்மாசனப் பிரசங்கத்தின் நோக்கமாகும். இந்தநடைமுறை 1978ம் ஆண்டின் புதிய அரசியலமைப்பில் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஒரே வருடத்தில் இடம்பெற்ற இரண்டாவது பொதுத்தேர்தலில் மீண்டும் 151 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக 1960 ஏப்ரல் 23 முதல் மே மாதம் 20ந்திகதி வரை நியமனப்பத்திரங்கள் ஏற்கப்பட்டு யூலை 20ந் திகதி வாக்கெடுப்பு நடாத்தப்பட்டது.

## ஒரே வருடத்தில் இடம்பெற்ற இரண்டாவது தேர்தல் (20.07.1960ல்) மொத்த வாக்காளர்கள் 3.724.507

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித் தவர்கள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 98 | 1,022,171 | 33.22 | 75 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 128 | 1,144,166 | 37.19 | 30 |
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | 21 | 213,733 | 6.95 | 16 |
| ல.ச.சமாஜக் கட்சி | 21 | 224.995 | 7.31 | 12 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 07 | 90,219 | 2.93 | 04 |



படிப்பகம்

www.padippakam.com

| | | | | |
|---|---|---|---|---|
| மக்கள் ஐக்கிய முன்னணி | 55 | 106,816 | 3.47 | 03 |
| ஸ்ரீ.லங்கா ஜனநாயகக் கட்சி | 06 | 30,207 | 0.98 | 02 |
| தேசிய விடுதலை முன்னணி | 02 | 14,030 | 0.46 | 02 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 10 | 46,804 | 1.52 | 01 |
| சுயேச்சைகள் | 45 | 183,728 | 5.97 | 06 |
| மொத்தம் | 39 | 3,098,869 | | 151 |

## 20.07.1960 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் த.அ.கட்சியினர் பெற்ற ஆசனங்கள்

| தேர்தல் தொகுதி | த.அ.க. வாக்களித்தவர்கள் | மொத்தமாக வாக்களித்தவர்கள் | பிரதிநிதிகள் | மொத்த வாக்காளர்கள் | தெரிவானவர்கள் |
|---|---|---|---|---|---|
| மட்டுநகர் | 29,853 | 57,622 | 01 | 37,832 | செ.இராஜதுரை |
| நிந்தவூர் | 12,115 | 16,548 | 00 | 21,087 | எம்.ஐ.எம்.அப்துல் மஜீத் |
| பொத்துவில் | 11,591 | 12,549 | 00 | 18,250 | எம்.ஏ.அப்துல்மஜித் |
| சாவகச்சேரி | 14,799 | 17,344 | 01 | 25,822 | வி.என். நவரத்னம் |
| யாழ்ப்பாணம் | 6,313 | 18,056 | 00 | 24,299 | ஏ.ரி துரையப்பா |
| கல்குடா | 7,605 | 13,025 | 01 | 18,330 | பி. மாணிக்கவாசகம் |
| கல்முனை | 7,616 | 13,405 | 01 | 17,762 | எம்.சி.அகமட் |
| காங்கேசன்துறை | 15,668 | 17,808 | 01 | 28,473 | எஸ்.ஜே.வி |
| ஊர்காவற்றுறை | 12,110 | 14,932 | 01 | 25,616 | வி.ஏ.கந்தையா |
| கிளிநொச்சி | 5,338 | 7,437 | 01 | 13,991 | ஏ.சிவசுந்தரம் |
| கோப்பாய் | 12,088 | 18,058 | 01 | 27,858 | எம் பாலசுந்தரம் |
| மன்னார் | 7,307 | 13,169 | 01 | 16,936 | வி.ஏ அழகக்கோன் |
| மூதூர் | 13,304 | 46,742 | 01 | 28,520 | ரீ.ஏகாம்பரம் |
| நல்லூர் | 11,728 | 18,065 | 01 | 26,966 | ஈ.எம்.வி நாகநாதன் |
| திருகோணமலை | 8.649 | 13,446 | 01 | 19,02 | என்.ஆர். இராஜவரோதயம் |
| பட்டிருப்பு | 10,948 | 16,576 | 01 | 19,429 | எஸ்.எம். இராசமாணிக்கம் |
| பருத்தித்துறை | 8.226 | 12.323 | 01 | 19.408 | கே.துரைரட்ணம் |
| உடுப்பிட்டி | 9.080 | 20.417 | 00 | 28.620 | எம்.சிவசிதம்பரம் |
| உடுவில் | 11.475 | 18.374 | 01 | 27.278 | வி.தர்மலிங்கம் |
| வட்டுக்கோட்டை | 13.454 | 18.935 | 01 | 28.955 | அ.அமிர்தலிங்கம் |
| வவுனியா | 7.393 | 12.867 | 00 | 18.469 | ரீ.சிவசிதம்பரம் |
| மொத்தம் | 235.660 | | | 492.925 | |



படிப்பகம்

www.padippakam.com

தேர்தல் முடிவுகளின்படி தமிழரசுக் கட்சியினர் (213.733) வாக்குகளைப்பெற்று (16) ஆசனங்களை கைப்பற்றினர். மேற்குறிப்பிட்டுள்ள தேர்தல் முடிவுகளில் (00) அடையாளமிடப்பட்ட தொகுதிகள் மாற்றுக் கட்சியினர் வெற்றியீட்டியவையாகும். தேர்தல் முடிவுகளின்படி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் (21.07.1960ல்) அமைக்கப்பட்டது அரசாங்கம் அமைக்கப்பட்டு சிறிதுகால இடைவெளியில் அரசகருமமொழியான சிங்கள மொழியினை அமுல்படுத்தும் நடவடிக்கைகள் வடகிழக்கில் தீவிரப்படுத்தப்பட்டன. மேற்படி 1961ம் ஆண்டின் 3ம் இலக்க உத்தியோக மொழிச்சட்டத்தை தமிழரசுக் கட்சியினர் தீவிரமாக எதிர்த்தும் அதனைப் பொருட்படுத்தாத ஸ்ரீமாவோ அரசு 1961 ஜனவரியில் சிங்களம் மட்டும் அமுல் படுத்தும் சுற்றறிக்கையை வட கிழக்கிலுள்ள அனைத்து திறைசேரிகளுக்கும் அனுப்பியது. இதனடிப்படையில் வட கிழக்கு கச்சேரிகளின் நிர்வாகமும் சிங்களத்தில் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் சிங்களத்தில் கடமையாற்ற முடியாத தமிழ் ஊழியர்கள் சிலர் தென் இலங்கைக்கு மாற்றப்பட்டதுடன் சிங்கள ஊழியர்கள் ஒருசாரார் வட கிழக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். நீதிமன்றங்கள் உட்பட சகல திணைக்களங்களிலும் பதிவேடுகள் சிங்கள மொழியில் பேணப்பட வேண்டுமெனவும் சிங்கள மொழியில் சித்திபெறாத அனைத்து தமிழ் ஊழியர்களினதும் பதவி உயர்வு, சம்பள உயர்வு போன்றவையை தடைசெய்யும்படியும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டது. இதன் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் அரச ஊழியர்களாக கடமையாற்றிவந்த யாழ்ப்பாணத்து மத்தியதர வர்க்கத்தினர் பெரும் பாதிப்பினை எதிர்கொண்டனர். அதுமட்டுமன்றி தமிழ் பாடசாலைகளில் சிங்கள மொழியைக் கற்பிக்க சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டு அனைத்து அரச சுற்று நிருபங்களும் சிங்கள மொழியிலேயே அனுப்பப்பட்டது. பிறப்பு இறப்பு திருமணப்பதிவேடுகள் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்கள் காசோலைகள் அனுமதிப் பத்திரங்கள் போன்ற அனைத்தும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அரசாங்கத்தின் கெடுபிடிகளுக்கு எதிராக சாத்வீகப் போராட்டத்தை தீவிரமாக்க வேண்டிய நிலைக்குத்தள்ளப்பட்ட த.அ.கட்சியினர் வல்வெட்டித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் கச்சேரிக்கு ஊர்வலம் ஒன்றை நடாத்தி யாழ் கச்சேரியின் நிர்வாகத்தை தமிழில் நடாத்தவேண்டுமென்னும் கோரிக்கையை யாழ் அரசாங்க அதிபரிடம் கையளித்தனர்.



படிப்பகம்

அடுத்த நடவடிக்கையாக கட்சியின் மகாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு 7வது மகாநாடு 1961 ஜனவரி 21ந் திகதி யாழ்நகரில் நடைபெற்றது. இம் மகாநாட்டின் தலைவராக பட்டிருப்பு பா.உ திரு. சி. மு. இராசமாணிக்கம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரின் தலைமையில் த.அ.கட்சியினரின் தீவிர போராட்டங்கள் நடாத்தப்பட்டன. தனிச் சிங்கள திணிப்பிற்கு எதிராக 1961 பெப்ருவரி 20ந் திகதி சாத்வீக சத்தியாக்கிரக போராட்டம் யாழ் நகரில் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக வட கிழக்கின் ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டதைத் தொடர்ந்து வட கிழக்கு நிர்வாகம் ஏறக்குறைய 55 நாட்களுக்குமேல் ஸ்தம்பித்தது. இந்நிலையில் சத்தியாக்கிரகப்போராட்டத்தினை அடக்குவதற்காக ஏப்ரல் 17ல் ராணுவம் பயன்படுத்தப்பட்டு போராட்டம் முறியடிக்கப்பட்டது. இதுவே வட கிழக்குப் பகுதியில் இராணுவம் நிரந்தரமாக நிலைகொள்ள வழியமைத்த முதலாவது சம்பவமாகும்.

## தோல்வியில் முடிந்த தீண்டாமை ஒழிப்பு போராட்டம்

சிங்கள மொழிச் சட்டத்தினால் பாதிப்பினை எதிர்கொண்டிருந்த யாழ் மத்தியதர வர்க்கத்தின் பிரச்சினைகளையே தமிழரசுக் கட்சியினர் முன்னுரிமை வழங்கி போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவற்றிற்கெல்லாம் அப்பால் சிறுபான்மைத் தமிழர்களென அழைக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதித் தமிழர்கள் தீண்டாமைக் கொடுமை காரணமாக நீண்ட காலமாக வாழ்வியல் உரிமைகளை மறுக்கப்பட்டு வந்திருந்தனர். அவர்களது பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து தீர்வு தேடும் நடவடிக்கைகளில் தமிழ் அரசியல் தலைவர்கள் ஈடுபடவில்லை. காரணம் தமிழ் தலைவர்களென சொல்லப்பட்டவர்கள் அனைவருமே ஆதிக்க சாதியினராகவே இருந்தனர். இந்நிலையில் தேசியரீதியாக செயற்பட்ட கம்யூனிச, இடதுசாரி கட்சிகளே சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்சினைகளை அரசியல் மயப்படுத்த முன்வந்தனர்.அதற்கமைய வடபகுதியில் புரையோடிப்போயிருந்த தீண்டாமை என்னும் கொடிய வியாதியினை குணப்படுத்தும் நோக்குடன் இவர்களின் போராட்டநடவடிக்கையின் ஆரம்பமாக தேனீர்க்கடை, ஆலயம் போன்றவற்றில் தாழ்த்தப்பட்ட மக்களையும் ஏனையவர்களைப்போன்று அனுமதிக்கப்பட வேண்டும் மென்பதே குறிக்கோளாக அமைந்தது.

www.padippakam.com

1970ம் ஆண்டுகாலப்பகுதிக்கு முன்னர் வடபகுதியிலுள்ள தேனீர்சாலைகளில் மூக்குக்கோளை என்னும் ஒருவகையான பாத்திரம் தேனீர் அருந்துவதற்காக பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அப்பாத்திரத்தில் வாய்வைத்து தேனீர் அருந்தமுடியாதவாறு அதன் அமைப்பு உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த நடைமுறைகளை முற்றாக இல்லாதொழிப்பதே போராட்டத்தின் முக்கிய குறிக்கோளாக அமைந்தது. போராட்டம் குடாநாடு பூராவும் தீவிரமடைய ஆரம்பித்ததால் அவர்களை அடக்குவதற்கு பொலிஸார் மற்றும் குண்டர்களின் உதவியுடன் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டது. அக்காலகட்டத்தில் அங்கு பொலிஸ் சேவையில் கடமையாற்றியவர்களில் உயரதிகாரிகள் உட்பட பெரும்பாலானவர்கள் தமிழர்களாக இருந்தமையால் இந்த ஒடுக்குமுறைக்கு சாதகமாக அவர்களும் செயற்பட்டனர்.

இந்நிலையிலும் போராட்டத்தை தொடர்ந்தவர்கள் அடுத்தகட்ட நடவடிக்கையாக தேநீர் கடைகளிலும், ஆலயங்களிலும் தமக்கும் ஏனையவர்களைப்போன்று அனுமதி வழங்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கைகளை முன்வைத்து அதன் முதல் நவடிக்கையாக மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலிற்குள் சுவாமி தரிசனத்திற்கு சென்றனர். இவர்களை ஆலயத்திற்குள் செல்வதற்கு அனுமதியாது தடைசெய்த உயர்சாதி மக்களின் சார்பில் தலைமைதாங்கி தீண்டப்படாதோருக்கு எதிராக செயற்பட்டவர் அடங்காத் தமிழர் முன்னணியின் அமைப்பாளரும் பிரபல கணிதமேதையுமான திரு.சி.சுந்தரலிங்கம் அவர்கள் ஆகும். இவர்களால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற செயற்பாடுகளுக்கு ஆளாக்கப்பட்ட பல அப்பாவிமக்கள் பலமான தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு இரத்தம் தோய்ந்த நிலையில் ஆலயத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். இச்சம்பவத்தின் சூத்திரதாரியான திரு. சுந்தரலிங்கம் அவர்களேதான் முதன்முதலில் தமிழ் ஈழக்கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடாத்தியதுடன் (ஈழம் எங்கள் தெய்வம்) என்னும் நூல் ஒன்றினை (19.12.1959ல்) வெளியிட்டவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1960ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ந் திகதி இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஸ்ரீ.ல.சு கட்சியினர் (46) உறுப்பினர்களையும் ஐ.தே.கட்சியினர் (50) உறுப்பினர்களையும் பெற்றதற்கமைய போதிய பெரும்பான்மை கிடைக்காததால்



படிப்பகம்

www.padippakam.com

சிம்மாசனப் பிரசங்கத்தின்போது ஐ.தே.கட்சியினர் தோல்வியடைந்தனர். மேற்படி (19.03.1960ல்) இடம்பெற்ற சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரின் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் அனைத்தும் திரு. சி.பி.டி சில்லா அவர்களின் தலைமையிலேயே இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து யூலை மாதம் 20ந் திகதி இடம்பெற்ற தேர்தல் நடவடிக்கைகள் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. அதற்கமைய தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் 151 உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் (75) உறுப்பினர்களைப் பெற்று தனிப் பெரும்பான்மையுடனான அரசாங்கத்தினை அமைத்தனர். இத்தேர்தலின்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் போட்டியிடாத போதும் பின்னர் செனற்சபைமூலம் தெரிவாகி (21.07.1960ல்) பிரதமராக பதவியேற்றார்.

1960.03.19ல் இடம்பெற்ற தேர்தலில் திரு தொண்டமான் அவர்கள் நுவரெலியா தொகுதியில் போட்டியிட்டபோதும் அவர் வெற்றியீட்டவில்லை. இந்நிலையில் (04.08.1960ல்) திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களை நியமன உறுப்பினர்மூலம் பாராளுமன்ற உறுப்பினராக சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் நியமித்தார். இதுவிடயத்தினை அன்றைய கம்பஹா பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.டி. பண்டாரநாயக்கா அவர்கள் கடுமையாக எதிர்த்த போதும் அதனை ஏற்பதற்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் மறுத்துவிட்டார்.

ஏற்கனவே ஆட்சியமைத்த அரசாங்கங்கள் கூட்டுக் கட்சி மந்திரிசபையினை அமைத்திருந்த நிலையில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான அரசாங்கம் தனிக்கட்சி மந்திரிசபையினை அமைத்தது. இதனால் எதிர்க்கட்சிகள் அனைத்தும் வேலை நிறுத்தங்கள் ஆர்ப்பாட்டங்கள் போன்ற நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர். இந்நிலையில் தனது சாதுர்யமான நடவடிக்கைகளை முன்னெடுத்த ஸ்ரீமாவோ அவர்கள் தொழிற் சங்கங்களுடன் நெருக்கமான தொடர்புடைய திரு. என்.எம் பெரேரா அவர்களை (1964ல்) அரசாங்கத்துடன் இணைத்து பொறுப்பு வாய்ந்த அமைச்சுப் பதவிகளையும் அவர்களுக்கு வழங்கினார். இருந்தும் தொடர்ந்து இடம்பெற்ற பத்திரிகைகளை தேசியமயமாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு அதில் தோல்விகண்டார்.



படிப்பகம்

www.padippakam.com

தொடர்ந்து அவரால் முன்னெடுக்கப்பட்ட (1961) சுயபாசை நடைமுறைத் திட்டத்திற்கமைய சிங்கள மாணவர்கள் சிங்கள மொழிமூலமான கல்வியையும், தமிழ் மாணவர்கள் தமிழ் மொழிமூலமான கல்வியையும் கற்கும் நடைமுறை கட்டாயமாக்கப்பட்டது.

(1964ம்) ஆண்டு ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வுடன்படிக்கைக்கு அமைய (525,000) இந்திய வம்சாவளி மக்களை இந்தியா ஏற்றுக்கொள்வதென்றும் (325,000) மக்களை இலங்கை அரசாங்கம் எற்றுக்கொள்வதெனவும் எஞ்சியவர்களான (150,000) தொழிலாளர்களின் விடயம் பற்றி பின்னர் தீர்மானிப்பதாகவும் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்நடைமுறையின் மூலமே பின்னர் இந்தியவம்சாவளி மக்களின் குடியுரிமையும், வாக்குரிமையும் வழங்குவதற்கான அடித்தளமிடப்பட்டது. தொடர்ந்து (17.12.1964ம்) திகதி இடம்பெற்ற சிம்மாசனப் பிரசங்கத்தின்போது பெரும்பான்மையின்மையால் ஸ்ரீமாவோ அவர்களின் அரசு கலைக்கப்பட்டது.

## ஐ.தே.கட்சியினரால் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் அரசினை கைப்பற்றுவதற்கு மேற் கொள்ளப்பட்ட முதலாவது அரசியல் சதிப்புரட்சி (27.01.1962)





தேர்தல் முடிவுகளுக்கமைய 2/3 பெரும்பான்மையினைப் பெற்ற திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு.கட்சி வெற்றிபெற்று திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் பிரதமராக பதவியேற்றமையை விரும்பாத ஐ.தே.கட்சியின் ஒருசாரார்



படிப்பகம்

www.padippakam.com

பாதுகாப்புப் படைகளின் ஆதரவுடன் அரசாங்கத்தை கைப்பற்றும் நோக்குடன் இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு சதிப்புரட்சியொன்றினை நடாத்த திட்டமிட்டனர் இந்நடவடிக்கை 1962ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

இச்சதித்திட்டம்பற்றிய செயற்பாடுகள் பின்வருமாறு முன்னெடுக்கப்பட்டது இச்சதித்திட்டம் அப்போது பதவியிலிருந்த ராணுவ கடற்படை மற்றும் பொலிஸ் பிரிவினரின் அனுசரணையுடன் ஐ.தே.கட்சியினரால் திட்டமிடப்பட்டிருந்தது. இவர்களின் திட்டப்படி 27–01–1962 நள்ளிரவில் பிரதமராக பதவிவகித்த திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை கைதுசெய்து அவரை பதமியிலிருந்து நீக்கிவிட்டு அரசாங்கத்தையும் பொறுப்பேற்பதேயாகும். அதேவேளை ஒருவாரகாலத்திற்கு முன்னர் திட்டமிடப்பட்டிருந்த பிரதமரின் வாராந்த செயற்திட்ட அறிக்கையில் 26.01.62 வெள்ளிக் கிழமையன்று பிரதமர் கொழும்பிலிருந்து கதிர்காமம் சென்று 27.01.62ல் அங்கு நடைபெறும் விசேட பூசைவழிபாட்டில் கலந்துகொண்டு 28ந் திகதி கொழும்பு திரும்புவதென்றும் திட்டமிடப் பட்டிருந்தது.

இந்நிலையில் ஒருமாதகாலத்திற்கு முன்னதாக அப்போதைய பேராதனை கட்டம்பே பௌத்தவிகாரையின் பிரதான பௌத்தபிக்கு அவர்கள் தமது விகாரையில் 27.01.1962ந் திகதியன்று நடைபெறவுள்ள விழாவொன்றில் கலந்துகொள்ளுமாறு பிரதமருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். அன்றையதினம் தனது அரசியல் கடமைகள் காரணமாக தாம் கொழும்பில் நிற்கவேண்டிய கட்டாயநிலை இருப்பதால் உங்களின் விழாவில் பங்குகொள்ளமுடியாமைக்கு வருந்துவதாக தமது செயலாளர்மூலமாக பௌத்த குருவுக்கு பிரதமர் பதிலனுப்பியிருந்தார்.

குறிப்பிட்டதினத்தன்று 27.01.62 கதிர்காமம் செல்லும் நிகழ்ச்சி நிரலை அறிந்துகொண்ட பிரதமரின் செயலாளர் பிரதமர் ஏற்கனவே விகாராதிபதிக்கு தெரியப்படுத்தியதற்குமாறாக கொழும்பில் இல்லாது கதிர்காமம் சென்றால் தனது அழைப்பினை பிரதமர் உதாசீனம் செய்ததாக விகாராதிபதி தப்பபிப்பிராயம்கொள்ள இடமுண்டு என்பதை பிரதமருக்கு சுட்டிக்காட்டியதும் இறுதிநேரத்தில் பிரதமரின் கதிர்காம விஜயம் இரத்துச்செய்யப்பட்டது முந்திய அலரிமாளிகையின் அறிக்கையின்படி 27.01.1962ந் திகதியன்று பிரதமர் கொழும்பில் இருக்கமாட்டார் என்பதை அறிந்த சதித்திட்டக்காரர்கள் முயற்சியை கைவிட்டனர்.



படிப்பகம்

இவர்களால் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட இரகசியத்திட்டம் ஏதோ ஒருவகையில் அரசினருக்கு எட்டியதைத்தொடர்ந்து அன்று நிதிஅமைச்சராக பதவிவகித்தவரும் ஸ்ரீமாவோ அவர்களின் மருமகனுமான திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அவர்கள் இதுவிடயத்தில் உடன் நடவடிக்கை மேற்கொண்டு அலரிமாளிகையைச்சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டார். பின்னர் இச்சதித்திட்டம் சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டபோது இது விடயத்தில் அப்போதைய மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலகா அவர்களின் பங்கு முக்கிமானதாக இருந்தமை தெரியவந்ததற்கமைய அவரை உடன் பதவியிலிருந்து நீக்கிவிட்டு 20.03.1962ல் திரு. வில்லியம் கொபல்லாவ அவர்கள் மகாதேசாதிபதியாக நியமிக்கப்பட்டார்

## சிங்கள மட்டும் அரசகருமமொழி என்பதற்கு எதிராக திரு. கோடீஸ்வரன் மேற்கொண்ட வழக்கு (01.04.1962)

திருகோணமலையைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. செல்லையா கோடீஸ்வரன் அவர்கள் அரசசேவையில் எழுதுவினைஞராக (Clerk) கடமையாற்றினார் திருமதி. ஸ்ரீமாவோ அவர்களின் 1961ம் ஆண்டின் மூன்றாம் இலக்கச் சட்டத்திற்கமைய சிங்கள மொழியில் தேர்வு பெறாமையால் அவருக்கான சம்பள உயர்வு நிறுத்தப்பட்டது. தமக்கான சம்பள உயர்வு வழங்கப்படாமை சம்பந்தமாக 01.04.1962ந் திகதியன்று தமது மேலதிகாரியிடம் சென்று அதுபற்றி அவர் வினாவியபோது நீர் சிங்களமொழியில் தேர்ச்சி பெறாமையால் மேலிடத்தின் கட்டளைக்கமைய அவை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அதனை எதிர்த்து மாவட்ட நீதிமன்றத்தில் திரு. கோடீஸ்வரன் அவர்கள் வழக்குத் தாக்கல் செய்தார் அவ்வழக்கினை திரு. மு.திருச்செல்வம் அவர்கள் வழக்காளியின் வழக்கறிஞராக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடினார் இதனை அன்றைய நீதிபதியாக கடமையாற்றிய திரு. ஒ.எல்.டி.கிறெட்சர் அவர்கள் விசாரணை செய்தார்.

www.padippakam.com

## திரு.மு. திருச்செல்வம் அவர்கள் பின்வருமாறு தமது வாதப்பிரதிவாதத்தை முன்வைத்தார்



1956ம் ஆண்டின் 33வது சட்டமாகிய ஆட்சிமொழிச் சட்டம் அரசியலமைப்பின் 29ஆம் பகுதியின் 2ம் விதிக்கு முரணானதென காரணங்காட்டி அரசிய லமைப்புக்கு முரணான சட்டம் செல்லுபடியாகாதென திருச்செல்வம் வாதிட்டார். எனவே செல்லுபடியாகாத சட்டங்களுக்கமைய பிறப்பிக்கப்பட்ட விதிகளும் செல்லுபடியாகாதவையே என வாதிட்டு கோடீஸ்வரனுக்குரிய சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென விவாதித்தார்.

அவரின் கோரிக்கையினை எதிர்த்து வாதாடிய அரசதரப்பு சட்டமா அதிபர் அரச ஊழியர் ஒருவர் அரசின் செயற்பாடுகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் நீதிகோரமுடியாதெனவும் அரச ஊழியர்களின் சேவைநிபந்தனைகளை காலத்திற்குகாலம் மாற்றும் உரிமை அரசாங்கத்திற்கு உண்டு என்றும் தமிழர்கள் தனியான சமூகம் அல்ல அதனால் சட்டம் அனைவருக்கும் சமமானதே எனவும் வாதாடினார் அத்துடன் 1956இன் ஆட்சிமொழிச் சட்டம் அரசியலமைப்பு விதிகட்கு முரணானதல்ல எனவும் வாதாடினார்.

## இந்நிலையில் 1964 ஏப்ரல் 24ந் திகதி நீதிபதி திரு. ஓ.எல்.டி. கிறெட்சர் அவர்கள் பின்வருமாறு தீர்ப்பினை வழங்கினார்

1956ம் ஆண்டின் 33வது சட்டமானது ஆட்சிமொழிச் சட்டம் அரசியலமைப்பின் 29ஆம் பகுதியின் 2ம் விதிக்கு முரண்பட்டதால் வலுவற்ற சட்டமெனக்கூறினார். இதனால் இச்சட்டத்தை அமுல்படுத்த முயன்ற அரசசேவை விதிகளும் செல்லுபடியாகாதவை எனக்கூறி திரு. கோடீஸ்வரன் அவர்கட்கு வழமைபோல் வழங்கவேண்டிய சம்பள உயர்வினை வழங்குமாறு தீர்ப்பளித்தார் இச்சம்பவம் மொழி அமுலாக்கல்சட்டத்திலிருந்த தவறினை வெளிக்காட்ட வழிகோலியது.



படிப்பகம்

www.padippakam.com

அன்றைய நிலையில் இலங்கையில் அரசசேவைகளில் பணியாற்றியவர்களில் (72%) மானவர்கள் வட மாகாணத்தை சேர்ந்தவர்களாக பணியாற்றியபோதும் சிங்கள அரச கரும மொழிச் சட்டத்தினை எதிர்த்து ஒருவர்கூட நடவடிக்கையில் இறங்க முற்படாதநிலையில் திருகோணமலையினைப் பிறப்பிடமாகக் கொண்ட ஒருவரே அரசுக்கு எதிராக நீதிமன்றம் சென்றவரென்பது வடமாகாண தமிழ் தேசியம் பேசுபவர்களின் உரிமைக்கான நடவடிக்கைகள் எவ்வாறு அன்று அமைந்திருந்ததென்பது தெளிவானதாகும்.

திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான அரசு (17.12.1964ல்) கலைக்கப்பட்டு 1965 ஜனவரி 11வரை நியமனப்பத்திரங்கள் ஏற்கப்பட்டு (22.03.1965ல்) ஆறாவது பாராளுமன்றப் பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது. இத்தேர்தலின் போது ஐ.தே.கட்சியின் தலைமைப்பதவியை திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் வகித்தார்.

## ஆறாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களின் முடிவு (22.03.1965) மொத்த வாக்காளர்கள் 4.710.887

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித்தவர்கள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 116 | 1,590,929 | 39.31% | 66 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 101 | 1,221,437 | 30.18% | 41 |
| இ.த.அ.கட்சி | 20 | 217,914 | 5.38% | 14 |
| ல.ச.சமாஜ கட்சி | 25 | 302,095 | 7.47% | 10 |
| ஸ்ரீ.ல.சு. சோஸலிச கட்சி | 32 | 130,429 | 3.22% | 05 |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 09 | 109,754 | 2.71% | 04 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | 15 | 98,746 | 2.44% | 03 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 61 | 96,665 | 2.39% | 01 |
| தேசிய விடுதலை முன்னணி | 10 | 18,791 | 0.46% | 01 |
| சுயேச்சைகள் | 106 | 259,960 | 6.42% | 06 |
| மொத்தம் | 495 | 4,046,720 | | 151 |

அதற்கமைய இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 151 உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் (66) ஆசனங்களை மட்டும் பெற்ற ஐ.தே.கட்சியினர் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை போதாதநிலையில் தமிழரசுக் கட்சியுடன் இணைந்து (24.03.1965ல்) டட்லி – செல்வா உடன்படிக்கை என்னும் பெயரில் ஓர் உடன்படிக்கையினை உருவாக்கியதற்கமைய ஐ.தே.கட்சியினர் தமிழரசுக்கட்சியினரது, (14) உறுப்பினர்களையும், தமிழ் காங்கிரஸ் கட்சியினரது (03) உறுப்பினர்களினதும்



படிப்பகம்

ஆதரவினைப் பெற்று (27.03.1965ல்) தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. அமைக்கப்பட்ட அரசாங்கத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு மு.திருச்செல்வம் அவர்கள் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

## ஆறாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் 22.03.1965 தமிழரசுக் கட்சி

| தேர்தல் தொகுதி | சின்னம் | உறுப்பினர்களுக்கு வாக்களித்தவர்கள் | மொ. வாக்களித்தவர்கள் | மொ. மா. வாக்காளர் | உறுப்பினர் பெயர் |
|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | வீடு | 29.023 | 67.882 | 47.078 | செ.இராசதுரை |
| அம்பாறை | கை | 10.077 | 24.748 | 32.914 | எஸ் சோமரத்ன |
| பட்டிருப்பு | வீடு | 11.270 | 22.037 | 25.855 | எஸ்.எம் இராசமாணிக்கம் |
| கல்குடா | யானை | 6.566 | 17.453 | 24.008 | கே.டபிள்யூ தேவநாயகம் |
| மூதூர் | வீடு | 20.237 | 58.129 | 38.516 | எம்.ஈ.எச் முகமதலி |
| திருமலை | வீடு | 9.651 | 20.179 | 27.648 | எஸ்.எம் மாணிக்கராசா |
| வவுனியா | பைசிக்கல் | 7.265 | 18.142 | 24.701 | ரீ சிவசிதம்பரம் |
| சாவகச்சேரி | வீடு | 16.361 | 23.727 | 30.452 | வி.என்நவரெத்தினம் |
| யாழ்ப்பாணம் | வீடு | 6.800 | 22.141 | 28.473 | சி.எக்ஸ் மார்ட்டின் |
| காங்கேசன்துறை | வீடு | 14.735 | 25.571 | 35.309 | எஸ்.ஜே.வி செல்வா |
| ஊர்காவற்றுறை | வீடு | 13.558 | 19.544 | 31.785 | வி நவரெத்தினம் |
| கிளிநொச்சி | வீடு | 5.922 | 13.366 | 18.738 | கே.பி இரத்தினம் |
| கோப்பாய் | வீடு | 12.339 | 24.123 | 33.091 | கே. கதிரவேற்பிள்ளை |
| மன்னார் | வீடு | 6.896 | 17.571 | 21.418 | வீ.ஏ அழகக்கோன் |
| நல்லூர் | வீடு | 10.301 | 22.952 | 31.864 | ஈ.எம்.வி நாகநாதன் |
| பருத்தித்துறை | வீடு | 7.564 | 16.452 | 22.972 | கே.துரைரெத்தினம் |
| உடுப்பிட்டி | வீடு | 8.452 | 25.866 | 34.275 | கே.ஜெயக்கொ?டி |
| உடுவில் | வீடு | 11.638 | 24.228 | 33.280 | வி தர்மலிங்கம் |
| வட்டுக்கோட்டை | வீடு | 15.498 | 25.790 | 36.935 | ஏ.அமிர்தலிங்கம் |
| வவுனியா | வீடு | 4.512 | 18.142 | 24.701 | ஜி.வி வின்சன் |
| மொத்தம் | | 228.665 | | 602.973 | |

மேலே சிகப்பு அடையாளமிடப்பட்ட தொகுதிகளில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்கள் தோல்வியுற்ற அதேவேளை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட திருவாளர்கள் ஜி.ஜி. பொன்னம்பலம், மு.சிவசிதம்பரம், மற்றும் தா.சிவசிதம்பரம் ஆகியோர் வெற்றி பெற்றனர்.

www.padippakam.com

1965ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலுக்கு முன் திரு.டட்லி சேனநாயக்கா அவர்களுக்கும் தமிழரசுக் கட்சியினருக்கும் இடையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு உடன்படிக்கை ஒன்று பேச்சளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்தீர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களெதுவும் தேர்தல் முடிவடையும்வரை வெளியிடப்படவில்லை. தேர்தல் முடிவுகளின்படி த.அ.கட்சியினர் வடக்கு கிழக்கு உட்பட்ட இடங்களில் மொத்தம் 2,17,914 வாக்குகளைப்பெற்று 14 உறுப்பினர்களைப் பெற்றனர். தமிழ் கட்சிகளின் ஆதரவினைப் பெறாமல் ஆட்சியமைக்க முடியாத நிலை திரு. டட்லி சேனநாயக்கா அவர்களுக்கு ஏற்பட்டதால் கூட்டுக்கட்சி அரசாங்கமொன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு த.அ.கட்சி 14 த.கா.கட்சி 3 சி.பி.டி.சில்வா தலைமையிலான ஶ்ரீலங்கா சுதந்திர சோஸலிஸ்ட் கட்சி 5 கே.எம்.பி.ராஜரத்னா தலைமையிலான தேசிய விமுக்தி பெரமுன 01 ஆகிய நான்கு கட்சிகளையும் தம்முடன் இணைத்து தேசிய அரசாங்கமொன்றினை அமைத்தனர்.

நடந்து முடிந்த தேர்தலில் 3ஆசனங்களை மட்டும் கைப்பற்றிய த.காங்கிரஸ் கட்சியினர் அரசாங்கத்தினருடன் இணைந்து செயற்பட சம்மதித்ததற்கமைய திரு.மு.சிவசிதம்பரம் அவர்கள் உப. சபாநாயகராக நியமிக்கப்பட்டார். இலங்கை சுதந்திரம் பெற்றபின் தமிழர் ஒருவர் உபசபாநாயகர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டது இதுவே முதல் தடவையாகும். தமிழரசுக் கட்சியினரின் ஆதரவைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு தமிழரசுக் கட்சியினருக்கு இரு மந்திரிப்பதவிகள் தருவதாகவும் தமது அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குமாறும் அரச தரப்பினரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது அவ்வேண்டுகோளை ஏற்க த.அ.கட்சியினர் மறுத்தனர் இந்நிலையில் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி தமிழ் மொழிக்கு உரிய இடம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள ஆவன செய்யுமாறு வலியுறுத்தினர்.

அத்தோடு தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து வழங்கும்வரை தமது கட்சி எவ்வித மந்திரிப் பதவிகளையும் ஏற்கத் தயாரில்லையெனவும் கூறினர். இந்நிலையில் அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வதாக உறுதியளித்து அதற்கான ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது அப்படியிருந்தும் தமிழ்மக்கள் முன்னிலையில் மந்திரிப்பதவி எதனையும் தாம் ஏற்பதாக எவ்வித



படிப்பகம்

www.padippakam.com

கருத்துக்களையும் முன்வைக்காமையால் அதனை தொடர்ந்தும் நிராகரித்தனர். இந்நிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கு த.அ.கட்சியின் பிரதிநிதி ஒருவரை நியமிப்பதன்மூலமே அதனைச் செயற்படுத்தமுடியுமென்னும் காரணங்காட்டப்பட்டு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு. மு.திருச்செல்வம் அவர்களை செனட் சபை மூலம் தெரிவுசெய்து அவருக்கு உள்ளூராட்சி அமைச்சர்பதவி வழங்கப்பட்டது.

## டட்லி செல்வா உடன்படிக்கை (24.03.1965)

பத்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்றை அமைச்சரவைக்கு புறம்பான முறையில் ஒப்பந்தம் பற்றி ஆலோசனை பெறுவதற்காக திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் நியமித்தார். உத்தியோகபூர்வமற்ற அமைச்சரவையாக இந்த பத்துப் பேர் கொண்ட குழு செயற்பட்டது. இக்குழுவில் திரு எஸ்.ஜே.வி செல்வநாயகம் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் திரு எஸ். தொண்டமான் உட்பட அமைச்சரவையின் சிரேஸ்ட உறுப்பினர்களில் சிலரும் இடம்பெற்றனர். இதனைத் தொடர்ந்து திரு டட்லி சேனநாயக்கா அவர்கள் பதவியேற்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் 1965 மார்ச் 24ந் திகதியன்று அன்றுவரை இரகசியமாக வைத்திருந்த டட்லி செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது அந்த ஒப்பந்தத்தின்மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பிராந்திய சபைகள் அமைப்பதாக இணக்கம் காணப்பட்டது. அத்தோடு வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை அமுலாக்குவதுடன் தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்தும் மேற்கொள்வதில்லையெனவும் ஏற்றுக் கொள்ளப்பட்டது அவைதவிர ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்களின் சுருக்கம்.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாக் தமிழ்மொழியை பயன்படுத்துவதற்கான தமிழ்மொழி விசேட ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.
2. தமிழ்மொழியை தாய்மொழியாகக்கொண்ட அனைவரும் நாட்டின் எப்பகுதியிலும் தமது நடவடிக்கைகளை தாய்மொழியில் மேற்கொள்ளுதல்.
3. வடக்கு கிழக்கு மாகாணங்களில் சட்டநடவடிக்கை சம்பந்தப்பட்ட அனைத்து விடயங்களும் தமிழ்மொழியில் மேற்கொள்வதற்கான நடைமுறையை ஏற்பாடுசெய்தல்.



படிப்பகம்

www.padippakam.com

4. வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிப்பங்கீடு தொடர்பாக அம்மாவட்டங்களில் வாழும் காணியற்ற மக்களுக்கு முதன்மையும் இரண்டாவதாக அப்பகுதியில் வாழும் தமிழ்மக்களுக்கும் அடுத்ததாக வடகிழக்கிற்கு அப்பால் வாழும் தமிழ் மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு பின்னர் ஏனையோருக்கு இடமளித்தல்.
5. வடகிழக்கு மாகாணங்களில் அரச நிர்வாகம் சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களும் தமிழ்மொழியில் பதிவுசெய்து நிர்வாக நடைமுறைகளை செயற்படுத்துதல்.

இவைகளுடன் பாராளுமன்றத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சகல சட்டமூலங்களும், சட்டங்களும் வர்த்தமானி அறிவித்தல்கள் அரசாங்க வெளியீடுகள் சுற்றுநிரூபங்கள் போன்ற ஏனைய வெளியீடுகள் அனைத்தையும் தமிழ்மொழியிலும் மேற்கொள்ளுதல்

டட்லி செல்வா ஒப்பந்தத்தின்படி தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) பாராளுமன்றத்தில் 1966 ஜனவரி மாதம் 8 ந் திகதி கொண்டுவரப்பட்டபோது நாட்டில் வன்செயல்கள் ஆரம்பித்தன. 1958ல் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்த திரு. பண்டாரநாயக்கா அவர்கள் இணங்கியபோதும் அப்போதைய எதிர்கட்சியில் அமர்ந்திருந்த ஐ.தே.கட்சியினரும் பௌத்த பிக்குகளும் மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைகளினால் கைவிடப்பட்டது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனைத் தொடர்ந்து நான்கு நாட்களாக நடைபெற்ற விவாதத்தின் பின்னர் 96/49 என்னும் அடிப்படையில் சட்டமூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் சட்டமூலம் செனட் சபைக்கு சென்றபோது 18/7 என்னும் அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. விவாதத்தை முடித்துவைத்து உரையாற்றிய திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் இச்சட்டமூலம் சிங்களம் மட்டும் சட்டத்தை எந்த வகையிலும் பாதிக்காது எனக் குறிப்பிட்டார். திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் மாவட்டசபைத் திட்டம் சமஸ்டியினதும் பிரிவினையினதும் முதலாவது படியென எதிர்தரப்பினர் பிரச்சாரம் செய்தனர். இறுதியில் அவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த செல்வாக்குமிக்க அமைச்சர்களே இந்த ஒப்பந்தத்தை எதிர்த்ததால் 1968 யூலையில் இந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டதாக திரு. டட்லி சேனநாயக்கா அவர்கள் அறிவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்த ஒப்பந்தத்தை திரு. டட்லி அவர்கள் கைவிடப்பட்ட போதிலும் அவருடைய அரசாங்கத்திற்கு வழங்கிவந்த தமது ஆதரவை தமிழரசுக் கட்சியினர் தொடர்ந்து வழங்கினர் அதேவேளை அமைச்சரவையில் அங்கம்வகித்த திரு. மு. திருச்செல்வம் அவர்கள் அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்தார். அதன் பின்னர் 1969 ஏப்ரல் மாதம் இணுவில் யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் மகாநாட்டில் அரசாங்கத்திற்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

திரு. டட்லி சேனநாயக்கா அவர்களின் ஆட்சியின் பங்காளிகளாக இருந்த காலப்பகுதியில் த.அ.கட்சியினர் மேற்கொண்ட சில சாதகமான விடயங்கள் பின்வருவனவாகும்.

தமிழ் அரசாங்க ஊழியருக்கான கட்டாய சிங்கள மொழித் தேர்ச்சி 9.ம் வகுப்பாக இருந்த நடைமுறையை 8ம் வகுப்பாக குறைத்ததுடன் மொழித் தேர்ச்சியைப் பெறுவதற்கு 3 வருடகால அவகாசம் வழங்கப்பட்டு அவர்களுக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சம்பள உயர்வும் வழங்குவதற்கு சுற்றறிக்கை 700 701.ன் மூலம் தீர்வு காணப்பட்டது.

அதேவேளை அன்றைய அரசாங்கத்தில் அங்கம் வகித்த கல்வி அமைச்சர் திரு ஐ.எம்.ஆர்.ஏ.ஈரியகொல்ல நிதியமைச்சர் திரு. யூ.பி.வன்னிநாயக்க போன்றோர் இன வேறுபாடுடையவர்களாக செயற்பட்டமையால் த.அ.கட்சியினருக்கும் அவர்கட்கும் இடையில் பல பிரச்சினைகள் அடிக்கடி ஏற்பட்டமையாலும், இருசாராருக்கும் இடையிலான உறவுகள் பாதிப்புக்கு உள்ளானது.

அத்துடன் அக்காலப்பகுதியில் சிங்களப் பகுதிகளிலுள்ள பல பௌத்த விகாரைகள் புனித நகராக்கப்பட்ட நிலையில் தமிழரசுக் கட்சியினரும் திருகோணமலையில் அமைந்திருக்கும் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை புனிதநகராக பிரகடனம் செய்யுமாறு தமிழரசுக் கட்சியினர் வேண்டுகோள் விடுத்தனர் அக்கோரிக்கையை நடைமுறைப்படுத்துவதாக 1968 யூன் மாதம் 19ந் திகதி உறுதியளித்த பிரதமர் பின்பு பௌத்த பிக்குகளின் எதிர்ப்புக்கு அஞ்சியநிலையில் அதனை செயற்படுத்த முடியாதநிலையிலுள்ளதாக கருத்து வெளியிட்டார். இந்நிலையில் ஏற்றுக்கொண்ட வாக்குறுதியை பிரதமர்



படிப்பகம்

செயற்படுத்தாமையாலும் மாவட்டசபை நிர்வாகத்தையும் சரிவர அமுல் படுத்த முடியாதுபோனமையாலும் த.அ.கட்சியினர் அரசாங்கத்தைவிட்டு வெளியேறினர்.

## டட்லி - செல்வா உடன்படிக்கை (24.03.1965) விபரம்

1. தமிழ் மொழி விசேட சரத்து ஒன்றினை ஏற்பாடுசெய்து அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் உத்தியோக மொழியாக தமிழ் மொழியும், பதிவேடுகளை தயாரித்து பாதுகாக்கும் மொழியாகவும் தமிழ் மொழியினை அங்கீகரித்தல்.
2. அதிகாரப் பரவலாக்கத்தினை ஏற்படுத்துவதற்காக மாவட்ட சபை அமைப்பு முறையினை ஏற்படுத்துதல்.
3. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணிகளை பகிர்ந்தளிக்கும்போது அப்பிரதேசங்களில் வாழும் காணியற்ற மக்களுக்கு முன்னுரிமை வழங்குதல்.

மேற்குறிப்பிட்ட விடயங்களில் தமிழ் மொழி விசேட சரத்து என்னும் நடைமுறை மட்டும் எழுத்து மூலம் உருவாக்கப்பட்ட நிலையில் உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் அனைத்தினையும் அமுல்செய்வதற்கு ஐ.தே.கட்சி முன்வரவில்லை. மேற்படி தமிழ் மொழி விசேட சரத்து பாராளுமன்றத்தில் (08.01.1966ல்) கொண்டுவரப்பட்டபோது நாட்டில் மீண்டும் வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. மேற்படி கலவரத்தினை கட்டுப்படுத்த பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், விமானப்படை ஆகியன பயன்படுத்தப்பட்டு அவசரகால நிலை பிரகடனஞ்செய்யப்பட்டு, ஊரடங்குச் சட்டமும் அமுல்செய்யப்பட்டது. இந்நிகழ்வில் ரத்தினசாரதேரோ என்பவர் பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானார். இந்நிலையிலும் (15.09.1968வரை) அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்ட த.அ.கட்சியினர் தமது கோரிக்கைகள் எதனையும் நடைமுறைப்படுத்துவதற்கு ஐ.தே.கட்சி தயாரில்லை என்பதனை உணர்ந்தநிலையில் அரசாங்கத்தினைவிட்டு வெளியேறினர். இந்நிலையில் திரு மு.திருச்செல்வம் அவர்கள் வகித்த உள்ளூராட்சி அமைச்சுப் பதவி திரு ஆர். பிரேமதாசா அவர்களுக்கு (16.09.1968ல்) வழங்கப்பட்டு (25.03.1970வரை) ஐ.தே.கட்சியினரின் அரசாங்கம் தொடர்ந்து ஆட்சியில் இருந்தது.

www.padippakam.com

இச்சட்டமூலத்தினை (1958ல்) நடைமுறைப்படுத்துவதற்கு திரு. பண்டாரநாயக்கா அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கையினை அன்று எதிர்க்கட்சியில் அமர்ந்திருந்த ஐ.தே.கட்சியினரும் பௌத்த பிக்குகளும் எதிர்த்தமையால் அம்முயற்சி கைவிடப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் (25.03.1970ல்) பாராளுமன்றம் கலைக்கப்பட்டு (27.05.1970ல்) தேர்தல் நடாத்தப்பட்டது.

தமிழ் மொழி விசேட சரத்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதனை எதிர்த்து இடம்பெற்ற ஊர்வலத்தின்போது "டட்லி தோசே அப்பட்ட எப்பா", "மசால வடை அப்பட்ட எப்பா", "பறத் தெமழு அப்பட்ட எப்பா" என்னும் சுலோகங்கள் தாராளமாக ஒலிக்கப்பட்டன. டட்லியின் தோசை எமக்கு வேண்டாம், மசால வடையும் எமக்கு வேண்டாம், பறத் தமிழர்களும் எமக்கு வேண்டாம் இவையே சுலோகங்களாகும்.

மேற்படி சம்பவங்களுக்கமைய (1968ல்) டட்லி – செல்வா உடன்படிக்கை கைவிடப்பட்டது.

ஏழாவது பாராளுமன்றத்தை தீர்மானிப்பதற்கான பாராளுமன்றக் கலைப்பு அறிவித்தல் 1970 மார்ச் 25ந் திகதி அறிவிக்கப்பட்டு ஏப்ரல் 23 வரை நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டன இத்தேர்தலின்போது 151 உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் மூலமும் 6 பேர் செனட்சபை மூலமும் தெரிவு செய்யப்படடனர் முந்திய ஆட்சிக்காலப்பகுதியில் த.அ.கட்சியினருக்கு கொடுத்த வாக்குறுதிகளை முழுமையாக் நிறைவேற்றத் தவறிய நிலையில் இந்தப் பொதுத்தேர்தலில் எதனையும் விசேடமாக மக்கள் முன்வைப்பதற்கு இல்லாத நிலையில் வழமைபோல் சிங்களக் கட்சிகள் தமது மக்களின் நலன் பற்றிய பிரச்சாரங்களுக்கே முன்னுரிமை கொடுத்தனர். இப்பாராளுமன்றத்தேர்தல் மே மாதம் 27ந் திகதி நடாத்தப்பட்டது.

## 1970.05.27ல் நடாத்தப்பட்ட ஏழாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் மொத்த வாக்காளர்கள் 5,505,028

*1970 மார்ச் 25ந் திகதி அறிவிக்கப்பட்டு ஏப்ரல் 23 வரை நியமனப்பத்திரங்கள் ஏற்கப்பட்டன. இப்பொதுத்தேர்தல் ஒரேநாளில் 1970 மே 27ந் திகதி நடாத்தப்பட்டது. இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.கட்சி தோல்வியுற்ற நிலையில் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தது.*



படிப்பகம்

www.padippakam.com

| அரசியல் கட்சிகள் | வேட்பாளர்கள் | வாக்களித்தவர்கள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி | 108 | 1,839,979 | 36.86% | 91 |
| ல.ச.சமாஜ கட்சி | 23 | 433,224 | 8.68% | 19 |
| ஐ.தே.கட்சி | 130 | 1,892,525 | 37.91% | 17 |
| இ.த.அரசுக் கட்சி | 19 | 245,727 | 4.92% | 13 |
| இல.கம்யூனிஸட் கட்சி | 09 | 169,199 | 3.39% | 06 |
| அ.இ.த.காங்கிரஸ் | 12 | 115,567 | 2.32% | 03 |
| சுயேச்சை | 136 | 249,006 | 4.99% | 02 |
| மொத்தம் | 441 | 4,945,227 | | 151 |

தேர்தல் முடிவுகளின்படி (151) உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமையிலான கூட்டு முன்னணியினர் (116) உறுப்பினர்களைப் பெற்றனர். ஏற்கனவே இடம்பெற்ற தேர்தல்களில் எந்த ஒரு அரசாங்கமும் பெறமுடியாதிருந்த (2/3) பெரும்பான்மையினை ஸ்ரீ.ல.சு.கட்சியினர் பெற்றதற்கமைய திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களைப் பிரதமராகக் கொண்ட பாராளுமன்றம் (07.06.1970ல்) கூட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஆட்சியில் இலங்கை அரசியலமைப்பின் 42(1)ன் கீழ் ஏழாவது பாராளுமன்றம் (22.05.1972ல்) முதலாவது புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் ஏற்கனவே பாராளுமன்றம் என அழைக்கப்பட்ட பெயரினை தேசிய அரசுப் பேரவை என பெயர் மாற்றம் செய்தது.

## ஏழாவது பாராளுமன்றத் தேர்தல் (27.05.1970) தமிழரசுக் கட்சி

| தொகுதி | வாக்களித் தவர்கள் | மொ.வாக் களித்த வர்கள் | மொ.வாக் காளர்கள் | பெயர் விபரம் |
|---|---|---|---|---|
| மட்டுநகர் | 27.661 | 84.681 | 51.524 | செ.இராசதுரை |
| இரட்டை அங்கத்தவர் | 23.082 | | | பி.ஆர்.செல்வநாயகம் |
| சாவகச்சேரி | 15.473 | 28.478 | 33.072 | வி.என் நவரெத்தினம் |
| யாழ்ப்பாணம் | 8.848 | 24.938 | 31.214 | சி.எக்ஸ் மாட்டின் |
| கல்குடா | 11.205 | 22.293 | 26.670 | கே.டபிள்யூ தேவநாயகம் |
| கல்முனை | 8.779 | 21.673 | 24.693 | எம்.சி அகமட் |
| காங்கேசன்துறை | 13.520 | 30.663 | 37.804 | எஸ்.ஜே.வி செல்வநாயகம் |



படிப்பகம்

www.padippakam.com

| | | | | |
|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை 13.079 | 24.612 | 32.015 | | கே.பி இரத்தினம் |
| கிளிநொச்சி | 9.049 | 18.089 | 23.793 | வி.ஆனந்தசங்கரி |
| கோப்பாய் | 16.428 | 29.601 | 37.464 | எஸ் கதிரவேற்பிள்ளை |
| மன்னார் | 10.697 | 21.995 | 25.441 | வி.ஏ.அழகக்கோன் |
| மூதூர் | 19.787 | 77.188 | 44.176 | ஏ.தங்கத்துரை |
| சிறீல.சு கட்சி | 22.727 | | | ஏ.எல் அப்துல் மஜீத் |
| நல்லூர் | 13.116 | 28.130 | 35.747 | சி.அருளம்பலம் |
| பட்டிருப்பு | 13.370 | 26.222 | 28.992 | எஸ்.தம்பிராசா |
| பருத்தித்துறை | 9.217 | 19.089 | 24.006 | கே துரைரெத்னம் |
| திருகோணமலை | 12.395 | 27.153 | 35.445 | பி.நேமிநாதன் |
| உடுப்பிட்டி | 12.981 | 27.935 | 34.741 | கே.ஜெயக்கொடி |
| உடுவில் | 14.120 | 28.775 | 36.690 | வி தர்மலிங்கம் |
| வட்டுக்கோட்டை | 14.359 | 28.174 | 35.712 | ஏ.தியாகராசா |
| வவுனியா | 10.947 | 25.578 | 31.652 | எக்ஸ.எம் செல்லத்தம்பு |
| அம்பாறை | 18.570 | 33.398 | 42.029 | என்.சோமரத்ன |
| நிந்தவூர் | 13.481 | 27.527 | 29,718 | எம்.எம் முஸ்தபா |
| பொத்துவில் | 10.610 | 25.309 | 28.282 | எம்.எ.அப்துல்மஜீத் |
| இரட்டை அங்கத்தவர் | 9.335 | | | ரீ.நடராஜா |
| மொத்த உறுப்பினர்கள் | 352.655 | | 730.880 | |

மேற்படி தேர்தல் முடிவுகளுக்கமைய சிகப்பு அடையாளமிடப்பட்டுள்ள சகல தொகுதிகளும் தமிழரசுக் கட்சியினர் தோல்வியுற்று மாற்றுக் கட்சியினர் வெற்றியீட்டிய தொகுதிகளாகும். இவற்றில் மூதூர், மட்டுநகர் மற்றும் பொத்துவில் ஆகிய மூன்று தொகுதிகளும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடமாகாணத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட திரு அமிர்தலிங்கம், திரு நாகநாதன் மற்றும் தமிழ் காங்கிரஸின் முக்கிய உறுப்பினர்களான திரு ஜி.ஜி பொன்னம்பலம் மற்றும் மு. சிவசிதம்பரம், ரி.சிவசிதம்பரம் ஆகியோர் தோல்வியுற்றமையும் முக்கிய விடயமாகும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டு முன்னணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உள்நாட்டு உற்பத்திக்கு முக்கியத்துவம் அத்துடன் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதாகவும் அதற்கான ஆணையை மக்கள் தமக்கு தரவேண்டுமெனவும் கேட்கப்பட்டிருந்தது அவர்களால் விடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்புக்கான கோரிக்கை சிங்களமக்களினால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டுமுன்னணியினர் மொத்தமாக 36.86% வீதமான வாக்குகளையும் எதிர்தரப்பினரான ஐ.தே.கட்சியினர் 37.91% வீதமான வாக்குகளையும் பெற்றதற்கமையவே புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. அகில இலங்கைரீதியாக அளிக்கப்பட்ட வாக்குகளின்படி புதிய அரசியலமைப்பிற்கான ஸ்ரீ.ல.சு கட்சியினரின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்.

## ஜே.வி.பியினர் மேற்கொண்ட அரசியல் புரட்சி (5.04.1971)

ஆட்சி அமைக்கப்பட்டு ஒரு வருடகால எல்லையினுள் அதாவது 1971 ஏப்ரல் 05 ஆந் திகதியன்று இலங்கை மக்கள் எவரும் எதிர்பாராத கிழர்ச்சியொன்று ஜே.வி.பியினரால் வட கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்கள் அனைத்திலும் மேற்கொள்ளப்பட்டது. இருந்தும் அவர்களின் தகவல் பிரிவினர் விட்ட தவறுதல் காரணமாக அம்முயற்சியில் சில பொலிஸ் நிலையங்களை மட்டும் தாக்குதல் நடாத்தி கைப்பற்றியதுடன் இலங்கை பொலிஸாரும் இராணுவத்தினரும் உசார் நிலையை அடைந்ததினால் அவர்களின் முயற்சி தோல்வியுற்றது. இந்நிலையிலும் இலங்கைப் பொலிஸாரினாலும், இராணுவத்தினராலும் மட்டும் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரமுடியாத நிலை அரசாங்கத்திற்கு ஏற்பட்டமையால் இந்திய அரசின் அவசர உதவியை நாடவேண்டிய கட்டாய நிலை ஸ்ரீமாவோ அவர்களின் அரசாங்கத்திற்கு உருவானது.

அதனால் இந்தியாவிலிருந்து பல நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டு சேகுவேரா இயக்கத்தினரின் முக்கிய மறைவிடமான (425) சதுர மைல் பரப்பளவான அநுராதபுரம் சிங்கராஜவனக்காட்டிற்குள் குண்டுவீச்சு விமானங்களின் உதவியுடன் 500 இந்திய விமானப்படையினர் தாக்குதல்களை நடாத்தினர். அதேவேளை ஏனையோர் மற்றைய இடங்களில் இலங்கை ராணுவத்தினருக்கு உதவியாக செயற்பட்டு பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களை

படுகொலைசெய்ததன்மூலம் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.. அப்போது இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் இருந்த நல்லுறவு காரணமாக இலங்கை அரசின் வேண்டுகோளை உடன் ஏற்ற இந்திய அரசு படைகளை அனுப்பி ஆபத்தான நிலையிலிருந்த இலங்கை அரசிற்கு உதவியதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



**1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ந் திகதி ஜே.வி.பியினர் மேற்கொண்ட கிளர்ச்சியின் போது பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்ட 10192 ஜே.வி.பி.யின் ஆயுததாரிகள்.**

இக்கிளர்ச்சி நடைபெற்ற காலகட்டத்தில் ஏறக்குறைய 25,000 சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டார்களென ஊர்ஜிதமற்ற செய்திகள் வெளிவந்தன. அத்துடன் இளைஞர்களும், யுவதிகளுமாக 10,192 பேர் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் 17 வயதுமுதல் 26 வயதிற்கு உட்பட்டவர்களாவர். இக்கிளர்ச்சி நடைபெற்ற காலப்பகுதியில் கொழும்பில் தமக்குப் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் இல்லை யெனக்கருதிய திருமதி ஸ்ரீமாவோ அவர்கள் பாதுகாப்புக்கருதி திருகோணமலையில் கோணேஸ்வரர் கோட்டையினுள்

www.padippakam.com

அமைந்துள்ள இராணுவமுகாமில் வந்து தங்கியிருந்ததாக அப்போதைய தகவல்கள் தெரிவித்தன. கிளர்ச்சியில் வெற்றிகண்ட அரசு கொல்லப்பட்டவர்கள் தவிர்ந்த எஞ்சிய இளைஞர்கட்கு காலப்போக்கில் மன்னிப்பு வழங்கியது. மேற்கூறிய ஜே.வி.பி. அமைப்பு 1965ம் ஆண்டு காலப்பகுதியில் சீனச்சார்பு கம்யூனிஸ்ட கட்சியிலிருந்து விலகிய திரு.றோகண விஜேவீர என்பவரின் தலைமையில் உருவாக்கப்பட்டது. அத்தோடு 1965ம் ஆண்டின்போது ஆட்சியிலிருந்த ஐ.தே.கட்சியினரால் வேலையற்ற இளைஞர்களுக்காகவும், யுவதிகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்டிருந்த விவசாயப் படையில் சேர்ந்திருந்த இளைஞர்களும் யுவதிகளும்கூட பின்னர் இந்த அமைப்பில் இணைந்துகொண்டதாக பல பத்திரிகைகளில் தகவல் வெளியாகியிருந்தன.

1971ம் ஆண்டு ஜே.வி.பியினர் மேற்கொண்ட புரட்சியின்போது திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களை சிறைப்பிடிக்கும் பணியினை நான்கு பெண் உறுப்பினர்களே பொறுப்பேற்று இருந்ததாக பின்னர் நடைபெற்ற விசாரணைகளிலிருந்து தெரியவந்தது. இதன் எதிரொலியாக கதிர்காமத்தில் ஜே.வி.பி அமைப்பினருக்கு சீருடைதைத்து கொடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு அன்றைய காலகட்டத்தில் அழகுராணியாக தெரிவாகியிருந்த பிரேமவதி மனம்பேரி என்பவர் ராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார். கைதுசெய்யப்பட்ட அவர் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாக்கப்பட்டு கதிர்காமத்தில் வீதிகளில் நிர்வாணமாக மக்களின் பார்வைக்காக அழைத்துச்செல்லப்பட்டு தலையில் துப்பாக்கிவேட்டு நடாத்தி உயிருடன் குழிதோண்டிப் புதைக்கப்பட்டார். இச்சம்பவம் 1971ம் ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. ஜே.வி.பியின் தலைவரான திரு. ரோகண விஜேவீரா அவர்கள் கைதுசெய்யப்பட்டு ஜனநாயக அரசுக்கு எதிராக சதிப்புரட்சி மேற்கொண்டாரெனும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசேட நீதிமன்றத்தினால் ஆயுட்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டார் பின்னர் 1977ம் ஆண்டு ஆட்சிபீடமேறிய ஐ.தே கட்சி அரசாங்கத்தின் தலைவரான திரு ஜே ஆர் ஜயவர்தனா அவர்களினால் விஜேவீராவிற்கு அரசியல் மன்னிப்பு வழங்கப்பட்டு 1978ம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார்.

## ஜே.வி.பியின் உறுப்பினரும், கதிர்காம அழகு ராணியுமான பிரேமவதி மனம்பேரியின் படுகொலை



படிப்பகம்

www.padippakam.com



பிரேமவதி மனம்பேரிக்கு அப்போது வயது 22. ஜே.வி.பி.யின் ஐந்து வகுப்புக்களையும் ஆர்வமாக முடித்தவள். கிளர்ச்சியின் போது கதிர்காமத்தில் பெண்கள் அணிக்கு தலைமை தாங்கியவள். ஜே.வி.பி.க்கான சீருடை தைக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவள். தகப்பனார் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தில் கண்காணிப்பாளர். மனம்பேரியுடன் கூடப்பிறந்தவர்கள் பத்துப்பேர். குடும்பத்தில் மூத்தவள். கதிர்காம வித்தியாலயத்தில் க.பொ.த. (சா.த) வரை கற்று முடித்துவிட்டு பௌத்த பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தாள். 1969ம் புதுவருட அழகு ராணிப் போட்டியில் இரண்டாவதாக தேர்ந்தெடுக்கப்பட்டாள். 1970 ஏப்ரல் 16ம் திகதி நடத்தப்பட்ட புதுவருட அழகு ராணிப் போட்டியில் முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்டாள். அடுத்த வருடம் அதே நாள் கொலைஞர்களால் கடத்தப்பட்டாள்.

## கடத்தலும் வதையும்

1971 ஏப்ரல் 16ம் திகதி காலை 9 மணியளவில் மனம்பேரியின் வீட்டுக்குள் புகுந்த லெப்டினன்ட் விஜேசூரிய தலைமையிலான குழுவினர் வீட்டிலுள்ள பொருட்களைக் கிண்டிக் கிளறி தூக்கியெறிந்தனர். மனம்பேரியை அடித்து தலை முடியுடன் இழுத்துச் சென்றனர். தாய் லீலாவதி "பெட்டப்பிள்ளையப்பா ஒண்டும் செஞ்சு போடாதீங்கோ ஐயா!" என சிங்கள மொழியில் கதறி அழுத வண்ணம் பின் தொடர்ந்த போது காலால் உதைத்துத் தள்ளிவிட்டு மனம்பேரியை தூக்கிக் கொண்டு வாகனம் பறந்தது.

அன்றைய இரவு முழுவதும் மனம்பேரி சித்திரவதை செய்யப்பட்டாள். அடுத்தநாள் 17ம் திகதி மனம்பேரியிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. "ஐந்து வகுப்புகளிலும் கலந்து கொண்டாயா?" மௌனம் ஜே.வி.பி.யுடன் எவ்வளவு காலம் தொடர்பு வைத்திருந்தாய்?" "நீ என்னென்ன நடவடிக்கைகளுடன் தொடர்பு கொண்டிருந்தாய்?"இதற்கும் மௌனம் சாதிக்கவே தங்களது வக்கிர இயல்பை வெளிக்காட்டினர்.

## மனம்பேரி விசாரணை வழக்கின் போது வெளிவந்த தகவல்கள் இவை.

"சரி... நான் சொல்வதை அவதானமாகக் கேள். சொல்வதைச் செய்யாவிட்டால்



படிப்பகம்

உனது உயிர் போகும்.'' இது லெப்டினன்ட் விஜேசூரிய. அவர் தொடர்ந்தும் ''உனது ஆடைகளைக் ஒவ்வொன்றாகக் கழற்று...'' ''ஐயோ... சேர் வேண்டுமென்றால் சுட்டுப் போடுங்கள். ஆடையைக் கழற்றச் சொல்லாதீங்க...'' என மனம்பேரி கண்ணீர் விட்டுக் கதறினார். அது எனது வேலை. நான் சொல்வதை மட்டும் நீ செய்'' என துப்பாக்கியைத் தலையில் அழுத்தி மிரட்டிய போது அழுகையுடன் மேலாடைகளைக் கழற்றி உள்ளாடையுடன் இருந்தாள். மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக்கி உள்ளாடைகளையும் கழற்றி விட்டு நிர்வாணம் ஆக்கினர். தனது கைகளால் மனம்பேரி மறைவிடங்களை மறைத்தாள்.

மனம்பேரியை லெப்டினன்ட் விஜேசூரிய முதலில் பாலியல் வல்லுறவு புரிந்தான். அதன் பின் மாறி, மாறி ஏனைய சில இராணுவத்தினரும் பாலியல் வல்லுறவு புரிந்தனர். இதே வேளை அதே முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனைய இளம் பெண்களும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள். ஒரு அறையில் இந்த அட்டுழியங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது பக்கத்து அறையில் வெடகிட்டி கந்த பாமுல விகாரையின் பிக்குவும் இதே முகாமில் வதைக்குள்ளாக்கப்பட்டுக் கொண்டிருந்தார். இப்பிக்குவை தடுப்பிலுள்ள பெண்கள் மீது பலாத்காரமாக பாலியல் வல்லுறவு புரிய வைத்தனர். இறுதியில் இந்த பிக்குவையும் தோண்டி வைக்கப்பட்டிருந்த குழிக்கு அருகில் நிறுத்தி வைத்து சுட்டு வீழ்த்தினர். ''புனித பூமி'' என சொல்லப்படுகின்ற கதிர்காமத்தில் தான் இந்த கொலைகள் நிறைவேற்றப்பட்டன.

## உயிர் பிரிந்தது.

எல்லாவற்றையும் முடித்த பிறகு மனம்பேரியை கைகளிரண்டையும் மேலே தூக்கச் சொல்லி மீண்டும் பணிக்கப்பட்டது. திரும்பியவாறு வீதியில் நடக்க கட்டளை பிறப்பித்தனர். அரை மயக்க நிலையில் தள்ளாடியபடி துப்பாக்கி முனையில் வீதியில் நடத்தப்பட்டாள் நிர்வாணமாக. சார்ஜன்ட் அமரதாச ரத்னாயக்காவின் துப்பாக்கி முனையிலேயே மனம்பேரி வீதியில் நடத்தப்பட்டாள். மனம்பேரியை முன்னே செல்ல விட்டு துப்பாக்கி தோட்டாக்களால் முதுகைத் துளைத்தான் சார்ஜன்ட் அமரதாச. கீழே விழுந்த மனம்பேரியை மீண்டும் உலுக்கி நிறுத்தி நடத்தினான் மீண்டும் அவனின் துப்பாக்கிக் குண்டுகள் மனம்பேரியின் உடலைத் துளைத்தன.

www.padippakam.com

“தண்ணீர் தண்ணீர்...” என முனகிய மனம்பேரிக்கு எலடின் எனப்படும் வியாபாரி ஒருவர் தண்ணீர் கொடுக்க முற்பட்டபோது “விலகிப் போ! உதவி செய்ய முற்பட்டால் நீயும் கொல்லப்படுவாய்” என அச்சுறுத்தப்படவே அவரும் விலகிச் சென்றார். நடுவீதியில் சூட்டுக் காயங்களுடன் விழுந்து கிடந்த மனம்பேரியை அப்படியே விட்டுவிட்டு திரும்பினர் இராணுவத்தினர். பின்னர் ஊர் வாசிகளான எலடின் (இவர் இன்னமும் உயிருடன் இருக்கிறார். மனம்பேரியின் வழக்கில் முக்கிய சாட்சிகளில் இவரும் ஒருவர். இவரைச் சந்திக்க “சரிநிகர்” பத்திரிகையினர் கதிர்காமத்துக்கு சென்ற நேரத்தில் “மன்னியுங்கள் அந்த கொடூர சம்பவத்தை நினைவுக்கு கொண்டுவர விரும்பவில்லை” என அது பற்றி கருத்துரைக்க மறுத்து விட்டார்.

காதர், பெருமாள் ஆகிய ஊர் வாசிகளை அழைத்து பிணங்களைப் புதைப்பதற்கான குழிகளைத் தோண்டும்படி கட்டளையிட்டனர். அவர்கள் தோண்டினர். மனம்பேரியின் முனகலைக் கேட்ட எலடின் அருகில் சென்ற போது அந்த பையனிடம் (பெருமாள்) “எனது காதணிகள் இருக்கின்றன அதனைக் கொண்டு போய் அம்மாவிடம் கொடுத்து தங்கைக்கு அதனை கொடுக்கச் சொல்லுங்கள். நான் ஒருவருடனும் கோபமில்லை காமினி பாஸ் தான் குழப்பிப் போட்டார்...” (கிளர்ச்சியின் போது கதிர்காமத்தாக்குதலுக்கு தலைமை தாங்கியவர் தான் காமினி பாஸ்) எனக் கூறிக் கொண்டே தண்ணீர் கேட்டிருக்கிறாள். உடனே தண்ணீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு இராணுவ முகாமுக்குச் சென்று “உயிர் இன்னமும் இருக்கிறது. எனவே புதைப்பதற்கு முடியாது.” என்பதைத் தெரிவித்தார். உடனே இருவரை அனுப்பி உயிரைப் போக்கும்படி பணித்தான் லெப்டினன்ட் விஜேசூரிய. அவர்கள் இருவரும் அப்பாவச் செயலை செய்ய முடியாது என திரும்பி விடவே இன்னொருவன் அனுப்பப்பட்டான். அவன் போய் இறுதியாக மனம்பேரியின் நெற்றிப் பொட்டில் சுட்டான். மனம்பேரி புதை குழியில் சாய்ந்தாள். (இறுதியாக சுட்ட நபர் இறுதி வரை அடையாளம் காணப்படவில்லை.)

முன்னைய வருடம் இதே நாள் அழகுராணியாக காட்சியளித்த அதே தபால் நிலையத்திற்கருகிலேயே மனம்பேரியின் உயிரும் பிரிந்தது. அதே இடத்தில் மனித புதைகுழிக்குள் புதைந்தது. அவளது உடல். மனம்பேரியின் படுகொலை தொடர்பான பொலிஸ் முறைப்பாடுகள் சிலவற்றின் பின்னர்



படிப்பகம்

www.padippakam.com

அன்றைய சிறிமா அரசாங்கம் மனம்பேரியின் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டதென்றால் அது மிகையில்லை.

## கொலைஞர்களின் முடிவு.

1971ம் ஆண்டு மே மாதம் 24ம் திகதி முற்பகல் 10.30க்கு மனம்பேரியின் சடலம் புதைகுழியிலிருந்து மீள எடுக்கப்பட்டு வைத்திய பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது. 1973 மே மாதத்தில் இவ்வழக்கு விசாரணை 11 நாட்கள் நடந்தது. வழக்கின் இறுதியில் லெப்டினன்ட் அல்பிரட் விஜேசூரிய, சார்ஜான்ட் அமரதாச ரத்நாயக்க ஆகிய இருவருக்கும் பதினாறு வருட கடூழிய சிறைத்தண்டனை தீர்ப்பாக வழங்கப்பட்டது. 1973ம் ஆண்டு மே மாதம் 30ம் திகதி இத்தீர்ப்பு வழங்கப்பட்டது. தண்டனை வழங்கப்பட்ட இரு இராணுவத்தினரும் தங்கள் மீதான தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்தனர். இம்மேன்முறையீட்டு வழக்கு 1973 ஒக்டோபரில் நடத்தப்பட்டது. இவ்வழக்கிலும் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பு சரியானதே என தீர்ப்பு வழங்கப்பட்டது. அவர்கள் தண்டனையை அனுபவித்து வந்தனர்.

அவர்களில் லெப்டினன்ட் விஜேசூரிய சிறையில் நோயுற்று மரணமானான். சார்ஜன்ட் அமரதாச தண்டனை முடிவுற்று விடுதலையான பின் 1988இல் ஜே.வி.பி.யினரால் சுட்டுக் கொல்லப்பட்டான்.

## இலங்கையின் முதலாவது குடியரசு (22.05.1972)



இதன்பின்னர் 1972ம் ஆண்டு மே மாதம் 22ந் திகதி இலங்கையின் முதலாவது குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டு இலங்கை அல்லது ஆங்கில மொழியில் (Ceylon) என அழைக்கப்பட்டுவந்த தீவின் பெயர் ஸ்ரீலங்கா என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அத்துடன் குடியரசின் பெயரையும் ஸ்ரீலங்கா சோஸலிஸ ஜனநாயக குடியரசு என பெயர்மாற்றம்செய்து அரசியலமைப்பில் முன்னுரிமை வழங்கினர். புதிய அரசியலமைப்பில் சிங்களம் மட்டும் அரச கரும மொழி என்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு பௌத்த மதத்திற்கு



படிப்பகம்

www.padippakam.com

அரசியல் அந்தஸ்து வழங்கப்பட்டது. அத்துடன் இலங்கை தொடர்பாக பிரித்தானிய அரசாங்கத்திற்கு இருந்த அதிகாரங்களில் பெரும்பாலானவை மீளப் பெறப்பட்டன. சிங்களம் மட்டும் அரசகரும மொழியென அந்தஸ்து கொடுக்கப்பட்ட அதேவேளை தமிழ் மொழியின் உபயோகத்திற்கும் ஆதரவைத் தெரிவித்து இருந்தனர். உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பிற்கு சிங்கள இடதுசாரித் தலைவர்கள் அனைவரும் தமது பூரண ஆதரவை வழங்கியமையால் ஏற்கனவே அவர்கள் மீது தமிழ்த் தலைவர்களும், தமிழ் இளைஞர்களும் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்தனர்.

இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் 1956ல் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது ஒரு மொழியானால் இரண்டு நாடுகள் இரு மொழியானால் ஒரு நாடு எனக்கூறிய திரு.கொல்வின் ஆர்.டி. சில்வா அவர்களேதான் புதிய குடியரசு அரசியலமைப்பை உருவாக்கி சிங்களம் மட்டும் சட்டத்தையும் பௌத்த மதம் அரசாங்க மதம் என்னும் சரத்தையும் உருவாக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் அமைத்து இருமாதகால இடைவெளியில் தேர்தல் காலத்தின்போது கூறியதற்கமைய புதிய அரசியல் அமைப்பொன்றை தயாரிப்பது சம்பந்தமாக பொதுமக்களுக்கு தெரியப்படுத்தும் நோக்குடன் 1970 யூலை மாதம் 19ந் திகதி சம்பிரதாயபூர்வமான நிகழ்ச்சிக்காக நாட்டின் நாலா பக்கங்களிலுமிருந்து 1700 பேர் வரை கொழும்பு றோயல் யூனியர் பாடசாலையின் அரங்கமான நவரங்கலா மண்டபத்திற்கு அழைக்கப் பட்டிருந்தனர். இவர்களில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தொழிற் சங்கப்பிரதிநிதிகள் விவசாயிகள் கடற்றொழிலாளர்கள் போன்றோரும் இன்னும் பலரும் கலந்துகொண்டனர். இவர்களுடன் பாராளுமன்றப் பிரதிநிதிகள் 151 பேரும் கலந்துகொண்டனர் இக்கருத்தரங்கில் உரையாற்றிய திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் புதிய அரசியலமைப்பு உருவாக்க வேண்டிய அவசியம்பற்றி விளக்கிக்கூறினார்.

அதனைத் தொடர்ந்து 1970 மே மாதம் 19ந் திகதி முதல் 1971 யூன் 20ந் திகதி வரை அரசியலமைப்பு யாக்க அவையில் தமிழரசுக்கட்சியினரும் இணைந்து பணிபுரிந்தனர். இந்நிலையில் அரசியலமைப்புக்கு அவர்கள் முன்வைத்த திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படாமையால் அவையிலிருந்து வெளியேறினர். இந்நிலையிலும் தமிழரசுக்கட்சியினரால் பல அரசியல் திருத்தங்களை உள்ளடக்கிய மகஜரொன்று 1971 யூன் மாதம் 24ந் திகதி



படிப்பகம்

www.padippakam.com

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அத்திருத்தங்கள் சம்பந்தப்பட்ட வாக்கெடுப்பு பாராளுமன்றத்தில் யூன் மாதம் 28ந் திகதி நடாத்தப்பட்டபோது அவை ஏற்றுக்கொள்ளப்படாது நிராகரிக்கப்பட்டன. தமிழரசுக் கட்சியினரால் கொண்டுவரப்பட்ட திருத்தங்களை நிராகரித்து 88 உறுப்பினர்களும் ஆதரித்து 13 உறுப்பினர்களும் வாக்களித்தனர் நிராகரித்து வாக்களித்தவர்களில் முக்கிய தமிழ் பிரதிநிதிகளான திருவாளர்கள் சி. அருளம்பலம் (நல்லூர்), திரு.எம்.சி. சுப்பிரமணியம் (நியமனம்), திரு. ஆறுமுகம் தியாகராசா (வட்டுக்கோட்டை) திரு.எக்ஸ் மாட்டின் (யாழ்ப்பாணம்), திரு. குமாரசூரியர் (நியமனம்), திரு. இராஜன் செல்வநாயகம் (மட்டக்களப்பு) ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர் இவர்களில் ஐவர் வடமாகாணத்தைச்சேர்ந்த தமிழர்களாவர்.

இந்த அரசியலமைப்பை பின்வரும் காரணங்களுக்காக தாம் நிராகரிப்பதாக தமிழ் கட்சிகள் தெரிவித்தன.

1. இந்த அரசியல் அமைப்பிற்கான வரைவு பரந்த அளவிலான கலந்துரையாடலின் மூலமாகவோ தேசிய இணக்கத்தின் மூலமாகவோ ஏற்படுத்தப்படவில்லை.
2. பிரஜாவுரிமை தொடர்பான விடயங்களெதுவும் இந்த அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்படவில்லை.
3. அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயங்கள் எதுவும் உறுதிப்படுத்தப்படவில்லை.
4. சமத்துவ மொழியுரிமையை மீறுவதாக இவை அமைந்துள்ளது பொதுச்சேவையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுப்பதன்மூலம் சிங்கள மக்களை முதலாந்தர பிரஜைகளாகவும் தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவும் மாற்றுகின்றது.

## தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பு உதயம்

இந்நிலையில் தமிழ் மக்களின் நலன்களைக் கவனிப்பதற்காகவும் அவர்களது உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றி பெறவில்லை. இந்நிலையில், கடந்த தேர்தலில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் முக்கிய தலைவர்களான திரு.ஜி.ஜி. பொன்னம்பலம், திரு. மு.சிவசிதம்பரம் மற்றும் தா சிவசிதம்பரம் ஆகியோரும் தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு அ. அமிர்தலிங்கம், திரு. ஈ.எம்.வி. நாகநாதன்



படிப்பகம்

ஆகியோரும் தோல்வியுற்றனர். இந்நிலையில் இப்படு தோல்விகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக வட மாகாணத்தில் நடந்த தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களின் போது தமிழ் தலைமைகள் எடுத்த ஆதிக்க சாதி சார்பு நிலைப்பாடும் அமைந்திருந்தது.

1972ம் ஆண்டு மே மாதம் 14ந் திகதி பல தமிழ் கட்சிகளும் அமைப்புகளும் கலந்துகொண்ட கூட்டமொன்று திருகோணமலையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ். உட்பட தமிழ் இளைஞர்களின் அமைப்புகளும் கலந்துகொண்டன இக்கூட்டத்தின்போது தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் அமைப்பு உருவாக்கப்பட்டது இக்கூட்டத்தில் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் திரு. எஸ். தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டனர் கூட்டமுடிவில் தமிழர் ஐக்கிய முன்னணியின் 6 அம்சத் திட்டமொன்று அங்கீகரிக்கப்பட்டு அத்திட்டத்தின்பிரதி அரசாங்கத்திற்கு கையளிக்கப்பட்டது.

1. தமிழ் மொழிக்கு ஒரு திட்டவட்டமான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்
2. இலங்கை ஒரு மதசார்பற்ற நாடாக எற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
3. சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பின்மூலம் அங்கீகரிக்கப்பட்டு சட்டரீதியாக நடைமுறைப்படுத்த வேண்டும்.
4. பிரஜா உரிமைக்காக விண்ணப்பித்த அனைவருக்கும் அது வழங்கப்பட வேண்டும்.
5. சாதிமுறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.
6. மலையக மக்களை நாடுகடத்தும் திட்டம் ரத்துச் செய்யப்பட வேண்டும்.

இவையே அந்த ஆறு அம்சக் கோரிக்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டவையாகும். சுமார் 25 வருடகால முரண்பாடுகளுக்குப் பின்னர் தமிழ் மக்களின் தலைமைத்துவங்கள் ஒன்று சேர்ந்தபோதிலும் தமிழ் மக்களுடைய வாழ்வுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கான திட்டங்களெதுவும் திட்டவட்டமாக வகுக்கப்படவில்லை. அதனைத்தொடர்ந்து ஸ்ரீலங்கா சோஸலிஸ ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பை தமிழ்மக்கள் ஏற்கவில்லையெனவும் அதனை ஓர் தேர்தலின்மூலம் தம்மால் நிரூபிக்கமுடியுமெனவும் அரசாங்கத்திற்கு அறைகூவல்விடுத்த திரு. செல்வநாயகம் அவர்கள் குடியரசு அரசியலமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து

www.padippakam.com

தமது காங்கேசன்துறை பாராளுமன்ற உறுப்பினர் பதவியை 1972ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ந் திகதி இராஜினாமாச் செய்தார்

இத்தொகுதிக்கான இடைத்தேர்தல் 3வருடங்களாக நடாத்தப்படாமல் 1975ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 8ந் திகதி நடாத்தப்பட்டது. இத்தேர்தலில் திரு. எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்களுக்கு எதிராக அரசாங்கத்தின் வேட்பாளராக திரு. வி. பொன்னம்பலம் அவர்கள் (இலங்கை கம்யூனிஸ் கட்சி) நிறுத்தப்பட்டார் காங்கேசன்துறை இடைத்தேர்தலில் யாழ் குடாநாட்டிலுள்ள அனைத்து த.அ.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களில் சில முக்கியஸ்தர்களும் முழுமையாக தேர்தல் பிரச்சாரத்தில் தம்மை ஈடுபடுத்தினர்.

அதற்கமைய தந்தை செல்வா அவர்கட்கு 25,927 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட திரு.வி. பொன்னம்பலம் அவர்கட்கு 9457 வாக்குகளும் கிடைத்ததைத் தொடர்ந்து தந்தை செல்வா அவர்கள் மீண்டும் காங்கேசன்துறை தொகுதியின் பிததிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இத்தேர்தலை இருசாராரும் தமக்கு கிடைத்த வெற்றியென கருத்து வெளியிட்டனர். இதற்கு அரச தரப்பினர் காட்டிய காரணம் தனித் தமிழர் வாழும் தொகுதியான காங்கேசன்துறைத் தொகுதியில் மட்டும் புதிய அரசியல் அமைப்பை ஏறக்குறைய 26.7% வீதமான மக்கள் ஆதரிப்பதாகவும் இதனை நோக்கும்போது குடா நாட்டின் எனைய தொகுதிகளையும் வட கிழக்கிற்கு அப்பால் வசிக்கும் மக்களின் கருத்துக்களையும் மதிப்பீடு செய்யும்போது இத்தொகை பல மடங்கு அதிகரிக்கலாமென கருத்து வெளியிட்டனர் அதேவேளை த.அ.கட்சியினரின் அறிக்கையின்படி 73.3% வீதமான மக்கள் புதிய அரசியலமைப்பை நிராகரித்துள்ளதாக கருத்து வெளியிட்டனர்.

## திருகோணமலையில் தமிழ் பல்கலைக் கழகம் அமைப்பதற்கான தீர்மானம் மேற்கொள்ளல்

1965ம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கென தனியான பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும் என்னும் கோரிக்கை தமிழரசுக்கட்சியினரால் முன்வைக்கப்பட்டு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது. அன்றைய நிலையில் தமிழ் மக்களுக்கென அமைக்கப்படும் பல்கலைக்கழகம் வட கிழக்கு



படிப்பகம்

www.padippakam.com

மாகாணத்தின் மையமான திருகோணமலையில் அமைக்கப்பட வேண்டும் என்னும் முடிவினை தந்தை செல்வா அவர்கள் கட்சியின் கருத்தரங்குகளில் உறுதியாக முன்வைத்தார் அக்கோரிக்கையை அவர் முன்வைக்கும்போது அவர் கூறிய காரணங்கள் பின்வருவனவாக அமைந்தன.

1. அமைக்கப்படும் தமிழ் பல்கலைக்கழகம் வல்வெட்டித்துறை முதல் பாணமை வரை வாழ்கின்ற தமிழ் பேசும் இனத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் அனைத்து மக்களுக்கும் பொதுவானதும் வசதியானதுமான இடமாக திருகோணமலை அமைந்துள்ளமையால்.
2. சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்படும் திருகோணமலை மாவட்டத்தை பாதுகாப்பதற்கு பல்கலைக்கழகம் திருகோணமலையில் அமைக்கப்படுவது தமிழ்பேசும்மக்களின் வதிவிடங்களை அதிகரிக்க வழியமைக்கும்.
3. வட கிழக்கு மாகாணங்களின் தலைநகரமாகவும் சரித்திரப் பிரசித்திபெற்ற நகரமாகவும் திருமலை நகரம் திகழ்வதால் அங்கு தமிழ்மக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கும் பல்கலைக்கழகம் ஒரு காரணியாக அமையும்.

இதனை நிவர்த்தி செய்வதற்காக பல்கலைக் கழகம் அமைப்பதற்கான 25 ஏக்கர்காணியும் ஏற்கனவே திருகோணமலை நகரத்தை அண்டியுள்ள உப்புவெளி என்னும் இடத்தில் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இம்முயற்சி பலவித காரணங்களினாலும் வெற்றியளிக்காது போனது. எனினும் 1970ம் ஆண்டு ஆட்சியிலமர்ந்திருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களின் முக்கிய அபிலாசைகளில் ஒன்றாக இருந்த பல்கலைக்கழகம் என்னும் அவசியத் தேவையினை பூர்த்தி செய்ய முன்வந்தது.

அதனடிப்படையில் (06.10.1974ல்) யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்திருந்த பரமேஸ்வராக் கல்லூரியினை பல்கலைக்கழகமாக மாற்றியமைத்தது. அதேவேளை இம்முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் அது யாழ்ப்பாண மக்களை மென்மேலும் தங்களிலிருந்து அன்னியப்படுத்தி விடுமெனக் கருதிய தமிழ் தலைமைகள் யாழ் பல்கலைக்கழகத்தின் வரவை கண்மூடித்தனமாக எதிர்த்தனர். இதனூடாக தமிழ் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக ஏற்கனவே தமிழ் தலைவர்களால் திருகோணமலையில்



படிப்பகம்

www.padippakam.com

முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் இனரீதியாக தமிழ் மக்களை அணிதிரட்டு வதற்கான ஏமாற்றுவித்தையே என்பது அம்பலமானது.

தமிழ் மக்களுக்கென அமைக்கப்பட்ட பல்கலைக்கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ்மக்களின் இளம் சந்ததியினரின் நலனைப்பேணும் நோக்குடன் மட்டக்களப்பில் ஓர் பல்கலைக்கழகத்தை அமைக்கும் முன்நடவடிக்கையாக அன்றைய (1965 முதல் 1989 வரை) கல்குடா தொகுதியின் பிரதிநிதியாக இருந்த திரு. தேவநாயகம் அவர்களால் பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஐ.தே.கட்சி அரசாங்கத்தினூடாக மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய கிழக்கில் பிரபல்யம் வாய்ந்த கல்வி நிலையமாக திகழ்ந்துகொண்டிருந்த வந்தாறுமூலை மகாவித்தியாலயம் தெரிவுசெய்யப்பட்டு அங்கு அக்கல்லூரி அமைக்கப்பட்டது. காலப்போக்கில் அக்கல்லூரி பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டது.

இதேபோன்று சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரான ஜனாப். எம்.எச்.எம் அஸ்ரப் அவர்களின் முயற்சியினால் (1995ம்) ஆண்டு திருமதி சந்தரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சிக் காலத்தின்போது தென்கிழக்கு பல்கலைக்கழகம் என்னும் பெயரில் ஒலுவில் என்னுமிடத்தில் முஸ்லிம் மக்களுக்கான பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்றையநிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள மூன்று பல்கலைக் கழகங்களும் சிறீலங்கா ஆட்சியாளர்களுடன் அனுசரணை அரசியல் மேற்கொண்டவர்களாலேயே நிறுவப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## திருமதி சிறீமாவோ அவர்களின் தலைமையிலான அரசினால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் நடவடிக் கைகள்

1. இலங்கைக் குடியரசுக்கான அரசியல் யாப்பு (22.05.1972ல்) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் பிரதான விடயங்களாக சிங்களம் அரசகரும மொழி, பௌத்தம் அரசாங்க மதம், மற்றும் ஆங்கில மொழியில் (Ceylon) என அழைக்கப்பட்ட இலங்கை, ஸ்ரீலங்கா எனப் பெயர்



படிப்பகம்

www.padippakam.com

மாற்றஞ்செய்யப்பட்டது. குடியரசு அரசியல் யாப்பு நடைமுறைப் படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அத்தினத்திலிருந்து மேலும் ஐந்து ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிகள் நீடிக்கப்பட்ட தற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் (7) ஏழு ஆண்டுகளாக நீடிக்கப்பட்டது.

2. உள்ளூர் உற்பத்திகளுக்கு ஊக்கமளிப்பதற்காக இறக்குமதிக் கட்டுப்பாடு (வெளிநாட்டுப் பொருட்கள் உணவுப் பொருட்கள் உட்பட) அமுல்படுத் தப்பட்டது.
3. 1972 தமிழ் மாணவர்களுக்கான தரப்படுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதனால் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டது. தொடர்ந்து பின்தங்கிய மாவட்டங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவிற்கான மாவட்ட அடிப்படையிலான மாணவர் தெரிவு நடைமுறை அமுல்படுத்தப்பட்டது.
4. இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையில் அமைந்திருக்கும் கச்சதீவினை இலங்கைக்கு உரிமையானதாக்குவதற்கான உடன்படிக்கை ஒன்றினை அன்றைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடன் ஏற்பாடுசெய்து (28.06.1974ல்) கச்சதீவு இலங்கைக்கு சொந்தமாகியது.
5. யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் ஒன்றினை (06.10.1974ல் உருவாக்கியது.
6. யாழ் மாவட்டத்திற்கென சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக திரு.எம்.சி சிவசுப்பிரமணியம் அவர்களை செனட்சபை மூலம் தெரிவுசெய்ததுடன் மேலும் ஒரு பிரதிநிதியாக திரு. குமாரசூரியர் அவர்களையும் தெரிவுசெய்து அவருக்கு தபால், தந்தி தொலைத் தொடர்புகள் உதவி அமைச்சர் பதவியும் வழங்கப்பட்டு யாழ் மக்களின் தேவைகளை கவனிப்பதற்கென நியமனம் செய்தார்.
7. மாவட்ட அரசியல் அதிகாரிகள் என்னும் பெயரில் வடக்கு, கிழக்கில் புதியதோர் ஆளுமையினை உருவாக்கியதற்கமைய அப்பிரதேசங்களின் மாவட்டங்களுக்கு (Political Athority) என்னும் பெயரில் அவரின் கட்சி ஆதரவாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்நடைமுறை அத்தொகுதிகளில் தெரிவான மக்கள் பிரதிநிதிகளின் நடவடிக்கைகளுக்கு பாதகமாக அமைந்தது.
8. காணி சீர்திருத்தச்சட்டம், (11.10.1975) இச்சட்டத்தின்மூலம் ஒரு தனிநபர் 50 ஏக்கர் காணிகளுக்கு மட்டுமே உரித்துடையவராக ஏற்பாடு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டது. இச்சட்டத்தின்மூலம் (60%)மான தேயிலைத் தோட்டங்களும், (30%) இறப்பர் தோட்டங்களும் அரசுடமை யாக்கப்பட்டது. அத்துடன் லேக்கவுஸ் (ஏரிக்கரை பத்திரிகை நிறுவனமும்) அரசுடமையாக்கப்பட்டது.

9. திரு. பண்டாரநாயக்கா அவர்களின் ஞாபகார்த்தமாக பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபம் ஒன்றினை சீன அரசாங்கத்தின் நிதியுதவியுடன் (1.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில்) கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் 1500பேர் அமரக்கூடிய வசதியுடன் அமைத்தார். பின்னர் கூட்டணிக் கட்சிகளுக்கும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுக்குமிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் காரணமாக (18.05.1977ல்) பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

## இலங்கை அரசியலும் முஸ்லிம் மக்களும்

காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை விடுபடத் தொடங்கிய காலத்திலிருந்து இலங்கை சோனகர் சங்கம், முஸ்லிம் லீக், முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி எனப் பல அமைப்புகள் செயற்பட்டன. எனினும் கிழக்கு மாகாணத்தை உள்ளடக்கிய இலங்கையில் பரந்துபட்ட முஸ்லிம்களை ஓரணியில் திரட்டுவதில் இவ்வமைப்புகள் வெற்றி பெறவில்லை. வடகிழக்கிற்கு அப்பால் உள்ள 7மாகாணங்களிலும் அவர்களைப் பொறுத்தவரையில் நகர்ப்புற வாழ்க்கையை உள்ளடக்கியவர்களாகவும் வாழ்வதுடன் வர்த்தகத்துறையில் திறமைசாலிகளாகவும் தமது வாழ்க்கையை அமைத்துள்ளனர். அரசியல்ரீதியான அவர்களின் செயற்பாடுகள் சிங்களமக்களுடன் இணைந்து தமது சமூகத்தின் தேவைகளை பெற்றுக்கொள்ளக்கூடியவாறு 1981ம் ஆண்டுவரை செயற்பட்டனர்

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை அறிமுகப்படுத்தப்படும் வரை தென்னிலங்கையிலுள்ள பெரும்பான்மையான தேர்தல் தொகுதிகளில் வெற்றிவாய்ப்பினைத் தீர்மானிக்கும் சக்திகளாக அவர்கள் காணப்பட்டனர்.

இலங்கை சுதந்திரம் பெறுமுன் முஸ்லிம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை நோக்கும்போது பெரும்பாலானவர்கள் கூலித்தொழிலாளர்களாகவும், மிகச்சிறிய தொகையினர் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் வர்த்தகத்துறையில்



படிப்பகம்

www.padippakam.com

முக்கியமான இடங்களை தமதாக்கிக்கொண்டும் செயற்பட்டார்கள். சிங்களமக்கள் செறிந்துவாழும் பகுதிகளில் தமது வாழ்க்கையை அமைத்தபோதிலும் தம்மை தனியாக அடையாளப்படுத்தக்கூடியவாறான வாழ்க்கைமுறையினையே கடைப்பிடித்தனர். ஆரம்பகாலம்முதலே தமது இனத்தின் நலன்களைக் கவனிக்கவும் அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்குமாக தனியான அமைப்புக்களை உருவாக்கி செயற்பட்டனர் முஸ்லிம்மக்களின் ஆரம்பகால நலன்பேணும் அமைப்புகளாக பின்வரும் அமைப்புகள் செயற்பட்டன.

All Ceylon muslim leaque
All Ceylon moors Association

அத்துடன் சிங்களத் தேசியக்கட்சிகளுடன் நெருக்கமான அரசியல் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டனர். காலத்திற்குக்காலம் தமது சமூகத்தின் நலனையும், உரிமைகளையும் பாதுகாக்கக்கூடியவாறான சட்டதிட்டங் களையும் தொழிலுரிமைகளையும் உருவாக்குவதில் தேசியக் கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டு அனைத்து உரிமைகளையும் தமக்குசாதகமான நிலைக்கு தயார்செய்தனர்.

## 1977 - 1989 முஸ்லிம் ஐக்கிய முன்னணி

இலங்கைவாழ் முஸ்லிம் மக்களின் ஏகோபித்த தலைவர் என வர்ணிக்கப்பட்ட



சேர். ராசிக் பரீத் அவர்கள் 1960ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பொத்துவில் தொகுதியில் போட்டியிட்டு தோற்கடிக்கப்பட்டார். அதேபோன்று அல்ஹாஜ் மாக்கான் மரைக்கார் அவர்கள் 1965ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார் இவ்வரலாற்றுப் பின்னணி இலங்கைவாழ் முஸ்லிம்களின் பிரதேசரீதியான அரசியல் விழிப்புணர்வையே வெளிக்காட்டியது. இதன் காரணமாகவே பின்னர் உருவாகிய குறிப்பாக கிழக்கு மாகாணத் தலைமைகள் தாம் வாழும் பிரதேசத்தின் அரசியல். பொருளாதார. சமூகப்பிரச்சினைகளை மையப்படுத்த ஆரம்பித்தன. இதனடிப்படையில் அல்ஹாஜ். காரியப்பர், அல்ஹாஜ் முகம்மது அலி, ஜனாப். ஏ.எல்.அப்துல் மஜித், ஜனாப்.முஸ்தபா, ஜனாப்.எம். அப்துல் மஜித், ஜனாப். எம்.சி. அகமது போன்றோர் செல்வா அவர்களின் தமிழரசுக்



படிப்பகம்

www.padippakam.com

கட்சியில் சேர்ந்தே உருவானார்கள். இருந்தும் காலப்போக்கில் அரசாங்கங்களுடன் இணைவதன்மூலமே தமது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியுமென எண்ணியவர்கள் அரசாங்கக் கட்சிகளுக்கு மாறினார்கள்.

முஸ்லிம் மக்களின் கல்வி சம்பந்தமான வளர்ச்சியில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியவர்களில் பின்வருவோரின் பங்களிப்பு அளப்பரியதாக அமைந்தது (T.B Jayah, Sir Razik Fareed) போன்றவர்களும் இவர்களைத்தொடர்ந்து 1960ம் ஆண்டிற்குப்பின்னர் பதியுதீன் மஹ்மூத் போன்றோர் அரும்பெரும் சேவையாற்றியமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம்களுக்கென தனியான ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை, முஸ்லிம் அரசாங்க பாடசாலை, முஸ்லிம்களின் மதரீதியான போதனைகளை போதிப்பதற்காக அரபு மொழிப்பாடசாலை போன்றவற்றின் மூலம் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் அடையாளத்தையும் பாதுகாத்துக் கொண்டனர்.

தமிழ் அரசியல்வாதிகளின் பிரிவினைக்கோஷமும், தேசிய நீரோட்டத்திலிருந்து பிரிந்து நிற்கும் போக்கும் முஸ்லிம்களையும், தமிழர்களிடமிருந்து அன்னியப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தியது. இச்செயற்பாடுகளும் முஸ்லிம்கள்மீது சிங்கள அரசியல்வாதிகளின் நன்மதிப்பு வளர்ச்சிபெற வழிகோலியது அத்துடன் வடகிழக்கிற்கு அப்பால் முஸ்லிம்கள் பரந்து வாழ்வதாலும் அவர்களின் ஒத்துழைப்பு சிங்களத் தேசியக்கட்சிகளுக்கு இன்றியமையாததாக இருந்தது.

1970ம் ஆண்டுகாலத்திற்கு முன்னர் முஸ்லிம் மாணவர்களின் தமிழ்மொழி மூலமான கல்வி கற்பிப்பவர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாகவே நியமனம் பெற்றிருந்தனர். இந்நிலையில் படித்த சிறுதொகையான முஸ்லிம் ஆசிரியர்கள்கூட தொழிலைப்பெறுவதில் சிரமமான நிலையே காணப்பட்டது. 1973ம் ஆண்டு ஸ்ரீமாவோ அவர்களின் ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட தரப்படுத்தல் நடைமுறையின்மூலம் யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, குருனாகல் மற்றும் கண்டி போன்ற பிரதேசங்களை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். அதேவேளை மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் வாழ்ந்த மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்தது. இம்மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்ந்தமையால் முஸ்லிம்



படிப்பகம்

www.padippakam.com

மாணவர்களுக்கு அந்தநடைமுறை சாதகமாக அமைந்தது. அதற்கு வலுவூட்டக்கூடியவாறு அன்றைய கல்வி அமைச்சராக டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்கள் நியமனம் பெற்றிருந்தமை மேலும் பலதரப்பட்ட வாய்ப்பினை முஸ்லிம் சமூகத்தினருக்கு வழங்கியது.

1965ம் ஆண்டுமுதல் தெற்கிலே அமைக்கப்படும் அரசாங்கங்களின் தலைவிதியை நிர்ணயிக்கக்கூடியவாறாக வடகிழக்கு தவிர்ந்த பல மாவட்டங்களில் அவர்கள் பரந்து வாழ்ந்தனர். தமக்கான பிரதிநிதிகளை தனித்துவமாக தெரிவுசெய்யும் வாய்ப்புகள் வடகிழக்கிலுள்ள 4 மாவட்டங்களில் மட்டுமே காணப்பட்டன. காரணம் இலங்கையில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் வாழும் மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்பட்டது. கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த முஸ்லிம்களில் பெரும்பான்மையானோர் விவசாயிகளாகவும், நில உடமையாளர்களாகவும் காணப்பட்டனர். ஏனைய மாவட்டங்களில் சிங்கள பெரும்பான்மை கட்சிகளுடன் இணைந்து தமக்கென தனியான பிரதிநிதிகளை காலத்திற்குகாலம் தெரிவுசெய்வதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு இருந்தன. அவ்வாய்ப்புகளை தமதாக்கிக்கொண்டு தமது சமூகத்தின் நலனில் அக்கறை காட்டியதுடன், சிங்களமக்களுடன் இரண்டறக் கலந்து வாழ்ந்தநிலையிலும் தமது கலை, கலாச்சாரம் பண்பாடுகளைப் பேணுவதில் ஏனைய சமூகங்களைவிட முன்னணி வகித்தவர்களாகவே தமது வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர்.

இலங்கையின் எப்பகுதியில் வாழ்ந்தபோதும் தங்களது தாய் மொழியாக தமிழ் மொழியினையே அவர்கள் கொண்டிருந்தனர், தமிழ் மொழியுரிமை தொடர்பான பிரச்சினைகள் உருவாகும் போதெல்லாம் முஸ்லிம்கள் தமிழ் மொழிக்காக போராடிவந்துள்ளனர். உதாரணமாக 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் உத்தியோக மொழி என்னும் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டபோது ஜனாப். அஸீஸ் போன்ற பெருந் தலைவர்கள் தமது பதவியினை இராஜினாமாச் செய்யுமளவிற்கு முஸ்லிம்கள் தமிழ் மொழியுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்தனர்.

1960ம் ஆண்டு திருமதி. ஸ்ரீமாவோ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட வர்த்தக உரிமையாளர் சட்டத்தின்மூலம் வெளிநாட்டவர் ஒருவர் இலங்கையில் தமது பெயரில் வியாபாரநிலையமொன்றினை நடாத்துவதானால் இலங்கைப் பிரஜை ஒருவர் தமது வியாபாரநிலையத்திற்கு செலுத்தும் (vat) வரியைவிட



படிப்பகம்

www.padippakam.com

100வீதம் மேலதிகமான வரியைச் செலுத்தவேண்டிய நிலைக்கு உருவாக்கப்பட்டனர். இந்தசட்டமூலத்தின் காரணமாக மத்திய கிழக்கிலுள்ள முஸ்லிம்கள்பலர் இலங்கையில்வாழும் முஸ்லிம்களின் பெயரில் பல வர்த்தகஸ்தாபனங்களை பதிவுசெய்து வியாபாரத்துறையில் இலங்கை முஸ்லிம்களின் பங்களிப்பினைபெற்று இருசாராரும் பலன்பெறக்கூடிய நடைமுறைகளைக் கையாண்டனர்.

1956 முதல் 1965 வரையும் அதனைத்தொடர்ந்து 1970 முதல் 1977 வரையும் ஸ்ரீ.ல.சு கட்சியினர் ஆட்சியிலிருந்துபோது தனியார்வசமிருந்த பல தொழில்ஸ்தாபனங்கள் பொது உடைமையாக்கப்பட்டபோதிலும் இவ்விடயம் வியாபாரத்துறையில் முன்னணியிலிருந்த முஸ்லிம்கள் ஒருசாராரை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கவில்லை. அதற்குமாறாக 1960 முதல் 1963 வரையும் 1970 முதல் 1977 வரையும் கல்வி அமைச்சராக டாக்டர். பதியுதீன் மஹ்மூத் அவர்கள் நியமனம் பெற்றிருந்தமையால் முஸ்லிம்மக்களின் விகிதாசார (7.6 வீதமான) அடிப்படையைவிட மேலதிகமான ஆசிரியர் பதவிகளையும் முஸ்லிம்களுக்கான கல்விக்கூடங்களையும் அமைக்க வழிகோலியதற்கமைய அவர்களின் சிந்தனை கல்வித்துறைக்கு மாற்றப்பட்டு கல்வித்துறையில் தமது சமூகத்தின் வளர்ச்சிக்கு வழியமைத்தனர் 1970ம் ஆண்டிற்கு முன்னர் பல்கலைக்கழகங்களில் நிர்வாகரீதியாகவும். பயிற்றுவிப்பாளர்களாகவும் அமர்ந்திருந்த தமிழர்கள் படிப்படியாக விலக்கப்பட்டு முஸ்லிம்களும். சிங்களவர்களும் அந்த வெற்றிடங்களுக்கு நிரப்பப்பட்டார்கள்.

1973ல் அறிமுகப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத்திற்கான தரப்படுத்தல்முறை தமிழ்மாணவர்களின் எண்ணிக்கையை சரிபாதியாக குறைக்கவழிகோலியதுடன் இனரீதியான விகிதாசார தெரிவைத்தொடர்ந்து அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டரீதியான தெரிவில் விஞ்ஞானபீடத்திற்கான (Science) முஸ்லிம் மாணவர்களின் எண்ணிக்கை 1974ல் இருமடங்காகியது. வியாபாரத்துறையில் அதிககவனம் செலுத்திய முஸ்லிம் மாணவர்கள் கல்வித்துறையில் அதிக நாட்டம்கொண்டனர் அத்துடன் மத்தியகிழக்கு நாடுகளுக்கு தொழில்ரீதியாகச் சென்று பொருள்தேடியவர்களின் பிள்ளைகளும் கல்வித்துறையில் அதிக அக்கறைகாட்ட முற்பட்டனர் அதுமட்டுமன்றி மத்தியகிழக்கு நாடுகளில் தொழில்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொண்ட முஸ்லிம் மக்களுக்கு அங்கு இனரீதியான கௌரவமும் அதேவேளை மதரீதியான நம்மதிப்பும்



படிப்பகம்

www.padippakam.com

வழங்கப்பட்டது. இந்நிலையில் 1970ம் ஆண்டிற்குப்பின்னர் இலங்கைத் தமிழர்களில் ஒருசாரார் மத்திய கிழக்கில் வேலைவாய்ப்புத் தேடவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டனர் இருந்தும் அங்கு தொழில்புரிந்தவர்களில் முஸ்லிம்களின் நிலை சற்று உயர்ந்தநிலையிலிருந்ததாக விபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

1960ம், 1970ம் ஆண்டுகாலப்பகுதியிலிருந்து முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியானது தமிழரசுக் கட்சியுடனும், பின்னரான தமிழர் விடுதலைக் கூட்டணியினருடனும் இணைந்து செயற்பட்டு வந்தது.

தமிழ் தேசியவாதப் போக்கானது மிதவாத அரசியலிலிருந்து தீவிரவாதமாக பரிணமிக்கத் தொடங்கிய காலகட்டங்களில் தமிழ், முஸ்லிம் நல்லுறவில் மெது, மெதுவான விரிசல்கள் ஏற்படலாயின. ஆனபோதும் ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்த இயக்கங்களிலும் வடகிழக்கு மாகாண முஸ்லிம் இளைஞர்கள் சிலரின் பங்களிப்பு இருந்தே வந்துள்ளது.

இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் 1977ல் முன்வைக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையினை ஆதரித்து அவர்களுடன் வடகிழக்கிலுள்ள நான்கு தொகுதிகளில் முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்னும் பெயருடன் தேர்தலில் களமிறங்கினர். அதற்கமைய கல்முனை, சம்மாந்துறை, மூதூர் மற்றும் புத்தளம் ஆகிய தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்தியபோதும் பிரச்சார நடவடிக்கைகளின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போதுமான அளவு ஆதரவினை நல்காமையால் எந்தவொரு வேட்பாளரும் வெற்றியீட்டமுடியவில்லை.

பின்னர் 1981ல் இடம்பெற்ற மாவட்ட சபைக்கான தேர்தலின்போது முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் வேட்பாளர் ஒருவரை நிறுத்துமாறு தமிழர் விடுதலைக் கூட்டணியினரிடம் ஜனாப். அஸ்ரப் அவர்கள் வேண்டுகோள் விடுத்தபோதும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியினை அங்கு வேட்பாளராக நிறுத்துவதற்கு த.வி.கூட்டணியினர் சம்மதம் தெரிவிக்கவில்லை இச்சம்பவம் கிழக்கு மாகாண முஸ்லிம்களை தனிவழிசெல்வதற்கு வழியமைத்தது.



படிப்பகம்

www.padippakam.com

## மாவட்டசபை அமைப்புமுறையினை ஏற்றுக்கொண்ட த.வி.கூட்டணியினர்



மாவட்டங்களுக்கான வேட்பாளர் நியமனத்தில் அம்பாறை மாவட்டத்தில் ஜனநாயக கோட்பாடுகளுக்கு முரணான செயற்பாடுகளை மேற்கொண்டு முஸலிம் மக்களை அரசியலிலிருந்து ஓரங்கட்டு வதற்கான நடவடிக்கைககளை கையாண் டனர் 1981ம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் அறிக்கையின்படி அம்பாறை மாவட்டத்தில் கீழ்காணும் அடிப்படையில் இனரீதியாக மக்களின் எண்ணிக்கையும் வாக்காளர்களின் விகிதாசாரமும் அமைந் திருந்தது.

| | | |
|---|---|---|
| 1. முஸ்லிம்கள் | 161,481 | 41.5% |
| 2. சிங்களவர் | 146,371 | 37.7% |
| 3. தமிழர்கள் | 79,725 | 20.5% |
| 4. மிகுதி வாக்குரிமையற்றோர் | | |

மேற்கூறிய அடிப்படையில் இன விகிதாசாரம் அமைந்துள்ள அம்மாவட்டத்தில் ஒரு முஸ்லிம் வேட்பாளரை நிறுத்துவதே ஜனநாயக கோட்பாடுகளை நடைமுறைப்படுத்துவதாக அமையும். அத்துடன் முஸ்லிம்மக்களையும் தமிழ் மக்களையும் சமமான நிலையில் மதிப்பதற்கான ஒரு நடை முறையாகவும் வடகிழக்கு மாகாணங்களை இணைத்து தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கும் வழியமைப்பதுடன் முஸ்லிம்மக்களும் தமிழ் மக்களைப் போன்ற உரிமைகளுடன் வடகிழக்கில் வாழ்வதற்கான வழி முறையாகவும் அமையலாம். அதனைவிடுத்து தமிழர்கள் கூறுவதையும் செயற்படுத்து வதையுமே முஸ்லிம்கள் ஏற்கவேண்டுமெனும் ஓர் நிலையை தமிழ் தலைமைகள் தெளிவாக வெளிக்காட்டியது. இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரும் பின்னர் த.வி.கூட்டணியின் பங்காளிக் கட்சியின் தலைவருமான ஜனாப். அஸ்ரப் அவர்கள் த.வி.கூட்டணியினரிடம் அம்மாவட்டத்தில் தமது இனத்தைச்சார்ந்த ஒருவரை வேட்பாளராக



படிப்பகம்

நிறுத்துமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளிற்கு பதிலளித்த த.வி.கூட்டணியின் செயலதிபர் அவ்விடயம்பற்றி தாம் பொதுச்சபையில் கலந்தாலோசித்து முடிவுகூறுவதாக பதிலளித்தார். இறுதியில் ஜனாப். அஸ்ரப் அவர்களின் கோரிக்கை ஏற்கப்படாது நிராகரிக்கப்பட்டது.

அம்மாவட்டத்தின் வேட்பாளராக திரு.ஆ.வேல்முருகு என்னும் தமிழரொருவர் நியமிக்கப்பட்டார் இச்சம்பவம் முஸ்லிம் மக்களை திட்டமிட்டே புறக்கணிப்பதாக அமைந்தது. 1965ம் ஆண்டு முதல் தந்தை செல்வா அவர்களின் அரசியல் சித்தாந்தத்தில் ஆழமான நம்பிக்கையும் நன்மதிப்பும் கொண்டிருந்த முஸ்லிம் மக்களின் தலைமைப்பீடம் தமக்கென தனியான தலைமைத்துவத்தை உருவாக்கும் நடவடிக்கைக்கு ஆளாக்கப்பட்டனர். சிங்கள மக்களிடம் சமத்துவம் கோரிப் போராடும் தமிழ் தலைமைகள் சமத்துவம் சம உரிமை பற்றி பேசுவதற்கு அருகதையற்றவர்களென்பதை பல அரசியல் நடுநிலையாளர்கள் அன்று சுட்டிக்காட்டத் தவறவில்லை.

வடக்கு – கிழக்கு இணைவான தீர்வு ஏற்படும்போது அம்மக்களின் உரிமைக்கு உத்தரவாதமளிக்க அவர்கள் சம்மதிப்பார்களா? இக்கேள்வி களையெல்லாம் தீர்க்கதரிசனத்துடன் தமக்குள்ளேயே வினாவாக எழுப்பிய ஜனாப். அஸ்ரப் அவர்கட்கு கிடைத்த விடை தமது இனத்திற்கென தனியான தலைமைத்துவத்தை தயார் செய்வதாக அமைந்தது.

அதற்கமைய 1981ம் ஆண்டு நடைபெற்ற மாவட்டசபைத்தேர்தலின்போது அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தலைமைகளினால் ஏமாற்றப்பட்டதைத் தொடர்ந்து தமது இனத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பினை ஏனையவர்களின் தயவில் விடமுடியாதெனக்கருதிய ஜனாப். அஸ்ரப் அவர்கள் முஸ்லிம் மக்களுக்கென தனியான தலைமைத்துவமொன்றை உருவாக்க முற்பட்டார். அதற்கமைய ஏற்கனவே தமிழ் தலைமைகளுடன் இணைந்து செயற்பட்டபோது உருவாக்கியிருந்த முஸ்லிம் ஐக்கிய முன்னணி என்னும் கட்சிக்குப்பதிலாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்னும் கட்சியை (21.09.1981ல்) முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் நகரமான காத்தான்குடி என்னுமிடத்தில் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார். தமிழ் தலைமைகளால் ஏமாற்றப்பட்டமை முஸ்லிம் மக்களின் தனித்துவத்திற்கு வழிகோலியது. 1985ம் ஆண்டுகாலப்பகுதியின் பின்னர் தமிழ் ஆயுதக்குழுக்களினால்

www.padippakam.com

வடகிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்மக்கள்மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் வடகிழக்கிற்கு அப்பால் வாழ்ந்த முஸ்லிம்களையும் இனரீதியாக இணையவைப்பதற்கு வழிகோலியது முஸ்லிம்மக்களை தமது அதிகாரப்பிரயோகத்தின்மூலம் அடக்கி ஆளமுடியுமென செயற்பட்ட ஆயுதக்குழுக்களின் நடவடிக்கைகள் சிதறி வாழ்ந்துகொண்டிருந்த முஸ்லிம்களின் பலத்தையும், ஒற்றுமையையும் அதிகரிக்கச்செய்து இலங்கையின் ஆட்சிபீடத்தை அமைப்பவர் யார் என்பதை தீர்மானிக்கும் ஓர் பலமான சக்தியாக உருவாக்க வழிகோலியது.

## 1989 - 1994 ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ்



1988ல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமது அரசியலில் புதியதோர் திருப்புமுனையை உருவாக்கிய. ஸ்ரீல.முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ஜனாப். அஸ்ரப் அவர்கள் தொடர்ந்து அரசியல் பணிகளில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை மேற்கொண்டார் இந்நிலையில் இனத்துவக்கட்சி என்னும் நிலையிலிருந்து சற்று அப்பால்சென்று தேசியக்கட்சி என்னும் செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்தார் அதற்கமைய 1989ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 15ந் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் அம்பாறை. மட்டக்களப்பு, வன்னி, ஆகிய மாவட்டங்களில் தலா ஒவ்வொரு ஆசனத்தைப் பெற்றதுடன் தேசியப் பட்டியலிலும் ஒரு ஆசனமுமாக மொத்தம் 4 உறுப்பினர்களைப் பெற்றனர்.

இத்தேர்தலின்போது 56,464 வாக்குகளைப்பெற்று ஜனாப். அஸ்ரப் அவர்கள் அம்பாறை மாவட்டத்தில் அமோக வெற்றியீட்டினார். இத்தேர்தலின்போது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனநாயக வழிக்குத்திரும்பிய ஆயுதக்குழுக்களுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டபோது ஜனாப் அஸ்ரப் அவர்களுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தனர் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழும் அம்பாறை மாவட்டத்தின் தென்பகுதியில் முஸ்லிம் மக்களுக்கென தனியானதோர் நிர்வாக மாவட்டம் (தென்கிழக்கு) அமைப்பதற்கு தாம் ஆதரவு வழங்குவதாக உறுதியளித்திருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# 1970ம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் வடகிழக்கில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# 1970ம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் வடகிழக்கில் ஏற்பட்ட சமூக, பொருளாதார மாற்றங்கள்

1970 தேர்தலில் அரசமைத்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஐக்கிய முன்னணியில் பலவிதமான முற்போக்கு, இடதுசாரி கட்சிகளும் பங்கெடுத்தன. அதனடிப்படையில் திரு. கொல்வின் ஆர்டி சில்வா மற்றும் திரு. பீற்றர் கெனமன் போன்ற தலைமைகள் அமைச்சரவையில் அங்கம் வகித்தனர். இதன்காரணமாக பொருளாதார ரீதியான பல சீர்திருத்த முயற்சிகள் இலங்கையிலும், தேசியப் பொருளாதாரத்தினை வளர்க்கும் நோக்கில் முடுக்கி விடப்பட்டன. சிறீமாவோ அவர்களின் அரசாங்கம் மேற்காண்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இலங்கை விவசாயிகளுக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்தது. குறிப்பாக யாழ்ப்பாணத்து ஏழை விவசாயிகள் மிகப்பெரும் பயனடைந்தனர். அதேவேளை இறக்குமதிப் பொருட்களில் காலங்காலமாக சுகபோகங்களை அனுபவித்த இலங்கையர்கள் பலருக்கு அது பாதகமான மன நிலையைத் தோற்றுவித்தது.

இதேபோன்று போக்குவரத்துச் சபை, துறைமுகங்கள் போன்றவையும் தேசிய மயமாக்கப்பட்டன. இவற்றின் பலனாக யாழ்ப்பாணத்தில் சாதி அடிப்படையில் ஒடுக்கு முறைக்குள் உள்ளாக்கப்பட்டுவந்த மக்களிற்கு தமது பாரம்பரிய குடிமைத் தொழில்களை விடுத்து புதிய, புதிய தொழில் முயற்சிகளில் ஈடுபடும் வாய்ப்புகளும் கிட்டின. இதேபோன்று தலித் மக்களின் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்களில் முக்கிய பங்கெடுத்துவந்த திரு. எம்.சி சுப்பிரமணியம் என்பவரை சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் நியமன உறுப்பினராக பதவி வழங்கி கௌரவித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

அதுவரைகாலமான பாராளுமன்ற அரசியல் வரலாற்றில் தங்களுக்கென ஒரு அரசியல் பிரதிநிதியினைக் கொண்டிருக்காத தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திரு.எம்.சி சுப்பிரமணியம் அவர்களின் நியமனமானது பெரும் அரசியல் பலத்தினை வழங்கியது. இதேபோன்று யாழ்ப்பாண மேயராக பணியாற்றிய திரு. அல்பிரட் துரையப்பா மூலமும் பலவிதமான அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி அபிவிருத்திப்பணிகளால் ஏற்பட்ட சமூக மாற்றங்கள் தமிழ் தேசியம் மட்டுமே பேசி காலங்காலமாக அரசியல் நடாத்திவந்த தமிழ் தேசியவாத போலித் தலைகள்மீதான நம்பிக்கையினை மக்கள் இழக்க வழிகோலியது.

இந்த நிலையில் மறுபுறம் ஸ்ரீலங்கா அரசினால் முன்னெடுக்கப்பட்ட ஒரு சில கல்வித் தரப்படுத்தல்போன்ற சட்டமூலங்கள் யாழ் - மத்தியதரவர்க்க மாணவர்களின் எதிர்ப்பினைச் சம்பாதித்தனர். இந்த எதிர்ப்புணர்வுகளே இலாவகமாக இலங்கை அரச இயந்திரத்தின்மீதும், பிரதிநிதிகள் மீதும் திருப்பிவிடப்பட்டு தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியல்வாதிகள் தீவிரவாத நடவடிக்கைகளுக்கு வழிகோலினர். அதேவேளை தமது சுயநல அரசியல் போட்டிகளுக்காகவும், பழிவாங்கல்களுக்காகவும் தீவிரவாத இளைஞர்களை பயன்படுத்திக்கொள்ளவும் அவர்கள் தவறவில்லை. மேற்கூறிய நடவடிக்கைகளின் அரங்கேற்றமாக அன்றைய யாழ் மாநகர மேயரான திரு. அல்பிரட் துரையப்பா அவர்களின் படுகொலை முதன்முதலாக அரங்கேற்றப்பட்டது.

## யாழ் மாநகர பிதாவான திரு. அல்பிரட் துரையப்பா அவர்கள் மீதான கொலைமுயற்சிகள்



ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வடமாகாண அமைப்பாளராகவும், அதிகாரம் மிக்க அரசியல்வாதியாகவும் செயற்பட்டுக் கொண்டிருந்த திரு அல்பிரட் துரையப்பா அவர்களை கொலை செய்வதற்கான பலதரப்பட்ட நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது. அதன் முதல் நடவடிக்கையாக 1971ம் ஆண்டு அவரின் வீட்டிற்கு



படிப்பகம்

www.padippakam.com

கைக்குண்டு வீசப்பட்டது. பின்னர் 1972 மார்ச் மாதம் 11ந் திகதி அவரின் காருக்கு வைக்கப்பட்ட கைக்குண்டு வெடிக்குமுன் கண்டுபிடிக்கப்பட்டு அகற்றப்பட்டது.

தொடர்ந்து 1972 ஆகஸ்ட் மாதம் 27ந் திகதி யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்ற களியாட்ட விழாவின்போது பிரபாகரனே முன்னின்று கைக்குண்டு ஒன்றை துரையப்பாவிற்கு வீசினார். அப்போது பிரபாகரனுக்கு வயது 16 மட்டுமே பின்னர் 17 செப்டம்பரில் இன்னுமொரு கைக்குண்டு வீசப்பட்டது. தொடர்ந்து டிசம்பர் 19 ல் மீண்டும் அவரின் வீட்டிற்கு குண்டுவீசப்பட்ட நிலையில் அனைத்து கொலை முயற்சிகளிலும் உயிர்தப்பிய துரையப்பா அவர்கள் 27யூலை 1975 பொன்னாலைக்கட்டுவன் (யாழ்ப்பாணம்) வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் வணக்கத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை தமிழீழம் காண்பதற்காக திரு. பிரபாகரன் அவர்கள்பெற்ற ஆயுதப் பயிற்சியினை பரீட்சித்துப் பார்ப்பதற்காக திரு. அல்பிரட் துரையப்பா அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு அவர் கொல்லப்பட்டார். இக்கொலை தொடர்பில் பிரபாகரனுக்கு ஆதரவாக கலாபதி, மற்றும் கிருபாகரன் ஆகிய இரு ஆயுததாரிகளும் உதவியமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் தலைவர்களின் கைது (22.05.1976)

த.அ.கட்சியினர் ஸ்ரீலங்காவின் 4வது குடியரசு தினமான 1976ம் ஆண்டு மே மாதம் 22ந் திகதி தமிழீழம் அமைப்பதற்கான துண்டுப் பிரசுரங்களை கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் வினியோகித்தனர். இச்சம்பவம் அரசியலமைப்புக்கு முரணானதென கருதிய அரசாங்கம் அரசியலமைப்பிற்கு முரணான குற்றச்செயலில் ஈடுபட்டார்கள் எனும் காரணத்திற்காக அவர்களை கைது செய்தனர் திரு.அ.அமிர்தலிங்கம், திரு. வி. என்.நவரத்தினம், திரு.கா.பொ இரத்தினம், திரு. கே. துரைரெத்தினம், ஆகியோர் ஸ்ரீலங்கா பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு 10 நாட்கள் சிறையில் வைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களுக்கான குற்றப்பத்திரம் தயார்செய்யப்பட்டு அவர்களின் வழக்கை விசாரணை செய்வதற்காக யூரர்கள் அல்லாத (Trial at War ) என்னும் பெயரைக்கொண்ட விசேட நீதிமன்றம் அமைக்கப்பட்டு அங்கு



படிப்பகம்

விசாரணைகள் 1976 யூன் 18ந் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டது இவ்வழக்கில் த.அ.கட்சியினருக்காக வாதாடுவதற்கு 67 தமிழ் சட்டத்தரணிகள் முன்வந்தனர். இப்பெருந்தொகையானவர்கள் அவசியமில்லையென எதிரிகள் தரப்பு கருதியதால் பிரபல்யமான சிலர் மட்டும் அவ்வழக்கில் ஆஜராகினர் அவர்களில் பின்வருவோர் குறிப்பிடத்தக்கவராவர்.

திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், திரு. ஜி.ஜி. பொன்னம்பலம், திரு. எம் திருச்செல்வம், திரு. ஆர்.ஆர். குரோசர் தம்பையா, திரு. சாம். ஜே. கதிர்காமர், திரு. வி. நவரெட்ணராஜா இவர்களுடன் சொலிஸிஸ்டர் ஜெனரல் திரு. புள்ளநாயகம், திரு. எம்.சிவசிதம்பரம், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவர்களுக்கு சட்டத்துறையில் இருந்த அறிவும் வாதத்திறமையும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழக்கு செல்லுபடியற்றதென நிரூபித்ததைத் தொடர்ந்து அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அந்நிலையிலும்கூட அரச தரப்பினர் நிறுத்திக் கொள்ளாது வழங்கப்பட்ட தீர்ப்பை உயர் நீதிமன்றத்திற்கு அப்பீல் செய்தனர் அதனைத் தொடர்ந்து உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட வழக்கை நடாத்துவதற்கு மனுதாரருக்கு அனுமதியில்லை என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து அனைவரும் விடுதலையாகினர்.

## வட்டுக்கோட்டைத் தீர்மானம் - தமிழர் விடுதலைக் கூட்டணியின் உருவாக்கம்.

1970 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வட மாகாணத்தில் பின்வரும் தமிழரசுக் கட்சியினதும், தமிழ் காங்கிரஸ் கட்சியினதும் முக்கியமான உறுப்பினர்கள் தோல்வியுற்றார்கள். அதேவேளை அக்கட்சிகளின் சார்பிலேயே போட்டியிட்டு வெற்றியீட்டிய மூவர் அன்றைய ஸ்ரீ.ல.சு கட்சி அரசாங்கத்தில் இணைந்தார்கள். தோல்வியுற்ற முக்கிய உறுப்பினர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், ஜி.ஜி. பொன்னம்பலம், மு சிவசிதம்பரம், ஈ.எம்.வி நாகநாதன் மற்றும் ரீ.சிவசிதம்பரம் ஆகியோரின் அரசியல் செயற்பாடுகளுக்கு மேற்படி சம்பவம் பாரிய பாதகமான நிலையினைத் தோற்றுவித்தது.

| தோல்வியுற்றவர்கள் | வெற்றிபெற்றவர்கள் |
|---|---|
| திரு அ.அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை | வட்டுக்கோட்டை, திரு. ஏ. தியாகராஜா |
| திரு ஈ.எம்வி நாகநாதன், நல்லூர் | நல்லூர், திரு.சி. அருளம்பலம் |
| திரு ரீ சிவசிதம்பரம், வவுனியா | வவுனியா, திரு. எக்ஸ். செல்லத்தம்பு |
| திரு ஜி.ஜி பொன்னம்பலம், யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம், திரு. சி.எக்ஸ். மாட்டின் |
| திரு மு சிவசிதம்பரம், உடுப்பிட்டி | உடுப்பிட்டி, திரு.கே. ஜெயகொடி |

இந்நிலையில் வட மாகாண அரசியலில் பிரதான கட்சிகளாக தேர்தல்களில் எதிரும், புதிருமாக போட்டியிட்டவர்கள் ஒன்றிணைவதன்மூலமே அடுத்து இடம்பெறும் தேர்தல்களில் பெரும்பான்மையின ஆதரவுக் கட்சிகளின் வெற்றியை தடுத்து நிறுத்த முடியுமென்னும் தீர்மானத்திற்கு ஒன்றிணைந்தனர். அதற்கமைய மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவரான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் ஐ.தே.கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக பல தடவைகள் தெரிவான (மட்டக்களப்பு) கல்குடா தொகுதியின் உறுப்பினர் திரு. கே.டபிள்யூ. தேவநாயகம் அவர்களையும் தமது அணியில் இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். அதற்கமைய (1976 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதியன்று) திரு. அமிர்தலிங்கம் அவர்களின் கிராமமான பண்ணாகம் என்னும் கிராமத்தில் இணைப்பிற்கான கூட்டம் இடம்பெற்றது.

அக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் பெயரில் புதிய அரசியல் கட்சி ஒன்றினை வடகிழக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ் உறுப்பினர்களையும், மலையக மக்களை பிரதிநிதித்தவப் படுத்தும் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதியையும். ஒன்றிணைந்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக செயற்படுவது என்னும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் திரு எஸ். ஜே.வி. செல்வநாயகம், திரு ஜி.ஜி.பொன்னம்பலம், திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் திரு கே.டபிள்யூ தேவநாயகம் ஆகிய நால்வர் ஒவ்வொரு பகுதிகளுக்குமான தலைவர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்நிலையில் (08.02.1977ல்) திரு ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களும் (27.04.1977ல்) தந்தை செல்வா அவர்களும் காலமானார்கள். அவர்களின் மறைவினைத் தொடர்ந்து கட்சியின் சகல அதிகாரங்களும்

www.padippakam.com

திரு அ.அமிர்தலிங்கம், திரு மு சிவசிதம்பரம் ஆகியோரின் கைகளுக்கு மாறியது. அதற்கமைய மூன்று மாதகால இடைவெளியில் இடம்பெறவிருந்த (21.07.1977) பொதுத் தேர்தலில் தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தேர்தலில் களமிறங்குவதென மேற்கூறிய இருவரும் தீர்மானம் மேற்கொண்டனர். இவ்விடயத்தினை அறிந்த திரு சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் திரு கே.டபிள்யூ தேவநாயகம் ஆகிய இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறினர். வெளியேறியதற்கான காரணம் தமிழீழக் கோரிக்கையினை தாம் ஏற்பதற்கு தயாரில்லை என்பதனையும், எற்கனவே த.வி.கூட்டணி ஸ்தாபிக்கப்பட்டபோது அவ்வாறான கருத்துக்கள் எதனையும் தம்மிடம் கூறவில்லை எனவும் தெரிவித்திருந்தனர். இந்நிலையிலேயே வடக்கு, கிழக்கில் தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினர் களமிறங்கிய நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அங்கம்வகித்த பலர் தமிழீழக் கோரிக்கையினை ஆதரிக்க முன்வராதநிலையில் அன்றைய பாராளுமன்ற உறுப்பினரான கோப்பாய் கோமான் என அழைக்கப்படும் திரு. கதிரவேற்பிள்ளை அவர்களினால் முன்மொழியப்பட்ட தமிழீழக் கோரிக்கை தவிர்க்கமுடியாத நிலையில் தனித் தமிழ் ஈழத்திற்கான தீர்மானமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதியில் திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்கள் முற்றிலும் தமது செவிப்புலனை இழந்திருந்தமையால் அங்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்பற்றிய விளக்கங்கள் அவருக்கு தெரிவிக்கப்படவில்லை என கருத்தரங்கில் கலந்துகொண்ட கட்சியின் உறுப்பினர்கள் சிலர் பின்னர் தெரிவித்தமை வெளியானது.

பலர் தனிநாடு அமைக்கும் கோரிக்கைக்கு எதிரானவர்களாக இருந்தபோதிலும் தவிர்க்கமுடியாதநிலையில் தீர்மானம் மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஒவ்வொரு நாட்டினத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திரமான இறைமையுள்ள மதச்சார்பற்ற சோஸலிஸ தமிழ் ஈழத்தை அமைப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம் – இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இதுவே பாதுகாப்பாக



படிப்பகம்

www.padippakam.com

அமையுமென கருத்து வெளியிட்டனர். இந்தப் பிரகடனத்தின்மூலம் தமிழர் கூட்டணியின் பெயர் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தமிழ் மக்களின் விடுதலை அமைதியான வழிவகைமூலமாக அல்லது நேரடி நடவடிக்கைகள் மூலம் பெறப்படும. தமிழ் ஈழம் வடக்கு கிழக்கு மாகாணங்களையும் புத்தளம் மாவட்டத்தின் ஒரு பகுதியையும் இணைந்ததாக அமையும் என வெளிப்படுத்தினர். அக்காலகட்டத்தின்போது அவர்களால் முன்வைக்கப்பட்ட தனி நாட்டுக்கான இந்தக் கோரிக்கை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை உருவாக்கியது இந்நிலையில் உத்தேச தமிழீழத்தின் பிரஜாவுரிமை யார் யாருக்கு வழங்கப்படுமென்னும் விபரங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்டது. அதற்கமைய பின்வருவோர் தமிழ் ஈழத்தின் பிரஜைகளாக இருப்பதற்குத் தகுதிபெறுவர்.

(அ) தமிழ் ஈழப்பிராந்தியத்திற்குள் வசிக்கும் அனைவரும்.

(ஆ) இலங்கையில் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமை கோரினால் அவர்கள் அனைவருக்கும்.

(இ) இலங்கை மூதாதையரைக் கொண்ட உலகில் எப்பகுதியிலும் வசிக்கும் தமிழ் பேசுவோர் தமிழ் ஈழத்தின் பிரஜாவுரிமை கோரினால் அவர்கள் அனைவருக்கும் எனக் கூறப்பட்டது

மேற்படி தீர்மானமும், அறிக்கையுமே தெற்கில் வாழ்ந்த சிங்கள மக்கள் மத்தியிலும், பெரும்பான்மை இனத்தவர்களை பிரதிநிதித்தவப் படுத்தும் சிங்கள அரசியல்வாதிகள் மத்தியிலும் மேலும் தமிழர்தரப்பினர்பற்றி பெரும் ஐயப்பாடு உருவாவதற்கான வழிவகைகளை உருவாக்கியது.

சிங்களத் தேசியவாதிகளைப்போலவே தமிழ்தேசியவாதிகளுக்கும் தாங்கள்தான் உயர்ந்தவர்களென்ற உணர்விருந்தது. தமது தேர்தல் தொகுதிகளிலும் இளைஞர்கள் மத்தியிலும் தமிழர்களின் கடந்தகால வீரம்பற்றிய உன்னதச் செயற்பாடுகளையும், இனத்தையும் மொழியையும் பாதுகாக்க வேண்டுவதுபற்றியும் சிங்கள எதிர்ப்பும், இந்திய சார்பும் நிறைந்துவழிந்த ஒரு சரித்திரத்தையும் விதைத்தனர். தென்னிந்தியாவின் சோழப்பேரரசின் காலத்தையும், தமிழ்மன்னர்கள் ஆண்ட பொற்காலத்தையும் கொண்ட



படிப்பகம்

www.padippakam.com

பழமைவரலாற்றை நினைவுமீட்டு அந்த பிம்பங்களிலேயே தமிழ் அரசியல்வாதிகள் வாழ்ந்துகொண்டிருந்தனர்.

தமிழ்மொழியின் பழமையையும், தூய்மையையும் அண்மைக்காலத்தில் வளர்ச்சியடைந்த சிங்களமொழியுடன் வேறுபடுத்திக்காட்டி வேறு மொழிகளிலிருந்து உருவாகியதுதான் சிங்களம் என்றும் ஏளனஞ்செய்தனர். சிங்களவர்களைவிட தமிழர்கள் கூர்மையான நுண்ணறிவு கொண்டவர்கள் அதனால்தான் தமிழர்கள் கூடிய எழுத்தறிவும் கல்வியும்கொண்டவர்களாக உள்ளனரென்றும் சிங்களவர்கள் சோம்பேறிகளென்றும் (சிங்களயா மோடயா,கவுண் கண்ண யோதயா ) சிங்களவர்கள் முட்டாள்கள் கொண்டைப் பணியாரம் தின்னும் பெருச்சாளிகள் என அவர்களை ஏளனஞ் செய்ததுடன், தம்மைப்போல புத்திசாதுரியம் அற்றவர்களென்றும் பிரச்சாரம் செய்தனர்.

தமிழ்தேசியவாதத்திலிருந்த மற்றுமொரு குறைபாடு அதன் பிராந்தியத் த[illegible]கும். ஆகும் [illegible]ரத்திற்குள்ளும் தமிழ்ப[illegible]களின் தலைமையானது யாழ் குடாநாட்டைச்சேர்ந்த படித்த மத்திய வர்க்கத்திற் குள்ளேயே இருந்தது. 1970ற்கு பின்னர் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் அரசின் பாரபட்சமான கொள்கையினால் தற்காலிகமாக பாதிக்கப்பட்ட இக்குழுவினர் போராட்டத்தின் தலைமைச்சக்தியாக திகழ்ந்ததும் ஓர் துரதிஸ்டவசமாக அமைந்தது. வடமாகாணத்தோடும், தென்னிலங்கையோடும் ஒப்பிடும்போது கிழக்குமாகாணம் கல்வித்துறையில் சற்று பின்தள்ளப்பட்ட நிலையிலிருந்தபோதும் விவசாயத்துறையில் (நெல், தென்னை, புகையிலை, போன்ற உற்பத்தியில்) தன்னிறைவுகொண்டதாகவும் ஏனைய வழங்களை உள்ளடக்கிய செழிப்பான பிரதேசமாகவும் திகழ்ந்தது. கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த பலர் நில உடைமையாளர்களாகவும் கால்நடை வளர்ப்பின்மூலம் பெரிதளவிலான வருவாயை ஈட்டக்கூடியவர்களாகவும் பொருளாதாரரீதியான வளர்ச்சியினை தம்வசம் கொண்டிருந்தனர்

இந்நிலையில் தெற்கை அண்டி வாழவேண்டியவர்களாகவோ, அன்றி யாழ்ப்பாண அரச பணியாளர்களைப்போன்று அரசாங்க கடாட்சத்தில் தங்கியிருப்பவர்களாகவோ திகழவில்லை. இதனால் யாழ்ப்பாணத்து தமிழர்களைப்போலன்றி சிங்கள அரசுகளின் இன ஒடுக்குமுறைகளை அவர்கள் எதிர்கொண்ட விதம் மாறுபட்டதாக அமைந்தது. பொருளாதார, சமூக, கலாச்சாரரீதியான செயற்பாடுகளை பொறுத்தவரையில் இந்த இரண்டு பிராந்தியங்களும் முற்றிலும் மாறுபட்ட நிலையிலேயே சென்றுகொண்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

அதுமட்டுமன்றி யாழ்ப்பாணத் தமிழர்கள் அரசின் உயர்நிர்வாக அதிகாரிகளாகவும், பிற அலுவலர்களாகவும் கிழக்குமாகாணத்தில் தமது ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொண்டிருந்தனர். இதன் எதிரொலி யாழ்ப்பாணத்து தமிழர்களையும் அவர்களது நோக்கங்களையும் மட்டக்களப்பு தமிழர்கள் சந்தேகக்கண்களுடன் நோக்கலாகினர். இந்நிலையில் திருகோணமலையில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தின் செயற்பாட்டினால் சிங்களவர்களின் ஆதிக்கம் முனைப்புப்பெற்றது. ஏற்கனவே விடுதலை உணர்வுமிக்க தமிழர்களின் தாயகமென திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களால் புகழாரம் சூட்டப்பட்ட திருகோணமலை மாவட்டம் தனிப்பட்ட ஓர் அரசியல்வாதியின் நலனிற்காக தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டது.

## வடகிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மக்களின் இனரீதியான புள்ளிவிபரங்கள் (1981)

| வடக்கு | மொத்தம் | தமிழர்கள் | சிங்கள வர்கள் | முஸ்லி ம்கள் | இந்திய தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 831,112 | 792,246 | 4,615 | 13,757 | 20,001 | 493 |
| மன்னார் | 106,940 | 54,106 | 8,710 | 28,464 | 14,072 | 1,588 |
| வவுனியா | 95,904 | 54,541 | 15,876 | 6,640 | 18,592 | 255 |
| முல்லைத்தீவு | 77,512 | 58,904 | 3,948 | 3,777 | 10,766 | 117 |
| மொத்தம் | 1,111,468 | 959,797 | 33,149 | 52,638 | 63,431 | 2,453 |
| விகிதம் | | 86.35% | 2.98% | 4.73% | 5.71% | 0.23% |
| கிழக்கு மாகாணம் | | | | | | |
| திருமலை | 256,790 | 86,743 | 86,341 | 74,304 | 8,767 | 2,536 |
| மட்டுநகர் | 330,899 | 243,348 | 10,646 | 79,317 | 3,868 | 2,720 |
| அம்பாறை | 388,786 | 78,315 | 146,371 | 161,481 | 1,410 | 1,209 |
| மொத்தம் | 976,475 | 399,406 | 243,358 | 315,201 | 12,045 | 6,465 |
| விகிதம் | | 40.90% | 24.92% | 32.28% | 1.24% | 0.66% |
| இரு மாகாணங்களிலுமான மொத்த சனத்தொகையும் இனரீதியான புள்ளிவிபரமும் | | | | | | |
| | 2,087,943 | 1,350,203<br>65.10% | 276,507<br>13.24% | 367,839<br>17.62% | 75,476<br>3.61% | 8,918<br>0.43% |

## வேலைவாய்ப்புகளில் தமிழர்கள்

ஆரம்பகாலம் முதலே தமிழர்கள் கல்வித்துறையில் சிறந்து விளங்கியதுடன் அதன் மூலமாகப் பெற்றுக்கொண்ட அறிவின் மூலமாகவும் தராதரத்தின்



படிப்பகம்

www.padippakam.com

மூலமாகவும் போட்டிப்பரீட்சைகள் மூலமாக அரசாங்க வேலைவாய்ப்புக்களைப் பெறுவதில் முன்னணியிலேயே இருந்துள்ளனர். அதனைவிட க. பொ. த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் இடம் பெற்ற பல்கலைக்கழக அனுமதியிலும் அதிக புள்ளிகளைப் பெற்று மலத்தொகை விகிதாசாரத்தைவிட அதிக அளவிலான இடங்களைப் பெற்றுக்கொண்டு வந்துள்ளனர். இது போன்ற காரணங்களின் அடிப்படையிலேயே சிங்களம் மட்டும் சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் பின்னர் தமிழ்மாணவர்கள் தமிழ்மொழி மூலம் தமது கல்வியை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டது. சிங்கள மாணவர்களைப் பொறுத்தமட்டில் இது ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை.

ஏனெனில் அவர்கள் சிங்கள மொழியிலேயே கல்விகற்று சிங்கள மொழியிலேயே வேலை செய்யக்கூடியதாகவிருந்தது. ஆனால் தமிழ் மாணவர்கள் தமிழ் மொழியில் கல்விகற்க முடிந்தாலும் வேலைவாய்ப்புக்கு அவர்களுக்கு சிங்கள அறிவு வலியுறுத்தப்பட்டது. இந்நிலை தமிழர்கள் வேலை வாய்ப்புப் பெறுவதற்காக திறந்திருந்த கதவுகளில் பாதி மூடிவிட்டதுடன் எவ்விதமான போட்டியுமில்லாமலே சிங்களமாணவர்கள் வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நிலைமையேற்பட்டது.

●



படிப்பகம்

www.padippakam.com

## வடமாகாண தமிழ்மக்களின் கல்விபற்றி திரு.வி நித்தியானந்தன் (மஸ்ஸி பல்கலைக்கழகம் ஆக்லாந்து நியூசிலாந்து )அவர்கள் பின்வருமாறு எழுதுகின்றார்

19ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் இலங்கை வந்திருந்த அமெரிக்க மிஷனரியாகிய சாமுவேல் நியூவெல் யாழ்ப்பாணத்தை தமது தளமாகத் தேர்ந்தெடுத்த நாளிலிருந்து இலங்கையின் ஏனைய பகுதிகளைவிட யாழ்ப்பாண மாவட்டத்திற்கு கிறிஸ்தவ மிஷனரிமார் தமது நடவடிக்கைகளை கூடிய அளவிற்கு ஒன்றுதிரட்டியிருந்தனர் 1830ம் ஆண்டு அமெரிக்கன் மிஷனைச் சார்ந்தவையாக மாத்திரம் யாழ்ப்பாணத்தில் 79பாடசாலைகள் காணப்பட்டன அவற்றைவிட ஏனையமிஷனரிப் பாடசாலைகளும் இந்து கத்தோலிக்க பாடசாலைகளுமாகச் சேர்ந்து 169 பாடசாலைகள் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்டிருந்தன.

இந்தப்பாடசாலைகள் அனைத்திலும் மொத்தம் 7,477 தமிழ் மாணவர்கள் கல்விகற்றுக்கொண்டிருக்க இலங்கை முழுவதிலும் கல்விவாய்ப்புப்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 10,000 வரைதான் காணப்பட்டது. ஆகவே இலங்கையில் 1830ம் ஆண்டளவில் கல்வி கற்றுக்கொண்டிருந்த மொத்தமாணவர்களில் ஏறக்குறைய 75சத வீதத்தினர் நாட்டின் மொத்த சனத்தொகையில் 10சத வீதத்தை மாத்திரம் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தில் நிலைபெற்றிருந்தனர். இவ்வாறான விரிந்த கல்வி வாய்ப்புகளின் விளைவாகப் பொதுவாகக் கல்வியறிவிலும் சிறப்பாக ஆங்கிலக் கல்வியிலும் ஆங்கில அறிவிலும் யாழ்ப்பாணத்தவர் முன்னணியில் திகழலாயினர்.

நடைமுறைரீதியாக அதன் கருத்து யாதெனில் அரசாங்கத்துறைப் பதவிகளில் ஒரு கணிசமான பகுதி யாழ்ப்பாணத் தமிழர் வசமாயிருந்தது. அது மாத்திரமன்றித் தொழிலுக்குரிய பல நெறிகளிலும் அவர்கள் பெரிதும் பிரபல்யமடைந்திருந்தனர். அதனுடன் இணைந்தவகையில் அவற்றிற்கு அடிப்படையான பல்கலைக்கழகக் கல்வியிலும் தொழில்நுட்ப தொழில்சார் கல்வி நெறிகளிலும் அவர்கள் நன்கு முன்னேறியிருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

பல்கலைக்கழகக் கல்வியிலும் இலங்கைத் தமிழரின் மேன்மைநிலை தெளிவாகக் காணக்கூடியதொன்றாகவே இருந்தது 1953 குடிசன மதிப்பீட்டின்படி மொத்தச் சனத்தொகையில் அவர்களுடைய விகிதாசாரம் 10.9% மாக காணப்பட்டபோதிலும் 1950ல் பல்கலைக்கழக அனுமதியில் 24.5 சதவீத இடங்களை அவர்கள் எடுத்திருந்தனர். பின்னர் 1963 குடிசனமதிப்பில் தமிழர்களின் விகிதாசாரம் 11.1 ஆக உயர்வடைந்தபோதும் 1967 பல்கலைக்கழக அனுமதிகளில் அவர்களின் விகிதம் 14.1 வீதமாக இருந்தது இந்நிலையிலும் அவர்களின் பங்கு மேலாதிக்கம் நிறைந்ததொன்றாகவே நீடித்திருந்தது கீழ்வரும் புள்ளிவிபரம் அதனை வெளிக்காட்டுகின்றது.

விவசாய மிருகவைத்தியம் 59 சதவீதம், பொறியியல் 53 சதவீதம், பல்வைத்தியம் 49 சதவீதம், சட்டத்துறை 28 சதவீதமாகவும் காணப்பட்டது.

1960ம் ஆண்டிற்குப் பின்னர் வேலை வாய்ப்புக்களில் தமிழர்கள் பின்னுக்குத் தள்ளப்பட இந்த நடைமுறை வழிகோலியது. இதனைப் பின்வரும் அட்டவணை வெளிக்காட்டுகின்றது.

## தொழில்ரீதியாக தமிழர்களுக்கு வழங்கப்பட்ட நியமனம், பின்னைய தரப்படுத்தலும்

| தொழில்கள் | ஆண்டுகள் | விகிதம் | |
|---|---|---|---|
| அரச திணைக்கழகங்கள் இலிகிதர் சேவை, தபால்தந்தி புகைபிரத சேவை,வைத்திய சேவை, அத்துடன் வரி அறவிடுதல் | 1956–30%<br>50% | 1965 – 20%<br>30% | 1970–05%<br>05% |
| தொழில்நுட்பவியலாளர், வைத்தியர், விரிவுரையாளர் | 60% | 30% | 10% |
| ஆயுதப்படையினர் | 40% | 20% | 01% |
| சாதாரண தொழிலாளர் | 40% | 20% | 05% |

மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தினரால் வெளியிடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் மாணவர்கட்கான தரப்படுத்தல் ஏற்படுத்திய சாதக, பாதகங்கள்

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் வடமாகாணத் தமிழ் மாணவர்களின் நிலை சிங்கள மாணவர்களின் நிலையை விட உயர்வானதாகவே இருந்தது. 1960இல் தாய்மொழிக்கல்வி அமுலுக்கு வந்ததும் தமிழ்மொழி மூலமான மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்விக்கு அதிகளவு தெரிவு செய்யப்பட்டனர். 1971 வரை தகுதியடிப்படையில் திறமையான மாணவர்களுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது. திறைமை அடிப்படையில் பல்கலைக்கழகக் கல்வியை மேற்கொண்டால் சிங்களமாணவர்கள் பெரும்பான்மையான இடங்களைப் பெற்றுக்கொள்ள முடியாதென பௌத்த தலைமைப்பீடத்தினர் அரசாங்கத்தை எச்சரித்தனர். ஆனால் 1973ல் கொண்டுவரப்பட்ட மொழிவாரித் தரப்படுத்தலின்மூலம் சிங்கள மொழிமூலம் கல்விகற்ற மாணவர்களுக்கு விஞ்ஞானம், பொறியியல் மற்றும் மருத்துவபீடங்களில் பல்கலைக்கழக வாய்ப்புக்கள் அதிகரித்தது. தாய்மொழிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் தரப்படுத்தல் வருவதற்கு முன் 1965 – 1970ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறைமை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களின் விபரங்களை பின்வரும் புள்ளிவிபரங்கள் வெளிக்காட்டுகின்றன.

| பீடம் | தமிழ் | சிங்களம் | ஆங்கிலம் |
|---|---|---|---|
| மருத்துவம் | 464 | 410 | 48 |
| பொறியியல் | 440 | 338 | 33 |
| கட்டடக்கலை | 09 | 03 | 60 |
| மிருகவைத்தியம் | 52 | 21 | 06 |
| விவசாயம் | 52 | 65 | 05 |
| பல்வைத்தியம் | 39 | 53 | 07 |
| விஞ்ஞானம் | 410 | 412 | 0 |
| மருத்துவக் கலை | 79 | 13 | 0 |

ஆனால் 1971ம் ஆண்டின் சனத்தொகையின்படி சிங்களவர்கள் 9,131,000 பேராகவும் தமிழர்கள் 1,424,000 பேராகவும் இருந்துள்ளனர். இதனால் பல்கலைக்கழக அனுமதியை திறைமையின் அடிப்படையில் வழங்குவது



படிப்பகம்

www.padippakam.com

அநீதியானதென சிங்கள அமைப்புக்கள் பலவும் அரசாங்கத்தை வலியுறுத்தத் தொடங்கின. சிங்கள பௌத்த அமைப்புக்களின் வற்புறுத்தல்களைத் தொடர்ந்து

**1970களில் மூன்று நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொண்டது.**

1. விஞ்ஞானபாடங்களுக்கான செய்முறைப்பரீட்சை நீக்கப்பட்டது.
2. புள்ளிகளில் மொழி அடிப்படையிலான தரப்படுத்தல்.
3. மாவட்ட கோட்டா முறையை அமுல்செய்தல்.

பல்கலைக்கழக் அனுமதிக்கான இத்தரப்படுத்தல் முறை தமிழ்மாணவர்கள் சிங்களமாணவர்களைவிட அதிகளவு புள்ளிகளைப்பெற்றால் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியுமென்ற நிலையை ஏற்படுத்தியது. அதேவேளையில் குறைந்த அளவு புள்ளிகளைப்பெற்ற சிங்களமாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறக்கூடியதாகவிருந்தது. கீழே விபரிக்கப்பட்டிருக்கும் பட்டியல் 1972ம் ஆண்டில் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளின் மூலமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்காக பெறவேண்டியிருந்த ஆகக்குறைந்த புள்ளிவிபரங்களைக் காட்டுகின்றது.

| | சிங்கள மாணவர்கள் | தமிழ் மாணவர்கள் |
|---|---|---|
| மருத்துவம், பல்மருத்துவம் | 229 | 250 |
| உயிரியல் விஞ்ஞானம் | 183 | 204 |
| பிரயோக விஞ்ஞானம் | 175 | 184 |
| பொறியியல் | 227 | 250 |
| மிருகவைத்தியம் | 181 | 206 |
| கட்டிடக்கலை | 180 | 194 |

தரப்படுத்தல் முறையைத் தொடர்ந்து தமிழ்மாணவர்களிடையே பல்கலைக்கழக அனுமதிக்கான போட்டி மேலும் அதிகரித்ததால் இந்தப் புள்ளிகளிடையேயுள்ள வித்தியாசம் மேலும் அதிகரித்தது. இதனைத் தொடர்ந்துவந்த ஆண்டுகளில் பல்கலைக்கழக அனுமதிக்காக நான்கு விதமான நடைமுறைகள் கல்வியமைச்சால் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த



படிப்பகம்

www.padippakam.com

நடைமுறையும் சிங்கள மாணவர்களின் நன்மைகருதியே கடைப்பிடிக்கப்பட்ட போதும் இந்நடைமுறையின்மூலம் தமிழ் மாணவர்களும் பயனடைந்தனர். கொழும்பு, குருநாகல், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச மாணவர்களுக்கு மட்டுமே பாதிப்புக்கள் ஏற்பட்டது. ஏனைய மாவட்டங்களில் கல்விகற்ற தமிழ் மாணவர்களும், மலையக மாணவர்களும் முஸ்லிம் மாணவர்களும்கூட பல்கலைக்கழகத்திற்கு செல்லக்கூடியதான வாய்ப்புகள் அதிகரித்தது. அவற்றின் விபரங்கள் பின்வருமாறு:

1. 1971 தரப்படுத்தல்.
2. 1973 தரப்படுத்தலும் மாவட்ட அடிப்படையிலான கோட்டாமுறையும்.
3. 1974 தரப்படுத்தலும் 100 வீதமான மாவட்ட ஒதுக்கீடும்.
4. 1975 தரப்படுத்தலும் புள்ளிகள் அடிப்படையில் 70 வீதமும் மாவட்ட அடிப்படையில் 30 வீதமும்.

1948ம் ஆண்டுமுதல் 1963ம் ஆண்டுவரையான இடைப்பட்டகாலத்தில் உயர் தொழில்ரீதியாக தமிழர்களின் விகிதாசார ரீதியான பங்களிப்பை கீழ்வரும் புள்ளிவிபரம் வெளிக்காட்டுகின்றது மொத்த சனத்தொகையில் தமிழ்மக்களின் விகிதாசாரம் 10.9 சதவிகிதமாக இருந்தபோதும் தொழில்ரீதியாக அவர்களின் ஆதிக்கம் அதிக அளவு என்பது இங்கு தெளிவாகின்றது.

| | 1948 | 1955 | 1963 |
|---|---|---|---|
| சுகாதார திணைக்களம் டாக்டர் | 32.4% | 35.3% | 40.6% |
| நீர்ப்பாசன திணைக்களம் பொறியியலாளர் | 40.0% | 46.1% | 48.1% |
| அரசாங்க கணக்காளர் சேவை | 46.2% | 59.9% | 56.2% |

1970ல் அறிமுகம் செய்யப்பட்ட இத்தரப்படுத்தல் முறை தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியை மட்டுப்படுத்துவதாக அமைந்தது. 1971 முதல் 1976 வரையிலான தமிழ், சிங்களம் ஆகியமொழிகளிகளின் மூலமான மாணவர்களின் தெரிவை பின்வரும் பட்டியல் காட்டுகின்றது.

| பாடம் | தமிழ் | சிங்களம் |
|---|---|---|
| மருத்துவம் | 393 | 785 |
| பொறியியல் | 311 | 921 |
| பல் மருத்துவம் | 103 | 130 |
| விவசாயம் | 129 | 270 |
| மிருகவைத்தியம் | 36 | 97 |
| விஞ்ஞானம் | 663 | 1,493 |



படிப்பகம்

www.padippakam.com

தரப்படுத்தல் முறை அமுல் செய்யப்பட்டுள்ளதனால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை இந்தப் பட்டியல் தெளிவாகக்காட்டுகின்றது. 1975ல் திரு. பீற்றர் கெனமன் தலைமையிலான செயற்குழு பல்கலைக்கழக அனுமதி தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்தது. இக்குழுவின் முன் தமிழ்ப் பிரதிநிதிகள் மொழி அடிப்படையிலான தரப்படுத்தல் முறை நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக திறமை அடிப்படையில் மட்டுமே பல்கலைக்கழக அனுமதி இடம்பெறவேண்டுமென வற்புறுத்தினர். சிங்கள மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்னும் மொழியடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி வழங்குவதற்குப்பதிலாக சனத்தொகை விகிதாசார அடிப்படையில் அனுமதி வழங்கவேண்டுமெனும் கோரிக்கையை முன்வைத்தனர். ஆனால் கெனமன்குழு இக்கருத்துக்களை ஏற்கவில்லை. அதேவேளை அரசாங்கம் கெனமன் குழுவின் அறிக்கையை நிராகரித்துவிட்டு மொழியடிப்படையிலான தரப்படுத்தலையே தொடர்ந்தும் மேற்கொண்டது.

## தமிழாராய்ச்சி மாநாடும் தாக்குதலும் (10.01.1974)



**1974ம் ஆண்டு இடம்பெற்ற தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது பலியானர்வர்களெனக் கூறப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட நினைவுத் தூபி.**



படிப்பகம்

1970ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்கள் தமது பதவிகளை இழந்தநிலையில் அடுத்து இடம்பெறவிருக்கும் தேர்தல்களை கவனத்தில்கொண்டு கடும் பிரயத்தனங்களில் இறங்கியிருந்தனர். அதேவேளை திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான அரசாங்கம் அமைத்தகாலமான 1970ம் ஆண்டின் பின்னர் கொண்டுவரப்பட்ட குடியரசுக்கான யாப்பும், கல்வி தரப்படுத்தல் போன்ற சட்டங்களும் யாழ்ப்பாண மேட்டுக்குடி தமிழர்கள் மத்தியில் பாரிய அதிருப்தி அலைகளைத் தோற்றுவித்தது. இவ் அதிருப்திகளை தமிழரசுக் கட்சியினர் அரசுக்கு எதிரான தமது பிரச்சாரங்களுக்கு வாய்ப்பாக பயன்படுத்தினர். இச்சந்தர்ப்பத்தில் நடை பெறவிருந்த நான்காவது தமிழாராச்சி மாநாட்டிற்கான ஏற்பாடுகளை கவனிப்பதற்காக விசேட மாநாட்டுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் தமிழ் இளைஞர் பேரவையினரும் மாநாட்டு நிகழ்வு ஏற்பாடுகளில் கூடிய செல்வாக்குச் செலுத்தினர். இதன்காரணமாக அகில உலக தமிழ் இளைஞர் பேரவையின் தலைவரான திரு. ஜனார்த்தனன் போன்றோர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கான விசா அனுமதியின்றி யாழ்ப்பாணத்திற்கு கடல் மார்க்கமாக அழைத்துவரப்பட்டனர். இந்த நிலையில் ஜனார்த்தனன் அவர்களுக்கு இலங்கை அரசின் பொலிஸாரால் கைது செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் இருந்தன.

மாநாட்டின் இறுதி நாளான (10.01.1974ந்) திகதியன்று திரு ஜனார்த்தனன் அன்றைய தினம் உரையாற்றுவாரென செய்தித் தாள்களில் பகிரங்கப்படுத் தப்பட்டிருந்தது. இதுபற்றி தனது வாக்குமூலத்தினை வரலாற்றின் மனிதன் என்கின்ற அமிர்தலிங்கம் பவள விழா மலரில் டாக்டர் இரா ஜனார்த்தனன் (114ம்) பக்கத்தில் மிகத் தெளிவாக பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

“யாழ்ப்பாணத்தில் நான்காம் உலகத் தமிழாராச்சி மாநாட்டில் வெளிநாட்டு அறிஞர்கள் வழி அனுப்பும் கூட்டம் செய்தித் தாள்களில் நான் உரையாற்றுவேன் என அறிவிப்பு. காலை ஊர்வலத்தை தொடங்கிவைத்து பேசியபோதே என்னைக் கைதுசெய்ய பொலிஸார் முயற்சி செய்ய, அவரிடம் அமரர் திரு. நவரெத்தினம் எம்.பி பேச்சுக்கொடுத்து இடைமறிக்க தலைமறைவானேன். மாலை வீரசிங்கம் மண்டபத்தில் மக்கள் வெள்ளம்



படிப்பகம்

நிறைந்துவிட்டதால் வெளியே அமைக்கப்பட்ட திடீர் மேடையை அடைந்தேன். காவல்துறை அதிகாரி ஒருவர் உம்மைக் கைதுசெய்து கொழும்பு நாலாவது மாடிக்கு அழைத்துச் செல்லும் உத்தரவு இது. எனக்காட்ட பேசிவிட்டுத்தான் வருவேன் பேசாது இங்கிருந்து போக தமிழ் மக்கள் அனுமதிக்கமாட்டார்கள், என நான் மறுக்க வேறு வழியின்றி கூட்டத்தைக் கலைக்க அங்கே ஓர் ஜாலியன் வாலாபாக் நடத்த காவல் துறையினர் முடிவு செய்து அகன்றனர். அலையைக் கிழித்துவரும் கலம்போல அமிர் வந்தார். கரவொலி விண்ணைப் பிளக்க கையிலிருந்த மாலையை எனக்கு அணிவிக்க அதை அவருக்கு நான் திரும்ப மாலையிட அந்த மணமேடை பின்னர் 12 உயிர்களை தியாக வடிவில் காணும் அவலம் ஏற்பட்டது."

இத்தகவல்களின் அடிப்படையில் திரு ஜனார்த்தனன் அவர்கள் கைதுசெய்யப்படுவதற்கான பதட்டமான சூழ்நிலை இருந்ததையும் அவரது அறிந்திருந்தும் குழப்பம் இடம்பெறுவதனை தவிர்க்கும் வழிகளை ஏன் கையாளவில்லை என்கின்ற கேள்விக்கு திரு அமிர்தலிங்கம் போன்றவர்களே பொறுப்பானவர்களாகும். பிரபல சட்ட மேதையான அமிர்தலிங்கம் போன்றவர்களுக்கு இது விடயம் புரியாத ஒன்று எனக்கூறமுடியாது. ஜனார்த்தனன் அவர்களின் கைதினை முன்பே எதிர்பார்த்திருந்த சிவகுமாரன் போன்றோர் மின்சார இணைப்பினைத் துண்டித்தனர். மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டவுடன் பொலிஸார் ஆகாயத்தை நோக்கி அபாய வேட்டுக்களை தீர்த்தனர். இதன்காரணமாக மின்சாரக்கம்பி அறுந்து வீழ்ந்ததில் (9) ஒன்பது பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இம்மாநாட்டில் பொலிஸாரினால் தேடப்பட்டுக்கொண்டிருந்த பொன் சிவகுமாரன் என அழைக்கப்பட்ட தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டிருந்த இளைஞர் பண்டாரவன்னியனாக வேடம்பூண்டு அலங்கார ஊர்தியில் மாநாட்டு மண்டபத்தினை நோக்கி பவனி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழாராய்ச்சி மாநாடும் அதற்கான அனுமதியும்

திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் ஆட்சியின்போது 1974ம் ஆண்டு ஜனவரி மாதம் 3ந் திகதி முதல் ஒரு வாரகாலத்திற்கு அதாவது ஜனவரி 9ந் திகதிவரை உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை இலங்கையில்

www.padippakam.com

தமிழர்கள் பெரும்பான்மையாகவாழும் யாழ்ப்பாணத்தில் நடாத்துவதற்கான ஏற்பாடுகளை செய்யுமுகமாக அதனை உருவாக்கம் செய்த வணபிதா டாக்டர் தனிநாயகம் அடிகளாரின் வேண்டுகோளுக்கு இணங்க அதனை நடாத்துவதற்கு நியமிக்கப்பட்ட அமைப்புக்குழுவினர் அதற்கான அனுமதியைப் பெறுவதற்காக அரசாங்கத்திடம் விண்ணப்பம் செய்திருந்தனர். அன்றைய அரசியல் சூழ்நிலையில் அதுபோன்ற ஓர் விழாவினை நடத்துவதற்கான அனுமதியைத் தரமுடியாதென ஸ்ரீமாவோ அவர்களின் அரசு ஆரம்பத்தில் நிராகரித்தது. அத்தோடு உலகத் தமிழாராய்ச்சி மாநாடு என்னும் பெயரிலல்லாது தமிழ் தேசிய மகாநாடு என்னும் பெயரிலான ஒரு மாநாட்டை கொழும்பில் நடாத்த விரும்பினால் அவ்விடயம்பற்றி மறுபரிசீலனை செய்யலாமெனவும் விண்ணப்பதாரர்கட்கு தெரிவிக்கப் பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

இந்நிலையில் அக்காலகட்டத்தின்போது ஸ்ரீமாவோ அவர்களின் ஆதரவாளராக செயற்பட்டுக் கொண்டிருந்தவரும் கொழும்பில் தொழில் புரிந்தவருமான யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரும் மேற்படி விழாக்குழுவில் அங்கம் வகித்ததால் இவ்விடயத்தில் அவர் தமது செல்வாக்கினை பிரயோகித்து விழாவிற்கான அனுமதியைப் பெறுவதற்கான முயற்சிகளில் தம்மையும் ஈடுபடுத்தினார். அவரின் முயற்சியைத் தொடர்ந்து விழாவிற்கு அனுமதி வழங்குவதா இல்லையா என்னும் முடிவினைத் தீர்மானிப்பதற்காக அந்த நபர் ஸ்ரீமாவோ அவர்களின் வாசஸ்தலமான அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அங்கு திருமதி ஸ்ரீமாவோ அவர்களும் சம்பந்தப்பட்ட நபரும் அவர்களுடன் இரு அமைச்சர்களும் அவ்விடயம்பற்றி கலந்துரையாடியதற்கமைய அவரிடம் பல கேள்விகள் விடுக்கப்பட்டு அதற்கான பதில்கள் திருப்திகரமானதாக அமைந்ததற்கமைய அனுமதி வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது அங்கு முக்கியமாக முன்வைக்கப்பட்ட விடயங்களாவன அவ்விழாவில் தமிழக முதல்வர் திரு. கருணாநிதி அவர்களும் பேராசிரியர் திரு. ஜனார்த்தனன் அவர்களும் பங்குபற்றுவது சம்பந்தமாகவே அமைந்தது. அதற்குப் பதிலளித்த விழா அமைப்பாளர் சம்பந்தப்பட்ட இருவரும் அவ்விழாவில் பங்குபற்ற மாட்டார்கள் என உறுதிவழங்கப்பட்டதற்கமைய விழாவிற்கான அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில் வெளிநாடுகளிலிருந்து அவ்விழாவிற்காக இலங்கைக்கு வரவிருக்கும் தமிழ்பேராசிரியர்கள், கல்விமான்கள், தமிழ் அபிமானிகள்



படிப்பகம்

www.padippakam.com

போன்றவர்கட்கு இலங்கைக்கு வருவதற்கான விசா அனுமதியை வழங்குமாறு சம்பந்தப்பட்ட தூதரகங்களுக்கும் அரசதரப்பினரால் தகவல் அனுப்பப்பட்டது. அதனைத் தொடர்ந்து திட்டமிட்டபடி விழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விழா நடைபெற்றது இந்நிலையில் விழா நடாத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்ட கால எல்லையைவிட ஒரு நாள் மேலதிகமாக விழாவை நீடிப்பதற்கான ஏற்பாடுகளை அமைப்பாளர்களில் சிலர் மேற்கொண்டு ஏற்கனவே அனுமதிபெற நடவடிக்கைகளை மேற்கொண்டவருக்கு இறுதி நேரத்தில் இச்சம்பவம் தெரியப்படுத்தியதற்கமைய அவரால் அச்சந்தர்ப்பத்தில் மேலிடத்திலிருந்து அனுமதியைப்பெற முடியாதநிலையில் யாழ்ப்பாண பொலிஸ் உயர் அத்தியஸ்தகரிடமிருந்து அனுமதியைப்பெற்று விழாவினை நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

இந்நிலையில் மேலிடத்தால் வழங்கப்பட்டிருந்த அனுமதியைவிட ஒரு நாள்கூடுதலாக அனுமதி கொடுக்கப்பட்டதால் இறுதிநாளான அன்று பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்காக மேலதிகமாக அங்கு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டார்கள். இந்நிலையில் அவ்விழாவில் பேசுவதற்கு அனுமதி வழங்கப்படாத திரு.ஜனார்த்தனன் அவர்கள் மேடையில் பேச ஆரம்பித்தவேளை விழாவிற்கு வருகைதந்திருந்த மக்கள் கூட்டம் மகிழ்ச்சிக்களிப்பில் கைதட்டிக் கரகோசம் செய்த நிலையிலேயே விபரீத விளைவுகள் இடம்பெற்றது.

## உலகத்தமிழாராச்சி மகாநாடு -பக்கம் 20 ரஜனி திராணகமவினால் எழுதப்பட்ட முறிந்த பனை

1974ம் ஆண்டு ஜனவரியில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராச்சி மாநாட்டில் பொலிஸ் தாக்கியமை தமிழர்களின் அரசியல் சிந்தனையில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தியது. பாரிய ஆத்திரமூட்டல் எதுவுமின்றி நடந்த இத்தாக்குதலின்போது தற்செயலாகமின்சாரம் தாக்கி ஒன்பது பேர் இறந்தனர்.

## 1974ல் நான்காவது தமிழாராச்சி மாநாடு (வீரகேசரி 03.02.2008 பக்கம் (8)



படிப்பகம்

www.padippakam.com

நான்காவது சர்வதேச தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டபோது அரசு அதற்கு எதிப்புத் தெரிவித்தது.ஆனாலும் மகாநாடு வெற்றிகரமாகநடந்து கொண்டிருக்கும்போது 10,000 மக்கள் கூடியிருந்த வீரசிங்கம் மண்டபத்தில் முன்னாள் பொலிஸ் அதிபர் சந்திரசேனவின் தலைமையில் மக்கள்மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் மின்சாரக்கம்பி அறுந்து தாக்கியதில் ஒன்பதுபேர் (9) மரணமானார்கள். இந்த மாநாட்டில் சிவகுமாரன் என்கின்ற தீவிரவாத இளைஞன் வன்னியில் போர்த்துக்கேயரோடு போராடிய அரசன் பண்டார வன்னியனாக வேடம் பூண்டு அலங்கார ஊர்தியில் வருக்கின்றார் இவர் நடந்த அசம்பாவிதங்களைக் கண்டு அவற்றைத் தீர்க்க வன்முறைதான்வழி எனச் சபதம் பூணுகிறான். சிவகுமாரனும் அவனதுசகாக்களும் வங்கிக் கொள்ளை ஆயுத நடவடிக்கைகள் என்று பல வன்முறை நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றனர். அரசாங்கம் சிவகுமாரனை பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா 10,000 எனஅறிவிக்கின்றது இறுதியில் சிவகுமாரன் பொலிசாரால் கைதுசெய்யப்படும் வேளை சயனைட் அருந்தி தற்கொலைசெய்கின்றான். இவரது மரணச்சடங்கில் அயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்கின்றனர்.

## முஸ்லிம் மக்களின் முதலாவது பள்ளிவாசல் தாக்குதலும் தொழுகையாளர்களின் பலியும்.

1970 – 1977 வரை கலாநிதி அல்ஹாஜ். பதியுதீன் மஹ்மூத் அவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் கல்வி அமைச்சராக இருந்த காலத்திலும் நாட்டில் பலதரப்பட்ட தாக்குதல்கள் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடைபெற்றது. சிங்கள இராணுவமும் காடையர்களும் ஏவிவிடப்பட்டு பலத்த உயிர். பொருள் சேதங்களை ஏற்படுத்தினர். புத்தளத்தில் பொலிஸ் அத்தியட்சகராக ஜனாப்.அப்துல் கபூரும், அத்தொகுதி பாராளுமன்ற உறுப்பினராக ஜனாப். அசன் குத்தூஸ் அவர்களும் வீற்றிருக்கையிலேயே பொலிஸ் காடையர்கள் புத்தளம் ஜூம்மாப் பள்ளிவாசலுக்குள் நுளைந்து தொழுகையிலிருந்த முஸ்லிம்கள்மீது (02.10.1976ல்) துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 9 முஸ்லிம் தொழுகையாளர்கள் கொல்லப்பட்டனர். அதே ஆண்டில் கொழும்பு கொம்பனித் தெருவில் நடந்த ஒரு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதுடன் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர் இவ்வாறான பல சம்பவங்கள் காலி, மடவள, கம்பளை, கண்டி போன்ற இடங்களில் நடந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

www.padippakam.com

## திரு. ஜே.ஆர் ஜயவர்தனாவின் கைகளுக்கு மாறிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை



திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் 1973ம் ஆண்டு ஐ.தே.கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். அதன்பின்னர் ஐ.தே.கட்சியின் அரசியல்ரீதியான செயற்பாடுகளில் புதியதோர் நடைமுறையினை புகுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டார். அதற்கமைய முதலாளிமார்களின் தயவில் இயங்கிக்கொண்டிருந்த கட்சியினை கிராமப்புற தொழிலாளர்களின் பங்களிப்பினையும் இணைக்கக் கூடியவாறான நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்சியில் அங்கத்தவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வருடாந்த சந்தாப் பணமாக ஒரு ரூபாய் செலுத்தி கட்சியில் அங்கத்தவராக இணையும் புதிய நடைமுறையினை அறிமுகஞ்செய்தார். இந்நடைமுறை குறுகியகால இடைவெளியில் ஏறக்குறைய ஐந்து லட்சம் உறுப்பினர்களை கட்சியில் இணைக்க வழிவகுத்தது. இதனடிப்படையில் 1976ம் ஆண்டு நடைபெற்ற ஐ.தே.கட்சியின் மேதின ஊர்வலத்தில் கிட்டத்தட்ட மூன்று லட்சம் மக்கள் கலந்துகொண்டு கட்சியின் வளர்ச்சியை வெளிக்காட்டினர். இதன் வெளிப்பாடாகவே 1977ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் 5/6 பெரும்பான்மையைப் பெற்று ஐ.தே.கட்சி ஆட்சிபீடம் அமர வழிவகுத்தது.

## எட்டாவது பாராளுமன்ற பொதுத் தேர்தல் (1977)

### மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6,667,589

திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான அரசு (17.05.1977ல்) கலைக்கப்பட்டு யூன் 6 ந் திகதி வரை நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு மீண்டும் (21.07.1977ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 168 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் (140) உறுப்பினர்களை ஐ.தே.கட்சியினர் பெற்றனர். இந்த எண்ணிக்கை தனிக்கட்சிப் பெரும்பான்மையான (5/6 ) 83.33% பெரும்பான்மை என்பதாகும். மேற்படி பெரும்பான்மையினைப் பெற்ற ஐ.தே.கட்சியினர் திரு.ஜே.ஆர்.ஜெயவர்தனா அவர்களை ஐ.தே.கட்சி அரசின் பிரதமராக (04.08.1977ல்) தெரிவுசெய்தனர்.



படிப்பகம்

| அரசியல் கட்சிகள் | வேட்பா ளர்கள் | வாக்களித் தோர் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 154 | 3.179.221 | 50.92 | 140 |
| த.வி.கூட்டணி | 23 | 421.488 | 6.75 | 18 |
| சிறீ.ல.சு கட்சி | 147 | 1.855.331 | 29.72 | 08 |
| இல.தொ.காங்கிரஸ் | 02 | 62.707 | 1.00 | 01 |
| சுயேச்சைகள் | 295 | 353.014 | 5.65 | 01 |
| ல.ச.சமாஜ கட்சி | 82 | 225.317 | 3.61 | 0 |
| இல.கம்யூனிஸ்ட: கட்சி | 25 | 123.856 | 1.98 | 0 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 27 | 22.639 | 0.36 | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | 755 | 6.243.573 | | 168 |

அதன்பின்னர் 1978 ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்த தினமான பெப்ரவரி மாதம் 4 ந் திகதி (04.02.1978ல்) இலங்கையின் முதலாவது ஜனாதிபதியாக பாராளுமன்றப் பெரும்பான்மையின் மூலம் திரு. ஜே.ஆர் ஜெயவர்தனா அவர்கள் பதவியேற்றார். இந்நிலையில் ஏற்கனவே (22.05.1972ல்) திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இலங்கைக்கான குடியரசு யாப்பில் சில திருத்தங்களை ஏற்படுத்தி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என (07.09.1978ல்) பெயர் மாற்றம் செய்தார்.

5/6 தனிக்கட்சிப் பெரும்பான்மையினரை தம்வசம் கொண்டிருந்ததுடன் சர்வ அதிகாரங்களையும் தன்னகத்தே கொண்டிருந்த ஜனாதிபதிக்குரிய அந்தஸ்தினைப் பயன்படுத்தி இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருந்த இன முரண்பாட்டினை முடிவிற்கு கொண்டுவருவதற்கான தனிக்கட்சிப் பலம் அவர்களிடமிருந்தபோதும் (போர் என்றால் போர், சமாதானமென்றால் சமாதானம் என்று அன்று முழக்கமிட்டவர் மேற்குலக ஏகாதிபத்தியங்களின் வலையில் வீழ்ந்து ஏமாந்தார்.

ஏமாந்தது மட்டுமன்றி குறுகிய கால இடைவெளியில் விடுதலைப் போராளிகளென தம்மை அறிமுகப்படுத்திய ஆயுத அமைப்புக்களை அழித்தொழிப்பதற்கென சட்டமூலங்களையும் உருவாக்கியதுடன் தமது ஆட்சிக்காலத்தினுள் தமிழ் மக்களுக்கு எதிரான மூன்று இனக்கலவரங் களையும் ஏற்படுத்தினார். அதற்கமைய இடம்பெற்ற கலவரங்களின் விபரம் பின்வருமாறு.

www.padippakam.com

## ஆவணிக்கலவரம் (12.08.1977)

திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசாங்கம் பதவியேற்று ஒரு மாதகால இடைவெளியில் இனக்கலவரம் ஒன்று உருவானது. 1977ம் ஆண்டிற்கு முன்னர் இலங்கையில் இருதடவைகள் இனக்கலவரங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டு இனங்களுக்கிடையிலான பகைமையுணர்வு வளர்ச்சியடைந்து சிங்களவர்களும், தமிழர்களும் ஒருவருக்கொருவர் எதிரானவர்கள் என்னும் பகைமை உணர்வு வளர்ச்சியடைந்திருந்தது. 1956, 1958 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற கலவரமும் 1977ம் ஆண்டில் நடைபெற்ற கலவரமும் முற்றிலும் மாறுபட்ட சந்தர்ப்பத்தை காரணியாக வைத்தே ஆரம்பிக்கப்பட்டது.

1977ஆகஸ்ட் மாதம் 12ந் திகதி யாழ்ப்பாணம் சம்பத்திரியார் கல்லூரியில் ஓர் களியாட்டவிழா ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அவ்விழாவிற்கு சிவில் உடையில் வருகை தந்திருந்த பொலிஸார் இருவர் நுழைவாயிலில் அனுமதிச்சீட்டுப் பெறாது உள்ளே நுழைய முயன்றபோது வாசலில் கடமையில் நின்றவர்கள் உள்ளே செல்லவிடாது தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்து வாயிலில் நின்ற ஊழியர் ஒருவர் பொலிஸாரால் தாக்கப்பட்டார். இப்பிரச்சினையை மோசமடையவிடாது தடுத்து நிறுத்தும் நோக்குடன் இவ்விடயம் உடனடியாக அப்போதைய பொலிஸ் அத்தியட்சகருக்கு தெரியப்படுத்தியதையடுத்து வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலுமுள்ள பொலிஸாரை களியாட்டவிழா அரங்கிற்குள் போகக்கூடாதென சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இருந்தும் மறுநாள் 13ந் திகதி உள்ளே நுழைந்த இரு பொலிஸாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பைத் தொடர்ந்து இரண்டு பொலிஸாரும் பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து யாழ்நகரில் பொலிஸாரினால் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது அதன்பின்னர் 15ந் திகதி காலை துவிச்சக்கர வண்டியில் வந்த இரு இளைஞர்கள் வீதியில் சென்றுகொண்டிருந்த இரு பொலிஸாரை கைத்துப்பாக்கியால் சுட்டதைத் தொடர்ந்து ஒரு பொலிஸ் உத்தியோகஸ்தர் படுகாயமடைந்தார். இச்சம்பவம் பொலிஸாரை மேலும் ஆத்திரத்திற்கு உள்ளாக்கியது மறுநாள் அதிகாலை வீதிப்பாதுகாப்பு



படிப்பகம்

கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 04 பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் 21 பொதுமக்கள் காயமடைந்தனர். அதன்பின் வாகன ரயர்களை பாவித்து யாழ் பழைய சந்தைக் கட்டிடத்தை பொலிஸார் தீமிட்டுக் கொளுத்தினர். அதனை அணைக்க முற்பட்ட பொதுமக்களை துப்பாக்கிப்பிரயோகம் செய்து கலைத்தனர் இக்கலவரம் ஆகஸ்ட் 26ந் திகதிவரை நடைபெற்றது

இச்சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை யாழ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று கொண்டிருந்த சிங்கள மாணவர்கள் அனைவரையும் தற்பாதுகாப்புக் கருதி பொலிஸாரின் அறிவுறுத்தலின்பேரில் 17ந் திகதியே அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பிவைத்தனர். இக்காலகட்டத்தில் யாழ்நகரில் இரவு வேளைகளில் ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டிருந்தது. இருந்தும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டியிலுள்ள நகைக்கடைகள் கொள்ளையிடப் பட்டதுடன் யாழ் பஸ்நிலையக் கடைகள் தீக்கிரையாக் கப்பட்டன. வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த பெரியார்களின் சிலைகள் அடித்து நொருக்கப்பட்டன. அத்துடன் நின்றுவிடாது யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்ற சிங்கள மாணவர்கள் தமிழ் மாணவர்களால் அடித்து விரட்டப்பட்டதாகவும் சிங்களப்பெண்கள் சிலர் வெட்டப்பட்டதாகவும் பொய்யான வதந்திகள் பொலிஸாரினால் சிங்களப்பகுதிக்கு அனுப்பபட்டது. இதனால் ஏற்பட்ட வதந்திகளின் விளைவு நாடெங்கும் கலவரத்தைத்தூண்ட வழிகோலியது.

16ந் திகதி யாழ்நகரிலிருந்து கொழும்புக்கு புகையிரதமூலம் பயணம் செய்த தமிழ் பயணிகள் அநுராதபுரத்தில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாக்கப் பட்டதுடன் கெக்கிராவை போன்ற சிங்களமக்கள் செறிந்துவாழும் பகுதியில் காலம் காலமாக வாழ்ந்த தமிழ்மக்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். இந்நிலை மலையகம் உட்பட அனைத்து இலங்கையிலும் பரவியது. இக்கலவரம் வட கிழக்கிற்கு அப்பால் எறக்குறைய 300 தமிழ்மக்களின் உயிரை பலிகொண்டதாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் வெளியாகின. அத்துடன் காடையர்களின் நடவடிக்கைகளினால் சொந்த இடங்களைவிட்டு வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களை தங்கவைப்பதற்காக பல அகதி முகாம்கள் தற்காலிகமாக கொழும்பில் நிறுவப்பட்டு பின்னர் அம்மக்களை தரைமார்க்கமாக அனுப்பமுடியாதநிலையில் கப்பல்மூலம் வடபகுதிக்கு அனுப்பிவைத்தனர்.

www.padippakam.com

வட மாகாணத்தில் உறவினர்கள் உள்ளவர்கள் அவர்களின் வீடுகளில் தஞ்சம் புகுந்தனர் ஏனைய மலையக மக்களை குடியமர்த்துவதற்காக T.R.R.O என்னும் அமைப்பு திரு கே.சி நித்தியானந்தன் அவர்களின் தலைமையில் நிறுவப்பட்டு அம்மக்களை வவுனியா, கிளிநொச்சி, நெடுங்கேணி, போன்ற பகுதிகளில் குடியமர்த்தினர் இக்குடியேற்றத்தின் பொறுப்பாளராக அன்று த.வி.கூட்டணியின் கொழும்புக் கிளைச்செயலாளராக பணியாற்றிய திரு. உமா மகேஸ்வரன் அவர்கள் நியமிக்கப்பட்டார். அமைப்பின் செயலாளராக சட்டத்தரணி திரு. கந்தசாமி நியமிக்கப்பட்டு குடியேற்ற செயற்பாடுகள் நடைபெற்றது இவர்களுடன் காந்தீயம் என்னும் புனர்வாழ்விற்கு உதவிபுரியும் அமைப்பினூடாகவும் உதவிகள் பெறப்பட்டது.

இப்பணியினை திரு.ஏ.டேவிட், டாக்டர். ராஜசுந்தரம், திருமதி. ராஜசுந்தரம், கே.சி.நித்தியானந்தன், சட்டத்தரணி கே.கந்தசாமி போன்றோர் முன்னின்று கொட்டில்களை அமைத்து அவர்கட்கு வேண்டிய அவசர உதவிகளைச் செய்து கொடுத்தனர். இச்சம்பவங்களில் இளைஞர்கள் எவரும் பங்குகொள்ளாது ஆயுத நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதிலேயே தமது முழுமையான கவனத்தையும் செலுத்தினர். இக்குடியேற்றத் திட்டங்களும் எல்லைப்புற கிராமங்களை அண்டியதாக அமைக்கப்பட்டதால் இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புகருதி மலையகமக்கள் பாதுகாப்பு அரணாக எல்லைகளை நோக்கி குடியேற்றப்பட்டதாக பல நடுநிலை நோக்கர்கள் கருத்து வெளியிட்டனர்.

## திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களின் தலைமையிலான அரசினால் முன்னெடுக்கப்பட்ட முக்கிய விடயங்கள் சில

### 1978 மே மாதம் 19 ந் திகதி புலிகள் தடைச்சட்டம்.

1978 செப்டம்பர் 7 ந் திகதி திரு ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்களால் இரண்டாவது அரசியலமைப்பு அறிமுகம்.(Srilanka Prajathanthrika Samajavadi Janaraya) இலங்கை ஜனநாயக சோஸலிஸ குடியரசு.

1978 அக்டோபர் 5ந் திகதி இலங்கையின் 24 மாவட்டங்களுக்கும் அரசியல்



படிப்பகம்

www.padippakam.com

அதிகாரிகள் என்னும்பெயரில் அமைச்சர்கள் போன்ற 24பேர் நியமனம் செய்யப்பட்டனர். அதற்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாவட்டங்களுக்கு முறையே ஜனாப்.ஏ.ஆர்.எம் மன்சூர், யாழ்ப்பாணம், எம்.ஈ.எச் மஹ்ரூப், திருகோணமலை, எம்.எல்.எம் அபுசாலி வவுனியா, மற்றும் எம்.சி கனகரெத்தினம் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்டனர்.

1979 யூலை 20ந் திகதி பயங்கரவாத தடைச்சட்டம். அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் பத்திரிகைகள் அனைத்திற்கும் தணிக்கைவிதியை நடைமுறைப்படுத்திய அரசு பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர்.

1979 அபிவிருத்திப் பணி தலைநகரை அண்டிய பகுதிகளில் மட்டுமே தொழிற்பேட்டைகள் அமைக்கப்பட்டு ஏனைய பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டன. அதற்கமைய கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தினை அண்டிய (கட்டுநாயக்கா) பகுதியில் (160) சதுர மைல் பரப்பளவை உள்ளடக்கிய பகுதியில் மா பெரும் தொழிற்பேட்டை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. அங்கு அன்றைய நிலையில் (116) வெளிநாட்டுக் கம்பனிகள் முதலீடு செய்ததுடன் (35,786) இலங்கையர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கொழும்பு நகரத்தில் வானளாவ உயர்ந்த நவீன கட்டிடங்களும், ஹொட்டல்களும் உருவாகின. இச்சம்பவங்கள் கொழும்பிற்கும், ஏனைய மாவட்டங்களுக் குமிடையில் பாரிய வேறுபாட்டினைத் தோற்றுவித்தன.

27.03.1982ல் கொண்டுவரப்பட்ட மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தம் இதன்மூலம் மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றின் மூலமாக ஜனாதிபதி ஒருவருக்கு தான் சார்ந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கான சட்டதிட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதனடிப்படையில் நடத்தப்பட்ட மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின்பின்னர் (22.12.1982) அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் 1989 ஆகஸ்ட் 4ந் திகதிவரை நீடிக்கப்பட்டது. அத்துடன் ஜனாதிபதி பதவியேற்று 4 வருடகாலம் முடிவடைந்ததும் எந்தநேரத்திலும் இன்னுமொரு பதவிக்காலத்திற்கு பதவியிலிருப்பதற்கான மக்களின் அனுமதியைப்பெறுவதற்காக மீண்டுமொரு ஜனாதிபதித்தேர்தலை நடாத்தக்கூடியவாறான வழிவகை செய்யப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

## புதிய பாராளுமன்றத்திற்கான கட்டிட நிர்மானப் பணிகள்

ஐக்கிய தேசியக் கட்சியினர் ஆட்சியமைத்ததன் பின்னர் கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டங்களின் ஓர் நடவடிக்கையாக புதிய பாராளுமன்றம் ஒன்றினை அமைப்பதற்கான நடவடிக்கைகள் 1979ம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. அதற்கமைய கொழும்பு கோட்டைப் பகுதியினை அண்டிய தியவன்ன ஓயா என்னும் நீர்த்தேக்கம் அமைந்துள்ள பகுதியில் இப்பாராளுமன்றம் அமைக்கப்பட்டது. இக்கட்டிட நிர்மானத்திற்குரிய செலவுத் தொகையான (43மில்லியன்) அமெரிக்க டொலர் பெறுமதியான நிதியினை இலங்கை அரசாங்கத்திற்கு நன்கொடையாக ஜப்பான் வழங்கியது. மூன்று வருடகால இடைவெளியில் கட்டிடப் பணிகள் பூர்த்தியானதும் காலிமுகத் திடலுக்கு அண்மையில் 1929ம் ஆண்டு பிரித்தானியரால் அமைக்கப்பட்டிருந்த பழைய பாராளுமன்றக் கட்டிடத்திலிருந்து ஜயவர்தனபுர புதிய பாராளுமன்றத்திற்கு (29.04.1982ல்) சம்பிரதாயபூர்வமாக புதிய பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

1969ம் ஆண்டு யூலை மாதம் 6 ந் திகதி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட மஹாவலி அபிவிருத்தித் திட்டம் மீண்டும் 1980ல் முன்னெடுக்கப்பட்டு வெளிநாடுகளின் நீண்டகால கடன் திட்டத்திற்கமைய ஆரம்பமானது. அதற்கமைய பின்வரும் நாடுகளால் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. மாதுறு ஓயா (கனடா), விக்ரோரியா (பிரித்தானியா), கொத்மலை (சுவீடன்), ரந்தனிகல (ஜேர்மனி) ஆகிய நாடுகளால் முன்னெடுக்கப்பட்டு அனைத்து திட்டங்களும் 1986ல் நிறைவுபெற்றது. மேற்படி திட்டங்களில் (125,000) பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த குடும்பங்கள் குடியேற்றப்பட்டனர்.

1980 அக்டோபர் 16 ந் திகதி இலங்கையின் முன்னாள் பிரதமரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் குடியுரிமையை ரத்துச்செய்யப்பட்டது.

## 1981 இனக்கலவரம் (31.05.1981)

த.வி.கூட்டணியினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாவட்டசபை அமைப்பு முறையை விரும்பாத ஆயுதக்குழுக்கள் தேர்தலைக் குழப்புவதற்கான செயற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டனர். இந்நிலையில் 1981ம் ஆண்டு மே



படிப்பகம்

www.padippakam.com

மாதம் 30ந் திகதி யாழ் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற த.வி.கூட்டணியினரின் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின்போது பாதுகாப்புக் கடமையிலீடுபட்டிருந்த இரண்டு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் ஆயுதக் குழு ஒன்றினால் சுட்டுக்கொன்ற சம்பவத்தையடுத்து அன்று இரவு யாழ் நூலகம் பொலிஸாரினால் தீமிட்டுக் கொழுத்தப்பட்டது. அதே தினத்தன்று யாழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு.யோகேஸ்வரன் அவர்களின் வீடும் தீக்கிரையாக்கப்பட்டது. அச்சம்பவம் நடைபெற்றபோது திருமதி. யோகேஸ்வரன் அவர்கள் வீட்டில் இருந்தபோதும் ராணுவத்தினரின் வருகையை அறிந்து வீட்டின் பின்மதிலால் ஏறிக்குதித்து பக்கத்துவீட்டிற்கு சென்று தெய்வாதீனமாக உயிர் தப்பினார். சிங்கள ராணுவத்தினரால் உயிர்தப்பியவரை தமிழ் ஈழத்தின் நாயகர்களான புலிகள் 1998 மே மாதம் 17ந் திகதி தமது துப்பாக்கி ரவைகளுக்கு பலியாக்கினர். 1975 யூலை 27ந் திகதி திரு. அல்பிரட் துரையப்பா அவர்களும், 1998 மே மாதம் 17ந் திகதி திருமதி ரஞ்சனி யோகேஸ்வரன் அவர்களும், 1998 செப்டம்பர் 17ந் திகதி திரு பொன்னுத்துரை சிவபாலன் அவர்களும் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் யாழ் மாநகர முதல்வர்கள் மூன்றுபேர் விடுதலைப் புலிகளின் துப்பாக்கிக்கு பலியாக்கப்பட்ட சம்பவமாக அமைந்தது.

## யாழ் நூல் நிலையம் அமைக்கப்பட்டமை தொடர்பான தகவல்

1953 ம் ஆண்டு மார்ச் மாதம் 29ம் திகதியன்று இந்த நூல் நிலையத்திற்கு அத்திவாரம் இடப்பட்டது. திராவிடக் கட்டடக் கலை நிபுணரான மு. நரசிம்மன் அவர்களைச் சென்னையிலிருந்தும், பேராசிரியர் இரங்கநாதன் அவர்களை டெல்லியிலிருந்தும், நூல் நிலைய நிர்வாகக்குழு அழைத்து ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் பெற்றது. முதல் கட்டப் பணிகள் 1959ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ம் திகதி நிறைவு பெற்றன. சிறுவர்களுக்கான பகுதி ஒன்று 1967ம் ஆண்டு நவம்பர் மாதம் 3ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 1971ம் ஆண்டில் நூல் நிலையத்தின் முதல் மாடியில் கூட்டங்கள் நடாத்துவதற்காக மண்டபம் ஒன்றும் நிர்மாணிக்கப்பட்டது. இப்படிப்பட்ட கட்டிடமும் ஏறக்குறைய 97,000ற்கும் மேற்பட்ட அரிய நூல்களும், பழைய முக்கியமான சஞ்சிகைகளும் 1981ம் ஆண்டு யூன் மாதம் முதலாம் திகதியன்று தீக்கிரையாக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

1981 யூலை மாதம் 24 ந் திகதி அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக பாராளுமன்றத்தில் பதவிவகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு அ.அமிர்தலிங்கம் மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எதிராக அன்றைய பாணந்துறை உறுப்பினரான திரு. நெவில் பெர்ணாண்டோ என்பவரால் அரச தரப்பினரின் அனுசரணையுடன் நம்பிக்கையில்லாத் தீர்மானமொன்றினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது (121) உறுப்பினர்கள் அப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்த நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களும் பிரதி நீதி அமைச்சரான செல்டன் ரணராஜா அவர்களும் வாக்களிப்பில் கலந்துகொள்ளாது வெளிநடப்புச் செய்தனர்.

## சர்வசன வாக்கெடுப்பு (22.12.1982)

இலங்கை பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 1983 ஆகஸ்ட் 3 ந் திகதி முடிவுற இருந்த நிலையிலேயே சர்வசன வாக்கெடுப்பு (22.12.1982)ல் மேற்கொள்ளப்பட்டது. ஐ.தே கட்சி அரசாங்கம் ஆட்சியமைத்து நான்கு வருடகாலப் பகுதியினுள்(1977–1981) ஆகிய ஆண்டுகளில் இரு இனக்கலவரங்கள் இடம்பெற்றநிலையில் திரு .ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களின் தலைமையிலான அரசு தொடர்ந்து தமது அராஜக நடவடிக்கைகளை தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்து விடுவதற்கான வாய்ப்பினை தக்கவைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்ற ஜனநாயக மறுப்பினை எதிர்ப்பதற்கும் அவ்விடயம் தொடர்பாக தமிழ் பேசும் மக்கள் மத்தியில் எதிர்ப்பிரச்சாரங்களை முன்னெடுக்கவும் அன்றைய எதிர்க்கட்சியாக பாராளுமன்றத்தில் அமர்ந்திருந்த தமிழரசுக் கட்சியினர் நட்டவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முயலாது மதில்மேல் பூனையாக இருந்தனர். இச்சம்பவமே சர்வசனவாக்கெடுப்பின்மூலம் தமது பாராளுமன்ற அதிகாரத்தினை தக்கவைத்துக்கொண்ட ஐ.தே.கட்சி எட்டு மாதகால இடைவெளியில் (25.07.1983) மீண்டுமொரு இனக்கலவரத்தினை நாடுதழுவிரீதியில் தமிழ் மக்களுக்கு எதிராகமேற்கொண்டு தெற்கிலும் மலையகத்திலும் வாழ்ந்த 10பத்து இலட்சம் வரையான தமிழ் மக்களை அப்பிரதேசங்களிலிருந்து துரத்தியதுடன் எதிர்க்கட்சித் தலைவரான திரு. அமிர்தலிங்கம் அவர்களினதும் அவரின் கட்சிசார்ந்த அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களினதும் பதவியினை(08.08.1983ல்) 6வது திருத்தச்



படிப்பகம்

www.padippakam.com

சட்டமூலத்தினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி இல்லாதொழித்தது. அதற்கமைய தொடர்ந்து (8) உறுப்பினர்களைமட்டும் உள்ளடக்கிய எதிர்க்கட்சியை பாராளுமன்றத்தில் வைத்துக்கொண்டு (1989) வரைஅதாவது பன்னிரெண்டு வருடகாலங்கள் தமது சர்வாதிகார ஆட்சியினை நிலைநிறுத்தினர்.

1982 அக்டோபர் 20 ந் திகதி நடாத்தப்படவிருந்த ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அக்டோபர் 1 ந் திகதி முதல் 1983 ஜனவரி மாதம் வரையான காலப்பகுதியில் எதிர்க்கட்சிகளின் பத்திரிகைகள் அனைத்தும் அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்டது. அதற்கமைய இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் சுதந்திரக் கட்சியினுள் செயற்பட்ட இடதுசாரிகளான விஜே குமாரணதுங்க மற்றும் ஓ.சி அபேகுணசேகரா ஆகியோரை கைது செய்து சிறையில் அடைத்தார். அக்காலப்பகுதியில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டிருந்தமையால் அவரால் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியவில்லை அதற்கமைய தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தது.

## ஜனாதிபதித் தேர்தல் (20.09.1982)

| வேட்பாளர்கள் | அரசியல் கட்சி | வாக்களித்தவர்கள் | விகிதம் |
|---|---|---|---|
| திரு ஜே.ஆர் ஜயவர்தன | ஐ.தே.கட்சி | 3.450.811 | 52.91% |
| ஹெக்டர் கொபேகடுவ | சிறீ.ல.சு.கட்சி | 2.548.438 | 39.07% |
| றோஹன விஜேவீர | ஜே.வி.பி | 273.428 | 4.19% |
| குமார் பொன்னம்பலம் | அ.இ.த.காங்கிரஸ் | 173.934 | 2.67% |
| கொல்வின் ஆர்.டி.சில்வா | ல.ச.சமாஜ கட்சி | 58.531 | 0.90% |
| வாசுதேவ நாணயக்கார | ந.ச.சமாஜ கட்சி | 17.005 | 0.26% |
| செல்லுபடியான வாக்குகள் | | 6.522.147 | |
| நிராகரிக்கப்பட்டவை | | 80.470 | |

21.07.1977ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது (168) உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருந்த பாராளுமன்றத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை (225) ஆக அதிகரிப்பதுடன் மாவட்டரீதியான விகிதாசாரப் பிரதிநிதுத்துவ தேர்தல் முறையினையும் அமுல்படுத்தும் நோக்குடன் (24.05.1988ல்) மேற்கொள்ளப்பட்ட 14வது அரசியல் திருத்தத்திற்கமைய அதனை திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் நடைமுறைப்படுத்தினார். ஆனால் தாமே



படிப்பகம்

www.padippakam.com

நடைமுறைப்படுத்திய தேர்தல் முறைமையின்கீழ் பொதுத்தேர்தல் ஒன்றினை நடாத்தமுடியாத அவர் 1982 டிசம்பர் மாதம் 22 ந் திகதி நாடுதழுவியரீதியில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை மக்கள் தீர்ப்பு என்னும் பெயரில் நடாத்தியதன்மூலம் ஏழு மாதகால இடைவெளியில் நடாத்தப்படவிருந்த (1983 யூலை) பாராளுமன்றப் பொதுத் தேர்தலினை நடாத்தாது 12 வருடகாலம் (1977 முதல் 1989வரை) (8) உறுப்பினர்களைக்கொண்ட எதிர்க்கட்சியுடன் (ஸ்ரீ.ல.சு.கட்சி) பாராளுமன்றத்தினை ஐ.தே.கட்சியினர் ஆளுமைசெய்தார்.

## சர்வஜன வாக்கெடுப்பு (22.12.1982)

| மக்கள் தீர்ப்பு | ஆதரிப்பவர்களின் சின்னம் விளக்கு | எதிர்ப்பவர்களின் சின்னம் குடம் |
|---|---|---|
| ஆதரவானவர்கள் | 3.141.223 –54.66% | |
| எதிரானவர்கள் | | 2.605.983 –45.34% |

பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த நிலையில் (23.07.1983ல்) யாழ்ப்பாணம் திருநெல்வேலி என்னுமிடத்தில்வைத்து இராணுவ வாகனம் ஒன்றினை தமிழீழ விடுதலைப் புலிகள் கண்ணிவெடியின்மூலம் தாக்கியதில் (13) இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இச்சம்பவமே இலங்கை வரலாற்றில் அதிகூடிய இராணுவத்தினர் முதல் தடவையாக கொல்லப்பட்ட சம்பவமாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து கொலையுண்ட இராணுவத்தினரின் உடல்கள் கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் கொழும்பிலுள்ள கனத்தை மயானத்தில் நல்லடக்கஞ்செய்யப்பட்டது. மேற்படி சம்பவத்திற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக 1983 ம் ஆண்டு யூலை மாதம் 25 மற்றும் 27 ந் திகதிகளில் தெற்கில் பாரிய இனக்கலவரமொன்றினை ஐ.தே.கட்சியினர் உருவாக்கியதற்கமைய அப்பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் வர்த்தகநிலையங்கள் பெரும்பாலானவை சூறையாடப்பட்டதுடன், குடியிருப்புக்களும் கொள்ளையிடப்பட்டு தீயிட்டு நாசமாக்கப்பட்டன.

இச்சம்பவத்தின்போது (600) அறுநூறு தமிழ் மக்கள்வரை கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்படாத புள்ளிவிபரங்கள் தெரிவித்துடன் தெற்கில் வாழ்ந்த. தமிழ் மக்கள் (6லட்சம் பேர்வரை) அப்பிரதேசங்களிலிருந்து வெளியேறுவதற்கான நிலையினையும் உருவாக்கினார். அம்மக்களை வடக்கு,



படிப்பகம்

www.padippakam.com

கிழக்கு மாகாணங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கான கப்பல் வசதி இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டமையும் இங்கு முக்கியமானதாகும். அத்துடன் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு அரச பாதுகாப்பில் வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் (53பேர்) அரசாங்க அமைச்சர் ஒருவரின் தலைமையில் வாள்கள், கத்திகள்போன்ற கூர்மையான ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்டார்கள்.

## 1977 - 1989 தமிழர் விடுதலைக் கூட்டணி

தமிழ் மக்களின் உரிமைகளையும், நலன்களையும் உறுதிசெய்வதற்காக உருவாக்கப்பட்ட தமிழ் அரசியல் திரு.தந்தைசெல்வா அவர்களின் மறைவினைத் தொடர்ந்து தமிழ் அரசியல்வாதிகளுக்கான தொழில் பெற்றுக்கொள்ளும் ஸ்தாபனமாக மாற்றப்பட்டது. அதற்கமைய தமிழ் மக்களின் வாக்குகள் விலைப்பொருளாக மாறியமையை பின்வரும் சான்றுகள்மூலம் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

பலதரப்பட்ட அரசியல் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் தம்வசம் கொண்டு செயற்பட்ட கட்சிகள் கடந்தகால கசப்பான அனுபவங்களை உணர்ந்து ஒன்றுபட்ட நிலையில் உருவாக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தந்தை செல்வா அவர்களின் மறைவையடுத்து திரு.சிவசிதம்பரம் அவர்களைத் தலைவராகவும் திரு.அமிர்தலிங்கம் அவர்களை செயலாளராகவும் தெரிவுசெய்து கட்சியை புதிய தலைமை பொறுப்பேற்றது. அதனைத் தொடர்ந்து 1977 பொதுத் தேர்தலில் வட கிழக்கில் உள்ள 24 தொகுதிகளிலும் தமது வேட்பாளர்களை நிறுத்தினர்.

கூட்டணியினரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் ஈழத்தைப் பெறுவதற்கான ஒரு ஆணையாகவே இத்தேர்தலை தமிழ்மக்கள் கருத்திற்கொண்டு வாக்களிக்கவேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர். இந்நிலையில் கடந்த (25) இருபத்தைந்து வருடகால அரசியலில் மேற்கொள்ளப்பட்ட போட்டி அரசியல் பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்ததாக இத்தேர்தல் அமைந்தது. குறிப்பாக வடபகுதியில் பல தரப்பட்ட தமிழ் கட்சிகள் மத்தியிலிருந்த எதிரும் புதிருமான தேர்தல் பிரச்சாரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டநிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் சோபை இழந்ததாக காட்சியளித்தது.



படிப்பகம்

www.padippakam.com

தந்தை செல்வா அவர்களின் (27.04.1977) மறைவின் பின்னர் கட்சியின் புதிய தலைமையினை ஏற்கும் தகுதி மட்டுநகர் பாராளுமன்ற உறுப்பினராக பதவிவகித்த திரு செ. இராசதுரை அவர்களுக்கே இருந்தது. எனினும் தனது சொந்தத் தொகுதி மக்களாலேயே (1970ம்) ஆண்டுப் பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களான திரு.அ.அமிர்தலிங்கம் அவர்கள் கட்சியின் செயலாளராகவும், திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் கட்சியின் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்துவரவிருந்த (1977) தேர்தலில் தமது தலைமைப் பதவிகளை தக்கவைத்துக்கொள்ள, தத்தமது வெற்றியினை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டிய தேவை இவர்களுக்கு இருந்தது. அதுமட்டுமன்றி கட்சியின் தலைமைப் பொறுப்பினை கையேற்கக்கூடிய முழுமையான தகைமையையும் கொண்டவராக காணப்பட்ட மட்டுநகர் இராசதுரை அவர்கள் (1977) பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டே ஆகவேண்டுமென அமிர்தலிங்கம் போன்றவர்கள் பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்டனர்.

சொந்தக் கட்சியினுள்ளேயே இடம்பெற்ற குழிபறிப்புகளின் காரணமாக கிழக்கிலங்கையிலே தமிழரசுக்கட்சியின் கதாநாயகனாக விளங்கியவரும் மட்டுநகர் தொகுதியின் முதல்வரும் 25 வருடகாலம் தொடர்ச்சியாக அத்தொகுதியின் பிரதிநிதியாக சேவையாற்றியவருமான திரு. செ.இராசதுரை அவர்கள் தலைமைப்பீடத்தினால் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டார். இரட்டை அங்கத்தவர் தொகுதியான அத்தொகுதியில் திரு.இராசதுரை அவர்களுக்கு எதிராக திரு.காசி ஆனந்தன் அவர்கள் களமிறக்கப்பட்டார் அதற்கமைய தமிழரசுக்கட்சியின் சின்னமான (வீடு) சின்னம் அவருக்கு வழங்கப்பட்டது இந்த வேட்பாளர் நியமனம் பற்றி மட்டுநகர் கூட்டணியின் கட்சிக் கிளைகளின் ஆலோசனையோ அன்றி வாக்காளர்களை அழைத்து அவர்களின் அபிப்பிராயங்களோ பெறாதநிலையிலேயே நியமனம் வழங்கப்பட்டதாக பலரும் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந்தனர்.

அத்துடன் திருமலை வேட்பாளர் நியமனத்திலும் மக்களின் கருத்துக்கு மதிப்பளியாது தலைமைப்பீடம் தன்னிச்சையாக நடந்துகொண்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்து தொகுதிகளிலும் உதயசூரியன் சின்னத்தில் வேட்பாளர்களை நிறுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி மட்டக்களப்பில் மட்டும் கூட்டணியின் சின்னமான உதயசூரியன் சின்னத்திலும்,



படிப்பகம்

www.padippakam.com

தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்திலுமாக இருவரை நிறுத்தியது. மட்டக்களப்பு மக்களை இப்பிரித்தாளும் தந்திரத்தினூடாக ஏமாற்றி திரு இராசதுரை அவர்களைத் தோற்கடிக்க திரு. அமிர்தலிங்கம் அவர்கள் நகர்த்திய காயே வீட்டுச் சின்னமாகும்.

திருமலை வேட்பாளர் நியமனத்தில் தந்தை செல்வா அவர்கள் உயிருடன் இருக்கும்போதே திரு.சம்பந்தன் அவர்களை. அடுத்து நடைபெறும் பொதுத்தேர்தலில் திருமலையின் வேட்பாளராக நிறுத்துமாறு கூறியதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் திரு. அமிர்தலிங்கம் அவர்களால் புனைக்கதை புகுத்தப்பட்டது. இவ்வாறாக கிழக்குத் தலைமைகளை ஓரங்கட்டும் முயற்சியினை திரு. அமிர்தலிங்கம் போன்றவர்கள் மேற்காண்ட போதும் மட்டக்களப்புத் தொகுதியில் திரு. இராஜதுரை அவர்களே வெற்றிபெற்றார். இச்சம்பவத்தின் எதிரொலியாக திரு. இராஜதுரை அவர்கள் யாழ்ப்பாண மேலாதிக்க தலைமைகளின் ஆதிக்க வெறியினை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்து வெளியேறி அன்றைய தேர்தலில் ஆட்சியமைத்த திரு. ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசுடன் இணைந்து செயற்பட்டார். அதேபோல இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவில் தொகுதியில் த.வி.கூட்டணியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற திரு எம்.சி. கனகரெத்தினம் அவர்களும் யாழ் தலைமையில் நம்பிக்கை இழந்தநிலையில் அவரும் கட்சியிலிருந்து வெளியேறி அரசுடன் இணைந்து செயற்படலானார்.

## திருமலைத் தொகுதி மக்களின் தேவைகளை (1972 முதல்) பொறுப்பேற்றமைக்கான தங்கத்துரையின் பின்னணி என்ன?

இக்காலப்பகுதியில் 1970 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக திரு. பா. நேமிநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அவர் வழமையாகவே மது அருந்தும் பழக்கத்தினை கொண்டிருந்தவர். அத்துடன் அவருக்குச் சொந்தமான தங்குமிட வசதிகளுடனான ( Liqour Shop) (பார்) வசதியும் அவரின் வீட்டிற்கு அருகாமையிலேயே அமைந்திருந்தது. தொகுதி மக்கள் அவரைச் சந்திக்கச் சென்றால் ஐயா தூங்குகிறாரென அவரின் மனைவி



படிப்பகம்

www.padippakam.com

வழமையாகவே கூறிவிடுவதாக திருமலை மக்கள் கட்சியின் தலைமைப்பீடத்திற்கு தமது அதிருப்தியினை தெரிவித்திருந்தனர். இது விடயம் பல தடவைகள் தலைமைப்பீடத்தின் கவனத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்ட நிலையில் அதற்கான தீர்வினை எட்டுவதற்காக பொதுச்சபை கூட்டப்பட்டது.

பொதுச்சபையில் இதுவிடயம் ஆராயப்பட்ட நிலையில் திருமலைத் தொகுதி மக்களினதும் தேவைகளை நிறைவுசெய்வதற்கு திரு. தங்கத்துரை அவர்களை தலைமைப்பீடம் பரிந்துரைத்ததற்கமைய திருமலைத் தொகுதியின் பொறுப்பும் அவருக்கு வழங்கப்பட்டது. அதற்கமைய அவர் திருமலையில் திருமணம் செய்திருந்த நிலையிலும் திருமலைத் தொகுதியில் வாழ்ந்த மக்களுக்கும் தமது சேவையினை குறைவற்ற நிலையிலேயே நிறைவேற்றினார். இதுவிடயத்திலுள்ள உண்மை நிலையினை அறிந்த ஒருவரான திரு. ஆனந்தசங்கரி அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதனால் அவர் இதுவிடயத்தினை நினைவில் வைத்திருப்பாரென நாம் நம்புகின்றோம். இருந்தும் இன்று அவர் (2011) திரு.இரா சம்பந்தன் அவர்களுடன் அரசியலில் சங்கமமாகிவிட்டமையால் உண்மையினை முழுமையாக அறிந்த அவர் இன்று என்ன கூறுவாரோ தெரியவில்லை.

பொதுத்தேர்தல் முடிவுகளின்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் த.வி கூட்டணியினர் 18 பிரதிநிதிகளை தம்வசம் பெற்றுக் கொண்டபோதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் முன்வைக்கப்பட்ட தமிழீழக்கோரிக்கை தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்டது. இந்நிலையில் 1977ம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சியினர் (1,855,331) வாக்குகளைப் பெற்றபோதும் தொகுதி ரீதியாக குறைவான ஆசனங்களையும் (8) (421,486) வாக்குகளைப் பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியினர் (18) ஆசனங்களையும் பெற்றிருந்தமையால் பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரும்பான்மை பெற்ற கட்சியாக தமிழர் விடுதலைக்கூட்டணி விளங்கியது அதற்கமைய எதிர்க்கட்சியின் தலைமைப்பதவி த.வி.கூட்டணியினருக்கு வழங்கப்பட்டது. பாராளுமன்றத்திலுள்ள 168 உறுப்பினர்களில் தனிக்கட்சி பெரும்பான்மையான 140 உறுப்பினர்களை ஐ.தே.கட்சியினர் பெற்றிருந்தமையால் அவர்களின் ஆட்சிக்காலத்தின்போது பாராளுமன்றம் சர்வாதிகாரிகளின் கோட்டையாகவே அமைந்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது வடக்கு கிழக்குமாகாண தமிழ்வாக்காளர்களின் எண்ணிக்கை 8,35,285 என புள்ளிவிபரங்கள் வெளிக்காட்டின. இத்தொகையினரில் 4,21,486 தமிழ் வாக்காளர்கள் மட்டுமே தமிழ் ஈழக்கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர். இந்நிலையில் தமிழீழக்கோரிக்கையை தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தெளிவாக வெளிக்காட்டப்பட்டது. மாகாணரீதியாக தமிழ் மக்களால் தமிழர் விடுதலைக்கூட்டணியினருக்கு அளிக்கப்பட்ட வாக்கு விகிதம் பின்வருமாறு அமைந்தது.

## தமிழீழ கோரிக்கையும் தேர்தல் முடிவுகளும். வடமாகாணம்

| தொகுதி | விகிதம் | மொத்த வாக்காளர்கள் | த.வி.கூ. வாக்களித்தவர்கள் | மொத்தமாக வாக்களித்தவர்கள் | வெற்றிபெற்றோர் |
|---|---|---|---|---|---|
| ஊர்காவற்றுறை | 63.74% | 36,372 | 17,640 | 27,673 | கே.பி இரத்தினம் |
| வட்டுக்கோட்டை | 70.18% | 40,684 | 23,384 | 33,456 | ரி.திருநாவுக்கரசு |
| காங்கேசன்துறை | 85.41% | 43,907 | 31,155 | 36,695 | அ.அமிர்தலிங்கம் |
| மானிப்பாய் | 83.99% | 41,373 | 27,550 | 33,001 | வி.தர்மலிங்கம் |
| கோப்பாய் | 77.20% | 41,824 | 25,840 | 33,619 | எஸ்.கதிரவேற்பிள்ளை |
| உடுப்பிட்டி | 63.44% | 36,955 | 18,768 | 29,706 | ரீ. இராசலிங்கம் |
| நல்லூர் | 40.205% | 29,858 | 33,529 | | எம்.சிவசிதம்பரம் |
| பருத்தித்துறை | 55.91% | 28,447 | 12,989 | 23,306 | கே.துரைரெத்னம் |
| சாவகச்சேரி | 63.27% | 36,956 | 20,028 | 31,748 | வி.என் நவரெத்னம் |
| யாழ்ப்பாணம் | 56.62% | 34,865 | 16,251 | 28,779 | வி.யோ?கேஸ்வரன் |
| கிளிநொச்சி | 73.42% | 26,670 | 15,607 | 21,314 | வி.ஆனந்தசங்கரி |
| மன்னார் | 51.58% | 31,767 | 15,141 | 29,436 | பி.எஸ்.சூசைதாசன் |
| முல்லைத்தீவு | 52.36% | 24,698 | 10,261 | 19,672 | எக்ஸ்.செல்லத்தம்பு |
| வவுனியா | 59.02% | 28,450 | 13,821 | 23,496 | ரீ.சிவசிதம்பரம் |
| மொத்தம் | | 493,173 | 278,293 | 405,430 | |



படிப்பகம்

www.padippakam.com

## கிழக்கு மாகாணம், புத்தளம் உட்பட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திருமலை | 51.74% | 35,778 | 15,144 | 29,397 | இரா சம்பந்தன் |
| மூதூர் | 27.00% | 30,380 | 7,520 | 27,965 | எஸ்.எம் மக்கீன் |
| கல்குடா | 43.07% | 33,095 | 12,595 | 29,459 | எஸ்.சம்பந்தமூர்த்தி |
| மட்டுநகர் | 24.70% | 63,039 | 26,648 | 109,509 | செ.இராசதுரை |
| மட்டுநகர் | 20.80% | | 22,443 | | காசி ஆனந்தன் |
| மட்டுநகர் | | | 25,345 | | எம்.எல்.அஹமட் பரீத் |
| பட்டிருப்பு | 49.17% | 35,909 | 15,877 | 32,532 | பி.கணேசலிங்கம் |
| சம்மாந்துறை | 34.65% | 27,308 | 8,615 | 29,944 | எச்.எல்.எம்.ஹாசிம் |
| சம்மாந்துறை | | | 13,642 | | எம்.ஏ.அப்துல் மஜீத் |
| அம்பாறை | | | 24,581 | | பீ.தயாரத்ன |
| கல்முனை | 27.38% | 28,826 | 7,093 | 26,005 | ஏ.எம் சம்சுதீன் |
| கல்முனை | | | 12,636 | | ஏ.ஆர்.மன்சூர் |
| பொத்துவில் | 26.97% | 49,691 | 23,990 | 89,871 | எம். கனகரெத்தினம் |
| பொத்துவில் | | | 30,315 | | எம்.ஏ.எம்.ஜலால்தீன் |
| புத்தளம் | 10.52% | 37,177 | 3,268 | 31,205 | ஐ.எம் இலியாஸ் |
| மொத்தம் | | 342,112 | 143,193 | 405,907 | |

மேற்கூறிய தொகுதிகளில் இரட்டை அங்கத்தவர் தொகுதிகள் இரண்டு உள்ளமையால் அங்குள்ள வாக்காளர்களுக்கு ஒவ்வொருவருக்கும் தலா இரு வாக்குகள் உள்ளமை அவதானிக்கப்படவேண்டியது. (தொகுதிகள் –மட்டுநகர், பொத்துவில் என்பனவையாகும்)அன்றைய புள்ளி விபரங்களுக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மொத்த வாக்காளர்கள் – 835,285 இரு மாகாணங்களிலும் வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கை – 811,387 த.வி.கூட்டணியினருக்கு வாக்களித்தவர்கள் 421,486 இவர்களில் மட்டுநகர் மற்றும் பொத்துவில் ஆகிய தொகுதிகளிலிருந்து இரு வாக்குச்சீட்டுக்களை பாவித்தவர்களின் எண்ணிக்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

எது எவ்வாறாயினும் வடமாகாணத்தில் வாக்களித்த 405,430 வாக்காளர்களில், 278,293 வாக்காளர்கள் மட்டுமே த.வி.கூட்டணியினருக்கு வாக்களித்துள்ளார்கள் இந்த எண்ணிக்கை வடக்கில் 68.06% மானவர்கள் த.வி.கூட்டணியினருக்கு வாக்களித்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளது.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக வாக்களித்த 405,907 வாக்காளர்களில் 143,193 வாக்காளர்கள் மட்டுமே த.வி.கூட்டணியினருக்கு



படிப்பகம்

www.padippakam.com

வாக்களித்துள்ளார்கள். இந்த எண்ணிக்கை 35.02% மானவர்கள் த.வி.கூட்டணியினருக்கு வாக்களித்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளது. மேற்படி புள்ளிவிபரங்களுக்கமைய (27) பிரதிநிதிகளை உள்ளடக்கிய வடக்கு,கிழக்கு மற்றும் புத்தளம் உள்ளிட்ட தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய த.வி.கூட்டணியினர் (18) பிரதிநிதிகளை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்டரீதியாகப் பெற்ற வாக்குகளும் தமிழீழக் கோரிக்கையினை ஆதரிக்காது களமிறங்கிய எனைய அரசியல் கட்சிகள் பெற்ற வாக்குகளும் பின்வருமாறு அமைந்துள்ளது.

| **வட மாகாணம்** | |
|---|---|
| த.வி.கூட்டணி | 2,78,293 |
| சுயேச்சை | 85,097 |
| ஐ.தே.கட்சி | 30,010 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 5,526 |
| எதிரணியினர் பெற்ற வாக்குகள் | 120,633 |

| **வட மாகாணம்** | |
|---|---|
| யாழ்ப்பாணம் | 71.81% |
| மன்னார் | 51.44% |
| வவுனியா | 58.82% |
| முல்லைத்தீவு | 52.16% |

| **கிழக்கு மாகாணம்** | |
|---|---|
| த.வி.கூட்டணி | 1,43,195 |
| ஐ.தே.கட்சி | 1,33,812 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 94,265 |
| எதிரணியினர் பெற்ற வாக்குகள் | 2,28,077 |

| | |
|---|---|
| திருகோணமலை | 27.18% |
| மட்டக்களப்பு | 32.14% |
| அம்பாறை | 20.25% |



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மக்களின் வரலாற்றினை குட்டிச்சுவராக்கி தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தினையும் நாசஞ் செய்த பெரும்பங்கு இலங்கையில் வெளியகும் வீரகேசரி, தினக்குரல், உதயன் போன்ற பத்திரிகைகளையும், சக்தி தொலைக்காட்சியையுமே சாரும். உதாரணமாக 1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் தமிழீழக் கோரிக்கையினை முன்னிறுத்தி போட்டியிட்ட தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த மக்களில் (95%) மானவர்கள் அக்கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தாக வீரகேசரி தனது (03.02.2008ம்) ஆண்டின் வார இதழில் (13ம் பக்கத்தில்) செய்தி வெளியிட்டிருந்தது. இச்சம்பவம் தமிழ்மக்கள் மத்தியிலும், தமிழ் இளைஞர்கள் மத்தியிலும் பொய்களைப் புகுத்தி அம்மக்களை உசுப்பேற்றி ஆயுத வெறிக்கு ஆளாக்குவதாகவே அமைந்தது. இதுபோன்ற பல சம்பவங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

தனிநாட்டுக்காக போராடிய இந்தோனேசியாவின் கிழக்குத்தீவான கிழக்குத்தீமோர் சுதந்திரத்திற்காக பல வருடங்கள் போராடி இறுதியில் அங்கு வாழ்ந்த மக்களின் கருத்துக்கணிப்பை அறிவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று 30.8.1999ல் அங்கு நடாத்தப்பட்டது அங்கு வாழ்ந்தமக்களில் 96 சதவீதமான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டு வாக்களித்தனர் இவர்களில் 78.5 சதவீதமான மக்கள் தனிநாட்டுக்கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர் மக்களால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய ஐக்கிய நாடுகள்சபையினரால் அத்தீர்ப்பு அங்கீகரிக்கப்பட்டு கிழக்குத்தீமோர் தனிநாடாக பிரகடனப்படுத்தப்பட்டு 20.05.2002ல் சுதந்திரம் பெற்றதற்கமைய சுதந்திரத்திற்காக போராடிய திரு குஸ்மாவோ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார் நாட்டின் நிலப்பரப்பு 14,615 சதுரகிலோ மீற்றராகவும் மக்களின் எண்ணிக்கை 740,000 ஆகவும் அன்று அமைந்திருந்தது.

## திரு. அருணாசலம் தங்கத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு



1936 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ந் திகதி இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மூதூர் பகுதியில் அமைந்துள்ள கிளிவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்த அருணாசலம் தங்கத்துரை அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை கிளிவெட்டி அரசினர் தமிழ்க் கலவன்



படிப்பகம்

www.padippakam.com

பாடசாலையிலும், அதனைத் தொடர்ந்து 5ம் வகுப்பிற்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தி மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் பின்னர் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் தமது கல்வியினைக் கற்றார். படிப்பை முடித்த பின்னர் இரத்தினபுரி, கொழும்பு மற்றும் திருமலை மாவட்டத்திலமைந்துள்ள சோமபுரம் போன்ற இடங்களில் நீர்ப்பாசன திணைக்களத்தின் காரியாலயங்களில் பிரதம லிகிதராக பணியாற்றினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து இரட்டை அங்கத்தவர் தொகுதியாக அப்போது இருந்த மூதூர் தொகுதியில் 1970 ஆம் ஆண்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தங்கத்துரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவராகவும், அக்கட்சியின் மலையக தோட்டத் தொழி லாளர்களின் தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டில் மூதூர் தேர்தல் தொகுதி ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதியாக மாற்றப்பட்டது. சிங்கள மக்களுக்காக சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை தேர்தல் தொகுதி, தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதியாகவும். மூதூர் தேர்தல் தொகுதி முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாக கொண்ட தேர்தல் தொகுதியாகவும். சேருவில தேர்தல் தொகுதி சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட தேர்தல் தொகுதியாகவும் இருந்தமையால் திரு. தங்கத்துரை அவர்கள் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் மூதூர் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட முடியவில்லை.

## புதிய சேருவில தேர்தல் தொகுதியின் உருவாக்கமும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதரவிற்கான காரணிகளும்

இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தல் இலங்கை சுதந்திரமடைவதற்கு ஏறக்குறைய (6) மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதாவது 1947 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23 ந் திகதி முதல் செப்டம்பர் 20 ந் திகதி வரை 29 நாட்கள் முதலாவது தேர்தல் நடாத்தப்பட்டது. அதற்கமைய 1947 ம் ஆண்டு முதல் 1970 ம் ஆண்டுவரை மூதூர் வாழ் தமிழ் மக்கள்



படிப்பகம்

தமக்கான பிரதிநிதி ஒருவரை தமது இனத்திலிருந்து தெரிவுசெய்யமுடியாத நிலையே இருந்தது. 1947, 1952, 1956, 1960, 1965 மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் மூதூர் தொகுதியின் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியல் பின்வருமாறு அமைந்திருந்தது.

அன்று தமிழரசுக் கட்சியில் பாராளுமன்ற உறுப்பினருக்கான வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவதானால் அவர்கள் சட்டத்தரணிக்கான தகைமைகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பது எழுதப்படாத நடைமுறையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அத்தகைமையினை அன்று பெறாதிருந்த திரு. தங்கத்துரை அவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த த.அ.கட்சியினரின் பிரதிநிதிகளில் மிகவும் இளம் (34) வயதினராக காணப்பட்டார். அதனால் கறுப்புச் சட்டை அணிந்த தமிழர் தரப்பு கனவான்கள் சிலரால் அவர் வித்தியாசமான பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அதனை சவாலாக ஏற்ற அவர் பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்த காலப்பகுதியிலேயே சட்டக் கல்லூரியிலும் அதற்கான படிப்பினை ஓய்வு நேரங்களில் மேற்கொண்டதற்கமைய (1980) ஜனவரி மாதம் அதற்கான பரீட்சையில் தேர்ச்சிபெற்று சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தார்.

| | |
|---|---|
| 1947 ஜனாப்.ஏ.ஆர்.ஏ.எம் அபூபக்கர் | ஐக்கிய தேசியக் கட்சி – கிண்ணியா |
| 1952 ஜனாப்.எம்.ஈ.எச். முகம்மதலி | சுயேச்சை – கிண்ணியா |
| 1956 ஜனாப்.எம்.ஈ.எச். முகம்மதலி | சுயேச்சை – கிண்ணியா |
| 1960 திரு.ரீ.ஏகாம்பரம் | த.அ.கட்சி – திருகோணமலை |
| 1960 ஜனாப்.ஏ.எல் அப்துல் மஜீத் | ஸ்ரீ.ல.சு.கட்சி – கிண்ணியா |
| | 1960 ம் ஆண்டு முதல் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி |
| 1965 ஜனாப்.எம்.ஈ.எச் முகம்மதலி | த.அ.கட்சி இருவரும் – கிண்ணியா |
| 1965 ஜனாப்.ஏ.எல் அப்துல் மஜீத் | ஸ்ரீ.ல.சு.கட்சி |

மேற்படி புள்ளிவிபரங்களுக்கமைய 23 வருடங்களின் பின்னர் மூதூர் தொகுதி வாழ் தமிழ் மக்கள் தமக்கென தமது இனத்தவரான திரு. தங்கத்துரை அவர்களை தெரிவுசெய்ததன்மூலம் தமக்கான பல பலாபலன்களை அனுபவித்தனர்.

ஆனால் இந்நிலைமையினை நீடிப்பதற்கு யாழ் மேலாதிக்க அரசியல் வாதிகள் அனுமதியளிக்கவில்லை. 1970 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில்

தமிழ் மக்களின் சாதுரியம்மிக்க தலைவர்களென தமிழ் மக்களால் கருதப்பட்டவர்களான த.அ.கட்சியில் (2) இருவரும் தமிழ் காங்கிரஸ் கட்சியில் (3) மூவரும் தோல்வியடைந்தார்கள். தோல்வியடைந்தது மட்டுமன்றி யாழ்ப்பாணத் தொகுதியிலும், வட்டுக்கோட்டையிலும், நல்லூரிலும் வெற்றிபெற்ற மூவரும் அன்றைய ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கத்தில் இணைந்தார்கள். அத்துடன் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் மேலும் இரு செனட் சபை உறுப்பினர்கள் அதாவது திரு. எம்.சி. சுப்பிரமணியம், திரு. சி.குமாரசூரியர் போன்றோரும் வட மாகாணத்திற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை இலங்கை அரசியல் வரலாற்றில் வடமாகாணத்தில் புதியதோர் திருப்பம் நிகழ்ந்தது. ஐவர் வடமாகாணத்தில் ஸ்ரீ.ல.சு கட்சியின் உறுப்பினர்களாக அன்று செயற்படும் நிலை உருவானது.

இந்நிலையில் மேற்கூறிய த.அ.கட்சி, த.கா.கட்சியினரின் எதிர்காலம் கேள்விக்குரியதாக காணப்பட்டது. மேற்படி சம்பவமே (1976 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதியன்று) ஏற்கனவே கீரியும், பாம்புமாக செயற்பட்ட கட்சிகள் இரண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் பெயரில் இணைந்து கூட்டணியினை உருவாக்கவேண்டிய நிலைக்கு ஆளானார்கள். அந்த இணைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோது வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் அன்றைய பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்த திரு எக்ஸ் செல்லத்தம்பு அவர்களிடம் (1970ல்) தோல்வியுற்ற திரு. ரீ. சிவசிதம்பரம் அவர்களுக்கு அடுத்து இடம்பெறும் பொதுத் தேர்தலில் வவனியாத் தொகுதியினை விட்டுத்தந்தால் மட்டுமே கூட்டணிபற்றி பேச முடியுமென தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நிபந்தனை ஒன்றினை முன்வைத்தனர்.

இந்நிலையில் அதற்கான நிரந்தரத்தீர்வினைப் பெறுவதற்கு திரு. ஜே.ஆர் ஜயவர்தனாவுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை மேற்கொண்டு முல்லைத்தீவிற்கு தனியான தேர்தல் தொகுதி ஒன்றினை வழங்குமாறு கோரிக்கை விடுவதென இரு கட்சிகளின் முக்கியஸ்தர்களாலும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கான திகதியும் பெறப்பட்டது. இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் திரு. அமிர்தலிங்கம், திரு சிவசிதம்பரம் ஆகியோர் பங்குகொண்டனர். சந்தர்ப்பத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதில் வல்லவரான திரு. ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகை தந்திருந்தவர்களின் கருத்தினை முதலில்

www.padippakam.com

கேட்டறிந்தாராம். அதனைச் செவிமடுத்த ஜே.ஆர். அவர்கள் திருமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியினை ஒரு தேர்தல் தொகுதியாக பிரகடனப்படுத்துவதற்கு நீங்கள் உங்களின் பூரண சம்மதத்தினை தெரிவிப்பீர்களேயானால் முல்லைத்தீவிற்கு தனியான தேர்தல் தொகுதி ஒன்றினை வழங்குவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாதென்னும் தமது நிலைப்பாட்டினை தெரிவித்தபோது மேற்படி பேச்சுவார்த்தையில் பங்குகொண்டவர்கள் தமது சம்மதத்தினை தெரிவித்ததற்கமைய மூதூர் தேர்தல் தொகுதி இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சேருவில என்னும் புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.

அன்றைய நிலையில் (2,529 ச.கி மீற்றர்) நிலப்பரப்பினை உள்ளடக்கியதாக இருந்த திருகோணமலை மாவட்டத்தின் செழிப்புமிக்க பகுதிகளான (1598 ச.கி மீற்றர்) நிலப்பரப்பினை சேருவில தொகுதிக்கு கையளித்துவிட்டே முல்லைத்தீவு தொகுதியினை வடமாகாண அரசியல்வாதிகள் பெற்றனர் என்பது முக்கியமான விடயமாகும்.

## 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

1970ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக திரு.பா.நேமிநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். அவர் தெரிவாகி சிலமாதகாலப் பகுதியிலேயே அவரின் தொகுதி மக்களுடனான செயற்பாடுகள் குறித்து தலைமைப்பீடத்திற்கு பலர் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். காரணம் அவர் சற்று அதிகமாக மது பாவிப்பதனால் மக்களுக்கான பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வமற்றவராக மாற்றமடைந்தார். இந்நிலையில் கட்சியின் பொதுச்சபையில் அவரது செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்கமைய திருமலைத் தொகுதி மக்களின் தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பினை திரு தங்கத்துரை அவர்களிடம் ஒப்படைப்பதாக பொதுச் சபை மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய திருமலை மக்களின் தேவைகளையும், நலன்களையும் கவனிக்கும் பொறுப்பு திரு.தங்கத்துரை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையினை செவ்வனே நிறைவேற்றியமையால் 1977ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில்



படிப்பகம்

www.padippakam.com

திரு.தங்கத்துரை அவர்களையே திருமலைத் தொகுதியின் வேட்பாளராக நியமிக்குமாறு அத்தொகுதியின் வாக்காளர்கள் அன்றைய கட்சியின் தலைமைப்பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால் தொகுதி மக்களின் கருத்துக்களுக்கும், வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்காத திரு. அமிர்தலிங்கம் அவர்கள்(1977) ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்படவேண்டிய திரு. தங்கத்துரை அவர்களுக்கு எதிராக திரு. அ.அமிர்தலிங்கம் அவர்களின் அதிகாரம் பிரயோகிக்கப்பட்டு திருமலை மக்களின் விருப்பிற்கு மாறாக திரு இரா சம்பந்தன் அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அதுமட்டுமன்றி மட்டுநகர் தொகுதியில் திரு. செ.இராசதுரை அவர்களை தோற்கடிப்பதற்காக (காசி ஆனந்தன்) என அழைக்கப்படும் திரு. காத்தமுத்து சிவானந்தன் என்பவரை அமிர்தலிங்கம் அவர்கள் களமிறக்கினார். ஆனால் அவரால் களமிறக்கப்பட்டவர் தோல்வியுற்ற நிலையில் செ.இராசதுரை அவர்கள் வெற்றிபெற்றார். இச்சம்பவமே திரு இராசதுரை அவர்கள் திரு. ஜே.ஆர் ஜயவர்தனா தலைமையிலான அரசாங்கத்துடன் இணைவதற்கான தேவையினை உருவாக்கியது. இவை இரு விடயங்களுக்குமான வாய்ப்பாக திரு செல்வநாயகம் அவர்களின் மறைவே (27.04.1977) வழியமைத்தது. திருமலைத் தொகுதியின் வேட்பாளராக திரு சம்பந்தன் அவர்களை களமிறக்கியதற்கு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பின்வரும் காரணத்தினை அன்று தெரிவித்திருந்தார். தந்தை செல்வா அவர்கள் இறப்பதற்கு முன்னர் திருமலைத் தொகுதி தொடர்பாக தம்முடன் கதைத்தபோது எதிர்வரும் தேர்தலில் அத்தொகுதிக்கு திரு. இரா சம்பந்தன் அவர்களையே வேட்பாளராக நிறுத்தவேண்டுமென தெரிவித்தாராம். இது எவரும் நம்பக்கூடியதான கருத்தாக அமையவில்லை. காரணம் எற்கனவே (1972)முதல் திருகோணமலைத் தொகுதி மக்களினது நலன்களையும், தேவைகளையும் நிறைவுசெய்த ஒருவர் இருக்கும்போது வேறொருவரை வேட்பாளராக நியமிக்குமாறு கூறுவதற்கு அவர் என்ன அரசியலில் அனுபவமற்றவரா?

தமக்கு எதிராக கட்சியின் பொதுச்செயலாளர் செயற்பட்ட நிலையிலும்கூட திரு சம்பந்தன் அவர்களின் வெற்றிக்காக ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் பங்குகொண்டு தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமே தவிர தமது பதவி முக்கியமல்ல எனக்கருதி அயராது பாடுபட்டு சம்பந்தன் அவர்களின் வெற்றிக்கு வகைசெய்தவர் தங்கத்துரையாகும்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையிலும் தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினராகவும் ஆதரவாளராகவும் இவர் செயற்பட்டார். இந்நிலையில் 1978 ஆம் ஆண்டு அவரது சொந்த ஊரான கிளிவெட்டி கிராமத்தில் இடம்பெற்ற ஒரு இன வன்முறைச் சம்பவத்தில் இவரையும் தொடர்புபடுத்தி சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு திருகோணமலை மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் எட்டு மாதங்கள் சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுதலையானார்.

## 1977ல் தமிழீழக்கோரிக்கையினை முன்வைத்து தேர்தலில் நின்ற த.வி.கூட்டணி 1981ல் மாவட்டசபை அமைப்பு முறையினை ஏற்று தேர்தலில் களமிறங்கியது. (04.06.1981)

அன்றையநிலையில் யாழ் மாவட்டம், வவுனியா மாவட்டம், மட்டுநகர் மாவட்டம் ஆகியன போட்டிப்பரீட்சைக்கான மாவட்டங்களாக இருக்கவில்லை. மாறாக திருகோணமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களுமே பலப் பரீட்சைக்கான மாவட்டங்களாக அமைந்திருந் தவையாகும். இந்நிலையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகளுடன் இணைந்திருந்த ஜனாப் எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களால் ஒரு முஸ்லிம் வேட்பாளரை அம்மாவட்டத்திற்கு வேட்பாளராக நிறுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு.அமிர்தலிங்கம், மற்றும் தலைவர் திரு.மு சிவசிதம்பரம் ஆகியோரால் நிராகரிக்கப்பட்டு திரு.வேல்முருகு ஆசிரியர் என்னும் தமிழர் ஒருவர் நிறுத்தப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் அன்றைய இனரீதியான புள்ளிவிபரம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | | |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 161,481 | 41.7% |
| சிங்களவர்கள் | 146,371 | 37.8% |
| தமிழர்கள் | 79,725 | 20.5% |



படிப்பகம்

www.padippakam.com

அதேவேளை திருமலை மாவட்டத்திற்கான வேட்பாளரைத் தேடும்பணி திரு. அமிர்தலிங்கம் மற்றும் அன்றைய திருமலைப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. இரா சம்பந்தன் போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட போதும் திருமலையில் போட்டியிடுவதற்கு எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் திரு. தங்கத்துரை அவர்களின் இல்லம்நாடி வந்தனர். அவர் அப்போது திருமலை இராஜவரோதயம் வீதியில் வசித்தமையால் அவர்களுக்கு அது இலகுவாக இருந்தது.

இந்நிலையில் திரு.தங்கத்துரை அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்ற அவர் அவர்களால் முன்வைக்கப்பட்ட வேட்பாளருக்கான கோரிக்கையினை உடனடியாக ஏற்பதற்கு மறுத்ததுடன் இதுவிடயம் தொடர்பாக தமது ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்த பின்னரே முடிவுபற்றி தெரிவிப்பதாக கூறியதற்கமைய அவர்கள் சென்றுவிட்டனர். ஏற்கனவே இடம்பெற்ற தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தொகுதிவாரியாக (1977) இடம்பெற்ற தேர்தலிலேயே போதிய அளவு பெரும்பான்மையினைப் பெறமுடியாதிருந்தமையும், மாவட்டரீதியில் தமிழ்மக்களின் விகிதாசாரம் 36% மட்டுமே இருந்தமையும் மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு திருமலை மாவட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் எவரும் சம்மதம் தெரிவிக்க மறுத்தமையாகும்.

இந்நிலையில் தமது ஆதரவாளர்களை அழைத்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியபோது நீங்கள் கட்டாயம் இப்பலப்பரீட்சையில் இறங்குங்களென இளைஞர் தரப்பு ஆதரவாளர்கள் வேண்டிக்கொண்டதற்கமைய அத்தேர்தலில் திரு. தங்கத்துரை அவர்கள் களமிறங்கினார். மாவட்ட சபைக்கான தேர்தலில் அரசாங்கக் கட்சியின் (ஐ.தே.கட்சி ) சார்பில் சட்டத்தரணி ஜனாப். ரஹீம் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். த.வி.கூட்டணியின் வேட்பாளராக திரு. தங்கத்துரை அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். தேர்தலுக்கான போட்டி பாரிய பலப்பரீட்சையாகவே அமைந்தது. இருந்தும் கடந்த 1970 ம் ஆண்டுகாலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியபோது தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்னும் இனரீதியான வேறுபாடுகளைப் புறந்தள்ளி மூதூர் மற்றும் திருமலை ஆகிய தொகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு பாகுபாடற்ற சேவையினை வழங்கியமையால் தமிழ் மக்கள் மட்டுமன்றி குறிப்பிடத்தக்களவு ஏனைய சமூகத்தவர்களும் வாக்களித்தமையால்



படிப்பகம்

www.padippakam.com

ஐ.தே.கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து (44,692) வாக்குகளைப்பெற்று தங்கத்துரை வெற்றியீட்டினார். அதேவேளை அம்பாறை மாவட்ட வேட்பாளர் தோல்வியடைந்தார்.

வெற்றியீட்டிய நிலையில் ஏறக்குறைய இரு வருடங்கள் தமது பணியினை முன்னெடுத்த அவருக்கு யூலைக் கலவரம் (25.07.1983) நிர்வாக இயந்திரத்தினை செயற்படவிடாது செயலிழக்கச் செய்தது இந்த நிலை கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் ஏற்பட்டது.

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டார். 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக இவர் தனது திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவர் பதவியைத் துறந்தார்.

1994 இல் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு அம்மாவட்டத்தில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| அ.தங்கத்துரை | 22,409 |
| எம்.ஈ.எச் மஹரூப் | 17,043 |
| வி.எஸ்.எஸ் ரணவீர | 15,084 |
| நஜீப் அப்துல் மஜீத் | 21,590 |

1997 ஆம் ஆண்டு யூலை மாதம் 5 ஆம் நாள் திருமலை சண்முகவித்தியாலயத்திற்கான (பெண்கள்) பாடசாலையில் 25 லட்சம்ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இருமாடிக் கட்டிடமொன்றினை சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பதற்கான வைபவம் முடிவுற்று வெளியேறும்போது தமிழீழம் காணப் புறப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைக்குண்டு வீசப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும்



படிப்பகம்

www.padippakam.com

மேற்கொள்ளப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இச்சம்பவத்தின்போது இவருடன் மேலும் ஏழுபேர் கொல்லப்பட்டு பல மாணவ மாணவியர்களும் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இச்சம்பவத்தின்போது கொல்லப்பட்டவர்கள் பின்வருவோராவர். மகாவித்தியாலய அதிபர் திருமதி. ராஜேஸ்வரி தனபாலசிங்கம், உதவி அதிபர் திருமதி. அமிர்தினி குலசிங்கம், ஆசிரியர்கள் சீவரெத்தினம் யோசப் இவர்களுடன் சமூகசேவை உத்தியோகஸ்தர் பி.எஸ் கணேசலிங்கம் தொழில்நுட்பவியலாளர் வி.ரத்தினராஜா அத்துடன் தங்கத்துரை அவர்களின் மெய்பாதுகாவலரும் கொல்லப்பட்டார்.

மேற்படி கொலை விடயத்தினை நிறைவேற்றுவதற்காக திரு. சம்பந்தன் அவர்களும் திருமலைப் பிரதேச த.வி.கூட்டணிக் கிளையின் தலைவரான ஈழத்து நாதன் மற்றும் கூட்டணிக் கிளையின் உறுப்பினரான சிறீ என்பவர்களும் இணைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களின் உதவியினை நாடியதற்கமைய அன்றைய திருமலையின் புலிகளின் பொறுப்பாளராக பணியாற்றிய பதுமன் என்பவரின் ஆலோசனைகளுக்கமையவே மேற்படி கொலை அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதற்கான ஆதாரங்களை வெளிக்காட்டுவதாக (17.02.1995ம்) திகதியிட்டு திரு தங்கத்துரை அவர்களினால் சம்பந்தனுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின்மூலம் அறியமுடிகின்றது.

## ஐ.தே கட்சியினரின் ஆட்சிக்காலமான ஆறாவது வருடத்தில் இடம்பெற்ற மூன்றாவது கலவரம் யூலைக் கலவரம் 1983

*1983* ம் ஆண்டு யூலை மாதம் *23* ந் திகதி திரு. பிரபாகரன் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளால் யாழ்ப்பாணம் நெல்லியடியில் கண்ணிவெடிவைத்து (13) இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மேற்படி கொல்லப்பட்ட இராணுவத்தினரின் சடலங்கள் (13)ம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு திரு. ஜே.ஆர். ஜயவர்தன அவர்களின் தலைமையிலான அரசாங்கத்தினால் (24) ந் திகதி பொதுமக்களின் அஞ்சலிக்காக ஒழுங்கு செய்யப்பட்டதற்கமைய நாட்டின் நாலாபுறத்திலிருந்தும் எராளமான மக்கள் கொழும்பிற்குச் சென்று தமது வீரர்களுக்கு அஞ்சலியினைச் செலுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

மறுநாள் (25.07.1983) கொழும்பு பொரளையிலமைந்திருந்த கனத்தை மயானத்தில் அவர்களுக்கான இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் அவர்களின் பூதவுடல்கள் அடக்கம் செய்யப்பட்டன. இச்சம்பவங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்த அதேவேளையில் அன்றைய இரவிற்கு கொழும்பிலும் கொழும்பை அண்டிய புறநகர் பகுதிகளிலும் வாழும் தமிழ்மக்களின் உடமைகளை சூறையாடுவதுடன் அவற்றினை தீமிட்டு நாசமாக்குவதற்கான முன்னேற்பாடுகள் ஐ.தே.கட்சியின் முக்கிய அமைச்சர்கள் பிரதானமாக திரு. சிறில்மத்யூ அவர்களின் தலைமையிலும் மேலும் சிலராலும் திட்டமிடப்பட்டு அதற்கான காடையர் கூட்டமும் தயார்படுத்தப்பட்டது.

அதற்கமைய கொழும்பில் தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசங்களும், அவர்களுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களும் கொள்ளையடிக்கப்பட்டு தீமிட்டு நாசமாக்கப்பட்டன. அதே தினத்தன்று அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களில் ஒருவரான சிறில் மத்யூ அவர்களின் தலைமையில் வெலிக்கடைச் சிறைச்சாலை தாக்கப்பட்டது. திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களின் அரசாங்கத்தினால் அமுல்படுத்தப்பட்ட (20.07.1979) பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் ஏற்கனவே கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் சிறைக் கைதிகள் (35) பேர் 25 ந் திகதியும், அதன்பின்னரான 27ந் திகதி (18) பேருமாக மொத்தம் 53 தமிழ் கைதிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் அனைவரும் கூரிய ஆயுதங்களால் வெட்டியும், குத்தியும் கொல்லப்பட்டமை அவர்களின் பிரேத பரிசோதனையின்போது உறுதி செய்யப்பட்டது.

பிரேத அடக்கம் செய்யப்பட்ட அன்றையதினமே பொரளை பகுதியில் வசித்த தமிழ் மக்கள் மீது வன்முறை ஆரம்பிக்கப்பட்டது அங்கு ஆரம்பிக்கப்பட்ட கலவரம் மறுநாள் கொழும்பு நகரத்தை அடைந்து பின்னர் நாடு பூராவும் பரவியது இச்சம்பவங்களை கட்டுப்படுத்த அரசினர் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளாது மௌனம் சாதித்த நிலையில் வன்முறையாளர்கட்கு ஆதரவாக இருந்தனரென்பது பின்னர் தெரியவந்தது.

அதற்கு உதாரணமாக கொழும்பு நகரிலுள்ள தமிழ் வர்த்தகர்களின் வீடுகள். கடைகள் ஏராளமானவை கொள்ளையடிக்கப்பட்டு தீமிட்டுக் கொளுத்தப் பட்டதுடன் கண்டி, மாத்தளை, நுவரெலியா, குருநாகல் போன்ற மாவட்டங்களிலுள்ள தமிழர்களின் வர்த்தக நிலையங்களும் வீடுகளும்கூட



படிப்பகம்

www.padippakam.com

கொள்ளையிடப்பட்டு தீயிடப்பட்டன. நாடு பூராவும் தமிழ்மக்களுக்கு எதிரான கொலைகள், கொள்ளைகள், தீவைப்புகள் நடந்து கொண்டிருந்தபோதும் 25ந் திகதி முதல் 29ந் திகதி வரை அரசாங்கம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டு அதனை தடுத்து நிறுத்த முற்படவில்லை. இந்நிலையில் த.வி.கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் இச்சம்பவங்களை இந்தியாவினதும். வெளிநாடுகளினதும் கவனத்திற்கு தெரியப்படுத்தியதற்கமைய வெளிநாடுகளின் கண்டனமும் எச்சரிக்கையும் அரசாங்கத்தினரை அச்சுறுத்தியது வெளிநாடுகளின் தலையீட்டினை கண்டு அஞ்சிய அரசதரப்பினர் 29ந் திகதியன்று ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்தனர் எனினும் இந்த இடைப்பட்டகாலப்பகுதியில் 1983 யூலை 25ந் திகதியும் 27ந் திகதியும் இருதடவைகள் கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் 53பேர் சக சிறைச்சாலையிலிருந்த சிங்களக் கைதிகளின் ஆதரவுடன் இரும்பு ஆயுதங்களாலும் கத்திகளாலும் வெட்டியும் குத்தியும் கொலை செய்யப்பட்டனர்.

இக்கலவரத்தில் உயிர் இழந்தவர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 2000 என உறுதிப்படுத்தப்படாத மதிப்பீடுகள் தெரிவித்ததுடன் 1500ற்கு மேற்பட்ட தீவைப்பு சம்பவங்களும் 500ற்கு மேற்பட்ட கொள்ளைகளும் நடைபெற்று 80,000 மேற்பட்ட தமிழ்மக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தனர். இந்நிலையைத் தொடர்ந்து கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் 50 அகதி முகாம்கள் தற்காலிகமாக நிறுவியதாக அப்போதைய தகவல்கள் தெரிவித்தன. ஆனால் இக்கலவரம்பற்றி அரசு வெளியிட்ட அறிக்கையின்படி 387 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் 440 தீவைப்பு சம்பவங்கள் நடைபெற்றதாகவும் தெரிவித்தனர் இச்சம்பவத்திற்கு பின்னர் உலகளாவிய ரீதியில் தமிழ் மக்கள்பற்றிய ஓர் அனுதாபம் ஏற்பட்டதுடன் சிங்கள அரசின் செயறபாடுகள் பற்றிய வெறுப்புணர்வுகளும் வளர்ச்சி அடைந்திருந்தது.

மேற்படி இடம்பெற்ற கலவரத்தின்போது பின்வரும் மாபெரும் தொழிலகங்கள் கொள்ளையிடப்பட்டமை முக்கியமானதாகும். அவையாவன Laksmi Mahal, Ram Gram stores and florist, A.Y.S Ghanam, St Anthonys Hardware Syntex and Cotton mills மற்றும் R. Maharaja போன்ற வர்த்தக ஸ்தாபனங்களில் மட்டும் (300) மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள்



படிப்பகம்

கொள்ளையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவை தவிர 428 வர்த்தக ஸ்தாபனங்களும் கொள்ளையிடப்பட்டதுடன் தீவைத்து நாசமாக்கப்பட்ட சம்பவங்களுட் இடம்பெற்றன. மேற்படி கலவரத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை வடகிழக்கிற்கு அழைத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்ட இந்திய அரசு அதற்கான கப்பல்களை அனுப்பி அம்மக்களை வடக்கிற்கும், கிழக்கிற்கும் அழைத்துச் சென்றனர். அத்துடன் அம்மக்களுக்கான நிவாரண உதவிகளையும் வழங்கினர். இச்சம்பவத்தின் மூலமே இந்திய அரசின் இலங்கை தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிக்க வழிகோலியது.

## 1983 யூலைக் கலவரத்தின்போது அரச பாதுகாப்பில் வெலிக்கடை சிறைச்சாலையில் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளின் படுகொலை

### படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம் பின்வருமாறு (25.07.1983)

1. நடராசா தங்கவேல், (தங்கத்துரை) 2. செல்வராஜா யோகச்சந்திரன் (குட்டிமணி) 3. கணேஷானந்தன் ஜெகநாதன் (ஜெகன்) 4. செல்லதுரை சிவசுப்பிரமணியம் (தேவன்) 5. நவரத்தினம் சிவபாதம் 6. வைத்திலிங்கம் நடேசுதாசன் 7. செல்லதுரை ஜெயரெத்தினம் 8. சிவநாயகம் அன்பழகன் 9. அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம் 10. காசிப்பிள்ளை சுரேஷ்குமார் 11. சின்னதுரை அருந்தவராசா 12. தனபாலசிங்கம் தேவகுமார் 13. மயில்வாகனம் சின்னையா 14. சித்திரவேல் சிவானந்தராஜா (கிளிவெட்டி) 15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம் 16. தம்பு கந்தையா 17. சின்னப்பு உதயசீலன் 18. கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன், (கிளிவெட்டி) 19. கிருஷ்ணபிள்ளை நாகராஜா 20. கணபதி கணேசலிங்கம் 21. அம்பலம் சுதாகரன் 22. இராமலிங்கம் பாலச்சந்திரன் 23. பசுபதி மகேந்திரன் 24. காசிநாதன் தில்லைநாதன் 25. செல்லப்பா குலராஜசேகரம் 26. குமாரசாமி உதயகுமார் 27. சுப்பிரமணியம் சிவகுமார் 28. கோதண்டபிள்ளை தவராஜலிங்கம் 29. கருப்பையா கிருஷ்ணகுமார் 30. ராஜயோகநாதன். 31 ஞானசேகரன் அமிர்தலிங்கம் 32 அந்தோனிப்பிள்ளை உதயகுமார் 33. அழகராசா ராஜன் 34. வேலுப்பிள்ளை சந்திரகுமார் 35. சிற்றம்பலம் சாந்தகுமார்.

www.padippakam.com

## இரண்டாம் நாள் படுகொலை செய்யப்பட்டோர் விபரம் வருமாறு (27.07.1983)

1. தெய்வநாயகம் பாஸ்கரன் 2. பொன்னம்பலம் தேவகுமார் 3. பொன்னையா துரைராசா 4. முத்துக்குமார் ஸ்ரீகுமார் 5. அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம் 6.செல்லச்சாமி குமார் 7. கந்தசாமி சர்வேஸ்வரன் 8. அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை 9.சிவபாலம் நீதிராஜா 10. ஞானமுத்து நவரத்தினசிங்கம் 11. கந்தையா ராஜேந்திரம் 12டாக்டர் ராஜசுந்தரம் 13. சோமசுந்தரம் மனோரஞ்சன் 14. ஆறுமுகம் சேயோன் 15.தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன் 16. சின்னதம்பி சிவசுப்பிரமணியம் 17. செல்லப்பா இராஜரட்னம் 18. குமாரசாமி கணேசலிங்கன்.

இரு தடவைகள் 25 மற்றும் 27 ந் திகதிகளில் மொத்தமாக (53) ஐம்பத்திமூன்று தமிழ் கைதிகள் கொல்லப்பட்டனர்.

## கிளிவெட்டி நவரெத்ணராசாவின் படுகொலை (30.04.1983)

பயங்ரவாத தடைச்சட்டம் என்னும் போர்வையின்கீழ் கிளிவெட்டிக் கிராமத்தினைப் பிறப்பிடமாகக்கொண்ட கதிர்காமத்தம்பி நவரெத்தினராசா என்பவர் 1982ல் கைதுசெய்யப்பட்டு யாழ்ப்பாணத்தில் அன்றைய காலகட்டத்தில் பிரபல்யம்வாய்ந்த இராணுவச்சித்திரவதை முகாமான குருநகருக்கு அவர் கொண்டு செல்லப்பட்டார். இராணுவப் பாதுகாப்பில் இருக்கும்போது மூன்றுவாரகால இடைவெளியில் (30.04.1983) அவர் மாரடைப்பு ஏற்பட்டு மரணமாகிவிட்டதாக அவரின் பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடாபாக மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கான நடவடிக் கைகளை மூதூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான திரு. தங்கத்துரை அவர்கள் மேற்கொண்டார். அதற்கமைய அம்மரணம் தொடர்பான விசாரணை யாழ் மேலதிகச் சட்ட வைத்திய அதிகாரி (A.J.M.O) டாக்டர் சரவணபவானந்தன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டது.

கதிர்காமத்தம்பி நவரெத்தினராசா அவர்களின் மரண விசாரணை அறிக்கை தொடர்பாக அவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார். 'மரணமடைந்த நவரெத்தினராசாவின் சடலத்தில் இருபத்தைந்து (25) வெளிக்காயங்களும் பத்து (10) உட்காயங்களும் காணப்பட்டன' அவரது நுரையீரல்களில்



படிப்பகம்

www.padippakam.com

காணப்பட்ட ஊமைக் காயங்கள் தாக்குதலினால் ஏற்பட்டிருககக் கூடும். இருதயத்திலும் நுரையீரலிலும் ஏற்பட்ட ஊமைக்காயங்கள் காரணமாக இந்த மரணம் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதுகின்றேன். ஒரு வைத்திய நிறுவனத்தில் போதிய சிகிச்சை செய்யப்பட்டிருந்தால் அவரது உயிரைப் பாதுகாத்திருக்க முடியுமென்பது என் அபிப்பிராயம் எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அவரது பூதவுடலை இந்நூலின் ஆசிரியரான குமாரதுரை ஆகிய நான் அவரது தந்தையாரான கதிர்காமத்தம்பி அவர்களையும் யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று விமானப்படையினரின் விமானத்தில் திருமலை சீனக்குடாவில் அமைந்திருந்த விமான நிலையத்திற்கு எடுத்துவந்து அங்கிருந்து விமானப் படையினரின் வாகனத்தில் கிளிவெட்டி கிராமத்திற்கு கொண்டு சென்றோம். இதற்கான ஏற்பாடுகளை எனது சகோதரான திரு. தங்கத்துரை அவர்களே முன்னின்று உதவினார்.

## மட்டக்களப்பு சிறையுடைப்பு (27.09.1983)

25.07.1983 மற்றும் 27.07.1983 ஆகிய தினங்களில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் கைதிகள் தவிர்ந்த எஞ்சிய (41) தமிழ் சிறைக் கைதிகளும் பாதுகாப்பின் நிமிர்த்தம் மட்டுநகர் சிறைச்சாலைக்கு ஹெலிகப்ரரின்மூலம் இடமாற்றம் செய்யப்பட்டனர். மாதங்கள் உருண்டோடிய நிலையில் கொழும்பில் அமைதி நிலவியதால் மட்டுநகர் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை மீண்டும் கொழும்பிற்கு மாற்றப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்வதாக தகவல்கள் கசிந்தன. இந்நிலையில் அவர்கள் அனைவரையும் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளின் மூலம் விடுவிக்கவேண்டுமென சிலர் அபிப்பிராயம் தெரிவித்ததற்கமைய இந்நூலின் ஆசிரியரான குமாரதுரை ஆகிய நானும் அதுவிடயத்தில் பிரதான பங்காளியாக இணைக்கப்பட்டேன்.

விடுவிக்கப்படும் கைதிகளை விரைவாக முல்லைத்தீவிற்கு அழைத்துச் செல்லுவதற்கான திட்டங்கள் தீட்டப்பட்டன. இதனை நடைமுறைப் படுத்துவதில் பாரிய சிரமமொன்று முன்னாலிருந்தது. மட்டுநகர் மாவட்டம் பெரும்பாலான தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் உள்ளடக்கிய மாவட்டமென்பதனால் அப்பிரதேசத்திலிருந்து வெருகல்வரை கைதிகளை அழைத்துவருவது பெரும் சிரமமாக இருக்காது. ஆனால் வெருகலிலிருந்து தம்பலகாமம் வரை பெரும்பாலான பிரதேசங்கள் தனியாக சிங்கள மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

வாழும் பகுதியாகவே அமைந்திருக்கின்றது. இந்நிலையில் விடுவிக்கப்பட்ட கைதிகளை காட்டுப் பிரதேசத்தினூடாக அழைத்துச் செல்வது ஏறக்குறைய (40) கிலோ மீற்றர் தூரமாகும். இப்பிரதேசத்தினூடாக அழைத்து செல்வதற்கான பொறுப்பினை ஏற்பவர் யார்? என்னும் வினா விடுக்கப்பட்டபோது புளொட் அமைப்பின் முக்கியஸ்தர்களில் ஒருவரான (பார்த்தன்) என அழைக்கப்படும் ஜெயச்சந்திரன் அவர்கள் என்னிடம் வந்து அதற்கான பொறுப்பினை என்னை ஏற்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் ஏற்கனவே சில வருடங்களாக என்னுடன் நண்பனாக இருந்தமையால் நான் அதனைப் பொறுப்பேற்பதாகவும் உங்களுக்கு நேரமிருந்தால் என்னுடன் ஒரு நாளைக்கு வரமுடியுமானால் அவர்களை (கைதிகளை) அழைத்து வரவேண்டிய பாதையினை பார்ப்பது நல்லதென கூறினேன். அதற்கு சம்மதித்த அவர் நான்கூறிய தினத்திற்கு என்னிடம் வந்தபோது நாங்கள் இருவரும் எனது அண்ணன் முறையான ஒருவரையும் கூட்டிக்கொண்டு ஏறக்குறைய 20 கிலோ மீற்றர்வரை நடந்து சென்று பாதையினைப் பார்வையிட்டோம். அதற்கமைய திட்டமிட்டபடி சிறையிலடைக்கப்பட்டிருந்த தமிழ் கைதிகளை வெளியே எடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. மட்டுநகர் சிறைச்சாலையின் உட்கட்டமைப்பு அனைத்தையும் அறிந்தவனாக நான் இருந்தேன். காரணம் 1978 ம் ஆண்டு 11 மாதங்கள்வரை அச்சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவன் நான். மேற்படி சம்பவம் இடம்பெற்றபோது பரந்தன் ராஜன் என அழைக்கப்படும் திரு. ஞானராஜா அவர்கள் அவசரமாக சிறைச்சாலையில் மதிலால் ஏறி வெளியே வருவதற்கு முயற்சித்தபோது தவறி விழுந்து கால் ஒன்று முறிவடைந்தது.

மேற்படி சிறையிலிருந்த கைதிகள் விடுவிக்கப்பட்டபோது அன்றைய காலகட்டத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய ஆயுத அமைப்புக்களில் பயிற்சி பெற்று அங்கம் வகித்தவர்களை பேராளிகளாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் அற்றவர்களாகவே காணப்பட்டனர். இந்நிலையில் 41 கைதிகள் விடுவிக்கப்பட்டபோது தமது ஆதரவாளர்களை (ஐவர்) மட்டும் காப்பாற்றி அழைத்துச் செல்வதற்கான ஆயத்தங்களை ஏற்கனவேயே அவர்கள் தயார்படுத்திமிருந்தனர். மேற்படி கைதிகளில் சகல அமைப்புக்களையும் சார்ந்தவர்கள் இருந்தனர். இவர்களில் முக்கியமானவர்களென பலராலும் அறியப்பட்டவர்களான டேவிற் ஐயா,



படிப்பகம்

www.padippakam.com

வாமதேவன் (திரு எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களின் முன்னாள் கார்ச்சாரதியும் செங்கலடி வங்கிக் கொள்ளையின் சூத்திரதாரியுமானவரே வாமதேவன்) பரந்தன் ராஜன், டக்ளஸ் தேவானந்தா, முன்னாள் வட, கிழக்கு மாகாணசபையின் முதல்வர் திரு. வரதராஜப்பெருமாள், பனாகொடை மகேஸ்வரன் என அழைக்கப்படும் தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் மற்றும் தங்க மகேந்திரன் என நினைக்கின்றேன் இவர்பற்றி உறுதியான ஞாபகமில்லை மேற்படி நபர்களையும் எஞ்சிய 33 பேரையும் கதிரவெளியிலிருந்து அழைத்துச் செல்லும் பொறுப்பினையே நான் ஏற்கனவே பொறுப்பேற்றிருந்தேன். ஆனால் சிறையுடைப்பு நடைபெற்றதும் வெருகல் ஆற்றுக்கு அருகாமையில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுவிட்டனர்.

சிறையுடைப்பு இடம்பெற்று கைதிகள் வெளியேற்றப்பட்டதும் நான் உடனடியாக எனது கிராமமான கிளிவெட்டிக்கு வந்து வெருகல் ஆற்றுக்கு மறுபக்கத்திலிருந்து அவர்களை (கைதிகளை) அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முயற்சிகளை கவனித்தேன். அன்றைய தினம் (பார்த்தனை) சந்தித்த நான் பின்னர் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருக்கும்போது ஏப்ரல் மாதம் (24)ந் திகதி பார்த்தன் மட்டக்களப்பு பெரிய கல்லாறு என்னும் இடத்தில் இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின்போது சுட்டுக் கொல்லப்பட்டதான செய்தியினை மட்டுமே கேள்வியுற்றேன்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களான கிறிஸ்தவ மதகுருவானவர்களான ஜெயகுலராஜா, ஜெயதிலகராஜா, சின்னராஜா மற்றும் மு.நித்தியானந்தன் போன்றோரும் இன்னும் ஒருவர் அடங்கலாக அனைவரையும் அழைத்துச் செல்வதற்கான வாகன வசதிகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்நிலையில் மேற்கூறியவர்கள் மட்டும் புலிகளின் ஆதரவாளர்களால் படகுமூலம் திருகோணமலைக்கு அழைத்துவரப்பட்டு அங்கிருந்து வாகனத்தின்மூலம் முல்லைத்தீவிற்கு கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே தயார்படுத்தப்பட்டிருந்தமையை பின்னர் நான் அறிந்தேன்.

மேற்படி சிறையுடைப்பில் வண பிதா. சிங்கராஜர், திரு. கோவை மகேசன், திரு. டொக்டர் தர்மலிங்கம், மற்றும் நிர்மலா நித்தியானந்தன் ஆகியோர்



படிப்பகம்

www.padippakam.com

வெளியேற மறுத்த நிலையில் அங்கேயே இருந்துவிட்டனர். நாம் ஏற்கனவே கைதிகளை அழைத்துவருவதாக திட்டமிடப்பட்ட பாதையினை உபயோகிக்க முடியாதவாறு இராணுவத்தினரின் கெடுபிடி அப்பிரதேசத்தினை முற்றுகையிட்டிருந்தது. எது எவ்வாறாயினும் ஒரு வழி தடையானால் மறுவழியினை பயன்படுத்தக்கூடிய அனுபவம் என்னிடமிருந்தமையால் வெருகல் ஆற்றுப்பகுதிக்கு கைதிகளை அழைத்துவராது கதிரவெளி என்னுமிடத்திலிருந்து வேறு பாதையினை தெரிவுசெய்தோம். இதன்போது ஒரு காலினை உடைத்துக்கொண்ட பரந்தன் ராஜன் என்பவரை சுமந்துகொண்டே செல்லவேண்டிய கட்டாய நிலையும் எமக்கு ஏற்பட்டது. அவரைச் சுமப்பதற்கு இரு தடிகளில் இரு சாக்குகளை உட்புகுத்தி அதன்மூலம் நால்வர் நால்வராக மாறி, மாறி அவரைச் சுமக்கின்ற பணியினை நிறைவேற்றினோம். எனது பொறுப்பில் அழைத்துச் செல்லப்பட்ட இளைஞர்கள் அனைவருமே எவ்வித சோம்பேறித்தனமுமின்றி கடமையுணர்வுடன் அப்பணியினை மேற்கொண்டனர். வெருகல் பாதை தடைப்பட்டமையால் மேலதிகமாக (20) இருபது மைல்வரை பயணஞ் செய்யவேண்டிய கட்டாய நிலை எமக்கு உருவானது. கதிரவெளியிலிருந்து மேற்குப் புறமாக கதியால்சேனை, பின்னர் அங்கிருந்து அங்கோடை என்னுமிடத்தில் எனக்கு 18 ஏக்கர் விவசாயக் காணி இருந்தது. ஆனால் அக்காணி கோடைப்போகத்தில் (சிறுபோகம்) மட்டுமே பயிர்செய்வதாகும். சிறையுடைக்கப்பட்ட காலம் மாரிகாலமாக (மழைக்காலம்) இருந்தமையால் மஹாவலி கங்கையில் வெள்ளப்பெருக்கும் அதிகமாக இருந்தது. இந்நிலையில் சுமந்து செல்லவேண்டிய ஒருவரும் எமது குழுவில் இருந்தமை எமக்கு பாரிய சுமையாக அமைந்தது.

குறிப்பு – மட்டுநகர் சிறை உடைப்பின்போது வெளியேறியவர்களுடன் வருவதற்கு (27.09.1983ல்) மறுப்புத் தெரிவித்திருந்த திருமதி. நிர்மலா நித்தியானந்தன் அவர்கள் பின்னர் (10.06.1984)ந் திகதியன்று பரமதேவா என்பவரால் சிறைக்காவலர்போன்ற உடை அணிந்து சிறைச்சாலையினுள் நுழைந்து மேற்படி நிர்மலாவை வெளியில் எடுத்துச்சென்று பாதுகாப்பாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தாக நான் அறிந்தேன்.

## கைதிகளுக்கான உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லுதல் (1983)



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி பெருந்தொகையான ஒரு குழுவினருக்கு உணவுப் பொருட்கள் அனைத்தும் வெருகல் ஆற்றினைக் கடந்தே எடுத்துச் செல்லவேண்டும். அதேவேளை இராணுவத்தினர் அங்கு குவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இந்நிலையில் பொருட்களை கொள்வனவு செய்த நானும் எனது நண்பர்கள் இருவரும் மாட்டுப்பட்டிக்குச் (கால்நடைகள்) செல்வது போன்று ஏராளமான கயிற்றுக் கட்டுக்களையும் (கால்நடைகளை கட்டும்) வாங்கிக்கொண்டு வெருகல்வரை பஸ்ஸில் பயணஞ்செய்து அங்குள்ள ஆற்றினைக் கடப்பதற்காக சேவையிலீடுபடுத்தப்பட்டுள்ள பாதையில் அக்கரைக்குச் சென்றதும் இராணுவத்தினர் வந்து எம்மைச்சுற்றி வளைத்துவிட்டனர். இந்நிலையில் பலதரப்பட்ட கேள்விகளை எம்மிடம் துருவித் துருவி கேட்ட இராணுவத்தினருக்கு சிங்கள மொழியிலேயே நான் பதில்களை கூறியதுடன் அவர்களுக்கு சந்தேகம் ஏற்படாதவாறு எனது மாட்டுப்பட்டிக்கு பொருட்கள் கொண்டுசெல்வதாக கூறியபோது அதனை அவர்கள் நம்புவதற்கான ஆதாரமாக எம்மிடமிருந்த கயிற்றுக் கட்டுகள் துணைபுரிந்தன.

பின்னர் அங்கிருந்து மூன்று மைல்கள்வரை பஸ்ஸில் பயணஞ்செய்தநிலையில் நான் ஏற்கனவே தயார்படுத்திவைத்திருந்த கதிரவெளியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலரின் உதவியுடன் கைதிகள் மறைந்திருக்கும் காட்டுப் பகுதிக்குச் சென்றோம். அங்கு சென்றதும் உடனடியாக மதிய உணவினைத் தயாரித்து சாப்பிட்டுவிட்டு எமது அடுத்த நடைப்பயணத்தினைத் காட்டுப் பிரதேசத்தினூடாக இரவோடு, இரவாக தொடர்ந்தோம். நாம் புறப்பட்ட இடத்திலிருந்து (8) மைல்தூரம்வரை சென்றதும் மஹவலி கங்கையின் கிளை ஒன்றினைக் கடந்து செல்லவேண்டியிருந்தது. அங்கு நீர்மட்டம் உயர்வடைந்திருந்ததால் கங்கையினைக் கடக்கமுடியாத நிலை உருவானது. பின்னர் கங்கையோரமாக சற்றுத் தூரம் சென்றபோது நீளமான மரமொன்று முறிந்து கங்கைக்கு குறுக்காக வீழ்ந்து கிடந்தமை எமக்கு ஆறுதலை ஏற்படுத்தியது. இக்காலப்பகுதி நல்ல நிலவு காலமாக இருந்தமையால் இடங்களை கண்டறிதல் சற்று இலகுவாக இருந்தது.

இருந்தும் தனிநபர்கள் மட்டுமன்றி ஒருவரைச் சுமந்துகொண்டு மரத்தின் துணையுடன் செல்வதென்பது நினைத்துக்கூட பார்க்கமுடியாத சம்பவமாக இருந்தபோதும் இறைவனின் அருளால் அதனையும் வெற்றிகண்டு மறுபக்கத்திற்கு சென்றோம். அங்கு சற்று நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு



படிப்பகம்

நாம் சமைத்துச்சென்ற உணவில் எஞ்சியிருந்த உணவையும் சாப்பிட்டுவிட்டு மிகுதிப் பயணத்தினைத் தொடர்ந்தோம். மிகுதிப்பயணம் கஷ்டமானதாக இருந்தாலும் அச்சமற்ற உணர்வுடன் மேற்கொள்ளக்கூடியதாக அமைந்தது. தொடர்ந்து இரு மணித்தியாலங்கள்வரை பயணித்த நாங்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் இரு நாட்கள் (காட்டுப் பிரதேசத்தில்) தங்கிவிட்டு மிகுதிப்பயணத்தினை தொடர்வதென தீர்மானித்ததற்கமைய அங்கு முகாமிட்டிருந்தோம். அங்கு தங்கியிருந்தவேளை உணவு பற்றாக்குறை ஏற்பட்டமையால் கட்டாக்காலி மாடுகளாக அப்பகுதியில் திரியும் எருமை மாடுகள் இரண்டினை சுட்டு சமையலுக்கு பயன்படுத்தினோம்.

இரண்டு நாட்களின் பின்னர் அங்கிருந்து இரவுவேளையிலான பயணத்தினை பாரிய காட்டுப்பிரதேசத்தினூடாக தொடர்ந்த நாங்கள் (8) மைல்கள் தொடர்ச்சியாக நடந்து திருமங்கலாய் என்னுமிடத்தில் எனக்கிருந்த வயல்காணியிலமைந்துள்ள குடிசைக்குச் சென்று தேனீர் அருந்திவிட்டு சிறிதுநேர ஓய்வின் பின்னர் அங்கிருந்து அகஸ்தியர் ஸ்தாபனம் என்னுமிடத்திலமைந்துள்ள பிரபலம்வாய்ந்த மஹாவலி கங்கைக் கரையினை சென்றடைந்தோம். திருமங்கலாயிலிருந்து தொடர்ந்த பயணத்தில் எமக்கு உதவியாக மல்லிகைத்தீவு கிராமத்தினைச் சேர்ந்த சில இளைஞர்களும் உதவினர். அத்துடன் எனது பணிநிறைவேற்றப்பட்டு வேறு ஒரு குழுவினர் இறுதிப் பயணத்தினை பொறுப்பேற்றனர்.

சிறையுடைக்கப்பட்டு வெளியேறியவர்களில் டேவிட் ஐயா அவர்களும் வாமதேவனும் மற்றவர்களுடனான நடைப்பயணத்தில் தம்மால் இணைந்துகொள்ள முடியாதென மறுத்துவிட்டனர். அதனால் மேலே குறிப்பிட்டவர்கள் (33) பேரினதும் பாதுகாப்பினை செவ்வனே செய்து முடித்து மற்றைய குழுவினரிடம் ஒப்படைத்த நான் அடுத்த நடவடிக்கையாக ஏறாவூரில் பாதுகாப்புக்கருதி தங்கவைத்திருந்த டேவிற் ஐயா அவர்களை வெருகலம்பதி முருகன் ஆலயத்தில் விசாகத் திருவிழா நடைபெற்ற தினத்தன்று அங்கிருந்து பயணிகள் வான் ஒன்றினை வாடகைக்கு அமர்த்தி வெருகல் வரை கொண்டுவந்தேன். திருவிழா இடம்பெற்றமையால் இராணுவத்தினரின் கெடுபிடி அவ்வளவாக இருக்கவில்லை. இந்நிலையில் வெருகல் வரைக்குமே அவ்வாகனம் வந்தது. அங்கிருந்து எனது கிராமமான கிளிவெட்டிக்குச் செல்வதற்கு 10 மைல் தூரம் செல்லவேண்டியிருந்தது.

www.padippakam.com

அங்கிருந்து பஸ்மூலம் செல்வதற்கான வசதிகள் இருந்தபோதும் பஸ்ஸில் பயணஞ்செய்ய அவர் மறுத்துவிட்டார். எனவே நாம் ஏறாவூரிலிருந்து வாடகைக்கு அமர்த்திவந்த வாகனத்திினை தொடர்ந்து கிளிவெட்டிவரை வருவதற்கான பணத்தினைச் செலுத்தி வந்துசேர்ந்தோம்.

கிளிவெட்டிக்கு வந்த அவர் எமது வீட்டில் தங்குவதற்கு அஞ்சியதால் எனது வீட்டிலிருந்து 2 கிலோ மீற்றருக்கு அப்பாலுள்ள எனது வயல்காணியில் அமைந்திருந்த குடிசையில் ஒரு நாள் தங்கவைத்துவிட்டு அவரையும் வேறு ஒரு பாதையால் பைசிக்கலில் அழைத்துச் சென்று தம்பலகாமத்திலிருந்து வந்த ஒரு நபரிடம் ஒப்படைத்தேன். அதேவேளை வாமதேவன் அவர்கள் முஸ்லிம் மதவாதிகள்போன்ற உடையினை அணிந்து தாமாகவே எமது கிராமத்திலிருந்து மூதூருக்கு பஸ்ஸில் பயணஞ்செய்து அங்கிருந்து பயணிகள் படகில் திருகோணமலைக்குச் சென்றார். மேற்படி கைதிகளை பாதுகாத்து அவர்களுக்கான உணவு மற்றும் வாகனச்செலவு போன்ற அனைத்தும் எனது சொந்த நிதியில் செலவிட்டேனே தவிர இவ்விடயத்திற்கு எந்த அமைப்பினைச் சார்ந்தவர்களும் எவ்வித நிதியுதவியும் வழங்கவில்லை என்பதும் முக்கியமானதாகும்.
இங்கு குறிப்பிட்டுள்ள தகவல்களை ஒருவர் நம்புவதென்பது கஷ்டமானதாகவே காணப்படும். ஆனால் மேற்படி விடயத்தில் என்னால் அழைத்துவரப்பட்டவர்களில் பலர் இன்னும் உயிருடன் வாழ்வதால் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களில் எதுவும் மெருகூட்டப்பட்டு வெளியிடப்படவில்லை என்பதே யாதார்த்தம். அத்துடன் கதிரவெளியிலிருந்து மேற்படி நபர்களை பொறுப்பேற்று அகஸ்தியஸ்தாபனம் வரை அழைத்து வரப்பட்ட சம்பவத்திற்கு யாரேனும் உரிமை கோருவார்களேயானால் இந்நூலின் கடைசிப் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

சம்பவங்கள் இவ்வாறான கஷ்டங்களுடனும், சிரமங்களுடனும் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகாணப்பட்ட நிலையில் சிறையுடைப்பு தொடர்பாக ஆங்காங்கே பலர் உரிமை கோருவதாக எனக்கு தகவல்கள் கிடைத்தன. அதில் முக்கியமாக பிரான்ஸ் நாட்டிலிருந்து (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஆதரவாளரான திரு.புஸ்பராஜா அவர்கள் வெளியிட்டுள்ள ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியாக என்னும் (புத்தகத்தில்) பின்வருமாறு வரைந்திருந்தார். (அவரால்



படிப்பகம்

www.padippakam.com

வெளியிடப்பட்ட புத்தகத்தின் 357ம் பக்கத்தில்) 1983 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27 ந் திகதி இரவு மட்டக்களப்பு சிறை போராளிகளால் உடைக்கப்பட்டு அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகளில் 50 பேர் சிறைமீட்கப்பட்டனர். இச்சிறை உடைப்புக்கு வெளியே இருந்து உதவிய குஞ்சி எனப்படும் குணசேகரனும் சிறைக்குள்ளிருந்த ஈழப்போராளிகளுமே முக்கிய காரண கர்த்தாக்களாகும். குறிப்பிட்ட நேரத்திற்கு சிறை உடைக்க வசதியாக உபகரணங்களை உள்ளே அனுப்பியது மட்டுமல்லாது தப்பி வெளியே வந்த போராளிகளை உடனுக்குடன் படகுகளிலும், வாகனங்களிலும் குழுக்குழுவாகப் பிரித்து அனுப்புவதிலும் குணசேகரன் காட்டிய திறமை அளப்பரியது.

ஆகா என்ன திறமை கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்னும் முதுமொழிக்கமைய திரு. புஸ்பராசா அவர்களின் எழுத்துக்கள் அமைந்திருந்தன. மேற்படி புத்தகத்தினை வாசிக்கக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. விடயத்தினை வாசித்தறிந்ததும் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவரின் உதவியுடன் அவரின் தொலைபேசி இலக்கத்தினைப் பெற்று அவருடன் இது விடயம் தொடர்பாக நேரடியாக பல வினாக்களை முன்வைத்தேன். ஆனால் நான் விடுத்த வினாக்கள் எதற்கும் நேரடியாக பதில் கூறமுடியாத திரு. புஸ்பராஜா அவர்கள் அவருக்கு அறிமுகமான ஒருவர்கூறிய தகவல்களையே வெளியிட்டமையை இறுதியில் அவர் ஏற்றுக்கொண்டார். தகவல்களை வழங்கியவரும் (ஈ.பி.ஆர்.எல்.எப்) அமைப்பினைச் சேர்ந்தவரென பின்னர் என்னால் அறியமுடிந்தது.

வேறு ஒருவர் கூறினாலும்கூட சில சம்பவங்களின் பின்னணியினையும், நடைமுறை சாத்தியத்தினையும் ஆய்வுசெய்ததன்பின்னரே இவ்வாறான ஒரு விடயத்தினை எழுதுவதற்கு ஒரு நூலினை வெளியிடும் ஆசிரியர் முன்வரவேண்டும். அதைவிடுத்து போதிய ஆதாரங்களைப் பெறாது எழுதுவது தவிர்க்கப்பட வேண்டியதாகும். காரணம் மட்டக்களப்பிலிருந்து முல்லைத்தீவிற்கு இதுபோன்ற பெருந்தொகையான குழுவினரை அதுவும் இராணுவம், பொலிஸ், கடற்படை போன்ற முப்படைகளினதும் பாதுகாப்பு கைதிகள் தப்பிப்போகாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில் அவர் எழுதியவாறு இலகுவாகச் செய்வதென்பது கனவிலும் சாத்தியப்படாத சம்பவமே!. இவ்வாறான பல நூறு எழுத்தாளர்களின் கடந்தகால, நிகழ்கால



படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கைகளினாலேயே தமிழ் மக்களின் தலைவிதி பாதாளக் குழிக்குள் வீழ்த்தப்பட்டு அம்மக்கள் பரிதவிர்ப்பது கண்கூடாகியுள்ளது.

புத்தகங்களில் வெளியிட முடியாத சிலர் இன்றும் தாமே சிறையுடைப்பினை மேற்கொண்டு தமிழ் கைதிகளை மீட்டதாக ஆங்காங்கே கதையளப்பதும் வெளியாகின்றன. லண்டனில் வசிக்கும் எனது நண்பர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் கடந்த மாதம் (டிசம்பர் 2010 இறுதியில்) என்னுடன் உரையாடும்போது மட்டக்களப்பு சிறையுடைப்புபற்றி தாமே அதனை மேற்கொண்டதாக தம்மிடம் ஒருவர் தெரிவித்ததாகவும் அதன் முழுவிபரமும் தமக்கு ஞாபகமின்மையால் தன்னால் விவாதிக்க முடியவில்லை எனவும் என்னிடம் தெரிவித்தார்.

## சிறையுடைப்பில் திரு. பிரபாகரன் அவர்களின் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் செயற்பாடுகள் (1983)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட நெல்லியடி வங்கியில் கொள்ளையில் பெறப்பட்ட (25மில்லியன் ரூபா) பணத்தினை பாதுகாத்துவைத்திருந்த குற்றச்சாட்டிற்கமைய கைது செய்யப்பட்டு கைதிகளாகவிருந்த கிறிஸ்தவ மதகுருவானவர்களான வண பிதா. சிங்கராஜர் தவிர்ந்த ஜெயகுலராஜா, ஜெயதிலகராஜா, சின்னராஜா மற்றும் மு.நித்தியானந்தன் இன்னும் ஒருவர் அடங்கலாக அனைவரையும் அழைத்துச் செல்வதற்கான ஒழுங்குகளை ஏற்கனவேயே விடுதலைப்புலிகள் தயார் படுத்தி வைத்திருந்தனர். அதற்கமைய திட்டமிட்டபடி அவர்கள் அனைவரையும் திருகோணமலைக்கு கடல் மார்க்கமாக இயந்திரப் படகில் ஏற்றிச் சென்றனர்.

ஆனால் அங்கிருந்து கடல்மார்க்கமாக பயணத்தினை தொடரமுடியாது போனமையால் ஏதேனும் வாகனத்திலேயே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கான உதவியினை அன்று திருமலைக் கச்சேரியில் மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றிய திரு பத்மநாதன், மற்றும் திரு தியாகலிங்கம் (கமநலச்சேவை உதவிப் பணிப்பாளர்) ஆகியோரின் அனுசரணையுடன் கச்சேரிக்குச் சொந்தமான ஜீப் வண்டியில் திருமலையிலிருந்து முல்லைத்தீவிற்கு மேற்குறிப்பிட்டவர்களை அழைத்துச் சென்றனர். மேற்படி



படிப்பகம்

www.padippakam.com

விடயத்திற்கு துணைபுரிந்தவராக நிலாவெளியைச் சேர்ந்த பாடசாலை அதிபர் திரு. கனகசபை அவர்களும் பங்களிப்புச் செய்திருந்தார். அத்துடன் சாம்பல்தீவு என்னும் கிராமத்தினைச் சேர்ந்த ஜீப் வண்டியின் சாரதியான திரு. சிவசுப்பிரமணியம் அவர்களும் இது விடயத்தில் சம்பந்தப்பட்டிருந்தார். மேற்படி சம்பவம் இடம்பெற்று குறுகிய காலத்தினுள் மேற்குறிப்பிட்டுள்ள அனைவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச்சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஐவரை பாதுகாக்க முற்பட்டு நால்வர் கைதுசெய்யப்பட்டமை வரலாற்று நிகழ்வாகும். இங்கு குறிப்பிட்டவர்களில் மூவர் வசதி படைத்தவர்கள் அதேவேளை ஜீப் வண்டியின் சாரதியான திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் மாதா மாதம் பெறும் சம்பளத்திலேயே தமது குடும்ப வாழ்க்கையினை மேற்கொள்பவர். இவர் சிறைவைக்கப்பட்டிருந்தபோது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் இவரின் குடும்பத்தவர்களுக்கு எவ்வித நிதியுதவியும் வழங்க முன்வராமையால் அவருக்கும் மேற்கூறிய ஏனைய மூவருக்குமிடையில் அடிக்கடி வாக்குவாதங்கள் இடம்பெறுவதனை என்னால் அவதானிக்க முடிந்தது. ஏனெனில் இவர்கள் கைதுசெய்யப்பட்டு மூன்று மாதகாலப்பகுதியின் பின்னர் நானும் வேறு ஒரு சம்பவத்திற்கான (ஆயுதங்கள் வைத்திருந்தேன்) என்னும் குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தேன். மேற்படி நபர்கள் (இலங்கை – இந்திய) உடன்படிக்கையினைத் தொடர்ந்தே விடுதலை செய்யப்பட்டார்கள். அவ்வாறான ஒரு உடன்படிக்கை அன்றைய காலகட்டத்தில் கைச்சாத்திடப்படாதிருந்திருந்தால் அவர்களின் விடுதலை கனவாகவே முடிந்திருக்கலாம்.

## திரு. தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ இராணுவ அமைப்பும் (T.E.A) ஆட்கடத்தலும்

பிரித்தானியாவில் லண்டன் பல்கலைக்கழகத்தில் பொறியியல் மாணவனாகப் பயின்றுகொண்டிருந்த திரு.தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள் 1981.ம் ஆண்டுகலவரத்தின்பின்னர் நாடு திரும்பி சிறிய அளவிலான ராணுவ அமைப்பொன்றினை உருவாக்கினார். அமைப்புரீதியாக சிறியவர்களாக



படிப்பகம்

www.padippakam.com

இருந்தபோதும் எதையும் துணிவுடன் செயலாற்றும் திறமையை தம்வசம் கொண்டிருந்தார்கள். எவ்விடயத்திலும் தாமும் முன்னின்று செயற்படும் நடைமுறையை அமைப்பின் மத்தியில் அவர் ஏற்படுத்தியிருந்தார்.

1981ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் குடிநீர் வினியோகத் திட்டத்தினை (Water Supply and Drainage Board) செயற்படுத்தும் பணியினை மேற்கொண்டிருந்த அமெரிக்க பிரைஜைகளான Mr and Mrs Stanley Allen தம்பதியினரை கடத்திச் சென்று ரூபா ஐம்பது மில்லியன் கப்பமாகச் செலுத்தும்படி திரு. தம்பாப்பிள்ளை மகேஸவரன் தலைமையிலான (T.E.A) Tamil Eelam Army நிபந்தனை விதித்தனர். இவர்களின் நிபந்தனைகளில் 50 மில்லியன் பணமும் அத்துடன் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் சம்பந்தப்பட்டதாக சந்தேகத்தின்பேரில் இலங்கை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்தவ பாதிரியார் வண பிதா. சிங்கராஜர், யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் திரு, திருமதி நித்தியானந்தன் ஆகியோரையும் மேலும் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 20 கைதிகளையும் விடுதலை செய்யவேண்டுமென்னும் நிபந்தனை முன்வைக்கப்பட்டது.

மேற்கூறிய 50 மில்லியன் ரூபா பணத்தினை தமிழ்நாடு அரசிடம் செலுத்தவேண்டுமெனவும், கைதிகளை விடுவிக்கவேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. திரு, திருமதி ஸரான்லி அலென் குடும்பத்தினரின் யாழ் (Beach Road) அமைந்திருந்த அவர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திற்கு சென்ற ஆயுதக்குழுவினர் முதல் நடவடிக்கையாக அவர்களின் தொலைபேசித் தொடர்பினையும், மின்சாரத் தொடர்பினையும் துண்டித்துவிட்டு அவர்களின் வாகனத்தையும் கடத்தி அதன்மூலம் தம்பதியர்களை ஏற்றிச் சென்றனர். இவ்விடயம் தொடர்பாக அன்றைய இலங்கையின் அமெரிக்க உயர்ஸத்தானிகராக பணியாற்றிய Mr. John Reed என்பவருக்கு பொலிஸ் தரப்பினரால் தெரிவிக்கப்பட்டதுடன் குடாநாடு முழுவதும் சம்பந்தப்பட்ட தம்பதியர்களைத் தேடி பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து தமது தேடுதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டபோதும் அவர்களை கண்டுபிடிக்க முடியாது போய்விட்டது. இந்நிலையில் ஆயுதக் குழுவினரால் முன்வைக்கப்பட்ட பணமோ அன்றி



படிப்பகம்

கைதிகளின் விடுதலை சம்பந்தமாகவோ எதனையும் ஆயுதக் குழுவினரால் பெறமுடியாமற்போனது. இந்நிலையில் திரு. தம்பாப்பிள்ளை மகேஸ்வரன் அவர்களைத் தலைமையாகக்கொண்ட அமைப்பு முதலாவது வங்கிக் கொள்ளையாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி என்னும் கிராமத்திலுள்ள மக்கள் வங்கியை கொள்ளையடித்தனர்.

இந்த வங்கிக்கொள்ளை இலங்கையில் நடைபெற்ற வங்கிக்கொள்ளைகளில் பாரிய கொள்ளையென அறிக்கைகள் வெளியாகின. இந்த வங்கிக் கொள்ளையில் நகைகள் மட்டும் (45லட்சம்) ரூபாவெனவும் அத்துடன் (15லட்சம்) ரூபா பணநோட்டுகளும் அடங்கியதாக தகவல்கள் தெரிவித்தன. இந்த வங்கிக்கொள்ளை 13.1.1984ந் திகதியன்று நடாத்தப்பட்டது. மேற்படி வங்கியில் திருடப்பட்ட நகைகள் 3வாரங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு சுன்னாகம் என்னும் இடத்தில் ஒருவரின் வீட்டில் வைத்து அனைத்து நகைகளும் உருக்கப்பட்டது. இந்த நகைகள் உருக்கப்பட்ட போது அதனைச் செயற்படுத்தியவர்கள் சில நகைகளைத் திருடியதன் விளைவாக 3நபர்கள் கொலை செய்யப்பட்டனர்.

இவ்வங்கிக் கொள்ளையின் சூத்திரதாரிகளில் ஒருவரான மகேஸ்வரன் பின்னர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பனாகொடை இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது தப்பியோடியமையால் அவருக்கு பனாகொடை மகேஸ்வரன் எனப் பெயர் சூட்டப்பட்டது. மகேஸ்வரன் விடுதலையாகி தொடர்ந்தும் அமைப்பை நடாத்தமுடியாத நிலையில் வெளிநாடு சென்றார். அமைப்பினைச் சார்ந்த உறுப்பினர்களில் பலர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் (1984 மார்ச் மாதம் முதல்) தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கமைய 1987ல் விடுதலை செய்யப்பட்டனர். இந்நிலையில் அவரின் இயக்கத்தில் செயற்பட்டுக்கொண்டிருந்த குழுவினரை புலிகள் தம்பக்கம் இணைத்ததற்கமைய அவர்களில் முக்கியமான பாத்திரத்தை வகித்துக்கொண்டிருந்த வரதன் என்பவர் பாதுகாப்பு பிரதி அமைச்சரான திரு ரஞ்சன் விஜேரத்னா அவர்களின் வாகனத்திற்கு முன்னால் தற்கொலைக்குண்டுடன் மோதியதில் அமைச்சர் உட்பட பல பாதுகாப்பு அதிகாரிகள் (14) பேரும், பொதுமக்களும் 1991 மார்ச் மாதம் 2ந் திகதி கொல்லப்பட்டனர்.

www.padippakam.com

## ஆறாவது திருத்தச் சட்டம் (08.10.1983)

1983ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8ந் திகதி திரு ஜே.ஆர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் அரசியலமைப்பிற்கு கொண்டுவரப்பட்ட ஆறாவது திருத்தச் சட்டம் தமிழ்பேசும் மக்களின் நியாயமான அரசியல் தொடர்பான கோரிக்கைகளை பாராளுமன்றத்தினுள்ளோ அன்றி மக்கள் மத்தியிலோ பேசுவதற்குக்கூட தடைவிதித்து. அச்சட்டத்தின் 157வது பிரிவு பின்வரும் வரையறைகளை தமிழ் மக்கள்மீது திணித்தது.

1. இலங்கை ஒரு தீவு என வரையறுக்கப்பட்டுள்ள எல்லைப் பிரதேசத்தினுள் தனியான அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்கு இலங்கை பிரஜை எவரேனும் இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியிலிருந்து நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆதரவு அளித்தல் அல்லது ஊக்குவித்தல் நிதியுதவி வழங்குதல் அல்லது அதற்கான தீர்மானமொன்றை முன் மொழிதல் சட்டரீதியான குற்றச் செயலாகும்.

2. அரசியற் கட்சிகள், அபிவிருத்திச் சங்கங்கள் அல்லது கழகங்கள் தனி அரசு ஒன்றினை ஸதாபித்தல் போன்ற விடயங்களை தனது இலக்குகளில் அல்லது குறிக்கோள்களில் ஒன்றாக கொண்டிருக்கலாகாது.

மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு எதிராக செயற்படும் நபரொருவர் மேன்முறையீட்டு நீதிமன்ற விசாரணையின்மூலம் குற்றவாளியாகக் காணப்பட்டால் ஏழு ஆண்டு காலத்திற்கு இலங்கையின் குடியுரிமையை இழக்க நேரிடும் அத்துடன் அவரது அன்றாட சீவனத்திற்குரிய நிதி வசதி தவிர்ந்த எனைய ஆதனங்கள், பொருட்கள் அசையும் அசையாத சொத்துக்கள் அனைத்தையும் இழக்க வேண்டியவராவார். ஏழு ஆண்டு காலத்திற்கு குடியுரிமை இழப்பாரென்பது பின்வரும் காரணங்களை இழந்தவர் என்பதனை குறிப்பிடுகின்றது.

1. வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ஒன்றினை பெறுவதற்கான உரிமை,
2. பகிரங்கப் பரீட்சை எதற்கும் தோற்றுவதற்கான உரிமை,
3. அசைவற்ற ஆதனங்கள் எதனையும் சொந்தத்தில் வைத்திருப்பதற்கான உரிமைகள்,
4. உயர் தொழில் அல்லது வியாபாரத்தில் ஈடுபடுவதை பதிவு செய்வதற்கான உரிமை அத்துடன்.



படிப்பகம்

www.padippakam.com

5. பாராளுமன்ற உறுப்பினராக இருப்பின் அப்பதவியிலிருந்து அகற்றப்பட்டவராவார்.

இச்சட்டமூலத்திற்கமைய அரச அலுவலர்கள்,சட்டத்தரணிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை, உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், அனைவரும் நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவாக மறைமுகமாகவோ, அல்லது நேரடியாகவோ ஆதரவளிக்க மாட்டோமென சத்தியப் பிரமாணம் செய்யவேண்டுமென கூறப்பட்டது.

இச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதற்கமைய அன்றைய பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்த திரு. அமிர்தலிங்கம் அவர்களும் த.வி.கூட்டணியின் ஏனைய பிரதிநிதிகளும் சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்தமையால் தாமாகவே பதவியை இழந்தனர். இந்நிலையில் திரு. அநுரா பண்டாரநாயக்கா அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். ஆறாவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டதும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் ஆயுதக் குழுக்களுக்கும், அரசியற் கட்சிகளுக்கும் நேரடியாகவும், மறைமுகமாகவும் உதவிகளை வழங்கிவந்த பல அரச உத்தியோகஸ்த்தர்கள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், புத்திஜீவிகள் போன்றோர் தமது செயற்பாடுகளிலிருந்து முற்றாக ஒதுங்கினர்.

மேற்கூறிய அரசியலமைப்பில் ஏதேனும் மாற்றம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமாயின் அதற்கான சட்டவாக்கமும், பிரேரணையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களால் அத்தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டு பின்னர் நாடளாவியரீதியிலான சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடப்பட்டு பெரும்பான்மையான மக்களின் ஆதரவினைப் பெற்றால் மட்டுமே அத்திருத்தம் நடைமுறைப்படுத்துவதற்கு செல்லுபடியானதாக அமையுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

●



படிப்பகம்

www.padippakam.com

**விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளின் வன்முறையினால் பலியான இளைஞர்களும், யுவதிகளுமாக (36) பேரும், முழுமையாக அழிவுற்ற கிளிவெட்டி கிராமமும்.**

1984ம் ஆண்டுவரை ஆயுதக்குழுக்களின் அதிகாரத்திற்கு அங்கீகாரம் வழங்காதிருந்த அக்கிராமப்பகுதிகள் ஆயுதக்குழுக்களின் வருகையுடன் வன்முறைச் சம்பவங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். இவர்களின் முதல் நடவடிக்கையாக 1985 மே மாதம் 30ந் திகதி கிளிவெட்டிக் கிராமத்தில்வைத்து சிங்கள நபர்கள் இருவரின் மோட்டார் பைசிக்கிள் இரண்டு (Moter Bike) புலிகள் இயக்கத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களுடன் மேலும் சிலரும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சிங்கள மக்கள் கிளிவெட்டிக் கிராமத்தை அண்டியுள்ள தெஹிவத்தை என்னும் சிங்களக் கிராமத்தை வதிவிடமாகக் கொண்டவர்களாகும்.

தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட மக்கள் தமது கிராமத்திற்குச் சென்று அங்கு முகாம் அமைத்திருந்த இராணுவத்தினரிடம் முறையீடு செய்ததற்கமைய கிளிவெட்டிக் கிராமத்தை தாக்குவதற்கான திட்டங்கள் அவர்களினால் தீட்டப்பட்டது அதற்கமைய அன்றிரவு கிளிவெட்டிக் கிராமத்திற்குள் நுழைந்த ராணுவத்தினரும், சிங்களத்தீவரவாத இளைஞர்களும் இணைந்து கிராமத்தில் அமைந்திருந்த ஏறக்குறைய 184 வீடுகளுக்கு தீவைத்து நாசமாக்கியதுடன் 36 இளைஞர்களை கைதுசெய்தனர் கைதுசெய்யப்பட்ட (யுவதிகள் இருவர் உட்பட) அனைவரையும் கிளிவெட்டியிலிருந்து திருமலை செல்லும் (கந்தளாய் வீதியில்) (18) கிலோமீற்றருக்கு அப்பாலமைந்துள்ள சாம்பற்பிட்டி என்னும் இடத்திற்கு கொண்டுசென்று வரிசையாக நிறுத்தி துப்பாக்கிப் பிரயோகம் செய்து தீமிட்டுக் கொழுத்தினர்.

மறுநாள் கிராமத்திலுள்ள பெறுமதியான பொருட்களை சூறையாடுவதற்காக பகல் நேரத்தில் கிராமத்திற்குள் புகுந்தவேளை தமக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாதென சம்பவம் நடந்த இரவு தலைமறைவாக பக்கத்து விவசாயக் காணிகளுக்கு சென்று தலைமறைவாகியிருந்த வயோதிபர்கள் மீண்டும் தத்தமது வீடுகளைப் பார்வையிடுவதற்காக கிராமத்திற்குள் வந்திருந்ததைக் கண்ணுற்ற வன்முறையாளர்கள் வயதான 8 பெரியவர்களை



படிப்பகம்

சுட்டுக்கொன்றுவிட்டு கிராமமக்களின் பெறுமதிமிக்க உடமைகள் அனைத்தையும் சூறையாடிச்சென்றனர்

30ந் திகதி பகல் விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சம்பவத்தின் எதிரொலியாக தமக்கு ஆபத்து ஏற்படலாமென கருதிய பெண்களும் குழந்தைகளும் தம்மை பாதுகாத்துக்கொள்வதற்காக அண்மையிலமைந்திருந்த முஸ்லிம் கிராமங்களுக்கு அன்று பிற்பகல் ஏழு மணியளவில் சென்று தஞ்சமடைந்தனர் முஸ்லிம் மக்களும் தாராள மனப்பான்மையுடன் இன்முகங்காட்டி அவர்களை வரவேற்று அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கினர் இதனைத்தொடர்ந்து பலமாதகாலமாக இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் முஸ்லிம் கிராமங்களான ஜின்னாநகர் பாரதிபுரம் பாலத்தோப்பூர் தோப்பூர் அல்லைநகர் போன்ற கிராமங்களிலேயே தமது வாழ்க்கையை தொடர்ந்தனர்.

## கிளிவெட்டி கிராமத்தில் (31.05.1985ல்) இடம்பெற்ற இராணுவ வன்முறைகளில் படுகொலை செய்யப் பட்டவர்கள்

அம்பலவாணர் கந்தசாமி, அருளானந்தம் ராசா, அருளானந்தம் நவராசா, அருளானந்தம் துரைராசா, கனகசபாபதி யோகராசா, கனகசபாபதி மனோகரன், கதிரவேற்பிள்ளை அருமைப்பிள்ளை, சித்திராவி சத்தியநாகன், மயில்வாகனம் அமிர்தலிங்கம், கணபதிப்பிள்ளை வடிவேல், வேலுப்பிள்ளை நல்லலிங்கம், கந்தலிங்கம் கோடிஸ்வரன், மயில்வாகனம் குமாரசிங்கம், காத்தமுத்து ராசா, வடிவேல் ராசு, இராசையா தங்கன், நாராயணபிள்ளை விஜயராஜா, ஐயாத்துரை இராசலிங்கம், மயில்வாகனம் குகேந்திரன், வீரக்குட்டி மாணிக்கராசா,

மயில்வாகனம் மகேந்திரன், இராசேந்திரம் அருந்தவராசா, செல்வராசா சூரியா, சிவராசா யோகமலர், சுப்பிரமணியம் ஜெகதீசன், கந்தப்பு நாதன், சதாசிவம் சத்தியமூர்த்தி, சிவநாதன் யோகன், சுப்பிரமணியம் இராசரெத்தினம், சதாசிவம் புண்ணியமூர்த்தி, விஸ்வலிங்கம் குணசேகரம், மருதநாயகம் ஈஸ்வரன், வயிரமுத்து தியாகராசா, மயில்வாகனம் கனகசபை, வீரபத்திரன் சிவக்கொழுந்து, ஏ.ஆர்.எம் வண்டையா, சுப்பிரமணியம் குருக்கிணி, இருவயது குழந்தை, சித்திராவி புண்ணியமூர்த்தி, நல்லையா நாகராசா, குணசேகரம் வீரசிங்கம்,

www.padippakam.com

சுப்பிரமணியம் ஞானசேகரம், ஐயம்பிள்ளை சிவாஜிநாதன், கந்தையா ஞானரேகரம், கந்தையா புவனேஸ்வரன், இராமுப்பிள்ளை முத்துக்குமார்.

வயிரமுத்து சிவானந்தராசா, பொன்னுத்துரை கிருபைராசா, துரைசாமி தங்கவேலு, பேரின்பராசா சிங்கன், கதிரவேலப்பிள்ளை கணேசரெத்தினம், சித்திரவேல் சிவானந்தராசா, கதிர்காமத்தம்பி நவரெத்தினராசா.

மேற்கூறியவர்களில் முதலாவதாக குறிப்பிட்டள்ள (4) பேர் ஆயுதக் குழுக்களாலும், பின்னையவர்கள் இருவர் வெலிக்கடைச் சிறைச்சாலையிலும், மற்றையவர் யாழ்ப்பாணம் குருநகர் முகாமிலும் கொல்லப்பட்டவர்களாகும்.

ஏறக்குறைய 184 குடும்பத்தவர்களை உள்ளடக்கிய கிராமத்தில் மேற்கூறிய தொகையினர் உயிர்ப்பலி கொள்ளப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை மக்கள் தொகை அடிப்படையில் ஆகக்கூடுதலான உயிர்களை பலிகொடுத்த கிராமம் கிளிவெட்டி கிராமம் என்பதை புள்ளிவிபரம் உறுதிப்படுத்தியுள்ளது.

இவர்கள் தவிர (10.09.1992ல்) கிளிவெட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஆற்றினைக் கடப்பதற்காக பாவிக்கப்படும் பாதைக்கு குண்டுவைத்த விடுதலைப் புலிகளின் பயங்கரவாதிகள் 22 இராணுவத்தினரதும் 07 அப்பாவிகளினதும் உயிர்களை பலியெடுத்தனர்.

Lest We Forget Massacres of Tamils (1956 --2001) விடுதலைப் புலிகளின் பிரசித்தி பெற்ற செய்தித்தளம் வெளியிட்ட அப்பட்டமான பொய்யுரையினை இங்கு தருகின்றோம்.

Kiliveddi is a Tamil village in the Mutur region of the Trincomalee district. In 1977 it was annexed to the Seruwila electoral division. Following this, the people of this village was attacked by the military and the Sinhala leadership forcing the people to gradually leave the village. On 01.01.1985, the Sri Lankan military, its home guards, and Sinhala thugs entered the Kiliveddi village at 2.00 pm. Kanagasabai was working as coroner for the area at that time and he has traveled to neighbouring villages on duty. When he saw the invaders he hid in a hay stack. He could identify many of the Sinhala thugs from the



படிப்பகம்

neighbouring Sinhala village of Dehiwatthe among the thugs. On that day 10 people were killed including 4 women. Among the dead women were Kamala Rasaih and her daughter and Rajeswary Sharma and her daughter. 125 houses were burnt that day. A further 13 people, eight men and five women, were taken to the Dehiwathe village. The men were murdered and the women were raped. Among these women were Mrs. Sinniah and her daughter. The women were left naked after they were raped. When some Kiliveddi people with the help of the Sinhala people in the Dehiwathe village went to see, they saw one of the Kiliveddi women naked and tied up. Member of Parliament Thangathurai made a statement about the incident to the Daily Mirror paper. It was reported widely in the international media. Thangathurai was accused of false propaganda for making the statement. The then Minister of Defense ordered his arrest. Thangathurai heard this and escaped to India.

இச்செய்தியினைப்போன்ற 239 உண்மைக்குப் புறம்பான செய்திகள் புலிகளினால் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு தங்கத்துரை அவர்கள் பற்றி கருத்துத் தெரிவித்த விடுதலைப்புலிகள் அவர் இந்தியாவுக்கு ஓடித்தப்பியதாகவும் மொத்தமாக கிளிவெட்டியில் 10 பொது மக்கள் மட்டுமே கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்ததன் மூலம் தம்மால் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பிக்க முன்வந்துள்ளனர்.

திரு. தங்கத்துரை அவர்கள் இச் சம்பவம் இடம்பெற்று இரு மாத காலப் பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மூன்று மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு ஜூன் மாதம் விடுதலை செய்யப்பட்டார். அவர் பிரபாகரனைப் போன்று பங்கருக்குள் பதுங்கியிருப்பவர் அல்ல. மக்களின் நல்வாழ்வுக்கான பணியிலேயே தமது முழுமையான வாழ்க்கையை அவரது மரணம்வரை செலவு செய்தார் என்பதனை திருமலை வாழ் மக்கள் அறிவர்.

●

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

**கிழக்கு மாகாணம் வட மாகாணத்துடன் இணைவு வடமாகாண அரசியல்வாதிகளின் வற்புறுத்தல்கள்.**


படிப்பகம்


www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## கிழக்கு மாகாணம் வட மாகாணத்துடன் இணைய வேண்டுமென வடமாகாண அரசியல்வாதிகள் வற்புறுத்துவதன் மர்மமென்ன?





மாகாணங்களின் விஸ்தீரண அமைவுகளுக்கமைய வட மாகாணம் 3429 சதுரமைல் பரப்பளவினைக் கொண்டதாக அமைந்துள்ளது. இந்நிலையில் அம்மாகாணத்தில் வாழ்ந்த மக்களின் புள்ளிவிபரம் (1981)ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி மொத்த மக்களின் தொகை (10,23,228) ஆகும். இதனடிப்படையில் தமிழர்களின் விகிதாசாரம் 92% வீதமாகவும் சிங்களவர்கள் 3% ஆகவும் முஸ்லிம்கள் 5% ஆகவும் இருந்தனர். யாழ்ப்பாணக் குடா நாடு அண்ணளவாக 440 சதுரமைல்களைக் கொண்டது. வடமாகாணத்தின்



படிப்பகம்

www.padippakam.com

மொத்த நிலப்பரப்பான 3429 சதுரமைல்களில் 12.8 வீத நிலப்பரப்பில்தான் (440சதுரமைல்கள்) 79.3% மான தமிழர்கள் 812 247 பேர் வாழ்ந்தனர். ஏனைய தமிழர்களான 210 981 பேர் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களில் வாழ்ந்தனர். அதாவது 87% வீதமான நிலப்பரப்பினை உள்ளடக்கிய 2989 சதுர மைல்களைக்கொண்ட நிலப்பரப்பில் அவர்கள் வாழ்ந்தனர்.

அங்கு வாழ்ந்தவர்களில் ஏனைய இனத்தவர்களான முஸ்லிம்கள், சிங்களவர்கள் முறையே 62 638, 33 149, ஏனையவர்கள் 2453. இந்நிலையில் சகல தமிழ் ஆயுதக் குழுக்களும். தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் கட்சிகளும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்குள்ளேயே தமது தளங்களைக் கொண்டுள்ளதோடு அங்கிருந்தே செயற்படுகின்றன. வட மாகாணத்தின் எஞ்சிய சகல மாவட்டங்களான மன்னார், வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி போன்ற மாவட்டங்கள் நிலப்பரப்பில் 87% மான 2989 சதுர மைல் நிலப்பரப்பினைக் கொண்டுள்ளன. ஆயினும் இம்மாவட்டங்களின் சனத் தொகை 370 616 ஆக அதாவது 33% மாக மட்டுமே உள்ளது. இந்நிலையிலேயே கிழக்கு மாகாணமும் வட மாகாணத்துடன் இணையவேண்டுமென்னும் கோரிக்கையினை வடமாகாண அரசியல்வாதிகள் அடம்பிடிக்கின்றமை புரியாத புதிராகவுள்ளது.

## இலங்கையின் நிர்வாகப் பிரிவுகளின் உருவாக்கம் (மாகாணங்களும், மாவட்டங்களும்)

1883ம் ஆண்டின் கோல்புறூக் சீர்திருத்தங்கள் இலங்கையின் நிர்வாக வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பு முனையை உருவாக்கின. இச்சீர்திருத்தங்களின் மூலம் நாட்டில் ஒன்றிணைந்த ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட்டதோடு. பல்வேறுவரி வசூலிப்புப் பிரதேசங்களும் இறைவரி முகவர் திணைக்களங்களும் ஐந்து மாகாணங்களாகத் திரட்டி வலுப்படுத்தப்பட்டன. 1833 அக்டோபர் முதலாந் திகதியின் அறிக்கைகளின் பிரகாரம் பின்வரும் மாகாணங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வட மாகாணம் – யாழ்ப்பாண மாவட்டம், மன்னார், வன்னி, நுவர கலாவியவில் திசாவன்னி மற்றும் நெடுந்தீவு.



படிப்பகம்

www.padippakam.com

1. கிழக்கு மாகாணம் – திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களும் தம்மங்கடுவ மற்றும் பிந்தன்ன பிரதேசங்களும்.
2. தென் மாகாணம் – காலி, தங்காலை, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களும் சப்பிரகமுவாவின் திசாவன்னிய, கீழ் ஊவா மற்றும் வெல்லஸ்ஸ பிரதேசங்களும்.
3. மேல் மாகாணம் – சிலாபம், புத்தளம் மாவட்டம், ஏழுகோறளைகளின் திசாவன்னி, நான்கு கோறளைகள், துன்கோறளை மற்றும் கீழ் புலத்கம பிரதேசங்களும்.
4. மத்திய மாகாணம்– கண்டி, யட்டிநுவர, உடுநுவர, கரிஸ்பத்துவ. தும்பனை, தும்புர, ஹேவாஹெட்ட, கொத்மலை, மேல்புளத்கம, வியலுவ மாவட்டங்களும், ஊவாவின் திசாவன்னி, மாத்தளை மற்றும் உடபலாத்த.

ஆயினும் 1845ல் ஆறாவது மாகாணமாகப் புத்தளத்தைத் தலைநகராக்க கொண்டு வடமேல் மாகாணம் எனப்பிரகடனம் செய்யப்பட்டது. புதிய மாகாணம் மேல்மாகாணத்திலிருந்து உருவாக்கப்பட்டதோடு. சிலாபம். புத்தளம் மாவட்டங்களையும். ஏழு கோறளைகளின் திசாவன்னியையும் உள்ளடக் கியிருந்தது. தென் மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டம் மேல் மாகாணத்தோடு சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1873ல் வட – மத்திய மாகாணம் என அழைக்கப்படும் ஏழாவது மாகாணம் உருவாக்கப்பட்டது. அது வடமாகாணத்தின் நுவரகலாவிய மாவட்டம். கிழக்குமாகாணத்தின் தம்மன்கடுவ என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. இவ்வேளையில் தெமளகப்பத்து வடமேல் மாகாணத்திற்கு திருப்பியளிக் கப்பட்டது.

1886ல் எட்டாவது மாகாணமாகிய ஊவா மத்தியமாகாணத்திலிருந்து பதுளை மாவட்டத்தைப் பிரிப்பதன் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது.

1889ல் மேற்கு மாக்காணத்திலிருந்து கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களை துண்டாடியதன் மூலம் ஒன்பதாவது சப்ரகமுவ மாகாணம் உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு மாகாணமும் ஓர் அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டது. அரசாங்க அதிபர், கலெக்டர்களின் அல்லது கரையோர மாகாண அரசாங்க முகவர்களின் மற்றும் கண்டி மாகாணங்களின் ஆணைக்குழுச் சபை இறைவரி ஆணையாளர்களின் வழித்தோன்றலாக இருந்தனர். 1955வரை மாகாண நிர்வாக முறைமை தொடர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பின்வரும் அட்டவணை 1901ல் ஒன்பது மாகாணங்களின் தலைநகர்களின் அந்தஸ்தை விபரித்தது.

| மாகாணம் | தலை நகர் | சதுர மைல் |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 1432 |
| மத்திய மாகாணம் | கண்டி | 2300 |
| தென் மாகாணம் | காலி | 2146 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 3363 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 4039 |
| வட மேல் மாகாணம் | குருநாகல் | 2996 |
| வட மத்தியமாகாணம் | அநுராதபுரம் | 4002 |
| ஊவா மாகாணம் | பதுளை | 3154 |
| சப்ரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | 1901 |

**1955ம் ஆண்டில் 222ம் இலக்க நிர்வாக மாவட்டச் சட்டம் ஆக்கப்பட்டதோடு. பின்வரும் இருபது நிர்வாக மாவட்டங்கள் உருவாக்கப்பட்டு. ஒவ்வொரு மாவட்டமும் ஓர் அரசாங்க அதிபரின் பொறுப்பில் விடப்பட்டது.**

| | | | |
|---|---|---|---|
| கொழும்பு | காலி | வவுனியா | அநுராதபுரம் |
| களுத்துறை | மாத்தறை | மட்டக்களப்பு | பொலன்நறுவை |
| கண்டி | மாத்தளை | பதுளை | அம்பாந்தோட்டை |
| யாழ்ப்பாணம் | குருநாகல் | இரத்தினபுரி | திருகோணமலை |
| நுவரெலியா | மன்னார் | புத்தளம் | கேகாலை |

கடந்த சில தசாப்த காலங்களாக மொனராகலை (1959), அம்பாறை (1961), முல்லைத்தீவு (1976), கம்பஹா (1978), கிளிநொச்சி (1983) முன்னைய மாவட்டங்களில் இயையுள்ளமாவட்ட எல்லைகளை மீள்வரைவு செய்ததன் மூலம் மேற்குறிப்பிட்டுள்ள மாவட்டங்கள் உருவாக்கப்பட்டன.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் நேரடியான உள்ளூர் நிர்வாகத்துக்கென 241 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் 138 இறைவரி உத்தியோகத்தர் பிரிவுகள் இருந்தன. 1981ல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்குவதற்கு முன்னர் 7316 அங்கத்தவர்களைக் கொண்ட 549 கிராம சபைகளும், 528 அங்கத்தவர்களைக் கொண்ட 33 பட்டின சபைகளும் இருந்தன.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் 1987ல் இலங்கையின் 25 மாவட்டங்களிலும் 5695 அங்கத்தவர்களை தெரிவு செய்யும் 257 பிரதேச சபைகளையும், 416 அங்கத்தவர்களை தெரிவு செய்யும் 49 நகர சபைகளையும், 258 அங்கத்தவர்களை தெரிவு செய்யும் 12 மாநகர சபைகளையும் ஐ.தே.கட்சி அரசாங்கம் மக்களின் எந்தவித கருத்துக் கணிப்புமின்றி ஒருதலைப்பட்சமாக ஏற்படுத்தியது.

## கிழக்கு மாகாணம்

கிழக்கு மாகாணம் வடக்கில் மகா ஓயாவையும், கிழக்கில் வங்காளவிரிகுடாக் கடலையும், தெற்கில் கும்புக்கன் ஓயாவையும், மேற்கில் மொனராகல, பதுளை, மாத்தளை, பொலநறுவை மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

மேற்காட்டிய தகவல்களின்மூலம் கிழக்கிலங்கையிலுள்ள மூலவளங்களை சுரண்டுவதற்காகவே வட மாகாண அரசியல்வாதிகள் கோரிக்கைகள் தொடர்வது தெளிவாகின்றது. 1981ம்ஆண்டின் சனத்தொகை புள்ளி விபரங்களுக்கமைய வடமாகாணத்தில் பின்வருமாறு தமிழ் மக்களின் எண்ணிக்கை அமைந்திருந்தது.

| வடக்கு | மொத்தம் | தமிழர் | சிங்களவர் | முஸ்லிம் | இந்-தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 831,112 | 792,246. | 4,615 | 13,757 | 20,001 | 493 |
| மன்னார் | 109,940 | 54,106 | 8,710 | 28,464 | 14,072 | 1,588 |
| வவுனியா | 95.904 | 54,541 | 15,876 | 6,640 | 18,592 | 255 |
| முல்லைத்தீவு | 77,512 | 58,904 | 3,948 | 3,777 | 10,766 | 117 |
| மொத்தம் | 1,111,468 | 969,797 | 33.149 | 52,638 | 63,431 | 2,453 |
| விகிதம் | 100% | 86.35% | 2.98% | 4.73% | 5.71% | 0.23% |

## வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு (Hectares )

இலங்கையின் மொத்த நிலப்பரப்பு 6,560,980 hectares என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது இந்த மொத்த நிலப்பரப்பில் வடமாகாணம் 888,460 hectares நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது அவை மாவட்டரீதியாக பின்வரும் பரப்பளவைக் கொண்டுள்ளது யாழ்ப்பாணம் 102,530, கிளிநொச்சி



படிப்பகம்

www.padippakam.com

127 930, மன்னார் 199 620, வவுனியா 196 690, முல்லைத்தீவு 261 690, அத்துடன் கிழக்குமாகாணம் 999,600 hectares நிலப்பரப்பை உள்ளடக்கியுள்ளது. அவை மாவட்டரீதியாக பின்வரும் பரப்பளவைக் கொண்டுள்ளது திருகோணமலை 272 680, மட்டக்களப்பு 285,430, அம்பாறை 441,490, இரு மாகாணங்களின் மொத்தநிலப்பரப்பு முழு நாட்டினதும் நிலப்பரப்பில் 28.8 வீத நிலத்தொகுதியை உள்ளடக்கியுள்ளது நாட்டின் எஞ்சியபகுதி 71.2 வீத நிலப்பரப்பை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது அத்துடன் நாட்டின் மொத்த கடல் வளத்தில் 53% பகுதி வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்புடன் இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது (ஆதாரம் அரச மதிப்பீட்டுத் திணைக்களம் 1986).

பிரதானமாக தமிழ் பேசும் மக்கள் என்னும் பதம் ஒரு தனிமையான ஜன சமூகத்தையன்றி யாழ்ப்பாணத் தமிழர், மட்டக்களப்புத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள், மற்றும் இந்தியத் தமிழர்கள் ஆகிய அனைவரையும் குறிக்கின்றது. (தமிழ் பேசும் மாநிலம் என்னும் பதம்) வட கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கும் புவியியற்பரப்பைக் குறிக்கின்றது. கிழக்கு மாகாணம் வரலாற்றுரீதியாக மட்டக்களப்புத் தமிழரும் முஸ்லிம்களும் வாழும் பிரதேசங்களாகும். வரலாற்றுரீதியாக யாழ்ப்பாணத்து தமிழர் தொழில் ரீதியாகவும், இந்தியத் தமிழர் இனக்கலவரத்தின் நிமிர்த்தம் கிழக்கு மாகாணத்திற்கு இடம் பெயர்ந்தும் கிழக்கு மாகாணத்தில் வாழ்வதே யதார்த்தமாகும். இந்நிலையில் அப்பிரதேசம் வடமாகாணத்தவர்களின் தாயகமாக முடியாது. இவ்விடயங்கள் தொடர்பாக கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினராக நீண்டகாலமாக பணியாற்றியவரும் முன்னாள் உள்நாட்டலுவல்கள் அமைச்சரும், நீதியமைச்சருமாகிய திரு கே.டபிள்யூ. தேவநாயகம் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கமைய மட்டக்களப்புத் தமிழர்கள் தம்மை யாழ்ப்பாணத் தமிழர்களிலிருந்து வேறுபட்ட ஒரு தனித்தன்மைகொண்ட தமிழர்களாக நோக்குகின்றனர் என்றும் அவர்களுக்கு வித்தியாசமான சட்ட நடைமுறைகள் உண்டென்றும் கூறியுள்ளார். மட்டக்களப்புத் தமிழர் ஒருவித்தியாசமான ஜனசமூகம் என்பதற்கு ஆதாரங்கள் உண்டென்றும் ஆகவே வடபகுதி மக்களுக்கு கிழக்கு மாகாணத்தில் தாயகம் இல்லையென்றும் அவர்கூறியுள்ளார். இதே கருத்தினை முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு.செ. இராசதுரை, திரு. பிரின்ஸ் காசிநாதர் மற்றும் திரு. திவ்வியநாதனும் வேறுபலரும் ஆதரித்துள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

# திம்பு பேச்சுவார்த்தை (08.07.1985)



1983ம் ஆண்டு நடைபெற்ற நாடாளாவிய இனக்கலவரத்தின் பின்னர் பலதரப்பட்ட பேச்சுவார்த்தை முயற்சிகள், வட்டமேசை மகாநாடுகள் போன்ற முயற்சிகளிலெல்லாம் ஆயுதக் குழுக்களும், மிதவாத அரசியல்வாதிகளும் பங்குகொண்டனர். குறிப்பாக இந்தியாவில் பாதுகாப்பின்மூலம் தஞ்சமடைந்திருந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் முயற்சியின் காரணமாக இந்திய அரசு பேச்சுவார்த்தை ஒன்றிற்கு மத்தியஸ்தம் வகிக்க முன்வந்தது. அதனடிப்படையில் ஸ்ரீலங்கா அரச தரப்பினரையும், தமிழ் தரப்பினராக மிதவாத மற்றும் தீவிரவாத தலைமைகளையும் ஒரே மேசைக்குள் அழைத்து பூட்டான் என்னும் நாட்டின் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். தமிழ் தரப்பிலிருந்து அனைத்து விதமான தலைமைகளும் ஒற்றுமையாக ஒரே விதமான கோரிக்கைகளை முன்வைத்த முதலும், இறுதியுமான வரலாற்றுச் சம்பவம் அதுவாகும். எனினும் திரு. ஜே.ஆர் ஜயவர்தனாவின் இழுத்தடிப்பு ராஜதந்திர நடவடிக்கைகளினாலும். தமிழ் தரப்பினரின் ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகளினாலும் இந்தத் திம்புப் பேச்சுவார்த்தையானது எவ்வித ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப் படாமையே கலைந்துபோனது.



படிப்பகம்

www.padippakam.com



1985இல் இடம்பெற்ற திம்பு பேச்சுவார்த்தையின் போது மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருந்த ஏனைய மூன்று ஆயுத அமைப்புக்களையும் தம்முடன் இணைத்து திம்புக்குச் சென்ற பிரபாகரன் திம்புப் பேச்சு வார்த்தை தோல்வியுற்றதும் எஞ்சிய மூவரையும் படுகொலை செய்தார்.

யுத்த நிறுத்தம் அமுலாக்கப்பட்டதைத் தொடர்ந்து பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் 1985 யூலை மாதம் 8ந் திகதி ஆயுத அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றுடன் இலங்கை அரசு தனது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது. அரசாங்க தரப்பிற்கு ஜனாதிபதியின் சகோதரரான திரு. எச். டபிள்யூ. ஜயவர்தனா அவர்கள் தலைமை தாங்கினார். போராளிகள் அமைப்பின் சார்பிலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பிலும் தலா இரண்டு பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்தியாவின் சார்பில் அவதானிகள் குழுவொன்றும் கலந்து கொண்டது. இதுவே இலங்கை அரசு ஆயுத அமைப்புக்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்ட முதலாவது தடவையாகும்.

ஆனால் இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது 1984 டிசம்பரில் கொழும்பு சர்வகட்சி மகாநாட்டில் இலங்கை அரசு முன்வைத்து கூட்டணியினரால் நிராகரிக்கப்பட்ட திட்டத்திலும் குறைந்ததோர் திட்டத்தையே இலங்கை அரசின் பிரதிநிதிகள் சமர்ப்பித்தனரென திரு. அமிர்தலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார்கள். திம்பு மகாநாட்டில் தமிழ்க் குழுக்கள் அனைத்தும்



படிப்பகம்

ஒன்றிணைந்து நான்கு அம்சத் திட்டமொன்றை முன்வைத்தனர். இவற்றின் அடிப்படையிலேயே எந்தவித பேச்சுவார்த்தைகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென அவை வலியுறுத்தின. அக்கோரிக்கைகள் பின்வருமாறு:

1. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.
2. தமிழினத்தின் தாயகத்தை அனுமதிக்க வேண்டும்.
3. தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைகள் அங்கீகரிக்கப்பட வேண்டும்.
4. இலங்கையிலுள்ள தமிழர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்கப்படவேண்டும்.

இக்கோரிக்கைகள் தமிழ் அமைப்புக்களால் முன்வைக்கப்பட்ட நிலையில் யூலை 14ந் திகதி முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் ஒத்திவைக் கப்பட்டன. அதனைத் தொடர்ந்து இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை ஆகஸ்ட் 12ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு எந்தவித தீர்வுமின்றி ஆகஸ்ட் 22ந் திகதி முடிவுற்றது.

குறிப்பு– தமிழர் தரப்பினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைகள்

இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்குடன் முதன்முதலாக அனைத்து ஆயுத அமைப்புக்களும் மிதவாத அரசியல்வாதிகளும் ஒரே மேடையில் அமர்ந்து பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் பேச்சுவார்த்தை நடாத்தியபோது இலங்கையின் மொத்த நிலப்பரப்பான 65,610 சதுர கிலோமீற்றர் பரப்பளவான நாட்டின் 18,354 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பினை அதாவது 28% வீதமான நிலப்பிரதேசத்தினையும் 53 வீதமான கடல் வளத்தினையும் (12.7%) மான இலங்கைத் தமிழர்களின் தாயகப் பிரதேசமாக அங்கீகரிக்க வேண்டுமென தமிழர்தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டமையால் அரச தரப்பினர் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறினர். அதன்பின்னர் பிரபாகரன் தலைமையிலான தமிழீழம் புத்தளம் மாவட்டத்தினையும் உள்ளடக்கியதான தமிழீழமென காகிதத்தல் வெளிக்காட்டப்பட்டிருந்தது.

## திம்பு மகாநாடு குழம்பியது

ஆகஸ்ட் 12ந் திகதி திம்புவில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகிய

www.padippakam.com

போது தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட 4 அம்சக்கோரிக்கைகளை ஜனாதிபதி ஜயவர்தனா அவர்கள் நிராகரித்து விட்டார்களென அறிவிக்கப்பட்டது. இந்நிலையிலும் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை 27ந் திகதி தமிழ்ப் பிரதிநிதிகள் மகாநாட்டிலிருந்து திடீரென வெளிநடப்புச் செய்தனர். இதற்கான காரணம் வவுனியா மாவட்டத்தில் படையினர் யுத்த நிறுத்தத்தை மீறி சில தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே தாம் இந்த வெளிநடப்பை மேற்கொண்டதாக கருத்துத் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் நூற்றுக்கு மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியானதால் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படும்போது தம்மால் சமாதானப் பேச்சுவார்த்தையொன்றில் கலந்துகொள்ள முடியாதெனத் தெரிவித்த தமிழ் அமைப்புக்கள் மகாநாட்டில் கலந்துகொள்ள மறுத்ததால் திம்பு மகாநாடு முறிவடைந்தது.

ஆனால் வல்வெட்டித்துறையில்வைத்து விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்ட சம்பவத்தினைத் தொடர்ந்தே அரச தரப்பினர் பேச்சுவார்த்தையை தொடரமுடியாதென ஆட்சேபனை தெரிவித்தனர். அதனாலேயே இந்திய தரப்பினர் தமிழர் தரப்பினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய நிலை உருவானது.

## நாடுகடத்தல்

திம்புப் பேச்சவார்த்தை முறிவடையாமல் அதனைத் தொடர்ந்து நடத்துவதற்காக இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஸ் பண்டாரி அவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் அவருக்குக் கட்டுப்படவில்லை. இச்சம்பவம் இரு தரப்பினர்களுக்குமிடையே கடுமையான வாக்குவாதத்தை ஏற்படுத்தியதாக அங்கிருந்து வந்த செய்திகள் தெரிவித்தன. இதனைத் தொடர்ந்து போராளி அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிலரை திரு. ராஜிவ் காந்தி அவர்கள் சந்திக்க முயன்றபோதிலும் அவர்கள் அதனை விரும்பவில்லை. அதனால் குறிப்பிட்ட அமைப்புக்களுக்கும் இந்திய அரசுக்குமிடையே கசப்புணர்வு வளர்ந்தது. இதனால் தமிழ்ப் போராளிகளின் மூன்று முக்கிய தலைவர்களை நாடுகடத்தும்



படிப்பகம்

www.padippakam.com

உத்தரவு இந்திய அரசால் பிறப்பிக்கப்பட்டது. டாக்டர் அன்ரன் பாலசிங்கம், சி. சந்திரகாசன், என். சத்தியேந்திரா ஆகியோர் இவ்வாறு நாடு கடத்தப்பட்டபோதிலும் பின்னர் அவர்களை இந்தியா திரும்பிவர இந்திய அரசு அனுமதித்தது.

## மாற்று அமைப்புகள்மீதான புலிகளின் தடையும், படுகொலைகளும்.

திம்பு பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டதனூடாக (5) ஐந்து தீவிரவாத அமைப்புக்களையும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் இலங்கை, இந்திய அரசுகள் வடகிழக்கு தமிழ் மக்களின் கூட்டுத் தலைமையாக அங்கீகரித்திருந்தன. இந்நிகழ்வானது தானே ஏக தலைவனாக வரவேண்டும் என்கின்ற திரு. பிரபாகரன் அவர்களினது நப்பாசையில் மண்ணை அள்ளிப்போட்ட செயலாக அமைந்தது. இந்நிலையில் திம்பு பேச்சுவார்த்தையின் மூலம் ஏனைய அமைப்புக்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உறவினைப் பயன்படுத்திய விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புக்களின் முகாம்கள், மற்றும் அவர்களின் செயற்பாடுகள் போன்ற அனைத்து விபரங்களையும் சேகரிப்பதிலேயே தமது கவனத்தினை மேற்கொண்டனர். அதற்கமைய திம்புப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் ஏனைய தலைவர்கள் அனைவரையும் அழித் தொழிப்பதனையே திரு. பிரபாகரன் அவர்கள் தொழிலாகக் கொண்டார். வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் இயங்கிய மாற்று இயக்கங்களை தாம் தடைசெய்வதாகவும் (14.12.1986ல்) அறிக்கை ஒன்றினை விடுதலைப் புலிகள் அமைப்பு வெளியிட்டது. அதற்கமைய மாற்று அமைப்புக்களின் ஆயுததாரிகள் அனைவரையும் கொன்றொழிக்குமாறும் தனது புலி உறுப்பினர்களுக்கு பிரபாகரன் கட்டளையிட்டார். முதலாவதாக ரெலோ அமைப்பினை தடைசெய்ததாக புலிகள் அறிவித்தனர். படுகாலைகளுக்கு அஞ்சிய பெரும்பாலான ரெலோ உறுப்பினர்கள் ஆயுதங்களைக் கைவிட்டு தப்பியோடினர். பலர் புலிகளால் கைது செய்யப்பட்டனர். இன்னுமொரு பகுதியினர் புலிகளிடம் சரணடைந்தனர். சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள் என வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் புலிகள் ஆங்காங்கே சுட்டு வீசினர். பலரை வீதியில் ரயர்களைப் போட்டு கொழுத்தினர். இப்படுகொலைகளில் கந்தன் கருணை படுகொலைகள் குறிப்பிடத்தக்கது. மேற்படி கந்தன் கருணை படுகொலையில்



படிப்பகம்

www.padippakam.com

(31.03.1987ல்) மட்டும் 56 ரெலோ அமைப்பின் ஆயுததாரிகள் ஒரு வீட்டினுள் அடைத்துவைத்து கிரனைட் குண்டுத் தாக்குதல் மூலம் அனைவரும் கொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த ரெலோ உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் கிழக்கு மாகாணத்தினை சேர்ந்த இளைஞர்கள். இந்நிலையில் தாம் எங்கு தப்பியோடுவதென்பது தெரியாத நிலையில் புலிகளின் துப்பாக்கிகளுக்கு பலியாகினர். அதேவேளை மட்டக்களப்பில் ரெலோ மீதான படுகொலைகளில் ஈடுபடத் தயங்கிய புலிகளின் தளபதிகளான கடவுள், காக்கா பேன்றோர் (இயக்கப் பெயர்) புலிகளிலிருந்து பிரிந்து தப்பி ஓடினர். கிழக்கு மாகாணத்தில் இப்படுகொலைகளை மேற்கொள்வதற்காக பிரபாகரன் அவர்களால் விசேடமாக குமரப்பா போன்றோர் அனுப்பிவைக்கப்பட்டனர். (06.05.1986ல்) ரெலோ இயக்கத்தின் தலைவர் திரு. சிறீ சபாரெத்தினம் என்பவர் கிட்டு தலைமையிலான புலிகளினால் ஏற்கனவே சுட்டுக் கொல்லப்பட்டார். ரெலோ மீதான அழித்தொழிப்பு முடிவிற்கு வந்ததன்பின்னர்.

1987 டிசம்பர் மாதம் ஈபி.ஆர்.எல்.எப் மற்றும் புளொட் போன்ற இயக்கங்களை புலிகள் இதே பாணியில் தடைசெய்து தமிழ் இளைஞர்களை பெருமளவில் கொன்று குவித்தனர்.

## ஐக்கிய தேசியக் கட்சியினரால் அமுல்படுத்தப்பட்ட யாழ் குடாநாட்டிற்கான பொருளாதாரத் தடை.

1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ந் திகதி முதல் யாழ் குடாநாட்டிற்கான பொருளாதாரத் தடையினை ஐ.தே.கட்சி அரசாங்கம் அமுல்படுத்தியது. இந்நிலையில் இது விடயத்தில் தலையீடு செய்த அன்றைய இந்தியப் பிரதமரான திரு ராஜீவ் காந்தி அவர்களினால் (04.06.1987ல்) இலங்கையின் இறைமையினைமீறி விமானங்களின் மூலம் வட மாகாணத்திற்கான உணவு விநியோகம் மேற்கொண்டமையால் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு தயாரான திரு. ஜே.ஆர் ஜயவர்தனா அவர்கள் உடன்படிக்கை ஒன்றினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

## யாழ் குடாநாட்டிற்கான இந்திய அரசின் நிவாரண உதவி

யாழ்ப்பாணத்தில் இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் அதே வேளையில் இலங்கை வெளியுறவு அமைச்சருடன் தொடர்பு கொண்ட இந்திய உயர்ஸ்தானிகர் அரசின் தடைகள் காரணமாக யாழ் குடாநாட்டில் உணவுப் பொருட்கள், எரிபொருள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றிற்கு தட்டுப்பாடு நிலவுவதால் இப்பொருட்களை கப்பல் மூலமாக யாழப்பாணத்திற்கு அனுப்பிவைக்க இந்தியா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். 1987 யூன் முதலாந் திகதி இத்தகவல் இலங்கை அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக ஆராய்ந்த இலங்கை அமைச்சரவை இந்தியாவின் இத்திட்டத்தை முற்றாக நிராகரித்ததுடன் இந்தியா இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டால் அது இலங்கையின் இறைமையை மீறும், உள்நாட்டு விவகாரத்தில் தலையிடும் ஒரு செயலாகவிருக்குமெனவும் தெரிவித்தது.

எனினும் இலங்கையின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் யூன் மாதம் 3ந் திகதி இராமேஸ்வரம் துறைமுகத்திலிருந்து 19 சிறிய கப்பல்களில் நிவாரண உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் நோக்கி இந்திய அரசு அனுப்பி வைத்தது. இக்கப்பலில் செஞ்சிலுவைச் சங்கம், மற்றும் இந்தியப் பத்திரிகையாளர்களும் அனுப்பப்பட்டனர். இந்தியாவின் இந்த நடவடிக்கை இரு நாடுகளுக்குமிடையே முறுகல் நிலைமையை எற்படுத்தியது. இப்படகுகள் இலங்கைக்கடல் எல்லையை நெருங்கியபோது இலங்கைக் கடற்படையினரால் இந்தியத் தரப்பினரின் படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டது. இந்நிலையில் இந்திய தரப்பினர் எதிர்ப்பெதுவும் தெரிவிக்காது திரும்பிச் சென்றனர். இருந்தும் இதன் காரணமாக இந்தியா தனது திட்டத்தைக் கைவிடாது மற்றொரு நடவடிக்கையை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

## இந்தியத் தரப்பினரால் முன்னெடுக்கப்பட்ட பூமாலை நடவடிக்கை

படகுகள் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பிய மறுநாள் 1987 யூன் 4ந் திகதி ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட அன்ட்னோவ் 32 என்னும் ஐந்து விமானங்கள்



படிப்பகம்

www.padippakam.com

மூலம் 22 தொன் எடையுள்ள நிவாரண உணவுப் பொருட்கள் இலங்கையின் ஆகாய எல்லையை மீறிவந்து யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரசூட் மூலமாக விநியோகிக்கப்பட்டது. இந்நடவடிக்கைக்குப் பாதுகாப்பளிப்பதற்கு 8 மிராஜ் 2000 எனும் யுத்த விமானங்கள் நான்கு பாதுகாப்பு வழங்கின. இந்த விமானங்கள் இந்திய நகரான பெங்களூரிலிருந்து உணவுப் பொருட்களை யேற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் வந்தன. இந்தியாவின் இந்த நடவடிக்கை “ஒப்பரேசன் பூமாலை” என்று அழைக்கப்பட்டது.

முதல் நாள் படகுகளில் பொருட்கள் அனுப்பியபோதே அவை திருப்பி அனுப்பப்படலாமென எதிர்பார்த்த நிலையில் தயாராக வைக்கப்பட்டிருந்த விமானங்களே பொருட்களை ஆகாய மூலமாக விநியோகிக்கப் பயன்படுத்தப் பட்டவையாகும். இந்தியாவின் இந்த நடவடிக்கை இலங்கையின் இறைமையை மீறும் ஒருசெயலென மீண்டும் இலங்கை கண்டனம் தெரிவித்தது. ஆனால் இதுவொரு மனிதாபிமான நடவடிக்கையேயென இந்தியா கூறியது. அதேவேளை இந்தியாவின் இந் நடவடிக்கையை உலக நாடுகள் பலவும் ஆதரித்தன. இச்சம்பவத்தில் இலங்கைக்கு எந்தவொரு நாடும் ஆதரவு தெரிவிக்க முன்வரவில்லை.

இதனைத் தொடர்ந்து இரு நாடுகளின் அதிகாரிகளுக்குமிடையே ராஜதந்திர மட்டத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து யூன் 15ல் இந்தியப்படகுகள் மூலம் நிவாரண உதவிப் பொருட்களை காங்கேசன் துறைக்கு அனுப்பி வைப்பதற்கு இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டது. இது இந்திய இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமெனவும் இலங்கை கடல் எல்லைக்குள் இலங்கைக் கடற்படையினரின் பாதுகாப்புடனேயே இந்த நிவாரணக் கப்பல்கள் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்படவேண்டுமெனவும் இருதரப்புப் பேச்சுக்களிலும் இணக்கம் காணப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியாவின் முதலாவது நிவாரண உணவுக்கப்பல் ஜலன்பிரைட் 1987 யூலை 27ந் திகதி காங்கேசன் துறைமுகத்தை வந்தடைந்தது. இதனுடன் வந்த மற்றொரு கப்பலில் இந்திய ராணுவத்தைச் சேர்ந்த கேணல் வேணுகோபால் என்பவரின் தலைமையிலான இந்திய செஞ்சிலுவைச் சங்கக் குழுவினரும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவரின் அரசியல் செயலாளரான திரு. ரதிப்பூரி என்பவரும் தூதரக ராணுவத் துறையைச் சேர்ந்த கப்டன் குப்தா என்பவரும் வந்திருந்தார்கள். இவர்களோடு இந்தியப் பத்திரிகையாளர்கள் குழுவொன்றும் வந்திருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி நடவடிக்கையினைத் தொடர்ந்து 1987ம் ஆண்டு யூலை மாதம் 29 ந் திகதி இலங்கை – இந்திய உடன்படிக்கை என்னும் பெயரில் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி திரு ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களுக்குமிடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது. அதற்கமைய இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கைக்கு வருகைதந்து வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளை பொறுப்பேற்கின்றனர். இவ்வுடன்படிக்கை மூலமே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இரண்டும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, பின்னர் கிழக்கு மாகாண மக்களின் சம்மதத்தினைப் பெறுவதற்கான சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை (31.12.1988)ற்கு முன்னர் மேற்கொண்டு, கிழக்கு மாகாண மக்கள் சம்மதம் தெரிவித்தால் இரு மாகாணங்களுக்குமான இணைந்த நிர்வாகம் ஒன்றினை நிரந்தரமாக ஏற்படுத்துதல் என இணக்கம் காணப்பட்டது.

## ஒப்பந்தத்திற்கான நிர்ப்பந்தம்

1987ம் ஆண்டு யூலை மாதம் 29 ந் திகதி இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்படுத்துவதற்கான காரணிகள் பின்வருபவையாக அமைந்திருந்தது. இந்திய போர்விமானங்கள் இலங்கையின் இறைமைக்குட்பட்ட பிரதேசத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்தபொழுது இலங்கைமீதான இந்தியாவின் ஆக்கிரமிப்பைக் கண்டு இலங்கையின் சர்வ நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டிருந்த ஜனாதிபதியான திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்கள் அச்சமடைந்தார்கள். இந்தியாவின் படைபலத்திற்கு தமது படையினர் சரணடைய வேண்டுமென சஞ்சலமடைந்த நிலையில் தம்மையும் தமது நாட்டையும் பாதுகாப்பதற்கான ஒரேவழிமுறை பலம்வாய்ந்த எதிரியை தமது நண்பனாக மாற்றிக்கொண்டு உறவாடுவதே. அதற்கமைய அதனை நிறைவுசெய்வதற்காக இந்தியப் பிரதமர் திரு ராஜிவ் காந்தி அவர்களுடனான பேச்சுவார்த்தையை மேற்கொண்டு பாராளுமன்றத்தினதும் கட்சியினதும் அங்கீகாரமின்றி ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டார். பின்னர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களை பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் பாராளுமன்றம் கொண்டுசென்று 13வது அரசியலமைப்பை நிறைவேற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கூறிய ஒப்பந்தத்தை அன்று பிரதமராக இருந்த திரு. பிரேமதாசா அவர்களும் ஐ.தே.கட்சியின் அமைச்சர்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் எதிர்த்தனர். அன்றைய தினம் விடுமுறை தினமாகவும் அத்துடன் ஊரடங்குச் சட்டமும் அமுல் படுத்தப்பட்டிருந்த நிலையிலும் சிங்கள மக்களினதும், பௌத்த பிக்குகளினதும் ஆர்ப்பாட்டம் காரணமாக 21 பொதுமக்கள்வரை கொல்லப்பட்டதுடன் 100ற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாக செய்திகள் வெளியாகின. மறுதினமான 24ந் திகதி இந்தியப் பிரதமர் திரு. ராஜிவ் காந்தி அவர்களுக்கு நடாத்தப்பட்ட அணிவகுப்பு மரியாதையின்போது விமானப் படையைச் சேர்ந்த(ஊழியர்) ஒருவர் திரு. ராஜிவ் காந்தி அவர்களை துப்பாக்கியால் தாக்கியபோது அவரின் மெய்பாதுகாவலரின் சாணக்கியத்தால் சம்பந்தப்பட்டவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

## இந்திய இலங்கை ஒப்பந்தம் (29.07.1987)





படிப்பகம்

www.padippakam.com

# இந்திய - இலங்கை ஒப்பந்தம்

## - 29.07.1987 -

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

1987ம் ஆண்டு யூலை மாதம் 29ந் திகதி இந்தியப்பிரதமர் திரு. ராஜிவ்காந்தி அவர்கட்கும் இலங்கை ஜனாதிபதி திரு. ஜயவர்தனா அவர்கட்குமிடையே பெரும்பதற்ற நிலையின் மத்தியில் கொழும்பில் வைத்து இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் பின்வரும் விடயங்கள் முக்கியமாகத் தெரிவிக்கப்பட்டன.

1. வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கும்.
2. இந்த இணைப்பைத் தொடர்வதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பொன்று ஒரு வருடகாலத்தில் (31.12.1988 ற்கு) முன்னர் நடைபெறும்.
3. தேர்தல் நடைபெற்று மாநில அரசாங்கம் தெரிவு செய்யப்படும் வரையில் அதாவது 1987 டிசம்பர் 31ந் திகதிவரை இடைக்கால அரசாங்கமொன்று பதவியிலிருக்கும்.
4. பாதுகாப்புப் படையினருக்கும் தமிழ்ப் போராளிகளுக்குமிடையே யூலை 31ந் திகதியுடன் யுத்த நிறுத்தமொன்று ஏற்படுத்தப்படும்.
5. யுத்த நிறுத்தம் ஏற்பட்ட இரண்டு நாட்களுக்குள் போராளிகள் தமது ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும்.
6. ஆகஸ்ட 15ந் திகதியுடன் அவசரகாலச் சட்டம் வடக்கு கிழக்கிலிருந்து நீக்கப்படும்.
7. இராணுவ உதவி கோரப்பட்டால் இந்தியா அதனை வழங்கும்.
8. ஆகஸ்ட் மாதம் 26ந் திகதிக்கு முன்னர் இலங்கைப் பாதுகாப்புப்படையினர் முன்னர் இருந்த நிலைகளுக்குத் திரும்பி விடவேண்டும்.
9. சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்ப் போராளிச் சந்தேக நபர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்.

பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலும் இந்த ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு ஜனாதிபதி ஜயவர்தனா அவர்களுக்கு நெருக்குதல் கொடுத்த காரணிகள் பற்றி பிரிட்டிஷ் ஆய்வாளரான எக்டர் ஓ பலான்ஸ் என்பவர் பின்வருமாறு எழுதியிருந்தார்:

இந்த அமைதி உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ள ஜனாதிபதி ஜயவர்தனா அவர்களை தூண்டிய பிரதானகாரணி தமிழ்க் கிளர்ச்சியாளர்களை சரணடையச் செய்ய முடியாத அளவிற்கு அவருடைய பாதுகாப்புப் படைகள் பலவீனமாக இருந்ததுடன் தென்பகுதியில ஜே.வி.பியினரின் தாக்குதல்களும்



படிப்பகம்

www.padippakam.com

உச்சநிலையை அடைந்து அரசாங்க உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் படுகொலைசெய்யும் நடவடிக்கைகளில் அவர்கள் ஈடுபட்டிருந்ததால் இருசாராரினதும் தாக்குதல் நடவடிக்கைகளை முறியடிப்பதற்கு தேவையான அளவு இராணுவத்தைப் பலப்படுத்த குறைந்தது மூன்று வருடங்களாவது செல்லுமென சிரேஸ்ட அதிகாரிகள் மதிப்பிட்டனர். அதே வேளையில் தமிழ்க் கிளர்ச்சியாளர்களுடைய பலம் வேகமாக அதிகரித்தது. அத்தோடு நாடு மோசமான பொருளாதாரப்பிரச்சினையில் சிக்குண்டிருந்தது மற்றுமொரு காரணமாகும்.

## இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் உள்ளடக்கம்

1. வடக்கும் கிழக்கும் தமிழ்பேசும் மக்கள் வரலாற்றுரீதியாக வாழும் பிரதேசம்.
2. வட கிழக்கு மாகாணங்களுக்கு ஒரே மாகாணசபை தொடர்ந்து இரு மாகாணங்களும் இணைந்திருக்க வேண்டுமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு 1988 டிசம்பர் மாதத்திற்கு முன்னர் கிழக்குமாகாணத்தில் மேற்கொள்ளப்படும்.
3. மூன்றுமாத காலத்திற்குள் மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படும்.
4. பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைத்திருக்கும் அனைவரும் விடுதலை செய்யப்படுவர்.
5. வடக்கு கிழக்கில் அமுல்படுத்தப்பட்டிருக்கும் அவசரகாலநிலை 1987ம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் திகதிக்கு முன் வாபஸ் பெறப்படும்.
6. சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் ஆட்சி மொழிகளாக்கப்படும்.
7. உடனடியாக யுத்த நிறுத்தம் செய்யப்பட்டு ஆயுதக்கையளிப்பு, அத்தோடு அனைத்து ஆயுதக்குழுக்களுக்கும் பொது மன்னிப்பு வழங்குதல்.
8. வடக்கு கிழக்கில் வாழும் அனைவரினதும் பாதுகாப்பிற்கு சம உத்தரவாதம்.

### இத்துடன் இணைப்பில் அடங்கிய ஏனைய அம்சங்களாவன:

1. இந்தியாவின் நலன்களுக்குப் பாதகமான எந்த நாடும் இலங்கை துறைமுகங்களை பயன்படுத்த முடியாது.



படிப்பகம்

2. வொயிஸ் ஒப் அமெரிக்கா (Voice of America) இலங்கையில் நிறுவும் ஒலிபரப்பு நிலையத்தை பொதுமக்களுக்கான நிகழ்ச்சிகட்கு மட்டும் பயன்படுத்தலாமே தவிர இரகசிய உளவு வேலைகட்கோ அல்லது வேறு காரியங்கட்கோ பயன்படுத்த அனுமதிக்கக்கூடாது.
3. திருகோணமலையின் எண்ணைக் குதங்களை இலங்கையும் இந்தியாவும் சேர்ந்து நடாத்தும்.
4. அமைக்கப்படும் மாகாணசபை ஆளுனர் ஒருவரையும். முதலமைச்சர் ஒருவரையும், அமைச்சரவை ஒன்றையும் அத்துடன் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளையும் கொண்டதாக அமையும்.
5. இலங்கையின் ஐக்கியம், இறைமை, ஒருமைப்பாடு என்பன பாதுகாக்கப்படும்.
6. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையை தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றார்களா? அல்லது தனித்தனி மாகாணசபைகளை விரும்புகின்றார்களா? என்பதை கிழக்குமாகாண மக்கள் சர்வஜன வாக்கெடுப்பின்மூலம் தெரியப்படுத்துவர். நடாத்தப்படும் வாக்கெடுப்பில் வன்செயல் மூலம் இடம் பெயர்ந்தவர்கட்கும் வாக்களிக்க வாய்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.
7. ஒருவருட காலத்தினுள் சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் ஜனாதிபதி விரும்பினால் அதனைப் பிற்போடலாம்.

மேற்கூறிய நிபந்தனைகளை அனைத்து ஆயுதக்குழுக்களும் ஏற்றுக் கொண்டதாக அப்போது செய்திகள் வெளியாகின. இருந்தும் விடுதலைப் புலிகள் அமைப்பு அதனை ஏற்கவில்லையெனவும் சில தகவல்கள் தெரிவித்தன

## விடுதலைப் புலிகளின் ஆயுதக் கையளிப்பு

1987 ஆகஸ்ட் மாதம் 4ந் திகதி காலை பிரபாகரனைச் சந்தித்த இந்திய அமைதிப்படையின் தளபதி திரு.திபேத்தர் சிங் ஆயுதக்கையளிப்பை ஆரம்பிக்குமாறும் அதனைத் தொடர்ந்து தமிழ்ப் போராளிகளுக்கான பொதுமன்னிப்பை திரு. ஜே. ஆர். அறிவிப்பாரெனவும் தெரிவித்தார். இதற்காக அடையாள கையளிப்பொன்று மேற்கொள்வது அவசியமெனவும் அவர் வலியுறுத்தினார். இதனையடுத்து ஆகஸ்ட் 5ந் திகதி பலாலி இராணுவமுகாமில்

www.padippakam.com

ஆயுதக்கையளிப்பிற்கான வைபவம் இடம்பெற்றது. அப்போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல, கூட்டுப்படை தலைமையக தலைமைத்தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க, இந்திய அமைதிகாக்கும் படையின் தளபதி திபேத்தர்சிங், உட்பட பல இலங்கை இந்திய இராணுவ உயரதிகாரிகள் இந்த வைபவத்திற்கு சமூகமளித்திருந்தனர். இந்த வைபவத்தில் ஆயுதக் கையளிப்பிற்காக விடுதலைப் புலிகளின் சார்பில் வந்திருந்த திரு. யோகி என்பவர் ஜெனரல் ஆட்டிகலவிடம் ஆயுதத்தைக் கையளிக்க மறுத்துவிட்டார். இந்திய அதிகாரிகள் கேட்ட போதிலும் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனையடுத்து மேசையில் ஏற்கனவே வைக்கப்படடிருந்த ஆயுதத்தின் மீது ஜெனரல் ஆட்டிகல கையைவைத்த போது அடையாளக் கையளிப்புத் தொடர்பான படங்கள் எடுக்கப்பட்டன. இந்த வைபவத்தில் சுமார் 400 ஆயுதங்கள் மட்டுமே கையளிக்கப்பட்டன. இது தம்மிடமுள்ள மொத்த ஆயுதங்களில் 85 வீதமானவையென விடுதலைப்புலிகள் தெரிவித்தனர். ஆனால் இதுசுமார் 05 வீதமானவையாக மட்டுமேயிருக்குமென இந்திய அதிகாரி கூறினார்.

இதற்கு மறுநாள் மேலும் ஒருபகுதி ஆயுதங்கள் கையளிக்கப்பட்டன. ஆயுதக்கையளிப்பைத் துரிதப்படுத்துமாறு இந்திய அதிகாரிகள் கேட்டபோதிலும் பல்வேறு இடங்களிலிருந்தும் ஆயுதங்களைச் சேகரிக்க வேண்டியிருப்பதால் இந்த நடவடிக்கை தாமதமடையுமென அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அதே வேளையில் ஏனைய தமிழ்க்குழுக்கள் தமது ஆயுதங்களைக் கையளிக்கத்தொடங்கின. இந்நிலையில் ஏனைய இயக்கங்களின் ஆயுதக்கையளிப்பை தமக்குச் சாதகமாக்கி அவர்களின் போராளிகள் மீது புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

## 12 விடுதலைப் புலிகள் தற்கொலை

இந்நிலையில் 1987 அக்டோபர் 2ந் திகதி தகவலொன்றின் பேரில் பாக்கு நீரிணையில் சென்று கொண்டிருந்த விடுதலைப்புலிகளின் படகொன்று இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது. இதில் பயணம் செய்த புலிகள் அமைப்பின் 2 பிராந்தியத் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட 17 புலிகள் இயக்க உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். எந்தவித எதிர்ப்போ மோதலோ இல்லாமலேயே இச்சம்பவம் நடை பெற்றது. இவர்கள் இந்தியாவில் புதைத்து வைப்பதற்காக பெருமளவு ஆயுதங்களைக் கொண்டுசெல்லும் போதே கைதானதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.



படிப்பகம்

அதேவேளை கிழக்குமாகாணத்திலுள்ள போட்டிக் குழுக்களைத் தாக்குவதற்காகவே இவர்கள் ஆயுதங்களைக் கொண்டு சென்றதாக மேற்படி குழுக்கள் தெரிவித்தன. ஆனால் அவைகள் தமது பாதுகாப்பிற்காக தம்முடனெடுத்துச் செல்லப்பட்ட ஆயுதங்களென புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து காங்கேசன்துறை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்பட்ட 17 பேரும் பின்னர் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டபின் பலாலி இராணுவமுகாமிற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். பலாலி இராணுவ முகாமில் பிரிகேடியர் ஜெயந்தா ஜெயரட்ணாவின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இவர்களை விடுதலை செய்யுமாறு இந்தியப்படையினரின் சார்பில் பலாலி முகாமிற்குப் பொறுப்பாகவிருந்த ஜெனரல் றொட்றிக்ஸ் வேண்டுகோள் விடுத்தார். தமிழ்ப் போராளிகளுக்கு அரசாங்கத்தால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையிலேயே அவர்களை விடுவிக்குமாறு ஜெனரல் கோரிக்கைவிடுத்தார். ஆனால் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு யூலை 29ற்கு முன்னர் செய்யப்பட்ட குற்றங்களுக்கு மட்டுமே மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள் இப்போது கைதுசெய்யப்பட்டிருப்பது அக்டோபர் 2ந் திகதி செய்த குற்றத்திற்காகவேயென இலங்கை அரசின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இவர்களை விடுதலை செய்யுமாறுகோரி ஏராளமான பொதுமக்கள் பலாலி ராணுவமுகாம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர். இருந்தும் கைது செய்யப்பட்ட புலிகள் உறுப்பினர்கள் அனைவரையும் கொழும்புக்கு அனுப்புமாறு தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி அவர்கள் பலாலிமுகாம் இலங்கை ராணுவ அதிகாரி பிரிகேடியர் ஜெயரட்ணாவுக்கு கண்டிப்பான உத்தரவொன்றை அனுப்பிவைத்தார். ஆனால் இந்திய அமைதிப்படையின் தளபதி இதனை எதிர்த்தார். இது தொடர்பாக நடைபெற்ற சம்பவங்களை பத்திரிகையொன்று பின்வருமாறு எழுதியிருந்தது.

பிரிகேடியர் ஜெயரட்ணாவின் அலுவலகத்திற்குள் சென்ற இந்திய ஜெனரல் திரு. றொட்றிக்ஸ் அவர்கள் புலிகளை விடுதலை செய்யுமாறு மீண்டுமொரு முறை கோரினார். நீங்கள் அவர்களை கொழும்புக்குக் கொண்டுசெல்ல முயன்றால் வெளியே ஆர்ப்பாட்டம் செய்பவர்கள் பலாத்காரமாக உள்ளே முகாமிற்குள் புகுந்துவிடுவார்கள். எம்மால் அவர்களை எவ்வாறு

www.padippakam.com

கட்டுப்படுத்தமுடியுமென அவர் வாதிட்டார். ஆனால் மேலிடத்தின் உத்தரவுக்கு கட்டுப்பட வேண்டியுள்ளதாக பிரிகேடியர் ஜெயரட்ண விளக்கினார். இந்நிலையில் கைதுசெய்து தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமது உறுப்பினர்களை பார்வையிடுவதற்கு தமக்கு அனுமதிதருமாறு புலிகள் தரப்பிலிருந்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது அதனை ஏற்றுக்கொண்ட இந்திய இலங்கை தரப்பினர் அவர்களை பார்வையிட திருவாளர்கள் அன்ரன் பாலசிங்கம் மகேந்திரராஜா (மாத்தையா) ஆகியோருக்கு அனுமதி வழங்கியதற்கமைய அவர்கள் இருவரும் 5ந் திகதி பகல் 2மணியளவில் முகாமிற்குள் சென்று அவர்களைப் பார்வையிட்டதுடன் அங்கிருந்த சிற்றுண்டிச்சாலையில் உணவு பரிமாறுவதற்காக அழைத்துச்சென்றனர் அங்குவைத்து அவர்களுக்கு (சயனைட்) வில்லைகள் இராணுவத்தினர் அறியாதவகையில் கொடுக்கப்பட்டு பாதுகாப்புப்படையினர் கொழும்பு கொண்டுசெல்ல முயன்றால் அவைகளை பாவித்து தற்கொலை செய்யவேண்டுமெனவும் கட்டளை பிறப்பிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

இச்சம்பவம் நடைபெற்று சிலமணி நேரங்களின்பின் திரு. ஜெயரட்ண விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை வைத்திருந்த பகுதிக்குச் சென்று அவர்களை விமானத்திற்குச் செல்வதற்குத் தயாராகுமாறு கேட்டபோது சயனட் வில்லைகளை எடுத்துக்காட்டி தம்மை கொழும்பிற்கு கொண்டுசெல்ல முயன்றால் தாம் சயனைட் உட்கொள்ளப்போவதாக எச்சரிக்கை விடுத்தனர். ஜெயரட்ணா இதுபற்றி உடனடியாக கொழும்புக்கு அறிவித்தார். ஆனால் அங்கிருந்து வந்த பதிலில் அவர்களை உடனடியாக அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. ஜெயரட்ணா தொலைபேசியை வைத்தவுடன் அவரது அலுவலகத்திற்குள் சென்ற இந்தியக்கமாண்டர் கொழும்புக்கு அனுப்பும் நடவடிக்கையை கைவிடுமாறு மீண்டும் வலியுறுத்தினார். தவறி நீங்கள் அனுப்ப முற்படும்போது அவர்கள் தற்கொலை செய்து மரணமடைந்தால் ஒரு இரத்தக்களரி இங்கு ஏற்படலாமென்றார். அதற்கு பதிலளித்த இலங்கை காப்டன் நான் எனது மேலதிகாரிக்குக்கட்டுப்பட வேண்டியுள்ளதென கூறி டாக்டர்கள் அம்புலன்ஸ்கள் ஸ்ரோமசப்பம்ஸ், போன்றவற்றைத் தயார்படுத்திய ஜெயரட்ணா தன்னிடமுள்ள 34 பலம் வாய்ந்தவர்களை தயார் செய்துகொண்டு புலிகளைத் தடுத்துவைத்திருந்த பகுதிக்குள் புகுந்தபோது சயனைட் வில்லைகளை புலிகள் கடிப்பதை அவரால் தடுத்து நிறுத்தமுடியவில்லை. அதே இடத்தில் புலேந்திரன், குமரப்பா, உட்பட 9 பேர் மரணமடைந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

பின்னர் நான்கு பேர் மரணமடைய நான்கு பேர் வைத்தியசாலையில் காப்பாற்றப்பட்டனர்.

**குறிப்பு:** இலங்கை இந்திய ஒப்பநதத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான திரு குமரப்பா, புலேந்திரன், பொட்டு அமமான் என்றழைக்கப்படும் சண்முகநாதன் சிவசங்கர் ஆகிய மூவரும் திருமணவாழ்க்கையில் தம்மை இணைத்தனர். இலங்கை இந்திய ஒப்பந்தத்துடன் நிரந்தரத்தீர்வு ஏற்படுத்தலாமென அவர்கள் கருதியமையே திருமண வாழ்க்கையில் இணைவதற்கு அவர்களை தூண்டிய காரணிகளாக அமைந்தன. இதனை ஏற்கமறுத்த பிரபாகரன் முன்னைய இருவரையும் தற்கொலை செய்யுமாறு கட்டளையிட்டதற்கமைய 1987 அக்டோபர் 5ந் திகதி சயனைட் அருந்தி தற்கொலைசெய்தனர் பின்னர் 1989ல் கிட்டு என அழைக்கப்படும் திரு. கிருஸ்னகுமார் கொழும்பில்வைத்து திருமணம் செய்தார் இச்சம்பவம் புலிகள் பிரேமதாசா உடன்படிக்கையின் பின்னர் நடைபெற்றது.

## வடகிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாக சபை

இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கமைய வடகிழக்கு மாகாணத்திற்கான நிரந்தர நிர்வாகம் ஒன்றினை தெரிவு செய்யும்வரை இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படுமென உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அமையப்போகும் நிர்வாகம் எட்டு உறுப்பினர்களை உள்ளடக்கியதாகவும் அதில் விடுதலைப் புலிகளுக்கு (3)மூன்று பிரதிநிதிகளும் தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கு (2) இரண்டு உறுப்பினர்களும் ஏனைய மூவரில் அரசின் தரப்பில் ஒருவரும் ஏனைய இரு பிரதிநிதிகளும் மற்றைய இரு ஆயுத அமைப்புக்களுக்கு பகிர்ந்தளிப்பதாகவும் தகவல்கள் வெளியாகின. இந்நடைமுறையினை ஏற்கமுடியாதெனவிடுதலைப் புலிகளின் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

அதன்காரணமாக இந்தியாவின் தலையீட்டுடன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பன்னிரெண்டாக (12) உயர்வுசெய்து அவ்வுறுப்பினர்களில் ஏழு (7) உறுப்பினர்களை புலிகளுக்கு வழங்குவதற்கான ஒப்புதல்



படிப்பகம்

www.padippakam.com

உறுதிசெய்யப்பட்டது. இந்நிலையில் இடைக்கால நிர்வாகத்திற்குரியவர்களின் பெயர்ப்பட்டியலை சமர்ப்பிக்குமாறு விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்தனர். மொத்த உறுப்பினர்கள்12 பேரும் இடைக்கால நிர்வாக சபையின் தலைவர் பதவிக்கு மூவரின் பெயர் உட்பட 15 பேரின் பெயர்களை எழுத்துமூலம் ஒப்படைப்பதற்கு புலிகள் சம்மதித்தனர். இந்தப் பெயர்களிலிருந்து ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்வதாகவே புலிகளும் ஒப்புக்கொண்டிருந்தனர்.

தெரிவித்த மூவரில் திரு பத்மநாதன் அவர்களின் பெயரினை முதற் தெரிவாக புலிகள் முன்வைத்தனர். இந்நிலையில் ஜனாதிபதி ஜயவர்தன அவர்கள் புலிகளின் பெயர்ப்பட்டியலில் இரண்டாமிடத்திற்கு குறிப்பிடப்பட்டிருந்த யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளரான திரு சிவஞானம் என்பவரின் பெயரினை தலைவர் பதவிக்கு தெரிவுசெய்தார். இதனை புலிகள் எதிர்த்தனர். ஏற்கனவே (7) உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்த பெயர்ப்பட்டியல் புலிகளின் ஆட்சேபனையைத் தொடர்ந்தே (12)ஆக அதிகரிக்கப்பட்டு புலிகளுக்கு அமையப்போகும் சபையில் பெரும்பான்மை வழங்கப்பட்டது.

## திரு. நமசிவாயம் பத்மநாதன் என்பவரின் பெயர் ஏன் நிராரிக்கப்பட்டது?

அவர் திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக பணியாற்றியவர். ஆனால் ஜனாதிபதி யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளராக பணிபுரிந்த சி.வி.கே. சிவஞானம் என்பவரைத் தெரிவுசெய்தார். அவரைவிட தெரிவு செய்யப்பட்ட ஏனையவர்களுள் விடுதலைப் புலிகள் ஒரு கிழக்குமாகாண முஸ்லிமையும் ஏனைய ஏழு பேரில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு தமிழரையும் தெரிவு செய்திருந்தனர். இந்நிலையில் ஜனாதிபதியினால் சிபார்சு செய்யப்பட்டவர்களில் கிழக்குமாகாணத்தைச் சேர்ந்த ஒருவரும் இடம்பெறவில்லை. திரு. பத்மநாதன் அவர்கள் பயங்கரவாத் தடைச்சட்டத்தின்கீழ் 1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு 1987-09-02ந் திகதி (45)மாதங்களின் பின்னர் இலங்கை-இந்திய உடன்படிக்கைக்கமைய விடுதலை செய்யப்பட்டிருந்தார்.



படிப்பகம்

www.padippakam.com

1983ம் ஆண்டு செப்டம்பா மாதம் 27ந் திகதி இடம்பெற்ற மட்டுநகர் சிறையுடைப்பில் தப்பி வந்த விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் (5) ஐந்துபேரை திருமலையிலிருந்து புல்மோட்டை வரைஅழைத்துச் செல்வதற்காக திருமலை கச்சேரிக்குச் சொந்தமான வாகனத்தினை (ஜீப் வண்டியை) பயன்படுத்த வழங்கியமைக்காகவே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். மேற்படி சம்பவம் காரணமாகவே திரு. பத்மநாதன் அவர்களின் பெயர் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை – இந்திய உடன்படிக்கையைத் தொடர்ந்து வடகிழக்குப் பகுதிகளில் நிரந்தர சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் இணைந்து செயற்படும்பட்சத்தில் ஒரு மாதத்திற்கு 200,000 இரண்டு லட்சம் ஸ்ரேலிங் பவுண் அதாவது ஐந்து மில்லியன் நிதி விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும். போரினால் பாதிக்கப்பட்ட பிரதேதசங்களில் இயல்பு வாழ்க்கை ஏற்படும்வரை விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்களை பராமரிப்பதற்கு இந்நிதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் யாழ்ப்பாணக்குடாநாடு 43 நாற்பத்தி மூன்று மில்லியன் ஸ்ரேலிங் பவுண் நிதியை இந்தியாவின் பொருளாதார உதவியாக வழங்குவதற்கும் உடன்பாடு எட்டப்பட்டிருந்தது. அதற்கமைய 1987ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கான கொடுப்பனவும் வழங்கப்பட்டது. இவ்விடயங்கள் தொடர்பான இரகசிய உடன்பாடுபற்றிய அறிக்கைகள் 1988 ஏப்ரல் மாதம் 3ந் திகதி சண்டே லண்டன் ஒப்சேவரில் வெளிவந்தது.

## விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறை அறிமுகம்

1988 மே மாதம் 24ந் திகதி நிறைவேற்றப்பட்ட 14வது சீர்திருத்தத்தின் மூலம் விகிதாசார தேர்தல்முறை அறிமுகம் செய்யப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 இல் இருந்து 225ஆக உயர்த்தப்பட்டது. தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் முறைமையும் இதன்போது ஏற்படுத்தப்பட்டது 15வது மற்றும் 16வது சீர்திருத்தங்கள் 1988 டிசம்பர் 17ந் திகதி நிறைவேற்றப்பட்டது. 14வது சீர்திருத்தத்திலுள்ளவாறு விகிதாசார தேர்தல் முறையின்கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்றைப்பெற வாக்காளர்களால் அளிக்கப்பட்ட மொத்தவாக்குகளில் எட்டில் ஒரு வீதவாக்குகள் தேவையென்பது 15வது சீர்திருத்தத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.



படிப்பகம்

www.padippakam.com

## மாவட்ட அடிப்படையிலான விகிதாசாரப் பித்திநிதித்துவ தேர்தல் முறைமையினை ஜே.ஆர் அறிமுகப்படுத்தி யதற்கான காரணிகள்

| ஆண்டு | அரசியல் கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| 1960 யூலை | ஐ.தே.கட்சி | 1,144,166 | 30 |
| 1960 யூலை | ஸ்ரீ.ல.சு கட்சி | 1,022,171 | 75 |
| 1970 மே | ஐ.தே.கட்சி | 1,892,525 | 17 |
| 1970 மே | ஸ்ரீ.ல.சு கட்சி | 1,839,979 | 91 |
| 1977 யூலை | த.வி.கூட்டணி | 421,488 | 18 |
| 1977 யூலை | ஸ்ரீ.ல.சு கட்சி | 1,855,331 | 08 |

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரைவிட அதிகப்படியான வாக்குகளைப் பெற்றும் மிகக்குறைவான பிரதிநிதிகளையே பெறமுடிந்த தேர்தல் நடைமுறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காகவே புதிய தேர்தல் நடைமுறை அவசியமென ஜே.ஆர். கருதியதாக பல அரசியல் அவதானிகளும் ஒப்புக்கொண்டனர்.

## 1989 - 2000 ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ்



இலங்கையில் முதல் தடவையாக அறிமுகப்படுத்தப்பட்ட மாவட்டரீதியான விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைக்கமைய (15.02.1989ல்) பாராளுமன்றத் தேர்தலில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் கட்சியின் சார்பில் (14) பதினான்கு மாவட்டங்களில் ஜனாப். அஸ்ரப் அவர்கள் தமது வேட்பாளர்களை நிறுத்தினார். அதற்கமைய நாடு தழுவியரீதியில் (202,016) வாக்குகளைப் பெற்று தேர்தலின்மூலம் (3) மூன்று உறுப்பினர்களையும் தேசியப்பட்டியலின்மூலம் (1) ஒரு உறுப்பினரையும் பெற்று முதல் தடவையாக பாராளுமன்றத்தினுள் நுழைவதற்கான தமது சாமத்தியத்தினை நிலைநாட்டினார்.

பின்னர் ஐந்து ஆண்டுகள் கடந்தநிலையில் நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் (16.08.1994) திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களுடன் தேர்தல் உடன்படிக்கை ஒன்றினை மேற்கொண்டிருந்தார். அதற்கமைய



படிப்பகம்

www.padippakam.com

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் தமது கட்சியினர் வேட்பாளர்களை நிறுத்துவதென உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. தேர்தல் முடிவுகளின்படி வடக்கு கிழக்கில் (143,307) வாக்குகளைப் பெற்ற ஸ்ரீ.ல.மு.காங்கிரஸினர் 6 பிரதிநிதிகளையும் தேசியப்பட்டியலில் ஒரு பிரதிநிதியுமாக மொத்தம் 7 பிரதிநிதிகளைப் பெற்ற அவர்களுக்கு பொ.ஜ.ஐக்கிய முன்னணியின் தேசியப்பட்டியலில் இருந்தும் 2 உறுப்பினர்கள் வழங்கப்பட்டு மொத்தமாக 9 உறுப்பினர்களை ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ் பெற்றது இந்நிலையில் புதிய அரசாங்கத்தை எந்தக்கட்சியினர் அமைப்பது பற்றிய தலைவிதியை தீர்மானிக்கும் நிலையை ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் பெற்றிருந்தது. அதற்கமைய தமது ஆதரவினை சந்திரிகா அவர்களுக்கு வழங்கியதற்கமைய பொ.ஜ.ஐக்கிய முன்னணியினர் ஆட்சியமைத்தனர். அமைக்கப்பட்ட அரசில் இரு அமைச்சர் பதவிகள் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸினருக்கு வழங்கப்பட்டது ஜனாப். அஷ்ரப் அவர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம், வாணிபம், முஸ்லிம் விவகாரம் கப்பல்துறை அபிவிருத்தி அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

ஜனாப். அஷ்ரப் அவர்கள் அரசாங்கத்தில் இணைந்திருந்த ஆறுவருட காலப்பகுதியில் வடகிழக்கு மாகாணங்களில் ஏற்கனவே செயலாற்றிய எந்தவொரு பிரதிநிதியாலும் செயற்படுத்தமுடியாத அளவிற்கு அபிவிருத்தி பணிகளை தமது முஸ்லிம் சமூகத்திற்கு வழங்கியிருந்தார். உதாரணமாக பல நூற்றுக்கணக்கான முஸ்லிம் இளைஞர்களுக்கு கல்வித்துறையிலும் துறைமுக அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திலும் பாரிய வேலைவாய்ப்புகளை வழங்கியதுடன் முஸ்லிம் மக்களுக்கென அம்பாறை மாவட்டத்திலுள்ள ஒலுவில் என்னும் நகரில் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்னும் பெயரில் தனியான பல்கலைக்கழகம் ஒன்றையும். ஒலுவில் துறைமுக கட்டிட நிர்மாணம். முஸ்லிம் சமூகத்திற்கென புனிதநகர் திட்டத்தின்கீழ் காத்தான்குடி பள்ளிவாசல் புனித நகராக்கப்பட்டமை போன்ற பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டார். அத்துடன் தேசியக் கட்சிகளான ஸ்ரீ.ல.சு கட்சியினரோ அன்றி ஐ.தே.கட்சியினரோ நிர்மாணிக்காத மாபெரும் 6 மாடிக்கட்டிட கட்சிப் பணிமனையை கொழும்பு தலைநகரில் அமைத்திருந்தார் இது போன்ற பல அளப்பரிய சேவையினை முஸ்லிம் சமூகத்தினருக்கு வழங்கிய பெருமையை அஷ்ரப் தவிர்ந்த எந்தவொரு முஸ்லிம் அரசியல்வாதியாலும் குறுகியகால இடைவெளியில் செயற்படுத்த முடியவில்லையென்பதை பல முஸ்லிம் கல்விமான்கள் புகழ்ந்து பாராட்டுக்கள் தெரிவித்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

## வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல் (19.11.1988)

இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட வடகிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தினை தெரிவு செய்வதற்கான மாகாண சபைத் தேர்தல் (19.11.1988ல்) நடைபெறுமெனவும் அதற்கான நியமனப் பத்திரங்கள் அக்டோபர் 10 ந் திகதிக்கு முன்னர் தாக்கல் செய்யப்பட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டது. இருந்தும் வடபகுதியில் நிலவிய குழப்பமான சூழ்நிலையில் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் இந்திய அமைதிகாக்கும் படையினரின் பாதுகாப்பில் இருந்துவந்த ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ஈ.என்.டி.எல்.எப் ஆகிய அமைப்புக்கள் மட்டுமே வடபகுதியிலுள்ள மாவட்டங்களில் எதிர்ப் போட்டியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் தமது வேட்பாளர்களை நிறுத்தியிருந்தன. அதேவேளை விடுதலைப் புலிகள் மாகாண சபைத் தேர்தலில் எவரும் பங்கு கொள்ளக் கூடாதெனவும் எச்சரிக்கையினை அரசியல் கட்சிகளுக்கு விடுத்த அதேவேளை பொதுமக்கள் எவரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளக்கூடாது என்ம் அச்சுறுத்தலையும் வழங்கினர்.

இந்நிலையில் இந்திய அமைதிகாக்கும் படையினரின் ஆதரவுடன் வடமாகாணத்தில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்த ஈ.என்.டி.எல்.எப் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய இரு அமைப்புக்களும் ஏனைய எவரும் போட்டியிடாத நிலையில் அம்மாகாணத்திற்குரிய (36) பிரதிநிதித்துவத்தினை தலா 24–12 என ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் ஆகிய இரு அமைப்புக்களும் பகிர்ந்து கொண்டன. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரை அங்கு இடம்பெற்ற தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எப், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் மற்றும் ஐ.தே.கட்சி ஆகியன களமிறங்கின. கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரை மொத்த வாக்காளர்களில் (62.5) வீதமான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டனர். தேர்தல் முடிவுகளுக்கமைய ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் தலா (17) இடங்களையும், ஐ.தே.கட்சியினர் (01) உறுப்பினரையும் பெற்ற நிலையில் மாகாண சபையின் நிர்வாகம் திருகோணமலை நகரினை தலைமையாகக்கொண்டு திரு வரதராஜப்பெருமாள் அவர்களை முதலமைச்சராக நியமித்து இயங்கியது. தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.



படிப்பகம்

www.padippakam.com

| கட்சிகள் | வாக்காளர் | விகிதம் | உறுப்பினர் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஈ.பி.ஆர்.எல்.எப் | 215,230 | 55.00% | 17 | 00 | 24 | 41 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 168,038 | 42.94% | 17 | 00 | | 17 |
| ஐ.தே.கட்சி | 8,056 | 2.05% | 01 | | | 01 |
| ஈ.என்.டி.எல்.எப் | 12 | 12 | | | | |
| மொத்தவாக்குகள் | 391,324 | 35 | | 36 | 71 | |

## வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்தான மாகாணசபைத் தேர்தலில் தெரிவான உறுப்பினர்கள்

### யாழ் மாவட்டம்

கே. பிரேமச்சந்திரன் | கே.க. ரவீந்திரன் | பீ. இராமலிங்கம்
எ. யோகராசா | எ.ஜெயச்சந்திரன் | எம். ஆர்குலதீபன்
எ. சிவகுமார் | பன்னீர் செல்வம் | என். கமலாகரன்
எ. விவேகானந்தன் | ரீ. ஜோசப் | ஏ .மகேந்திரன்
வீ. வசிகரன் | எம். ரவிசங்கர் | டி.ஆர். அன்ரன்
பீ. தங்கராசா | பீ. லோகேஸ்ரன் | பி. பிரபாகரன்
ஏ. ரவீச்சந்திரன்

### மன்னார் மாவட்டம்

ஏ. எமலியானுபிள்ளை | ரீ. லிங்கேஸ்ரன் | ஏ. அருணராஜசேகர்
எம். மீராமுகைதீன் | கே. கனகதாஸ்

### வவுனியாமாவட்டம்

ஐயம்பிள்ளை யசோதரன் | சி. சிவபாலராசா | வை. பொன்னுத்துரை
த. குருநாதன்

### முல்லைத்தீவுமாவட்டம்

பெரூரியமூர்த் | யே.எம்..பி. ஜெயசீலன் | கரேலிஸ் தயானந்த
ச. சிவானந்தன் | இ. மகேந்திரன்

### கிளிநொச்சிமாவட்டம்

அஞ்சலோ ஜோசப் | பா. இராசரத்தினம் | கே. பிரான்சிஸ் யோசப்



படிப்பகம்

www.padippakam.com

**மட்டக்களப்பு மாவட்டம்**

| | | |
|---|---|---|
| பெ. கிருபாகரன் | செ. கணேசமூர்த்தி | கே. விநாயகமூர்த்தி |
| ஒஸ். நேசராசா | கேக. குமரகுரு | ஈ. கோபதராசா |
| செ. புஸ்ராசா | ரி. ருத்திரா | எம். ஸப்பர் தாகிர் |
| எம்.ஏ.எம்.சே. இக்பால் | ஏ.சீ.எம். பாயிஸ் | |

**அம்பாறை மாவட்டம்**

| | | |
|---|---|---|
| கே. சின்னையா | ஞா. பத்மநாதன் | வே. புவநேந்திரன் |
| கே. மங்களராசா | நிகால். சேந்தி.பக்மீவெல | எச். முகமட் சக்கரியா |
| ஏ.எம். எச்.தீர் | ஏ.எம். மொகமட் குசைன் | ஏ. முகமட் பலீல் |
| எம்.எச். செய்யட் முகமட் | எம். மர்சூக் | எம்.ஐ. மொகமட்யவுபர் |
| எம்.என்.எம். தாயுதீன் | ஏம்.ரீ. கதீக் | |

**திருகோணமலை மாவட்டம்**

| | | |
|---|---|---|
| யோ.த. தம்பிராசா | எச். கிங்ஸ் றொபட் | இ. திலகராசா |
| சி.தயாபரன் | எல்.பொன்சேகா பாலிவா | எம்.எம். ரிசான் |
| ஏ.ஏம். மொகமட் யவாட் | எம்.ஆர். ஜலால்தீன் ரூமி | |
| எம்.எம். மொகமட் வசீர் | எம்.ஜே.எம். உக்காஸ் | |

## இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் (19.12.1988)

1988 டிசம்பர் மாதம் 19 ந் திகதி இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறுகின்றது இத்தேர்தலில் எவ்வாறேனும் தமது வெற்றியினை உறுதிப்படுத்த வேண்டுமெனக் கருதிய திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் 1988ம் ஆண்டின் 39ம் இலக்க விசேட ஏற்பாடுகளுக்கமைய ஏற்கனவே ஐ.தே.கட்சியினராலேயே பிரஜாவுரிமை ரத்துச்செய்யப்பட்டு நாடற்றவர்களாக இலங்கையில் வசித்த ஏறக்குறைய (9) லட்சம் மக்களில் (3 1/2) மூன்றரை இலட்சம் இந்திய வம்சாவழியினருக்கு பிரஜாவுரிமையினை வழங்கினார். இதற்கானசட்டமூலம்(18.11.1988ல்)பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது அதற்கமைய அவசர, அவசரமாக அவர்களின் பெயர்கள் வாக்காளர்களின் பெயர்கள் பதிவுசெய்யப்பட்டதற்கமைய குறிப்பிடத்தக்களவு புதிதாக வாக்குரிமையினை பெற்றவர்கள் திரு பிரேமதாசா அவர்களுக்கு வாக்களித்ததற்கமைய ஐ.தே.கட்சியின் வேட்பாளராக நிறுத்தப்பட்ட திரு. ஆர். பிரேமதாசா அவர்கள் வெற்றிபெறுகின்றார்.



படிப்பகம்

www.padippakam.com

| வேட்பாளர்கள் | அரசியல் கட்சிகள் | வாக்களித்தவர்கள் | விகிதம் |
|---|---|---|---|
| ஆர்.பிரேமதாசா | ஐ.தே.கட்சி | 2,569,199 | 50.43% |
| ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | ஸ்ரீ.ல.சு.கட்சி | 2,289,860 | 44.95% |
| ஒஸ்வின் அபேகுணசேகர | ஸ்ரீ.ல.ம.கட்சி | 235,719 | 4.63% |
| செல்லுபடியான வாக்குகள் | | 5,094,778 | |

## ஜனாதிபதித் தேர்தல் 1988 அ.இ.த.காங்கிரஸ்



1988ம் ஆண்டு டிசம்பர் 19ந் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடன் தேர்தல் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியிருந்தார் 1982ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் ஈழம் ஒன்றே தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையுமென வலியுறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் அ.இ.த.கா. 1,73,934 வாக்குகள் மட்டும் பெற்று நான்காவது இடத்திற்கு தள்ளப்பட்டார். இந்நிலையில் (1988ல்) இடம்பெற்ற இத்தேர்தலில் வட மாகாணத்துடன் திருகோணமலையின் ஒரு பகுதியை இணைத்து தனியான பிராந்திய சபையொன்று ஏற்படுத்துவதாகவும் ஏனைய பகுதிகளை கிழக்கு மாகாணத்துடன் இணைத்து கிழக்கு மாகாணத்திற்கு தனியான பிராந்தியசபை அமைப்பதெனவும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடன் ஓர் இணக்கத்தினை ஏற்படுத்தி இருந்தார்.

இத்தீர்வுத் திட்டத்திற்கு விடுதலைப்புலிகளின் சம்மதத்தையும் பெற்று அவர்களின் ஆதரவினையும் திருமதி. ஸ்ரீமாவோ அவர்களுக்கு சாதகமாக பாவிப்பதற்காக புலிகளின் பிரதிநிதிகளை சந்திப்பதற்காக திரு.குமார் பொன்னம்பலம் அவர்களும் திரு. அநுரா பண்டாரநாயக்கா அவர்களும் வன்னிக் காட்டிற்கு சென்றிருந்தனர். அங்கு புலிகளின் அரசியல் பிரிவினர் சிலரைச் சந்தித்து நடாத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் சாதகமாக



படிப்பகம்

www.padippakam.com

அமையாத நிலையில் ஸ்ரீமாவோ அவர்களின் பிரச்சார மேடைகளில் புலிகள் ஒரு பாசிஸவாத அமைப்பென்றும் அவர்களுடன் எவரும் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு தீர்வுத்திட்டத்தை பெறமுடியாதெனவும் கூறினார் இத்தேர்தலின் போது Democratic peoples Alliance என்னும் அமைப்பின்கீழ் நான்கு கட்சிகள் ஒன்றிணைந்து ஸ்ரீமாவோ அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து திருமதி ஸ்ரீமாவோ அவர்களின் தேர்தல் பிரச்சார மேடைகளில் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களும் பங்குகொண்டு அவருக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்தார் அக்காலகட்டத்தில் திருமதி ஸ்ரீமாவோ அவர்களின் மேடைப் பேச்சுக்களில் (களுபுத்தா) தமிழில் கறுப்பு மகன் என திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் செல்லமாக ஸ்ரீமாவோ அவர்களால் அழைக்கப்பட்டார். தேர்தல் முடிவுகளின்படி ஸ்ரீமாவோ அவர்கள் தோல்வியடைந்ததும் ஒப்பந்தம் செல்லுபடியற்றதென அறிக்கை விடுத்திருந்தார். ஸ்ரீமாவோ அவர்களின் அறிக்கையைத் தொடர்ந்து திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அவரது அணியிலிருந்து வெளியேறினார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுற்று இரு மாதகால இடைவெளியில் அதாவது (20.12.1988ல்) எட்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையைத் தொடர்ந்து ஒன்பதாவது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் (15.02.1989ல்) நடாத்தப்பட்டது.

## தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம். (P.L.O.T.E) அரசியல் வரலாறு



முகுந்தன் என அழைக்கப்படும் திரு. உமாமகேஸ்வரன் தெல்லிப்பளையைச் சேர்ந்த வசதியான மத்தியதர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்தவர். தமிழீழ விடுதலைப் புலிகளுள் இருந்த ஆங்கிலம் பேசத் தெரிந்த மிகச் சிலருள் இவரும் ஒருவர். நேர்மை மிக்க இவர் தாக்குதல்களில் முன்நிற்கும் துணிச்சல் நிறைந்த போராளி. நில அளவையாளராகச் தொழில் பார்த்துக்கொண்டிருந்த உமாமகேஸ்வரன் தனது தேசிய அரசியலிலான ஆர்வத்தையும் செயற்பாட்டையும் மறைவாக இருந்த



படிப்பகம்

காலப்பகுதியிலேயே ஆரம்பித்திருந்தார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் கொழும்புக்கிளை செயலாளராகவும் சில வருடங்கள் செயற்பட்டார்.

தமிழ்ப் புதிய புலிகளாக இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டதற்கு முன்னதாக அகதிகளுக்கு உதவும் மனிதாபிமான வேலைகளில் இவர் ஈடுபட்டிருந்தார். காலப்போக்கில் பிரபாகரனுடைய நடவடிக்கைகள் அனைத்தும் பயங்கரவாத செயற்பாடுகளை நோக்கி நகர ஆரம்பித்தமையால் இரு சாராருக்குமிடையிலான முரண்பாடுகள் வளர்ச்சியடைந்தது. இக்காலப்பகுதியிலேயே இலங்கை அரசின் உளவுப் பிரிவில் கடமையாற்றிய திரு. பஸ்தியாம்பிள்ளை அவர்களைத் தலைமையாகக் கொண்ட பேரம்பலம், பாலசிங்கம் ஆகிய மூவரினதும் படுகொலையினை (07.04.1978ல்) அனைவரும் இணைந்த நிலையிலேயே மேற்கொள்கின்றனர். ஆனால் இப்படுகொலைகளுக்கும் பிரபாகரனுக்கும் எவ்வித தொடர்புகளும் இருக்கவில்லை. இருந்தும் தாமே இப்படுகொலையின் சூத்திரதாரியென (03.05.1978ல்) பிரபாகரன் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார்.

இப்படுகொலைகள் தொடர்பாக பத்திரிகைகள் வெளியிட்டிருந்த செய்தியில் அங்கு நடந்தவற்றிற்கு முற்றிலும் மாறுபட்ட செய்திகளையே வெளியிட் டிருந்தன. இக்கொலை தொடர்பான உண்மை விடயங்களை மேற்படி நூலின் ஆசிரியரான குமாரதுரை ஆகிய என்னிடம் அன்றைய விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான குமணன் என்பவர் நேரடியாகவே தெரிவித்திருந்தார். இவர் 1978ம் ஆண்டு அக்டோபர் மாதம் எனது வீட்டில்வைத்து மூதூர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு இருவாரகாலம் திருகோணமலையிலமைந்துள்ள தடுப்புக்காவல் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அக்காலப்பகுதியில் மூதூர் நீதவான் நீதிமன்றில் நீதிபதியாக பணியாற்றிய திரு ஞானச்சந்திரன் அவர்களுடனான எனது நடவடிக்கைகள்மூலமே குமணன் விடுதலை செய்யப்பட்டார்.

குமணன் எனக்குத் தெரிவித்த தகவல்களின்படி அன்றைய பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினரான திரு கனகரெத்தினம் அவர்களின் படுகொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட ஒருவர் திரு. பஸ்தியாம்பிள்ளை (G.I.D) அவர்களுக்கு வழங்கிய சாட்சியத்திற்கமைய மன்னார், முருங்கன் வீதியில்

www.padippakam.com

அமைந்திருந்த பண்ணை ஒன்றில் தங்கியிருந்த குற்றவாளிகளை கைது செய்வதற்காகச் சென்றவர்களை அவர்களுடன் நண்பர்கள்போல் உறவாடி அவர்களிடமிருந்த ஆயுதத்தினை தந்திரோபாயமாக பறித்தெடுத்து இருவரை சுட்டுக் கொன்றதுடன் ஒருவரை கிணறு ஒன்றினுள் தள்ளிவிட்டு கொலைசெய்தமையே இடம்பெற்றதென அவர் என்னிடம் தெரிவித்தார்.

மேற்படி இருசாராருக்குமிடையிலான முரண்பாடுகளைத் தொடர்ந்து உமா மகேஸ்வரன் அவர்களை கொலைசெய்யும் நோக்குடன் பிரபாகரன், மற்றும் அவரின் சகாவான ராகவன் தற்போது லண்டனில் வசிப்பவர் ஆகிய இருவரும் இணைந்து தமிழ் நாடு பாண்டிபஜார் என்னுமிடத்தில்வைத்து (19.05.1982ந்) திகதியன்று மாலை 9.45 மணியளவில் உமாமகேஸ்வரன் மற்றும் அவரின் சகாவான ஜோதீஸ்வரன் ஆகிய இருவரையும் படுகொலைசெய்யும் நோக்குடன் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இச்சம்பவத்தில் உமா மகேஸ்வரன் தப்பியநிலையில் ஜோதீஸ்வரனின் கால் (தொடை இரண்டிலும்) revolver குண்டுகள் தாக்கியதில் அவர் காயமுற்றார். மேற்படி சம்பவத்தினைத் தொடர்ந்து பிரபாகரனும், ராகவனும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். அக்காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் தேடப்பட்டுவந்த மேற்படி நபர்களை காட்டிக் கொடுப்பவர்களுக்கு, அல்லது அவர்களை கொலைசெய்து அவர்களின் தலையை ஒப்படைப்பவர்களுக்க (ஐந்து இலட்சம் இலங்கை ரூபா) சன்மானம் வழங்கப்படுமென இலங்கை அரசு அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் மேற்படி சம்பவத்தில் பாதிப்பிற்கு உள்ளாக்கப்படாது தப்பிச்சென்ற உமா மகேஸ்வரன் அவர்கள் (25.05.1982ந்) திகதியன்று தமிழ் நாடு கும்மிடிப்பூண்டி புகையிரத நிலையத்தில் வைத்து revolver ஒன்றுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அதனால் அவருக்கு எதிராகவும் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையினால் அவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார். இச்சம்பவத்தில் உமா மகேஸ்வரனின் சகாக்களில் ஒருவரான இலனேஸ்வரன் என்பவரும் (23.05.1982ல்) கைதுசெய்யப்பட்டு அனைவரும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். மேற்படி நபர்கள் அனைவரையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை அரசு இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டபோதும் இந்திய அரசு அக்கோரிக்கையினை நிராகரித்துவிட்டது.



படிப்பகம்

www.padippakam.com

அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட மேற்படி நபர்கள் அனைவரும் நிபந்தனையுடனான நீதிமன்ற உத்தரவின் பேரில் (05.08.1982ல்) விடுதலைசெய்யப்பட்டனர்.

## இராணுவப் புரட்சி மூலம் மாலைதீவு அரசாங்கத்தினை கைப்பற்றுவதற்காக (P.L.O.T.E) அமைப்பினர் மேற் கொண்ட முயற்சி



இலங்கை அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் நோக்குடன் தமக்கான நிரந்தரத் தளம் ஒன்றினை அமைக்கும் நோக்குடன் 1988 நவம்பர் மாதம் 90 வரையிலான ஆயுததாரிகளைக் கொண்ட குழுவினர் பல இயந்திரப்படகுகள் மூலம் மாலைதீவிற்குச் சென்று மாலைதீவின் தலைநகரமான மாலே நகரத்தினையும், அரசாங்கத்தின் தலைமைக் காரியாலயம், விமான நிலையம், துறைமுகம் மற்றும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் போன்றவற்றினை தமது கட்டுப்பாட்டின் கீழ் முற்றுகையிட்டனர். அதேவேளை அந்நாட்டின் அன்றைய ஜனாதிபதியான (Gayoom) என்பவரை கைதுசெய்ய தவறிவிட்டனர். அதனால் அவரால் மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கையின் மூலம் அவர் விடுத்த வேண்டுகோளினை ஏற்ற அன்றைய இந்தியப் பிரதமரான திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமது நாட்டின் இராணுவம், விமானப்படை போன்ற 1600 வரையிலான துருப்புக்களை சம்பவம் இடம்பெற்ற 12 மணித்தியால இடைவெளியில் மாலைதீவிற்கு அனுப்பியதன்மூலம் (P.L.O.T.E) அமைப்பினரின் இராணுவப் புரட்சி தோற்கடிக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இச்சம்பவத்தின்போது புரட்சியாளர்களின் ஆயுததாரிகள் 19பேர் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் ஏனையோரில் ஒரு சாரார் தப்பியோடியதுடன் ஏனையவர்களில் 25 பேர்வரை கைது செய்யப்பட்டனர்.

மேற்படி கைதுசெய்யப்பட்ட குழுவினர் அனைவரும் நீதிமன்றத்தில் நிறுத்தியதற்கமைய அவர்கள் அனைவருக்கும் மாலைதீவின் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் இதுவிடயத்தில் இந்திய அரசு தலையிட்டதன் காரணமாக அவர்களின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு குறுகியகால இடைவெளியில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அதேவேளை ஏற்கனவே திரு உமா மகேஸ்வரன் அவர்களை படுகொலை செய்வதற்கு பிரபாகரனால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் (19.05.1982ல்) உயிர் தப்பிய அவரை பிரேமதாசாவுடன் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து கொழும்பில் வைத்து அவர் (16.07.1989ல்) விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். அவர் படுகொலை செய்யப்படுவதற்கு முன்னர் (15.02.1989ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நுவரெலியாவிலும், யாழ்ப்பாணத்திலும் தேர்தலில் போட்டியிட்ட புளொட் அமைப்பினர் முறையே 10,509, 7993 என்னும் அடிப்படையில் வாக்குகளைப் பெற்றபோதும் எவரும் தெரிவாக வில்லை.

திரு. உமா மகேஸ்வரன் அவர்களின் படுகொலையினைத் தொடர்ந்து கட்சியின் தலைமைப் பொறுப்பினை திரு.தர்மலிங்கம் சித்தார்த்தன் என்பவர் பொறுப் பேற்றார். இவர் ஏற்கனவே ரெலோ அமைப்பினரால் (02.09.1985ல்) சுட்டுக் கொல்லப்பட்ட முன்னாள் மானிப்பாய் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு. வி. தர்மலிங்கம் அவர்களின் மகன் ஆவார். இந்நிலையில் 1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வடமாகாணம் வன்னி மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்கியவர்கள் (11,567) வாக்குகளைப்பெற்று மூன்று உறுப்பினர்களை வென்றனர். மேற்படி கட்சியின் பெயரினை (1988ம்) ஆண்டு ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (D.P.L.F) எனப் பெயர் மாற்றம் செய்தனர்.

| மாவட்டம் வன்னி | பெற்ற வாக்குகள் 11,567 | பிரதிநிதிகள் (3) |
|---|---|---|
| திரு த சித்தாத்தன் | 6,367 | 01 |
| திரு எஸ் சண்முகநாதன் | 5,828 | 01 |
| திரு பி வைத்தியலிங்கம் | 4,515 | 01 |



படிப்பகம்

www.padippakam.com

மேற்படி தெரிவானவர்களில் மாணிக்கம் தாசன் என அழைக்கப்படும் திரு சண்முகநாதன் (15.07.1998ல்) விடுதலைப் புலிகளின் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்டார். பின்னர் (06.12.2001ல்) இடம்பெற்ற தேர்தலில் 4468 வாக்குகளைப்பெற்று திரு. சித்தாத்தன் அவர்கள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டார். பின்னர் 2004ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மாற்றுக் கட்சியினர் எவரும் பங்குகொள்ளமுடியாதவாறு விடுதலைப் புலிகளின் அராஜகம் வடமாகாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளை ஆதரித்தவர்களே அங்கு வெற்றியீட்டினர்.

திரு. பிரபாகரன் அவர்களின் மறைவையடுத்து மீண்டும் அரசியல் பணிகளில் ஈடுபட்ட புளொட் அமைப்பினர் (08.08.2009ல்) இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா நகரசபைக்கான தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகளுக்கமைய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 4279 வாக்குகளையும், புளொட் அமைப்பினர் 4136 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினர் 3045 வாக்குகளையும், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸினர் 587 வாக்குகளையும் பெற்றனர்.

| | | | |
|---|---|---|---|
| த.தே.கூட்டமைப்பு | 4279 | 34.81 | 05 |
| ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி(D.P.L.F) | 4136 | 33.65 | 03 |
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 3045 | 24.77 | 02 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 587 | 4.78 | 01 |

தேர்தல் முடிவுகளுக்கு அமைய பலதரப்பட்ட குளறுபடிகள் இடம்பெற்றன. இருந்தும் எவ்வாறேனும் பயங்கரவாதியான திரு பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் சங்கமமாவதற்கு திரு. சித்தாத்தன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எதுவும் இன்றுவரை பலனளிக்கவில்லை.

## விடுதலைப் புலிகளின் புரிந்துணர்வு உடன்படிக்கையும் பேச்சுவார்த்தைகளும்

05-12-2001 தேர்தல் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி

09-12-2001 திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் பிரதமராகப் பதவியேற்பு



படிப்பகம்

| | |
|---|---|
| 27.01.2002 | முன்னாள் பயங்கரவாதிகளையும், பயங்கரவாதத்தினை ஆதரிக்க முன்வந்த முன்னாள் மிதவாதக் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் இணைத்து திரு பிரபாகரன் அவர்களால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. |
| 22-02-2002 | புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து. |
| 13-04-2002 | பிரபாகரன்-ரவூப் ஹக்கீம் உடன்படிக்கை. |
| 01-05-2002 | வாகரையில் ராணுவம் புலிகள் தாக்குதல். |
| 19-09-2002 | முதலாவது பேச்சுவார்த்தை தாய்லாந்து சத்தாஹிப் கடற்படைத் தளம். |
| 31-10-2002 | இரண்டாவது பேச்சுவார்த்தை தாய்லாந்து |
| 02-11-2002 | மூன்றாவது பேச்சுவார்த்தை இடைக்கால நிர்வாக சபையைக் கைவிட்டதாக தாய்லாந்தில் பாலசிங்கம் அறிவிப்பு. |
| 24-11-2002 | விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரான திரு அன்ரன் பாலசிங்கம் அவர்களுக்கும் திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்குமிடையிலான சந்திப்பு. நோர்வேயில் இடம்பெற்றது. |
| 06-01-2003 | நான்காம் சுற்றுப்பேச்சு டோக்கியோ மகாநாடு விடுதலைப் புலிகள் பங்கேற்க மறுத்தனர். |
| 07-02-2003 | ஐந்தாம் சுற்று ஜேர்மன். |
| 18-03-2003 | ஜப்பான் ஹக்கோன் நகரில் ஆறாம் சுற்றுப் பேச்சு புலிகளிடம் ஆயுதக்களைவுபற்றிய பிரதான வலிறயுறுத்தல் முன்னுரிமை பெற்றமையால் புலிகள் செல்லவில்லை. |
| 09-06-2003 | உதவி வழங்கும் நாடுகளின் ஜப்பான் டோக்கியோ மகாநாடு புலிகள் பங்குகொள்ளவில்லை. |
| 21-04-2003 | புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேற்றம். |
| 20-08-2003 | மீண்டும் இடைக்கால அரசுபற்றி புலிகளின் சட்டவல்லுனர்களுடன் இலங்கையின் முன்னாள் சட்ட மா அதிபர் சிவா பசுபதி உட்பட பிரான்ஸில் ஆலோசனை. |
| 01-09-2003 | புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ் செல்வன் சுவிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பு. |
| 02-10-2003 | அயர்லாந்தில் இடைக்கால அரசுபற்றி புலிகளின் பிரதிநிதிகள் ஆலோசனை. |

www.padippakam.com

| | |
|---|---|
| *31-10-2003* | இடைக்கால நிர்வாக யோசனை புலிகளினால் நோர்வே ஊடாக அரசுக்கு கையளிப்பு. |
| *14-11-2003* | பேச்சுவார்த்தையிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகல் |
| *26-11-2003* | ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுப் பிரதிநிதி வன்னியில் பிரபாகரனுடன் சந்திப்பு. |
| *29-05-2006* | ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பாக தடை. |

●



படிப்பகம்

www.padippakam.com

## இந்தியத் தலையீடு இறுதி - 2

இந்தியாவின் நேரடித் தலையீட்டுடன் (1987) யூலை மாதம் 29ந் திகதி இந்திய-இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கைக்கு வருகைதந்து வடகிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பினை பொறுப்பேற்றனர். அதனைத் தொடர்ந்து 1988ம் ஆண்டு வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களும் இணைந்ததான முதலாவது மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. தொடர்ந்து வந்த காலங்களில் ஏற்பட்ட ஜனநாயக இடைவெளியினைப் பயன்படுத்தி 1988ம் ஆண்டு இறுதியில் கூட்டணிப் பிரதிநிதிகளில் பலர் நாடு திரும்பினர். 1989 பெப்ருவரி மாதம் 15ந் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தலில் பங்குகொள்ள ஆலோசனைகளை அவர்கள் மேற்கொண்டபோது கட்சியிலுள்ள சிலர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்நிலையில் பெரும்பாலானவர்களினதும், தலைமைப்பீடத்தினதும் விருப்பத்திற்கமைய பலர் போட்டியிடத்தீர்மானித்தனர். அத்தேர்தலில் மூதூர் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் (1970–1977) பின்னர் திருகோணமலை மாவட்ட சபையின் தலைவராக (1981–1983 வரை) பதவி வகித்தவருமான திரு. தங்கத்துரை அவர்கள் தம்மை ஈடுபடுத்தாது ஒதுங்கிக்கொண்டார். இதற்கமைய ஜனநாயக வழிக்குத் திரும்பிய முன்னாள் பயங்கரவாத அமைப்புக்கள் சிலவற்றையும் தம்முடன் இணைத்து தமிழர் கூட்டணி என்னும் பெயரில் உதயசூரியன் சின்னத்தில் த.வி.கூட்டணியினர் போட்டியிட்டனர் தேர்தலில் இவர்களுடன் இணைந்து போட்டியிட்டவர்கள் (E.P.R.L.F- E.N.D.L.F.–மற்றும் T.E.L.O.) ஆகிய அமைப்புகளாகும். இத்தேர்தலில் வடகிழக்கு மாகாணங்களிலுள்ள 31ஆசனங்களுக்கு 46 வேட்பாளர்களை இவர்கள் நிறுத்தியிருந்தனர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் முக்கியஸ்தர்களான திருவாளர்கள், அமிர்தலிங்கம், சிவசிதம்பரம், யோகேஸ்வரன், ஆனந்தசங்கரி, சம்பந்தன், சூசைதாசன் ஆகியோர் போட்டியிட்டனர். இத்தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிட முடியாத நிலையில் திரு. அமிர்தலிங்கம் அவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மக்களை ஏமாற்ற அங்கு களமிறங்கினார்.

இந்நிலையில் வடகிழக்கு மாகாண சபையினை ஏற்றுக்கொள்ளாத தமிழீழ விடுதலைப் புலிகள் இந்திய அமைதிகாக்கும படையினருடன் யுத்தத்தில்



படிப்பகம்

www.padippakam.com

ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அதேபோன்று ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டபோது வடக்கு, கிழக்கில் அத்தேர்தலினை நடாத்தவிடாது தடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டனர். தமது பயங்கரவாத செயற்பாடுகளினூடாக வேட்பாளர்களையும், வாக்காளர்களையும் கொலை அச்சுறுத்தல் விடுத்ததன்மூலம் தேர்தலில் பங்குகொள்ளாது தடுத்து வந்தனர். இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் ஆளுமைக்குள் இருந்த யாழ் குடாநாட்டில் தேர்தல் களைகட்டவில்லை. எனினும் வடக்கு மாகாணத்தின் மற்றைய பகுதிகளிலும், கிழக்கு மாகாணத்திலும் பல்முனைப் போட்டிகள் இடம்பெற்றன. தமது எச்சரிக்கைகளையும், கொலை மிரட்டல் களையும் மீறி தேர்தல் நடத்தப்படுமென்னும் நிலை உருவானதன் பின்னர் புலிகளின் தொங்கு சதைகளான ஈரோஸ் அமைப்பினரை தேர்தலில் களமிறக்கினர். ஈரோஸ் அமைப்பின் வேட்பாளர்களாக மட்டக்களப்பில் புலிப்பினாமிகளே களமிறங்கினர். இதன் காரணமாக மட்டக்களப்பில் மூத்த ஈரோஸ் போராளிகள் தோழர் விக்கி தலைமையில் தனிக்குழுவாக வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

## 1989 - 1994 திரு குமார் பொன்னம்பலம் அவர்களின் தலைமையிலான த.காங்கிரஸ் கட்சி



1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் திரு.குமார் பொன்னம்பலம் அவர்கள் மட்டும் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டு 7610 வாக்குகள் பெற்றார். 1982 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் உரிமைகளை வென் றெடுப்பதற்கு தமிழ் ஈழம் மட்டுமே சரியான தீர்வு எனக்கூறி ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியவர் அத்தேர்தலில் தோல்விகண்டார். தொடர்ந்து 1988ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களுடன் இணைந்து தனிமனித உடன்படிக்கை ஒன்றினை ஏற்பாடுசெய்தார். அவ்வுடன்படிக்கையில் திருகோணமலை மாவட்டத்தினை வடமாகாணத்துடன் இணைத்து அதற்குத் தனியான ஒரு பிராந்திய சபை அமைப்பதுடன் ஏனைய கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கியதான பிராந்திய சபை ஒன்று இணைப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய அவருக்காக தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்ட அவர் அதிலும் ஏமாற்றமடைந்த நிலையிலேயே யாழ்ப்பாணத்தில்




படிப்பகம்

www.padippakam.com

தனிமனிதனாக நின்று பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கினார். அக்காலகட்டத்தின்போது விடுதலைப் புலிகளினதும், அரசாங்கத்தினதும் தாக்குதல்கள் அங்கு அதிகரித்திருந்தமையால் தேர்தல் பிரச்சாரங்களெதுவும் மேற்கொள்ள முடியாத நிலையில் (7610) வாக்குகள் மட்டும் பெற்ற நிலையில் அங்கும் தோல்விகண்டார். இந்நிலையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு கொழும்பு சிறைச்சாலைகளில் தடுத்து வைத்திருந்த தமிழ் கைதிகளின் விடுதலை சம்பந்தமான விடயங்களில் தம்மாலான முயற்சிகளை செய்துகொண்டிருந்தார். அதன் பின்னர் திரு.பிரபாகரன் அவர்களுடன் மீண்டும் நல்லுறவு ஒன்றினை ஏற்பாடுசெய்தவர் விடுதலைப் புலிகளின் போராட்டத்தினை நியாயப்படுத்தும் பணியில் தம்மை இணைத்தார். விடுதலைப் புலிகளின் மனித உரிமைமீறல்கள் அனைத்திற்கும் நியாயம் கற்பித்த அவருக்கு புலம்பெயர் புலி ஆதரவாளர்களின் வரவேற்பு கிடைத்ததற்கமைய ஐரோப்பிய நாடுகள் சிலவற்றிற்கு பயணங்களை மேற்கொண்ட அவர் விடுதலைப்புலிகளுக்காக பிரச்சாரம் செய்த நிலையில் அக்காலப்பகுதியிலேயே கொழும்பில்வைத்து (05.01.2000ல்) படுகொலை செய்யப்பட்டார்.

## குமார் பொன்னம்பலத்தின் படுகொலை (05.01.2001)



திரு. கணபதி காங்கேசர் பொன்னம்பலம் (G.G) அவர்களின் புதல்வரும் தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் (05.01.2001ந்) திகதி முற்பகல் 11.15 மணியளவில் கொழும்பில்வைத்து வன்முறையாளர் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார். அவரின் படுகொலைக்கு அவரால் (02.01.2001ல்) ராவய என்னும் சிங்களப் பத்திரிகைக்கு வழங்கப்பட்ட பேட்டியே காரணமென சில நாளிதழ்கள் கருத்து



படிப்பகம்

www.padippakam.com

வெளிமிட்டிருந்தன. பத்திரிகையின் நிருபர் கேட்ட கேள்விகளும் அதற்கு குமார் அவர்கள் வழங்கிய பதிலும் பின்வருமாறு அமைந்தது.

அரச படைகளுக்கு எதிரான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் விடுதலைப் புலிகள் குடியேற்றக் கிராமங்கள்மீது தாக்குதல் நடாத்துகிறார்கள், சிங்கள மக்களை குடும்பத்துடன் கொல்கிறார்கள், தெற்கே முக்கியமான இடங்களில் குண்டுகளை வெடிக்கவைத்து அப்பாவி மக்களை அழிக்கின்றார்கள். அப்படியான அமைப்பிற்கு என்ன அரசியல் நிலைப்பாடு இருக்க முடியும்.

**பதில்**

ஆங்கிலத்தில் சொல்லுவார்கள் All is fare in love and war என, இங்கு சரி பிழை, முடியுமா முடியாதா என்பதையெல்லாம் பார்க்கும் காலம் இதுவல்ல, இது யுத்தகாலம் என பதிலளித்தார். இந்நிலையில் புலிகள் தமது கொள்கைக்கு முரணான கருத்துக்களை கூறுபவர்களுக்கு என்ன தண்டனை வழங்கினார்களோ அதே தண்டனையை அடையாளங் கண்டுகொள்ள முடியாத ஒருவர் அவருக்கு வழங்கினார்.

## 15.02.1989ல் இடம்பெற்ற விகிதாசாரப் பிரதிநிதித்துவ பொதுத்தேர்தலும் த.வி.கூட்டணியினரும்

| வட மாகாணம் | மொத்த வாக்காளர்கள் | த.வி.கூ. வாக்களித் தவர்கள் | விகிதம் | மொத்தமாக வாக்களித் தவர்கள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 592,210 | 60.013 | 25.02% | 239,855 |
| கந்தையா நவரெத்தினம் | 22,255 | 9.25% | | |
| கந்தையா பிரேமச்சந்திரன் | 20,738 | 8.65% | | |
| ஞானசங்கரி யோகசங்கரி | 20,223 | 8.43% | | |
| மட்டுநகர் | 216,574 | 55.131 | 35.49% | 155,361 |
| கோவிந்தன் கருணாகரன் | 25,651 | 9.28% | | |
| பிரின்ஸ் காசிநாதர் | 21,959 | 8.65% | | |
| சாம் தம்பிமுத்து | 19,431 | 8.43% | | |
| அம்பாறை | 265,768 | 43.424 | 20.32% | 213,714 |
| ஜெயரத்தினம் திவ்வியநாதன் | 17,880 | 8.37% | | |



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் புலிகளின் அனுசரணையாளர்களாக களமிறங்கிய ஈரோஸ் அமைப்பினர் (15.02.1989)

| யாழ்ப்பாணம் | மொத்த வாக்காளர்கள் | ஈரோஸ் பெற்ற வாக்குகள் | விகிதம் | மொத்தமாக வாக்களித் தவர்கள் |
|---|---|---|---|---|
| இரத்னசபாபதி | 592,210 | 40,947 | 17.07 | 239,855 |
| இ பராாசிங்கம் | | 36,340 | 15.15 | |
| சின்னத்தம்பி சிவமகாராஜா | | 22,622 | 9.43 | |
| ஏ.பி செல்லையா | | 20,747 | 8.65 | |
| ரீ.லோகநாதபிள்ளை | | 17,616 | 7.34 | |
| எஸ் எட்வேட் | | 17,429 | 7.27 | |
| கே செல்வநாயகம் | | 14,440 | 6.02 | |
| ஜே.ஜி.ராஜேந்திரம் | | 13,928 | 5.81 | |
| வன்னி | 141,448 | | | 43,188 |
| இந்நாசிமுத்து அல்பிரட் | | 935 | 2.16 | |
| திருகோணமலை | 152,289 | | | 101,578 |
| சி.ரத்னராஜா | | 784 | 0.77 | |
| கே. மாதவராஜா | | 575 | 0.57 | |
| மட்டுநகர் | 216,574 | | | 155,361 |
| அ.குணசீலன் | | 22,889 | 14.73 | |
| மொத்தம் | | 209,254 | | |

குறிப்பு – வாசகர்களின் விசேட கவனத்திற்கு ஒவ்வொரு மாவட்டங்களிலும் களமிறங்கிய வாக்காளர்கள் பெற்ற வாக்குகளின் மொத்த எண்ணிக்கை அவர்கள் சார்ந்த கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுவினர் பெற்ற வாக்குகளைவிட கூடுதலான வாக்குகளாக இருப்பதற்கான காரணம் ஒவ்வொரு வாக்காளரும் ஒரே கட்சியினை அல்லது சுயேச்சைக் குழுவினைச் சார்ந்த தமக்கு பிரியமான மூன்று வாக்காளர்களுக்கு தலா ஒவ்வொரு வாக்குகள்வீதம் அளிப்பதற்கான வாய்ப்புக்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறைமில் வழங்கப்பட்டிருப்பதே அதற்கான வேறுபாடாகும்.

தேர்தல் முடிவுகளின்படி கூட்டணியின் முக்கியஸ்தர்கள் அனைவரும் தோல்வியுற்றனர். கூட்டமைப்புக்கு ஒன்பது ஆசனங்களும் தேசியப்பட்டியலின் மூலம் ஒரு ஆசனமும் கிடைத்தது. மட்டக்களப்பு மக்களால் தோற்கடிக்கப்பட்ட திரு. அமிர்தலிங்கம் அவர்கள் தேசியப் பட்டியல்



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினராக பாராளுமன்றத்திற்கு சென்றார். இத்தேர்தலின்போது கூட்டமைப்பின் சார்பில் அம்பாறை மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட திரு திவ்வியநாதன் அவர்கள் வெற்றிபெற்றதும் திரு. பிரேமதாசா தலைமையிலான அரசாங்கத்தில் இணைந்துகொண்டார்.

திரு. ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்களால் அறிமுகஞ் செய்துவைக்கப்பட்ட மாவட்டரீதியான விகிதாசாரப் பிரதிநிதித்துவ நடைமுறையின்கீழ் இத்தேர்தல் முதற் தடவையாக நடாத்தப்படுகின்றது. இத்தேர்தலின்மூலம் நாடு தழுவியரீதியில் (160) பிரதிநிதிகளும், மாவட்டரீதியாக ஒன்பது மாவட்டங் களுக்கும் தலா (4) வீதம் 36 பிரதிநிதிகளும் தேசியப்பட்டியல்மூலம் (29) பிரதிநிதிகளுமாக மொத்தம் (225) பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

## எட்டாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் (15.02.1989)

| அரசியல் கட்சிகள் | வாக்களித்தவர்கள் | தெரிவான உறுப்பினர்கள் | தேசியப் பட்டியல் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| ஐ.தே.கட்சி | 2,838,005 | 110 | 15 | 125 |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | 1,785,369 | 58 | 09 | 67 |
| ஈரோஸ் | 229,877 | 12 | 01 | 13 |
| த.வி.கூட்டணி<br>ஈ.என்.டி.எல்.எப்<br>ஈ.பி.ஆர்.எல்.எப்<br>ரெலோ | 108,594 | 09 | 01 | 10 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 202,016 | 03 | 01 | 04 |
| ஐக்கிய சோஷலிச முன்னணி | 160,271 | 02 | 01 | 03 |
| மக்கள் ஐக்கிய முன்னணி | 91,128 | 02 | 01 | 03 |
| சுயேச்சைகள் | 101,208 | 0 | | |
| மொத்தம் | 5,596,468 | | 29 | 225 |

ஈரோஸ் அமைப்பினர் போட்டியிட்ட மூன்று மாவட்டங்களிலும் மொத்தமாக (229,887) வாக்குகளைப் பெற்று (12) உறுப்பினர்களையும் தேசியப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டியலின்மூலம் (1) பஸீர் சேகு தாவுத் அவர்களையும் இணைத்து மொத்தமாக (13) உறுப்பினர்களைப் பெற்று மூன்று மாதங்கள் மட்டும் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தனர். தேர்தல் முடிவுகளுக்கமைய 125 உறுப்பினர்களைப் பெற்ற திரு பிரேமதாசா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சியினர் (09.03.1989ல்) தமது அரசாங்கத்தினை அமைக்கின்றனர். ஏற்கனவே இடம்பெற்ற இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்த திரு.பிரேமதாசா அவர்கள் இலங்கை – இந்திய உடன்படிக் கையினை இல்லாதொழிப்பதற்கும், அவ்வுடன்படிக்கையினைத் தொடர்ந்து வடக்கு – கிழக்கு மாகாணங்களின் பாதுகாப்பிற்கென வருகைதந்த இந்திய அமைதிகாக்கும் படையினரை வெளியேற்ற வேண்டுமென்னும் குறிக்கோளுடன் விடுதலைப் புலிகள் அமைப்பினருடன் உடன்படிக்கை ஒன்றினை 26.04.1989ல் கைச்சாத்திடுகின்றார்.

குறிப்பு – மேற்படி உடன்படிக்கையின்மூலம் விடுதலைப் புலிகள் ஏனைய ஆயுதக்குழுக்களையும் தேவையேற்படின் அரசுடன் இணைவது தவறல்ல என முதன்முதலாக அறைகூவல் விடுத்தனர். புலிகளின் மேற்படி சம்பவமே பின்னர் பல ஆயுதக்குழுக்களும் அவரவர் தேவைகள் கருதியும், விடுதலைப் புலிகளின் தாக்குதல்களிலிருந்து தம்மை தப்பவைத்துக்கொள்வதற்காகவும் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்களுடன் இணைவதற்கான நடைமுறையினைக் கையாண்டனர். அதேவேளை தமது அமைப்புக்களில் அங்கம்வகித்த பல நூறு இளைஞர்களை பிரபாகரனின் கொலைவெறி ஆயுதங்களுக்கு பலி கொடுத்த நிலையில் ரெலோ அமைப்பின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட அடைக்கலநாதன் தலைமையிலான ரெலோ, திரு. பத்மநாபா அவர்களின் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப், மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர்.திரு அமிர்தலிங்கம் உட்பட 67 கூட்டணி முக்கியர்தர்களை படுகொலை செய்த புலிகளுடன் சம்பந்தன் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற அமைப்புக்கள் பாராளுமன்ற ஆசனங்களை தமதாக்கிக்கொள்வதற்காகவும், பொருளாதாரரீதியாக தம்மை வளர்த்துக்கொள்வதற்காகவும் பயங்கரவாதிகளுடன் (27.01.2001ல்) கைகோர்த்தமை இங்கு முக்கியமான விடயமாகும்.

●



படிப்பகம்

www.padippakam.com

## ஜனாதிபதி பிரேமதாசாவின் யுத்த நிறுத்த அறிவிப்பு.

திரு. பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் இந்திய அமைதிப்படையினர் இலங்கையிலிருந்து வெளியேற வேண்டுமென்பதையும் இதற்காக விடுதலைப்புலிகளுடன் தான் பேச்சுவார்த்தை நடாத்த தயாராகவிருப்பதாகவும் பல இடங்களில் வெளிப்படுத்தி வந்தார். வடக்கு கிழக்கில் புலிகளினதும் தென்பகுதியில் ஜே. வி. பியினரதும் வன்செயல்கள் இல்லையென்றால் இந்திய அமைதிப்படையை திருப்பியனுப்புவதில் எவ்வித பிரச்சினையுமிருக்காதெனவும் அவர் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து 1989 தமிழ், சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு ஏப்ரல் 12ந் திகதி முதல் தற்காலிகமான யுத்த நிறுத்தமொன்றை அவர் பிரகடனம் செய்தார். அதே வேளையில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் தாமும் யுத்த நிறுத்தமொன்றை கடைப்பிடிப்பதாக இந்திய அமைதிப்படையினரும் அறிவித்தனர். ஆனால் இந்திய அமைதிப்படையை ஒரு ஆக்கிரமிப்புப் படையெனவும், இலங்கையில் இடம்பெறும் யுத்தம் இரு சகோதரர்களுக் கிடையிலான யுத்தமென்பதால் எமது நாட்டின் உள்முரண்பாடுகளில் தலையிடுவதற்கு இந்தியாவிற்கு இடமளிக்க முடியாதெனவும் கருத்துக்களை வெளியிட்ட விடுதலைப்புலிகள் இந்தியப்படை இலங்கையில் நிலை கொண்டிருக்கும்வரை தம்மால் யுத்தநிறுத்தம் செய்யமுடியாதென அறிவித்தனர்.

குறிப்பு - இந்தியாவிலிருந்து இலங்கைவந்ததும் இலங்கை இந்திய உடன்படிக்கைபற்றி சுதுமலையில் (04.08.1987ல்) திரு. பிரபாகரன் அவர்கள் பேசியது இந்த உடன்படிக்கையை சிங்கள இனவாத அரசு அமுல் செய்யுமென நான் நம்பவில்லை இனவாத இலங்கை அரசு மீண்டும் இனப்படுகொலைக்கான பாதையில்செல்ல இந்திய அரசு அனுமதிக்காதென நான் நம்புகின்றேன். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்திய அமைதிப் படையினரிடம் ஆயுதங்களைக் கையளிக்கின்றோம் இதன்மூலம் இந்தியா எமது பாதுகாப்பு முழுவதையும் ஏற்கின்றது.

## திரு.அமிர்தலிங்கம் அவர்கள் கூறியது

வடகிழக்கு தமிழ்மக்களின் பாதுகாப்பிற்கு இந்தியாவின் தலையீடு அவசியம் சிங்கள பொலிஸாரையோ ராணுவத்தினரையோ இங்கு சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக்கூடாது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியப்படையினர் இலங்கையில் இருக்கும்வரை தம்மால் யுத்தநிறுத்தம் செய்யமுடியாது என்பது தொடர்பான பகிரங்கக் கடிதமொன்று ஜனாதிபதிக்கு புலிகளால் அனுப்பி வைக்கப்பட்டது. புலிகளின் இக்கடிதமே ஜனாதிபதி திரு. பிரேமதாசா அவர்களுக்கும், புலிகளுக்குமிடையேயான பேச்சு வார்த்தைக்கான முன்னோடியாக இருந்துள்ளது. இதனையடுத்து அரசின் சார்பில் அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன அவர்கள் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் அறிக்கையொன்றை வெளியிட்டார். சில நாட்களிலேயே புலிகளிடமிருந்து இதற்குச் சாதகமான பதில் கிடைத்தது. ஜனாதிபதியின் இந்த அழைப்பையேற்று 1989 ஏப்ரல் 15ந் திகதி லண்டனிலிருந்து (Fax) செய்தியொன்றை விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்தனர். அதனைத் தொடர்ந்து பேச்சு வார்த்தைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அந்தச் செய்தியில் நம்பிக்கை வெளியிடப்பட்டிருந்ததென ஜனாதிபதியின் ஆலோசகர் திரு. பட்டி வீரக்கோன் தெரிவித்தார். ஜனாதிபதி அவரது தனிப்பட்ட வாசஸ்தலமான அம்பன்பொலவில் புதுவருடத்தைக் கழிப்பதற்காக அப்போது சென்றிருந்தார். உடனடியாகவே அவருக்கு இச்செய்தி அனுப்பப்பட்டது. நள்ளிரவில் இந்தச் செய்தி அவருக்குக் கிடைத்ததும், லண்டனிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்திற்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவர்களின் அனுமதிபெற்ற பிரதிநிதியை பேச்சுவார்த்தைக்காக கொழும்பு வருமாறு கேட்குமாறு மறுநாள் காலையில் ஜனாதிபதி அவருடைய செயலாளர் விஜேதாசாவுக்கு உத்தரவிட்டார்.

## கொழும்பில் விடுதலைப்புலிகள்

இப்பேச்சுவார்த்தைக்காக புலிகள் அமைப்பின் ஆலோசகர் டாக்டர். அன்ரன் பாலசிங்கம், திருமதி. அடேல் பாலசிங்கம் ஆகிய இருவரும் லண்டனிலிருந்து புறப்பட்டு கொழும்பு வந்தனர். ஆனால் அவர்கள் கொழும்பு வருவதற்கு முன்னதாகவே விடுதலைப்புலிகளின் மற்றொரு பிரதிநிதியான மாணிக்கசோதி என்பவர் ஜனாதிபதியை அம்பொன்பொலவில் உள்ள அவருடைய தனிப்பட்ட வாசஸ்தலத்தில் சந்தித்து ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகளை மேற் கொண்டார். இதனையடுத்து கொழும்பு வந்த பாலசிங்கம் தம்பதியினரை 1989 ஏப்ரல் 26ந் திகதி ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்து முதலாவது கட்டப்பேச்சுவார்த்தையை மேற்கொண்டார். விடுதலைப்புலிகளின் முக்கிய



படிப்பகம்

www.padippakam.com

தலைவர்களை ஜனாதிபதி நேரில் சந்தித்தது இதுவே முதல்தடவையாகும். புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான அரசின் தூதுக்குழுவை ஏப்ரல் 27ந் திகதி ஜனாதிபதி நியமித்தார்.

பின்வருவோர் இதற்காக நியமிக்கப்பட்டனர், எயர்லங்கா நிறுவனத்தின் தலைவர் திருபிரட்மன் வீரக்கோன் (அப்போது ஜனாதிபதியின் ஆலோசகர்), வெளியுறவு அமைச்சின் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்ன, அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சரவை உப குழுவின் செயலாளர் திரு. டபிள்யூ ரீ. ஜயசிங்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க ஆகியோர் இக்குழுவில் இடம்பெற்றனர். கொழும்பிற்கு வந்த பாலசிங்கம் வன்னிக்காட்டிற்குள் உள்ள புலிகளின் தலைமைப்பீடத்துடன் பேசக்கூடிய தொலைத்தொடர்பு வசதிகளுடனேயே கொழும்பு வந்திருந்தார். அதனால் இப்பேச்சுவார்த்தைகளைப் பற்றிய செய்திகளை உடனுக்குடன் தலைமைப் பீடத்திற்குத் தெரிவித்து அங்கிருந்து அடுத்த நடவடிக்கைக்கான ஆலோசனை பெறக்கூடிய நிலை அவருக்கு இருந்தது. அதனைத் தொடர்ந்து மே மாதம் 4ந் திகதி வவுனியாவிலுள்ள முள்ளிக்குளம் காட்டுப்பகுதிக்கு பாலசிங்கம் தம்பதியரை அழைத்துச் சென்ற இலங்கை விமானப்படையின் இரண்டு ஹெலிகப்டர்கள் அங்கிருந்து இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தைக்காக விடுதலைப்புலிகளின் தூதுக் குழுவென்றை அழைத்து வந்தது. புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளரான திரு. யோகி மற்றும் மூர்த்தி உட்பட ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று பேச்சுவார்த்தைக்காக புலிகளால் கொழும்பிற்கு அனுப்பப்பட்டனர். இவர்களனைவரும் கொழும்பு வரும்போது ஆயுதபாணிகளாகவே வந்தனர்.

## முதலாவது பேச்சுவார்த்தை






படிப்பகம்

கொழும்பில் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் ஹொட்டல் ஹில்டனில் பலத்த பாதுகாப்புகளுடன் தங்க வைக்கப்பட்டனர். அன்றைய தினமே சுச்சரித் தையிலுள்ள ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்தில் ஜனாதிபதியைச் சந்தித்து புலிகள் தரப்பினர் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர். பேச்சுவார்த்தை ஆரம்பமான பின்னர் அமைச்சர்களான திருவாளர்கள். சிறிசேனகூரே, ரஞ்சன் விஜேரட்ணா, ரணில் விக்கிரமசிங்க, பி.தயாரட்ண, ஏ.சி.எஸ். ஹமீத் ஆகியோரும் அரசின் தூதுக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். அரசின் தரப்பில் பேச்சுவார்த்தை நடாத்தும் தூதுக்குழுவின் தலைவராக அமைச்சர் ஹமீத் அவர்கள் நியமிக்கப்படவேண்டுமென்னும் புலிகளின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரு தரப்பினருக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. முதலாவது கட்டப் பேச்சுவார்த்தைகள் ஒன்பது சந்திப்புகளாக மே மாதத்தில் நடைபெற்றது. இப் பேச்சுவார்த்தை களின்போது இந்திய அமைதிப்படையை இலங்கையிலிருந்து திருப்பியனுப்புவது தொடர்பாகவே முக்கியமாக ஆராயப்பட்டது. இதனைவிட குடியேற்றங்களிலிருந்து இலங்கை இந்திய நட்புறவு உடன்படிக்கைவரை பல்வேறு விடயங்களும் இப்பேச்சுவார்த்தையின் போது ஆராயப்பட்டதாக திரு. ரோகான் குணரட்ண எழுதியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து புலிகள் அமைப்பின் பிரதிநிதிகள் வவுனியாவிற்கு திரும்பிச் சென்றனர். கொழும்புப் பேச்சுவார்த்தை தொடர்பாக பிரபாகரனுடன் பேசுவதற்காகவே அவர்கள் வவுனியா திரும்பினர்.

## ஜனாதிபதி பிரேமதாசாவின் அறிவிப்பு

1989 யூன் மாதம் 1ந் திகதி வியாழக்கிழமை, போயா தினமாக இருந்ததால் பத்தரமுல்லையில் நடைபெற்ற மத வைபவமொன்றில் கலந்துகொண்ட ஜனாதிபதி அங்கு உரையாற்றியபோது முக்கிய அறிவிப்பொன்றை வெளியிட்டார். இரண்டு மாதகாலப்பகுதியில் இந்திய அமைதிப்படைகள் இலங்கையைவிட்டு வெளியேறவேண்டும் என்பதே அவரது கண்டிப்பான அறிவிப்பாக இருந்தது. அவர் தமதுரையில் பின்வருமாறு கூறினார், எமது முன்னாள் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் வடகிழக்குப்பகுதிகளில் அமைதியை நிலைநாட்டுவதற்காக இந்தியப்படை இலங்கைக்கு அனுப்பப்பட்டது. இலங்கை ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தால் அந்த

www.padippakam.com

நேரத்திலும் இந்தியப்படையை திருப்பியழைத்துக் கொள்வதாக இந்தியா பல தடவைகள் உறுதியளித்திருந்தது. நான் அவர்களுக்குச் சொல்லு முன்பாகவே அவர்கள் வாபஸாகத் தொடங்கியிருந்தனர். தனது படைகளைத் திருப்பி அழைத்துக் கொள்ளுமாறு இந்தியாவிடம் கோர நான் விரும்புகின்றேன். இது இப்போது அவசியமானதாகியுள்ளது. அண்மையில் கூட பிரதமர் திரு. ராஜிவ்காந்தி அவர்கள் இலங்கையிலிருந்து இந்தியப்படைகள் திருப்பிப்பெறப்படுமெனத் தெரிவித்தார்.

1989 யூலை இறுதியில் இந்திய அமைதிப்படை இங்குவந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றது. இதனால் யூலை இறுதிக்குள் மீதமாகவுள்ள இந்தியப்படைகளை வாபஸ் வாங்கிக்கொள்ளுமாறு நான் இந்தியாவைக் கேட்கின்றேன். இங்குள்ள இந்தியப்படைகளனைத்தும் யூலை இறுதிக்குள் வெளியேறுவதை நான் காணவிரும்புகின்றேன். இன்று சுமார் 45,000 இந்தியப்படைகள் இலங்கையில் உள்ளனர். இதனால் இவர்களை ஒன்று அல்லது இரண்டு நாட்களில் வாபஸ் வாங்கிக்கொள்ளச் செய்வது சாத்தியமற்றது. அவர்கள் கப்பலிலேயே செல்ல வேண்டியவர்களாகவுள்ளனர். எனவே துருப்புக்களை வாபஸ் பெறுவது துரிதப்படுத்தப்பட வேண்டும். இதனை இந்திய அரசு நடைமுறைப்படுத்தினால் யூலை இறுதிக்குள் அதனைப் பூர்த்திசெய்துவிடலாம். இவ்வாறு ஜனாதிபதி தமதுரையில் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இவ்வறிவித்தல் பிரச்சினையில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தியது. இதனையடுத்து இரண்டு மாதகாலத்தில் இந்தியப்படையை வெளியேறுமாறு கோரும் ஜனாதிபதியின் கடிதமொன்றுடன் பிரதமர் திரு. ராஜிவ்காந்தி அவர்களைச் சந்திப்பதற்காக வெளியுறவுச் செயலாளர் திரு. பேர்னாட் திலகரத்ன அவர்கள் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டார். இதனடிப் படையில் யூன் 5ந் திகதி திரு. ராஜிவ்காந்தி அவர்களைச் சந்தித்த திலகரட்ண இது தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.

இப்பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இந்தியப்படைகளை வாபஸ் பெறுவது தொடர்பாக பரஸ்பர பேச்சுக்கள் மூலம் ஒரு கால அட்டவணையை நிர்ணயிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தியப்படை வெளியேற வேண்டுமென்ற ஜனாதிபதியின் கோரிக்கை தொடர்பாக பல்வேறு



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புக்களும் வெவ்வேறான கருத்துக்களை வெளியிட்டன. யூன் 5ந் திகதி விடுதலைப் புலிகளின் அரசியல் குழு வெளியிட்ட அறிக்கையில் இந்திய அமைதிப்படை இலங்கையில் இருக்க வேண்டுமெனக்கோரும் அனைவரும் துரோகிகளெனத் தெரிவித்தனர். அதேவேளை தமிழ்மக்களில் பெரும்பாலானோரும் ஏனைய தமிழ்க்குழுக்களும் தமிழர்விடுதலைக் கூட்டணியினரும் இந்திய அமைதிகாக்கும் படையினர் தொடர்ந்தும் இலங்கையில் இருக்கவேண்டும் என்பதையே விரும்பினர். அத்தோடு இந்தியப் படையினரை ஆதரிக்கும் வட கிழக்கில் இயங்கிய தமிழ்க்குழுக்களை புலிகள் வன்மையாக எச்சரித்தனர். மறுபுறத்தில் ஜனாதிபதியின் இந்தியப்படைகள் வாபஸ்பெறவேண்டுமென விடுக்கப்பட்ட அறிவிப்பை வட கிழக்கு மாகாணசபையின் ஆளும் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப். வன்மையாகக் கண்டித்தது.

## இரண்டாம் கட்டப்பேச்சு

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையேயான இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் யூன் 16ந் திகதி முதல் யூலை 2ந் திகதிவரை கொழும்பில் நடைபெற்றது. இப்பேச்சுவார்த்தைகளுக்காக விடுதலைப்புலிகளின் சார்பில் வழமையான உறுப்பினர்களைவிட பாரிஸிலிருந்து திலகரும் வந்திருந்தார். முன்னர் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் தொடர்ச்சியாகவே இப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. இதே காலகட்டத்தில் கொழும்பில் அரசாங்கத்திற்கும் விடுதலைபப்புலிகளுக்குமிடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளையில் வவுனியா, முல்லைத்தீவு காட்டுப்பகுதிகளிலுள்ள விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது இந்திய அமைதிப்படையினர் தமது தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்தினர். யூன் கடைசி வாரத்திலிருந்து இத்தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டன. இத்தாக்குதலின் போது காட்டுக்கொரில்லா யுத்த தந்திரோபாயத்தில் விசேட பயிற்சிபெற்ற பல கொமாண்டோக்களை இந்தியா ஈடுபடுத்தியது. இவர்களுக்கு உதவியாக துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள் உட்பட நவீன ஆயுதங்களும் பயன்படுத்தப்பட்டன. மோதல்களில் இரு தரப்பினருக்கும் பலத்த சேதமேற்பட்டதாக தெரியவந்தது.

மேற்படி உடன்படிக்கையினைத் தொடர்ந்து 20 மில்லியன் ரூபா ரொக்கப் பணமும் 130 மில்லியன் ரூபா பெறுமதியான ஆயுதங்களும், 5 புதிய ஜீப்



படிப்பகம்

www.padippakam.com

வண்டிகளும் 500 சீமெந்து பக்கற்றுகளும் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டு இந்திய அமைதிகாக்கும் படையினரை வெளியேற்றுவதற்கான உடன்படிக்கை ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி உடன்படிக்கைக்கமைய குறுகிய கால இடைவெளியில் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கும், இந்திய அமைதிகாக்கும் படையினருக்குமிடையில் இடம்பெற்றுவந்த யுத்தம் மேலும் அதிகரிக்கின்றது. பல நூறு பொதுமக்களும் கொல்லப்படுகின்றனர். இந்நிலைமைகளை இராணுவரீதியாக எதிர்கொள்ளவும் வடகிழக்கு மாகாண அரசினைக் காப்பாற்றவும் தமிழ் தேசிய இராணுவம் என்னும் புதியதோர் படைப்பிரிவினை வடகிழக்கு மாகாண நிர்வாகம் உருவாக்கியது. ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட், ரெலோ போன்ற இயக்கங்களிலிருந்து செயற்பட்டு இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஜனநாயக வழிக்குத் திரும்பி கிழக்கு மாகாணத்தில் சொந்த வாழ்வில் ஈடுபட்டிருந்த பல முன்னாள் போராளிகள் தமிழ் தேசிய இராணுவத்திற்காக மீள ஒருங்கிணைக்கப்பட்டனர். அதேவேளை பல புதிய இளைஞர்களையும் கட்டாயத்தின்பேரில் கைது செய்து இராணுவப் பயிற்சியளித்ததன்மூலம் இந்தியப் படையினர் தமிழ் தேசிய இராணுவத்தினை மேலும் பலமாக்கினர்.

ஆயுதப் போராட்டம் உருவாகிய நாளிலிருந்து இளைஞர்கள் தாமாகவே முன்வந்து இயக்கங்களில் இணைந்த நிலைமாறி கட்டாய ஆட்சேர்ப்பு என்கின்ற புதிய வன்முறைக் கலாச்சாரமொன்றினை உருவாக்குவதற்கு வடகிழக்கு மாகாண சபையின் ஆட்சியாளர்கள் துணை போயினர். குறிப்பாக தமிழ் தேசிய இராணுவத்திற்கு பயிற்சியளித்து ஆயுதமயப்படுத்தும் பொறுப்பினை இந்தியப்படையினரும், ஆட்சேர்ப்புப் பொறுப்பினை மாகாணசபையின் ஆட்சியாளர்களும் பங்கிட்டுக் கொண்டனர். மாகாணசபை உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் போன்ற அமைப்புக்களின் முக்கியஸ்தர்களும் ஆயுதங்கள் சகிதம் கிழக்கு மாகாணம் முழுவதும் கிராமம், கிராமமாக இளைஞர்களை துரத்தித், துரத்தி கைதுசெய்து கொண்டு சென்றனர். இவ்விளைஞர்களில் பாடசாலை மாணவர்களுக்குக்கூட விதிவிலக்களிக்கப்படவில்லை.


●



படிப்பகம்

www.padippakam.com

## திரு. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலை



தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் அமிர்தலிங்கம், மற்றும் முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் ஆகியோர் படுகொலை செய்யப்பட்ட கொழும்பிலுள்ள மாடி வீடு.

1989 யூலை 13ந் திகதி தமிழர்விடுதலைக்கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் அவர்களும் முன்னாள் யாழ்ப்பாண பா. உ. திரு. யோகேஸ்வரன் அவர்களும் கொழும்பு பௌத்தாலோக மாவத்தையிலுள்ள அவர்களது இல்லத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர். அச்சம்பவத்தில் கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம் அவர்கள் படுகாயமடைந்து பின்னர் உயிர் தப்பினார். இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மூவரை திரு. அமிர்தலிங்கம் அவர்களின் மெய்பாதுகாப்பு அதிகாரியான நிசங்கா என்பவரின் தலைமையிலான மெய்பாதுகாவலர்கள் சுட்டுக் கொன்றனர். புலிகள் அமைப்பே இக்கொலைகளைச் செய்தவர்களென உறுதிசெய்யப்பட்டது. இவர்களுடைய மரணச்சடங்குகள் யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப் படையினரின் பாதுகாப்புடனேயே நடைபெற்றது. இவரது மரணச்சடங்கில் இந்திய வெளியுறவு இணையமைச்சர் திரு. நட்வார் சிங் அவர்கள் கலந்து கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது. அதனைத் தொடர்ந்து புளொட் (P.L.O.T.E) அமைப்பின் தலைவர். திரு. உமாமகேஸ்வரன் அவர்கள் யூலை 16ந் திகதி கொழும்பில் வைத்து புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

திரு. அமிர்தலிங்கம் யோகேஸ்வரன் ஆகியோரின் கொலைகளை புலிகள் பல நாட்களுக்கு முன்னரேயே திட்டமிட்டிருந்தபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிரமங்கள் ஏற்பட்டதினால் பின்னர் பிரேமதாசாவுடனான பேச்சுவார்த்தை அதற்கான வழிவகைகளை இலகுவாக்கியது. அரசியலில் அனுபவமும், அறிவுத்திறனுமுள்ளவரென பலராலும் கருதப்பட்ட அமிர்தலிங்கம் அவர்கள் கடந்தகாலத்தில் திரு. பண்டாரநாயக்காவிற்கு ஏற்பட்ட நிலையை அறிந்திருந்தும் வன்முறை யாளர்களின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினையும் செலுத்தியமை பண்டாவினால் வளர்க்கப்பட்ட சிங்கள தீவிரவாதிகள் பண்டாரநாயக்கா அவர்களின் உயிரை எவ்வாறு பலிகொண்டார்களோ அதேகதியே திரு அமிர்தலிங்கம் அவர்களுக்கும் ஏற்பட்டது.

1989ம் ஆண்டு யூலை மாதம் 13ந் திகதி விசு என்று அழைக்கப்படும் ராசையா அரவிந்தராசா இவர் புலிகளின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், வன்னி மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராகவும் இருந்ததுடன் மாத்தையாவின் வலது கரமாகவும் செயற்பட்டார். இவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களைநோக்கி மூன்று தடவைகள் கைத்துப்பாக்கியால் சுட்டார் அவரைத்தொடர்ந்து அலோசியஸ் லியோன் திரு. யோகேஸ்வரன் அவர்களை ஐந்து தடவைகள் சுட்டார் மற்றயவர் திரு. சிவா அவர்களை நோக்கி சுட்டபோது அவரின் சூடு சிவா அவர்களின் வலது தோளில் தாக்கியமையால் அவர் உயிர்தப்பினார். இந்நிலையில் கீழ்மாடியில் நின்ற அமிர் அவர்களின் மெய்பாதுகாவலர்களுக்கு இச்சத்தம் கேட்டதற்கமைய அவர்கள் மேல்மாடிக்கு விரைந்துவந்து சம்பந்தப்பட்ட மூவரையும் சுட்டுக்கொன்றனர்.

சர்வதேசரீதியாக பலதரப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களால் ஜனநாயக வாதிகளுக்கெதிரான கொலைகள் நடாத்தப்பட்ட போதிலும் இதுபோன்ற காட்டுமிராண்டித்தனமான கொலை உலகின் எந்தவொரு மூலையிலும் இன்றுவரை நடாத்தப்படவில்லை. கொலைசெய்யப்பட்டவர்களின் வீட்டிலேயே விருந்து உபசாரம் பெற்றுவிட்டு உணவு அருந்திய கைகள் காய்வதற்கு முன்னரேயே அதே கைகள் விருந்தோம்பல் வழங்கியோருக்கெதிராக துப்பாக்கிவேட்டு வைத்தது. இவர்களைப்போன்ற கோழைகளும் துரோகிகளுமே அன்று மாவீரர்களெனவும் தேசியத்தலைவர்களெனவும் தமக்குதாமே பட்டம்சூட்டி பவனிவர பகல்கனவு கண்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## அமிரின் கொலையாளிகள்

திரு அமிர்தலிங்கம் மற்றும் யோகேச்வரன் ஆகியோரின் கொலையாளிகள் தொடர்பான செய்திகள் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தன. அச்செய்தியில் கொலையாளிகளுக்கென அமைக்கப்பட்ட கல்லறைகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள கிரான் என்னும் கிராமத்தின் மாவீரர்களுக்கான இல்லத்தில் அமைந்துள்ளமை வெளியானது. இவ்விடயம் தொடர்பில் (15.03.1990ந்) திகதியன்று (The Lanka Guardian) பத்திரிகையின் ஆசிரியர் திரு.மார்வின் டி சில்வா அவர்கள் புலிகளின் அன்றைய உபதலைவரான திரு.கோபாலசாமி மகேந்திரராசா அவர்களை பேட்டிகண்டு கீழ்காணும் வினாவினை விடுத்தபோது அவர் அளித்த பதிலை பத்திரிகை வெளியிட்டித்து.

If you stand for the multi - party system why did your men kill Amirtheligam and other T.U.L.F leaders?

மாத்தையாவின் பதில் --They were not killed because the held views different from that of the L.T.T.E but because they were acting as the agents of India in sort traitors. collaborators in the background the L.T.T.E kills those who betray the cause in a national struggle the battle is everywhere the traitor anywhere.

மாத்தையாவால் திரு. அமிர்தலிங்கம் அவர்களுக்கும் ஏனைய தமிழ் ஆரசியல்வாதிகளினதும் கொலைகளுக்கும் சுமத்தப்பட்ட அதே குற்றச்சாட்டினை முன்வைத்தே பிரபாகரனின் கட்டளைக்கமைய 93 நாட்கள் சிறைவைக்கப் பட்ட மாத்தையாவிற்கும் மரணதண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவில் ஆட்சிமாற்றம்

இந்தியாவில் 1989 நவம்பரில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் இந்திராகாங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டதையடுத்து இந்தியாவின் புதிய பிரதமராக திரு பி. வி. சிங் அவர்கள் (National Front) 1989 டிசம்பர் 2ந் திகதி பதவியேற்றார். பதவியேற்ற பின்னர் இலங்கைப் பிரச்சினைபற்றிக் குறிப்பிட்ட அவர் இலங்கைக்கு எமது படைகளை அனுப்பியது முதலாவது தவறு எனக்குறிப்பிட்டார். இருந்தும் எமது படையினரை கட்டம் கட்டமாக



படிப்பகம்

www.padippakam.com

வாபஸ் பெறுவதையே நான் விரும்புகின்றேனென அவர் குறிப்பிட்டார். திரு வி. பி. சிங், அவர்களின் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராக திரு ஐ. கே. குஜ்ரால், அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். திரு வி. பி. சிங் அவர்கள் இந்தியாவின் பிரதமராகப் பதவியேற்றது இலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு உற்சாகமளிக்கும் விடயமாகவே அமைந்தது.

அதன்பின் டிசம்பர் நடுப்பகுதியில் புதுடில்லி சென்ற பாதுகாப்பு அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரட்ண இந்திய அமைதிப்படையின் வெளியேற்றம் தொடர்பாக பிரதமர் திரு. வி. பி. சிங், அவர்களுடனும் வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜரால், அவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இப்பேச்சுவார்த்தைகள் இரு நாடுகளுக்குமிடையேயான உறவுகளை ஓரளவு திருப்திகரமானதாக்க உதவியது. இச் சந்திப்பின்போது 1990 மார்ச் 31ந் திகதியுடன் இந்தியப்படை வெளியேறிவிடுமெனவும் அவர் தெரிவித்தார். அதற்கமைய யாழ்ப்பாணம், திருகோணமலை தவிர்ந்த ஏனைய சகல மாவட்டங்களிலிருந்தும் 31ந் திகதியுடன் இந்தியப்படை முற்றாக வெளியேறியிருந்தது. இந்தியப்படை வெளியேறிய பகுதிகளில் ஒரு பகுதி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

## ராஜினி திராணகமவின் படுகாலை



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உடற் கூறியல் பிரிவுத் தலைவராக கடமையாற்றிய இவர் கணித விரிவுரையாளராக பணியாற்றிய ராஜன் ஹூலுடனும், சிறிதரன், தயா சோமசுந்தரம் என்பவர்களுடன் இணைந்து 1990 இல் வெளியிடப்பட்ட முறிந்த பனை (The Broken Palmyra) என்ற ஆங்கில நூலை எழுதினார். இவர்கள் நால்வரும் இணைந்து 1988 இல் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை தொடங்கினர். செப்டம்பர் 21, 1989 அன்று பணியில் இருந்து வீடு திரும்பும் வழியில் விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் பகிரங்கமாக வீதியில்வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஸ்ரீலங்கா அரசிடமிருந்து ராஜதந்திரரீதியாக ஏற்பட்ட அழுத்தமும், ஜே.வி.பி



படிப்பகம்

www.padippakam.com

போன்ற கட்சிகளின் இந்திய எதிர்ப்பு பிரச்சாரமும் விடுதலைப் புலிகளிடமிருந்து எதிர்கொள்ள நேர்ந்த இராணுவரீதியான எதிர்ப்பு நடவடிக்கைகளும் அதிகரித்தது. இந்நிலையில் புதுடெல்லியில் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் இலங்கைமீதான தலையீட்டில் மாற்றமொன்று ஏற்படவேண்டுமென்பதை அவசியமாக்கியது. அதன்காரணமாக இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிகாக்கும் படையினரை மீளப்பெறும் முடிவினை இந்திய மத்திய அரசு மேற்கொண்டது. அதனடிப்படையில் (30.11.1989) அம்பாறை மாவட்டத்திலிருந்து ஆரம்பமாகி முறையே மட்டக்களப்பு திருகோணமலை என யாழ் மாவட்டம் ஈறாக (24.03.1990) உடன் இந்திய அமைதிகாக்கும் படையினரின் வெளியேற்றம் முடிவிற்கு வந்தது. தமிழ் மக்களுக்காக வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த வடகிழக்கு மாகாண சபையின் ஒப்பந்தம் அமுலுக்கு வந்த காலம் முதலே திரு. பிரேமதாசா அவர்கள் எதிர்த்து வந்திருந்தார். தான் ஜனாதிபதியானதும் வடகிழக்கு மாகாண சபையினை கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளின் சுயநலத்திற்கு தீனி போட்டதன்மூலம் தனது ராஜதந்திர நடவடிக்கையில் வெற்றி பெற்றார். இந்திய அமைதிகாக்கும் படையினரின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற சூழ்நிலையில் வடகிழக்கு மாகாணசபை கலைந்தது.

## திரு வரதராஜப் பெருமாள் அவர்களின் தலைமையிலான ஈழப் பிரகடனம்.

இந்திய அமைதிகாக்கும் படையினரை வெளியேற்றும் நடவடிக்கையில் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் உறுதியாகச் செயற்பட்ட நிலையில் 1990 பெப்ருவரி 25ந் திகதி நடைபெற்ற ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் மத்திய குழுக்கூட்டத்தில் 19 கோரிக்கைகள் அரசாங்கத்திடம் முன்வைப்பதாக தீர்மானிக்கப்பட்டு. அவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டுமென அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்காக மார்ச் மாதம் முதலாந் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டது. ஆனால் இதனைமிட்டு அரசாங்கம் எவ்வித கவனமும் செலுத்தவில்லை. அதன்பின் மார்ச் மாதம் முதலாந் திகதி திருகோணமலையில் நடைபெற்ற மாகாண சபைக்கூட்டத்தில் வடக்கு கிழக்கு மாகாணசபையை ஈழஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பை உருவாக்குவதற்கான சபையாக மாற்றியமைப்பதற்கான பிரகடனமொன்றை



படிப்பகம்

முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் முன்வைத்தார். இந்தப்பிரேரணை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. இதனையடுத்து வடகிழக்கு மாகாணசபை ஈழஜனநாயகக் குடியரசின் இடைக்கால அரசாங்கமாக பணியாற்றத் தொடங்கியது National asseably of the Free and Sovereige Democratic Republic of Eelam.

## (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஈ.என்.டி.எல்.எப் உறுப்பினர்களின் இந்திய புகலிடம்

மார்ச் முதலாந் திகதி திரு. வரதராஜப் பெருமாளின் ஈழப் பிரகடனத்தின் போது திருகோணமலை தவிர்ந்த ஏனைய சகல பகுதிகளிலிருந்தும் இந்திய அமைதிப்படையினர் வெளியேறியிருந்தனர். திருமலையிலிருந்தும் மார்ச் நடுப்பகுதிக்குள் இந்தியப்படை வெளியேறுமென்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டிருந்தது. ஏனைய மாவட்டங்களிலிருந்து வெளியேறிய ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்கள் பலர் ஏற்கனவேயே இந்தியா சென்றிருந்தனர். எஞ்சியவர்களில் பெருந்தொகையானோர் திருமலையிலேயே தங்கியிருந்தனர். 1990 மார்ச் 6ந் திகதி ஹர்சாவதன், திம்புசுல்தான் ஆகிய இரண்டு இந்தியக் கப்பல்கள் திருமலையிலிருந்து 1335 ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களை ஏற்றிக் கொண்டு இந்தியா சென்றது. இவர்களை ஏற்றுக்கொள்ள தமிழக முதல்வர் திரு. கருணாநிதி அவர்கள் மறுத்து விட்டதால் கப்பல் ஆந்திரா பிரதேசத்திலுள்ள விசாக பட்டினத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு மூன்று நாட்களாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இவர்களை ஏற்றுக்கொள்ள ஒரிசா மாநில முதல்வர் திரு. பியூபட் நாயக் இணக்கம் தெரிவித்தார்.

அதன்பின் மார்ச் 11ந் திகதி ஈ.பி.ஆர்.எல்.எப். பொதுச்செயலாளர் திரு. பத்மநாபா உட்பட மாகாணசபை உறுப்பினர்கள் 275 பேருடன் இந்திய விமானப்படை விமானமொன்று திருமலையிலிருந்து புறப்பட்டு ஒரிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரா வந்தடைந்தது. அதன்பின் வடகிழக்கு மாகாண முதல்வர் திரு. வரதராஜப் பெருமாளும் மற்றொரு இந்தியவிமானத்தில் திருமலை சீனக்குடா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டார். உடனடியாக மொரீசியஸ் நாட்டிற்கு அவர் சென்றபோதிலும் அங்கிருந்து பின்னர் இந்தியா திரும்பினார். இதனைத் தொடர்ந்து இந்தியப்படையினரின் கடைசி அணி திருமலையிலிருந்து மார்ச் 24ந் திகதி இந்தியா திரும்பியது.

www.padippakam.com

## கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாள் வெளியேற்றம் -இளைஞர்கள் பலிக்கடா



இந்திய அமைதிகாக்கும் படையினரின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து அதுவரைகாலமும் காடுகளுக்குள் முடக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் ஆயுத்தாரிகள் தமது பயங்கரவாத நடவடிக்கைகளை நாடெங்கும் விஸ்தரித்தனர். மிகமோசமான முறையில் அரசியல் முக்கியஸ்தர்களையும், தமது எதிரிகளையும் கொன்று குவித்தனர். 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்வுசெய்யப்பட்ட திரு. சாம் தம்பிமுத்து, அவரது மனைவி திருமதி கலா தம்பிமுத்து போன்றார் கொழும்பில்வைத்து (07.05.1990) புலிகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேபோன்று கிழக்கு மாகாண சபையின் உருவாக்கத்திற்காக முழு மூச்சாக உழைத்த ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர் திருா பத்மநாபாவும் அவ்வமைப்பின் மேலும் (12) உயர்மட்ட தலைவர்களும் சென்னையில்வைத்து புலிகளினால் (19.06.1990ல்) பழிவாங்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

## இந்தியப் படைகளின் இழப்பு

யாழ்ப்பாணத்தின் மீதான தாக்குதலின்போது எலக்ரோனிக் முறையில் இயக்கப்படும் கண்ணிவெடிகள் உட்பட பல அதி நவீன ஆயுதங்களை புலிகள் பாவிப்பதை இந்திய அமைதிப்படையினர் அவதானித்தனர். வெடிகுண்டுகளைப் பயன்படுத்துவதில் புலிகளின் தொழில்நுட்பம் மிகவும் முன்னேற்றமானதாகவும் மேற்கு நாடுகளையொத்ததாகவும் இருந்ததென இந்திய ராணுவ அதிகாரியெருவர் தெரிவித்தார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான இந்த இருவாரகால யுத்தத்தில் 12 சிரேஸ்ட அதிகாரிகளையும் 9 கனிஸ்ட தரத்திலுள்ள அதிகாரிகளையும் ஏனைய தரங்களிலுள்ள 132 சிப்பாய்களையும் இந்தியப்படை இழந்ததோடு 23 அதிகாரிகளும் 44 கனிஸ்ட அதிகாரிகளும் 471 ஜவான்களும் படுகாயமடைந்து 4 கனிஸ்ட அதிகாரிகளும் 43 ஏனைய தரத்திலுள்ளோரும் காணாமல்



படிப்பகம்

www.padippakam.com

போனார்களென ஊர்ஜிதமற்ற செய்திகள் வெளியாகின. இத்தொகை குறைந்த ஒரு காலப்பகுதியில் ஏற்பட்டதோர் பாரிய இழப்பாகவும் அச்செய்திகள் தெரிவித்தன.

இந்தியப் படைகளுக்கும் புலிகளுக்குமிடையேயான இந்த முதலாவது கட்ட யுத்தத்தின்போது யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற மோதலே மிகவும் மோசமானதாக இருந்தது. இங்கு நள்ளிரவு வேளையில் ஹெலிகொப்டர் மூலம் 29 இந்திய அமைதிகாக்கும் விசேட படைப் பிரிவைச் சேர்ந்த கொமாண்டோக்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டபோது விடுதலைப் புலிகள் தமது படையினரை தயார் நிலையில் வைத்திருந்தமையால் விமானத்திலிருந்து இறக்கப்பட்ட அனைவரும் நகரமுடியாது ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

இச்சம்பவமே இந்தியப்படையினருக்கு ஆத்திரத்தை உண்டுபண்ணி பலநூற்றுக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்கள் பறிபோக காரணமாக அமைந்தது. புலிகளுக்கெதிரான ராணுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட அதே வேளையில் இந்திய கடற்படையினரும் புலிகளுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குருநகர் இறங்குதுறையில் சென்று இறங்கிய விசேட குழுவினர் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த 14 படகுகளையும் சேதப்படுத்தினர். கடற்படை, விமானப்படை, தரைப்படை ஆகிய மூன்றையும் பயன்படுத்தி நான்கு நாட்களில் யாழ்குடாநாட்டை முற்றாகக் கைப்பற்றி விடலாமென இந்திய அதிகாரிகள் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தனர். இத்தாக்குதலுக்காக தொடர்ச்சியாக 32 நாட்கள் ஊரடங்குச்சட்டம் அமுல் செய்யப்பட்டது.

வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து இந்தியப்படையினர் திரும்பிய பின்னர் அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. அரசியலமைப்புக்குச் செய்யப்பட்ட 6வது திருத்தம் ரத்துச்செய்யப்பட வேண்டுமென்பது புலிகளின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக இருந்தது. இதனைவிட வடக்கு கிழக்கு மாகாணசபை உடனடியாக கலைக்கப்பட்டு தேர்தல் நடாத்தப்பட வேண்டுமெனும் கோரிக்கையையும் பேச்சுவார்த்தைகளின் போது அவர்கள் முன்வைத்தனர். வடக்கு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றபோது இந்திய அமைதிப்படையினர் தமிழ்ப்பகுதிகளில் நிலை கொண்டுள்ளதால்



படிப்பகம்

ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கமே தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறக்கூடிய நிலைமையிருந்ததாக புலிகள் குற்றம் சாட்டினார்கள். ஆனால் வரதராஜப் பெருமாள் தன்னிச்சையான முறையில் ஈழப்பிரகடனத்தை மேற்கொண்டதும், மாகாணசபையைக் கலைப்பதற்கான காரணத்தை அரசுக்குத் தேடித்தந்தது. இதனை காரணமாகத் தெரிவித்த அரசாங்கம் பின்னர் மாகாணசபையைக் கலைத்தது.

## விடுதலைப் புலிகளின் அரசியல் பிரவேசம்

இந்தியப்படைகள் வெளியேறிய பகுதிகளை உடனடியாகவே தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த விடுதலைப்புலிகள் அந்தந்தப் பகுதிகளில் உடனடியாகவே அரசியல் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தினார்கள். அதற்கமைய ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆதரவினைப்பெற்று விடுதலைப் புலிகளின் அரசியல் கட்சி (21.12.1989ல்) அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி ( People's Front of Liberation Tigers) இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்றது. இதற்காக வடக்கு கிழக்கின் சகலபகுதிகளிலும் ஒவ்வொரு கிராமங்கள், நகரங்கள் தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்பட்டதுடன் அவற்றினூடாக அரசியல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பிலுள்ள வாகரை என்னும் கிராமத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியை அங்குரார்ப்பணம் செய்துவைப்பதற்கான கூட்டமொன்று மாத்தையா என அழைக்கப்படும் திரு. கோபாலசாமி மகேந்திரராஜா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் மக்கள் முன்னணியின் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்டது. இந்தப் பிரகடனத்தில் பின்வரும் கோரிக்கைகள் முக்கியமாக முன்வைக்கப்பட்டன.

1. வடக்கு கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும்.
2. அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் ரத்துச் செய்யப்படவேண்டும்.
3. உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.
4. சிங்களக் குடியேற்றங்களை நிறுத்த வேண்டும்.
5. வடக்கு கிழக்கு மாகாணத்தில் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைகளில் இலங்கை பாதுகாப்புப் படையினர் சம்பந்தப்படக் கூடாது.

www.padippakam.com

6. மலையகத் தமிழர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
7. வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைமுறையிலுள்ள அவசரகாலச் சட்டம் உடன் நீக்கப்பட வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள வாகரை என்னும் கிராமத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இக்கூட்டத்தைத் தொடர்ந்து மார்ச் 8ந் திகதி மற்றுமொரு கூட்டம் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரபாகரன் தவிர்ந்த விடுதலைப்புலிகள் அமைப்பின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி. அடேல் பாலசிங்கம் திரு. காசி ஆனந்தன், விடுதலைப்புலிகளின் மக்கள் அமைப்பின் தலைவர் திரு.மகேந்திரராஜா (மாத்தையா), செயலாளர் யோகரெத்தினம் (யோகி) இவர்களுடன் இன்னும்பல ராணுவ அமைப்பின் முக்கியஸ்தர்களும் பங்குபற்றினர் இக்கூட்டங்களின்போது மக்கள் கூட்டம் மாத்தையா யோகி போன்றோரின் பின்னால் அணிதிரள்வதை அவதானித்த ஏனைய விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் அச்சமுற்றனர் அதன்வெளிப்பாடே மாத்தையாவின் உயிருக்கு உலைவைக்க வழியமைத்தது. அத்துடன் இக் கூட்டங் களின்போது 6வது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டுமெனும் கோரிக்கையே இங்கும் முக்கியத்துவம் பெற்றது.

## பிரேமதாசா - மாத்தையா சந்திப்பு

பெப்ரவரி மாதம் கடைசிவாரத்தில் திருவாளர்கள் அன்டன் பாலசிங்கம், யோகி ஆகியோர் சகிதம் மீண்டும் கொழும்பு வந்த புலிகளின் பிரதித்தலைவர் மாத்தையா, ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடன் வடக்கு கிழக்கு தொடர்பான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இப்பேச்சுவார்த்தையின் போது மூன்று முக்கிய கோரிக்கைகள் மாத்தையாவினால் முன்வைக்கப்பட்டது. ஏற்கனவே முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளைவிட மேலதிகமாக இவை முன்வைக் கப்பட்டன.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் இலங்கை ராணுவம் மேற்கொள்ளும் சகல ரோந்து நடவடிக்கைகளும் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.
2. தமிழ்ப் பகுதிகளில் வணக்கஸ்தலங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு அண்மையில் உள்ள சகல ராணுவ முகாம்களும் அங்கிருந்து அகற்றப்பட வேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

3 ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று அல்லது இரண்டு பாதுகாப்புப்படை முகாம்களுக்கு அதிகமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கக்கூடாது.

இவை மூன்றுமே மாத்தையாவினால் மேலதிகமாக வைக்கப்பட்ட புதிய கோரிக்கைகளாகும். மீண்டும் மார்ச் 9ந் திகதி மாத்தையா தலைமையில் கொழும்பு வந்த 5 பேர் கொண்ட விடுதலைப்புலிகளின் தூதுக் குழுவினர் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் மூன்றரை மணித்தியாலங்கள் பேச்சுவார்த்தை நடாத்தினர். இச்சந்திப்பின் போது ஜனாதிபதியுடன் அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் மற்றும் சிறில் ரணதுங்க ஆகியோரும் உடனிருந்தனர். பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாகவும் 6வது சரத்தை நீக்குவது தொடர்பாகவும் இப்பேச்சின்போது விரிவாக ஆராயப்பட்டது. பாதுகாப்புப் படைகள் முகாம்களிலிருந்து வெளியேவருவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டுமென புலிகள் இப்பேச்சுவார்த்தைகளின் போது மீண்டும் வலியுறுத்தினர். இதனையேற்றுக் கொண்ட அமைச்சர் ஹமீத் அவர்கள் மாகாணசபைத் தேர்தல்கள் முடியும்வரையில் வடக்கு கிழக்குக்குரிய சட்டம், ஒழுங்கு, போன்றவற்றிற்கு விடுதலைப்புலிகளே பொறுப்பாக இருப்பார்களெனவும் தெரிவித்தார். மாகாணசபைத் தேர்தல் முடிவடைந்த பின்னர் புலிகளின் போராளிகளில் 7000 பேரை மாகாண பொலிஸ் படைக்கு சேர்த்துக் கொள்வதெனவும் இச்சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டது.

## பத்திரிகையாளர்களுடனான சந்திப்பும், பிரபாகரனது பேட்டியும்

இந்திய அமைதிப்படை வெளியேறி ஒருவார காலத்திற்குள்ளேயே வட கிழக்கின் சகலபகுதிகளும் விடுதலைப்புலிகளின் நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது. இந்திய அமைதிப்படை இருந்த காலத்தில் இடை நிறுத்தப்பட்ட புலிகளின் தொலைக்காட்சிச் சேவையும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகிய ஏனைய பத்திரிகைகளும் மீண்டும் இயங்கத்தொடங்கின. இந்நிலையில் இந்தியப்படை வெளியேறிய பின்னர் முதன் முதலில் 1990 ஏப்ரல் 1ந் திகதி யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்களை விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்கள் சந்தித்தார். 1987 அக்டோபர் 10ந் திகதி



படிப்பகம்

இந்தியப்படைகள் புலிகள் மோதல்கள் ஆரம்பமான பின்னர் பத்திரிகை யாளர்களை பிரபாகரன் சந்தித்தது இதுவே முதல் தடவையாகும். இதன் பின்னர் 1990 மே மாதம் 1ந் திகதி யாழ் கோட்டையை அண்டியுள்ள முற்றவெளியில் விடுதலைப்புலிகளின் மே தினக்கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் உரையாற்றிய புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம் பின்வருமாறு கூறினார்:

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அராஜகமும் அச்சமும் நிலவுவதாக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரும் ஒருபகுதி பத்திரிகைகளும் தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றன. அதேவேளை எம்மைப் பொறுத்தவரை நாம் பொதுக் கூட்டங்களை ஏற்பாடு செய்து கட்சிக்கிளைகளை அமைத்து ஜனநாயக ரீதியான தேர்தலுக்கு மக்களை அணிதிரட்டி வருகின்றோம். வட கிழக்கில் ஒரு தசாப்த காலமாக இடம்பெற்ற வன்செயல்களின் பின்னர் இப்போது அமைதி நிலவியுள்ளது. சிங்கள மக்கள் தமது பாதுகாப்பிற்காக 70,000 பேர்கொண்ட ராணுவமொன்றை வைத்துள்ளார்கள். அவர்களிடம் அவ்வாறு இருக்கும்போது ஏன் தமிழர்களிடம் ஒரு ராணுவ அமைப்பு இருக்கக்கூடாது. வட கிழக்கில் இப்போதுதான் உண்மையான அமைதி ஏற்பட்டுள்ளது. இவ்வேளையில் தமிழர்களுக்கும், சிங்களவர்களுக்கும் இடையேயான சந்தேகத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகளெதுவும் பிரேமதாசாவின் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படவில்லை. நிரந்தரமானதோர் அமைதியின் மூலம் பயன்பெற விரும்புவோர் தமிழர்களும் அரசாங்கமும் மட்டுமல்ல, தென்பகுதி அரசியல் தலைவர்களும் சிங்களமக்களும்கூட இதனால் பயனடைவர். அரசுக்கும் புலிகளுக்குமிடையே இன்று ஏற்பட்டுள்ள நல்லெண்ணத்தை குலைப்பதையே நோக்கமாகக் கொண்டு புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டுமென சில சக்திகள் இன்று வெறுப்புணர் வுடனான கோரிக்கைகளை முன்வைக்கின்றன. நாட்டுப்பற்றற்ற விதமாக புலிகளை வட கிழக்கில் நிர்வாகம் செய்ய அனுமதிப்பதாக அரசின் மீது குற்றஞ்சாட்டி அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மீண்டும் பிரச்சினையை ஏற்படுத்த சிலர் முயல்கின்றனர். இவ்வாறு பாலசிங்கம் தனது உரையில் குறிப்பிட்டார்.

அதே மேடையில் உரையாற்றிய யோகி என அழைக்கப்படும் யோகரெத்தினம்

www.padippakam.com

அவர்கள் குறிப்பிடுகையில் இலங்கையில் வாழும் (35லட்சம்) தமிழ் மக்களும் விடுதலைப் போராட்டத்தில் பலியானால்கூட தமிழீழம் அடைந்தே தீருவோமென சூளுரைத்தார்.

## பிரேமதாசா புலிகள் முரண்பாடும் புதிய தெரிவுக் குழுவும்

திரு. மங்கள முனசிங்க அவர்களைத் தலைமையாகக் கொண்ட தெரிவுக்குழு செயற்படத் தொடங்கி இரண்டு வருடங்களாகியும்கூட பிரதான சிங்களக் கட்சிகளான ஐ. தே. கட்சியோ, ஸ்ரீ. ல. சு. கட்சியோ, தமது யோசனைகள் எதனையும் தெரிவுக்குழுமுன் சமர்ப்பிக்கவில்லை. இந்நிலையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் அமைச்சர் தொண்டமான் அவர்கள் மட்டுமே தனது யோசனைகளை முதலில் சமர்ப்பித்தார். வடக்கு கிழக்கு இணைந்த பிராந்தியத்திற்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான திட்டமொன்றை திரு.தொண்டமான் அவர்கள் முன்வைத்தார்கள். இத்திட்டத்தை விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் அனுப்பிவைத்த அவர் அங்கிருந்து பதிலைத் தாம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். இந்த யோசனைகளை பரிசீலிப்பதாகத் தெரிவித்த திரு.பிரபாகரன் இது பற்றிய பேச்சுவார்த்தைகளுக்காக அவரை யாழ்ப்பாணம் வருமாறு அழைப்புவிடுத்தார். அந்த அழைப்பை அமைச்சர் தொண்டமான் அவர்கள் ஏற்றுக்கொண்ட போதிலும் தென்னிலங்கையில் அவருக்கு எதிராக கிளர்ந்த எதிர்ப்புக்களால் அவருடைய யாழ் விஜயம் கைகூடவில்லை.

அமைச்சர் தொண்டமான் அவர்களின் யோசனைகளை எதிர்ப்பதற்காக வென்றே இரண்டு சிங்களத் தீவிரவாத அமைப்புக்கள் உருவாகின. அதன் முதலாவது அமைப்பு முன்னாள் அமைச்சரான காமினி ஜயசூரியா தலைமையில் உருவாக்கப்பட்ட சிங்கள ஆரக் சங்விதான (சிங்கள பாதுகாப்பு அமைப்பு). இதனைவிட சுதந்திரக்கட்சியில் தீவிரவாதப் போக்கை கடைப்பிடிப் பவர்களால் உருவாக்கப்பட்ட சிஹல உருமய (தேசிய பாரம்பரியம்) என்னும் இரு கட்சிகளாகும். இவையிரண்டும் திரு. தொண்டமான் அவர்கள் ஈழத்தை அமைக்க முயல்கின்றாரென இனவாதத்தைக் கக்கின. இதனைவிட கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் திரு. நளின் டி சில்வா அவர்களும் தீவிர பேரினவாதக் கொள்கையை முன்வைத்தார்.



படிப்பகம்

www.padippakam.com

## கிழக்கு மாகாணம் மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களும், கொலைகளும் ஆரம்பம்

1990 யூன் மாதம் 10ந் திகதி மட்டக்களப்பு அகதி முகாமிலுள்ள முஸ்லிம் இளைஞரொருவர் சிங்கள நபர் ஒருவரால் தாக்கப்பட்டபோது முகாமில் காவலுக்குப் பொறுப்பாகவிருந்த சிங்களப் பொலிஸார் இருவரையும் கைதுசெய்து மட்டக்களப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இச்சம்பவத்தில் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் இளைஞர் புலிகளுக்கு உடைகள் தைக்கும் தொழில் புரிபவரெனத் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அன்று இரவு சுமார் 11 மணியளவில் பொலிஸ் நிலையத்திற்கு வருகைதந்த விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் மேற்படி முஸ்லிம் இளைஞர் தாக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கோரினார்கள். ஆனால் மேற்படி முஸ்லிம் இளைஞர் சிறிய காயங்களுக்குள்ளாகியிருந்ததால் அவரை வைத்தியசாலைக்கு அனுப்பியுள்ளதாக பொலிஸாரின் தரப்பில் தெரிவிக் கப்பட்டது.

அதேவேளை மேற்படி முஸ்லிம் இளைஞர் வைத்தியசாலையில் இல்லையெனத் தெரிவித்த புலிகள் அங்கிருந்த இரண்டு பொலிஸாரை பணயமாக கடத்திக்கொண்டு சென்றனர். மறுநாள் அதிகாலை 6 மணியளவில் பொலிஸ் நிலையத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த 4 பொலிஸார் கடத்தப்பட்டதுடன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட முஸ்லிம் இளைஞரை விடுதலை செய்ய வேண்டுமென பொலிஸ் நிலையம் சென்ற புலிகள் அங்கிருந்த உயரதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தனர். முஸ்லிம் இளைஞர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதாக பொலிஸார் மீண்டும் கூறியபோதிலும் அதனை மறுத்த புலிகள் முஸ்லிம் இளைஞர் வைத்தியசாலையில் இல்லையெனவும் அவர் காணாமல் போய்விட்டாரெனவும் தெரிவித்தனர். மீண்டும் மறுநாள் காலை 7 மணிக்கு பொலிஸ் நிலையத்தை சூழ்ந்து கொண்ட சுமார் 250 புலிகளின் ஆயுததாரிகள் பொலிஸ் நிலையத்தை தம்முடைய பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையில் முஸ்லிம் இளைஞர் தாக்கப்பட்டது, கைதுசெய்யப்பட்டது



படிப்பகம்

தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யச் சென்ற விடுதலைப்புலிகள் மீது எவ்வித தூண்டுதலுமில்லாமலேயே பொலிஸாரினால் துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து முகாம்களிலிருந்து வந்த ராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டதையடுத்து முழு அளவிலான யுத்தம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் ஆரம்பித்ததாகவும் அவர்களின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டது.

## கிழக்கில் மோதல்கள்

மட்டக்களப்பு பொலிஸ் நிலையச் சம்பவத்தையடுத்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் விடுதலைப் புலிகளினால் சுற்றிவளைக்கப்பட்டது. கல்முனை, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, ஏறாவூர், சம்மாந்துறை, அக்கரைப்பற்று, கல்லடி, காரைதீவு ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சுற்றிவளைத்த புலிகள் அங்கிருந்த நூற்றுக்கணக்கான பொலிஸாரை சரணடையச் செய்தனர். அச்சம்பவங்களின் போது 400ற்கு மேற்பட்ட பொலிஸார் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்களைத்தவிர புலிகளால் கடத்திச் செல்லப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 650 என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. இவர்களில் சுமார் 150 பேர்கள் பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டதாக கூறப்பட்டது. எனினும் காணாமல் போன பொலிஸாருக்கு என்ன நடந்ததென இன்றுவரை மர்மமாகவேயுள்ளது. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கல்முனையில் முகாமிற்குத் திரும்பிக்கொண்டிருந்த ராணுவ வாகனம் மீது புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில் 11இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு கிரான் என்னும் கிராமத்திலுள்ள ராணுவமுகாம் மீதும் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிகள் பொருத்தப்பட்ட ஹெலிகொப்டர்கள், ஷியாமாசட்டி, குண்டுவீச்சு விமானங்கள் ஆகியவற்றின் உதவியுடன் பதில் தாக்குதல்களை ராணுவத்தினர் மேற்கொண்டு புலிகளின் தாக்குதலை முறியடித்தனர். இந்த யுத்தத்தில் பெருமளவு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் கல்முனையிலுள்ள விடுதியொன்று ஷெல் தாக்குதலுக்குள்ளானபோது 12 மாணவிகள் கொல்லப்பட்டனர். அதேவேளை ஏறக்குறைய இருநூற்றுக்குமேலான பொதுமக்கள் மட்டக்களப்பில் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

www.padippakam.com

# அமைச்சர் ஹமீத் அவர்களின் சமாதான முயற்சி



கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்கள் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்ட அதேவேளையில் வடபகுதியிலும் காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, முருங்கன், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய பகுதிகளிலுள்ள பொலிஸ் நிலையங்களும் புலிகளால் தாக்கப்பட்டு அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இந்நிலையில் மற்றொரு யுத்தம் ஏற்படுவதைத் தடுக்க முடியாதென்ற நிலையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான இறுதி முயற்சியாக யூன் 12ந் திகதி ஏற்கனவே சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தலைமைதாங்கிய அமைச்சர் ஹமீத் அவர்கள் யாழ்ப்பாணம் சென்றார்.

அங்கு சென்றவர் அன்ரன் பாலசிங்கத்தின் தலைமையில் விடுதலைப்புலிகளின் தூதுக்குழுவுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார். இதன் பலனாக 13ந் திகதி நண்பகல் 12 மணிமுதல் யுத்த நிறுத்தத்தை அமுல் செய்வதென இருதரப்பிலும் இணக்கம் காணப்பட்டது.

ஆனால் யுத்த நிறுத்தத்தை உரியமுறையில் கடைப்பிடிக்க முடியாது போய்விட்டது. 13ந் திகதி புதன்கிழமை காலை 11.30 மணியளவில் விடுதலைப்புலிகள் களுவாஞ்சிக்குடி இராணுவமுகாம் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியதால் அவர்கள் யுத்தத்தை மீறியதாகவும் இராணுவத்தினர் அறிவித்தனர். அதேவேளை இராணுவத்தினர் யுத்தத்தை மீறியதால் தாம் தமது தாக்குதலை தீவிரப்படுத்த வேண்டிய நிலை தமக்கு ஏற்பட்டதாகவும் அதனாலேயே புதன்கிழமை காலை தாம் தாக்குதலில் இறங்கியதாகவும் புலிகள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இருதரப்பினருக்குமிடையே முழு அளவிலான யுத்தம் வடக்கு கிழக்கில் மீண்டும் ஆரம்பமாகியது.

யுத்த நிறுத்தம் கைகூடாத போதிலும் தனது முயற்சிகளைக் கைவிடாது அமைச்சர் ஹமீத் அவர்கள் மீண்டும் யூன் 15ந் திகதி கடுமையான யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த நிலையிலும் யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்பாணம் சென்ற அவர் நல்லூரில் பாலசிங்கம் உட்பட முக்கியஸ்தர்களைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு உடனடியாக கொழும்பு திரும்பினார்.



படிப்பகம்

www.padippakam.com

அங்கு ஜனாதிபதி அவர்களைச் சந்தித்த அவர் மறுநாள் 16ந் திகதி மீண்டும் புலிகளைச் சந்திப்பதற்காக யாழ்ப்பாணம் சென்றார். ஆனால் யாழ்ப்பாணத்தில் யுத்தநிலை மோசமடைந்து விட்டதால் பலாலி இராணுவமுகாமிலிருந்து வெளியே சென்று புலிகளைச் சந்திக்க முடியாமையால் அவரின் சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு நீண்டகால யுத்தமொன்றிற்கு வழியமைக்க வழிகோலியது. சுமார் 14 மாதகாலமாக விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசாங்க தூதுக்குழுவிற்குத் தலைமைதாங்கிய அமைச்சர் ஹமீத் அவர்கள் இப்பேச்சுவார்த்தை தொடர்பாக தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானவை இங்கே விபரிக்கப்பட்டுள்ளது.

1992 ஆகஸ்ட் 27ந் திகதி கொழும்பிலுள்ள ஹொட்டல் ஒப்ரேயில் நடைபெற்ற லிபரல்கட்சியின் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் ஹமீத் அவர்கள் பேச்சுவார்த்தைகள்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்:

எமது சமூகத்தின் ஜனநாயக அரசியலுக்கே சவாலாகவிருந்த தென் பகுதிக் கிளர்ச்சியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு விடுதலைப் புலிகளுடனான அந்த 14 மாதகால அமைதிப் பேச்சுவார்த்தைகள் சகலருக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்தது. அத்தோடு இந்திய அமைதிப்படையை வாபஸ் பெறுவதென்ற இந்தியாவின் தீர்மானத்திற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இது தனது பங்களிப்பைச் செலுத்தியிருக்கின்றது. ஆயுதக்கையளிப்பு தொடர்பான பிரச்சினையே விடுதலைப்புலிகளுடன் நான் எதிர்கொண்ட பிரதான பிரச்சினையாகும். இந்த விடயத்தில் அவர்கள் பிடிவாதமாக இருந்தனர். எதிர்காலத்தில் பதவிக்கு வரக்கூடிய அரசாங்க மொன்று இப்போது வழங்கப்படும் உரிமைகளை வாபஸ் பெறலாமென்பதே அவர்களது நிலைப்பாடாகும். இதனால் அவ்வாறான நிலைப்பாட்டிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு ஆயுதம் தேவையெனவும் அதனால் ஆயுதக்கையளிப்புச் செய்ய முடியாதென்பதே அவர்களின் கருத்தாக இருந்தது. இவ்வாறு அமைச்சர் ஹமீத் அவர்கள் கூறினார்கள்.



படிப்பகம்

## விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட (ஈ.பி.ஆர்.எல்.எப்) அமைப்பினர் மீதான படுகொலை

தமிழ் நாடு சக்கரியா கொலனி கோடம்பாக்கத்தில் அமைந்திருந்த மாடி வீடு ஒன்றில் வைத்து (19.06.1990ல்) அவ்வமைப்பின் செயலாளர் திரு. பத்மநாபா உட்பட 14 அமைப்பின் உறுப்பினர்கள் விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களில் திரு. பத்மநாபா, முன்னாள் வடகிழக்கு மாகாண நிதி அமைச்சர் பி.கிருபாகரன், பாராளுமன்ற உறுப்பினர் திரு யோகசங்கரி, ஜோர்ச், கபூர், கதிர், பெஞ்சமின், றொபேட், மற்றும் புளொட் அமைப்பின் பிரதானியான ஆர்.ஆர் வாசுதேவா, இங்கு சுவாரஸ்யமான விடயம் என்னவெனில் திரு வாசுதேவா அவர்களின் உடன்பிறந்த சகோதரரான பரமதேவா அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் பணியாற்றிய நிலையிலேயே வாசுதேவா அதே அமைப்பினரின் ஆயுத வெறிக்கு பலியாக்கப்பட்டார். இங்கு மேலும் ஏழு பேரின் பெயர்களை பெறமுடியவில்லை. இவர்களுடன் இச்சம்பவத்தில் தமிழகத்தைச் சேர்ந்த இரு அப்பாவிகளும் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி படுகொலையினைத் தொடர்ந்து தமிழக முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதிதி அவர்களின் தலைமையிலான தமிழக அரசு கலைக்கப்பட்டது.

## காத்தான்குடி பள்ளிவாசல் படுகொலைகள்

அரசியல் தலைவர்களை மட்டுமல்ல முஸ்லிம்கள்மீதான மிக மோசமான இன மேலாதிக்க நடவடிக்கைகளிலும் புலிகள் ஈடுபட்டனர்.

ஹஜ்யாத்திரைக்குச் சென்றுவந்த காத்தான்குடி முஸ்லிம்கள் (68) பேரை குருக்கள் மடம் என்னுமிடத்தில் வைத்து (12.07.1990ல்) வழிமறித்த புலிகள் பஸ்சுடன் அவர்களைக் கடத்திச்சென்று கொன்றொழித்தனர்.

காத்தான்குடியிலமைந்துள்ள இரண்டு பள்ளிவாசல்களில் ஒரே நேரத்தில் புலிகள் நடாத்திய தாக்குதலில் 103 முஸ்லிம்கள் (03.08.1990ல்) படுகொலை செய்யப்பட்டனர்.

www.padippakam.com

விடுதலைப் புலிகளால் வடமாகாணத்திலிருந்து 48 மணித்தியால காலக்கெடுவில் 1990ல் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள்.

## 1931 முதல் 1981 வரையான வட மாகாண மக்களின் இனரீதியான புள்ளிவிபரம்

| ஆண்டு | மொத்த சனத் தொகை | தமிழர்கள் | விகிதம் | முஸ்லிம்கள் | விகிதம் | சிங்களவர்கள் | விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1931 | 3.74.829 | 3.56.801 | 95.2 | 13.095 | 3.5 | 3.795 | 1.1 |
| 1946 | 4.79.572 | 4.49.958 | 93.8 | 18.163 | 3.3 | 9.602 | 2.0 |
| 1953 | 5.70.650 | 5.33.195 | 93.4 | 23.233 | 4.0 | 14.222 | 2.4 |
| 1963 | 7.41.910 | 6.89.470 | 92.9 | 30.760 | 4.1 | 20.270 | 2.7 |
| 1971 | 8.74.629 | 8.02.105 | 92.5 | 38.565 | 4.4 | 26.847 | 2.9 |
| 1981 | 1.111.468 | 1.023.223 | 92.1 | 52.638 | 7.0 | 33.149 | 3.0 |

மேற்படி இன விகிதாசார புள்ளி விபரங்களுக்கமைய வடமாகாணத்தில் வாழ்ந்த (66,000) அறுபத்தாறாயிரம் முஸ்லிம் மக்கள்வரை அங்கிருந்து 1990 அக்டோபர் மாதம் 22, 23 ந் திகதிகளில் 48 நாற்பத்தெட்டு மணித்தியால காலக்கெடுவில் விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டனர். இம்மக்களை ஆயுத அச்சுறுத்தல் மூலம் வெளியேற்றிய விடுதலைப் புலிகள் அம்மக்களின் சொத்துக்கள் ஏறக்குறைய 10,256 மில்லியன் பெறுமதியானவற்றினை அபகரித்ததாக முஸ்லிம் ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

விடுதலைப் புலிகளின் ஆயுத அடக்குமுறையின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மேற்படி இனச்சுத்திகரிப்பில் துரத்தப்பட்ட முஸ்லிம் மக்களில் பெரும்பாலானவர்கள் புத்தளத்திலும் ஏனையோர் அநுராதபுரத்திலும் அகதிகளாக தஞ்சமடைந்தனர்.

தொடர்ந்து ஜனாதிபதி திரு பிரேமதாசா அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் முரண்பாடுகள் உருவாகியதற்கமைய கிழக்கில் மீண்டுமொரு இரத்த ஆறு ஓடுகின்றது. இந்திய அமைதிகாக்கும் படையினரின் வெளியேற்றத்திற்குப் பின்னர் புலிகளால் கையகப்படுத் தப்பட்டிருந்த கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளை மீட்டெடுக்கும் நோக்குடன் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் கடுமையான



படிப்பகம்

www.padippakam.com

தாக்குதல் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர். மட்டக்களப்பு பிரதேசம் முழுவதும் வரலாறு காணாத செல் தாக்குதல்கள் காரணமாக வாழைச் சேனை, கல்முனை பிரதான வீதி நீண்டநாட்களுக்கு இயங்கமுடியாத அளவிற்கு தடைசெய்யப்பட்டது. பல ஆயிரக்கணக்கான பொது மக்கள் அகதிகளாக்கப்பட்டு கிழக்குப் பல்கலைக் கழக வளாகத்தினுள் தஞ்ச மடைந்திருந்தனர்.

## இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை (21.05.1991)







**இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி அவர்களின் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட கொலை தொடர்பான சான்றுகள்.**

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் மூலகர்த்தாவான திரு ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ்நாடு சிறீபெரும்புத்தூர் என்னுமிடத்தில்வைத்து (21.05.1991ல்) தனு என்று அழைக்கப்படும் தேன்மொழி ராஜரத்தினம் என்பவர் விடுதலைப் புலிகளின் பெண் மனித வெடிகுண்டுதாரியாக செயற்பட்டு திரு. ராஜீவ் காந்தி அவர்களை படுகொலை செய்தார். புலிகளது அரசியல் பழிவாங்கும்படலத்தின் உச்சமான இக் கொலையே புலிகள் இந்தியாவில்



படிப்பகம்

www.padippakam.com

தடைசெய்யப்படுவதற்கும், இலங்கைத் தமிழர்மீதான கருசனையை இந்திய மத்திய அரசாங்கம் கைவிடுவதற்கும் அடி கோலியது. அத்தோடு இலங்கைத் தமிழர்களின் உரிமைக்கான போராட்டத்தினை சர்வதேசமெங்கும் பயங்கரவாத செயற்பாடுகளாக இக்கொலை சித்தரித்தது.

விஜயமுனி விஜித ரோஹன டிசில்வா என்பவன் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களை கொல்வதற்கு மேற்கொண்ட கொலை முயற்சி பயனளிக்காத நிலையில் அதனை நிறைவேற்றிய பிரபாகரன்.

## திரு ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலை தொடர்பான முழு விபரம்.

கடந்த 20ம் நூற்றாண்டில் உலக நாடுகளில் எத்தனையோ அரசியல் படுகொலைகள் நடந்துள்ளன. இந்தியாவின் தேசத்தந்தை எனப் போற்றப்பட்ட காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்டார். பிரதமர் திருமதி. இந்திரா காந்தி அவர்களை அவருடைய மெய்க்காவலர்களே சுட்டுக்கொன்றனர். ஆயினும் 47 வயதே நிறைந்தவரும் இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தவருமான திரு. ராஜீவ் காந்தி அவர்கள் தமிழகம் என அழைக்கப்படும் தமிழ் மண்ணில் ஸ்ரீபெரும்புத்தூரில் விடுதலைப் புலிகளினால் திட்டமிட்டு அனுப்பப்பட்டு மனித வெடி குண்டாகவந்த ஒரு பெண்ணால் கொல்லப்பட்ட கொடிய சம்பவம் இரத்தத்தை உறையச் செய்வதாக இருந்தது.

இக்காலப்பகுதியில் இந்தியாவின் பிரதமராக இருந்த திரு. சந்திரசேகர் அவர்கள் தமது பதவியை (07.3.1991ல்) இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. ஜூன் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. பாராளுமன்ற தேர்தலுடன் தமிழக சட்டசபை தேர்தலும் நடைபெறுவதாக இருந்தது. மே 21ந் திகதி தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரம் செய்ய ராஜீவ் திட்டமிட்டார்.

21ந் திகதி பகலில் அவர் ஆந்திராவில் பல தேர்தல் கூட்டங்களில் பேசிவிட்டு மாலை 6.30 மணிக்கு தனி விமானத்தில் சென்னைக்குப் புறப்படுவதாக இருந்தார். ஆனால் விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதால் மறுநாள் காலை சென்னை போகலாம் என்று எண்ணிய நிலையில் இருந்தனர்



படிப்பகம்

www.padippakam.com

மாளிகைக்கு சென்று கொண்டிருந்தபோது "விமானம் சரியாகி விட்டது சென்னைக்குப் புறப்படலாம்" என்று தகவல் வந்தது. எனவே காரை விமான நிலையத்துக்குத் திருப்பச் சொன்னார்.

விமானம் 7 மணிக்குப் ஆந்திராவிலிருந்து புறப்பட்டது. அதில் இரவு 8.26 மணிக்கு ராஜீவ் காந்தி சென்னை வந்து சேர்ந்தார். விமான நிலையத்தில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். தேர்தல் பற்றி கேட்டதற்கு "மத்தியில் முழு மெஜாரிட்டியுடன் காங்கிரஸ் ஆட்சிக்கு வரும்" என்று பதிலளித்தார். பிறகு சென்னையில் இருந்து ஸ்ரீபெரும்புதூருக்குக் காரில் சென்றார். அங்கு இந்திரா காங்கிரஸின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இரவு 10.10 மணிக்கு அவர் ஸ்ரீபெரும்புதூர் போய்ச்சேர்ந்தார்.

பொதுக்கூட்டம் நடக்கும் இடத்துக்கு அருகே அமைந்திருந்த இந்திரா காந்தி அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்தார். பின்னர் மேடையை நோக்கிச் செல்லும்போது வழியில் கூடியிருந்தவர்கள் அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டார். வரவேற்க நின்று கொண்டிருந்தவர்களில் அரக்கோணத்தை சேர்ந்த லதா கண்ணன் (வயது 35) என்ற காங்கிரஸ் ஊழியரும் ஒருவர். அவருடன் அவரின் வளர்ப்பு மகளான கோகிலா என்ற 15 வயதுச்சிறுமியும் வந்திருந்தாள். அவள் ராஜீவ் காந்தியைப் புகழ்ந்து இந்தியில் எழுதி வைத்திருந்த கவிதையைப் பாடினாள்.

அதை ராஜீவ் ரசித்துக் கேட்டார். இவர்களுடன் சுமார் 20 வயது மதிக்கத்தக்க ஒரு மர்மப்பெண் நின்று கொண்டிருந்தாள். சுரிதார் உடையில் இருந்த அவள் மூக்குக் கண்ணாடி அணிந்திருந்தாள். கையில் ஒரு சந்தன மாலை இருந்தது. கோகிலா கவிதை பாடி முடித்ததும் ராஜீவ் காந்தி அவள் முதுகில் அன்புடன் தட்டிக்கொடுத்தார். அவர் அங்கிருந்து நகரத் தொடங்கும்போது கையில் சந்தன மாலை வைத்திருந்த பெண் அவர் அருகே சென்றாள். மாலையை அவர் கழுத்தில் அணிவித்தாள்.

கண்மூடி திறப்பதற்குள் அவள் கை இடுப்பில் மறைவாக கட்டியிருந்த பெல்ட்டைத் தொட்டது. அவ்வளவுதான். பெல்ட்டுடன் கட்டியிருந்த குண்டுகள் வெடித்தன. ராஜீவ் காந்தியும், அவரைச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தவர்களும் உடல் சின்னாபின்னமாகச் சிதறி தரையில் வீழ்ந்தார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

குண்டு மிக சக்தி வாய்ந்ததாக இருந்தாலும் சத்தம் அதிகம் கேட்கவில்லை.

தவிரவும் மேடை அருகே காங்கிரசார் பட்டாசுகளைக் கொளுத்திக்கொண்டு இருந்தனர். எனவே அருகே இருந்தவர்கள் கூட குண்டு வெடித்ததை உடனடியாக உணர முடியவில்லை. புகை மண்டலமாக இருக்கிறதே என்று ஓடிச்சென்று பார்த்தபோது பலர் உடல் சிதைந்து பிணமாகக் கிடந்த பயங்கரக்காட்சியைக் கண்டு அலறினார்கள்.

இந்தக் கூட்டத்துக்காக வந்திருந்த காங்கிரஸ் தலைவர்கள் திருவாளர்கள் கருப்பையா மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் ஏதோ விபரீதம் நடந்து விட்டதை அறிந்து ஓடோடி வந்தனர். "ராஜீவ் எங்கே? ராஜீவ் எங்கே?" என்று கதறினார் மூப்பனார். ராஜீவ் காந்தி தலைகுப்புற கிடந்தார். அவர் தலையின் பின்புறம் காலில் அணிந்திருந்த பூட்ஸ் ஆகியவற்றைக் கொண்டு அவர்தான் ராஜீவ் காந்தி என்று அடையாளம் கண்டு கொண்ட ஜெயந்தி நடராஜன் எம்.பி. தாங்க முடியாத அதிர்ச்சியும், துயரமும் அடைந்து கதறினார். இதற்குள் காங்கிரஸ் தலைவர்களும், தொண்டர்களும் அந்த இடத்திற்கு ஓடிவந்தனர். ராஜீவ் காந்தி அவர்களின் உடலைப் பார்த்து அலறித்துடித்தனர்.

ராஜீவ் காந்தி இறந்துவிட்டார் என்ற செய்தி டெல்லியில் இருந்த திருமதி சோனியா காந்திக்கு இரவு 12 மணி அளவில் தெரிவிக்கப்பட்டது. அவர் அதிர்ச்சியால் உறைந்து போனார். ராஜீவ் காந்தியின் ஒரே மகன் ராகுல் அமெரிக்காவில் படித்துக் கொண்டிருந்தார். அவருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டார். சோனியாவும், மகள் பிரியங்காவும் தனி விமானம் மூலம் சென்னைக்கு விரைந்தனர். இதற்கிடையே ராஜீவ் காந்தியின் உடல் வேன் ஒன்றின் மூலம் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகப்பட்டது. அங்கு உடல் பரிசோதனை நடந்தது. டெல்லிக்கு கொண்டு செல்லப் படுவதற்காக பெட்டியில் வைக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது தமிழ்நாட்டில் ஜனாதிபதி ஆட்சி நடந்து கொண்டிருந்தது. கவர்னர் பீஷ்மநாராயண் சிங் ஆஸ்பத்திரிக்கு சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். மூப்பனார், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர். பின்னர் ராஜீவ் உடல் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்துக்கு



படிப்பகம்

www.padippakam.com

கொண்டு போகப்பட்டது. டெல்லியில் இருந்து சோனியாவுடனும், பிரியங்காவுடனும் புறப்பட்ட தனி விமானம் சென்னை வந்து சேர்ந்தது. ராஜீவ் காந்தி உடலைப் பார்த்து சோனியாவும், பிரியங்காவும் கதறித்துடித்தனர். பின்னர் அவர்கள் வந்த தனி விமானத்திலேயே ராஜீவ் உடல் டெல்லிக்கு கொண்டு போகப்பட்டது.

சோனியாவும், பிரியங்காவும் காங்கிரஸ் தலைவர்களும் உடன் சென்றார்கள். டெல்லிக்குக் கொண்டு போகப்பட்ட ராஜீவ் காந்தியின் உடல் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. ஆபரேஷன்கள் மூலம் உடலை டாக்டர்கள் சீரமைத்தனர். பின்னர் ராஜீவ் காந்தியின் வீட்டுக்கு உடல் கொண்டு போகப்பட்டது. அங்கு சிறிது நேரம் வைத்திருந்துவிட்டு பொதுமக்கள் இறுதி மரியாதை செலுத்துவதற்காக தீன்மூர்த்தி இல்லத்துக்கு (பண்டித நேரு வசித்த வீடு) கொண்டு போய் வைத்தார்கள்.

இதற்கிடையில் அமெரிக்காவில் இருந்து ராகுல் டெல்லி வந்து சேர்ந்தார். தந்தையின் உடலைக்கண்டு அலறித்துடித்தார். ராஜீவ் உடல் அருகே சோனியாவும், பிரியங்காவும் துயரமே உருவாக அமர்ந்திருந்தனர். சஞ்சய் காந்தியின் மனைவி மேனகாவும் சோகத்துடன் அமர்ந்திருந்தார். பிரதமர் சந்திரசேகர் தலைமையில் மத்திய மந்திரிசபை கூடி ராஜீவ் மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது. 7 நாட்கள் துக்கதினம் கடைப்பிடிப்பது என்றும், அரசு மரியாதையுடன் ராஜீவ் உடலை தகனம் செய்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர், பூட்டான் மன்னர், அமெரிக்க துணை ஜனாதிபதி, இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் மற்றும் உலகப் பிரமுகர்கள் பலர் வந்திருந்து இறுதி மரியாதை செலுத்தினர். 23ந் திகதி பிற்பகல் இறுதி ஊர்வலம் நடந்தது. முப்படைத் தளபதிகள், ராஜீவ் உடலை சுமந்து வந்து பீரங்கி வண்டியில் வைத்தார்கள். பிரதமர் சந்திரசேகர், முன்னாள் ஜனாதிபதி ஜெய்ல்சிங் மற்றும் பல தலைவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். பின்னர் இறுதி ஊர்வலம் புறப்பட்டது. ராஜீவ் காந்தி அவர்களின் உடலை தகனம் செய்ய இந்திராகாந்தி சமாதி இருக்கும் சக்தி ஸ்தலத்தில் தகன மேடை அமைக்கப்பட்டிருந்தது. மாலை 4.45 மணிக்கு இறுதி ஊர்வலம் அந்த இடத்தை அடைந்தது. ராஜீவ் உடலை ராகுல், நடிகர் அமிதாபச்சன்



படிப்பகம்

www.padippakam.com

மற்றும் உறவினர்கள் தூக்கி வந்து தகன மேடையில் வைத்தார்கள். உடல் மீது சந்தனக் கட்டைகள் அடுக்கப்பட்டு வைதீக சடங்குகள் நடந்தன.

பின்னர் சிதைக்கு ராகுல் காந்தி தீ மூட்டினார். மைதானத்தில் திரண்டிருந்த பொதுமக்கள் கண்ணீர் விட்டு அழுதார்கள். மறுநாள் ராஜீவ் காந்தி அஸ்தி 34 கலசங்களில் சேகரிக்கப்பட்டது. அலகாபாத்தில் கங்கையும், யமுனையும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்திலும், இமயமலை சாரல் உள்பட இந்தியாவில் பல்வேறு இடங்களிலும் கரைப்பதற்காக அஸ்தி கலசங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

திரிவேணி சங்கமத்துக்கு சோனியா காந்தி சென்றிருந்தார். ராஜீவ் காந்தி அஸ்தி சென்னைக்கு கொண்டு வரப்பட்டு ராஜாஜி மண்டபத்தில் பொது மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் ரெயில் மூலம் கன்னியா குமரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு கடலில் கரைக்கப்பட்டது. இந்த நிலையில் ராஜீவ் காந்தி கொலை பற்றி துப்புத்துலக்க சிறப்பு மத்திய புலனாய்வு பிரிவு அமைக்கப்பட்டது. அந்த குழுவைச் சேர்ந்த 20 அதிகாரிகள் ராஜீவ் கொல்லப்பட்ட இடமான ஸ்ரீபெரும்புதூருக்கு நேரில் சென்று ஆய்வு நடத்தினார்கள். வெடித்த வெடிகுண்டு துண்டுகளை சேகரித்தனர். ராஜீவ் காந்தியின் உடல் அருகே சிதைந்து கிடந்த பெண்தான் கொலையாளியாக இருக்கவேண்டும் என்று முடிவு செய்தனர்.

சக்தி வாய்ந்த குண்டை அவள் பயன்படுத்தி வெடிக்க செய்திருக்க வேண்டும் என்று ஊகித்தார்கள். மேலும் கொலை சம்பவம் நடந்த இடத்தில் பெண்கள் அணியும் பெல்ட் ஒன்றும் சிதைந்து கிடந்ததை கண்டு எடுத்தார்கள். அதில் வெடிகுண்டு மருந்து நெடி வீசுவதையும் கண்டுபிடித்தனர். எனவே கொலையாளி அவளேதான் என்று உறுதிப்படுத்தினார்கள். ஆனாலும் அவள் யார், பெயர் என்ன என்ற விவரம் எதுவும் தெரியாமல் இருந்தது. ராஜீவ் காந்தி கொல்லப்பட்டபோது அருகே இருந்த செங்கல்பட்டு போலீஸ் சூப்பிரண்டு, இன்ஸ்பெக்டர்கள் ராஜகுரு, எட்வர்டு, சப்இன்ஸ்பெக்டர் எத்திராஜ், போலீஸ்காரர்கள் ரவி, தர்மன், பீட்டர், முருகன், பெண் போலீஸ் சந்திரா, முன்னாள் எம்.எல்.சி. முனுசாமி, லதா கண்ணன், கோகிலா, ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு அதிகாரி குந்தா உள்பட 18 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. மரகதம் சந்திரசேகர், போலீஸ் டி.ஐ.ஜி.



படிப்பகம்

மாத்தூர், போலீஸ் அதிகாரி நாஞ்சில் குமரன் ஆகியோர் உள்பட 21 பேர் காயம் அடைந்தனர்.

டெல்லியில் காங்கிரஸ் காரிய கமிட்டி கூடி ராஜீவ் காந்தி வகித்து வந்த காங்கிரஸ் தலைவர் பதவியை சோனியா ஏற்க வேண்டும் என்றும் அமேதி தொகுதியில் போட்டியிட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்து தீர்மானம் நிறைவேற்றியது. ஆனால் இந்த கோரிக்கைகளை ஏற்க சோனியா மறுத்து விட்டார். ராஜீவ் காந்தி மரணம் அடைந்ததால் இரண்டாவது கட்ட தேர்தல் மே 23ல் இருந்து ஜுன் 12ந் திகதிக்கும், மூன்றாவது கட்ட தேர்தல் மே 26ல் இருந்து ஜுன் 15ந் திகதிக்கும் ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த சமயத்தில் ராஜீவ் காந்தி அவர்களின் கொலைக்கும், விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் தொடர்புகள் இருக்கலாம் என்று செய்திகள் வெளியாயின. இதை மறுத்து விடுதலைப்புலி தளபதிகளில் ஒருவரான கிட்டு அறிக்கை விடுத்தார். "ராஜீவ் காந்தி மரணச்செய்தி எங்களுக்கு அதிகமாக அதிர்ச்சி அளித்தது. எங்களால் இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியவில்லை. இதில் எந்த வகையிலும் எங்களுக்கு தொடர்பு இல்லை" என்று அவர் அறிக்கையில் குறிப்பிட்டு இருந்தார்.

ராஜீவ் காந்தி கொலை உலகம் முழுவதிலும் அதிர்ச்சி ஏற்படுத்தியது. இந்தக்கொலையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது தமிழக போலீசாருக்கு பெரிய சவாலாக இருந்தது. இந்த கொலையில் துப்புத்துலக்கும் பொறுப்பு ஐ.ஜி.கார்த்திகேயன் தலைமையில் உள்ள சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் துப்பு துலக்கிய விதம் மர்மப்பட மன்னன் ஹிட்ச்ஹாக் படங்களையும் மிஞ்சுவதாக இருந்தது.

ராஜீவ் காந்தியின் நிகழ்ச்சிகளை அரிபாபு என்ற போட்டோகிராபர் படம் எடுத்துக் கொண்டிருந்தார். குண்டு வெடிப்பில் அவர் இறந்து போனாலும் அவருடைய கேமரா சேதம் அடையாமல் கிடந்தது. அந்த கேமராவை போலீசார் கைப்பற்றி உள்ளே பதிவாகியிருந்த படங்களை பிரிண்ட் போட்டுப் பார்த்தனர். ஒரு படத்தில் லதா, கண்ணன், கோகிலா ஆகியோருக்கு நடுவே கையில் சந்தன மாலையுடன் மர்மப்பெண் நின்று கொண்டிருந்தாள். அடுத்த படத்தில் சிறுமி கோகிலாவை ராஜீவ் பாராட்டிய காட்சி பதிவாகியிருந்தது. அருகே அந்த மர்மப்பெண்ணின் தலை தெரிந்தது.

www.padippakam.com

குண்டு வெடிப்பில் ராஜீவ் காந்தியுடன் மேலும் 16 பேர் பலியாகி இருந்தனர். ஒரு பெண் தலை வேறாகவும் உடல்கள் பல துண்டுகளாகவும் சிதறிக் கிடந்தாள். சிதறிய பகுதிகளை சேர்த்து வைத்துப் பார்த்தபோது அவள்தான் அந்த மர்மப்பெண் மனித வெடி குண்டாகப் பயன்படுத்தப்பட்டவள் என்பது தெரியவந்தது.

கேமராவில் பதிவாகியிருந்த வேறு சில படங்களில் பட்டுச்சேலை அணிந்த இரண்டு பெண்கள் கூட்டத்தோடு உட்கார்ந்து இருந்தது தெரிய வந்தது. அவர்களைக் கண்டுபிடிப்பதில் போலீசார் முனைந்தனர். நிருபர்போல தோற்றமளித்த மர்ம மனிதன் ஒருவனின் படமும் பதிவாகியிருந்தது. அவனையும் போலீசார் தேடினார்கள். இதற்கிடையே மே 25ந் திகதி தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் சங்கர் என்ற விடுதலைப்புலியை போலீசார் கைது செய்து விசாரித்தனர்.

ராஜீவ் காந்தியைக் கொலை செய்ய திட்டமிட்டு தனு என்ற மனித வெடிகுண்டை தயார் செய்து அனுப்பியவன் ஒற்றைக்கண் சிவராசன் என்று அவன் வாக்குமூலம் கொடுத்தான். அவனிடம் இருந்த டைரியின் மூலம் நளினி, முருகன் ஆகியோரின் சென்னை ராயப்பேட்டை முகவரியும், ரெலிபோன் நம்பரும் தெரியவந்தன. ஸ்ரீபெரும்புதூர் பொதுக்கூட்டத்தில் பட்டுச்சேலை அணிந்து அமர்ந்திருந்த இரண்டு பெண்களில் நளினியும் ஒருத்தி என்பதும், இன்னொரு பெண் பெயர் சுபா என்பதும் போலீசாருக்குத் தெரியவந்தது.

எனவே நளினியையும், முருகனையும் கைதுசெய்ய போலீசார் விரைந்தனர். ஆனால் அந்த முகவரியில் அவர்கள் இல்லை. ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்படுவதற்கு மூளையாக செயல்பட்ட சிவராசனைப் பிடிக்க போலீசார் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டனர். அவனைக் கண்டுபிடிக்க போலீசார் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர். சிவராசன் பற்றி துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.10 லட்சம் பரிசு கொடுக்கப்படும் என்றும் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள் பற்றி தகவல் தெரிவித்தால் ரூ.5 லட்ரம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

சிவராசனின் படம் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கிடையில் நளினியின் தாயார் பத்மா, சகோதரன் பாக்கியநாதன் ஆகியோரை போலீசார் கைது



படிப்பகம்

www.padippakam.com

செய்தனர். விழுப்புரத்தில் இருந்து சென்னைக்கு அரசு போக்குவரத்து கழக பஸ்ஸில் நளினியும், முருகனும் வந்து கொண்டு இருப்பதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. சென்னை அருகே பஸ்ஸை நிறுத்தி போலீசார் சோதனை போட்டனர். பஸ்சில் இருந்த நளினியும், முருகனும் கைது செய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் ஏற்கனவே திருப்பதியில் திருமணம் செய்து கொண்டனர் என்றும் கைது செய்யப்பட்டபோது நளினி 6 மாத கர்ப்பிணி என்றும் விசாரணையில் தெரியவந்தது.

## போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் முருகன் கூறியதாவது:-

“நான் யாழ்ப்பாணம் மீசலை பகுதியை சேர்ந்தவன். எனக்கு சுரேஷ், சிந்து, ராஜூ, தாஸ் முதலிய பெயர்களும் உண்டு. பெற்றோர் வைத்த பெயர் முருகன். 14 வயதில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்தேன். எனக்கு கடுமையான பயிற்சிகள் கொடுத்தார்கள். நான் மே 6ந் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கள்ளத்தோணியில் ஏறி சென்னைக்கு வந்து சேர்ந்தேன். போரூர் சபரி நகரில் இருந்த ஜெயக்குமார் வீட்டில் தங்கி இருந்த சிவராசன், சுபா,



தனு ஆகியோரை சந்தித்தேன். சம்பவம் நடந்த நாளன்று சிவராசன், தனு, சுபா, நளினி, பாக்கியநாதன், போட்டோகிராபர் அரிபாபு ஆகியோரும் நானும் ஸ்ரீபெரும்புதூருக்கு சென்றோம். அங்குள்ள ஹோட்டல் ஒன்றில் மாலையில் பிரியாணி சாப்பிட்டோம். ஸ்ரீபெரும்புதூரில் தனுவுக்கு வெடிகுண்டு ஜாக்கெட்டை சிவராசன் மேற்பார்வையிட சுபா அணிந்துவிட்டாள்.

குண்டை எப்படி வெடிக்கச் செய்ய வேண்டும் என்பதை தனுவிடம் சிவராசன் விளக்கினான். குண்டு வெடிக்க செய்தால் இறந்து விடுவோம் என்பது தனுவுக்குத் தெரியும். ஆனாலும் ராஜீவ்காந்தியை கொலை செய்ய வேண்டும் என்ற பழிவாங்கும் கோபத்துடன் தனு இருந்தாள். இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்தில் தனுவின் தம்பியும், அண்ணனும் இந்திய அமைதிப் படையினரால் கொல்லப்பட்டனர். தனுவை கற்பழித்தனர். இதை நளினியிடம்



படிப்பகம்

www.padippakam.com

தனு கூறியதை நான் பலமுறை கேட்டிருக்கிறேன். மேற்படி தனு என அழைக்கப்பட்டவரின் உண்மையான பெயர் தேன்மொழி இராஜரெத்தினம் ஆகும். இதனாலேயே கொலைத்திட்டத்தை நிறைவேற்ற அவள் சம்மதித்தாள். இத்திட்டம் நளினிக்கும் முன்கூட்டியே தெரியும். ராஜீவ் காந்தி வருவதற்கு முன்னதாக நாங்கள் மேடை அருகில் சென்று சுற்றிப்பார்த்தோம். தனுவுக்கு இடங்களை காட்டி சிவராசன் விளக்கினான். சிவராசன் தன்னை பத்திரிகையாளர் என்று கூறிக்கொண்டு அங்கு நின்றவர்களிடம் பேசிக்கொண்டு இருந்தான்.

திரு. ராஜீவ்காந்தி அவர்கள் வருகை தரும் இடத்தில் தனு சந்தன மாலையுடன் நின்றிருந்தாள். இதை சிவராசன் மிகவும் உன்னிப்பாக கண்காணித்தான். அவ்வப்போது தனுவுக்கு சைகை மூலம் கட்டளை பிறப்பித்தான். சிவராசன் தன்னுடைய பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கியும் வைத்திருந்தான். குண்டை வெடிக்கச் செய்வதில் தனு தோல்வி அடைந்தால் ராஜீவ் காந்தியை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட சிவராசன் திட்டமிட்டிருந்தான். சுபா தன் கழுத்தில் சயனைட் (விஷம்) குப்பியை தாயத்து போல கட்டி தொங்கவிட்டிருந்தாள். ராஜீவ்காந்தி வந்ததும் சிவராசன் சுபாவை அழைத்துக்கொண்டு மெயின் றோட்டுக்குச் சென்றான். நானும் நளினியும் கூட்டத்தை விட்டு நழுவினோம். குண்டு வெடித்த பிறகு இரவு சுமார் 10.30 மணிக்கு சிவராசன், சுபா ஆகிய 2 பேரும் "ஆட்டோ"வில் ஏறி திருவள்ளூர் சென்றனர்.

நானும், நளினியும் காரில் ஏறி விட்டிற்கு திரும்பி விட்டோம். அதிகாலையில் சுபாவும், சிவராசனும் வந்தார்கள். காலையில் பத்திரிகைகளில் செய்தி வந்ததைப் பார்த்ததும் சுபாவும், சிவராசனும் வீட்டை விட்டுச் சென்றுவிட்டனர். நானும், நளினியும் திருப்பதிக்கு சென்றோம். தமிழ் நாட்டிற்கு மே மாதம் ராஜீவ் காந்தி வரும்போது கொலைத் திட்டத்தை நிறைவேற்ற சிவராசனுக்கு விடுதலைப்புலிகள் மேலிடம் கட்டளை பிறப்பித்து இருந்தது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக சிவராசன் மே மாதம் முதல் வாரம் தமிழ்நாட்டிற்கு வந்தான்". இவ்வாறு முருகன் தனது வாக்குமூலத்தில் கூறி இருந்தான்.

சென்னை ஆழ்வார்திருநகரில் பதுங்கியிருந்த ஒற்றைக்கண் சிவராசனும், சுபாவும் இனியும் சென்னையில் இருந்தால் போலீசாரிடம் சிக்கி விடுவோம் என்று நினைத்தனர். அதனால் சென்னையிலிருந்து தப்பிச்செல்ல சென்ன



படிப்பகம்

www.padippakam.com

வழி என்று யோசித்தனர். சில விடுதலைப்புலிகளின் உதவியுடன் டேங்கர் லாரிக்குள் மறைந்து கொண்டு ரகசியமாக பெங்களூருக்குச் சென்றார்கள். 29.6.1991ல் பெங்களூர் போய்ச்சேர்ந்தனர்.

அங்கு தலைமறைவாக இருந்த அவர்கள் 01 மாத காலம் போலீஸ் கண்ணில் படாமல் அங்கும் இங்கும் திரிந்தனர். பிறகு கோனேகுண்டே என்ற இடத்தில் ஒரு வாடகை வீட்டில் தங்கினர். இதுபோல் பல விடுதலைப் புலிகள் கர்நாடக மாநிலத்தில் பல்வேறு இடங்களில் தலைமறைவாக இருந்தனர். பெங்களூர் புறநகரில் உள்ள இந்திரா நகர் காலனியில் விடுதலைப்புலிகள் ஒரு ஆடம்பர பங்களாவில் தங்கி இருப்பதாக போலீசுக்குத் தகவல் கிடைத்தது. உடனே சென்னையில் இருந்து சி.பி.ஐ. குழுவினர் 15 பேர் பெங்களூருக்கு விரைந்தார்கள். அந்த பங்களாவை முற்றுகை யிட்டார்கள். அந்த பங்களாவில் 3 அறைகள் இருந்தன.

அதை ஒரே நேரத்தில் உடைத்துக்கொண்டு அதிகாரிகள் உள்ளே புகுந்தனர். அங்கு விடுதலைப்புலிகள் சயனைட் தின்று மயங்கி கிடந்தனர். அதில் ஒருவன் சிறிது நேரத்தில் இறந்தான். அவனது பெயர் அரசன். இன்னொருவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 3 தினங்களில் இறந்து போனான். அவனது பெயர் குளத்தான் என்று தெரியவந்தது. அதே பகுதியில் இன்னொரு வீட்டில் பதுங்கி இருந்த மிரேஷ் (18) என்ற விடுதலைப்புலி போலீசாரிடம் சிக்கிக் கொண்டான். கர்நாடக மாநிலத்தில் மாண்டியா மாவட்டம் மாலவகள்ளி தாலுகா முத்தத் கிராமத்தில் ஒரு வீட்டில் விடுதலைப்புலிகள் தங்கி இருந்தனர். அந்த வீட்டை போலீசார் சுற்றி வளைத்தபோது 5 விடுதலைப்புலிகள் சயனைட்டை உட்கொண்டு இறந்து கிடந்தனர்.

4 பேர் மயக்கம் அடைந்து கிடந்தார்கள். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் வழியில் ஒருவன் இறந்தான். அதே தாலுகாவில் உள்ள பிரோட்டா என்ற ஊரிலும் ஒரு வீட்டில் விடுதலைப்புலிகள் பதுங்கி இருந்தனர். அங்கு போலீசார் சென்றனர். அதற்குள் வீட்டில் இருந்த 6 விடுதலைப்புலிகள் சயனைட்டை உட்கொண்டு இறந்தனர். 2 பேர் உயிருக்கு போராடிய நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். கர்நாடக மாநிலத்துக்குள் பல ஊர்களில் விடுதலைப்புலிகள் தங்கி இருப்பதும் பிடிக்கச் செல்லும்போது அவர்கள் தற்கொலை செய்வதும் சர்வசாதாரணமாக நடந்தது. எனவே சிவராசனும், சுபாவும் கர்நாடகத்தில்தான் இருக்க வேண்டும் என்று சி.பி.ஐ போலீசார்



படிப்பகம்

கருதினார்கள். எனவே அங்கு தங்களது வேட்டையை தொடர்ந்தார்கள்.

19.8.1991ந் திகதி அன்று பெங்களூர் அருகே கோனே குண்டே என்ற இடத்தில் உள்ள காலனியில் ஒரு வீட்டில் சந்தேகப்படும் படியாக நபர்கள் தங்கி இருப்பதாக பால்கார பெண் ஒருவர் போலீசுக்கு தகவல் கொடுத்தாள். உடனே அந்த வீட்டை போலீசார் கண்காணிக்கத் தொடங்கினார்கள். வீட்டில் தங்கியுள்ள விடுதலைப்புலிகளை உயிரோடு பிடிக்கவேண்டும் என்பதற்காக டெல்லியில் இருந்து கமாண்டோ படை வீரர்கள் வரவழைக்கப்பட்டனர். 20ந் திகதி அந்த பகுதியில் 1500க்கும் மேற்பட்ட ஆயுதம் தாங்கிய போலீசார் குவிக்கப்பட்டார்கள். வீட்டைச்சுற்றி சுமார் 200 அடி தூரத்தில் போலீசார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

திடீர் என்று வீட்டிற்குள் இருந்து துப்பாக்கி வெடிக்கும் சத்தம் கேட்டது. போலீசார் திருப்பி சுட்டனர். இரவு 7 மணிக்கு தொடங்கி சுமார் 1/2 மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. பிறகு வீட்டிற்குள் இருந்து எந்த சத்தமும் வரவில்லை. எனவே கமாண்டோ படை வீரர்கள் 8 பேர் வீட்டின் கூரை வழியாக வீட்டிற்குள் புகுந்தார்கள். அந்த வீடு ஒரே அறை மட்டுமே கொண்டிருந்தது. உள்ளே 7 பேர் இறந்து கிடந்தனர். இதில் 5 பேர் ஆண்கள். இருவர் பெண்கள். ஒரு ஆணின் தலையில் மட்டும் துப்பாக்கியால் சுட்டுக்கொண்ட காயம் இருந்தது. மற்ற 6 பேரும் ‘‘சயனைட்’’ விஷம் தின்று இறந்துகிடந்தார்கள்.

பெண்களில் ஒருத்தி மரத்தினால் செய்யப்பட்ட செயற்கை காலை பொருத்தி இருந்தாள். உடனே சி.பி.ஐ. டைரக்டர் விஜயகரன், ஐ.ஜி. கார்த்திகேயன், பெங்களூர் போலீஸ் கமிஷனர் ஆர்.ராமலிங்கம் ஆகியோர் வீட்டிற்குள் சென்று பார்வையிட்டார்கள். தலையில் துப்பாக்கி குண்டு பாய்ந்து இறந்து கிடந்தவன் ஒற்றைக்கண் சிவராசன் என்பதை கார்த்திகேயன் உறுதி செய்தார். பெண்களில் ஒருத்தி சுபா என்பதையும் கண்டுபிடித்தார்கள். சிவராசனும், சுபாவும் அருகருகே பிணமாக கிடந்தனர். சிவராசன் பேண்ட், கறுப்பு நிற பனியன் அணிந்திருந்தான். சிவராசன் சயனைட் அருந்தியதுடன் துப்பாக்கியாலும் சுட்டுக்கொண்டான்.

அவனது வலது கண்ணுக்கு மேல் நெற்றியில் குண்டு பாய்ந்திருந்தது. துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்தபோது குண்டு துளைத்ததால்

அவனது செயற்கை கண் பிதுங்கி கீழே விழுந்து கிடந்தது. சுபா வெள்ளை நிற குட்டைப் பாவாடையும், கறுப்பு நிறத்தில் முழுக்கை சட்டையும் அணிந்திருந்தாள். காதில் சிவப்பு நிற கம்மலும், காலில் வெள்ளிக்கொலுசும், மெட்டியும் போட்டிருந்தாள். பின்னர் 7 பேரின் பிணங்களும் பிரேத பரிசோதனைக்காக பெங்களூர் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ராஜீவ்காந்தியைக் கொலை செய்து விட்டு 91 நாட்கள் போலீசாரிடம் சிக்காமல் தலைமறைவாக இருந்த சிவராசன், சுபா ஆகியோரின் வாழ்க்கை ராஜீவ் காந்தி பிறந்த தினமான ஆகஸ்டு 20ந் திகதி தற்கொலையில் முடிவடைந்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் பிடிபட்டவர்களை அடைத்து வைக்க பூந்தமல்லி சப்ஜெயில் பலத்த பாதுகாப்பு கொண்டதாக மாற்றி அமைக்கப் பட்டது. 14 அடி உயரம் கொண்ட சுற்றுச் சுவர் 18 அடி உயரத்துக்கு உயர்த்திக் கட்டப்பட்டது. மேலே கண்ணாடி துண்டுகள் பதிக்கப்பட்டன. கூடுதலாக 10 சிறை அறைகள் கட்டப்பட்டன. இங்கு நளினி, முருகன் உள்பட ராஜீவ் கொலையையொட்டி கைதானவர்கள் அடைக்கப்பட்டனர்.

சி.பி.ஐ. பிடித்து வைத்து விசாரித்து வந்த நளினியின் தங்கை கல்யாணி விடுவிக்கப்பட்டாள். ராஜீவ் கொலை வழக்கில் புதிதாக விஜயன் என்கிற பெருமாள் விஜயன் (வயது 26) பாஸ்கர் என்கிற வேலாயுதம் (55) ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டார்கள். மாமனார், மருமகனான இவர்கள் இலங்கையை சேர்ந்தவர்கள்தான். அகதிகளாக இந்தியா வந்தவர்கள். கொடுங்கையூரில் தங்கி இருந்தார்கள். இவர்களது வீட்டு சமையல் அறையில் தரைக்கு அடியில் மறைத்து வைத்திருந்த வயர்லெஸ் கருவியை புலனாய்வு போலீசார் கைப்பற்றினார்கள். இந்த வயர்லெஸ் கருவி மூலம் இலங்கையில் இருக்கும் விடுதலைப் புலிகளுடன் சிவராசன் பேசி இருக்கிறான். ராஜீவ்காந்தி கொலைக்கு முன்பும் கொலை நடந்த பிறகும் இங்கு சிவராசன் வந்து தங்கிச் சென்றிருக்கிறான் என்ற தகவல் கிடைத்தது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரிக்க தனிக்கோர்ட்டு அமைத்து தமிழக அரசு உத்தரவிட்டது. இதன் நீதிபதியாக முதலாவது அடிஷனல் செசன்சு நீதிபதி எஸ்.எம்.சித்திக் நியமிக்கப்பட்டார். இந்த தனி செசன்சு கோர்ட்டு சென்னை கோர்ட்டு வளாகத்தில் அமைக்கப்பட்டது. ராஜீவ் காந்தி

www.padippakam.com

கொலையாளியான தனுவுக்கு அடைக்கலம் கொடுத்ததாக தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பக்கமுள்ள கொடியங்காடு பகுதியைச் சேர்ந்த மிராசுதார் சண்முகம் (40) என்பவரை சி.பி.ஐ. போலீசார் கைது செய்து சென்னை கொண்டு வந்து விசாரணை நடத்தி வந்தனர். அவரது தோட்டத்தில் ஏராளமான வெடிகுண்டுகள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தகவல் வெளியானது. இதனால் அவரை தனி ஹெலிகாப்டர் மூலம் வேதாரண்யம் அழைத்துச்சென்று சோதனை போட்டனர்.

அவரது தோட்டத்தில் பெட்டிபெட்டியாக பதுக்கி வைத்திருந்த வெடிகுண்டுகளை கைப்பற்றினார்கள். பிறகு மிராசுதார் சண்முகத்தை அங்குள்ள சுற்றுலா மாளிகையில் தங்க வைத்தார்கள். சுற்றுலா விடுதி அருகில் உள்ள மரத்தில் மிராசுதார் சண்முகம் மர்மமான முறையில் தூக்கில் பிணமாக தொங்கினார். மிராசுதாரை போலீசார் அடித்து கொன்று தொங்க விட்டுவிட்டதாக அவரது மனைவி மணி ஜனாதிபதிக்கு தந்தி கொடுத்தார்.

பிறகு நடந்த பிரேத பரிசோதனையில் மிராசுதார் சண்முகம் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதாக டாக்டர் அறிக்கை கொடுத்தார். விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் (எல்.ரீ.ரீ.) பிரபாகரன் உள்பட 41 பேர் மீது தனிக்கோர்ட்டில் 20.5.1992 அன்று குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. “ஒற்றைக்கண்” சிவராசன் தனு, சுபா, கோடியக்கரை மிராசுதாரர் சண்முகம் உட்பட 12 பேர் தற்கொலை செய்து கொண்டனர். எல்ரீரீ. தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மான், அகிலா ஆகியோர் இலங்கையில் இருந்தனர். எனவே இவர்கள் 3 பேரும் “பிரகடனம் செய்யப்பட்ட குற்றவாளிகள்” என்று அறிவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டு ஜெயிலில் இருக்கும் நளினி, அவள் கணவன் முருகன் உட்பட 26 பேர் மீது மட்டும் வழக்கை விசாரிக்க தனிக்கோர்ட்டு முடிவு செய்தது.

குற்றம் சாட்டப்பட்ட 26 பேர் விவரம் வருமாறு: 1. நளினி (வயது 33) நர்சு பத்மாவின் மகள், 2. முருகன் (28) நளினியின் கணவன் விடுதலைப்புலி, 3. சின்னசாந்தன் (33), 4. சங்கர் (30), 5. விஜயானந்தன் (47), 6. சிவரூபன் என்கிற சுரேஷ்குமார் (26), 7. கனகசபாபதி (76), 8. ஆதிரை (23) கனகசபாபதியின் பேத்தி, 9. ராபர்ட் பயாஸ் (31), 10. ஜெயக்குமார் (30), 11. சாந்தி (30) ஜெயக்குமாரின் மனைவி, 12. விஜயன் (32), 13. செல்வலட்சுமி



படிப்பகம்

www.padippakam.com

(31) விஜயனின் மனைவி, 14. பாஸ்கரன் (62) விஜயனின் மாமனார், 15. சண்முக வடிவேலு (53), 16. ரவிச்சந்திரன் என்ற ரவி (30) தமிழர் மீட்புப்படைத் தளபதி, 17. சசீந்திரன் என்கிற மகேஷ் (27), 18. பேரறிவாளன் என்ற அறிவு (24) ஜோலார் பேட்டையைச் சேர்ந்த என்ஜினீயரிங் பட்டதாரி, 19. இரும்பொறை (35) திருச்சி, 20 பத்மா (56) நர்சு சென்னை ராயப் பேட்டையைச் சேர்ந்தவர், 21. பாக்கியநாதன் (31) நர்சு பத்மாவின் மகன் அச்சக அதிபர், 22. சுபா சுந்தரம் (50) போட்டோ கிராபர், 23. தனசேகரன் (55) லாரி அதிபர், 24. ரங்கன் (30) ஒற்றைக்கண் சிவராசனின் கார் டிரைவர், 25. விக்கி என்கிற விக்னேசுவரன் (33), 26. ரங்கநாத் (53) பெங்களூர் தொழில் அதிபர். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட 26 பேர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

## திரு ராஜீவ் காந்தி அவர்களின் படுகொலையின்போது மேலும் கொல்லப்பட்டவர்களின் விபரம்.

1. பி.கே. குப்தா, ராஜீவ் காந்தியின் பாதுகாப்பு அலுவலர்.
2. பி.கே. எஸ். முகமது இக்பால், செங்கல்பட்டு மாவட்ட எஸ்.பி..
3. ராஜ குரு, பல்லாவரம் காவல்நிலைய இன்ஸ்பெக்டர்.
4. சி.எட்வர்ட் ஜோசப், சி.பி.சி.ஐ.டி. இன்ஸ்பெக்டர்.
5. வி. எத்திராஜுலு, குன்றத்தூர் காவல் நிலைய எஸ்.ஐ.
6. எஸ். முருகன், சோமங்கலம் காவல் நிலைய கான்ஸ்டபிள்.
7. ஆர். ரவிச்சந்திரன் (எஸ்.பி.சி.ஐ.டி. கமாண்டோ கான்ஸ்டபிள்)
8. தர்மன், காஞ்சிபுரம் ஸ்பெஷல் பிராஞ்ச் கான்ஸ்டபிள்.
9. திருமதி. சந்திரா, காஞ்சிபுரம் கான்ஸ்டபிள்.
10. திருமதி. லதா கண்ணன், அரக்கோணம்.
11. செல்வி. கோகில வாணி (லதா கண்ணனின் மகள்)
12. திருமதி. சந்தானு பேகம், திருமுல்லைவாயில்.
13. டரியல்பீட்டர் (கொலைக்குழு) திருமங்கலம், சென்னை.
14. செல்வி. சரோஜாதேவி, ஸ்ரீபெரும்புதூர்.
15. முனுசாமி (முன்னாள் எம்.எல்.சி., சென்னை)
16. தனு (விடுதலைப் புலி)
17. ஹரிபாபு (கொலைக் குழுவின் போட்டோ கிராபர், சென்னை)



படிப்பகம்

www.padippakam.com

# திரு. ஜயவர்தனா மற்றும் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தொடர்பான தகவல்கள்

இலங்கை ராணுவத்தின் கூட்டுப்படை தளபதியாக இருந்தவர் சிறில் ரணதுங்கா. ஓய்வு பெற்று விட்ட இவர் "சமாதானத்தில் இருந்து போர், கிளர்ச்சியில் இருந்து பயங்கரவாதம்" என்று ஒரு புத்தகத்தை எழுதி உள்ளார் அதில் அவர் இலங்கை ராணுவத்தில் பணியாற்றிய போது ஏற்பட்ட அனுபவம் பற்றி எழுதி உள்ளார். அதன் விவரம் வருமாறு:

இலங்கை ஜனாதிபதியாக இருந்த திரு. ஜே.ஆர் ஜெயவர்த்தனா இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இந்தியாவின் உதவியை 1987ம் ஆண்டு நாடினார். இதையடுத்து இந்தியா–இலங்கை ஒப்பந்தம் ஒன்றை இருநாடுகளும் இணைந்து தயாரித்தன. அப்போது ஜெயவர்த்தனா தனது பாதுகாப்பு ஆலோசகராக அவரது மகன் ரவி ஜெயவர்த்தனாவை நியமித்திருந்தார். முப்படைகளுடன் அடிக்கடி ஆலோசனை நடத்தி ரவி வழங்கும் அறிக்கைகளைப்படித்த பிறகே ஜெயவர்த்தனா எந்த முடிவையும் எடுப்பதை வழக்கமாகக்கொண்டிருந்தார்.

1987ம் ஆண்டு ஜூலையில் இந்தியா – இலங்கை ஒப்பந்தத்தில் ஜெயவர்த்தனாவும், ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்டனர். அதற்காக ராஜீவ்காந்தி இலங்கைக்கு சென்றிருந்தார். ஒப்பந்தம் கைச்சாத்திட்டதன் பின்னர் இடம்பெற்ற இராணுவ அணிவகுப்பு மரியாதையை ராஜீவ் அவர்கள் ஏற்றுக்கொண்டபோது ராணுவ வீரரான விஜயமுனி விஜித ரோஹன டிசில்வா என்பவர் துப்பாக்கியால் ராஜீவ் காந்தியைத் தாக்கினார். ராஜீவ் சாதுர்யமாக விலகிக்கொண்டதால் துப்பாக்கியின் பின்புறப்பிடியின் அடியிலிருந்து தப்பினார். இந்த சம்பவம் அப்போது உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்பட்டது. இச்சம்பவத்தை பல நாடுகள் கண்டித்ததால் ராஜீவ் காந்தியிடம் ஜெயவர்த்தனா பகிரங்கமாக மன்னிப்பு கேட்டு வருத்தமும் தெரிவித்தார்.

இந்தியா–இலங்கை ஒப்பந்தத்திற்கு இச்சம்பவத்தால் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதற்காக ராஜீவ் காந்தி அவர்கள் இதைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் ராணுவ அணி வகுப்பின் போது அவரை சுட்டுக்கொல்ல சதி திட்டம் தீட்டப்பட்டிருந்தமை இப்போது தெரியவந்துள்ளது. ராஜீவ் காந்திக்கு ராணுவ



படிப்பகம்

அணி வகுப்பு மரியாதை வழங்கும்போது ராணுவத்தினர் வைத்திருக்கும் துப்பாக்கிகளில் குண்டுகள் இருக்கக்கூடாது ராணுவத்தினர் குண்டுகள் இல்லாத துப்பாக்கிகளை ஏந்தியவாறு தான் அணி வகுப்பில் பங்கேற்க வேண்டும் என்று பாதுகாப்பு ஆலோசகர் ரவி ஜெயவர்த்தனா தனது தந்தையிடம் கேட்டுக்கொண்டார். அதிபர் ஜெயவர்த்தனா இதை ஏற்றுக் கொண்ட போதிலும் அப்போதைய ராணுவத் தளபதியாக இருந்த லெப்டினெட் ஜெனரல் டி.ஜே.வீரதுங்கா இதை ஏற்காமல் எதிர்ப்பு தெரிவித்தார்.

துப்பாக்கியிலிருந்து குண்டுகளை அகற்றுவது படை வீரர்களின் மனநிலையைப் பாதிக்கும் படை வீரர்கள் மீதான நம்பிக்கையைத் குறைத்து விடும் என்று வீரதுங்கா தெரிவித்த தோடு குண்டுகளை அகற்ற கடுமையாக எதிர்ப்பும் தெரிவித்தார். ஆனால் ரவி ஜெயவர்த்தனாவின் ஆலோசனைப்படி குண்டுகள் அகற்றப்பட்ட துப்பாக்கியையே அணிவகுப்பு மரியாதையின் போது பயன்படுத்தினர்.

துப்பாக்கியிலிருந்து குண்டுகள் அகற்றப்பட்டதால் தான் ரோஹன டிசில்வா வேறு வழியின்றி துப்பாக்கி பிடியால் ராஜீவ் காந்தியைத் தாக்கும் சம்பவத்தை நிகழ்த்தினார். இந்த அணி வகுப்பின் போது துப்பாக்கியில் தோட்டாக்கள் இருந்திருந்தால் அந்த ராணுவ வீரர் ராஜீவ்காந்தியை சுட்டுக்கொன்றிருப்பார். ரவி ஜெயவர்த்தனா இது போன்ற ஆலோசனையை வழங்கியிருக்கா விட்டால் ராஜீவ் காந்தி இலங்கையில் படுகொலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது துப்பாக்கி சூட்டில் காயம் அடைந்திருக்கலாம்.

இப்படிப்பட்ட ஆலோசனையை ரவி வழங்கியதற்கு கூறிய காரணம் எகிப்து நாட்டில் அதிபர் அன்வர் சதாத் ராணுவ அணி வகுப்பு மரியாதையை ஏற்கையில் தான் சுட்டுக்கொல்லப்பட்டார் என்பது தான். ராஜீவ் காந்தியை துப்பாக்கியின் பிடியால் தாக்கிய ராணுவ வீரன் முக்கியமான சம்பவத்தை நாளை நிகழ்த்த உள்ளேன். ஆகவே வீட்டிற்கு உயிருடன் திரும்பி வராமல் இருக்கலாம் என தனது நண்பனிடம் ஏற்கனவே கூறி உள்ளான். இவ்வாறு அந்த புத்தகத்தில் எழுதப்பட்டு உள்ளது.

ஆனால் ஒரு சிங்கள இனத்தைச் சேர்ந்த இராணுவ வீரனால் செயற்படுத்த முடியாதுபோன படுகொலையினை பிரபாகரன் என்னும் தமிழன் நிறைவேற்றியமையே இன்று வன்னியில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவலநிலைக்கு வழிகோலியது.

www.padippakam.com

# புலிகளினால் கடத்திக் கொல்லப்பட்ட செல்வநிதி தியாகராசா

செல்வநிதி தியாகராசா ஈழத்துக் கவிஞரும் பெண்ணிலைவாதியும் ஆவார். இவர் செல்வி எனும் பெயரினால் பெரிதும் அறியப்பட்டவர். இவருக்கு சர்வதேச கவிஞர்கள் எழுத்தாளர்கள் நாவலாசிரியர்கள் கூட்டமைப்பின், (PEN) 1992 ஆம் ஆண்டுக்கான எழுத்துச் சுதந்திரத்துக்கான பன்னாட்டு விருது கிடைத்தது இவர் 1991 ஆம் ஆண்டில் யாழ்ப் பாணத்தில் கடத்தப்பட்டார். புளொட் அமைப்பின் மகளிர் பிரிவின் முன்னணித் தோழியாக செயற்பட்ட இவர் 1986ம் ஆண்டு ஆரம்பத்தில் புளொட் அமைப்பில் ஏற்பட்ட உள்முரண்பாடு மற்றும் அராஜக நடவடிக் கைகளின் காரணமாக அவ்வமைப்பிலிருந்து வெளி யேறினார்.



இவர் நாடக நெறியாளரும் நடிகையுமாவார். தோழி எனும் பெண் இலக்கிய இதழின் ஆசிரியராக செயற்பட்டார். ஈழத்து பெண் கவிஞர்களின் கவிக்குரலாக வெளியிடப்பட்ட சொல்லாத சேதிகள் என்ற தொகுப்பில் செல்வியின் கவிதைகள் வெளிவந்தன. செல்வியின் கவிதைகள் மனஓசை, மண், அரங்கேற்றம், ஓசை, நான்காவது பரிமாணம், சரிநிகர், திசை போன்ற இதழ்களிலும் வெளிவந்தன. சில கவிதைகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு தொகுப்புக்களிலும் இடம்பெற்றன. யாழ் பெண்கள் ஆய்வு வட்டம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவ அவை மற்றும் இலக்கியவட்டத்தின் உறுப்பினராகவும் இருந்தவர். இரண்டு நாடகங்களையும் எழுதியிருக்கிறார். "பூரணி இல்லம்" என்ற பெண்கள் மையத்தின் உறுப்பினராக இருந்தார். வடக்கில் நடந்த யுத்தத்தின் போது பாதிப்புக்கும் குண்டுத் தாக்குதலுக்கும் உள்ளானவர்களுக்கு நிவராண உதவிகளை இந்த மையம் செய்து வந்தது.

உலகப் புகழ்பெற்ற 'Poetry International Award' கவிதைக்கான சர்வதேச விருது செல்விக்கு சர்வதேச கவிஞர்கள் எழுத்தாளர்கள் நாவலாசிரியர்கள் கூட்டமைப்பான Poets Essayists and Novelists (PEN) அமைப்பால் வழங்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

1991 ஆகஸ்ட் 30 ஆம் நாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள அவரது வீட்டில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் கடத்தப்பட்டார். செல்வியின் விடுதலைக்காக பல சர்வதேச நாடுகள் குரல் கொடுத்தன. சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல மனித உரிமை நிறுவனங்களும் அவரது விடுதலையைக் கோரியிருந்தன. இவர் பின்னர் கொல்லப்பட்டார்.

## விடுதலைப் புலிகளின் மக்கள் தொடர்பான செயற் பாடுகள்

1990ல் இருந்து முதல் 1995 வரையான கால இடைவெளியில் நடைபெற்ற சம்பவங்களை பின்னோக்கிப் பார்த்தால் கொலை என்பது விடுதலைப் புலிகளுக்கு ஒரு தீனியாகவே இருந்தது. ஒவ்வாரு பெரும்பான்மை இன அரசியல் தலைவர்களின் கொலைகளுக்கு எதிரான பழிவாங்கும் இராணுவத்தினரின் தாக்குதல்கள் தாராளமாக நடைபெற்றன. படுகாலைகள், கைதுகள், தடுப்புக் காவல்கள், விசாரணைகள், கண்காணிப்புகள் என்றவாறாக பெருமளவிலான தமிழர்கள் துன்புறுத்தப்பட்டனர். மேற்குறிப்பிட்ட தாக்குதல்கள் பெரும்பாலானவற்றிற்கு மட்டக்களப்பிலிருந்தே முன் தயாரிப்புக்கள் செய்யப்பட்டு குண்டுதாரிகளும் அனுப்பிவைக்கப்பட்டார்கள். இங்கு புதுமை என்னவெனில் மக்களின் தலைவர்களென தம்மைத்தாமே கூறிக்கொள்பவர்களுக்கு மக்கள் எவ்வித பாதுகாப்புமற்ற நிலையில் மரணிப்பது என்பது ஒரு தேவையாகவே இருந்தது. அகதி முகாம்களின் அருகிலிருந்துகொண்டுதான் விடுதலைப் புலிகள் தமது தாக்குதல்களை மேற்கொள்வர். உதாரணமாக கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதன்விளைவு 34 அப்பாவி மக்களின் உயிர்களை பலியெடுக்க காரணமாய் அமைந்தது. அத்துடன் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது பொதுமக்கள் மத்தியில் மறைந்திருந்தே புலிகள் தமது பயங்கரவாத தாக்குதல்களை முடுக்கிவிட்டனர். அதற்கான பதில் தாக்குதல்களை இராணுவத்தினர் மேற்கொண்டபோதெல்லாம் கொல்லப்பட்டவர்கள் அப்பாவிப் பொதுமக்களாகவே இருந்தது.

இதுபோன்ற நூற்றுக்கணக்கான சம்பவங்கள் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது. மக்களின் துயரங்களுக்கும், வேண்டுகோள்களுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

அவர்கள் கொஞ்சங்கூட செவிசாய்ப்பதில்லை. விடுதலைப்புலிகளின் நெருங்கிய ஆதரவாளரொருவரான ஐரோப்பிய நாடொன்றில் வாழும் (G.R) என்பவர் இச்சம்பவங்கள்பற்றி கூறும்போது உலகளாவிய சிறந்த பிரசாரத்திற்கு ஒரேவாரகால இடைவெளியில் 1500ற்கும் 2000ற்கும் இடைப்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் ராணுவத்தினரால் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டால் தமிழீழ விடுதலையை உடன்பெற வாய்ப்பு அமையுமென குறிப்பிட்டார். இந்நிலை அவர்கள் மக்கள்மீது வைத்துள்ள அக்கறையையும், போராட்டத்தின் நோக்கத்தையும் தெளிவாக வெளிக்காட்டியது.

ஒருவேளை உணவின்றி மக்கள் நாய்களைப்போல அலைந்துதிரியவேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டவேளையில்கூட இந்தியா வழங்கிய உணவுகளையும், மருந்துப் பொருட்களையும் மக்கள் பகிஸ்கரிக்கவேண்டுமென புலிகளால் துண்டுப்பிரசுரங்கள் வினியோகிக்கப்பட்டது. நோயினால் மரணித்துக் கொண்டிருந்த குழந்தைகளை அக்கறையுடன் கவனித்துக்கொண்டிருந்த சேவையாளர்களிடம்கூட இந்திய மருந்துகளை அவர்களுக்கு கொடுக்கவேண்டாமென உத்தரவிட்டனர். இக்கட்டளையை பிறப்பித்தவர்களால் நோயினாலும் பட்டினியினாலும் வாடிய மக்களின் தேவைகளுக்கு என்ன நடவடிக்கை எடுக்கமுடிந்தது.

மூன்று ஆண்டு காலம் வடமாகாணத்தை தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக்கொண்டிருந்த விடுதலைப்புலிகள் கிழக்குமாகாண மக்களைப் புறக்கணித்ததுடன் கிழக்குமாகாணம் நீண்டகாலமாக தமிழ்தேசிய அரங்கிற்கு வெளியிலேயே இருந்தது. இந்நிலையிலும் போராட்ட அரங்கில் கிழக்குமாகாண இளம் சந்ததியினரே பலிக்கடாவாக புலிகளினால் பிரயோகப்படுத்தப்பட்டார்கள். மட்டக்களப்புத் தமிழர்களும் ஏனைய கிழக்குமாகாணத் தமிழர்களும் யாழ்ப்பாண மேலாதிக்கம் செலுத்தும் ஒரு போராட்டத்தில் பங்குகொள்ள தயக்கம்காட்டியே வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தமது ஆட்சி அதிகாரத்தை ஸ்திரப்படுத்தும் செயலைமட்டும் உறுதிசெய்த விடுதலைப்புலிகள் கிழக்குமாகாண மக்கள்பற்றி மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் செயற்பட்டனர்.

இதனால் கிழக்கிலங்கையில் இராணுவம் தங்களை மென்மேலும் பலப்படுத்தியது இதனடிப்படையில் இலங்கை இராணுவத்தினதும், அதிரடிப்படையினரதும், ஊர்காவல் படையினரதும் அட்டுளியங்களுக்கு கிழக்குமாகாணத் தமிழர்களை தாரைவார்த்துக் கொடுத்த செயலை வடமாகாண ஆயுதத் தலைமைகள்



படிப்பகம்

www.padippakam.com

உருவாக்கின. விடுதலைப்புலிகள் கட்டமைக்க நினைத்த தமிழீழ தேசம் என்பது தமிழர்களுக்கு மட்டுமேயானது என்கின்ற அடிப்படையான குறிக்கோள்களுக்கு மாற்றாகவே கிழக்குமாகாணத்தில் இனப்பிரச்சினைகள் கிளர்ந்தன. விடுதலைப் புலிகளின் தமிழீழம் என்னும் நிலப்பரப்பில் முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய இருபெரும் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை இருண்டபகுதியாகவே இருந்துவந்துள்ளது. தமிழ் தேசியவாதம் என்பது இலங்கைத் தமிழரின் தனிச்சொத்தாகவே கருதப்பட்டுவந்தது.

வரலாற்றுரீதியாக முஸ்லிம் மக்களுடனோ, மலையகத்தமிழ் மக்களுடனோ இது தொடர்புடையதாக கொண்டிருக்கவில்லை. முஸ்லிம் மக்களின் பிரச்சினையில்தான் தமிழ் தேசியவாதத்தின் பலவீனமான அம்சங்கள் தெட்டத்தெளிவாக வெளித்தோன்றின. முஸ்லிம் மக்கள் தமக்கென தனித்துவமான பொருளாதார, சமூக, அரசியல் அமைப்பினையும், கலாச்சார சிறப்பியல்புகளையும் கொண்ட சமூகமாவர். இவர்களில் பெரும்பான்மையினர் கிழக்கிலங்கையில் வாழ்வதுடன் ஏனையோர் இவர்களுடன் நெருக்கமான தொடர்புகளற்ற நிலை இருந்தாலும் அரசியல் ரீதியாக இணக்கமான நிலைப்பாட்டுடன் இலங்கை முழுவதிலும் பரவலாக வாழ்ந்துவருகிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒருங்கிணைப்பது இஸ்லாம் என்னும் மதமே தவிர தமிழ்மொழி அல்ல.

சிங்களமக்களுடன் அவர்களுக்கு வரலாற்றுரீதியான முரண்பாடுகள் இருக்கும் அதேவேளையில் தமிழருக்கு எதிரான இனக்கலவரத்தின்போதும் அவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிங்கள ஆதிக்கவர்க்கத்தினால் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டதைவிட விடுதலைப்புலிகளினால் அவர்கள் பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டார்கள். முஸ்லிம் மக்களின் உரிமைபற்றி தந்தை செல்வா அவர்களின்பின் தலைமை தாங்கிய கூட்டணியினரினதும், அனைத்து ஆயுதக்குழுக்களினதும் திட்டங்களும் கோசங்களும் வெறும் பேச்சளவில் இருந்ததேதவிர போராட்டகாலத்தில் அவர்களுடைய இலட்சியங்களை அடைவதற்கான திட்டவட்டமான திட்டங்கள் முன்வைக்கப்படவோ, அல்லது அவர்களது தேவைகளையும் உரிமைகளையும் பூர்த்திசெய்வதற்கான வழிவகைகளோ மேற்கொள்ளப்படவில்லை. முஸ்லிம்களுக்காக தமிழர்கள் தயாரிக்கும் திட்டம்தான் ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென அவர்கள் வலியுறுத்தப்பட்டனர். இதனைவிட 1985ம் ஆண்டு காலப்பகுதியிலிருந்தே



படிப்பகம்

www.padippakam.com

முஸ்லிம் மக்கள் மீதான படுகொலைகள் ஆயுதக்குழுக்களினால் கட்டவிழ்த்து விடப்பட்டது.

இந்நிலையில் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையேயான பகைமை உணர்வை மேலும் வளர்த்துச்செல்ல அன்றைய ஐ.தே.கட்சியின் தலைமையிலான இலங்கை அரசாங்கம் இச்சூழ்நிலையை வெற்றிகரமாக கையாண்டது. மோதல்களை அதிகரிப்பதற்கு முஸ்லிம் இளைஞர்களில் ஒருபகுதியினருக்கு ஆயுதங்களையும் வழங்கியது. இந்நிலையில் பிராந்தியரீதியாக வடக்கு கிழக்கு மட்டும்தான் பிளவுபட்டிருந்தது என்பதற் கில்லை இயக்கங்களுக்கிடையேயான பகைமைகள் தீவிரமுற்று அது இறுதியில் எந்த விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் ஒப்புமை காணமுடியாத அளவுக்கு விடுதலைப்புலிகள் ஒவ்வொரு குழுவாக அனைத்து இயக்கங்களையும் ஈவிரக்கமின்றி அழித்தொழிப்பதில் சென்று முடிந்தது. இந்நிலையானது தமிழர்கள் தமது மண்ணில்தான் தோல்வியுற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதல்ல ஆயுதக் குழுக்களுக்குள்ளும், குழுக்களுக் கிடையேயும் சிங்களவர்களுக்கெதிராகவும் கொடுமைகள் அதிகரித்துச்செல்ல சர்வதேசரீதியில் இலங்கை தமிழ் மக்களுக்கிருந்த ஆதரவும் சிறுகச் சிறுக பலமாக வலுவிழந்து இலங்கைத் தமிழர்கள் பயங்கரவாதிகளென மேற்கு நாடுகள் பல நமக்கு பட்டம்சூட்டின.

## இலங்கை அரசியல் வரலாற்றில் பாராளுமன்ற உறுப்பி னர்கள் அனைவருக்கும் அமைச்சுப் பதவி வழங்கிய ஐ.தே கட்சி

15.02.1989ல் இடம்பெற்ற தேர்தலில் 125 ஆசனங்களைப் பெற்ற திரு பிரேமதாசா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சியினரால் 1989 பெப்ருவரி 18ல் 22 அமைச்சர்களை உள்ளடக்கிய மந்திரிசபை அமைக்கப்பட்டு ஒன்பதாவது புதிய பாராளுமன்றம் 1989 மார்ச் 09 இல் கூட்டப்பட்டது. அதன்பின் மேற்படி மந்திரிசபை 28.03.1990ல் கலைக்கப்பட்டு மீண்டும் 30.03.1990ல் 26 பேரைக்கொண்ட மந்திரிசபை அமைக்கப்பட்டது. அதேவேளை 23 அந்தஸ்தற்ற அமைச்சர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் அந்தஸ்துடைய நீதி அமைச்சராகவிருந்த ஏ.சி.எஸ். ஹமீத் அவர்களுக்கு உயர்கல்வி



படிப்பகம்

www.padippakam.com

அமைச்சுப் பொறுப்பு, அந்தஸ்து அற்றதாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதற்கு மேலதிகமாக பிரதி அமைச்சர்கள் என்னும் நாமத்திற்குப் பதிலாக ராஜாங்க அமைச்சர்கள் என்னும் நாமத்துடன் 50 பேர் நியமிக்கப்பட்டனர். இவர்களில் சிலர் அந்தஸ்துடைய அமைச்சர்களாகவும், சிலர் அந்தஸ்து அற்ற அமைச்சர்களாகவும் இருந்தனர். பாராளுமன்றத்தில் இருந்த ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் மொத்தம் 125 உறுப்பினர்களில் 100 பேர்வரை இவ்வாறு நியமிக்கப்பட்டதனால் எஞ்சிய சிலர் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப்பிரேரணையில் கைச்சாத்திட்டனர்.

இதன்காரணமாக எஞ்சியிருந்த சிலரும் கருத்திட்ட அமைச்சர்களாக (Project) நியமிக்கப்பட்டனர். அது ஒருவகை திருப்திப்படுத்தலானதாக அமைந்தது. அதன்பின்னர் 14.03.1991ல் தமது அமைச்சரவையை மீண்டும் புதுப்பித்ததற்கமைய அந்தஸ்துடைய 24 பேரும் அந்தஸ்தற்ற 23 பேரும் நியமிக்கப்பட்டனர். அதன்பின்னர் 1993 ம் ஆண்டு ஜனாதிபதி திரு.பிரேமதாசா அவர்கள் விடுதலைப் புலிகளின் பாபு என அழைக்கப்பட்ட தற்கொலைக் குண்டுதாரியின் குண்டுக்கு பலியானதைத் தொடர்ந்து அன்று பிரதமராக இருந்த திரு.டி.பி.விஜேதுங்கா அவர்கள் ஜனாதிபதியானார். பிரதமராக திரு.ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் பதவியேற்றார். அதனைத்தொடர்ந்து 1995ல் நடைபெறவேண்டிய பொதுத்தேர்தல் 6 மாதங்கள் முன்கூட்டியே 1994 ஆகஸ்ட் 16ந் திகதி நடைபெற்றது.

## விடுதலைப் புலிகளின் தற்கொலைதாரியின் குண்டுக்குப் பலியான ஜனாதிபதி திரு ஆர்.பிரேமதாசா (01.05.1993)

இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் மே தினமான (01.05.1993ல்) விடுதலைப் புலிகளின் தற்கொலைதாரியான பாபு என்பவரால் இலங்கையின் தலைநகரான கொழும்பு ஆமர் வீதியில் வைத்து கொல்லப்பட்டார். இப்படுகொலை நிகழ்வில் மேலும் 15 பொதுமக்களும் கொல்லப்பட்டு பலர் காயமுற்றனர். இவர் பிரதமராக பதவிவகித்த காலப்பகுதியில் ஏழைகளுக்கு உதவும் நல்ல திட்டங்களை இலங்கையில் கொண்டுவந்தார். ஜனாதிபதியாவதற்கு முன்னர் இவர் 1968ம் ஆண்டு முதல் 1970ம் ஆண்டுவரை உள்ளூராட்சி அமைச்சராகவும் பின்னர் திரு ஜே.ஆர். தலைமையிலான அரசில் பெப்ரவரி 1978 தொடக்கம் மார்ச் 1989 வரையில் பிரதமராகவும் பணியாற்றினார்.



படிப்பகம்

www.padippakam.com



படுகொலை செய்யப்படுவதற்கு சில நிமிடங்களின் முன் அவர் வீதியால் பயணம் செய்தபோது பிடிக்கப்பட்ட புகைப்படம்.

திரு. பிரேமதாசா அவர்கள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை கடுமையாக எதிர்த்து வந்தார். அதற்கமைய இலங்கை ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்களுக்கும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கமைய உருவான வடகிழக்கு மாகாண சபையினை இல்லாதொழிப்பதற்கு விடுதலைப்புலிகளின் உதவியை நாடினார். இலங்கை அரசியல் வரலாற்றில் பிரேமதாசவின் இந்திய எதிர்ப்பு தீர்மானம் தவறானது என பல அரசியல் அவதானிகள் அன்று கருத்து வெளியிட்டனர். இந்நிலையில் அவரின் கனவு நிறைவேறிய நிலையில் அவரின் உயிருக்கும் புலிகள் உலைவைத்தனர்.

இவரது ஆட்சிக்காலத்தில் நாட்டின் பலபகுதிகளிலும் வீடற்ற மக்களுக்கென மாதிரிக் கிராமங்கள் பல உருவாக்கப்பட்டதற்கமைய பல்லாயிரக்கணக்கான வீடுகளும் அமைத்து வழங்கப்பட்டன. அத்துடன் பல மணிக்கூட்டு கோபுரங்களும் நிர்மாணிக்கப்பட்டது இதற்கு இவர் ஆருடத்தில் (சோதிடம்) நம்பிக்கையுள்ள நிலையில் இவரின் சோதிடர் ஒருவரின் கருதிற்கமையவே இவை நிகழ்ந்தாகக் கூறப்படுகின்றது.

தற்கொலைக் குண்டுதாரியால் கொலை செய்யப்பட்ட இவரது நினைவாக இவர் கொலைசெய்யபட்ட ஆமர் வீதியில் ஓர் உருவர் சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

திரு. பிரேமதாசா அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து திரு. டி.பி



படிப்பகம்

விஜேதுங்கா அவர்கள் மே மாதம் 7ந் திகதி ஜனாதிபதியாக பதவியேற்றார். அதனைத்தொடர்ந்து திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் பிரதமராக நியமிக்கப்பட்டார். இருந்தும் கட்சியின் கடந்தகால தலைமைகளின் சர்வாதிகார நடவடிக்கைகள் சிங்கள மக்களில் ஒருசாரார் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தமையால் கட்சியின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்த நிலையிலேயே காணப்பட்டது இந்நிலையிலேயே மாகாணசபைத் தேர்தல் 1993 மே மாதம் 17ந் திகதி நடாத்தப்பட்டது தேர்தல் முடிவுகளின்படி 7 மாகாணசபைகளில் 4 மாகாணசபைகளின் அதிகாரங்களை ஐ.தே.கட்சியும் ஏனைய மூன்று சபைகளை பொ.ஐ.ஐக்கிய முன்னணியினரும் கைப்பற்றினர்.

## திரு. பிரேமதாசா அவர்களின் படுகொலை தொடர்பான முழு விபரம்.

இந்திய அமைதிகாக்கும் படையினரின் இலங்கைக்கான பிரசன்னத்தைத் தொடர்ந்து அவர்களை வெளியேற்ற வேண்டுமென திடசங்கற்பம்பூண்ட திரு. பிரேமதாசா அவர்கள் ஜனாதிபதியாக தேர்வு செய்யப்பட்டார். அதற்கான ஒரே வழி இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கைக்கு வருகை தந்தமையை எதிர்த்து ஆயுத நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திய விடுதலைப் புலிகளை தமது நண்பனாக இணைத்துக்கொள்வதே அதற்கான இலகுவான வழியென திரு பிரேமதாசா அவர்கள் கருதினார்கள். இந்நிலையிலேயே திரு. பிரேமதாசா அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கு மிடையிலான உடன்படிக்கை ஒன்று (26.04.1989ல்) உருவாக்கப்பட்டது.

பிரேமதாசா – புலிகள் உடன்படிக்கை உருவானதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் கொழும்பில் ஆயுதத்துடன் நடமாடுவதற்கான அனுமதியும் அவர்களுக்கு கிடைத்தது. அதற்கமையவே தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம், முன்னாள் யாழ் பாராளுமன்ற உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் கொலையினை புலிகள் இலகுவாக மூன்று மாதகால இடைவெளியில் (13.07.1989ல்) செய்து முடித்தனர். அதேவேளை விடுதலைப் புலிகள் தமது பழிவாங்கும் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக ஆயுதப்பயிற்சிபெற்ற பலரை

www.padippakam.com

கொழும்பில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரச ஆதர வாளர்களின் உதவியுடன் செய்து முடித்தனர். அதற்கமைய திரு பிரேமதாசா அவர்களின் தனிப்பட்ட வாசஸ்தலமான (சுச்சரித்த) என்னும் பகுதியில் பாபு என அழைக்கப்பட்ட புலிகளின் தற்கொலைதாரியூர் வசிப்பதற்கான ஒழுங்குகளை புலிகள் மேற்கொண்டிருந்தனர்.

நாட்டில் ஏற்கனவே இருந்த அசாதாரண நிலைமைகாரணமாக தொழிலாளர் தினமான மேதினம் சில வருடங்களாக அனுஸ்டிக்கப்படாமல் தவிர்க்கப் பட்டிருந்த நிலையில் விடுதலைப் புலிகளுக்கும், பிரேமதாசாவிற்கும் இடையிலான உடன்படிக்கையைத் தொடர்ந்து நடத்தமுடியுமெனக் கருதிய பிரேமதாசா அவர்கள் மே தினத்தை முன்னிட்டு கொழும்பு நகரில் 01.05.1993 அன்று ஒரு ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த ஊர்வலத்துக்கு திரு பிரேமதாசா அவர்கள் தலைமை தாங்கி ஒரு 'ஜீப்' வண்டியில் சென்றார். நகரின் மையப்பகுதியான ஆமர் வீதியில் பகல் 12.45 மணி அளவில் ஊர்வலம் சென்றுகொண்டு இருந்தது. அப்போது உடலில் வெடிகுண்டை கட்டிக்கொண்டு சைக்கிளில் வந்த மேற்குறிப்பிட்ட பாபு என்பவன் பிரேமதாசாவின் 'ஜீப்' மீது மோதுவதற்காக நெருங்கினான். பாதுகாப்பு படையினர் அவனை தடுத்து நிறுத்தியபோது அவன் தன் உடலில் கட்டியிருந்த சக்தி வாய்ந்த குண்டை வெடிக்கச் செய்தான்.

குண்டு வெடிப்பில் சிக்கி பிரேமதாசாவின் உடல் சின்னாபின்னமாகி மரணம் அடைந்தார். குண்டை வெடிக்கச் செய்த மர்ம மனிதனாகக் கருதப்பட்ட பாபு தலை துண்டிக்கப்பட்ட நிலையில் உடல் சிதைந்து பலியானான். குண்டு வெடிப்பில் பிரேமதாசாவின் பாதுகாவலர்கள் 6 பேர் உட்பட 40 பேர் பலியானார்கள். இவர்களில் 16 பேரின் உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவிற்கு சிதறிப்போய்விட்டன. 60க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தார்கள்.

குண்டு வெடித்த ஆமர் வீதி ஒரே ரத்தக் களரியாக காட்சி அளித்தது. எங்கு பார்த்தாலும் பீறிட்டு அடித்த ரத்தமும், மனித தசைகளுமாக காணப்பட்டன. பிரேமதாசாவுக்கு பின்னால் கார்களில் வந்து கொண்டிருந்த அமைச்சர்கள் உயிர் தப்பினார்கள். இந்நிலையைத் தொடர்ந்து இலங்கை முழுவதும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டு, கொழும்பு நகரில் ராணுவத்தினர்



படிப்பகம்

www.padippakam.com

நிறுத்தப்பட்டனர். அதன் பிறகே தொலைக்காட்சி மூலம் பிரேமதாசாவின் படுகொலைபற்றிய செய்தி அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பிரதமராக இருந்த திரு. டீ.பி விஜயதுங்கே அவர்கள் தற்காலிக அதிபராக (ஜனாதிபதி) நியமிக்கப்பட்டார். உடனடியாக அவர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

பிரேமதாசா கொலை செய்யப்பட்ட இடத்திலேயே கொலைகாரனின் துண்டித்த தலை கைப்பற்றப்பட்டது. அந்த தலை எந்தவித சேதமும் இல்லாமல் இருந்தது. கண்கள் மூடிய நிலையிலும், வாய் திறந்த நிலையிலும் இருந்தது. தூங்கும் ஒரு மனிதன் போல அந்த தலை காணப்பட்டது. துப்பறியும் போலீசார் அந்த தலை படத்தை பத்திரிகைகளில் வெளியிட்டனர். இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியில் அந்த தலை காண்பிக்கப்பட்டது. போலீசாரின் இந்த நடவடிக்கை மூலம் கொலையாளி யார் என்ற அடையாளம் தெரிந்து விட்டது.

பிரேமதாசாவின் வீடு கொழும்பு நகரில் சுச்சரித்த என்ற பகுதியில் இருந்தது. கொலையாளியும் அதே பகுதியில் 2 ஆண்டுகளாக வசித்து வந்தவன் என்பது தெரியவந்தது. கொலையாளியின் பெயர் பாபு. இவன் ஹோட்டல் ஒன்றில் பகுதி நேர வேலை பார்த்து வந்தான். பிரேமதாசாவின் வீட்டில் இருந்து சில நூறு மீட்டர் தூரத்தில் உள்ள ஒரு வீட்டில் பாபு தங்கியிருந்தான். அந்த வீட்டின் சொந்தக்காரரான ஹோட்டல் அதிபர் ஒருவரும், பக்கத்து வீட்டுக்காரரும் பாபுவை அடையாளம் காட்டினார்கள். கொலையாளி பாபுவின் கழுத்தில் சயனைட் குப்பியுடன் கூடிய சங்கிலி இருந்தது. இதனால் அவன் விடுதலைப்புலிகளின் தற்கொலைதாரி என்பது நிரூபணமாகியது. அதேவேளை பிரேமதாசாவின் கொலைக்கும் தங்களுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று விடுதலைப்புலிகள் வழமைபோல் அறிவித்தனர்.

## கொழும்பு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள்.

அதன்பின்னர் (17.05.1993ல்) இடம்பெற்ற மேல் மாகாண சபைக்கான தேர்தலில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு.கட்சியினரும், திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் தலைமையிலான ஐக்கிய சோசலிஸ முன்னணியினரும் இணைந்து (P.A) பொதுஜன ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் மேற்படி தேர்தலில்



படிப்பகம்

களமிறங்கினர். தேர்தல் முடிவுகளின்படி பொதுஜன ஐக்கிய முன்னணியினர் (17) ஆசனங்களையும், ஐ.தே.கட்சியினர் (16) ஆசனங்களையும், திரு லலித் அத்துலத் முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் (10) ஆசனங்களையும் பெற்றதற்கமைய கொழும்பு மாகாண முதலமைச்சராக திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் பதவியேற்றதற்கமைய இலங்கையின் முதலாவது பெண் முதலமைச்சர் என்னும் பெருமையினையும் அவர் தமதாக்கினார்.

| கட்சிகள் | Votes | % | Seats |
|---|---|---|---|
| பொ.ஜ ஐக்கிய முன்னணி | | | 17 |
| ஐ.தே.கட்சி | | | 16 |
| ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி | | | 10 |
| | | | 0 |
| | | | 43 |

அதனைத் தொடர்ந்து திரு.பிரேமதாசா அவர்களால் ஏற்கனவே முன்வைக்கப்பட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டமொன்றினை (Welfare policies) பாராளுமன்றத்தில் யூன் மாதம் 24ந் திகதி சமர்ப்பித்து நிறைவேற்றுவதற்கு திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான அரசாங்கம் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது 111 வாக்குகள் எதிராகவும் 71 வாக்குகள் ஆதரவாகவும் கிடைத்ததற்கமைய தீர்மானம் தோல்வியடைந்தது. அதனைத்தொடர்ந்து ஜனாதிபதி திரு.டி.பி.விஜேதுங்கா அவர்களால் பாராளுமன்றக் கலைப்பு அறிவிக்கப்பட்டு யூலை மாதம் 4ந் திகதி முதல் 11ந் திகதிவரை நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டு பொதுத்தேர்தலுக்கான திகதி 1994 ஆகஸ்ட் 16 என அறிவிக்கப்பட்டது.

ஐ.தே.கட்சியினரின் 17 வருடகால ஆட்சி மேற்படி 17 வருடகாலத்தில் 1983ம் ஆண்டு நடாத்தவேண்டிய பாராளுமன்றப் பொதுத் தேர்தலை நடாத்தாது சர்வஜன வாக்கெடுப்பு என்னும் பெயரில் (22.12.1982ல்) தேர்தல் ஒன்றினை நடாத்தியதன் மூலம் மேலும் ஏழு வருடகாலம் (1989வரை) பாராளுமன்றத்தின் கால எல்லையினை நீடித்தனர் (1977–1994) முடிவுபெறுகின்றது. இந்த இடைப்பட்ட காலத்தில் இனப்பிரச்சினைக்கான உறுதியான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளாத ஐ.தே.கட்சியினரின் ஆட்சியில் ஏராளமான பாதுகாப்புப் படையினரும் அப்பாவித் தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களும் படுகொலை செய்யப்பட்டதுடன், இலங்கைக்கும்,

www.padippakam.com

இந்தியாவிற்கும் இடையிலான உறவு முழுமையாக சிதைவடைகின்றதுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் ஆயுத அமைப்பினரும் பலமடைந்தனர்.

## பத்தாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் (16.08.1994) மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 10.945.065

திருமதி சந்தரிகா குமாரணதுங்க அவர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் பின்வரும் அரசியல் கட்சிகளுடன் கூட்டணி ஒன்றினை அமைத்திருந்தார். அத்துடன் இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன்னிறுத்தி சிங்களமக்கள் மத்தியில் பிரச்சாரங்களையும் மேற்கொண்டார். தமிழ் மக்களுக்கு பிரச்சினை இருக்கின்றது அதற்கு நிலையான தீர்வு ஒன்றினை ஏற்படுத்த வேண்டுமென்பதில் முதன்முதலாக சிங்கள மக்கள் மத்தியில் பிரச்சாரங்களை முன்வைத்த ஒரேயொரு அரசியல்வாதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களாகும். அதற்கான ஆணையினை தமக்கு வழங்குமாறே அவர் சிங்கள மக்களை வேண்டினார்.

கூட்டணியினை அமைத்த கட்சிகள்– ஸ்ரீ.ல.சு.கட்சி, ல.ச.சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்டட் கட்சி (மொஸ்கோ) ஸ்ரீ.ல.மக்கள் கட்சி (வை.பி சில்வா அணி) ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ், இ.தொ.கா (செல்லச்சாமி அணி) நவ சமசமாஜக் கட்சி (வாசு அணி) இவற்றுடன் இலங்கை தோட்ட தொழிலாளர் காங்கிரஸ் ஆகியனவும் கூட்டுச் சேர்ந்தன. அதற்கமைய யாழ் மாவட்டம் தவிர்ந்த 21 மாவட்டங்களிலும் (246) வேட்பாளர்களை நிறுத்தினார். தேர்தல் முடிவுகளுக்கமைய தனது கட்சியின் சார்பில் (105) உறுப்பினர்களைப் பெற்றநிலையில் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் (7) பிரதிநிதிகளையும் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் (01) உறுப்பினர் தெரிவான திரு. பெ. சந்திரசேகரன் மற்றும் யாழ் மாவட்டத்தில் திரு டக்ளஸ் அவர்களின் தலைமையிலான (ஈ.பி.டி.பி) அமைப்பில் தெரிவான (9) உறுப்பினர்களின் ஆதரவினையும்பெற்று 225 உறுப்பினர்களை உள்ளடக்கிய பாராளுமன்றத்தில் (113) உறுப்பினர்களுடன் (19.08.1994ல்) ஆட்சியமைத்தார்.

ஈ.பி.டி.பியினரை அரசாங்கத்துடன் இணையாது அவர்களின் ஆதரவினை மட்டும் பெற்ற நிலையிலேயே அரசாங்கம் அமைக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# பத்தாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள். (16.08.1994ல்)

| போட்டியிட்ட அரசியல் கட்சிகள் | வாக்களித் தவர்கள் | விகிதம் | தெரிவான உறுப்பினர்கள் | தேசியப்பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பொ.ஐ.மு.கூட்டணி ஸ்ரீ.ல.சு கட்சி ல.ச.சமாஜக் கட்சி தேச விடுதலை மக்கள் முன்னணி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 3,887,823 | 48.94% | 91 | 14 | 105 |
| ஐ.தே கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | 3,498,370 | 44.04% | 81 | 13 | 94 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 10,744 | 0.14% | 09 | 09 | |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 143,307 | 1.80% | 06 | 01 | 07 |
| த.வி.கூட்டணி | 132,461 | 1.67% | 04 | 01 | 05 |
| புளொட் (D.P.L.F) | 38,028 | 0.48% | 03 | 0 | 03 |
| மக்கள் விடுதலை முன்னணி | 90,078 | 1.13 | 01 | 0 | 01 |
| மலையக மக்கள் முன்னணி | 27,374 | 0.34 | 01 | 0 | 01 |

பத்தாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெற்று மூன்று மாதகால இடைவெளியில் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் (09.11.1994) நடாத்தப்பட்டது. இத்தேர்தலின்போது கொழும்பு மத்திய தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான ஜனாப். எம். .எச் முகம்மது அவர்கள் ஐ.தே.கட்சியின் பிரச்சார மேடைகளில் அன்றைய விதவையான திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களுக்கு வாக்களிக்கக்கூடாது எனவும் ஒரு விதவை நாட்டின் தலைவியாக தெரிவாகும் பட்சத்தில் நாடு பாரிய அழிவினை எதிர்நோக்குமெனவும் தெற்கின் பிரதான நகரங்களில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரங்களில் கேவலமான பிரச்சாரங்களை முன்னெடுத்தார். அதேவேளை திரு காமினி திசாநாயக்க அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் (24.10.1994ல்) படுகொலைசெய்யப்பட்டதும் அவரின் விதவை மனைவியான திருமதி ஸ்ரீமா திசாநாயக்காவை ஜனாதிபதி வேட்பாளராக (26.10.1994ல்) ஐ.தே.கட்சியினர் நிறுத்தியபோது மௌனமாகினார்.

1994 ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீமணி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (D.U.N.F) கட்சியைச்சேர்ந்த பலர்



படிப்பகம்

www.padippakam.com

பிளவுபட்டு ஐ.தே கட்சியில் ஒருசாராரும் பொ.ஐ.ஐக்கிய முன்னணியில் மறுசாராரும் இணைந்ததைத்தொடர்ந்து திருமதி சந்திரிகாவின் கரங்கள் பலமடைந்தன இந்நிலையில் ஐ.தே கட்சியினரின் கடந்தகால ஊழல் சம்பவங்களையும், அரசியல் துஸ்பிரயோகத்தையும் அம்பலப்படுத்திய சந்திரிகா ஐ.தே கட்சியினரின் ஆட்சியின்போது மேற்கொண்ட சூரியகந்த போன்ற மனிதப்படுகொலைகளின் புதைகுழிகளை தாமே தலைமைதாங்கி பத்திரிகையாளர்களுடன் சென்று இரகசியமாக தோண்டி அம்பலப்படுத்தினார். இச்சம்பவம் நாடெங்கிலும் தீவிரமாகப்பரவியது அதனால் பெரும்பாலான பத்திரிகைகள் சந்திரிகாவின் கட்சிக்கு பெரும் பிரச்சாரத்தை செய்த அதேவேளை மாற்றுப்பத்திரிகைகளும் ஆட்சிமாற்றம் அவசியமென வற்புறுத்தின அதுமட்டுமன்றி முதலாளித்துவ தலைமையை தோற்கடித்து இடதுசாரி அரசாங்கமொன்றை ஆட்சிபீடம் ஏற்றவேண்டுமெனவும் நேரடியாக பொ.ஐ.ஐக்கிய முன்னணியினரை ஆதரித்தனர்.

## 1994 - 2000 த.வி. கூட்டணி

| மாவட்டம் | த.வி.கூ பெற்ற வாக்குகள் | விகிதம் | மொத்த வாக்காளர்கள் | தெரிவான உறுப்பினர்கள் |
|---|---|---|---|---|
| மட்டுநகர் | 7,651,643 | 95% | 261,898 | |
| ஜோசப் பரராஜசிங்கம் | 43,350 | 24.90% | | 01 |
| பொன் செல்வராசா | 17,450 | 10.02% | | 01 |
| கே துரைராசசிங்கம் | 15,974 | 9.18% | | 01 |
| திருகோணமலை | | | 184,090 | |
| ஏ.தங்கத்துரை | 22,409 | 18.68% | | 01 |
| நீலன் திருச்செல்வம் | தேசியப்பட்டியல் | | | 01 |
| மொத்த உறுப்பினர்கள் | | | | 05 |

## திரு. டக்ளஸ் தேவானந்தாவின் அரசியல் பிரவேசம்

இந்தவேளையில் ஈ.பி.ஆர்.எல் அமைப்பின் தள இராணுவப் பொறுப்பாளராக இருந்த திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது தலைமையுடன் முரண்பட்டு வெளியேறியிருந்தார். அதேவேளை தனது முன்னாள் அமைப்பான ஈ.பி.ஆர்.எல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் அடிப்படையில் ஜனநாயகப் பாதைக்கு திரும்பியிருந்தது. இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இருந்து வெளியேறி தனிமைப்பட்டிருந்த அவர் 1989ல் இலங்கை திரும்பினார்.



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையில் அப்போது ஆட்சியிலிருந்த திரு. பிரேமதாசா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சி அரசுடன் ஒருசில பேச்சுவார்த்தைகளை



மேற்கொண்டு (ஈழமக்கள் ஜனநாயக் கட்சி) ஈ.பி.டி.பி என்னும் அமைப்பினை பதிவு செய்தார். அதனடிப்படையில் 1994ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் போட்டியிட்டார் தேர்தல் முடிவுகளின்படி (10,749) வாக்குகளைப்பெற்ற அவரின் கட்சி (9) உறுப்பினர்களைப் பெற்றது

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | பிரதிநிதி |
|---|---|---|
| சுயேச்சைக்குழு | | |
| திரு டக்ளஸ் தேவானந்தா | 10,749 | 09 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 2098 | 01 |
| ஈ.பி.ஆர்.எல்.எப் | 263 | 00 |

தேர்தல் முடிவுகளின்படி 9 பிரதிநிதிகளைப் பெற்றுக்கொண்ட திரு.டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையிலான சுயேச்சைக்குழுவினர் அரசாங்கத்துடன் இணையாது அதேவேளை அரசாங்கத்திற்கு ஆதரவான செயற்பாடுகளுடன் பாராளுமன்றத்தில் செயற்பட்டனர். அதனைத்தொடர்ந்து திருமதி சந்திரிகா அவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடைந்ததும் இலங்கை ராணுவத்தினருக்கு திரு டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டிய தேவை கட்டாயமாக்கப்பட்டது. இந்நிலையில் ஊர்காவற்துறை பிரதேசத்தை தமது முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்து நிர்வாக இயந்திரத்தை பலப்படுத்திய ஈ.பி.டி.யினர் அரசபடைகளுடன் இணைந்து புலிகளுக்கெதிரான செயற்பாடுகளையும் தம்மை (ஈ.பி.டி.பி) அரசியல்ரீதியாக பலப்படுத்தக்கூடிய செயற்பாடுகளையும் மேற்கொண்டனர் இவர்களின் அரசியல் நடவடிக்கைகளின் மூலம் யாழ் குடாநாட்டில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த மக்களின் அன்றாட அத்தியாவசிய தேவைகளான உணவு, உடை, மருந்துப் பொருட்கள் என்பனவும் ஏனைய நாளாந்த பாவனைப்பொருட்களனைத்தும் தேவையான அளவு பெறக்கூடியதான ஓர் நிலை உருவாக்கப்பட்டு சில வருடங்களாக சொல்லொண்ணாத் துயரங்களுக்கு உட்படுத்தப்பட்டிருந்த மக்களுக்கு ஆறுதல் அளிப்பதற்கு வகைசெய்தனர்.



படிப்பகம்

இந்நிலையில் ஏனைய அரசியல் கட்சிகளும் யாழ் குடாநாட்டிற்குள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு வசதிகள் உருவானது. ராணுவத்தினரின் கட்டுப்பாடு குடாநாட்டிற்குள் பலப்படுத்தப்பட்டமையால் குடாநாட்டைவிட்டு விடுதலைப்புலிகள் வெளியேறவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டார்கள். இக்காலகட்டத்தின்போது பொதுமக்கள் பெரும்பாலான வர்களின் ஆதரவு (ஈ.பி.டி.பி) யினரின்பக்கம் அதிகரித்திருந்ததாக செய்திகள் வெளிக்காட்டின. இந்நிலைமையை தமக்கு சாதகமாக்கிக்கொள்ள பல வருடங்களாக குடாநாடிட்டிற்குள் செல்லாதிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது அரசியல் நடவடிக்கைகளை அங்கு ஆரம்பித்தனர். படைகளின் நிலைகளைப் பலப்படுத்தியதுடன் மக்கள் மத்தியிலும் ஓரளவு நன்மதிப்பைப்பெற்ற சந்திரிகா அவர்களின் அரசு உள்ளூராட்சித் தேர்தலை அங்கு நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் இக்கால கட்டத்தின்போது திருமதி சந்திரிகா அவர்களுக்கும் கூட்டணியினருக்குமான உறவுகள் சற்று திருப்திகரமானதாகவே அமைந்திருந்தது.

அதற்கமைய (29.01.1998.) உள்ளூராட்சித்தேர்தல் அங்கு நடாத்தப்பட்டது இத்தேர்தலின்போது ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) தமிழர் விடுதலைக்கூட்டணி (ரீ.யூ.எல்.எப்.) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (ரெலோ) மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய நான்கு கட்சிகளும் தேர்தலில் போட்டியிட்டன. தேர்தல் முடிவுகளின்படி த.வி.கூட்டணியினர் யாழ் மாநகர சபையில் பெரும்பாலான இடங்களைக் கைப்பற்றியதற்கமைய யாழ் மாநகர சபையின் முதல்வர் பதவி கூட்டணியின் வேட்பாளரான திருமதி. சரோஜினி யோகேஸ்வரன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அவர் பதவியேற்று ஒரு மாத காலப்பகுதியிலேயே அவரை பதவியிலிருந்து விலகுமாறு விடுதலைப் புலிகளினால் பல தடவைகள் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது, அவர்களின் மிரட்டல்களுக்கு அடிபணிய அவர் மறுத்துவிட்டார். இந்நிலையில் 1998 மே மாதம் 17ந் திகதி புலிகளின் தற்கொலைக் குண்டுக்குப் பலியாக்கப்பட்டு கொல்லப்பட்டார். இவர் ஏற்கனவே புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் பாராளுமன்ற உறுப்பினரான திரு. யோகேஸ்வரன் அவர்களின் மனைவி என்பது குறிப்பிடத்தக்கது. அதனைத்தொடர்ந்து அவரின் வெற்றிடத்திற்கு திரு பொன்னுத்துரை சிவபாலன் என்பவர் நியமிக்கப்பட்டார் அவரும் நான்கு மாதங்களின்பின்னர் (11.09.1998ல்) யாழ் மாநகரசபை

www.padippakam.com

மண்டபத்திற்குள் வெடிகுண்டுவைத்து கொல்லப்பட்டார். இவருடன் மேலும் 19 ஊழியர்கள் பொதுமக்கள் சிலர் உட்பட கொல்லப்பட்டனர். மேற்படி படுகொலையுடன் யாழ் மாநகர முதல்வர்கள் (3) மூவர் விடுதலைப்புலிகளின் ஆயுதவெறிக்குப் பலியாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாடு விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டதும் (29.01.1998ல்) வடமாகாணத்தில் அமைந்துள்ள 17 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடாத்தப்பட்டது. தேர்தல் முடிவுகளுக்கமைய பின்வரும் புள்ளிவிபரங்களின்படி சபைகள் கைப்பற்றப்பட்டன

| | | |
|---|---|---|
| ஈ.பி.டி.பி | 37.242 | 11 சபைகள் |
| புளொட் | 25.283 | 03 சபைகள் |
| ஈ.பி.ஆர்.எல்.எப் | 10.012 | 0 சபைகள் |
| த.வி.கூட்டணி | 6.361 | 02 சபைகள் |
| ரெலோ | 5.727 | 01 சபைகள் |
| சுயேச்சை | 917 | 0 சபைகள் |



படிப்பகம்

www.padippakam.com

# குமார் பொன்னம்பலம் - சந்திரிக்கா - அஷ்ரஃப்
# 1994 - 2000

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

## 1994 - 2000 திரு குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ்

1989ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தோல்விகண்ட திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் 1994ம் ஆண்டுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு தயார்படுத்திய நிலையில் மாவட்ட அடிப்படையில் நடைபெறும் பொதுத் தேர்தலில் 141,000 தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் மாவட்டம் என்பதாலும் தாமும் பலவருடகாலமாக அங்கு வாழ்ந்து வருவதாலும் தமக்கு வெற்றிகிடைக்கும் என்னும் நம்பிக்கையுடன் போட்டியிட்டார். இந்நிலையிலும் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களின் அரசியல் சிந்தாந்தத்தை அம்மாவட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளாமையால் அத்தேர்தலிலும் 9251 வாக்குகளை மட்டும்பெற்று தோல்வியையே தழுவினார். பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்றை எந்தவகையிலாகுதல் கைப்பற்ற முடியுமென்னும் நோக்குடன் அவரால் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வி கண்டநிலையில் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்தும் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தினார்.

அதன் ஆரம்ப நடவடிக்கையாக உள்நாட்டு பத்திரிகைகளின் மூலம் அறிக்கைகள் விடுவதிலும் கருத்தரங்குகளில் அவர்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதையும் ஆரம்ப நடவடிக்கையாக மேற்கொண்ட திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் விடுதலைப்புலிகள் மத்தியில் செல்வாக்குபெற ஆரம்பித்தார். அதனைத்தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கையாக புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழ் மக்கள் வாழும் ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் பயணங்களை மேற்கொண்டு விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக அவர்களின் அரசியல் நிலைப்பாடுகளுக்கும் போராட்ட நடவடிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து அப்போராட்டத்திற்கு தமிழ் மக்களின் ஆதரவினை பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் தாயகத்திலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகட்கும் புலம்பெயர்ந்தவர்களில் ஒருசாராரினால் அவர் பெரிதும் கவரப்பட்டார். இருந்தும் அவரின் பிரச்சாரங்கள் தொடராத வகையில் (05.01.2000)ல் கொழும்பில் வைத்து அவர் படுகொலை செய்யப்பட்டார்.

www.padippakam.com

# ஜனாதிபதித் தேர்தல் (09.11.1994)

| வேட்பாளர்கள் | அரசியல் கட்சி | வாக்களித்தவர்கள் | விகிதம் |
|---|---|---|---|
| திருமதி. சந்திரிகா குமாரணதுங்க திரு காமினி திசாநாயக்க, அவரின் படுகொலையைத் தொடர்ந்து அவரின் மனைவி திருமதி வஜீரா | பொ.ஜ.ஐ.முன்னணி | 4,709,205 | 62.28% |
| ஸ்ரீமதி திசாநாயக்க | ஐ.தே.கட்சி | 2,715,283 | 35.91% |
| திரு.ஹட்சன் சமரசிங்க | சுயேச்சை | 58,886 | 0.78% |
| திரு ஹரிச்சந்திரா விஜேதுங்க | சிமஹா.சம் | | |
| | பூமி புத்ராய | 32,651 | 0.43% |
| திரு ஏ.ஜே ராஜசிங்க | சுயேச்சை | 22,752 | 0.30% |
| திரு ஜி.ஏ.நிஹால் | ஸ்ரீ.ல.மு அணி | 22,749 | 0.30% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | | 7,561,526 | 70.52% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | | 151,706 | |
| செல்லுபடியான வாக்குகள் | | 7,561,526 | |

மேற்படி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் ஐ.தே.கட்சியின் ஜனாதிபதியாக ஏற்கனவே பணியாற்றிய திரு பிரேமதாசா அவர்கள் இந்திய – இலங்கை உடன்படிக்கையினை செயற்படுத்தாது தடைசெய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். அதன் பிரதிபலன் இந்திய அமைதிகாக்கும் படையினர் (1115) பேரின் உயிர்களைப் பலிகொண்டது. அத்துடன் இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையிலான இராஜதந்திர உறவுகளில் விரிசல் ஏற்பட்டது. காலப்போக்கில் அதனை நிவர்த்தி செய்யும் பணியினை மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கி இரு நாடுகளுக்குமிடையில் சுமுகமான உறவினை திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் மேம்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து (09.11.1994ல்)ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. அத்தேர்தலில் ஐ.தே.கட்சியின் சார்பில் திரு காமினி திசாநாயக்கா அவர்களும், பொ.ஐ.முன்னணியின் சார்பில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களும் போட்டியிட்டனர் தேர்தல் பிரச்சார வேளையில் (4.10.1994ல்) விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுதாரியால் திரு காமினி திசாநாயக்கா அவர்களும், ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் திரு காமினி விஜேசேகரா, ஓ.சி அபே குணசேகரா ஆகியோரும் மேலும் 54 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் அவ்வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட வேண்டிய திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் அச்சம் காரணமாக சம்மதிக்காத நிலையில் காமினி திசாநாயக்கா அவர்களின் மனைவியான திருமதி வஜீரா ஸ்ரீமா திசாநாயக்கா அவர்கள் இரு நாட்களில் அதாவது (ந் திகதியே)நியமிக்கப்பட்டடார்.

இத்தேர்தலில் வெற்றிபெறும் நோக்குடன் மரணமடைந்த திரு. காமினி திசாநாயக்கா அவர்களின் பூதவுடலை (30.10.1994வரை) அஞ்சலிக்காக என்னும் பெயருடன் அடக்கஞ்செய்யாது வைத்திருந்தனர். எதுஎவ்வாறாயினும் ஏற்கனவே ஜனாதிபதியாக தெரிவானவர்கள் அனைவரையும்விட அதிகப் படியான வாக்குகளைப் பெற்று திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் வெற்றியீட்டினார்.

1. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா அவர்களுக்குமிடையிலான பேச்சுவார்த்தை (3.10.1994).

2. உடன்படிக்கை கைச்சாத்து (3.01.1995) உடனடி நிதியுதவி 835 மில்லியன் அமெரிக்க டொலர்

14 வாரங்களாக கடைப்பிடிக்கப்பட்டு வந்த யுத்த நிறுத்தம் (19.04.1995ல்) திருகோணமலை கடற்படைத் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த இரு போர்க் கப்பல்களுக்கு விடுதலைப் புலிகள் குண்டுத் தாக்குதல் நடத்தியதன் மூலம் 11 கடற்படையினர் கொல்லப்பட்டு 22 பேர் காயமுற்றநிலையில் இதன் எதிர் நடவடிக்கையை மேற்காண்ட இராணுவத்தினரின் வன்முறையில் தமிழ் மக்கள் 29 பேரும் கொல்லப்பட்டதற்கமைய யுத்தநிறுத்தம் முடிவுற்றது. இந்நிலையிலும் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான தீர்வுத்திட்டம் திரு. நீலன் திருச்செல்வம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு திருமதி சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா அவர்களால் ஏற்றுக்கொள்ப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்தின் சுருக்கமான பகுதியை இங்கு அவதானிப்போம்.

•



படிப்பகம்

www.padippakam.com

# திரு.நீலன் திருச்செல்வம் அவர்களினால் தயாரிக்கப்பட்டு, திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தின் சுருக்கம்.



1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி புதிய தீர்வுத்திட்டத்திற்கான யாப்பின் முன்மொழிவு வெளியிடப்பட்டது. அத்திட்டத்தினை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினரும், பௌத்த மதகுருமாரும் எதிர்த்தமைக்கமைய அதன்பின்னர் அவற்றில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 1996 ஜனவரி மாதம் 16ந் திகதி மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது இத்தீர்வுத் திட்டங்களை ஐ.தே.கட்சியும் சந்திரிகாவின் அரசாங்கத்தில் அங்கம்வகித்த சிலரும்கூட பலமாக எதிர்த்ததால் மீண்டும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 2000 ஆகஸ்ட் மாதம் 3ந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. முதலாவது சமர்ப்பிக்கப்பட்ட தீர்வு யோசனையை தமிழ் கட்சிகள் அனைத்தும் ஆதரித்தன. பின்னர் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு இறுதியாக முன்வைக்கப்பட்ட யோசனையை தமிழ் கட்சிகள் நிராகரித்த அதேவேளை ஐ.தே.கட்சியும் தமிழ் மக்களுக்கு கூடிய அதிகாரம் வழங்குவதாக காரணங்காட்டி அத்திட்டத்திற்கு ஆதரவு வழங்க முடியாதென சபையிலிருந்து வெளியேறினர். இனப்பிரச்சினைத் தீர்விற்காக முன்வைக்கப்பட்ட அரசியல் யாப்பின் சுருக்கம் பின்வருமாறு அமைந்தது.

இலங்கை இறைமைகொண்ட ஒரு சுதந்திரக்குடியரசு என்பதுடன் இலங்கைக் குடியரசினால் கலைக்கப்பட முடியாத பிராந்தியங்களின் ஒன்றியமாக அமைக்கப்படவிருக்கும் பிராந்தியங்கள் இருத்தல் வேண்டும். இதன்மூலம் இலங்கை ஒரு ஒற்றையாட்சி அரசு அல்ல என்பதை தெளிவுபடுத்துவதுடன் பல பிராந்தியங்களின் ஒன்றியம் எனக்குறிப்பிடுவதால் ஒரு சமஸ்டிக்கான அடிப்படை அம்சம் ஒன்றையும் தெளிவுபடுத்துகின்றது.

1978ம் ஆண்டின் இரண்டாவது குடியரசு யாப்பின் 16வது திருத்தம் சிங்களம் தமிழ் ஆகிய இருமொழிகளையும் உத்தியோக மொழிகளாகப்



படிப்பகம்

www.padippakam.com

பிரகடனப்படுத்திய போதிலும் அது யாப்பில் ஏற்படுத்தப்பட்ட ஒரு திருத்தமாகவே அமைந்தது ஆனால் சந்திரிகா அரசின் 32வது உறுப்புரை குடியரசின் தேசியமொழிகள் சிங்களமும் தமிழும் ஆங்கிலமுமென குறிப்பிடுகின்றது.

தேசிய அல்லது பிராந்திய சேவைக்கு ஆட்சேர்ப்புப் பரீட்சைக்கு சிங்களம் தமிழ் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் இலங்கைப்பிரஜைகள் அனைவரும் தோற்றுவதற்கு உரித்துடையவர்களென குறிப்பிடுகின்றது அத்துடன் நீதிமன்ற மொழிவிடயத்தில் சிங்களம் தமிழ் ஆகியவை நாடுபூராகவும் அமுல் படுத்தப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மலையக மக்களின் பிரஜாவுரிமை சம்பந்தமாக 1964ம் ஆண்டு 30ம் திகதியிலிருந்து இலங்கைக் குடியரசின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிக்கின்றவரும் பிறிதொரு நாட்டின் பிரஜாவுரிமை இல்லாதவருமான அனைவரும் அத்துடன் மேற்குறிப்பிட்ட திகதியன்று நிரந்தர வதிவிடமாக இலங்கைக் குடியரசு எல்லைக்குள் வசிப்பவரும் அவர்களின் பிறந்த சந்ததியினரும் பிற நாட்டின் குடியுரிமை இல்லாதவரும் அரசியலமைப்புத் தொடரும் திகதியிலிருந்து இலங்கைப் பிரஜையின் அந்தஸ்தைப் பெறுவரெனவும் 1988ம் ஆண்டின் 39வது இலக்க நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் திட்டத்தின் கீழ் மேற்கூறிய அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைக்கப்படும் வடகிழக்கு பிராந்தியத்தின் நிரந்தர இணைப்பு தொடர்பாக கிழக்கு மாகாண மக்களின் கருத்து கணிப்பை நடாத்துவதெனவும் பெரும்பாலான மக்கள் ஆதரவாக வாக்களிக்கும்பட்சத்தில் இணைப்பை நிரந்தரமாக்குதல் எனவும் கூறப்பட்டுள்ளது.

மேற்கூறிய தீர்வுத்திட்டத்திற்கு தமது முழு ஆதரவையும் வழங்கி அதனை நடைமுறைப்படுத்த முயன்று ஐ.தே.கட்சியினரதும் பௌத்த மகா சங்கத்தினரதும் எதிர்ப்பு காரணமாக நிறைவேற்ற முடியாது அத்திட்டத்தை கைவிட்டவர்கள் அச்சம்பவங்கள் அனைத்தையும் மறந்து அன்று தீர்வுத்திட்டத்தின் பிரதான எதிரிகளான ஐ.தே.கட்சியினருடனும் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களுடனும் கைகோர்த்து ஒரே மேடையில் பின்னர் அமர்ந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

# இடைப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள்

அதன்பின்னர் (20.10.1995ல்) கொழும்பு உருகொடவத்தையிலமைந்துள்ள எரிபொருள் தாங்கிகள் இரண்டினை விடுதலைப் புலிகள் தாக்கியதில் அரசுக்கு பாரிய நஸ்டமேற்பட்டது. சமாதான முறையில் இனப்பிரச்சினைக்கான தீர்வினை எட்டும் நல்நோக்குடன் செயற்பட்ட ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரண துங்கா அவர்களை இலகுவாக வெற்றிபெற்று விடலாமென கருதிய தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டில் 3 வருடகாலங்கள் நிர்வகிக்கப்பட்ட யாழ் குடாநாட்டினை (8) மாதகால இடைவெளியில் (02.12.1995ல்) முழுமையாக சந்திரிகா அவர்களின் தலைமையிலான பாதுகாப்புப் படையினரிடம் இழந்தனர்.

அதனைத் தொடர்ந்து வன்னிப் பிரதேசத்திற்குள் உட்புகுந்த விடுதலைப் புலிகள் முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு (18.07.1998ல்) அதனைக் கைப்பற்றினர். இத்தாக்குதலில் 300 இராணுவத்தினர்வரை கொல்லப்பட்டு 400 படையினர்வரை காயமுற்றதாக அரச தரப்பினர் தெரிவித்தனர். அதேவேளை விடுதலைப் புலிகளின் தரப்பில் (362) ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(02.12.1995ல்) யாழ் நகரை ராணுவத்தினர் கைப்பற்றியதும் வன்னிப்பகுதிக்குள்சென்ற புலிகள் பெரிய அளவிலான தாக்குதல்களுக்கு தம்மை தயார்செய்தனர் அதற்கமைய முல்லைத்தீவு ராணுவமுகாமை கைப்பற்றுவதற்கான தாக்குதல்களை 1996 யூலை மாதம் 18ந் திகதி ஆரம்பித்து தாக்குதல் 26ந் திகதி முடிவுற்று முல்லைத்தீவு ராணுவமுகாமை முற்றுகையிட்டு தமதுகட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். அத்தாக்குதலின் போது 600 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 400 பேர் படுகாயம டைந்ததாகவும் அத்துடன் 332 விடுதலைப் புலிகள் உறுப்பினர் கொல்லப் பட்டதாகவும் செய்திகள் வெளியாகின.

இச்சம்பவத்தின் பின்னர் வவுனியா யாழ்ப்பாணம் வீதியை கைப்பற்றுவதற்கு இராணுவத்தினரால் 1997 மே மாதம் மேற்கொள்ளப்பட்ட பாரிய ராணுவத்தாக்குதலில் ஏராளமான புலிகளின் உறுப்பினர்களும் இராணுவத்தினரும் கொல்லப்பட்ட நிலையில் 13மே 1997ல் அந்நடவடிக்கையில்



படிப்பகம்

www.padippakam.com

ராணுவத்தினர் வெற்றிகண்டனர் இருந்தும் தொடர்ச்சியாக அப்பாதையை தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருக்க அவர்களால் முடியவில்லை.



மேற்கூறிய தாக்குதல்களுக்கு பழிவாங்கும் நோக்குடன் பௌத் தமக்களின் அதிமுக்கிய புனிதஸ்தலமான கண்டி நகரில் அமைந்துள்ள தலதாமாளிகை 1998 ஜனவரி மாதம் 25ந் திகதி புலிகளினால் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டது இருந்தும் ஆலயத்திற்கு எவ்வித சேதமும் ஏற்படாது தலைவாசலில் குண்டு வெடித்ததில் ஆலயத்தை சுற்றிக்கட்டப்பட்ட மதில்சுவரில் ஒருபகுதி பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டு 13 யாத்திரிகர்கள் கொல்லப்பட்டனர் தலதாமாளிகை தாக்குதலைத்தொடர்ந்து அது வரைகாலமும் உத்தியோகபூர்வமாக புலிகளை தடைசெய்யாது பொறுமைகாத்துவந்த அரசு பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை அமுலாக்கி தடைச்சட்டத்தை நிறைவேற்றியது.

இந்நிலையில் மூன்றாம் தரப்பினரின் மத்தியஸ்துடன் பேச்சுவார்த்தைக்கு தாம் தயாரென விடுதலைப்புலிகளின் தரப்பிலிருந்து 1998 செப்டம்பர் 6ந் திகதி அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அவர்களால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அரசதரப்பினர் நிராகரித்தனர். பேச்சுவார்த்தைக்கான வேண்டுகோளினை அரசாங்கம் நிராகரித்ததைத் தொடர்ந்து அடுத்தகட்ட தாக்குதலுக்கு தம்மை தயார் செய்த விபுலிகள்



படிப்பகம்

1998 செப்டம்பர் இறுதியில் கிளிநொச்சி ராணுவ முகாம்மீது தாக்குதல் நடாத்தினர். ஒருவாரகாலம் நீடித்த தாக்குதல் 30 செப்டம்பர் 1998ல் முடிவுற்று கிளிநொச்சி புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இத்தாக்குதலின்போது விடுதலைப்புலிகளின் தரப்பில் 900 பேரும் ராணுவத்தினரில் 600 பேரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

கிளிநொச்சி ராணுவமுகாம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து புலிகளுக்கு எதிரான மற்றொரு தாக்குதலுக்கு தம்மை தயார்செய்த ராணுவத்தினர் 1998 டிசம்பர் மாதம் ஒட்டிசுட்டான் பிரதேசத்தை கைப்பற்றுவதற்கான ராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு 05.12.1998ல் அப்பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர். இந்நடவடிக்கையின்போது ஏறக்குறைய 12,000 பொதுமக்கள் அப்பகுதியைவிட்டு வெளியேறினர் இத்தாக்குதலின்போது இருசாராருக்கும் பலத்த இழப்புகள் ஏற்பட்டதுடன் பொதுமக்கள் தரப்பிலும் பலர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்து இராணுவத்தினரால் குடாநாட்டின் கிழக்குப் பிரதேசத்தில் புலிகளுக்கு எதிராக 1999 செப்டம்பர் 16ந் திகதி மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலின்போது 21 பொதுமக்களும் பல புலிகளின் உறுப்பினர்களும் கொல்லப்பட்டனர் அடுத்த நடவடிக்கையாக யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்ட புலிகளுக்கு எதிரான 1999 அக்டோபர் 15ந் திகதிய தாக்குதலில் 105 விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

மேற்படி சம்பவங்களின்பின் விடுதலைப்புலிகளுடன் எவ்வித பேச்சுவார்த்தைக்கும் தாம் தயாரில்லையென திருமதி சந்திரிகா அவர்கள் 1999 அக்டோபர் மாதம் 18ந் திகதி அறிக்கையொன்றை வெளியிட்டார். ஜனாதிபதி சந்திரிகா அவர்களின் அறிக்கையைத் தொடர்ந்து மீண்டும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு தம்மை தயார்செய்த புலிகள் ஒட்டிசுட்டான் பிரதேசத்தை கைப்பற்றுவதற்கான தமது தாக்குதலை 1999 அக்டோபர் 26ந் திகதி ஆரம்பித்து (Artilleri) எறிகணை தாக்குதலை முடுக்கிவிட்ட தற்கமைய 1999 நவம்பர் மாதம் 2ந் திகதி அப்பகுதியை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். புலிகளின் அடுத்த நடவடிக்கையாக 1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ந் திகதி கொழும்பில் நடைபெற்ற திருமதி சந்திரிகா அவர்களின் தேர்தல் பிரச்சாரத்தின்போது அவரைக் கொலை செய்வதற்கென மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத்

www.padippakam.com

தாக்குதலில் திருமதி சந்திரிகா அவர்களின் ஒரு கண் பாதிக்கப்பட்டதுடன் 13 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டு 25 பேர்வரை படுகாயமுற்றனர். நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றிபெற்ற திருமதி சந்திரிகா அவர்கள் இரண்டாவது தடவையாக விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கு மத்தியஸ்தராக நோர்வே அரசாங்கத்தின் உதவியை 2000 ஆண்டு பெப்ருவரி மாதம் 1ந் திகதி கோரினார். அதற்கமைய நோர்வே அரசாங்கமும் இணக்கம் தெரிவித்து அவர்களின் தலைமையின் கீழ் பேச்சுவார்த்தைக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது.

நோர்வே தரப்பினருடனான பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்த அதேவேளை இன்னுமொரு பாரிய தாக்குதலுக்கான ஏற்பாடுகளை தயார்படுத்திய விடுதலைப் புலிகள் யாழ்குடாநாட்டின் கேந்திரஸ்தலமான ஆனையிறவு முகாமை கைப்பற்றுவதற்கான தாக்குதலை 2000ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ந் திகதி கேணல் கருணா அவர்களின் தலைமையில் ஆரம்பித்து 23ந் திகதி முழுமையாக தமது கட்டப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். இத்தாக்குதலின் போது ராணுவதரப்பில் 800 துருப்புக்கள் பலியானதாகவும் விடுதலைப் புலிகளின் தரப்பில் 632 பேர் கொல்லப்பட்டதாகவும் முகாமில் வைக்கப் பட்டிருந்த ஏராளமான ஆயுதங்களும் புலிகளினால் கைப்பற்றப் பட்டதாக செய்திகள் வெளியாகின. ஏற்கனவே மேற்படி முகாமை கைப்பற்றுவதற்காக 1991 யூலை மாதம் 10ந் திகதி முதல் 24நாட்கள் தொடர்ச்சியாக மாத்தையாவின் தலைமையில் நடாத்தப்பட்ட தாக்குதலின்போது புலிகளின் தரப்பில் 523 பேர் பலியாகியதற்கமைய முயற்சி தோல்விகண்டது.

ஆனையிறவு முகாம் 2000 ஏப்ரல் மாதம் 23ந் திகதி புலிகளின்வசம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து ராணுவத்தினருக்கு பலத்த இழப்புகள் ஏற்பட்டது மட்டுமன்றி உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு ராணுவத்தினர் ஆளாக்கப்பட்டனர். புலிகளின் போராட்ட நிகழ்வில் இச்சம்பவம் ஒரு பாரிய வெற்றியாகவும் அதேவேளை ராணுவத்தினரின் வரலாற்றில் இச்சம்பவம் படுதோல்வியாகவும் அமைந்ததென பலர் கருத்து வெளியிட்டிருந்தனர். இதனைத்தொடர்ந்து யாழ் நகரை கைப்பற்றுவதற்கான ஏற்பாடுகளை புலிகள் தரப்பினர் தயார் செய்தனர் இந்நிலையில் ஆங்காங்கே சிறு சிறு தாக்குதல்கள் நடாத்தப்பட்டநிலையில் புலிகளின் தரப்பிலிருந்து தாம் போர் நிறுத்தமொன்றை மேற்கொள்ள தயாரெனவும் அதேவேளை வன்னிக்கான பொருளாதாரத்



படிப்பகம்

www.padippakam.com

தடையினை முற்றாக நீக்க வேண்டுமெனவும் கோரிக்கையை முன்வைத்தனர். புலிகளால் விடுக்கப்பட்ட போர் நிறுத்தக் கோரிக்கையை நிராகரித்த புதிய பிரதமர் திரு ரத்னசிறி விக்கிரமநாயக்கா அவர்கள் போரை நடாத்திக்கொண்டு பேச்சுவார்த்தையை நடாத்துவதற்கு தாம் தயாரென அறிக்கை வெளியிட்டார்.

## குமாரபுரம் கிராமத்தின் உருவாக்கம் (1981)

எமது கிராமத்திலுள்ள வசதி படைத்தவர்களின் காணிகளிலும், அண்மைய சில கிராமங்களிலும் வாழ்ந்த சொந்தமான காணியோ அன்றி வீடுகளோ இல்லாத (46) குடும்பங்களுக்கு ஒரு கிராமத்தினை எனது சொந்த முயற்சியிலும், சொந்த நிதியையும் செலவுசெய்து அன்றைய நிலையில் அரசுக்குச் சொந்தமான காட்டுப் பிரதேசமாக இருந்த காணியினை துப்பரவுசெய்து வீடுகளை அமைத்துக் கொடுத்தேன். அதனை நன்றியுடன் எற்றுக்கொண்ட அம்மக்கள் தாமாகவே முன்வந்து அக்கிராமத்திற்கு (குமாரபுரம்) என்னும் நாமத்தினைச் சூட்டினர்.

இக்காணியினை நாம் துப்பரவு செய்து வீடமைக்கும் பணியினை ஆரம்பித்தபோது திருமலை மாவட்ட அரசாங்க அதிபரின் அறிவுறுத் தலுக்கமைய அதுவிடயத்தினை தடைசெய்வதற்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் நாம் மேற்கொண்ட முயற்சியினை இடைநிறுத்தாது அவர்களுக்கான தேவையினை பூரணமாக நிறைவேற்றினேன். இன்று (2012) அங்கு (90) குடும்பங்கள் வாழ்வதாக கிராமசேவையாளரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. 1984 ம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ந் திகதி இராணுவத் தினரால் கைதுசெய்யப்பட்டு எனது தாய் மண்ணினை விட்டு வெளியேறிய நான் (2010) அங்கு சென்று அம்மக்களைச் சந்திப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

## திருகோணமலை மாவட்டத்திலமைந்துள்ள குமாரபுரம் படுகொலைகள் (11.02.1996)

குமாரபுரம் பூர்வீகக் கிராமமான கிளிவெட்டி கிராமத்திலிருந்து ½ மைல் தூரத்தில் வடக்குப் பக்கமாக மூதூர் – மட்டுநகர் வீதிக்கருகாமையில் அமைந்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரால் தெஹிவத்தை



படிப்பகம்

www.padippakam.com

என்னுமிடத்திலமைந்திருந்த இராணுவ முகாமிலிருந்து கிளிவெட்டியில அமைந்திருந்த இராணுவ முகாமில் முகாமிட்டிருப்பவர்களுக்கான மாலை உணவு (11.02.1996) மாலை அங்கிருந்து எடுத்துவரப்பட்டது. அவ்வேளை (C.I.D) பாலமென அழைக்கப்படும் அப்பாலத்தின் கீழ் மறைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் ஆயுததாரிகள் உணவு எடுத்துக் கொண்டுவந்த இரு இராணுவத்தினரையும் சுட்டுப் படுகொலை செய்தனர்.

படுகொலை செய்த ஆயுததாரிகள் குறுக்குப் பாதையால் பயணித்து குமாரபுரம் கிராமத்தினுள் வந்து மறைந்திருந்ததாக இது விடயத்தினைக் நேரில் கண்ட சில பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் தெஹிவத்தை முகாமிலுள்ள வர்களுக்கு தெரிவித்ததற்கமைய அங்கிருந்து வந்த இராணுவத்தினர் குமாரபுரத்தினுள் நுழைந்து (24) பொதுமக்களை (குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட) சுட்டுக் கொன்றது மட்டுமன்றி (26) பேர் காயமுற்றதுடன் சில பெண்களை கற்பழிக்கத் தவறவுமில்லை. குமாரபுரத்தில் இடம்பெற்ற வன்முறை தொடர்பான தகவல்களை அறிந்ததும் மறுநாள் காலை திருமலையிலிருந்து குமாரபுரத்திற்குச் சென்ற திரு தங்கத்துரை அவர்கள் அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்ததும் அன்றைய ஜனாதிபதியான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுடன் தொடர்புகொண்டு வன்முறையில் ஈடுபட்ட இராணுவத்தினரை கைதுசெய்து சட்டத்தின்முன் நிறுத்த வேண்டுமென்னும் கோரிக்கையினை வலியுறுத்தினார்.

அதற்கமைய ஒரு வாரகாலத்தின் பின்னர் குற்றச் செயலில் ஈடுபட்ட இராணுவத்தினரை அடையாளம் காண்பதற்காக நீதிபதியின் கண்காணிப்பில் அடையாள அணிவகுப்பு ஒன்று நடாத்தப்பட்டு அந்நிகழ்வில் (7) பேர் அடையாளங்காணப்பட்டு அவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர். வடக்கு, கிழக்கின் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள் மீது வன்முறை மேற்கொண்ட இராணுவத்தினர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட முதலாவது (18.02.1996) சம்பவம் இதுவேயாகும். இச்சம்பவத்தின் பிரதிபலிப்பினைத் தொடர்ந்தே பின்னர் கிருசாந்தி குமாரசாமி அவர்களின் படுகொலையில் (07.09.1996) (5) இராணுவத்தினரும் (1) பொலிஸாரும் கைதுசெய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. இந்நிலையில் (2001ல்) ஆட்சி பீடத்தில் அமர்ந்த திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான அரசு குமாரபுரம் படுகொலை



படிப்பகம்

www.padippakam.com

தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த இராணுவத்தினரை விடுதலைசெய்தது. அதேவேளை கிருசாந்தி குமாரசாமி அவர்களின் படுகொலையில் கைது செய்யப்பட்ட இராணுவத்தினரும், பொலிஸாரும் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு தண்டனை பெற்றனர். இச்சம்பவம் திரு. தங்கத்துரை அவர்கள் (05.07.1997ல்) விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் கைக்குண்டு வீசப்பட்டு கொல்லப்பட்டமையால் அப்பிரச்சினையைத் தொடர்வதற்கு திருமலை மாவட்டத்தில் எவரும் (அரசியல்வாதியான) இரா. சம்பந்தன் அவர்கள் உட்பட எவரும் முன்வராமையால் கொலைகளையும், கற்பழிப்புக்களையும் மேற்கொண்டவர்கள் நிரபராதியானார்கள்.

●



படிப்பகம்

www.padippakam.com

# குமாரபுரத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட வன்முறையில் கொல்லப்பட்டவர்களின் விபரம். (11.02.1996)

| பெயர் | பால் | வயது |
|---|---|---|
| சுப்பையா சிவராஜா | ஆண் | 76 |
| கிட்ணன் கோவிந்தன் | ஆண் | 72 |
| சிவக்கொழுந்து சின்னத்துரை | ஆண் | 56 |
| வடிவேலு நடராஜா | ஆண் | 22 |
| சுந்தரலிங்கம் லக்சுமி | பெண் | 35 |
| அருணாசலம் கமலாதேவி | பெண் | 35 |
| அழகுதுரை பரமேஸ் | ஆண் | 30 |
| சுப்பிரமணியம் பாக்கியம் | பெண் | 30 |
| அருமைத்துரை வள்ளிப்பிள்ளை | பெண் | 28 |
| செல்லத்துரை பாக்கியம் | பெண் | 26 |
| ஆனந்தன் அன்னம்மா | பெண் | 26 |
| துரைராஜா கருணாகரன் | ஆண் | 15 |
| அருமைத்துரை தனலக்ஸ்மி | பெண் | 15 |
| கனகராஜா சுவாதிராஜா | ஆண் | 15 |
| விநாயகமூர்த்தி சுதாகரன் | ஆண் | 14 |
| ராமஜெயம் கமலேஸ்வரி | பெண் | 13 |
| தங்கவேல் கலா | பெண் | 12 |
| சண்முகநாதன் நிசாந்தன் | ஆண் | 11 |
| சுந்தரலிங்கம் பிரபாகரன் | ஆண் | 11 |
| அமிர்தலிங்கம் ரஜனிகாந்தி | பெண் | 10 |
| தீபன் பத்தினி | பெண் | 09 |
| சிவபாக்கியம் பிரசாந்தினி | பெண் | 06 |
| பாக்கியராஜா வசந்தினி | பெண் | 06 |
| சந்தரலிங்கம் சுபாசினி | பெண் | 03 |



படிப்பகம்

www.padippakam.com

# கிருசாந்தி குமாரசாமியின் படுகொலை (07.08.1996)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி கல்லூரியைச்சேர்ந்த மாணவியான செல்வி. கிருசாந்தி குமாரசாமி என்னும் மாணவி சுண்டிக்குழி பெண்கள் உயர்பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வழியில் கைதடி இராணுவ சோதனைச் சாவடியில் வைத்து 1996ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ந் திகதி ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன் அவரைத் தேடிச் சோதனைச்சாவடிக்குச் சென்ற அவரது தாயார் ராஜம்மா இளைய சகோதரன் பிரணவன் பக்கத்து வீட்டுக்காரரான சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் அனைவரும் ராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இவ்விடயம் சம்பந்தமாக 9 பேர் கைது செய்யப்பட்டனர். இவ்வழக்கு யூரர்களல்லாத ட்ரையல் அட் பார் முறையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நிமால் திசாநாயக்க, நீர்கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி காமினி அபேயரட்ண, பலப்பிட்டிய மேல் நீதிமன்ற நீதிபதி அன்டரூ சோமவன்ச ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு 1ம், 2ம், 3,ம் 4ம், 7ம் எதிரிகட்கு கடத்தல் குற்றச்சாட்டிற்கு 10 வருடச் சிறைத் தண்டனையும், பாலியல் வல்லுறவிற்கு 20 வருடச் சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது. 6ம் எதிரியான முத்துபண்டா விடுதலை செய்யப்பட்டார் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்ட எதிரிகளின் பெயர்கள் பின்வருமாறு:

1ம் எதிரி சோமரட்ண ராஜபக்ஸ, 2ம் எதிரி ஜே.எம் ஜயசிங்க, 3ம் எதிரி பொலிஸ் உத்தியோகஸ்தரான பிரதீப் பிரியதர்சன, 4ம் எதிரி பிரியசாந்த பெரேரா, 7ம் எதிரி டி.எம். ஜயதிலக, 8ம் எதிரி இந்திரஜித் பெரேரா. 8ம் எதிரியான இந்திரஜித் பெரேரா நீதிமன்ற விசாரணை நடந்தபோது நீதிமன்ற வளவிலிருந்து தப்பியோடி தலைமறைவானார், 9ம் எதிரியான அபேயசிங்க பத்திரனகே நிஸாந்த ஏற்கனவே விடுதலையயானாரென்பது குறிப்பிடத்தக்கது. ஏனைய மூன்று எதிரிகளில் ஒருவரான விஜயானந்த அல்விஸ் என்பவர் நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்ற காலப்பகுதியில் மரணமானார். 6ம் எதிரியான முத்துபண்டா 4.7.1998ல் விடுதலையானார் முதலாம் எதிரியும் எட்டாம் எதிரியும் நீதிமன்றில் கூறும்போது 300 முதல் 400 வரையான புதைகுழிகளை யாழ்ப்பாணத்தில் தம்மால் காண்பிக்க முடியுமென கூறினர்.



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தங்கத்துரை.

திரு. தங்கத்துரை அவர்கள் தமிழ் அரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினராவார். முதல் தடவைவயாக பாராளுமன்ற அரசியலில் 1970.05.27ந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்த்தலில் அன்றைய இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூர் தொகுதியில் முதல் தடவையாக களமிறங்கிய அவர் (19,787) வாக்குகளைப் பெற்று இரண்டாவது பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். அவர் தெரிவு செய்யப்பட்ட மூதூர் தொகுதியில் ஏழுவருட காலங்கள் சேவையாற்றிய நிலையில் வடமாகாண ஆதிக்க சக்திகளின் சுயநல நடவடிக்கைகளால் இரட்டை அங்கத்தவர் தொகுதியாக இருந்த மூதூர் ஒற்றை அங்கத்தவர் தொகுதியாக மாற்றமடைந்தது. 1970ம் ஆண்டு வவுனியாத் தொகுதியில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரான தா. சிவசிதம்பரம் அவர்கள் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக களமிறங்கிய திரு. செல்லத்தம்பு அவர்களிடம் தோல்வி யுற்றிருந்தார். இந்நிலையில் 1976ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் புதிய அரசியல் கட்சியினை வடமாகாணத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்த தமிழ் காங்கிரசினரும் தமிழரசுக் கட்சியினரும் இணைந்து உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதன்பின்னர் 1981ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி இடம்பெற்ற மாவட்டசபைக்கான தேர்தலில் திருகோணமலையில் போட்டியிட்டு (42,265) வாக்குகளைப் பெற்று தெரிவாகி 1983 வரை சேவையாற்றிய நிலையில் யூலைக் கலவரம் காரணமாக மாவட்ட சபையின் நிர்வாகம் செயலிழந்தது. யூலைக் கலவரத்தினைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சியினர் அனைவரும் தமிழகத்திற்கு தஞ்சம் புகுந்தநிலையில் திரு. தங்கத்துரையும் தஞ்சம் புகுந்தார். தொடர்ந்து ஒரு வருடகாலம் மட்டும் அங்கு தங்கியிருந்தவர் மீண்டும் 1984ம் ஆண்டு தாயகம் திரும்பினார். அதேவேளை ஏனைய அனைவரும் தமிழகத்தில் தொடர்ந்து வாழ்ந்தனர். தொடர்ந்து 1994ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் மீண்டும் திருமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டண்ணியின் சின்னத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான திரு. சம்பந்தன் அவர்கள் தம்மை முதன்மை வேட்பாளராக நிறுத்தி களமிறங்கிய நிலையில்



படிப்பகம்

www.padippakam.com

தங்கத்துரை அவர்கள் சம்பந்தனைவிட 2800 வாக்குகள் மேலதிகமாகப் பெற்று வெற்றியீட்டினார்.

அதனைத் தொடர்ந்து தங்கத்துரை அவர்களின் அரசியல் இருப்பு திருமலை மாவட்டத்தில் நிரந்தரமாகிவிடும், இதனால் தங்களது அரசியல் எதிர்காலம் சூனியமாகிவிடும் என்று கருதிய சில அரசியல் வாதிகள் தங்களது அரசியல் இருப்பினைத் தக்க வைப்பதற்காக தங்கதுரையின் அரசியல் எதிர்காலத்தை முடித்துவிட வேண்டுமெனவும் சிந்தித்து அவரை கொலை செய்வதற்கான வழிவகைகளை ஆராய்ந்தனர். இதற்கு விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் ஏவப்பட்டு கொலைக்கான திட்டமும் நிறைவேற்றப்பட்டது.

திரு. தங்கத்துரை அவர்களின் முயற்சியினால் திருகோணமலையில் அமைந்துள்ள பெண்கள் பாடசாலையில் ஒன்றான ஸ்ரீசண்முக வித்தியாலய மாணவர்களின் கல்வித் தரத்தினை மேம்படுத்துவதற்காக (35) முப்பத்தைந்து லட்சம் ரூபா ஒதுக்கீட்டில் மூன்று மாடிகளைக் கொண்ட கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டது. அக்கட்டிடத்தின் திறப்பு விழாவினை பாடசாலை நிர்வாகத்தினர் (05.07.1997ந்) திகதியன்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்ததனர். அவ்விழாவில் பங்கு கொள்வதற்காக அன்றைய தினம் மாலை (7.00) மணியளவில் அங்கு சென்று திருமலை மக்களின் அன்பான வரவேற்புடன் கட்டிட திறப்பு விழாவினை முடித்துவிட்டு வீடு திரும்புவதற்காக வெளியேவந்து கொண்டிருந்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தமிழீழம் காண்பதற்காக ஆயுதப்பேபாராட்டம் என்னும் பெயரில் நாட்டில் அராஜகம் நடாத்திக்கொண்டிருந்த தனயன்களில் ஒரு சாரார் கைக்குண்டுகளுடனும் கைத்துப்பாக்கிகளுடனும் அவரின் உயிரைப் பலி கொள்வதற்கான திட்டங்களுடன் வெளியில் தயார் நிலையில் காத்துக்கொண்டு நின்றனர். இந்நிலையில் அவர் மக்களிடம் பிரியாவிடை கூறிவிட்டு அவருக்காக வாசலிலே காத்துக்கொண்டு நின்ற வாகனத்தில் ஏறுவதற்காக தயாரானபோது பயங்கரவாதிகளின் முதல் பணியாக பாடசாலையில் எரிந்துகொண்டிருந்த மின் விளக்குகளும், அவ்வீதியை அலங்கரித்துதுக்கொண்டிருந்த மின்விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டன. அதே நிமிடம் அவ்வாகனத்தை நோக்கி கிரனைட்



படிப்பகம்

www.padippakam.com

(கைக்குண்டுத் தாக்குதல்) நடாத்தப்பட்டதும் அவர் வாகனத்திற் கருகாமையில் குண்டு அடிபட்ட நிலையில் வீதியில் வீழ்ந்தார். தற்செயலாக அவர் உயிர் தப்பிவிடுவாரோ என ஐயங்கொண்ட பயங்கரவாதிகள் தம்மிடமிருந்த கைத்துப்பாக்கியின் மூலம் மூன்று தடவைகள் சூடு நடாத்திவிட்டு ஓடி ஒழிந்தனர்.

மேற்படி கைக்குகுண்டுத் தாக்குதலில் பாடசாலையின் அதிபரான திருமதி தனபாலசிங்கம் ராஜேஸ்வரி, நாமகள் வித்தியாலய அதிபர் திரு யோசப், ஓய்வுபெற்ற வைத்திய இலாகாவைச் சேர்ந்த திரு கணேசலிங்கம், அவ்வித்தியாலய அபிவிருத்திக் குழுவின் உறுப்பினரான ஓய்வுபெற்ற தொழில்நுட்பவியலாளர் திரு ரத்னராசா மற்றும் திரு தங்கத்துரை அவர்களின் நீண்டகால நண்பரும் கொழும்பு விவேகானந்தா கல்லுரியின் உப அதிபருமான திரு சீவரெத்தினம் அவர்களும் கொல்லப்பட்டனர். அத்துடன் அவ்வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி அமிர்தினி குலசிங்கம் பாடசாலையின் மாணவர் விடுதி காவலர் திருமதி விமலகுமாரி நடராசா பாடசாலை உத்தியோகஸ்தர் விஜயலக்ஸ்மி சாந்திராசா மற்றும் மாணவர் தலைவி எச்.விசிகலா மற்றும் மாணவர்கள் சிலரும் விழாவில் கலந்துகொள்வதற்காக வருகைதந்திருந்த பொதுமக்கள் சிலரும் காயமடைந்தனர். இந்நூலினை நான் எழுதும்போது இக்கொலைக்கு கட்டளையிட்டவனும் பங்காளிகளில் ஒருவனும் உறவினர்கள்கூட கண்டு கொள்ளமுடியாதவாறு புதைக்கப்பட்டுவிட்டார்கள். இன்னும் ஒருவன் மட்டும் சிங்களப் பொலிசாரின் பாதுகாவலுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான்.

## விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட திரு அருணாசலம் தங்கத்துரை அவர்களின் வாழ்க்கை வரலாறு

1936 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ந் திகதி இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மூதூர் பகுதியில் அமைந்துள்ள கிளிவெட்டி என்னும் கிராமத்தில் பிறந்த அருணாசலம் தங்கத்துரை அவர்கள் தமது ஆரமபக் கல்வியை கிளிவெட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், அதனைத் தொடர்ந்து 5ம் வகுப்பிற்கான புலமைப்பரிசுக்கான பரீட்சையில் சித்தியெய்தி மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும் பின்னர்



படிப்பகம்

www.padippakam.com

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியிலும் தமது கல்வியினைக் கற்றார். படிப்பை முடித்த பின்னர் இரத்தினபுரி, கொழும்பு மற்றும் திருமலை மாவட்டத்தி லமைந்துள்ள சோமபுரம் போன்ற இடங்களில் நீர்ப்பாசன திணைக்களத்தின் காரியாலயங்களில் பிரதம லிகிதராக பணியாற்றினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து இரட்டை அங்கத்தவர் தொகுதியாக அப்போது இருந்த மூதூர் தொகுதில் 1970 ஆம் ஆண்டில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். தங்கத்துரை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவராகவும், அக்கட்சியின் மலையக தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கமான இலங்கை தொழிலாளர் கழகத்தின் தலைவராகவும் பதவி வகித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டில் மூதூர் தேர்தல் தொகுதி ஒற்றை அங்கத்தவர் தேர்தல் தொகுதியாக மாற்றப்பட்டது. சிங்கள மக்களுக்காக சேருவில என்ற புதிய தேர்தல் தொகுதி திருகோணமலை மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் திருகோணமலை தேர்தல் தொகுதி, தமிழ் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தேர்தல் தொகுதியாகவும் மூதூர் தேர்தல் தொகுதி முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையாக கொண்ட தேர்தல் தொகுதியாகவும் சேருவில தேர்தல் தொகுதி சிங்கள மக்களை பெரும்பான்மையாக கொண்ட தேர்தல் தொகுதியாகவும் இருந்தமையால் திரு. தங்கத்துரை அவர்கள் 1977 ஆம் ஆண்டு தேர்தலில் மூதூர் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட முடியவில்லை.

## புதிய சேருவில தேர்தல் தொகுதியின் உருவாக்கமும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதரவிற்கான காரணிகளும்

இலங்கையின் முதலாவது பொதுத் தேர்தல் இலங்கை சுதந்திரமடைவதற்கு ஏறக்குறைய (6) மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது. அதாவது 1947ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ந் திகதி முதல் செப்டம்பர் 20ந் திகதி வரை 29 நாட்கள் முதலாவது தேர்தல் நடாத்தப்பட்டது. அதற்கமைய 1947 ம் ஆண்டு முதல் 1970 ம் ஆண்டுவரை மூதூர் வாழ் தமிழ் மக்கள் தமக்கான பிரதிநிதி ஒருவரை தமது இனத்திலிருந்து தெரிவு செய்யமுடியாத நிலையே



படிப்பகம்

www.padippakam.com

இருந்தது. 1947, 1952, 1956, 1960, 1965 மேற்குறிப்பிட்ட ஆண்டுகளில் மூதூர் தொகுதியின் பிரதிநிதிகளாக தெரிவுசெய்யப்பட்டவர்களின் பட்டியல் பின்வருமாறு அமைந்திருந்தது.

அன்று தமிழரசுக் கட்சியில் பாராளுமன்ற உறுப்பினருக்கான வேட்பாளர் பட்டியலில் இடம்பெறுவதானால் அவர்கள் சட்டத்தரணிக்கான தகைமைகளைப் பெற்றிருக்கவேண்டும் என்பது எழுதப்படாத நடை முறையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அத்தகைமையினை அன்று பெறாதிருந்த திரு தங்கத்துரை அவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த த.அ.கட்சியினரின் பிரதிநிதிகளில் மிகவும் இளம் (34) வயதினராக காணப்பட்டார். அதனால் கறுப்புச் சட்டை அணிந்த தமிழர் தரப்பு கனவான்கள் சிலரால் அவர் வித்தியாசமான பார்வைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அதனை சவாலாக ஏற்ற அவர் பாராளுமன்ற உறுப்பினராக பணிபுரிந்த காலப் பகுதியிலேயே சட்டக் கல்லூரியிலும் அதற்கான படிப்பினை ஓய்வு நேரங்களில் மேற்கொண்டதற்கமைய (1980) ஜனவரி மாதம் அதற்கான பரீட்சையில் தேர்ச்சிபெற்று சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்தார்.

| | |
|---|---|
| 1947 ஜனாப்.ஏ.ஆர்.ஏ.எம் அபூபக்கர் | ஐக்கிய தேசியக் கட்சி - கிண்ணியா |
| 1952 ஜனாப்.எம்.ஈ.எச் முகம்மதலி | சுயேச்சை - கிண்ணியா |
| 1956 ஜனாப். எம்.ஈ.எச் முகம்மதலி | சுயேச்சை - கிண்ணியா |
| 1960 திருரீ ஏகாம்பரம் | த.அ.கட்சி - திருகோணமலை |
| 1960 ஜனாப் ஏ.எல் அப்துல் மஜீத் | ஸ்ரீ.ல.சு.கட்சி - கிண்ணியா |
| | 1960ம் ஆண்டு முதல் மூதூர் இரட்டை அங்கத்தவர் தொகுதி |
| 1965 ஜனாப் எம்.ஈ.எச் முகம்மதலி | த.அ.கட்சி இருவரும் - கிண்ணியா |
| 1965 ஜனாப் ஏ.எல் அப்துல் மஜீத் | ஸ்ரீ.ல.சு.கட்சி |

மேற்படி புள்ளிவிபரங்களுக்கமைய 23 வருடங்களின் பின்னர் மூதூர் தொகுதி வாழ் தமிழ் மக்கள் தமக்கென தமது இனத்தவரான திரு. தங்கத்துரை அவர்களை தெரிவு செய்ததன்மூலம் தமக்கான பல பலாபலன்களை அனுபவித்தனர்.

ஆனால் இந்நிலைமையினை நீடிப்பதற்கு யாழ் மேலாதிக்க அரசியல் வாதிகள் அனுமதியளிக்கவில்லை. 1970 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில்



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் மக்களின் சாதுர்யம்மிக்க தலைவர்களென தமிழ் மக்களால் கருதப்பட்டவர்களான த.அ.கட்சியில் (2) இருவரும் தமிழ் காங்கிரஸ் கட்சியில் (3) மூவரும் தோல்வியடைந்தார்கள். தோல்வியடைந்தது மட்டுமன்றி யாழ்ப்பாணத் தொகுதியிலும், வட்டுக்கோட்டையிலும், நல்லூரிலும் வெற்றிபெற்ற மூவரும் அன்றைய ஸ்ரீ.ல.சு.கட்சி அரசாங்கத்தில் இணைந்தார்கள். அத்துடன் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களால் மேலும் இரு செனட் சபை உறுப்பினர்கள் அதாவது திரு எம்.சி சுப்பிரமணியம், திரு. சி.குமாரசூரியர் போன்றோரும் வட மாகாணத்திற்கு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை இலங்கை அரசியல் வரலாற்றில் வடமாகாணத்தில் புதியதோர் திருப்பம் நிகழ்ந்தது. இவர் வடமாகாணத்தில் ஸ்ரீ.ல.சு கட்சியின் உறுப்பினர்களாக அன்று செயற்படும் நிலை உருவானது.

இந்நிலையில் மேற்கூறிய த.அ.கட்சி, த.கா.கட்சியினரின் எதிர்காலம் கேள்விக்குரியதாக காணப்பட்டது. மேற்படி சம்பவமே (1976 ம் ஆண்டு மே மாதம் 14 ந் திகதியன்று) ஏற்கனவே கீரியும், பாம்புமாக செயற்பட்ட கட்சிகள் இரண்டும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்னும் பெயரில் இணைந்து கூட்டணியினை உருவாக்கவேண்டிய நிலைக்கு ஆளானார்கள். அந்த இணைப்பு தொடர்பான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோது வவுனியாவில் தமிழரசுக் கட்சியின் அன்றைய பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியிருந்த திரு எக்ஸ் செல்லத்தம்பு அவர்களிடம் (1970ல்) தோல்வியுற்ற திரு. ரீ. சிவசிதம்பரம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் அவர்களுக்கு அடுத்து இடம்பெறும் பொதுத் தேர்தலில் வவனியாத் தொகுதியினை விட்டுத்தந்தால் மட்டுமே கூட்டணிபற்றி பேச முடியுமென தமிழ் காங்கிரஸ் கட்சியினர் நிபந்தனை ஒன்றினை முன்வைத்தனர்.

இந்நிலையில் அதற்கான நிரந்தரத் தீர்வினைப் பெறுவதற்கு திரு. ஜே.ஆர் ஜயவர்தனாவுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை மேற்கொண்டு முல்லைத்தீவிற்கு தனியான தேர்தல் தொகுதி ஒன்றினை வழங்குமாறு கோரிக்கை விடுவதென இரு கட்சிகளின் முக்கியஸ்தர்களாலும் தீர்மானிக்கப்பட்டது. அதற்கமைய திரு. ஜே.ஆர் ஜயவர்தனா அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கான திகதியும் பெறப்பட்டது. இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோர் பங்குகொண்டனர். சந்தர்ப்பத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்துவதில் வல்லவரான திரு.ஜே.ஆர்.ஜயவர்தனா அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருகை தந்திருந்தவர்களின் கருத்தினை முதலில்



படிப்பகம்

www.padippakam.com

கேட்டறிந்தாராம். அதனைச் செவிமடுத்த ஜே.ஆர் அவர்கள் திருமலை மாவட்டத்தில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதியினை ஒரு தேர்தல் தொகுதியாக பிரகடனப்படுத்துவதற்கு நீங்கள் உங்களின் பூரண சம்மதத்தினை தெரிவிப்பீர்களேயானால் முல்லைத்தீவிற்கு தனியான தேர்தல் தொகுதி ஒன்றினை வழங்குவதில் தமக்கு எவ்வித ஆட்சேபனையும் கிடையாதென்னும் தமது நிலைப்பாட்டினை தெரிவித்தபோது மேற்படி பேச்சுவார்த்தையில் பங்குகொண்டவர்கள் தமது சம்மதத்தினை தெரிவித்த தற்கமைய மூதூர் தேர்தல் தொகுதி இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு சேருவில என்னும் புதிய தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டது.

அன்றைய நிலையில் (2529 ச.கி மீற்றர்) நிலப்பரப்பினை உள்ளடக்கியதாக இருந்த திருகோணமலை மாவட்டத்தின் செழிப்புமிக்க பகுதிகளான (1598 ச.கி மீற்றர்) நிலப்பரப்பினை சேருவில தொகுதிக்கு கையளித்துவிட்டே முல்லைத்தீவு தொகுதியினை வடமாகாண அரசியல்வாதிகள் பெற்றனர் என்பது முக்கியமான விடயமாகும்.

## 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தல்

1970ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக திரு. பா. நேமிநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அவர் தெரிவாகி சிலமாதகாலப் பகுதியிலேயே அவரின் தொகுதி மக்களுடனான செயற்பாடுகள் குறித்து தலைமைப்பீடத்திற்கு பலர் தமது அதிருப்தியைத் தெரிவித்தனர். காரணம் அவர் சற்று அதிகமாக மது பாவிப்பதனால் மக்களுக்கான பணிகளை முன்னெடுப்பதில் ஆர்வமற்றவராக மாற்றமடைந்தார். இந்நிலையில் கட்சியின் பொதுச்சபையில் அவரது செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்கமைய திருமலைத் தொகுதி மக்களின் தேவைகளையும் கவனிக்கும் பொறுப்பினை திரு தங்கத்துரை அவர்களிடம் ஒப்படைப்பதாக பொதுச் சபை மேற்கொண்ட தீர்மானத்திற்கமைய திருமலை மக்களின் தேவைகளையும், நலன்களையும் கவனிக்கும் பொறுப்பு திரு தங்கத்துரை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட கடமையினை செவ்வனே நிறைவேற்றியமையால் 1977ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் திரு தங்கத்துரை அவர்களையே திருமலைத் தொகுதியின் வேட்பாளராக நியமிக்குமாறு அத்தொகுதியின்



படிப்பகம்

www.padippakam.com

வாக்காளர்கள் அன்றைய கட்சியின் தலைமைப் பீடத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

ஆனால் தொகுதி மக்களின் கருத்துக்களுக்கும், வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்காத திரு அமிர்தலிங்கம் அவர்கள்(1977) ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் வேட்பாளராக நிறுத்தப்படவேண்டிய திரு. தங்கத்துரை அவர்களுக்கு எதிராக திரு.அ. அமிர்தலிங்கம் அவர்களின் அதிகாரம் பிரயோகிக் கப்பட்டு திருமலை மக்களின் விருப்பிற்கு மாறாக திரு. இரா. சம்பந்தன் அவர்கள் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். அதுமட்டுமன்றி மட்டு நகர் தொகுதியில் திரு செ. இராசதுரை அவர்களை தோற்கடிப்பதற்காக (காசி ஆனந்தன்) என அழைக்கப்படும் காத்தமுத்து சிவானந்தனை அமிர்தலிங்கம் அவர்கள் களமிறக்கினார். ஆனால் அவரால் களமிறக்கப்பட்டவர் தோல்வியுற்ற நிலையில் செ. இராசதுரை அவர்கள் வெற்றி பெற்றார். இச்சம்பவமே திரு. இராசதுரை அவர்கள் திரு. ஜே.ஆர் ஜயவர்தனா தலைமையிலான அரசாங்கத்துடன் இணைவதற்கான தேவையினை உருவாக்கியது. இவை இரு விடயங்களுக்குமான வாய்ப்பாக திரு. செல்வநாயகம் அவர்களின் மறைவே (27.04.1977) வழியமைத்தது.

திருமலைத் தொகுதியின் வேட்பாளராக திரு. சம்பந்தன் அவர்களை களமிறக்கியதற்கு திரு. அமிர்தலிங்கம் அவர்கள் பின்வரும் காரணத்தினை அன்று தெரிவித்திருந்தார். தந்தை செல்வா அவர்கள் இறப்பதற்கு முன்னர் திருமலைத் தொகுதி தொடர்பாக தம்முடன் கதைத்தபோது எதிர்வரும் தேர்தலில் அத்தொகுதிக்கு திரு. இரா சம்பந்தன் அவர்களையே வேட்பாளராக நிறுத்தவேண்டுமென தெரிவித்தாராம். இது எவரும் நம்பக்கூடியதான கருத்தாக அமையவில்லை. காரணம் எற்கனவே (1972) முதல் திருகோணமலைத் தொகுதி மக்களினது நலன்களையும், தேவைகளையும் நிறைவுசெய்த ஒருவர் இருக்கும்போது வேறொருவரை வேட்பாளராக நியமிக்குமாறு கூறுவதற்கு அவர் என்ன அரசியலில் அனுபவமற்றவரா?

1970 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திருகோணமலைத் தொகுதியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக திரு. பா நேமிநாதன் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார். அவர் வழமையாகவே மது அருந்தும் பழக்கத்தினை கொண்டிருந்தவர். அத்துடன் அவருக்குச் சொந்தமான



படிப்பகம்

www.padippakam.com

தங்குமிட வசதிகளுடனான (Liqueur Shop) (பார்) வசதியும் அவரின் வீட்டிற்கு அருகாமையிலேயே அமைந்திருந்தது. தொகுதி மக்கள் அவரைச் சந்திக்கச் சென்றால் ஐயா தூங்குகிறாரென அவரின் மனைவி வழமையாகவே கூறிவிடுவதாக திருமலை மக்கள் கட்சியின் தலைமைப் பீடத்திற்கு தமது அதிருப்தியினை தெரிவித்திருந்தனர். இது விடயம் பல தடவைகள் தலைமைப் பீடத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில் அதற்கான தீர்வினை எட்டுவதற்காக பொதுச்சபை கூட்டப்பட்டது.

பொதுச் சபையில் இதுவிடயம் ஆராயப்பட்ட நிலையில் திருமலைத் தொகுதி மக்களினதும் தேவைகளை நிறைவு செய்வதற்கு தங்கத்துரை அவர்களை தலைமைப் பீடம் பரிந்துரைத்ததற்கமைய திருமலைத் தொகுதியின் பொறுப்பும் அவருக்கு பாரிய சுமையாக சுமத்தப்பட்டது. இருந்தும் அவர்களின் தேவைகளையும் சிறப்புற நிறைவேற்றினார். இதுவிடயத்திலுள்ள உண்மை நிலையினை அறிந்த ஒருவரான திரு. ஆனந்தசங்கரி அவர்கள் இன்னும் உயிருடன் இருப்பதனால் அவர் இதுவிடயத்தினை நினைவில் வைத்திருப்பாரென நாம் நம்புகின்றோம். இருந்தும் இன்று அவர் (2011) திரு. இரா. சம்பந்தன் அவர்களுடன் அரசியலில் சங்கமமாகிவிட்டமையால் உண்மையினை முழுமையாக அறிந்த அவர் இன்று என்ன கூறுவாரோ தெரியவில்லை.

தமக்கு எதிராக கட்சியின் பொதுச் செயலாளர் செயற்பட்ட நிலையிலும் கூட திரு. சம்பந்தன் அவர்களின் வெற்றிக்காக ஒவ்வொரு தேர்தல் மேடைகளிலும் பங்குகொண்டு தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமே தவிர தமது பதவி முக்கியமல்ல எனக்கருதி அயராது பாடுபட்டு சம்பந்தன் அவர்களின் வெற்றிக்கு வகைசெய்தவர் தங்கத்துரையாகும்.

இந்நிலையிலும் தொடர்ந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினராகவும் ஆதரவாளராகவும் இவர் செயற்பட்டார். இந்நிலையில் 1978 ஆம் ஆண்டு அவரது சொந்தக் கிராமமான கிளிவெட்டி கிராமத்தில் இடம்பெற்ற ஒரு இன வன்முறைச் சம்பவத்தில் இவரையும் தொடர்புபடுத்தி சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு திருகோணமலை மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் எட்டு மாதங்கள் சிறை வைக்கப்பட்டு பின்னர் விடுதலையானார்.



படிப்பகம்

www.padippakam.com

## மாவட்ட சபைத் தேர்தல் (04.06.1981)

அன்றைய நிலையில் யாழ் மாவட்டம், வவுனியா மாவட்டம், மட்டுநகர் மாவட்டம் ஆகியன போட்டிப் பரீட்சைக்கான மாவட்டங்களாக இருக்க வில்லை. மாறாக திருகோணமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய இரு மாவட்டங்களுமே பலப் பரீட்சைக்கான மாவட்டங்களாக அமைந்திருந்தவையாகும். இந்நிலையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த அம்பாறை மாவட்டத்தில் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகளுடன் இணைந்திருந்த ஜனாப். எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களால் ஒரு முஸ்லிம் வேட்பாளரை அம்மாவட்டத்திற்கு வேட்பாளராக நிறுத்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் மற்றும் திரு மு.சிவசிதம்பரம் ஆகியோரால் நிராகரிக்கப்பட்டு திரு. வேல்முருகு ஆசிரியர் என்னும் தமிழர் ஒருவர் நிறுத்தப்பட்டார்.

அம்பாறை மாவட்டத்தின் அன்றைய இனரீதியான புள்ளிவிபரம் பின்வருமாறு அமைந்திருந்தது.

| | | |
|---|---|---|
| முஸ்லிம்கள் | 161.481 | 41.7% |
| சிங்களவர்கள் | 146.371 | 37.8% |
| தமிழர்கள் | 79.725 | 20.5% |

அதேவேளை திருமலை மாவட்டத்திற்கான வேட்பாளரைத் தேடும்பணி திரு. அமிர்தலிங்கம் மற்றும் அன்றைய திருமலைப் பாராளுமன்ற உறுப்பினரான திரு. இரா சம்பந்தன் போன்றவர்களால் முன்னெடுக்கப்பட்ட போதும் திருமலையில் போட்டியிடுவதற்கு எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் திரு. தங்கத்துரை அவர்களின் இல்லம் நாடிவந்தனர். அவர் அப்போது திருமலை இராஜவரோதயம் வீதியில் வசித்தமையால் அவர்களுக்கு அது இலகுவாக இருந்தது.

இந்நிலையில் திரு தங்கத்துரை அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்தவர்களை இன்முகத்துடன் வரவேற்ற அவர் அவர்களால் முன்வைக் கப்பட்ட வேட்பாளருக்கான கோரிக்கையினை உடனடியாக ஏற்பதற்கு மறுத்ததுடன் இவ்விடயம் தொடர்பாக தமது ஆதரவாளர்களுடன்



படிப்பகம்

கலந்தாலோசித்த பின்னரே முடிவுபற்றி தெரிவிப்பதாக கூறியதற்கமைய அவர்கள் சென்றுவிட்டனர். ஏற்கனவே இடம்பெற்ற தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தொகுதிவாரியாக (1977) இடம்பெற்ற தேர்தலிலேயே போதிய அளவு பெரும்பான்மையினைப் பெறமுடியாதிருந்தமையும், மாவட்டரீதியில் தமிழ் மக்களின் விகிதாசாரம் 36% மட்டுமே இருந்தமையும் மாவட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு திருமலை மாவட்டத்தில் வாழ்ந்த தமிழர்கள் எவரும் சம்மதம் தெரிவிக்க மறுத்தமையாகும்.

இந்நிலையில் தமது ஆதரவாளர்களை அழைத்து தேர்தல் தொடர்பில் கலந்துரையாடியபோது நீங்கள் கட்டாயம் இப்பலப்பரீட்சையில் இறங்குங்களென இளைஞர் தரப்பு ஆதரவாளர்கள் வேண்டிக்கொண்டதற்கமைய அத்தேர்தலில் திரு. தங்கத்துரை அவர்கள் களமிறங்கினார். மாவட்ட சபைக்கான தேர்தலில் அரசாங்கக் கட்சியின் (ஐ.தே.கட்சி) சார்பில் சட்டத்தரணி ஜனாப் ரஹீம் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள். த.வி.கூட்டணியின் வேட்பாளராக திரு தங்கத்துரை அவர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

தேர்தலுக்கான போட்டி பாரிய பலப்பரீட்சையாகவே அமைந்தது. இருந்தும் கடந்த 1970 ம் ஆண்டுகாலப் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றியபோது தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்னும் இனரீதியான வேறுபாடுகளைப் புறந்தள்ளி மூதூர் மற்றும் திருமலை ஆகிய தொகுதிகளில் வாழ்ந்த மக்களுக்கு பாகுபாடற்ற சேவையினை வழங்கியமையால் தமிழ் மக்கள் மட்டுமன்றி குறிப்பிடத்தக்களவு ஏனைய சமூகத்தவர்களும் வாக்களித்தமையால் ஐ.தே.கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து (44,692) வாக்குகளைப்பெற்று தங்கத்துரை வெற்றியீட்டினார். அதேவேளை அம்பாறை மாவட்ட வேட்பாளர் தோல்வியடைந்தார்.

வெற்றியீட்டிய நிலையில் ஏறக்குறைய இரு வருடங்கள் தமது பணியினை முன்னெடுத்த அவருக்கு யூலைக் கலவரம் (25.07.1983) நிர்வாக இயந்திரத்தினை செயற்படவிடாது செயலிழக்கச் செய்தது இந்த நிலை கிழக்கில் மட்டுமன்றி வடக்கிலும் ஏற்பட்டது.

1981 இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவராக தெரிவு

www.padippakam.com

செய்யப்பட்டார். 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனக்கலவரங்களை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு அமைவாக இவர் தனது திருகோணமலை மாவட்ட அபிவிருத்திச் சபை தலைவர் பதவியைத் துறந்தார்.

1994 இல் திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்டு அம்மாவட்டத்தில் ஆகக் கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இக்காலப்பகுதியில் மக்களுக்கான சுகாதார சேவையினை இலகுவாக்குவதற்காக பின்வரும் இடங்களில் வைத்தியசாலைகளை அமைத்தார். கிளிவெட்டி, மணற்சேனை, சம்பூர், செல்வநாயகபுரம் மற்றும் நிலாவெளி ஆகிய கிராமங்களுக்கு புதிதாக வைத்தியசாலைகளை அமைத்து அம்மக்களின் சுகாதார நலன்களைப் பேணுவதற்கான வசதிகளை இலகுவாக்கினார்.



படிப்பகம்

## பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபடும்போது கொல்லப்படும் அரச படைகளின் குடும்பத்தவர்களுக்கான நிரந்தர பொருளாதார கொடுப்பனவுகள்.

இலங்கை அரசாங்கத்தினால் 1993ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட யுத்த காலத்தில், யுத்தத்தில் பங்குகொண்டு உயிர் நீர்க்கும் பாதுகாப்புப் படையினைச் சேர்ந்தவர்களுக்கான அதாவது அவர்கள் திருமணமாகியிருந்தாலோ, அன்றி திருமணமாகாதவர்களாய் இருப்பினும்கூட அவர்களின் குடும்பத்தவர்களுக்கு பின்வருமாறு வாழ்க்கைக்கான நிதி உதவிகள் வழங்கப்படுகின்றது.

1. இறந்தவரின் மரணச்ச் சடங்கிற்காக (25,000) இருபத்தைந்தயாயிரம் ரூபாய் முதல் உதவியாக வழங்கப்படும்.

2. இறந்தவர் திருமணமாகியிருந்தால் அவரின் மனைவிக்கு ஒரு லட்சம் (100,000) ரூபாவும் தொடர்ந்து ஓய்வூதியமும் வழங்கப்படும்.

மேற்கூறிய கொடுப்பனவுகள் அண்மையில் பலமடங்கு அதிகரிக்கப் பட்டுள்ளதுடன், அவர்களின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் தனியான வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டமெனு விடுதலைப் புலிகளால் நடாத்தப்பட்ட போரில் கொல்லப்பட்ட தமிழ் இளைஞர், யுவதிகளின் பெற்றோருக்கு வடக்கில் வழங்கப்பட்டது அவர்களைப் புதைத்துள்ள கல்லறைகளை காண்பிப்பதும், அவர்களின் பெற்றோர்களை கௌரவிப்பதாக மக்கள் மத்தியில் விளம்பரம் செய்வதும் மட்டுமே. அத்துடன் போரில் ஊனமுற்றவர்களை அவர்களின் வீட்டிற்கு வெறுங்கையுடன் செல்வதற்கு ஐந்து வருடங்களின் பின்னர் அனுமதிப்பதுமே. இவ்வரிசையில் இந்நூலின் ஆசிரியரான திரு. குமாரதுரை ஆகிய எனது மருமகன் ஒருவரும் உள்ளடங்குவார்.

www.padippakam.com

தமிழீழம் காணவென விடுதலைப் புலிகளும், ஏனைய ஆயுத அமைப்புக்களும் மேற்கொண்ட போராட்டம் தமிழ் மாணவர்களின் கல்வியில் ஏற்படுத்திய பின்னடைவு.

1994 ல் 16 முதல் 21 விகிதமாக இருந்த தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 1998 ல் 4–6 விகிதமாக வீழ்ச்சியடைந்துள்ளது அதன் புள்ளிவிபரங்கள் இங்கே தரப்படுகின்றன.

## க.பொ.த உயர்தர பரீட்சை (1994-1998) தமிழ் மொழிமூல மாணவர்களின் தொகையும் சதவீதமும் 1994 மொத்த மாணவர்களின் விகிதம், 1998 மொத்த மாணவர்களின் விகிதம்.

| பாடம் | மாணவர்களின் எண்ணிக்கை (1994) | விகிதம் | மாணவர்களின் எண்ணிக்கை (1998) | விகிதம் |
|---|---|---|---|---|
| தூயகணிதம் | 2654 | 21.12 | 478 | 5.19 |
| பிரயோக கணிதம் | 2686 | 21.26 | 480 | 5.19 |
| பௌதிகம் | 6290 | 19.04 | 1207 | 4.08 |
| இரசாயனம் | 6471 | 18.08 | 1215 | 4.07 |
| தாவரவியல் | 3865 | 16.47 | 739 | 4.07 |
| விலங்கியல் | 3868 | 16.45 | 740 | 4.06 |
| புவியியல் | 3372 | 9.95 | 1411 | 6.14 |
| பொருளியல் | 11079 | 14.67 | 3611 | 5.06 |
| அரசியல் விஞ்ஞானம் | 3655 | 12.06 | 1391 | 4.05 |

இந்த புள்ளிவிபரம் கொழும்பு பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு.எஸ் சந்திரசேகரன் அவர்களால் 2002ம் ஆண்டு யூலை மாதம் 7ந் திகதி வெளியிடப்பட்டது.



படிப்பகம்

## நான்காவது ஜனாதிபதித் தேர்தல் (21.12.1999)

கடந்த ஐந்து வருடகால இடைவெளியில் இனமுரண்பாட்டினை தீர்ப்பதற்காக திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களால் மேற்கொள்ளப்பட்ட எந்த நடவடிக்கைகளும் வெற்றியளிக்காத நிலையில் (21.12.1999ல்) நான்காவது ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளராக மீண்டும் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களும், ஐ.தே.கட்சியின் வேட்பாளராக திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் களமிறங்கினர். தேர்தல் பிரச்சாரத்தின்போது (18.12.1999ல்) விடுதலைப் புலிகள் சந்திரிகா பண்டாரநாயக்க அவர்களை கொலை செய்யும் நோக்குடன் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதலில் அவரின் கண் ஒன்று முழுமையாக சிதைவுற்றதுடன் அப்பாவிப் பொதுமக்கள் 17 பேர் பலியானார்கள். தேர்தல் முடிவுகளின்படி (51.12%)மான வாக்குகளை திருமதி. சந்திரிகா அவர்களும் (42.71%) மான வாக்குகளை திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் பெற்றதற்கமைய மீண்டும் திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா அவர்கள் ஜனாதிபதியானார்.

## ஜனாதிபதித் தேர்தல் (21.12.1999)

| வேட்பாளர்கள் | கட்சிகள் | வாக்களித் தவர்கள் | விகிதம் |
|---|---|---|---|
| திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க | பொ.ஜ.ஐ.முன்னணி | 4,312,157 | 51.12% |
| திரு.ரணில் விக்கிரமசிங்கா | ஐ.தே.கட்சி | 3,602,748 | 42.71% |
| திரு நந்தன குணதிலக | ஜே.வி.பி | 344,173 | 4.08% |
| திரு ஹரிச்சந்திர விஜேதுங்க | சிமஹா.சபூமி புத்ரய | 35,854 | 0.43% |
| திரு.டபிள்யூ.வி.எம் ரஞ்ஜித் | சுயேச்சை | 27,052 | 0.32% |
| திரு.ரஜீவ் விஜேசிங்க | லிபரல் கட்சி | 25,085 | 0.30% |
| திரு வாசுதேவ நாணயக்கார | இடதுசாரி ஐ.கூட்டணி | 23,668 | 0.28% |
| திரு ரெனிசன் எதிரிசூரிய | சுயேச்சை | 21,119 | 0.25% |
| ஜனாப் அப்துல் ரசூல் | சிறீல.மு.கட்சி | 17,359 | 0.21% |
| திரு கமல் கருணதாச | ம.வி.மு.அணி | 11,333 | 0.13% |

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| திரு ஹட்சன் சமரசிங்ஹ<br>திரு ஆரியவன்ச திசாநாயக்க<br>ஏ.டபிள்யூ பிரேமவர்தன | சுயேச்சை<br>ஐ.ஐ.தே.முன்னணி<br>ம.ஏ.முன்னணி | 7,184<br>4,039<br>3,983 | 0.09<br>0.05<br>0.05 |
| செல்லுபடியான வாக்குகள்<br>நிராகரிக்கப்பட்ட வாக்ககள்<br>அளிக்கப்பட்டவாக்குகள் | | 8,435,754<br>199,536<br>8,635,290 | 73.31<br>2.31<br>97.69 |

அதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதன் உள்ளடக்கங்கள் வெளியிடப்படுகின்றது. அதற்கமைய இலங்கை 8 மாநிலங்களாக (இந்தியாவின் தமிழ் நாடு போன்று) பிரிக்கப்பட்டு அதிகாரங்களை பகிர்ந்தளிப்பதற்கான நடைமுறை (பிராந்தியங்களுக்கான சுயாட்சி) உருவாக்கப்படுகின்றது. (de facto federal state through the establishment of eight semi-autonomous regional councils) இருந்தும் தமிழ் அரசியல் கட்சிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி P.L.O.T.E, மற்றும் T.E.L.O போன்றவை அதனை ஏற்க மறுத்துவிட்டன. அதேவேளை வடக்கு, கிழக்கு ஆகிய இரு மாகாணங்களையும் இணைப்பது தொடர்பில் கிழக்கில் அமைந்துள்ள மூன்று மாவட்டங்களில் வாழும் வாக்காளர்களினது கருத்துக்களை இணைப்பு தொடர்பாக அறிவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றினை நடத்துவது என்பதும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இத்தீர்வுத் திட்டம் தொடர்பாக எதிர்க் கட்சியான ஐ.தே.கட்சியினருடன் (09.03.2000, 16, 21 மார்ச் மற்றும் ஏப்ரல் 06.04.2000) ஆகிய தினங்களில் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை எதுவும் பலனளிக்கவில்லை. இந்நிலையில் (23.04.2000) விடுதலைப் புலிகளினால் ஆனையிறவு இராணுவ முகாம் கைப்பற்றப்பட்டு இராணுவத்தினரின் தரப்பிலும், விடுதலைப்புலிகளின் தரப்பிலும் ஏராளமானவர்கள் கொல்லப்பட்டதுடன் இராணுவ முகாமில் பணிபுரிந்த பெண்கள் 45 பேர்வரை விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் கற்பழிக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள். இந்நிலையிலும் மீண்டும் ஐ.தே.கட்சியினருடன் 5 வது சுற்றுப் பேச்சுவார்த்தை (02.05.2000ல்) மேற் கொள்ளப்பட்ட நிலையில் ஐ.தே.கட்சியினர் சம்மதம் தெரிவிக்காததுமட்டுமன்றி மாற்றீடாக எந்தவொரு தீர்வினையும் முன்வைக்க முன்வரவில்லை. அதனால் ஆகஸ்ட் மாதம்வரை பேச்சுவர்த்தை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையிலும் இனப்பிரச்சினை தீர்விற்கான அரசியலமைப்பு திருத்த மசோதா



படிப்பகம்

(03.08.2000ல்) திரு. ஜீ.எல் பீரிஸ் அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அவ்விடயம் தொடர்பில் (100) நிமிடங்கள்வரை திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் மேற்படி பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசியல் பேதங்களை புறந்தள்ளிவிட்டு தேசிய நலன்கருதி அனைத்து கட்சிகளையும் உதவுமாறு உரையாற்றியபோதும் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சியினர் தீர்வுத்திட்ட நகலை பாராளுமன்றத்தினுள்ளேயே தீமிட்டுக் கொழுத்தினர். இலங்கை அரசியல் வரலாற்றில் பாராளுமன்றத்தினுள் தீமிட்ட சம்பவம் இதுவே முதல் நிகழ்வாகும். இச்சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்திற்கு வெளியே ஐ.தே.கட்சியின் ஆதரவாளர்கள், ஜே.வி.பியினர் மற்றும் பௌத்த மதகுருமார்கள் ஒருசாராரும் இணைந்து ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

இக்காலப்பகுதியில் பிரதமராக பதவிவகித்த திருமதி. ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா அவர்கள் கடுமையான சுகயீனமுற்றதனால் (10.08.2001ல்) தமது பதவியினை இராஜினாமாச் செய்தார். அவரின் வெற்றிடத்திற்கு திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா அவர்கள் (13.08.2001ல்) பிரதமராக நியமிக்கப்பட்டார்.

மேற்கூறிய பின்னணிகளின் அடிப்படையில் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களின் ஆட்சிக்காலமான (24.08.1994 – 18.08.2000) வரையான காலப்பகுதியில் இனப்பிரச்சினைக்கான தீர்வு எதனையும் எட்டமுடியாத நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு 11வது பாராளுமன்றத்திற்கான தேர்தல் (10.10.2000ம்) என அறிவிக்கப்பட்டது. மேற்படி தேர்தல் பிரச்சாரங்களின்போது விடுதலைப் புலிகளை நிராயுதபாணிகளாக்கியதன் பின்னரே பேச்சுவார்த்தைகள் எதனையும் மேற்கொள்வதென திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் தேர்தல் பிரச்சாரங்களின்போது தெரிவித்திருந்தார்.

## அஷ்ரப் படுகொலை

தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொள்வதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அப்போதைய துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான ஜனாப் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் (2000.09.16ந்) திகதியன்று கல்முனைக்கு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் கலந்து கொள்வதற்காக கொழும்பிலிருந்து அம்பாறைக்கு ஹெலிகப்ரரில்

www.padippakam.com

பயணஞ்செய்தபோது மாவனல்ல அரநாயக்க ஊரகந்த என்னுமிடத்தில் ஹெலிகப்டர் விமானத்தில் பயணஞ்செய்த தற்கொலைதாரியின் தாக்குதலுக்கு உள்ளானதால் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். அவருடன் பிரயாணஞ்செய்த மேலும் 12 பேரும்கூட உயரிழந்தனர். இச்சம்பவம் விபத்தா அல்லது சதியா என்பதனை ஆராய்வதாக அவர் அங்கம் வகித்திருந்த பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தெரிவித்திருந்தது. அதேவேளை நடந்து முடிந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி தோல்வியுற்று திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான ஐ.தே.கட்சியினர் வெற்றிபெற்றமையால் சந்திரிகா தலைமையிலான அரசு அதனைக் கைவிட்டது.

அதேவேளை புதிதாக ஆட்சியமைத்த ஐ.தே.கட்சியினர் அக்கொலைகள் தொடர்பாக தாம் விசாரணைகளை நடாத்துவதாக உறுதியளித்தபோதும் எவ்வித விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை. ஜனாப். எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் மரணத்தின் பின்னணியில் பல மர்மமான சம்பவம் இடம்பெற்றுள்ளதாக செய்திகள் பல பத்திரிகைகளில் வெளியாகின. 16.09.2000ந் திகதி ஜனாப். எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் பயணஞ்செய்த ஹெலிகப்ரரில் அஷ்ரப் அவர்களும் அவருடன் திகாமடுல்ல(அம்பாறை) மாவடட்டத்தின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்களில் ஒருவருமான கதிர்காமத்தம்பி என்பவரும் கொழும்பில் துறைமுக அதிகார சபையில் தொழிலாளியாக பணிபுரியும் பெரியதம்பி என்பவரும் அவருடன் இன்னுமொரு தமிழரும் இவர்களைவிட தங்காலையைச் சேர்ந்த மௌலானா, மருதமுனையைச் சேர்ந்த ரஹ்மத்துல்லா மற்றும் சாய்ந்தமருதுவைச் சேர்ந்த அசீஸ் என்பவரும் மெய்பாதுகாவலர்கள், விமான ஓட்டிகள் என மொத்தமாக (12) பன்னிரெண்டு பேரும் கொல்லப்பட்டனர்.

திரு.கதிர்காமத்தம்பி அவர்களுடன் பயணஞ்செய்த பெயர் அறியப்படாத அந்நபரே தற்கொலைதாரி என தகவல்கள் வெளியாகின. இவர் இரு தினங்களாக அஷ்ரப் அவர்களின் வீட்டில் கதிர்காமத்தம்பி அவர்களுடன் தங்கியிருந்திருக்கின்றார். சந்தேகங்களை ஊர்ஜிதப் படுத்துவதற்கான மேலதிக சான்றுகளாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர்களாக போட்டியிட்ட திரு. செழியன் பேரின்பநாயகம், மனோகரன் பிள்ளை போன்றோர் முறையே (10.09.2000,12.09.2000)லும் புலிகளின் ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் திரு. கதிர்காமத்தம்பி



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கும் புலிகளுக்குமிடையிலான உறவு வழமைபோன்றே நிலவியது. காரணம் திரு. கதிர்காமத்தம்பி அவர்களின் உறவினை தக்கவைத்துக் கொள்வதன் மூலமே தமது இலக்கினை சாதிக்கமுடியுமென பயங்கரவாதிகள் கருதியமையால் அவருடனான உறவு தொடரப்பட்டது. கதிர்காமத்தம்பி அவர்களின் படுகொலையைத் தொடர்ந்து அவரின் மக்கள் இருவருக்கும் ஒரு வருடகால இடைவெளியிலேயே புலிகளின் அனுசரணையுடன் தொழில்வாய்ப்பு வழங்கப்பட்டு ஒருவர் புலிகளின் காரைதீவு அலுவலகத்தில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட்டு மற்றையவருக்கு திரு ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் அமைக்கப்படட அரசின் மூலம் வீடமைப்பு அதிகார சபையில் தொழில் வழங்கப்பட்டது.

## பதினோராவது பாராளுமன்றத் தேர்தல் (10.10.2000)

| அரசியல் கட்சிகள் | அளிக்கப்பட்ட வாக்குகள் | விகிதம் | தெரிவான உறுப்பினர்கள் | தேசியப் பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| பொ.ஐ.முன்னணி | 3,900,901 | 45.11% | 94 | 13 | 107 |
| இ.தொ.காங்கிரஸ் | | | | | |
| இ.கம்யூனிஸ்ட் கட்சி | | | | | |
| தே.வி ம கட்சி | | | | | |
| ல.ச.சமாஜ கட்சி | | | | | |
| ம.ஐ.முன்னணி | | | | | |
| ஸ்ரீ.லம கட்சி | | | | | |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | | | | | |
| ஐ.தே.கட்சி | 3,477,770 | 40.22% | 77 | 12 | 89 |
| தே.தொ.காங்கிரஸ் | | | | | |
| ம.ம.முன்னணி | | | | | |
| ம. வி.முன்னணி | 518,774 | 6.00% | 08 | 02 | 10 |
| த.வி.கூட்டணி | 106,033 | 1.23% | 5 | 0 | 05 |
| தே.ஐ.முன்னணி | 197,983 | 2.29% | 03 | 01 | 04 |
| ஈ.பி.டி.பி | 50,890 | 0.59% | 04 | 0 | 04 |
| ரெலோ | 26,112 | 0.30% | 03 | 0 | 03 |
| சிபழமைவாத கட்சி | 127,863 | 1.48% | 0 | 01 | 01 |
| சுயேச்சை | 67,288 | 0.78% | 01 | 0 | 01 |
| அ.இ.த.காங்கிரஸ் | 27,323 | 0.32% | 01 | 0 | 01 |
| பு.இடதுசாரி முன்னணி | 32,275 | 0.37% | 0 | 0 | 0 |
| புளொட் | 20,848 | 024% | 0 | 0 | 0 |
| மொத்தம் | | | | | 225 |



படிப்பகம்

www.padippakam.com

# பதினோராவது பாராளுமன்றத் தேர்தல் தமிழர் விடுதலைக் கூட்டணி (10.10.2000)

| மாவட்டம் | த.வி.கூ பெற்ற வாக்குகள் | விகிதம் | மொ.வாக்காளர் | உறுப்பினரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 32,852 | 27.59% | 622,333 | |
| ஆனந்தசங்கரி | 12,888 | | | |
| சோ. சேனாதிராஜா | 10,965 | | | |
| எஸ் சிவமகாராசா | 7,187 | | | 04 |
| ஏ. வினாயகமூர்த்தி | 3,825 | அ.இ.த. காங்கிரஸ் | | 01 |
| வன்னி | | | | |
| அடைக்கலநாதன் | 15,490 | | | |
| குகனேஸ்வரன் இராசா | 6,839 | | | |
| நோகராதலிங்கம் வினோ | 10,959 | | | |
| மட்டுநகர் | 54,448 | 29.20% | 275,485 | |
| யோசப் பரராஜசிங்கம் | 12,605 | | | |
| ஏ. சௌந்தரநாயகம் | 16,542 | | | 01 |
| மொத்தம் | 87,300 | | மொ.பிரதிநிதிகள் | 06 |

தேர்தல் முடிவுகளின்படி பொதுஜன ஐக்கிய முன்னணியினர் (107) உறுப்பினர்களையும் ஐ.தே.கட்சியினர் (89) உறுப்பினர்களையும் பெற்றதற்கமைய மூன்றாவது தடவையும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்களின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தேசிய ஐக்கிய முன்னணியில் (N.U.A) தெரிவான (4) உறுப்பினர்களையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் (E.P.D.P) தெரிவான (4) உறுப்பினர்களையும் தம்முடன் இணைத்து (18.10.2000ல்) அரசாங்கத்தினை அமைத்தனர். இங்கு முக்கியமான விடயம் என்னவெனில் (26.06.1994ல்) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு ஐ.தே.கட்சியின் அன்றைய உறுப்பினராக இருந்த திரு அநுரா பண்டாரநாயக்கா அவர்கள் அன்றைய பாராளுமன்றத்தில் சபாநாயகராக நியமிக்கப்பட்டமையாகும்.

அரசாங்கம் அமைத்து ஒரு வாரகாலப்பகுதியில் (25.10.2000) பண்டாரவளை (பிந்துனுவெவ) என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளில் ஆயுதப்பயிற்சி பெற்றிருந்து பாதுகாப்புபபடையினரால் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களை தடுத்துவைத்திருந்த புனர்வாழ்வு முகாம்



படிப்பகம்

www.padippakam.com

தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதில் (27) தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டு (14)பேர் காயமுற்றனர்

பின்னர் (02.05.2001ல்) மாவனல்லை என்னும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நகரத்தில் சிங்கள மக்களுக்கும், முஸ்லிம் மக்களுக்குமிடையில் இடம்பெற்ற கலவரத்தின்போது முஸ்லிம்களுக்குச் சொந்தமான (146) வர்த்த கஸ்தாபனங்களும், (10) வீடுகளும் (2) ஆடைத் தொழிற்சாலைகளும், (1) இறப்பர் தொழிற்சாலையும், (1) பெற்றோல் நிலையமும் தீயிட்டு நாசமாக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகின. இதன்பின்னணியில் கேகாலை மாவட்ட பா.உ.வும் அமைச்சராகவுமிருந்த மஹிபால ஹேரத் அவர்கள் சம்பந்தப்பட்டதாக ஜனாப்.ரவூப் ஹக்கீம் அவர்கள் அரசாங்கத்தின்மீது குற்றஞ்சுமத்தியமையால் இச்சம்பவத்தின் எதிரொலியாக அன்றைய அரசின் பங்காளியாகவும், கப்பற்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப, முஸ்லிம் வெளிவிவகார அமைச்சராகவும் பதவிவகித்த ஜனாப் ரவூப் ஹக்கீம் அவர்கள் திடீரென ஜனாதிபதி அவர்களினால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

இவ்விடயத்தினை தமக்கு சாதகமாக பயன்படுத்திய திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் ஜனாப் ரவூப் ஹக்கீம் அவர்களுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தை களுக்கமைய (21.06.2001ல்) பாராளுமன்றத்தில்கூடிய ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் (7) உறுப்பினர்களும் அரசதரப்பு ஆசனங்களிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியினரின் ஆசனங்களில் அமர்ந்தனர். அதேவேளை திருமதி பேரியல் அஸ்ரப் அவர்களின் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் உறுப்பினர்கள் நால்வரும் ஆளுங்கட்சி ஆசனத்திலேயே அமர்ந்தனர்.

இந்நிலையில் அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றினை தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ, புளொட் மற்றும் ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் ஆகியோரின் அனுசரணையுடன் (22.06.2001ல்) எதிர்க்கட்சியினர் மேற்கொண்டனர். இதுபோன்ற நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஏற்கனவே இரு தடவைகள் முன்னெடுக்கப்பட்டு தோல்வியுற்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிலையில் நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி தமது அதிகாரத்தினை பயன்படுத்தி இரண்டு மாதகாலம் பாராளுமன்றத்தினை ஒத்திவைத்ததுடன். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றினை காண்பதற்காக (புதிய அரசியலமைப்பு ஒன்று வேண்டுமா? வேண்டாமா?)



படிப்பகம்

www.padippakam.com

என்னும் கேள்வியினை முன்வைத்து சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படுமெனவும் அறிவித்தார்.

மேற்படி திட்டத்தினை எதிர்த்து எதிர்க்கட்சியினர் (19.07.2001ல்) ஜனபல மெகாயும் என்னும் பெயரில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தினர். இதனை கட்டுப்படுத்த பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இரண்டுபேர் கொல்லப்பட்டதுடன் 70 பேர்வரை காயமுற்றனர். இவ்வாறான நடவடிக்கைகள் தலைநகரில் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் (23.07.2001) இரவு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு அருகாமையில் அமைந்திருந்த விமானப்படை முகாம் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினரால் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதில் விமானப்படைக்குச் சொந்தமான (13) விமானங்களும், ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான (3) விமானங்களும் முழுமையாக நாசமாக்கப்பட்டதுடன் புலிகளின் தரப்பில் 13 பேரும் படையினரின் தரப்பில் (5)பேரும் கொல்லப்பட்டனர் இத்தாக்குதலின் மூலம் அரசுக்கு (4000) நான்காயிரம் கோடி ரூபா நஷ்டமேற்பட்டதாக மதிப்பிடப்பட்டது.

இந்நிலையில் அரசியல் நெருக்கடியினை சமாளிப்பதற்காக தேசிய அரசாங்கம் ஒன்றினை அமைப்பதற்காக ஐ.தே.கட்சியினருடனும், ஜே.வி.பியினருடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை ஒன்றினை (25.08.2001ல்) மேற்கொண்டபோதும் அதுவிடயம் தோல்வியுற்றது. பின்னர் (04.09.2001ல்) ஜே.வி.பியினருடன் தனியாக மேற்கொண்ட பேச்சுவார்த்தையில் உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டது. அதற்கமைய பின்வரும் நிபந்தனைகளுக்கமைய உடன்படிக்கை தயாரானது.

1. ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றம் உடனடியாக கூட்டப்படவேண்டும்.
2. சர்வஜன வாக்கெடுப்பு நிறுத்தப்படவேண்டும்.
3. அமைச்சரவையின் எண்ணிக்கை 44ல் இருந்து 20 ஆக குறைக்க வேண்டும்.
4. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் அனைத்தும் ரத்துச் செய்யப்பட வேண்டும்.
5. அரச வங்கிகள் முதலாளிமாருக்கு வழங்கி மீளப்பெறப்படாத கடன்கள் அனைத்தும் அறவிடப்பட வேண்டும். இவையே அவர்களால் முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகளாகும்.



படிப்பகம்

www.padippakam.com

மேற்கூறிய நிபந்தனைகளுக்கமைய (05.09.2001ல்) ஜே.வி.பியினருக்கும் திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களின் அரசாங்கத்திற்கும் இடையிலான உடன்படிக்கையொன்று பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. அதனைத் தொடர்ந்து (06.09.2001ல்) பாராளுமன்றம் கூட்டப்பட்டபோது ஜே.வி.பியின் 10 உறுப்பினர்களும் அரசுக்கு ஆதரவு வழங்கி பெரும்பான்மைப் பலத்தினை உறுதிசெய்தனர். ஜே.வி.பியினருடனான கூட்டுறவினை விரும்பாத பொ.ஜ.ஐ.முன்னணியின் முக்கிய (4) அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல் பீரிஸ், திரு ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே, எஸ்.பி. திஸாநாயக்கா மற்றும் திரு. மஹிந்த விஜேசேகர ஆகியோர் அன்றைய தினமே தமது அமைச்சுப் பதவிகளை ராஜினாமாச் செய்தனர்.

அதனைத் தொடர்ந்து பொ.ஜ.ஐ.முன்னணியில் அங்கம்வகித்த எம்.ஈ.பி யின் உறுப்பினரான திரு. பந்துல குணவர்தன, (09.10.2001ல்) எதிர்க்கட்சிக்கு மாறினார். தொடர்ந்து திரு. விஜேபால மெண்டிஸ், திரு. எதிரிவீர பிரேமரத்ன, திரு. ஆனந்த முனசிங்க, திரு. ஜயசுந்தர விஜயக்கோன், ஆகியோரும் எதிர்க்கட்சிக்கு மாறினர். இச்சம்பவங்களை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திய திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் எதிர்க்கட்சிகளின் கூட்டமைப்பின் உதவியுடன் ஏற்கனவே சமாப்பிக்கப்பட்டிருந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையினை (11.10.2001ல்) வாக்கெடுப்பிற்கு எடுப்பதற்கு தயாராகினார். இந்நிலையில் வாக்கெடுப்பினை மேற்கொள்ளும் பட்சத்தில் தமக்கு தோல்வி ஏற்படுமென்பதனை அறிந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் (10.10.2001) நள்ளிரவு 12 மணிக்கு பாராளுமன்றத்தினைக் கலைப்பதற்கான அறிக்கையினை வெளியிட்டார்.

16.08.1994 முதல் பாராளுமன்றத்தின் முழுமையான ஆட்சிக் காலத்தினையும் நிறைவு செய்த நிலையில் இடம்பெற்ற பதினோராவது பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் (107) உறுப்பினர்களைப் பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியினர் தே.ஐ.முன்னணி (4) ஈழவர் ஜனநாயக முன்னணி (4) மலையக மக்கள் முன்னணி (01) ஆகிய கட்சியினரை தம்முடன் இணைத்து (116) உறுப்பினர்களுடன் (18.10.2000ல்) பாராளுமன்றம் கூட்டப்பட்டது. இந்நிலையில் ஐ.தே.கட்சியினரின் சதிமுயற்சிகளுக்கு தாக்குப் பிடிக்கமுடியாது போன திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் ஒரு வருட காலமுடிவில் (10.10.2001ல்) பாராளுமன்றத்தினை கலைத்து புதிய தேர்தலுக்கான வேட்பு மனுக்கள்



படிப்பகம்

www.padippakam.com

அக்டோபர் 20ந் திகதி முதல் 27ந் திகதி வரை ஏற்கப்பட்டு 2001 டிசம்பர் மாதம் 05ந் திகதி பொதுத்தேர்தல் நடாத்தப்பட்டது.

## திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் தலைமையிலான அரசு கலைக்கப்பட்டதும் தமிழர் தரப்பினர் வெளியிட்ட அறிக்கைகள்

**ஐ.தே.கட்சியின் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள்.**

கொழும்பு மேயரின் இல்லத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் மகாநாட்டில் அவர் கூறியவை.

நாங்கள் தேர்தலில் வெற்றிபெறுவது உறுதி எதிரணியில் கூட்டுச்சேர்ந்துள்ள அரசியல் கட்சிகளுடனும் அரசிலிருந்து விலகி எங்களுடன் சேர்ந்துள்ள உறுப்பினர்களின் உதவியுடனும் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான் மையுடன் வெற்றிபெற்று ஆட்சியமைப்போமென திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் குறிப்பிட்டார்கள் அத்தோடு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கதிரையின் நான்கு கால்களையும் வெட்டிவிட்டதாகவும் குறிப்பிட்டார். நாம் ஆட்சிக்கு வந்ததும் உடனடியாக இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்போம் என்பதை ஏற்கனவே அறிவித்திருக்கிறோம் அதனை அரசாங்கத்திற்கும் அறிவித்துள்ளோமெனவும் யானையின் நிறத்தை மாற்றி போட்டியிட விரும்பினாலும் அதற்கும் தாம் தயாரெனகூறினார்.

பொ.ஜ. ஐக்கிய முன்னணியின் முன்னைய அமைச்சரும் கட்சி மாறியவருமான திரு.ஜி.எல்.பீரிஸ் அவர்கள் கூறும்போது நாமும் யானையில் ஏறிவிட்டோமெனவும் ஐ.தே.கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றை செய்யவுள்ளோமெனவும் மக்கள் தேவைதான் எமது தேவையெனவும் கூறினார் நாம் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது யானைச்சின்னத்திலே போட்டியிடுவதற்காகத்தான் என்றும் கூறினார். இருந்தும் தேர்தல் நடைபெற்ற போது மக்கள் முன் முகங்கொடுக்க முடியாது தேசியப் பட்டியலின் மூலம் தமது பதவியைக் காப்பாற்றிக்கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

திரு.எஸ்.பி. திஸாநாயக்கா முன்னைய பொ.ஜ.ஐ.முன்னணி அரசாங்கத்தின் சமூர்த்தித் திட்ட அமைச்சராகவிருந்து பல மில்லியன் ரூபாய்களை சூறையாடினாரென சந்திரிகா அவர்களின் அரசினால் விமர்ச்சிக்கப்பட்டவரும் ஸ்ரீ.ல.சு.கட்சியின் செயலாளருமான இவர் கூறும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

பொ.ஜ.ஐ.முன்னணியில் நான் இருந்தபோது அதன் தேர்தல் வெற்றிக்கு பிரதான மூலகர்த்தாவாக இருந்தது நான்தான். எனக் குறிப்பிட்டதுடன் இனி அந்த இயந்திரம் சந்திரிகாவிடம் இல்லையெனவும் அது இப்போது ஐ.தே.கட்சியிடம் வந்துவிட்டதெனவும் குறிப்பிட்டார். இருந்தும் அந்த தேர்தல் நடைபெற்றபோது மக்கள் முன் முகங்கொடுக்கமுடியாத நிலையில் தேசியப் பட்டியலின் மூலம் பதவியைக் கைப்பற்றி மீண்டும் பொ.ஜ.ஐ.முன்னணி அரசில்வகித்த சமூர்த்தி அமைச்சர் பதவியை பெற்றுக்கொண்டார்.

**த.வி.கூட்டணியின் சிரேஸ்ட உப தலைவரான திரு. வி. ஆனந்தசங்கரி பேசும்போது மகாராணி மக்களை ஏமாற்றி விட்டார் என ஆரம்பித்து பின்வருமாறு கூறினார்.**



பொ.ஜ.ஐக்கிய முன்னணியின் யுகம் முடிந்துவிட்டது நாம் எதிரணியில் அந்த ஆட்சிக்கு எதிராக ஒன்றுதிரண்டதால் அந்த யுகம் முடிந்துவிட்டது 1994 இல் பொ.ஜ.ஐ.முன்னணியில் தமிழ்மக்கள் அபரிமிதமான நம்பிக்கை வைத்தனர். பிரச்சினையைத் தீர்ப்பார் என்று கருதினர் ஏழு வருடங்கள் கடந்தும் தமிழ் மக்களின் தேவைகளை அவரால் நிறைவேற்ற முடியாது போய்விட்டது நண்பர்கள் யார், உறவினர்கள் யார் என்று அவருக்கு தெரியாமல் போய்விட்டது தமிழ் மக்களின் துன்பங்கள் இந்த ஏழு வருடங்களிலும் கூடியனவே தவிர குறையவில்லை. இன்று அந்த ஆட்சிக்கு முடிவுகட்டும் வாய்ப்பு கிடைத்துவிட்டது அதன்மூலம் மீண்டும் மக்கள் ஆட்சியை மலரச் செய்யலாம் தமிழ் மக்கள் அனைவரும் இந்தத் தேர்தலில் நல்ல பாடம் புகட்டவேண்டுமென கூறினார். அவர் கூறிய மக்கள் ஆட்சி ஐ.தே.கட்சியின் ஆட்சிதான் (1978 முதல் 1994 வரையான ஆட்சி).

www.padippakam.com

## ரவூப் ஹக்கீம் அவர்கள் (ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ்) கூறும்போது பின்வருமாறு குறிப்பிட்டார்



பிரதான கட்சிகளை ஓரணியில் சேர்த்து தேசிய அரசாங்கமொன்றை ஏற்படுத்தும் முயற்சியில் கடுமையாக புதன் மாலைவரை முயற்சி செய்தேன் சந்திரிகா அவர்களின் அரசாங்கம் அதற்கு இணங்கவில்லை இனியும் முயற்சி செய்வதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்து கொண்டேன் தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வொன றைக் காண விரும்பினேன் அது கைகூடவில்லை அதனால் பொ.ஜ.ஐக்கிய முன்னணியை தோற்கடிக்க இப்போது உறுதி பூண்டுவிட்டோம் அதன்மூலம் உறுதியானதும் பலமானதுமான அரசாங்கமொன்றை ஏற்படுத்த வேண்டும் மாவனல்ல சம்பவத்துடன் தொடர்புபட்டவர்களையும் சூழ்ச்சிக்காரர்களையும் மூடிமறைத்து தட்டிக்கழித்து காப்பாற்றியதற்கு அரசாங்கத்திற்கு கிடைத்த தண்டனைதான் இது எனக்கூறினார்.

## திரு.பெ.சந்திரசேகரன் (மலையக மக்கள் முன்னணி) பேசும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.



நான் அரசாங்கத்தில் சேரும்போது மலையகமக்களுடைய முன்னேற்றத்திற்காக பாராளுமன்றத்தையும் அரசாங் கத்தையும் பயன்படுத்தலாமென்று நினைத்தேன் ஆனால் முடியவில்லை. அதனால் எனது சமூகத்தவர்களுக்கு துரோகம் செய்யாமல் வெளியேறினேன் நாட்டு நலனில் அக்கறையில்லாத அரசாங்கத்தை தோற்கடிக்க இப்போது எதிரணியில் ஒன்று சேர்ந்துள்ளோம் இப்படி அவர் கூறினார் அவரின் அக்கருத்தினை கண்டித்து மலையக அரசியல்வாதி ஒருவர் வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு கூறியிருந்தார்.

எட்டு வருடகாலமாக சந்திரிகா அவர்களின் அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொண்ட ஆடம்பரமான வாழ்க்கையையும் வசதிகளையும் மறந்ததுமல்லாமல் சந்திரிகா அவர்களின் ஆட்சி எட்டுவருட காலம் நீடித்ததற்கு காரணகர்த்தாவாக செயற்பட்டவர் தாமே என்பதையும்



படிப்பகம்

www.padippakam.com

மறந்துவிட்டார் (ஆளுங்கட்சி 113 ஆசனங்கள் எதிர்க்கட்சி 112 ஆசனங்கள்) இவர் மட்டுமே ஒரு கட்சியின் தனி அங்கத்தவராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தவர் இவர் நினைத்திருந்தால் பல வருடங்களுக்கு முன்னேயே சந்திரிகாவின் அரசினை வீழ்த்தியிருக்கலாம் ஆனால் அன்றும் இன்றும் மந்திரிப் பதவியே முக்கியமென்பதை தெளிவாக வெளிக்காட்டியுள்ளார் சந்திரிகாவின் அரசு தமிழ் மக்களுக்கு தீங்கு இழைத்துவிட்டதென்பதை எட்டு வருடங்களின் பின்புதான் இவர் அறிந்தாரா? என அவரின் அறிக்கை வெளியானது.

அதன்பின்னர் மட்டக்களப்பிலும் வவுனியாவிலும் நடைபெற்ற பொங்கு தமிழ் விழாக்களில் பேசும்போது திரு. பிரபாகரன் அவர்கள்தான் 35 லட்சம் தமிழ் மக்களினதும் தலைவரென குறிப்பிட்டார் சந்திரிகா அவர்களின் அரசாங்கத்தில் மந்திரிப் பதவி வகிக்கும்வரை இதனை அவர் அறிந்திருக்கவில்லை.

இந்நிலையில் திருமதி. சந்திரிகா அவர்களின் ஆட்சியின்போது இலங்கையில் நடைபெற்ற அனைத்து அனர்த்தங்கட்கும் அப்பாவி மக்கள் மீதான படுகொலைகள் கற்பழிப்புக்கள் போன்றவற்றிற்குமான பொறுப்புக்களில் சரிபங்கை திரு. சந்திரசேகரன் அவர்களே பொறுப்பேற்றாக வேண்டும். ஏனெனில் அனர்த்தங்கள் அத்துமீறல்கள் நடைபெறுவதாக அவர் தெரிந்திருந்தும் அரசாங்கத்திற்கு தனது முழுமையான ஆதரவினை பாராளுமன்றம் கலைக்கப்படும்வரை வழங்கியிருந்தார்.

தனியொரு சுயேச்சை உறுப்பினராக பாராளுமன்றத்தில் அங்கம் வகித்து திருமதி. சந்திரிகா அவர்களுக்கு ஆதரவு வழங்கிமையினாலேயே அரசாங்கம் தனது முழுமையான ஆயுட்காலத்தை பூர்த்திசெய்ய வாய்ப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் தன்னால் மேற்கொள்ளப்பட்ட துரோகச் செயல்களுக்கு பரிகாரம் தேடி தாமும் ஒரு லட்சியவாதி தமிழ் மக்களின் தலைசிறந்த அரசியல்வாதி என்பதை நாடக மேடைகளில் நடிப்பதன் மூலம் மக்களை நம்பவைக்க தம்மாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு 35 லட்சம் மக்களின் ஏகோபித்த தலைவர் திரு. பிரபாகரன் என பிரச்சாரங்களை மேற்கொண்டார். அவர் இலங்கையிலுள்ள தமிழ்மக்களின் எண்ணிக்கை என்னவென்பதைக்கூட சரியாக அறிந்திருக்கவில்லை என்பதும் தெளிவாகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

**திரு.அப்பாத்துரை விநாயகமூர்த்தி அவர்கள் பின்வருமாறு கூறினார் (அ.இ.த.காங்கிரஸ் தலைவர்)**



இந்த அரசாங்கத்தின் ஏழுவருட ஆட்சியில் யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்களின் துன்பங்கள் அதிகரித்தது பாதுகாப்பற்ற சூழ்நிலை உருவாகியது அதனால் வடக்கு வாழ் தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்தில் நம்பிக்கை இழந்துவிட்டனர். இப்போது நாம் எதிரணியில் இணைந்து பொ.ஐ.ஐக்கிய முன்னணியின் ஆட்சியை முழுமையாக ஒழிக்க ஒன்றுபட்டுவிட்டோம் தமிழ் மக்களும் அதற்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும் எனக்கூறினார். அவர் தமது கருத்தில் வடக்கிற்கு அப்பாலுள்ள மக்கள் எவரும் பாதிப்புக்கு உள்ளாக்கப்படவில்லை என்பதை கூறினாரா? அன்றி தலைவன் எவ்வழி குடிகளும் அவ்வழி என திரு.ஜி.ஜி.அவர்களின் பிரதேசவாதத்தை வெளிக்காட்டினரா? அத்துடன் 31.05.1981ல் யாழ் நூல் நிலையம் ஐ.தே கட்சியினரால் எரிக்கப்பட்டதென அன்று இவர்கள் கூறியதெல்லாம் முழுமையான பொய் என தற்போது கூறுகின்றாரா?.

**திரு செல்வம் அடைக்கலநாதன்(ரெலோ தலைவர்) பேசும் போது பின்வருமாறு கூறினார்**



இந்த ஆட்சியில் தமிழ்மக்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை இனப்பிரச்சினைக்கு தீர்வும் முன்வைக்கப்படவில்லை அதனால் ஐ.தே.கட்சியுடன் இணைந்து இந்த அரசாங்கத்தை தோற்கடிக்கும் முயற்சியில் வெற்றிபெறுவோம் தேர்தலில் தமிழ் மக்கள் சிந்தனையுடன் செயல்பட்டு பொ.ஐ.ஐக்கிய முன்னணி ஆட்சியை முழுமையாக துடைத்தெறியவேண்டும் எனகூறினார். இவர் சுற்றி வளைக்காமல் டொலருக்கும், ஸ்ரேலின் பவுணுக்கும் விலை போய்விட்டமையை வெளிக்காட்டினார்.

மேற்கூறியவர்களைவிட ஐ.தே.கட்சியின் பா.உ. ஆக இருந்த



படிப்பகம்

திரு.எஸ். சதாசிவம் பொ.ஐ.ஐ. முன்னணியின் தேசியப்பட்டியலிலும் பி.பி. தேவராஜ் ஐ.தே. கட்சியின் தேசியப்பட்டியலிலும் பிரதிநிதிகளாக தம்மைக் காப்பாற்றிக் கொண்டனர். மேற்காட்டிய விடயங்களிலிருந்து வாக்காளர்கள் ஒன்றை மட்டும் தெளிவாக அறிய முடிகின்றது இந்த தேர்தலின் முக்கிய அம்சம் என்னவெனில் சந்தர்ப்ப வாதத்தையும் பணம், பொருள், பேரங்களையும் இருட்டிலன்றி பட்டப்பகலில் செய்ததுதான். பெண்ணாசை பொன்னாசை மண்ணாசை என்பதைப்பற்றி எல்லாம் இதிகாசங்களில் படித்துள்ளோம் ஆனால் பாராளுமன்ற பேராசையும் மோகமும் மற்றைய ஆசைகளை பின்தள்ளி ரேஸ் குதிரையைப்போல் நுரைக்க ஓடியதனை இத்தேர்தலில் காணக்கூடியதாக அமைந்ததென எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஐவரினதும் அறிக்கைகளை அவதானிக்கும்போது அவர்கள் அனைவரும் மீண்டும் ஐ.தே.கட்சியினரின் ஆட்சியே இலங்கைக்கு பொருத்தமானது என்பதனை ஐயத்திற்கு இடமின்றி தெரிவித்துள்ளார்கள். அதற்கமைய ஐ தே.கட்சியினரின் ஆட்சிக் காலத்தின்போது ஏற்கனவே இடம்பெற்ற 17 வருடகால ஆட்சியின்போது ஐ.தே.கட்சியினராலேயே நடாத்தப்பட்ட மூன்று இனக்கலவரங்கள், வெலிக்கடை படுகொலைகள், யாழ் நூல்நிலைய எரிப்பு மற்றும் 6வது திருத்தச் சட்டத்தின்மூலம் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக பாராளுமன்றத்தில் அங்கம்வகித்த திரு. அமிர்தலிங்கம் அவர்களினதும், சகாக்களினதும் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்ற அனைவரினதும் பதவிகளை பறித்து தமிழகத்திற்கு அனுப்பியமை நியாயமானதென அவர்கள் ஒப்புக்கொண்டுள்ளார்கள். அவ்வாறாயின் அமெரிக்க டொலரினதும், பிரித்தானிய ஸ்ரெலிங் பவுணினதும் பலமே இச்சம்பவத்தில் புகுந்து விளையாடியமையை அவர்கள் மறுப்பார்களா?

குறிப்பு – 31.05.1981ல் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய அமைச்சர்களில் இருவரான திரு. காமினி திசாநாயக்க, மற்றும் திரு. சிறில் மத்யூ அவர்களின் அனுசரணையுடன் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட யாழ் நூல் நிலையத்தினை புனரமைப்புச் செய்வதற்கென திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களினால் (120) நூற்றி இருபது மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு முற்றுமுழுதாக சேதமடைந்த நூல் நிலையம் திருத்தி அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றது.

www.padippakam.com

இடம்பெற்ற தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் பெயரினை ஐக்கிய தேசிய முன்னணி என பெயர் மாற்றஞ் செய்யப்பட்டு ஐ.தே.கட்சி களமிறங்கியது.

## பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தல் (05.12.2001) மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 12.428.762

| கட்சிகள் | வாக்களித்தவர்கள் | பிரதிநிதிகள் | தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய தேசிய முன்னணி | | | | |
| இ.தொ.காங்கிரஸ். | | | | |
| ஐ.ம.அணி. | | | | |
| ம.ம.முன்னணி | 4,086,026 | 96 | 13 | 109 |
| பொ.ஐ.முன்னணி. | | | | |
| இ.கம்யூனிஸ்ட் கடசி | | | | |
| தே.வி.ம.கட்சி. | | | | |
| ல.ச.சமாஜ கட்சி. | | | | |
| ம.ஐ.முன்னணி. | | | | |
| தே.ஐ.முன்னணி | | | | |
| ஸ்ரீ.ல.சு.கட்சி | | | | |
| ஸ்ரீ.ல.ம.கட்சி | 3,330,815 | 66 | 11 | 77 |
| மக்கள் விடுதலை முன்னணி | 815,353 | 13 | 03 | 16 |
| த.தே.ஒற்றுமை முன்னணி | | | | |
| அ.இ.த.காங்கிரஸ் | | | | |
| ஈ.பி.ஆர்.எல்.எப் | | | | |
| ரெலோ | | | | |
| த.வி.கூட்டணி | 348,164 | 14 | 01 | 15 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 105,346 | 04 | 01 | 05 |
| ஈ.பி.டி.பி | 72,783 | 02 | 0 | 02 |
| ஜ.ம.வி.முன்னணி | 16,669 | 01 | 0 | 01 |
| சி.மரபுரிமை அணி | 50,565 | 0 | 0 | 0 |
| புதிய இடதுசாரி முன்னணி | 45,901 | 0 | 0 | 0 |
| ஏனையோர் | 42,395 | 0.47 | 0 | 0 |
| செல்லுபடியான வாக்குகள் | 8,955,869 | 196 | 29 | 225 |



படிப்பகம்

www.padippakam.com

## 05.12.2001ல் இடம்பெற்ற தேர்தலும் பிரபாகரனின் அறிவுறுத்தலுக்கமைய அவசர, அவசரமாக உருவாக்கப்பட்ட நான்கு கட்சிக் கூட்டணியும்

திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் தலைமையிலான ஆட்சியினைக் கலைப்பதற்கு ஐ.தே.கட்சியின் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் மேற்கொண்ட சூழ்ச்சி நடவடிக்கைகள் வெற்றியளித்தது. அதற்கமைய தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப் மற்றும் ரெலோ ஆகிய முன்னாள் ஆயுத அமைப்பக்களும் இணைந்து தேர்தலில் களமிறங்கின. (27.11.2001ல்) தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதி முடிவடையும் தறுவாயிலேயே மேற்படி கூட்டணி அமைத்தமை தொடர்பாக வீரகேசரியின் நிருபர் மேற்படி கட்சிகளின் தலைவர்களை (04.11.2001ல்) பேட்டிகண்டபோது அவர்கள் வழங்கிய பதில் பின்வருமாறு அமைந்தது. சுருக்கமான பதில்களை இங்கு தருகின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அரசியலில் ஈடுபடும் கட்சிகளில் ஏன் நான்கு கட்சிகள் மட்டும் இணைந்துள்ளன?

திரு. ஆனந்தசங்கரி அவர்களின் பதில் – அரசாங்கத்துடன் ஒட்டிக்கொண்டிருக்கும் கட்சிகளை மக்கள் ஏற்கவில்லை.

திரு. டக்ளஸ் தேவானந்தா – ஈ.பி.டி.பியின் அரசியல்ரீதியான வளர்ச்சியைக் கண்டு மேற்படி கட்சிகள் அச்சமடைந்துள்ளன. திரு. தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் போன்றோரை சுட்டுக் கொன்றவர்கள் ரெலோ அமைப்பினர் ஆனால் அவர்களுடன் த.வி.கூட்டணியினர் கூட்டுச் சேர்ந்துள்ளார்கள்.

திரு. ஆனந்தசங்கரி அவர்கள் – பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சியில் பாராளுமன்றம் கலைக்கும்வரை நாங்களும், ரெலோவும் தமிழ் காங்கிரசும் ஒரே நிலைப்பாட்டினையே கடைப்பிடித்தோம். புலிகள் மீதான தடையினை நீக்கவேண்டும், வன்னிக்கான பொருளாதாரத் தடை உட்பட பல விடயங்களில் ஒன்றுபட்டு போராடினோம். இந்நிலையில் அரசுடன் ஜே.வி.பி



படிப்பகம்

www.padippakam.com

இணைந்ததுடன் மக்களும், ராஜதந்திரிகளும், ஊடகங்களும் மற்றும் வெளிநாட்டிலுள்ள எம்மவர்களும் ஒன்றுசேருமாறு எமக்கு அழுத்தம் தந்தனர். புளெட் அமைப்பினை ஏன் சேர்க்கவில்லை என குற்றச்சாட்டு எழுப்பப் படுகின்றது. புளொட்டைச் சேர்த்தால் ஈ.பி.டி.பியையும், வரதராஜப் பெருமாளையும் இணைக்கவேண்டும். சித்தாத்தன் முழுக்க, முழுக்க அரசாங்கத்திடம் ஆயுதமும், நிதியும் பெறும் இயக்கம் இவர்கள் கூட்டமைப்பை விமர்ச்சிப்பது தேவையற்ற விடயம்.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரான குமரகுருபரன் – அரசுடன் பங்காளிக் கட்சிகளாக இருந்தவர்கள் கூட்டணியில் இடம்பெறமுடியாது.

சுரேஸ் பிரேமச்சந்திரன் – அரச படைகளுடன் இணைந்து நிற்பவர்களும், அதற்க எதிரான கொள்கையைக் கொண்டவர்களும் எவ்வாறு இணைய முடியும்.

04.11.2001ல் மேற்படி கருத்தினை வெளியிட்ட திரு. ஆனந்தசங்கரி அவர்கள் கிழக்கு மாகாணம் பயங்கரவாதிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டு (08.08.2009ல்) இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி, புளொட் ஆகிய அமைப்புக்களுடன் கூட்டணி அமைத்து தமது யாழ் மேலாதிக்கத்தினை அங்கு மீண்டும் நிலைநிறுத்துவதற்கு களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது.

●



படிப்பகம்

www.padippakam.com

# பிரபாகரன் தலைமையில் உருவாக்கப்பட்ட புலிகளின் புதிய அரசியல் பிரிவும் அதன் அரசியல் கோட்பாடுகளும். (27.01.2001)



பின்வரும் விடயங்களை முழுமையாக ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்திலும எமது தேசியத்திற்கு ஆதரவான போராட்டத்திற்கு எதிராக செயற்படுபவர் களுக்கு நாம் எவ்வாறான தண்டனைகளை வழங்கினோமோ அதனைத் தொடர்வதற்கு இன்று இங்கு சமூகமளித்திருக்கும் அனைவரும் ஒத்துழைப்போமென சத்தியப் பிரமாணம் எடுக்கவேண்டும் என்பது அறிவுறுத்தப்பட்டது.

இன்று இங்கு சமூகமளித்திருப்பவர்களாகிய நீங்கள் அனைவரும் ஏற்கனவே பலதரப்பட்ட அரசியல் கட்சிகளின் உரிமையாளர்களாக செயற்பட்டமையை இன்றுடன் நிறைவு செய்துவிட்டு எனது கட்டளைகளை ஏற்று செயற்படுவோமெனவும் சத்தியப் பிரமாணம் செய்துகொள்ள வேண்டும்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணையும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்களான சம்பந்தன், ஆனந்தசங்கரி மற்றும் பரராசசிங்கம் ஆகியோர் தம்மை தமிழர் விடுதலைக் கூட்டணி என்றோ தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணையும் சுரேஸ் பிரேமசந்திரன் இனி ஈ.பி.ஆர்.எல்.எப் இன் சுரேஸ் அணி என்றோ செல்வம் அடைக்கலநாதன் போன்றவர்கள் தம்மை ரெலோ என்றோ அழைக்க முடியாது இத்தேர்தலில் நீங்கள் அனைவரும் எமது இயக்கத்தில் இணைந்து ஞானஸ்தானம் பெற்று



படிப்பகம்

www.padippakam.com

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக மாறிவிட்டீர்கள். உங்களைப் போன்றே முன்னாள் ஈரோஸ் அமைப்பின் தலைவரான பாலகுமார் எம்முடன் இணைந்துள்ளார். மேற்படி பிரபாகரன் அவர்களால் விடுக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்ற நிலையில் அனைவரும் சத்தியப்பிரமாணம் செய்தனர். அதற்கமைய (05.12.2001ல்) இடம்பெற்ற தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சின்னமான உதய சூரியன் சின்னத்தில் களமிறங்கினர்.

## அவசர, அவசரமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கத்திற்கான காரணிகள்.

சந்திரிகா தலைமையிலான இலங்கை அரசு திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களைப் பிரதமராகக் கொண்ட அரசாங்கத்தினை அதன் பதவிக்காலம் முடியுமுன்னர் கலைத்தமை பிரபாகரனுக்கு தலையிடியை உருவாக்கியது. அடுத்து இடம்பெறவிருந்த தேர்தலில் பங்குகொள்ள வேண்டுமென எதிர்பார்த்தார்கள். அத்தோடு தமது அமைப்பின் மீதான தடையை நீக்கினால்தான் பேச்சுவார்த்தைக்கு வருவோமென மார்தட்டிய புலிகளுக்கு தமது சொந்தப் பலவீனம் நன்றாகவே தெரிந்திருந்தது. புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு தேர்தலில் தனித்துக் களமிறங்கியிருந்தால் கட்டுப்பணமும் கிடைக்காது என்பதும் அவர்களுக்கு தெரிந்திருந்தது. 20வருடகாலமாக தியாகம் செய்தோம் எனத் தம்பட்டமடித்த புலிகள் 1989.12.21ல் பதிவு செய்யப்பட்ட தமது சொந்த அரசியல் கட்சியான (Peoples Front of The Liberation Tiger) தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் அமைப்பு என்னும் கட்சியில் களமிறங்க முடியாது தமது முன்னாள் எதிரிகளுடன் கூட்டிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டமைப்பிற்குப் பின்னால் ஏன் ஒழித்து விளையாட வேண்டும்.

●



படிப்பகம்

www.padippakam.com

## பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தல் (05.12.2001) விடுதலைப் புலிகளின் பிரதி நிதிகளாக தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியினர்.

| மாவட்டம் | த.தே.மு பெற்ற வாக்குகள் | மொத்த வாக்காளர் | விகிதம் | மொத்த பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 102,324 | 633,487 | 54.84% | |
| வீ. ஆனந்தசங்கரி | 36,217 | | | |
| பொன் கஜேந்திரகுமார் | 29,641 | | | |
| மாவை சேனாதிராஜா | 33,831 | | | |
| என். ரவிராஜ் | 19,263 | | | |
| எம்.கே. சிவாஜிலிங்கம | 17,869 | | | |
| ஏ.விநாயகமூர்த்தி | 19,472 | | | 06 |
| வன்னி | | 218,086 | 46.77% | |
| எஸ். அடைக்கலநாதன் | 28.548 | | | |
| சிவசக்தி ஆனந்தன் | 14,023 | | | |
| ராஜா குகனேஸ்வரன் | 15,936 | | | 03 |
| மட்டக்களப்பு | 86,284 | 282,079 | 48.17% | |
| யோசப் பரராஜசிங்கம் | 20,279 | | | |
| கி ஞானமுத்து | 20,675 | | | |
| ரீ.தம்பிராசா | 24.475 | | | 03 |
| அம்பாறை | 48,789 | 360,497 | 17.41% | |
| சந்திரநேரு. அரியநாயகம் | 26,282 | | | 01 |
| திருகோணமலை | 56,121 | 212,280 | 34.83% | |
| இரா சம்பந்தன் | 40,110 | | | 01 |

இத்தேர்தலின்போது இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் என்னவெனில் தமிழ் தேசியவாதிகளின் ஆதரவினை தமதாக்கிக்கொள்வதற்காக திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் அனுசரணையுடன் அன்றைய தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியினர் கொழும்பு மாவட்டத்திலும் தமது வேட்பாளரை களமிறக்கினர். அதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் வாழ்ந்த தமிழ் மக்களின் (12,696) வாக்குகளும் கிடைக்கப்பெற்றதற்கமையவே அத்தேர்தலில் தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியினர் தேசியப்பட்டியலின் மூலம் 01 உறுப்பினரைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தமையினால் மொத்தம் (15)



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினர்களை தமதாக்கிக் கொண்டனர். அத்துடன் தந்தை செல்வா திரு. அமிர்தலிங்கம், திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் போன்றவர்களின் உருவப்படங்களை தமது தலைவர்களென பின்னால் நிறுத்தியவாறு என்றென்றும் வெளிக்காட்டும் திரு. ஆனந்தசங்கரி அவர்களும் திரு. அமிர்தலிங்கம் உட்பட பல தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளை கொன்றொழித்த பிரபாகரனுடன் ஒரே மேசையில் அமர்ந்திருந்த காட்சி அவரின் அரசியல் நிலைப்பாட்டினை வெளிக்காட்ட உதவியது. அந்நிகழ்விற்கான பரிசாக 10.10.2000ல் இடம்பெற்ற தேர்தலில் (12 888) வாக்குகளை யாழ் மாவட்டத்தில் பெற்ற அவர் 05.12.2001ல் இடம்பெற்ற தேர்தலில் அதே மாவட்டத்தில் (36 217) வாக்குகளை பெற்றமை குறிப்பிடத்தக்கது. நிலைமை இவ்வாறு இருந்தபோதும் புலிகளுடனான உறவினை தொடர்வதற்கு சம்பந்தன் அவருக்கு இடங்கொடுக்கவில்லை. அதனால் (05.12.2004ல்) இடம்பெற்ற தேர்தலில் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் புலிகளினால் புறந்தள்ளப்பட்டார்.

(05.12.2001ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி (U.N.F) என்னும் பெயரில் மேலும் சில அரசியல் கட்சிகளை தம்முடன் இணைத்து ஐ.தே.க களமிறங்கியது. திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான இக்கூட்டணி (109) உறுப்பினர்களை பெற்ற நிலையில் மேலும் சில சிறுபான்மைக் கட்சிகளை இணைத்ததற்கமைய சிறுபான்மையான அரசாங்கமொன்றினை (19.12.2001ல்) அமைத்து பிரதமராக திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் பதவியேற்றார். பிரதமராக பதவியேற்ற திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் (07.02.2004) வரையும் ஆட்சிபீடத்தில் அமர்ந்திருந்தார். பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் டிசம்பர் 2006 வரையும் ஏறக்குறைய மூன்று வருடங்கள் இருந்தபோதும் மேற்குறிப்பிட்டுள்ள திகதியில் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா அவர்கள் பாராளுமன்றத்தினைக் கலைத்தார்.

அன்று (07.09.1978ல்) நாட்டின் சர்வ அதிகாரங்களையும் உள்ளடக்கிய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி அமைப்பு முறைமையினை உருவாக்கிய ஐ.தே.கட்சியினரால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதியாகப் பதவிவகித்த ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களின் சம்மதமெதுவும் பெறப்படாதநிலையில் தமிழீழ விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com

புலிகள் அமைப்பினருடன் (22.02.2002ல்) சமாதான உடன்படிக்கை ஒன்றினை திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் மேற்கொண்டார்.

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் (14.03.2002ல்) தமது உத்தியோகபூர்வ விஜயமொன்றினை யாழ்ப்பாணத்திற்கு மேற்கொண்டார். இங்கு முக்கியமான விடயமென்னவெனில் அதே தினத்தில் தென்கிழக்கு ஆசியாவிற்கான அமெரிக்காவின் விசேட தூதுவரான கிறிஸ்ரினா ரொகா அவர்களும் பாதுகாப்புப் படையினரின் விமானம் ஒன்றின்மூலம் சில அதிகாரிகளுடன் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தினை மேற்கொண்டு திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுடன் இணைந்து யாழ் குடாநாட்டில் அதிமோசமான பாதிப்பிற்கு உள்ளாக்கப்பட்ட சில பிரதேசங்களை பார்வை இட்டனர்.

அத்துடன் யாழ் அரச அதிபரையும் ஏனைய சில அதிகாரிகளையும் சந்தித்ததுடன் நல்லூர் முருகன் ஆலயத்திலும், நாக விகாரையிலும் இடம்பெற்ற விசேட வழிபாடுகளிலும் கலந்து வழிபட்டனர். பின்னர் யாழ் கத்தோலிக்க தேவாலய ஆயர் வண பிதா தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களையும் சந்தித்து யாழ் நிலவரங்கள் தொடர்பாக ஆராய்ந்ததன் பின்னர் கொழும்பு திரும்பினர்.

அமெரிக்காவின் விசேட தூதுவரான கிறிஸ்ரினா ரொகா அவர்களினது ரணில் விக்கிரமசிங்கா அவர்களுடனான யாழ் விஜயம் மேற்குலக நாடுகள் சிலவற்றினது ஆலோசனைக்கு அமையவே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதென சில ஊடகங்கள் அன்று செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்நிலையில் ஏற்கனவே திரு. ஜே.ஆர் ஜயவர்தனா அவர்களினால் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் குடியுரிமை ரத்துச் செய்தமைபோன்று திருமதி. சந்திரிகா குமாரணதுங்க பண்டாரநாயக்கா அவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் முயன்றபோதும் ஒரு ஜனாதிபதிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது இலங்கை அரசியலமைப்பில் சாத்தியமில்லாத காரணத்தினால் அவ்விடயம் கைவிடப்பட்டது. இருந்தும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய பிரதிநிதிகள் சிலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை தயார்செய்து 15



படிப்பகம்

www.padippakam.com

உறுப்பினர்கள்வரை சிறையிலடைக்கப்பட்டனர். இவர்களில் முக்கியமானவராக கருதப்பட்ட முன்னைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான திரு. அனுருத்த ரத்வத்த (21.02.2001 லும்) பின்னர் அவரின் மக்களான திரு. ராணக ரத்வத்த, ரோகான் ரத்வத்த ஆகியோருக்கு எதிராக நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டதற்கமைய அவர்கள் பின்னர் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

இந்தியாவின் நல்லெண்ணத்தினை மீளக்கட்டியெழுப்புவதற்காக திருகோண மலையில் அமைந்துள்ள (50) எண்ணைக் குதங்களை இந்தியாவிற்கு (99) வருட குத்தகைக்கு வழங்கி ஒப்பந்தம் ஒன்றினையும் ஐ.தே.கட்சியினர் கைச்சாத்திட்டனர். எது எவ்வாறு மாற்றமடைந்தாலும் இலங்கைக்கு அனுப்பப்பட்டிருந்த இந்திய அமைதிகாக்கும் படையினருக்கு எதிராக ஐ.தே.கட்சியினர் மேற்கொண்ட வன்முறையின் மூலம் ஐ.தே.கட்சியினரை நம்புவதற்கு இந்தியா ஒருபோதும் தயாரில்லை என்பது அவர்களின் கடந்தகால நடவடிக்கைகள் தெளிவாக்கியது.

வடக்கு கிழக்கு ஆகிய இரு மாகாணங்களிலிருந்தும் மொத்தம் 31 பிரதிநிதிகள் (2001) ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது தெரிவாகினர் இவர்களில் 14 உறுப்பினர்கள் மட்டும் த.தே கூட்டமைப்பில் தெரிவாகிய நிலையில் விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளெனவும் அத்துடன் வடகிழக்கு மாகாணங்கள் தமிழர்களுக்கு மட்டுமே உரித்தான தென்னும் கோஷங்களையும் முன்வைத்தனர்.

பொதுத்தேர்தலின்போது தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான் என்னும் கோஷத்தை மக்கள் முன் வைத்ததுடன் தமிழ் மக்களின் பிரச்சினை விடயத்தில் தீர்வு காண்பதற்காக அவர்களுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமெனவும் ஏனைய எந்தவொரு சிறுபான் மையினரை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுடனும் அரசாங்கம் பேசக்கூடாதெனவும் வலியுறுத்தினர். இந்நிலையில் பண்டாரவன்னியன்படை, குளக்கோட்டன்படை, இராஜசிங்கன்படை என்னும் பெயர்களிலெல்லாம் துண்டுப்பிரசுரங்கள் வெளியிட்டு தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியினரைத் தவிர வேறு எந்தவொரு தமிழ்கட்சிகளுக்கேனும் தமிழர்கள் வாக்களித்தால் அவர்கள் அனைவரும் துரோகிகளாகக் கணிக்கப்படுவார்களென அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. தேர்தல் முடிவுகளின்படி 348,162 வாக்குகளைப்பெற்று 14 உறுப்பினர்கள் தேர்வுசெய்யப்பட்டனர். அதேவேளை தேசியப்பட்டியல்மூலமும் ஒரு பிரதிநிதி தெரிவுசெய்யப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் ஏற்கனவே (13.07.1989ல்) விடுதலைப் புலிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாக்கப்பட்டு கடுமையான சகயீனம் காரணமாக அரசியலி லிருந்து ஓய்வுபெற்ற நிலையில் தமிழ் நாட்டில் வைத்திய சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த திரு. சிவசிதம்பரம் அவர்களை தேசியப்பட்டியல் பிரதிநிதியாக நியமிப்பதற்காக தமிழ் நாட்டிலிருந்து அவர் (05.01.2002) இலங்கைக்கு வரவழைக்கப்பட்டார்.

இலங்கைக்கு வருகைதந்த அவர் (08.01.2002ல்) தேசியப்பட்டியலின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டார். (Wheel Cheir) மூலம் தனது நாளாந்த செயற்பாடுகளை மேற்கொண்ட 79 வயது நிரம்பிய ஒரு நோயாளியை பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்ததில் கட்சி அரசியலுக்கு அங்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதா? அல்லது பிரதேசவாதத்திற்கா? அன்றி பாராளுமன்ற உறுப்பினர் பதவியொன்றை வகிக்கக்கூடிய தகமைபெற்ற தமிழர்களெவரும் வடகிழக்கில் இல்லாத நிலையேற்பட்டுவிட்டதா? என பலரும் அன்று கேள்விகளை எழுப்பினார்கள். இருந்தும் பதவியேற்று நான்குமாத இடைவெளியில் 2002ம் ஆண்டு யூன் மாதம் 6ந் திகதி அவர் மரணமானார். அதனைத் தொடர்ந்து திருமலை மாவட்டம் கட்டைபறிச்சான் என்னும் கிராமத்தினைச் சேர்ந்த திரு. கதிர்காமத்தம்பி துரைரெட்ணசிங்கம் என்பவர் அவரின் வெற்றிடத்திற்கு நியமிக்கப்பட்டார்.

தேர்தல் முடிவுற்று தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியினரின் நாடாளுமன்றக் குழு கூட்டம் நடைபெற்றபோது கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவர் தெரிவில் பிரதேசவாத உணர்வுகள் வெளியாகி இறுதியில் விடுதலைப் புலிகளின் அறிவுறுத்தலுக்கமைய திரு. சம்பந்தன் அவர்கள் த.தே.ஒ. முன்னணியின் பாராளுமன்றக் குழுவின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டார். தேர்தல் பிரச்சாரங்களின்போது மக்கள் முன்வைத்த கருத்துக்களுக்கு முழுக்குப்போட்ட நிலையில் அரசாங்கத்துடனான சகல பேச்சுக்களிலும் அவர்கள் நேரடியாக தொடர்புகொள்ள ஆரம்பித்து அங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும், பரிமாறப்பட்ட கருத்துக்களையும் உடனுக்குடன் வன்னியில் நிலைகொண்டிருந்து தமது தலைமையகத்தை நடாத்தும் விடுதலைப்புலிகளின் தலைவர் திருபிரபாகரன் அவர்களுக்கு தெரியப்படுத்தும் செயற்பாடுகளில் தம்மை ஈடுபடுத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் திரு.சு.ப. தமிழ்செல்வன் அவர்களால் தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ந் திகதி வன்னிக்கு வருமாறு அழைக்கப்பட்டனர். அங்கு திரு. பிரபாகரன் அவர்களுடனான சந்திப்பு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஒருமாதகால இடைவெளியில் 11.5.2002ல் மீண்டும் திரு சம்பந்தன் அவர்கள் வன்னிக்கு அழைக்கப்பட்டு தனியான பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டது.




திருவாளர்கள் ரணில் – பிரபா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் (22.02.2002) வடக்கு கிழக்கு மாகாணங்கள் அனைத்திலும் பொங்குதமிழ் விழா என்னும் பெயரில் மாபெரும் ஊர்வலங்களும் விழா நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. இவ்விழாக்கள் அனைத்திலும் பெரிய அளவிலான திரு. பிரபாவின் உருவப்படங்களும் தமிழர் தாயகமென வரையப்பட்ட வரைபடங்களும் ஏந்தியவாறு தமிழீழக் கோஷங்கள் முழங்க பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை வலுக்கட்டாயமாக ஈடுபடுத்தி விழாக்களின் மூலம் தமிழ் மக்கள் அனைவரும் விடுதலைப் புலிகளின் தலைமையை மட்டுமே ஏற்கின்றனரென வெளியுலகிற்கு காண்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விழாக்களில் முண்டியடித்துக் கொண்டு த.தே.ஒ. முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட மலையக பிரதிநிதிகள் சிலரும் தமது வீராவேசமான மேடைப் பேச்சுக்களை வெளிக்காட்டினர்.



படிப்பகம்

www.padippakam.com

## தேசியத் தலைவரிடம் திடீரென உதயமான கிழக்கு மக்கள்மீதான பற்று

தேசியப்பட்டியலின் வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்ட திரு.முருகேசு சிவசிதம்பரம் அவர்கள் காலமானதையடுத்து அவரின் வெற்றிடத்திற்கு திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. துரைரட்ணசிங்கம் அவர்கள் பொதுச்சபையின் அங்கீகாரமோ அன்றி கூட்டமைப்பின் பொம்மை தலைவரின் அங்கீகாரமோ பெறப்படாத நிலையில் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களின் சிபார்சின்பேரில் நியமிக்கப்பட்டார். திருமலை மாவட்டத்திற்கு ஒரு உறுப்பினரை மேலதிகமாக தெரிவுசெய்வதன்மூலம் திரு. பிரபாகரன் அவர்களின் கடந்தகால செயற்பாட்டை மூடிமறைக்க அவர்கள் முயற்சித்தமை வெளிப்படையானது. 1997ம் ஆண்டு ஒரு மாதகால இடைவெளியில் திருமலை மாவட்ட பிரதிநிதிகள் இருவரை படுகொலை செய்தமைக்கு பரிகாரம்தேட இந்நடைமுறை கையாளப்பட்டமையை சிலர் குறிப்பிடத் தவறவில்லை. அன்றைய திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. தங்கத்துரை. ஜனாப். எம்.ச.எச். மஹ்ரூப் ஆகிய இருவரும் அவர்களுடன் (3) வயதுக் குழந்தை ஒன்றும் மேலும் 12 பேரும் முறையே 5.07.1997, 20.07.97. ஆகிய தினங்களில் திரு. பிரபாகரன் அவர்களின் பணிப்பின்பேரில் படுகொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திரு. ரணில் விக்கிரமசிங்கா அவாகளுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் திரு. வே பிரபாகரன் அவர்களுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையினைத் தொடர்ந்து நாட்டின் தேசியரீதியான பாதுகாப்பிற்கும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள அரசியல்ரீதியான நிகழ்வுகளையும் அவதானித்த அன்றைய ஜனாதிபதியான திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் (07.02.2004ல்) பாராளுமன்றத்தினை கலைத்தார். அதற்கமைய இரண்டு வருடங்கள் ஒரு மாதம் 18 நாட்கள் மட்டுமே திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான ஆட்சி நடந்து முடிந்தது. ஏற்கனவே தமிழ் தேசிய ஒற்றுமை முன்னணி என அழைக்கப்பட்ட அமைப்பின் பெயர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தேர்தலில் களமிறங்கினர். மேற்படி தேர்தலில் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் புறந்தள்ளப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான பலதரப்பட்ட பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்டபோதும் பேச்சுவார்த்தைகள் அனைத்தும் விடுதலைப் புலிகளை மேலும் பலமடையச் செய்ததே தவிர இனப்பிரச்சினைக்கான தீர்வு எதனையும் எட்டமுடியாத நிலையில் (21.04.2003ல்) விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிய நிலையில் (14.11.2003ல்) சமாதானப் பேச்சுக்களின் அனுசரணையாளர்களாக பணியாற்றிய நோர்வே தரப்பினரும் வெளியேறினர். இந்நிலைமைகளை அவதானித்த ஜனாதிபதியான திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் (07.02.2004ல்) பாராளுமன்றத்தினை கலைத்தார்.

## விடுதலைப் புலிகளுக்கு ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கான நிர்ப்பந்தம்.

இந்நிலையில் (11.09.2001ல்) அமெரிக்காவில் அல்கொய்தா பயங்கரவாதிகளினால் இரட்டைக் கோபுரம் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தினைத் தொடர்ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் உலகளாவியரீதியில் முடுக்கிவிடப்பட்டதன் விளைவே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை ஒன்றிற்கு போகவேண்டிய தேவையேற்பட்டதே தவிர புரையோடிப்போன இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினை எட்டுவதற்காக அவர்கள் பேச்சுவார்த்தை மேசையில் அமரவில்லை.

இந்நிலையிலேயே மேற்குலக நாடுகள் சிலவற்றின் ஆலோசனைகளுக்கமைய மீண்டும் ஓர் உடன்படிக்கையினை மேற்கொண்ட திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களும் விடுதலைப் புலிகளின் பலம் மேலும் பலமடங்கு வளர்ச்சி பெறுவதற்கான பலதரப்பட்ட உதவிகளை நல்கியதன் மூலம் ஐ.தே.கட்சியினரின் அரசியல் வரலாற்றில் மூன்றாவது தடவையும் ஏமாற்றமடைந்தனர்.

இவ்வுடன்படிக்கையினை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு எட்டாத நிலையில் விடுதலைப் புலிகளின் கைகள் ஓங்குவதனை அவதானித்த ஜனாதிபதி திருமதி. சந்திரிகா குமாரதுங்க அவர்கள் ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான அரசாங்கத்தினை (07.02.2004ல்) கலைத்தார்.



படிப்பகம்

## விடுதலைப் புலிகளின் தற்கொலைக்குண்டுதாரியால் கொல்லப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஸ்தாபகரான ஜனாப் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்களின் மரணத்திற்கு நஸ்டஈடு.

திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் அரசாங்கத்தில் (6) வருடங்கள் அமைச்சராக பதவிவகித்த எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் திருமதி. சந்திரிகா அவர்களின் தலைமையிலான அரசாங்கம் பன்னிரெண்டாவது பாராளு மன்றத்தை தெரிவுசெய்வதற்காக 2001ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ந் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டு அக்டோபர் 20ந் திகதி முதல் 27ந் திகதிவரை வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டு 2001 டிசம்பர் மாதம் 05ந் திகதி பொதுத் தேர்தல் நடாத்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய எதிர்வரும் தேர்தலுக்கான பிரச்சார நடவடிக்கைகளில் தீவிரமாக அஷ்ரப் அவர்கள் களமிறங்கி செயற்பட்டார். இந்நிலையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை என்னுமிடத்தில் எற்பாடுசெய்யப்பட்டிருந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டமொன்றில் பங்குபற்றுவதற்காக (16.10.2000ல்) ஹெலிகப்டர் ஒன்றின்மூலம் பயணஞ் செய்துள்ளார்.

இவருடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மேலுமொரு வேட்பாளரான அம்பாறை மாவட்டத்திற்கான வேட்பாளரான திரு. கதிர்காமத்தம்பி என்பவரும் அவரின் நண்பரெனக்கூறப்பட்ட கொழும்பு துறைமுகக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றிய ஒருவரும் மேலும் (12) பன்னிரெண்டு பேரும் அவ்விமானத்தில். பயணம் செய்தனர். மேற்கூறிய கதிர்காமத்தம்பி என்பவருக்கு அறிமுகமான தற்கமைய அவருடன் இணைந்து மேற்படி நபரும் பிரயாணஞ்செய்தார். விமானப்படைக்குச் சொந்தமான ஹெலிகப்ரர் கேகாலை மாவட்டத்தின் அரநாயக்கா என்னுமிடத்தினூடாக சென்று கொண்டிருந்த வேளை சனிக்கிழமை காலை (9.00) மணியளவில் சிதறி வெடித்துள்ளது. மேற்படி சம்பவம் இடம்பெற்ற இடம் கொழும்பிலிருந்து (60) கிலோ மீற்றராகும். இக்குண்டு வெடிப்பினை மேற்படி மர்ம நபரே மேற்கொண்டதாகவும், அவர் விடுதலைப் புலிகளினால் அனுப்பப்பட்ட கொலையாளி என்பதும் பின்னர் வெளியானது. அந்த மர்ம மனிதரால் கொண்டுசெல்லப்பட்ட குண்டு வெடித்ததன் மூலமே விமான விபத்து இடம்பெற்றதாக பின்நாளில் வெளியான செய்திகள் தெரிவித்தன.

www.padippakam.com

அதுவிடயத்திற்கு சான்றுபகர்வது போன்று ஜனாப் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் மரணம் தொடர்பான விசாரணைகள் எதுவும் மேற்கொள்ளப்படாது அப்படுகொலைக்கு நஸ்டஈடு வழங்கியமையே முடிவாக அமைந்தது. அதற்கமைய அமைச்சரின் மனைவியான பேரியல் அஷ்ரப் அவர்களுக்கு இருபது லட்சம் ரூபாவும், அவரது மகன் அமான் அஷ்ரப் அவர்களுக்கு ஐம்பது லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டதற்கமைய கொலை தொடர்பான விசாரணை நிறுத்தப்பட்டது. படுகொலை இடம்பெற்று (19) பத்தொன்பது நாட்களில் அதாவது (05.12.2001ல்) திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் கட்சி தோல்வியுற்று திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான ஐ.தே.முன்னணியினர் (109) உறுப்பினர்களைப் பெற்று ஆட்சி அமைத்தனர். இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை ஐ.தே. முன்னணியினர் மேற்கொண்டமையால் எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்களின் படுகொலை தொடர்பான விசாரணை எதனையும் மேற்கொள்ளாத திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களின் தலைமையிலான அரசு அவ்விடயத்தினை கைவிட்டது. ஜனாப்.எம்.எச்.எம்.அஷ்ரப் அவர்கள் திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களின் அரசாங்கத்தில் துறைமுக கப்பற் கூட்டுத்தாபனம், புனர் நிர்மாணம், மற்றும் மறுசீரமைப்பு அமைச்சராக பணியாற்றினார்.

## அஷ்ரப்பின் மரணத்திற்கு அமைச்சரவை நஸ்டஈடு - முஸ்லிம் குரல் (07.03.2003)

தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப்பின் மரணம் தொடர்பாக நீதி விசாரணை நடைபெறாமல் அவருக்கு நஸ்ட ஈடு வழங்கி விடயத்தை கிடப்பில் போடுவதற்கு முக்கியமான சக்திகள் முயன்று வருகின்றன. இந்நிலையில் தலைவரின் குடும்பத்திற்கு பல லட்சம் ரூபா நஸ்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. தலைவரின் இழப்பினை இந்த இலட்சங்கள் ஈடுசெய்ய முடியாது!. ஆனால் அப்பணம் அவரின் குடும்பத்திற்கு உதவியாக இருக்கும்.

பேரியல் அஷ்ரப்பிற்கு (20) இருபது லட்சம் ரூபாவும், அவரின் மகன் அமான் அஷ்ரப்பிற்கு (50) ஐம்பது லட்சம் ரூபாவும், தலைவருடைய தாய்க்கு (10) பத்து லட்சம் ரூபாவும் வழங்க அமைச்சரவைக்கு சிபார்சு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவையில் தலைவருடைய தாய் மரணித்ததை சுட்டிக்காட்டியதன்பேரில் அவருக்கு இத்தொகை வழங்கப்படத் தேவை இல்லையென முடிவு செய்யப்பட்டுள்ளது. இதேநேரம் அமைச்சரவையில் இருந்த யாருமே தலைவரின் மரணத்திற்கான நீதி விசாரணையைக் கோரவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## இலங்கை அரசியலும் பண்டாரநாயக்கா குடும்பமும்.

1959ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ந் திகதி திரு. பண்டாரநாயக்கா அவர்கள் பௌத்தபிக்கு ஒருவரால் சுடப்பட்டு 26ந் திகதி மரணமானதைத் தொடர்ந்து திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் விதவையானார். பின்னர் 1960ம் ஆண்டு யூலை மாதம் நடைபெற்ற தேர்தலின் மூலம் 1960 யூலை 21ந் திகதி உலகின் முதலாவது பெண் பிரதமராக பதவியேற்றார். மகள் சந்திரிகா குமாரணதுங்கா அவர்கள் 1988ம் ஆண்டு பெப்ருவரி 16ந் திகதி தனது கணவரான திரு. விஜே குமாரணதுங்கா அவர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து விதவையானார். 1993ம் ஆண்டு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அதிகப்படியான வாக்குகளைப் பெற்று இலங்கையின் முதலாவது பெண் முதலமைச்சரானார். பின்னர் 1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற்றதன் மூலம் இலங்கையின் இரண்டாவது பெண் பிரதமரானார் 1994 நவம்பரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு இலங்கை வரலாற்றில் ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதியாக தெரிவானார். இரண்டுவருட குறுகியகால இடைவெளியில் உலகிலேயே மாகாண முதலமைச்சராகவும் நாட்டின் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் தெரிவுசெய்யப்பட்டவராக திகழ்பவர் திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா அவர்களே.

தாயாரான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அவர்கள் தனது கணவரை இழக்கும்போது அவர் வயது நாற்பத்திரண்டை தாண்டியிருந்தார். அதேபோல் மகள் திருமதி சந்திரிகாவும் தனது கணவரை இழக்கும்போது அவரது வயது நாற்பத்திரண்டு. திருமதி. ஸ்ரீமாவோ அவர்கள் பிரதமராக பதவியேற்கும்போது சந்திரிகாவிற்கு வயது 14 அதேபோல் சந்திரிகா இலங்கையின் முதற்பெண் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்படும்போது அவரின்



படிப்பகம்

www.padippakam.com

மகள் யசோதாவுக்கு வயது 14 இவற்றைவிட உலகிலேயே ஆகக்கூடுதலான காலம் பிரதமராக பதவிவகித்த பெண் என்னும் பெருமையைப் பெற்றவராக கின்னஸ் புத்தகத்திலும் (2002ல்) இடம்பிடித்துள்ளார் திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பிரதமராக பதவிவகித்த காலம் 17 வருடம் 208 நாட்களாகும்.

21 யூலை 1960 முதல் 25மார்ச் 1965
29 மே 1970 முதல் 22 யூலை 1977
12 நவம்பர் 1994 முதல் 10 ஆகஸ்ட் 2000

## 27.01.2002 தமிழ் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் தொடர்பான மறுபார்வை.

திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் அவர்களின் தலைமையில் கடந்த (26) ஆண்டுகளும் அதனைத் தொடர்ந்து திரு. அமிர்தலிங்கம் அவர்களின் ஆளுமையின் கீழ் (25) ஆண்டுகளும் தம்மை ஜனநாயகவாதிகளென தமிழ் மக்கள் மத்தியில் அடையாளங்காட்டி பாராளுமன்ற ஆசனங்களுக்கு தெரிவானதற்கமைய அவரவர் வகித்த பதவிக்காலத்தினை தமது குடும்ப வாரிசுகளின் நல்வாழ்விற்கு பொருளாதாரம் ஈட்டும் கருவியாக பயன்படுத்தினர். இந்நிலையில் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழ் மக்களுக்கான தனி ஈழம் காண்பதற்கென முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் முதல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள்வரை நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல்வாதிகளின் உயிர்களை காவுகொண்டது.

இந்நிலையில் காலங்காலமாக தமிழ் மக்களை ஏமாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்.எல்.எப்) ஆகிய நான்கு மிதவாத – ஆயுதப் பிரிவுகளை இணைத்து (27.01.2002ல்) உருவாக்கப்பட்டதே இன்றைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகும். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதவெறிக்கு பல நூற்றுக்கணக்கான இளைஞர்களையும், யுவதிகளையும் தாரைவார்த்துக் கொடுத்த முன்னாள் ஆயுதக் குழுக்களான மேற்குறிப்பிட்ட இரண்டு



படிப்பகம்

www.padippakam.com

அமைப்புக்களும், ஜனநாயக வாதிகளும் ஊரா வீட்டுப்பிள்ளைகளின் உதிரத்தில் குளிர்காய்ந்த நிலையிலேயே பயங்கரவாத அமைப்பென சர்வதேச நாடுகளின் முன்னணி நாடுகளென பேசப்படும் அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய (32) நாடுகளினால் பட்டியலிட்டநிலையில் அவர்களுடன் சங்கமமாகினர். மேற்படி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட திரு இரா சம்பந்தன் அவர்கள் திருகோணமலை வாக்காளர்களால் ஒரேயொரு தடவை பாராளுமன்றம் சென்றிருந்தார். அதனைக்கூட அவரால் அடைவதற்கான வாய்ப்பினை அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்வைக்கப்பட்ட தமிழீழக் கோரிக்கையே துணைபுரிந்தது. அதன்பின்னர் இடம்பெற்ற (1989) பொதுத்தேர்தலில் கட்டுப்பணத்தினை இழந்த திரு சம்பந்தன் அவர்கள் அதனைத் தொடர்ந்து. 16.08.1994ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தம்மை திருமலை மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக நிலைநிறுத்தி அத்தேர்தலிலும் திரு. தங்கத்துரை அவர்களினால் தோற்கடிக்கப்பட்டார். இருந்தும் விடுதலைப் புலிகளின் தயவினை நாடிய சம்பந்தனுக்கு திரு. தங்கத்துரை அவர்களின் படுகொலை 37 மாதங்கள் பாராளுமன்றப் பலகணியினை அலங்கரிப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தியது.

அதன்பின்னர் (10.10.2000ல்) இடம்பெற்ற தேர்தலில் திருமலையில் போட்டியிட முடியாத நிலையில் தனது மருமகன் முறையானவரும், பிரித்தானியாவில் வசித்தவருமான திரு. சிவபாலன் என்பவரை திருமலையில் களமிறக்கினார் சம்பந்தன். அவர் சார்ந்த கட்சியினர் மொத்தமாக (14,090) வாக்குகளைப் பெற்றநிலையில் அவரும் தோல்விகண்டார். இந்நிலையில் தமிழகத்திற்கு தஞ்சம்புகுந்த சம்பந்தன் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளிடம் சரணடைந்தநிலையில் அவருக்கு அடுத்து (05.12.2001ல்) இடம்பெற்ற தேர்தலில் திரு பிரபாகரன் அவர்களால் திருமலை மாவட்டத்தின் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக நியமனம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் தமது தேர்தல் பிரச்சாரத்திற்கான முதலாவது கூட்டத்தினை மூதூர் நவரெத்தினம் மண்டபத்தில் ஆரம்பித்த திரு. இரா சம்பந்தன் அவர்கள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி விடுதலைப் புலிகளின் தலைவர் கௌரவ வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களே என சூளுரைத்தார். இதுவே



படிப்பகம்

www.padippakam.com

இலங்கை அரசியல் வரலாற்றில் ஒரு இனத்தின் ஏகப்பிரதிநிதியென தனிமனிதர் ஒருவருக்கு பட்டமளிப்புச் செய்த சம்பவமாக அமைந்தது. திரு. பிரபாகரன் அவர்களுக்கு ஏகப்பிரதிநிதிப் பட்டம் வழங்கியதும் அதற்கு முந்திய மூன்று தேர்தல்களில் தோல்விகண்ட சம்பந்தன் அவர்கள் சார்ந்த கட்சியினருக்கு திருமலை மாவட்ட மக்கள் (56,121) வாக்குகளை வழங்கி கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து அதுவரைகாலமும் ஜனநாயக போர்வையினை போர்த்தியிருந்த திரு. சம்பந்தன் அவர்கள் புலித்தோலை போர்த்தி பரமசிவனின் அடியாராக தம்மை மாற்றினார்.

## "Elections in the NE a referendum on TNA policies" -Sampanthan.

[Tamil Net, Wednesday, 21 November 2001, 20:13 GMT]

Mr.R.Sampanthan, Secretary General of the Tamil United Liberation Front (TULF), Wednesday appealed to the Tamil people to consider the forthcoming general election in the Northeast province as a referendum in support of the policy of the Tamil National Alliance (TNA) that any future peace negotiations should be held with the Liberation Tigers only and no parallel talks should be held with any other Tamil groups.

Mr.Sampanthan, chief candidate of the Tamil National Alliance candidate contesting the Trincomalee district, is on a three day electioneering in Tamil villages, which are under the control of the State armed forces in Mutur, south of Trincomaleetown,sinceTuesday.Last week, he visited several Tamil villages in the Mutur south area, which are controlled by the Liberation Tigers. Several TNA candidates also accompanied Mr Sampanthan in the election campaign.



படிப்பகம்

www.padippakam.com

"The TNA has put forward several demands to the government in power such as lifting the ban imposed on Liberation Tigers in Sri Lanka and enabling them to participate in peace talks through international third party mediation as the sole representative of the Tamil people freely without any constraints. Secondly, the government should talk to the LTTE only, and no parallel talks should be held with any other Tamil groups when negotiating with them. A vote for the TULF symbol 'Rising Sun' would be considered as a 'Yes' vote for this policy of the TNA. Therefore> the Tamil people should consider the forthcoming general election as a referendum and vote for the TNA," Mr.Sampanthan said.

He addressed election meetings at Mutur Navaratnam Hall, Alimsenai, Iruthayanagar, Pattithidal, Palaththadichchenai, Munnampoddiveddai, and Narayanapuram onTuesday. On Wednesday, meetings were held at Manalchchenai, Peruveli, Mallikaitheivu and Kanguveli.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரான திரு சம்பந்தன் அவர்கள் பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளுடன் இணைந்து பணியாற்ற தயாரானார். அதேவேளை அக்கட்சியின் தலைவரான திரு ஆனந்தசங்கரி அவர்கள் தாம் சார்ந்த கட்சியின் தேர்தல் சின்னமான உதயசூரியன் சின்னத்திலேயே த.தே கூட்டமைப்பினர் தேர்தலில் களமிறங்க வேண்டுமென்னும் முரண்பாடான கருத்தினைத் தெரிவித்தமையால் (02.04.2004ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அவர் வடமாகாணத்தில் போட்டியிடமுடியாதநிலை உருவாக்கப்பட்டது. இருந்தும் சுயேச்சையாக களமிறங்கிய திரு அனந்தசங்கரி அவர்களும் அவரின் உறுப்பினர்களும் ஒருவர்கூட வெற்றிபெறவில்லை. அதேவேளை இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் மட்டுமே மேற்கொள்ளவேண்டுமென ஏற்கனவே அவர் வலியுறுத்தியமை குறிப்பிடத்தக்கது. *1970, 10.10.2000,* மற்றும் *05.12.2001* ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் வெற்றியீட்டி இறுதியான தேர்தலில் (*36.217*) வாக்குகளைப்பெற்ற திரு ஆனந்தசங்கரி அவர்கள் இலங்கையின் புதிய ஏகப்பிரதிநிதியால் பழிவாங்கப்பட்டார். இந்நிலையில் அவர் பின்னைய காலங்களில் எந்தவொரு தொகுதியிலும் போட்டியிடமுடியாதவாறு விடுதலைப் புலிகளின் அச்சுறத்தலுக்கு உள்ளாக்கப்பட்டார். இருந்தும் விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com

புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களின் மறைவிற்குப் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து செயற்படுவதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.

முன்னாள் ஆயுதக்குழுவின் தலைவரான திரு. பிரேமச்சந்திரன் (05.12.2001ல்) இடம்பெற்ற தேர்தலில் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக போட்டியிட்டு தோல்வியுற்ற நிலையில் ஏகப்பிரதிநிதியின் கட்டளைகளை ஏற்பதாக சத்தியப்பிரமாணம் செய்ததற்கமைய (02.04.2004ல்) இடம்பெற்ற தேர்தலில் பிரபாகரன் அவர்களால் யாழ்ப்பாண மாவட்டத்தின் வேட்பாளர் பட்டியலில் இடம்வழங்கப்பட்டு வெற்றியீட்டி பாராளுமன்றம் சென்றார். இவர் ஏற்கனவே திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் திருமதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் தலைமையிலான அரசாங்கத்தில் கடற்றொழில், மீன்பிடி அமைச்சராக பணியாற்றியபோது அவரின் அமைச்சில் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (1977ம்) ஆண்டு தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் களமிறங்கியபோது தம்மை யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் வேட்பாளராக நிறுத்த வேண்டுமென திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பீடத்திடம் வேண்டுகோள் விடுத்தார். அதனை ஏற்க முன்வராத தலைமைப்பீடம் யாழ்ப்பாணம் தொகுதிக்கு திரு. யோகேஸ்வரன் அவர்களை நியமித்தனர். இந்நிலையில் திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு பருத்தித்துறை தொகுதியினை வழங்குவதாக உறுதியளித்தனர். அதனை ஏற்க விரும்பாத திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் உரிமை தனக்கே உரியதென நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார். அன்றைய ஜனாதிபதியாக திரு. ஜே.ஆர் ஜயவர்தனா அவர்கள் பதவியேற்றதும் அவரின் உதவியினைப் பெற்ற திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் நீதிமன்றில் கட்சியின் உரிமை அவருக்கே உரியதென்னும் தீர்ப்பினைப் பெற்றார். இச்சம்பவமே மூன்றாவது தலைமுறையான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தொடர்ந்தும் தமிழ் காங்கிரஸ் கட்சியினை வழிநடாத்தவதற்கான வாய்ப்பு கிடைத்தது.

இலங்கையில் எந்தவொரு அரசியல் கட்சியும் தொடர்ந்து மூன்றாவது தலைமுறையிடம் தலைமைப் பொறுப்பினை நிர்வகித்ததாக வரலாறு கிடையாது.



படிப்பகம்

www.padippakam.com

திரு பண்டாரநாயக்கா அவர்களின் தலைமையிலான ஸ்ரீ.ல.சு கட்சியினர் கூட காலத்திற்கேற்றவாறு பெயர்களை மாற்றம் செய்து ஏனைய அரசியல் கட்சிகள் சிலவற்றினை தம்முடன் இணைத்துக்கொண்டே தேர்தல்களில் பங்குகொண்டமை வரலாறாகும். இந்நிலையில் திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் தேசியத் தலைவரென கூறப்படும் திரு. பிரபாகரன் அவர்களால் அவரது தந்தையாரான திரு. குமார் பொன்னம்பலம் அவர்களுக்கு மாமனிதர் பட்டம் வழங்கியதன் பின்னர் அரசியலில் தம்மையும் இணைத்துக் கொள்வதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் சங்கமமானார். ஆனால் அதுவிடயம் பிரபாகரன் அவர்களின் மறைவிற்குப் பின்னர் கானல் நீராகியது. திரு. ஸ்ரீசபாரெத்தினம் அவர்களின் தலைமையிலான ரெலோ அமைப்பில் ஓர் உறுப்பினராக தம்மை இணைத்திருந்த திரு. அமிர்தநாதன், அடைக்கலநாதன் என்பவர் அமைப்பின் தலைவரான திரு. ஸ்ரீசபாரெத்தினம் அவர்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதவெறிக்கு பலியாக்கப்பட்டதன் பின்னர் அன்றைய பிரேமதாசா அவர்களின் தலைமையிலான அரசாங்கத்திற்கு ஆதரவாக செயற்பட்டதுடன் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பில் உளவாளியாக பணியாற்றினார். அதற்கமைய அவரின் தலைமையிலான ரெலோ இயக்கத்தினரின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் ஆயுதங்களை வழங்கியது. அதன்பின்னர் முதல்தடவையாக (16.08.1994ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் திருமலை, மட்டுநகர் மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் முறையே 7,8,9 வேட்பாளர்களை களமிறக்கியபோதும் எந்தவொரு மாவட்டத்திலும் எவரும் தெரிவாகவில்லை. பின்னர் (10.10.2000ல்) இடம்பெற்ற தேர்தலில் வன்னியில் போட்டியிட்டு (21,705) வாக்குகளைப்பெற்று முதல் தடவையாக மூன்று பிரதிநிதிகளை தமது கட்சியின் சார்பில் பெற்றனர். பின்னர் இடம்பெற்ற தேர்தலில் தேசியத் தலைவருடன் சங்கமமாகிய நிலையில் அரசியலில் இன்றுவரை நிரந்தர இடத்தினை தமதாக்கிக்கொண்டனர்.

கிழக்கு மாகாண தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரான திரு. பா அரியனேந்திரன் அவர்கள் விடுதலைப் புலிகளின் கிழக்குமாகாண உளவுப் பிரிவின் முக்கியஸ்தர்களில் ஒருவராக செயற்பட்டமைக்காக (02.04.2004ல்) இடம்பெற்ற பொதுத்தேர்தலில் (38,633) வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய திரு. கிங்ஸ்லி இராஜநாயகம் அவர்களை விடுதலைப்புலிகள் (30.03.2004ல்) படுகொலை செய்ததற்கமைய அவரின் வெற்றிடத்திற்கு அரியநேந்திரன் நியமிக்கப்பட்டார். அதன்மூலமே அவர் பாராளுமன்றப்



படிப்பகம்

www.padippakam.com

பலகணியில் அமர்வதற்கான வாய்ப்பினை தமதாக்கிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான திரு. சோமசுந்தரம் சேனாதிராசா அவர்கள் (01.12.2011ல்) பாராளுமன்றத்தில் உரையாற்றியபோது வடபகுதியில் ஒரு லட்சத்து 47 ஆயிரம் மக்களை காணவில்லை என மன்னார் ஆயர் கூறியதாக தெரிவித்திருந்தார். அதன்மூலம் மேற்படி ஆயராக தேவாலயத்தில் பணியாற்றுபவரே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் வடமாகாணத்திற்கான சனத்தொகை புள்ளிவிபர அதிகாரியாக பணியாற்றுவதனை அவர் மறைமுகமாக கூறியிருந்தாரா?

குறிப்பு – தந்தை செல்வாவின் வழிவந்த தனயன்கள் தாங்களே எனக்கூறிய மேற்படி முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாயகர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினை சர்வதேசப் பயங்கரவாதிகள் என பின்வரும் (32) முன்னணி நாடுகள் தடை செய்திருந்த நிலையிலேயே அவர்களுடன் சங்கமமாகினர். அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் (32 நாடுகள்) பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பினை சர்வதேசப் பயங்கரவாதிகளென பட்டியலிட்டிருந்தனர். 1992ல் இந்தியாவும், 2001 பிரித்தானியாவும், (17.05.2006ல்) ஐரோப்பிய ஒன்றியமும், ஜனவரி மாதம் 1998 முதல் 04.09.2002 வரையும் பின்னர் (07.01.2009) முதல் ஸ்ரீலங்காவும் தடைசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வன்னியில் இராணுவத்தினரால் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறலும் வடமாகாண மக்களின் தீர்ப்பும்.

கடந்த நான்கு பொதுத் தேர்தல்களில் வடமாகாண தமிழ் மக்களினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்ட வாக்குகளும், மனித உரிமைகளைமீறி அப்பாவித் தமிழ் மக்களை கொன்றொழித்தாக புலம்பெயர் தமிழர்களாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலும் குற்றஞ்சாட்டப்பட்ட இராணுவத் தளபதி திரு. சரத் பொன்சேகாவிற்கு வழங்கப்பட்ட தமிழ் மக்களின் ஆதரவினையும் (26.01.2010) கீழ்காணும் புள்ளிவிபரங்கள் துல்லியமாக வெளிக்காட்டுகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

| | யாழ்ப்பாணம் | வன்னி |
|---|---|---|
| பொதுத்தேர்தல் (02.04.2004) | 257,320 | 90,835 |
| மொத்தம் | 348,155 | |
| பொதுத் தேர்தல் (08.04.2010) | 65,119 | 41,673 |
| மொத்தம் | 106,792 | |
| பொதுத்தேர்தல் (05.12.2001) | 102,324 | 41,950 |
| மொத்தம் | 144,274 | |
| பொதுத்தேர்தல் (10.10.2000) | 32,852 | 21,705 |
| மொத்தம் | 54,577 | |
| சரத் பொன்சேகா | 113,877 | 70,367 |
| மொத்தம் | 184,244 | |
| மஹிந்த ராஜபக்ஸ | 44,154 | 28,740 |
| மொத்தம் | 72,894 | |

02.04.2004ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மாற்றுக் கட்சிகளின் உறுப்பினர்கள் எவரையும் பிரச்சாரம் செய்ய விடுதலைப் புலிகள் அனுமதிக்காத நிலையிலேயே 348,155 வாக்குகளை பெற்றமையை ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பாளர்களின் அறிக்கை உறுதிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு சாதகமான சம்பவங்கள்.

திருமதி. சந்திரிகா குமாரணதுூங்க அவர்களின் ஆட்சியின்போது பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றிய திரு.அனுருத்த ரத்வத்தை என்பவர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் பிரதமராக பதவியேற்று இரண்டு மாதம் 11 நாட்கள் இடைவெளியில் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார். (09.12.2001 – 20.02.2002). 08.04.2002ல் கண்டி –யாழ்ப்பாணம் ஏ9 வீதி திறக்கப்பட்டது. 13.04.2002ல் பிரபா – ஹக்கீம் உடன்படிக்கை.

## பாதுகாப்பு அமைச்சரின் கைதுக்கான பிரதான விடயமாக பின்வரும் சம்பவம் காரணமாக அமைந்தது.

1977 முதல் 1994 வரை ஆட்சிபீடத்தில் அமைந்திருந்த ஐ.தே. கட்சியினரின் ஆட்சிக்காலத்தின்போது 4797 விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் மட்டுமே பலியாகினர். அதேவேளை திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்களின்



படிப்பகம்

www.padippakam.com

ஆட்சிக்காலமான (1994 – 2002) வரையான எட்டு ஆண்டுகளில் 13,262 விடுதலைப் புலிகள் பலியானார்கள். அதேவேளை ஐ.தே.கட்சியினரின் ஆட்சிக்காலத்தில் கூடுதலான இராணுவத் தளபதிகள் கொல்லப்பட்ட நிலையில் சந்திரிகாவின் ஆட்சிக்காலத்தில் ஏராளமான இராணுவச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

**விடுதலைப் புலிகளின் தாயகக் கோட்பாட்டிலிருந்து தனித்துவமாகப் பிரியும் கிழக்கின் விடுதலை.**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட கிழக்குப் பிளவு

2002ம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் ஐ.தே.கட்சி அரசாங்கத்திற்குமிடையாலான சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து சர்வதேச நாடுகளுக்குச் சென்று பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன. தாய்லாந்து, சுவிஸ், நோர்வே, பிரான்ஸ் போன்ற இடங்களில் இப்பேச்சுக்கள் இடம்பெற்றன. இறுதியாக ஒஸ்லோ உடன்படிக்கை என்கின்ற ஓர் ஒப்பந்தம் அரசு – புலிகள் ஆகிய இருதரப்பினருக்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. புலிகளின் தரப்பில் இவ்வுடன்படிக்கையில் புலிகளின் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களும், புலிகளின் இராணுவத் தளபதியான கேணல் கருணா அவர்களும், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்செல்வன் ஆகியோரும் கைச்சாத்திட்டனர்.

## விடுதலைப் புலிகளுக்கும் திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்களை பிரதமராகக் கொண்ட குழுவினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தைகள்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதேவேளை 21.02.2002ந் திகதியன்று பருத்தித் துறை கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்குமிடையில் மோதல் நடைபெற்றதில் ஒரு கடற்படை சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட அதேவேளை புலிகளின் தரப்பிலும் ஒருவர் கொல்லப்பட்டு அறுவர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகின அவ்விடயத்தை இருசாராரும் பெரிதுபடுத்தவிரும்பாத நிலையில் உடன்படிக்கை முதலில் திரு. பிரபாகரன் அவர்களால் 22.02.2002ல் கைச்சாத்திடப்பட்டு அப்பிரதிகள் சமாதானத்தூதுவராக செயலாற்றிய நோர்வேயின் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டு அதன்பின்னர் அப்பிரதிகள் நோர்வேயில் வைத்து வெளியிடப்பட்டது. அரசாங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்த நகல்கள் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களால் கைச்சாத்திடப்பட்டது.

ஏற்கனவே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்பாக கைச்சாத்திடவிருக்கும் உடன்படிக்கையில் நாட்டின் தலைவர் என்றவகையில்



படிப்பகம்

www.padippakam.com

திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களும் கட்டாயம் கைச்சாத்திட வேண்டுமெனும் நிபந்தனை விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியில் அவ்விடயம் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படவில்லை.

கொழும்பிற்கும் பிரித்தானியாவிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை அரசாங்கத்திற்கும் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையில் நடாத்திய நோர்வே நாட்டின் தூதுக்குழுவினர் 06.03.2002ல் வன்னிக்குச் சென்று திரு.பிரபாகரன் அவர்களையும் புலிகளின் ஏனைய முக்கியஸ்தர்கள் சிலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர் அதனைத்தொடர்ந்து 25.3.2002ல் திரு அன்ரன் பாலசிங்கம் அவரின் மனைவியார் அடெல் பாலசிங்கம் ஆகிய இருவரும் நோர்வே பிரதிநிதிகளின் உதவியுடன் மாலைதீவிற்கு வந்து அங்கிருந்து ஆகாய மார்க்கமாகவும் கடல் வழியாகவும் பயணம் செய்யக்கூடிய நோர்வே அரசுக்குச் சொந்தமான சிறிய (சீ பிளேன்) விமானமொன்றின் மூலம் வன்னிப் பகுதியிலுள்ள இரணைமடுக்குளத்தில் வந்து இறங்கினர் அவர்களை திரு.பிரபாகரன் அவர்கள் மனைவியார் சகிதம்சென்று வரவேற்று வன்னிக்கு அழைத்துச் சென்றனர்.

அதன்பின்னர் 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ந் திகதி திரு. பிரபாகரன் அவர்களின் ஏற்பாட்டில் சர்வதேச பத்திரிகையாளர் மகாநாடு ஒன்று வன்னியில் கூட்டப்பட்டது. இப்பத்திரிகையாளர் மகாநாட்டிற்கு உலகின் பலபாகங்களிலிருந்தும் ஊடகவியலாளர்கள் தொலைக்காட்சி நிறுவனங்கள் போன்றவை வன்னிக்கு படையெடுத்தன. இந்நிலையில் ஏற்கனவே பத்திரிகையாளர் மகாநாடு நடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த இடம் திடீரென வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதுடன் மகாநாட்டிற்கு சென்ற அனைவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. ஏறக்குறைய 500ற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் சென்றிருந்தபோதும் சிலருக்கு மகாநாட்டில் பங்குபற்றக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை. அத்துடன் சுயவிருப்பத்துடன் அழைப்பு விடுக்கப்பட்டு கூட்டப்பட்ட மகாநாட்டில் திரு. பிரபாகரன் அவர்களின் சுயபாதுபாப்பு காரணமாக அனுமதி மறுக்கப்பட்டதாக காரணம் கூறப்பட்டது. மகாநாட்டிற்குச் சென்ற ஊடகவியலாளர்களை கூட்ட மண்டபத்திற்கு அனுப்புவதற்குமுதல் 7 மணித்தியாலங்கள் அவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள். ஊடகவியலாளர்களால் ஆங்கிலமொழியில் முன்வைக்கப்பட்ட [illegible]தரப்பட்ட வினாக்களுக்கும்



படிப்பகம்

திரு.அன்ரன் பாலசிங்கத்தினூடாகவே விடையளிக்கப்பட்டமை மகாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது மகாநாட்டில் உரையாற்றிய திரு. பிரபாகரன் அவர்கள் கூறும்போது இந்திய அரசாங்கத்தின் உதவியை நாம் நாடுகின்றோம் எமது மக்கள் இந்தியாவையும் அதன் மக்களையும் நேசிக்கின்றார்கள் நாங்கள் இந்திய உபகண்டத்துடன் இனரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் பிணைக்கப்பட்டுள்ளோம். இந்தியா எங்கள் தாய்நாடு அத்துடன் சமாதானப் பேச்சுக்களும் இந்தியாவிலேயே நடைபெறவேண்டுமென விரும்புகின்றோம் இப்படி வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச பத்திரிகையாளர்களுடனான மகாநாடு நடந்து முடிந்த பின்னர் 12.04.2002ல் தமிழத் தேசிய ஒற்றுமை முன்னணியினருடனும் 13ந் திகதி ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடாத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது கிழக்குமாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக புலிகளினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் பற்றிக் கலந்துரையாடியதுடன் 1991ம் ஆண்டுகாலப்பகுதியில் வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு அரசாங்கமும் தாங்களும் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கப்பட்டதும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாக நல்லதோர் தீர்வினை இருசாராரும் இணைந்து செயற்படுத்துவதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் திரு. ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அடுத்த நாளான 14ந் திகதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனும் மலையக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படும் போது மலையக மக்களின் பிரச்சினையும் உள்ளடக்கப்பட்டு ஒரே நேரத்தில் அனைவரினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மலையகப் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை புலிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அத்துடன் வடக்குகிழக்கிற்கு அப்பால் தமிழ்மக்கள் செறிந்துவாழும் பகுதிகளான மலையகம் கொழும்பு போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்களை ஆரம்பிப்பது பற்றியும் ஆராயப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

www.padippakam.com

## ரணில் - பிரபா உடன்படிக்கையும், பேச்சு வார்த்தைகளும்.



புரிந்துணர்வு உடன்படிக்கையைத் தொடர்ந்து அரசாங்கத்துடன் நடாத்தவிருக்கும் பேச்சுவார்த்தையை இந்தியாவில் (தமிழ்நாடு) நடாத்துவதற்கு தமக்கு அனுமதிதந்து உதவுமாறு புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்களால் இந்திய மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் இந்திய அரசாங்கத்தினால் 09.01.2002ல் நிராகரிக்கப்பட்டது. திரு. பாலசிங்கத்தின் உடல்நிலை பாதிப்புக்குள்ளாகி இருப்பதால் அவருக்கு தினசரி வைத்தியரின் ஆலோசனையும் மருத்துவ உதவிகளும் தேவைப்படுவதால் அதனைப் பெறக்கூடிய வாய்ப்பு தமிழ் நாட்டில் இருப்பதாக காரணங்காட்டப்பட்டு அங்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதனைத் தொடர்ந்து அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் மத்தியிலான பேச்சுவார்த்தை 16.09.2002ந் திகதியன்று நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையாளர்களின் உதவியுடன் தாய்லாந்து நாட்டின் சத்தாஹிப் கடற்படைத்தளத்தில் ஆரம்பமானது. இப்பேச்சுவார்த்தையில் அரச தரப்பினரின் சார்பில் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், அமைச்சர் மிலிந்த மொறகொட, ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களும் அத்துடன் சமாதான செயலக பணிப்பாளர் திரு. பேர்ணாட் ஜயதிலகா அவர்களும் இவர்களுடன்



படிப்பகம்

www.padippakam.com

பல பொது அமைப்புகளும் முயற்சிகள் மேற்கொண்டபோதும் முடிவு எதுவும் சாதகமான நிலையை தோற்றுவிக்கவில்லை.

இலங்கைக்கு பொருளாதார உதவி வழங்கவிருக்கும் சர்வதேச நாடுகளின் மகாநாட்டை அடுத்த தடவை ஜப்பான் நாட்டில் கூட்டுவதாகவும் அம்மகாநாட்டின்போது உதவிவழங்கும் நாடுகள் அனைத்தும் பங்குகொள்ளக் கூடியவாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதெனவும் அதற்கான மகாநாட்டை யூன்மாத முற்பகுதியில் நடாத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

இந்த இடைப்பட்ட காலப்பகுதியில் அகதிகள் மீள்குடியேற்றம் சம்பந்தமாக அரசாங்கத்தின் பாரபட்சமான செயற்பாடுகள், ராணுவ உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து ராணுவம் வெளியேறாமை போன்ற இன்னும்பல காரணங்களை உதாரணங்காட்டி வடகிழக்கு மாகாண மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி சமாதானத்தீர்வில் மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க இடைக்கால நிர்வாக சபையை தம்மிடம் ஒப்படைக்க வேண்டுமென்னும் கோரிக்கையை மீண்டும் விடுதலைப் புலிகள் அரசிடம் வற்புறுத்தினர். புலிகளினால் முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை சம்பந்தமான கோரிக்கை முழுமையாக அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் ஜப்பானில் யூன் மாதம் 09, 10, 11ந் திகதிகளில் நடைபெற்ற சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் மகாநாட்டில் தாம் பங்குகொள்வதில்லையென புலிகள் பகிஸ்கரித்தனர்.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகி புலிகளின் போராளிகள் வடகிழக்கிலுள்ள நகரங்களுக்கும் கிராமப்பகுதிகளுக்கும் வருவதற்கான நடைமுறைகள் தளர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மக்கள் மத்தியில் நடமாட ஆரம்பித்தவர்கள் ஏற்கனவே மாற்று இயக்கங்களிலிருந்து ஜனநாயக வழிக்குத் திரும்பி அரசியலில் பிரவேசித்த நபர்களை படுகொலை செய்யும் நடவடிக்கைகளை தீவிரமாக முடுக்கிவிட்டனர். அதற்கமைய 24.05.2003 வரை மாற்றுக்கட்சியின் உறுப்பினர்கள் 27 பேரை படுகொலை செய்ததாக அரசாங்கம் அறிக்கை வெளியிட்டது அதன்பின்னரும் கொலைகள் நிறுத்தப்படுவதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இந்நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செல்லுபடியற்றதாகியது.




படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| 20–08–2003 | இடைக்கால அரசுபற்றி புலிகளின் சட்டவல்லுனர்களுடன் பிரான்ஸில் ஆலோசனை. |
| 01–09–2003 | புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. சுவிஸ் அதிகாரிகளுடன் சந்திப்பு. |
| 02–10–2003 | அயர்லாந்தில் இடைக்கால அரசுபற்றி புலிகளின் பிரதிநிதிகள் ஆலோசனை. |
| 31–10–2003 | இடைக்கால நிர்வாக யோசனை புலிகளினால் நோர்வே ஊடாக அரசுக்கு கையளிப்பு. |
| 14–11–2003 | பேச்சுவார்த்தையிலிருந்து நோர்வே தற்காலிகமாக விலகல். |
| 26–11–2003 | ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுப் பிரதிநிதி வன்னியில் பிரபாகரனுடன் சந்திப்பு. |

## ஐ.தே.கட்சியினரால் 31.05.1981ல் தீயீட்டு நாசமாக்கப்பட்ட யாழ் நூல் நிலையத்தின் புனரமைப்பும் மீள் திறப்பு விழாவும்.



**31.05.1981 இல் அரச அமைச்சர்களின் அனுசரணையுடன் எரியூட்டப்பட்ட யாழ் நூல்நிலையம்.**



படிப்பகம்

www.padippakam.com



திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்களின் அரசாங்கத்தினால் 120 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் காட்சியளிக்கும் யாழ் நூலகம்.

வடக்கில் இடம்பெற்ற மாவட்ட சபைக்கான (04.06.1981) தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற ஆயுதக் குழுக்களுக்கும், அரச பாதுகாப்புப் படைகளுக்கும் இடையிலான வன்முறைகளைத் தொடர்ந்து இலங்கை பாதுகாப்புப் படையினரின் அடாவடித் தனங்கள் அங்கு அதிகரித்தது. இக்காலப்பகுதியில் ஐ.தே.கட்சியின் முக்கிய அமைச்சர்களான திரு. காமினி திசாநாயக்க, திரு. சிறில் மத்யூ ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். இந்நிலையிலேயே யாழில் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. அதற்கமைய 31.05.1981ந் திகதியன்று யாழ் நூல் நிலையம் தீயீட்டு நாசமாக்கப்பட்டது. மேற்படி நூல் நிலையத்தினை முழுமையாக புனரமைப்புபச் செய்வதற்காக 13 வருடங்களின் பின்னர் ஆட்சி பீடத்தில் அமர்ந்த திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களின் தலைமையிலான அரசாங்கத்தினால் 120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு நூல் நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டது. அதன்பின்னர் ரணில் –பிரபா உடன்படிக்கையைத் தொடர்ந்து 14.02.2003ல் புனரமைப்புச் செய்யப்பட்ட நூலகம் பொதுமக்களின் பாவனைக்காக சம்பிரதாய பூர்வமாக திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்நிலையில் திறப்பு விழா இடம்பெறுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்



படிப்பகம்

www.padippakam.com

அதாவது 12.02.2003ல் நூலகத்திற்குச் சென்ற புலிகளின் ஆயுததாரிகள் நூலகத்தில் கடமையிலிருந்த காவலாளியை ஆயுதமுனையில் அச்சுறுத்தி நூலகத்தின் சாவிக் கொத்தினை பறித்துச் சென்றனர். பின்னர் மறுநாள் அன்றைய மா நகர முதல்வரான திரு. செல்லன் கந்தையா என்பவரையும், மாநகர சபையின் ஏனைய உறுப்பினர்களையும் தனித்தனியாக சந்தித்த ஆயுததாரிகள் நூலகத்தினை திறக்க முற்பட்டால் அங்கு இரத்தக்களரி உருவாகுமென எச்சரிக்கை விடுத்தனர். புலிகளின் ஆயுததாரிகளினால் விடுக்கப்பட்ட எச்சரிக்கையினைத் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் யுத்த நிறுத்த கண்காணிப்பாளர்களிடமும், யாழ் பொலிஸாரிடமும் முறையீடு செய்தனர். தொடர்ந்து புலிகளின் வன்முறையாளர்களினால் ஜனநாயகரீதியில் தெரிவான தமது கடமைகளை செய்வதற்கு எதிராக கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாக காரணங்காட்டி தமது ராஜினாமாக் கடிதங்களை உள்ளூராட்சி நிர்வாகத்தினரிடம் கையளித்துவிட்டு ஒதுங்கினர்.

## புரிந்துணர்வு உடன்படிக்கை செல்லுபடியற்றது மட்டுமன்றி, ஆயுதப் போராட்ட வரலாற்றில் புதிய திருப்பம் உருவாகின்றது.



பன்னிரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பதின்மூன்றாவது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் வடக்கு, கிழக்கில் இருந்த யுத்தநிறுத்த சூழல் குழலைக்கப்பட்டு புதியதொரு பிரச்சினை பூதாகாரமெடுத்தது.

விடுதலைப் புலிகளின் வரலாற்றினை மட்டுமல்ல, இலங்கையின் அரசியல் வரலாற்றிலேயே மாபெரும் திருப்புமுனை ஒன்றினை ஏற்படுத்தப் போகும் முக்கிய முடிவு ஒன்றினை கேணல் கருணா அவர்கள் எடுத்தார். ஒஸ்லோ உடன்படிக்கையூடாக விடுதலைப்புலிகள் தன்னாட்சி அதிகாரம் என்கின்ற மாபெரும் வெற்றியினை ஈட்டிவிட்டார்கள் என்றும், அவர்களது தலைமையை யாராலும் அசைக்க முடியாதென்றும், ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் மட்டுமல்ல, ஒற்றுமையிலும் ஒப்பற்றவர்கள் என்றும், வடக்கும் - கிழக்கும் தமிழ் மக்களினதும், தமிழ் தேசியத்தினதும்



படிப்பகம்

www.padippakam.com

பிரிக்கப்பட முடியாத அடையாளமென்றும், கட்டப்பட்டிருந்த அனைத்துவித பிரமைகளும் அன்றுதான் தகர்த்தெறியப்பட்டது. அன்று 2004 பங்குனி மாதம் 03ந் திகதி கிழக்கு மாகாணத்தின் மிகப்பெரும் புலிகளின் பாசறையாக விளங்கிய தேனகம் முகாமிலிருந்து கேணல் கருணா அவர்கள் வரலாற்றினைப் புரட்டிப்போட்ட அந்த மாபெரும் கிழக்குப் பிளவை அறிவித்தார். சுமார் ஆறாயிரம் போராளிகள் அப்போதைய காலகட்டத்தில் அவரிடம் இருந்தனர்.

பல்லாண்டு காலமாக தமிழர் அரசியலில் ஆதிக்கம் செலுத்திவரும் யாழ்ப்பாண அரசியல்வாதிகளின் மேலாதிக்கவாதம் புலிகளின் ஆட்சியிலும் தொடருவது கிழக்குப் பிளவினூடாக அம்பலமானது. புலிகளின் கைகளில் தன்னாட்சி அதிகாரம் கிடைக்கப் பெறுவதற்கு முன்னோடியாக அவர்களால் நியமிக்கப்பட்ட முப்பத்தைந்து துறைச்செயலாளர்களில் ஒருவரேனும் கிழக்கு மாகாணத்தினைச் சேர்ந்தவர்கள் இல்லை என்பதே கருணா அம்மான் முன்வைத்த முக்கிய குற்றச்சாட்டாகும். இதனூடாக காலாகாலமாக யாழ் மேலாதிக்க அரசியல் சக்திகளால் ஒடுக்கப்பட்டுவரும் கிழக்கு மாகாண மக்களின் உரிமைக்குரலாக கருணா பரிணமித்தார்.

கேணல் கருணா அவர்களின் மேற்படி முடிவானது கிழக்கு மாகாண மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பினைப் பெற்றது. கிழக்கு மாகாணத்து பெற்றோர்கள் அதுவரை காலமும் தமது வாரிசுகளை குறைந்தபட்சம் வீட்டுக்கொருவர் என்ற அடிப்படையில் யுத்தத்திற்காக பலியிடவேண்டிய நிர்ப்பந்தத்திலிருந்து அவர்கள் விடுபட்டார்கள். பிரபாகரனது உருவப் படங்களையும், கொடும்பாவிகளையும் வீதிகள் எங்கும் போட்டு எரிப்பதில் அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்கள்.

கேணல் கருணா முன்வைத்த குறைபாடுகளையும், கோரிக்கைகளையும் புலிகளின் தலைமை உதாசீனம் செய்தது. யாருடனும் பேசியோ, உரையாடியோ, விட்டுக்கொடுத்தோ, சமரசஞ்செய்தோ ஒருபோதும் அரசியல் செய்திராத திரு. பிரபாகரன் அவர்கள் தமது வழமையான பாணியில் கேணல் கருணாவுடனும் அணுக முனைந்தார். அதுவரை காலமும் புலிகளின் இராணுவ வெற்றிகளுக்கு முதுகெலும்பாக திகழ்ந்த கேணல் கருணாவை, தனது முதலாவதும், இறுதியுமான கிளிநொச்சியில் இடம்பெற்ற சர்வதேச பத்தரிகையாளர்களுடனான (10.04.2002ல்) மகாநாட்டில் புலிகளின் வெற்றிகள் அனைத்திற்கும் காரணம்



படிப்பகம்

www.padippakam.com

கருணா அம்மானே என்று தனது வாயாலேயே புகழாரம் சூட்டிய அதே கருணாவை தேசத்துராகி என அறிவித்தார்.

அதன்பின்னர் தனது இராணுவத்தை கிழக்கு மாகாணப் போராளிகள்மீது ஏவிவிட்டு படுகொலைகளை நடாத்த உத்தரவிட்டார். இவ்விடயம் தொடர்பில் இதுவிடயத்தினை சமாதான வழியில் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எதனையும், ஊடகத்துறையினரோ, அன்றி வடமாகாண புத்திஜீவிகளோ மேற்கொள்ள முயலவில்லை. மாறாக திரு. பிரபாகரன் அவர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு வலுச்சேர்ப்பவர்களாகவே அவர்களது நடவடிக்கைகளும் அமைந்தன. தமிழ் தேசத்துரோகி கருணா, காட்டிக் கொடுக்கும் மட்டக்களப்பான், சிங்கள அரசுக்கு விலை போய்விட்ட தனிமனிதன் என்கின்ற சொல்லாடல்களை மீண்டும், மீண்டும் மக்களிடத்திலும், விடுதலைப் புலிகளின் ஆதரவு பத்திரிகைகள், வானொலிகள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்ற அனைத்து தகவல் சாதனங்களிலும் பரப்பியதனூடாக அனைத்து விதமான தமிழ் ஊடகங்களும் நடுநிலைமை, சமூகப்பொறுப்பு மனிதநேயம் போன்ற அனைத்திலுமிருந்து தூரவிலகி புலிகளின் குரல்களாக மாறின. அதனூடாக புலிகளின் மிலேச்சத்தனமான முடிவுகளுக்கு அடிகோலிட்டவர்களாகவும், துணை போனவர்களாகவும், செயற்பட்டனர்.

கிழக்கு மாகாணத்தின்மீது யாழ்ப்பாணம் செலுத்திவந்த சமூக, பொருளாதார ஆதிக்கத்தின் உண்மைப் பக்கங்களை தமிழ் புத்திஜீவிகள்கூட மூடிமறைக்க முயன்றனர். எழுத்தாளர்கள், அறிவுஜீவிகள், பேராசிரியர்கள் அனைவருமே யாழ் மேலாதிக்கவாதத்தை, தமிழ் சமூகத்திற்குள் இருந்துவந்த வடக்கு, கிழக்கு முரண்பாடுகளை அடையாளங்காண மறுத்தனர். ஒரு சமூகத்தின் பன்மைத்துவ தன்மையை மூடிமறைத்து புலிகளது ஏகதலைவன், வடகிழக்கு தமிழர்களின் தாயகம் என்கின்ற கோசங்களுக்கு ஊது குழல்களாக மாறினர். இதில் அண்மையில் காலமான பேராசிரியர் சிவத்தம்பி தொடங்கி புகலிடத்து ஜெயபாலன் கவிஞர்கள் வரை யாருமே விதிவிலக்காக இருக்கவில்லை.

இது இவ்வாறிருக்க 02.04.2004ல் இடம்பெறவிருந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டவேளை கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடாத்தப்படுமா? இல்லையா? என்கின்ற அச்சம்



படிப்பகம்

www.padippakam.com

மேலோங்கியிருந்தது. வேட்பாளர்கள் தமிழ் தேசியம் என்கின்ற வன்னிப்புலி ஆதரவு, கிழக்குப் புலி ஆதரவு என இரண்டு அணியாக பிரிந்து நின்றனர். திரு. இராஜன் சத்தியமூர்த்தி, திரு. கிங்ஸ்லி இராஜநாயகம், திரு. ஜெயானந்தமூர்த்தி போன்றோர் கிழக்குப் புலிகளையும், கருணா அம்மானையும் ஆதரித்து நின்றனர். கருணா அம்மானுடைய கிழக்குப் பிளவிற்கு ஆதரவு தெரிவித்து மாமாங்கப் பிள்ளையார் ஆலய முன்றலில் இடம்பெற்ற உண்ணாவிரத நிகழ்வில் கிழக்கின் தேசபிதா கருணா அம்மான் என்றும் பிரகடனஞ்செய்து அன்றைய வேட்பாளர் ஜெயானந்தமூர்த்தி உரையாற்றினார். அன்றைய பாராளுமன்ற உறுப்பினரும் மீண்டும் வேட்பாளராக களமிறங்கிய திரு யோசப் பரராஜசிங்கம் அவர்களும் தான் தமிழ் தேசியத்தினை ஒருபோதும் கைவிடப் போவதில்லை எனவும், கிழக்குப் பிளவை ஆதரிக்கப்போவதில்லை எனவும் அறிக்கை விடுத்தார்.

இந்தநிலையில் நடைபெறவிருக்கின்ற தேர்தலில் (பொதுஜன ஐக்கிய முன்னணி) ஜனாதிபதி திருமதி சந்தரிகா குமாரணதுங்கா தலைமையிலான கட்சி வெற்றிபெறும் வாய்ப்பு இருந்தது. எனினும் ஆட்சியமைக்கும் அளவிற்கு போதுமான பெரும்பான்மை கிடைக்குமா என்னும் சந்தேகம் காணப்பட்டது. இந்நிலையில் வன்னிப் புலிகள் அன்றைய பாராளுமன்ற உறுப்பினரும் திருகோணமலை மாவட்ட வேட்பாளருமான இரா சம்பந்தன் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா அவர்களுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டது.

கேணல் கருணா இந்நிலையில் தனது கோரிக்கைகளை வன்னித் தலைமை நிராகரித்து விட்டதன் காரணமாக அடுத்ததாக தன்மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென முன்னுணர்ந்திருந்தார். அதனடிப் படையில் கிழக்குப் புலிகள் என்று தனித்தியங்கும் தனது முடிவினை மாற்றி தன்வசமிருந்த போராளிகளும் தானும் வன்முறையினை நிறுத்திவிட்டு ஜனநாயகப் பாதைக்கு திரும்புவதாக அறிவித்தது மட்டுமன்றி (6000) ஆறாயிரம் போராளிகளையும், வீடு செல்ல அனுமதித்தார். யுத்த நிறுத்தம் அமுலில் இருந்த அக்காலகட்டத்தில் படை நகர்வுகளை மேற்கொள்வதோ, ஆயுதங்களுடன் நடமாடுவதோ அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எனவே தம்மீது தாக்குதல் நடாத்தப்படும் வாய்ப்புக்கள் அதிகம் எதிர்பார்த்து இருக்கவில்லை. அதனாலும் சம்பந்தன் ஊடாக ஜனாதிபதி சந்தரிகா அவர்களுடன் ஏற்படுத்தப்பட்டிருந்த இணக்கம் புலிகளின் தாக்குதல்



படிப்பகம்

www.padippakam.com

வாய்ப்பினை அனுமதித்தது. கிழக்குப் புலிகளுக்கும், வன்னிப் புலிகளுக்குமிடையே காணப்பட்ட எல்லைக் கோடான வெருகலாறு வரை வன்னிப்புலிகள் மூன்று பஸ்வண்டிகளை ஆயுதங்களுடன் ஓமந்தை சாவடியைக் கடந்து களமிறங்க அனுமதிக்கப்பட்டனர். அதற்கு கைமாறாக நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் அரசாங்கம் அமைப்பதற்குரிய பெரும்பான்மையை தேர்தலில் வெல்லப்போகும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சந்திரிகா அவர்களுக்கு வழங்குவார்களென புலிகள் வாக்குறுதி அளித்திருந்தார்கள்.

## மட்டக்களப்பில் பிரபாகரனின் கட்டளைக்கமைய ராஜன் சத்தியமூர்த்தி அவர்களின் படுகாலை (30.03.2004).

கேணல் கருணாவினது பிளவை பலமாக ஆதரித்து தேர்தல் களத்தில் நின்ற திரு. ராஜன் சத்தியமூர்த்தி அவர்களை தேர்தல் இடம்பெறுவதற்கு முன்னதாகவே வன்னிப்புலிகள் படுகாலை செய்தனர். இவர் வர்த்தக சங்கத் தலைவரும் தமிழ் - முஸ்லிம் உறவின் அடையாளமாகவும் திகழ்ந்த திரு. ராஜன் சத்தியமூர்த்தி அவர்களை படுகாலை செய்தது மட்டுமன்றி அடக்கம் செய்யப்பட்ட அவரின் உடலை தோண்டியெடுத்து சின்னாபின்னப் படுத்தி மகிழ்ந்தனர் வன்னிப் புலிகள். இக்கொடூர செயலானது மட்டக்களப்பு மக்களிடையே மாபெரும் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியது.

பாராளுமன்றம் கலைக்கப்பட்டதற்கமைய 13வது பாராளுமன்றத் தேர்தல் 02.04.2004ல் இடம்பெற்றது. இத்தேர்தலின்போது 82 உறுப்பினர்களை மட்டும் ஐ.தே. முன்னணியினர் பெற்றநிலையில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் 105 ஆசனங்களைப் பெற்றமையினால் ஐக்கிய தேசிய முன்னணியினரின் ஆட்சியமைப்பிற்கு வீழ்ச்சி ஏற்பட்டது.

## புதிய தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தேர்தல் மனுத் தாக்கலும்.

பாராளுமன்ற வரலாற்று சம்பிரதாயங்களுக்கமைய பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் வேட்பாளர்கள் அவரவர் சார்ந்த மதங்களின் பெயரால்



படிப்பகம்

www.padippakam.com

செயற்படும் ஆலயங்களுக்கு சென்று வழிபாடு நடாத்திவிட்டு தத்தமது வேட்பு மனுக்களை கச்சேரியில் ஒப்படைப்பதே சம்பிரதாயமாகும். ஆனால் இந்நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணான நடைமுறை ஒன்றினை பிரபாகரன் தலைமையிலான த.தே.கூட்டமைப்பினர் யாழ் மாவட்டத்தில் மேற்கொண்டனர். அங்கு வேட்பாளர்களாக களமிறங்கிய அனைவரும் தமது வேட்பு மனுக்களுடன் யாழ் கோப்பாயில் அமைந்திருந்த சுடலைக்குச் சென்று போராட்டம் என்னும் பெயரில் பலிக்களத்திற்கு அனுப்பிக் கொல்லப்பட்டு புதைக்கப்கட்டிருந்த அப்பாவிப் பெற்றோரின் குழந்தைகளின் கல்லறைகளுக்கு வணக்கம் செலுத்திவிட்டு பின்னர் தந்தை செல்வா அவர்களின் நினைவுத் தூபிக்கு சென்று அஞ்சலி செலுத்தினர்.

அச்சந்தர்ப்பத்தில் பத்திரிகை நிருபர் ஒருவர் மாவை சேனாதிராசாவை அணுகி இரு இடங்ளில் இடம்பெற்ற அஞ்சலி தொடர்பாக வினா எழுப்பினார். அதற்கு பதில் வழங்கிய சேனாதிராசா கூறுகையில் நாம் முதலில் நாட்டுக்காக எமது தலைவர் பிரபாகரன் அவர்களுடன் இணைந்து போராடி மடிந்த வீரர்களுக்கு அங்கு வணக்கம் செலுத்தினோம். அதன்பின்னர் எமது இன்றைய தலைவரின் தமிழீழக் கோரிக்கைக்கு காரணகர்த்தாவாக இருந்த தந்தைக்கு அஞ்சலி செலுத்துகின்றோமென பதிலளித்தார். அத்துடன் எமது தந்தை செல்வநாயகம் அவர்கள் இன்று உயிருடன் இருந்திருந்தால் துரோகி அமிர்தலிங்கத்தைக் கொன்றமைக்காக தலைவரிடம் சென்று பலே பிரபாகரன் நீர் ஒரு பச்சைத் துரோகியைக் கொன்றுவிட்டாய் என பாராட்டியிருப்பா ரெனவும் தெரிவித்தார்.

திரு. மாவை சேனாதிராசா அவர்கள் ஏற்கனவே 10.10.2000ல் இடம்பெற்ற தேர்தலில் அம்பாறையில் களமிறங்குவதற்காக அவரின் சகா ஒருவரின்மூலம் வேட்பாளருக்கான நியமனப் பத்திரத்தில் கள்ளக் கையொப்பமிட்டு நியமனப்பத்திரத்தினை கச்சேரியில் வழங்கினார். இது விடயம் ஏனைய வேட்பாளர்களுக்கு தெரியவந்ததற்கமைய அவ்விடயம் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டதற்கமைய சேனாதியின் வேட்பு மனு நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி சேனாதியின் தில்லு, முல்லுகள்பற்றி திரு.ஆனந்தசங்கரி அவர்களினால் (06.11.2003ல்) வெளியிடப்பட்ட 28 பக்கங்களைக்கொண்ட மாவை சேனாதியின் மறைக்கப்பட்ட உண்மைகள் என்னும் கைநூலில் பல விடயங்கள்



படிப்பகம்

www.padippakam.com

அம்பலப்படுத்தப்பட்டுள்ளன). மேற்படி விடயம் தவிர சம்பந்தனின் தில்லு, முல்லுகள் பற்றியும் திரு. ஆனந்தசங்கரி அவர்களை 2004ம் ஆண்டு இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் புறமொதுக்கப்பட்டமை, சரத் பொன்சேகாவிற்கு ஆதரவாக ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கி பிரச்சாரம் செய்தமை போன்ற பல விடயங்களையும் (யார் துரோகி? நானா? நீரா? அவரா? அப்போ யார்? என்னும் 28 பக்கங்களைக்கொண்ட (10.05.2010ல்) வெளியிட்ட மேலுமொரு கைநூலிலும் பல உண்மைகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் அவர்களின் தலைமையில் திருகோணமலை கச்சேரியில் திருகோணமலை மாவட்டத்தில் தேர்தலில் களமிறங்கிய 7 வேட்பாளர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் புலிகளின் ஆயுததாரிகளும் ஆயுதமின்றி அங்குசென்று நிலைமைகளை அவதானித்தனர். வேட்பாளர்களுக்கான மனுக்களை ஒப்படைத்துவிட்டு கச்சேரியிலிருந்து வெளியேறிய த.தே.கூட்டமைப்பின் தலைவரிடம் நிருபர் ஒருவர் சில வினாக்களை விடுத்தார். அவற்றில் முக்கியமானதாக இன்றைய வேட்பு மனுத் தாக்கலுக்காக ஏராளமான பொதுமக்கள் கலந்திருக்கின்றார்களே அதன் விசேடமென்ன? என வினாவிடுத்தார். அதற்கு பதிலளித்த சம்பந்தன் தெரிவிக்கையில் நாங்கள் முன்னைய காலங்கள் போலல்லாது இம்முறை புலிகளுக்காகவே தேர்தலில் களமிறங்கியுள்ளோம் அதனால் அவர்களின் ஆதரவாளர்களே இங்கு சமூகமளித்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் எனத் தெரிவித்தார் அவர் தெரிவித்த கருதிற்கமைய அவர் எற்கனவே தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் நடாத்திய களுத்தறுப்பு நாடகம் அம்பலமாகியது.



படிப்பகம்

www.padippakam.com

# பதின்மூன்னாவது பாராளுமன்றத் தேர்தல் (02.04.2004)

| அரசியல்கட்சிகள் | வாக்களித்தவர்கள் | பெற்ற உறுப்பி னர்கள் | தேசியப் பட்டியல் | விகிதம் | மொத்த உறுப் பினர்கள் |
|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.முன்னணி | | | | | |
| இல.கம்யூனிஸ்ட் கட்சி. | | | | | |
| தே.வி.ம. கட்சி. | | | | | |
| ஜே.வி.பி. | | | | | |
| ல.ச.சமாஜ கட்சி. | | | | | |
| ம.ஐ.முன்னணி. | | | | | |
| தே.ஐ.முன்னணி. | | | | | |
| ஸ்ரீ.ல.ம.கட்சி | 4,223,970 | 92 | 13 | 45.60 | 105 |
| ஐ.சு.முன்னணி. | | | | | |
| இ.தா.காங்கிரஸ். | | | | | |
| ஐ.ம.அணி. | 3,504,200 | 71 | 11 | 37.83 | 82 |
| த.தே.கூட்டமைப்பு. | | | | | |
| அ.இ.த.காங்கிரஸ். | | | | | |
| ஈ.பி.ஆர்.எல்.எப். | | | | | |
| இ.த.அரசுக் கட்சி. | | | | | |
| ரெலோ | 633,654 | 20 | 02 | 6.84 | 22 |
| ஜா.ஹெல உறுமய | 554,076 | 07 | 02 | 5.97 | 09 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 186,876 | 04 | 01 | 2.02 | 05 |
| ஈ.பி.டி.பி | 24,955 | 01 | 0 | 0.27 | 01 |
| ம.ம.முன்னணி | 49,728 | 01 | | | 01 |
| சுயேச்சைகள் | 14,956 | 0 | 0 | 0.17 | |
| மொத்தம் | | | | | 225 |

மேற்படி தேர்தலில் ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த 07 அரசியல் கட்சிகளுடன் ஜே.வி.பியினரையும் இணைத்து தொகுதிப் பங்கீட்டின் மூலம் ஜே.வி.பியினருடன் ஓர் உடன்படிக்கையினை ஐ.ம.சு கூட்டமைப்பினர் ஏற்படுத்தியிருந்தனர். அதற்கமைய ஏற்கனவே (16 உறுப்பினர்களை மட்டும் பெற்றிருந்த ஜே.வி.பியினர் இத்தேர்தலில் (ஒன்றிணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்னும் பெயரில் களமிறங்கி 39 உறுப்பினர்களை வென்றனர். இந்நிலையில் 105 உறுப்பினர்களை மட்டும் பெற்ற நிலையில் 06.04.2004ல் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து 09.09.2005ல் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை ஐக்கிய



படிப்பகம்

www.padippakam.com

மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் நியமித்தார். காரணம் அடுத்து இடம்பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் போட்டியிட முடியாதநிலை அரசியலமைப்பில் உள்ளமையே அதற்கான காரணமாக அமைந்தது.

தேர்தல் நடந்த வேளையில் கேணல் கருணாவின் கட்டுப்பாட்டிலிருந்த அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கேணல் கருணாவினது கிழக்குப் பிளவினை ஆதரித்த வேட்பாளர்களுக்கு பெருந்தொகையான வாக்குகள் அளிக்கப்பட்டது. அதேவேளை திரு. பிரபாகரன் அவர்களின் தலைமையையும், தமிழ் தேசியத்தினையும் நான் ஒரு போதும் கைவிடமாட்டேன் என அறிவித்து தேர்தலில் களமிறங்கிய திரு. யோசப் பரராஜசிங்கம் அவர்கள் மட்டக்களப்பு மக்களால் தோற்கடிக்கப்பட்டார்.

| மாவட்டம் | த.தே.கூ. பெற்ற வாக்குகள் | விகிதம் | மொத்த வாக்காளர்கள் | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 257,320 | 39.93% | 644,279 | |
| சிறில் சொலமன் | 31,177 | | | |
| கஜேந்திரன் செல்வராசா | 112,077 | | | |
| பொன்.கஜேந்திரகுமார் | 60,770 | | | |
| சுரேஸ் பிரேமச்சந்திரன் | 45,786 | | | |
| எம்.கே சிவாஜிலிங்கம் | 42,193 | | | |
| மாவை சேனாதிராசா | 38,783 | | | |
| பத்மினி சிதம்பரநாதன் | 68,240 | | | |
| சிவநேசன் கிட்ணன் | 43,770 | | | |
| ரவிராஜ் நடராஜா | 42,965 | | | 09 |
| வன்னி மாவட்டம் | 90,835 | 40.08% | 226,604 | |
| எஸ் கனகரெத்தினம் | 30,390 | | | |
| வினோ நோதாரலிங்கம் | 28,252 | | | |
| எஸ் அடைக்கலநாதன் | 39,535 | | | |
| சிவசக்தி அனந்தன் | 29,807 | | | 04 |
| திருமலை மாவட்டம் | 68,955 | 30.7% | 224,307 | |
| இரா சம்பந்தன் | 47,735 | | | |
| கே துரைரட்ணசிங்கம் | 34,773 | | | 02 |
| மட்டு மாவட்டம் | 101,011 | 52.9% | 303,928 | |
| எஸ் ஜெயானந்தமூர்த்தி | 44,457 | | | |
| கனகசபை தங்கேஸ்வரிப்பிள்ளை | 57,847 | | | |



படிப்பகம்

www.padippakam.com

| | | | | |
|---|---|---|---|---|
| கே தங்கேஸ்வரி<br>கிங்ஸ்லி ராஜநாயகம் | 50,545<br>38,633 | | | <br>04 |
| அம்பாறை மாவட்டம்<br>பி.கனகசபை<br>தேசியப்பட்டியல் | 55,533<br>29,002 | 14.6% | 379,004 | <br>01<br>02 |

குறிப்பு – கருணா அம்மானின் தலைமையினை ஆதரித்து தேர்தலில் களமிறங்கியவர்கள் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றபோதும், பிரபாகரனின் கொலைவெறித் துப்பாக்கிகளுக்கு அஞ்சிய நிலையில் மீண்டும் பிரபாகரனின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டார்கள்.

02.04.2004ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் 08 அரசியல் கட்சிகளும், 02 சுயேச்சைக் குழுக்களும் கச்சேரியில் கட்டுப்பணம் செலுத்திய போதும் எவரும் அங்கு தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை. இந்நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி அவர்கள் சுயேச்சையாக அங்கு களமிறங்கினார். 644279 வாக்காளர்களை உள்ளடக்கிய யாழ் மாவட்டத்தில் விடுதலைப் புலிகளினால் களமிறக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 257320 வாக்குகளை மட்டுமே பெற்றனர். இத்தொகை மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையில் 39.93% விகிதம் மட்டுமே, அதேவேளை அங்கு வாக்களித்தவர்களின் எண்ணிக்கையான 305259ல் அவர்கள் பெற்ற வாக்குகளின் விகிதம் 84.29% ஆக அமைந்தது. வன்னி மாவட்டத்தின் மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 226,604 ஆக இருந்தபோதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 90,835 வாக்குகளை மட்டுமே பெற்றனர் மொத்த வாக்காளர்களில் இத்தொகை 40.08% விகிதம் மட்டுமே.

## பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட வெருகல் படுகொலை. (10.04.2004)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட உள்ளக முரண்பாடு வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு இடையிலான பிரச்சினை என்பதை ஏற்றுக் கொள்ள மறுத்த வன்னிப் புலிகளின் தலைமை கிழக்குப் போராளிகள்மீது



படிப்பகம்

www.padippakam.com

வன்முறையினைக் கட்டவிழ்த்து விட்டது. இந்த தாக்குதல்கள் இடம்பெறுவதற்கு சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்பே வெருகல் ஆற்றுக்கரையில் வன்னிப் புலிகள் ஆயுதங்களுடன் களமிறங்கியிருந்தனர். இந்தத் தாக்குதல்களிலிருந்து கிழக்கு மாகாணப் போராளிகளை பாதுகாக்க வெருகல் ஆற்று மறுகரையில் கேணல் கருணா தனது படையணிகளை நிறுத்தியிருந்தார். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையும் மீறி வன்னிப் புலிகள் கிழக்கு மாகாணத்தின்மீது தாக்குதல் நடத்துவதை தடுக்க வேண்டிய பொறுப்பு பேச்சுவார்த்தைக்கு மத்தியஸ்தம் வகித்த நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்கெய்ம் அவர்களுக்கும், யுத்த மீறல்களை கண்காணிப்பதற்காக பணியமர்த்தப்பட்டிருந்த கண்காணிப்புக் குழுவினருக்கும் இருந்தது. அவர்கள் தங்களது கடமையினை சரிவரச் செய்திருந்தால் வெருகல் படுகொலை தடுக்கப்பட்டிருக்க முடியும். அதற்கு மாறாக புலிகளுக்குள் ஏற்பட்ட இந்த உள்முரண்பாடுகள் வன்முறையினை நோக்கி வேகங்கொண்ட வேளையில் கிழக்கு மாகாணத்திலிருந்து தமது கண்காணிப்பு அலுவலகங்களை தற்காலிகமாக மூடிவிட்டு அங்கிருந்து கண்காணிப்புக் குழுவினர் வெளியேறினர்.

இச்செயலானது யுத்தநிறுத்த வேளையில் புலிகள் கிழக்கு மாகாணத்தின் மீது மேற்கொண்ட மிலேச்சத்தனமான தாக்குதல்களை தடுக்க வேண்டிய தமது கட்டுப்பாட்டிலிருந்து கண்காணிப்புக் குழுவினர் தவறியிருந்தனர் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அந்த வகையில் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் பற்றி வாய்கிழியப் பேசுவோர் யுத்த நிறுத்த வேளையில் வெருகல் ஆற்றில் இடம்பெற்ற அப்பட்டமான இந்த மனித உரிமை மீறலையிட்டு மௌனம் காத்ததேன்?.

இந்தத் தாக்குதலில் வெருகல் ஆற்றை ஊடறுத்து பாய்ந்ததுடன், கதிரவெளிக் கடற்கரையில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான படகுகளிலும் வந்து இறங்கிய விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் சுமார் முன்னூற்றிப் பதினைந்து போராளிகளை கொன்று குவித்தது மட்டுமன்றி பெண் போராளிகளை மானபங்கம் செய்து கதிரவெளி காடுகளுக்குள் கொன்று வீசினர். அதுமட்டுமன்றி கோமத்தளாமடு, காயான்கேணி மற்றும் வாகரை போன்ற கிராமங்கள் எங்கும் கிழக்குப் போராளிகளின் உடல்கள் அங்காங்கே அழுகியும், நாற்றமெடுத்தும் பல நாட்கள் கிடந்தன. எந்த ஒரு உடல்களையும் எடுத்துச்



படிப்பகம்

www.padippakam.com

செல்லவோ, அல்லது அடக்கம் செய்யவோ கூடாதென்று அக்கிராமவாசிகள் அனைவரும் வன்னிப் புலிகளால் துரத்தியடிக்கப்பட்டனர்.

குறிப்பு – மேற்படி படுகொலைபற்றிய தகவல்கள் அனைத்தும் இந்நூலாசிரியராகிய குமாரதுரை எனப்படும் என்னால் எனது கள ஆய்வின் அடிப்படையில் இப்படுகாலை நடந்து ஐந்து வருடங்களின் பின்னர் அக்கிராமவாசிகளிடமிருந்து நேரடியாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட வாக்கு மூலங்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டவையாகும்.

வெருகல் படுகொலையைத் தொடர்ந்து கேணல். ரமேஸ் தலைமையில் மட்டக்களப்பு, அம்பாறை பிரதேசங்களை வன்னிப் புலிகள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். கேணல். கருணா தலைமையிலான கிழக்குப் போராளிகளில் பெரும்பான்மையானோர் கிழக்கு மாகாணத்தைவிட்டு தப்பியோடினர். வெருகல் படுகொலைபற்றி இலங்கையில் வெளிவந்த தமிழ் பத்திரிகைகள் எதுவுமே கண்டு கொள்ளவில்லை. மாறாக கிழக்கை பிரபாகரன் (42) மணித்தியாலங்களில் இரத்தம் சிந்தாது மீட்டுவிட்டாரென்று (18.04.2004) வெளியீட்டில் வீரகேசரி புகழாரம் சூட்டியது. மேற்படி கொலைகளிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் நோக்குடன் மத்திய கிழக்கு நாடுகளுக்கு தப்பிச்செல்லவென கொழும்பு புறநகர் பகுதியான கொட்டாவ என்னுமிடத்தில் வீடொன்றினை தற்காலிகமாக வாடகைக்கு எடுத்து அங்கு மறைந்திருந்த கருணா அம்மான் ஆதரவு போராளிகள் (8) எட்டுப்பேர் (25.07.2004ந்) திகதியன்று பிரபாகரன் தலைமையிலான ஆயுததாரிகளின் கபடநாடக செயற்பாட்டின் மூலம் அவர்களுடன் நண்பர்கள்போல் நாடகமாடி நஞ்சூட்டப்பட்டு மயக்க நிலைநில் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டனர். இதே தினமான (25.07.1983ல்) வெலிக்கடைச் சிறைச்சாலையில் தமிழ் கைதிகள் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்டபோது குமுறிய தமிழ் ஊடகங்கள் அனைத்தும் இப்படுகொலை தொடர்பில் மௌனம் காத்ததன் மர்மமென்ன? மேற்படி ஊடகங்கள் அனைத்துமே யாழ் மேலாதிக்க சக்திகளின் கைக்கூலிகளாகவே காலம் பூராவும் செயற்பட்டமை நிரூபணமாகியது.

●



படிப்பகம்

## கருணா அம்மானின் ஆதரவாளர்களான, (7) ஏழு இளைஞர்கள் கொலை தொடர்பாக புலிகளின் ஊடகமான தினக்குரல் (26.07.2004ல்) வெளியிட்ட செய்தி.

கருணாவின் நெருங்கிய சகாக்கள் (7) ஏழுபேர் சுட்டுக்கொலை, இராணுவ புலனாய்வு பிரிவைச் சேர்ந்தவரும் பலி மறைந்திருந்த கொட்டாவ வீட்டின்மீது அதிகாலை தாக்குதல்.

கொட்டாவ அத்துருகிரிய வீதியிலுள்ள ஆடம்பர வீடொன்றில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை கருணாவின் வலதுகரமான குகநேசன் உட்பட ஏழுபேரும், இராணுவ பிரிவைச்சேர்ந்தவரென கருதப்படும் ஒருவரும் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். பிரதான வீதியிலிருந்து சுமார் நூறு யார் தூரத்தில் ஒதுக்குப் புறமாயிருந்த மாடி வீடொன்றில் எண்மரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தபோதே அவர்களுடனிருந்த ஒரு சிலரே இந்த எண்மரையும் சுட்டுக்கொன்று விட்டு தப்பிச் சென்றிருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனர். கருணாவின் மிக நெருங்கிய சகாவான சச்சி மாஸ்ரர் அண்மையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் கருணாவின் வலதுகரமான குகநேசனும் நேற்றுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்தச்சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது.

## அதிகாலை தாக்குதல்.

கொட்டாவ அத்துருகிரிய வீதியிலுள்ள வித்தியாலய மாவத்தையில் பாம் லேன் உள்ளது. இந்த ஒழுங்கையிலிருக்கும் அடர்ந்த றப்பர் தோட்டமொன்றினுள் கிறிஸ்டல் ரொஸ் வீட்டுத்திட்டம் உள்ளது. இந்த வீட்டுத் திட்டத்திலுள்ள ஆடம்பர மாடி வீட்டிலேயே நேற்று அதிகாலை 3.40 மணிக்கும் 4.00 மணிக்குமிடையில் இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது தினக்குரல் வெளியிட்ட செய்தி.

தினக்குரல் 18.05.2009ம் திகதிய செய்தியை வெளியிட முன்வரவில்லை. ஏனெனில் அங்கு கொல்லப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியலை பெறுவதற்கு

www.padippakam.com

தினக்குரலுக்கு இயலாதுபோனது, ஆனால் கருணாவின் சகாக்களின் பட்டியல் மட்டும் படுகொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டபோதே அவர்களுக்கு தெரிந்து விட்டது. வண்டியும் ஒருநாள் ஓடத்திலேறும், ஓடமும் ஒருநாள் வண்டியில் ஏறும் என்பதனைக்கூட அறியுமளவிற்கு தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியரின் அறிவு மட்டமானதென கருணா தரப்பு போராளி ஒருவர் எம்மிடம் தெரிவித்தார். அவர் இன்றும் உயிருடன் உலா வருகின்றார்.

கொல்லப்பட்டவாகளின் விபரம் குகநேசன், கஸ்ரோ, கேசவன், ரூபன், அற்பரன், விக்கி மற்றும் விமல்காந் ஆகியோரே கொல்லப்பட்டவர்களாவர்

## இலங்கையில் கோரத் தாண்டவமாடிய சுனாமியும், (26.12.2004) அதன்மூலம் விடுதலைப் புலிகள் மேற்குலக நாடுகளில் திரட்டிய நிதியும்.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உள்பட தென் மாகாணம், மேல் மாகாணத்தின் ஒரு பகுதியினையும் சுனாமியின் இயற்கை அனர்த்தம் கடுமையான முறையில் பாதித்தது. இவ்வனர்த்தத்தில் கிழக்கின் அம்பாறை மாவட்டமே பாரிய மனித உயிர்களை காவு கொண்டதாக அன்றைய புள்ளி விபரங்கள் தெரிவித்தன. இந்நிலையில் சுனாமியின் கோரத்தாண்டவம் இலங்கையில் வாழ்ந்த இனங்களுக்கிடையில் ஓர் புரிந்துணர்வுக்கான நிலையைத் தோற்றுவித்தமை பாராட்டுக்குரியதாக அமைந்தது. அதற்கமைய தெற்கு, கிழக்கு என்னும் வேறுபாடுகள் களையப்பட்டு தெற்கிலுள்ள பொது அமைப்புக்களும், தனியாரும்கூட கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் சுக துக்கங்களில் நேரடியாக சிங்கள மக்களில் ஒருசாரார் பங்குகொண்டு தம்மாலான உதவிகளை நல்கினர். உதாரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகள், தங்குவதற்கான தற்காலிக குடிசைகள் போன்றவற்றினை அமைத்து அம்மக்களோடு மக்களாக இணைந்து செயற்பட்டனர்.

இந்நிலையிலேயே சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அவசர நிதி தேவையென புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம் அறைகூவல் விடுத்த புலம்பெயர் புலி ஆதரவு முக்கியஸ்தர்கள் ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த தமிழ் மக்களிடம் விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com

புலிகளின் ஆதரவு தொலைக்காட்சியான (I.B.C) (International Brod Casting; Cooptation) என்னும் பெயரில் இயங்கிய நிறுவனத்தின் ஊடாகவும், கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இயங்கிய விடுதலைப் புலிகளின் ஆதரவு தொலைக்காட்சிகள், வானொலிகள் போன்றவற்றின் மூலமும் இலங்கை ரூபாவின் மதிப்பீட்டிற்கமைய பல ரில்லியன் ரூபாய்களை சேகரித்தனர். (ரில்லியன் என்பது ஒரு லட்சம் மில்லியனாகும்) மேற்படி நாடுகளில் வாழ்ந்த புலம்பெயர் தமிழ் மக்கள் மட்டுமன்றி அந்தந்த நாட்டு சுதேசிகளால்கூட ஏராளமான நிதி அன்பளிப்புச் செய்யப்பட்டது.

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணமாகவும், நீண்டகால உதவியாகவும் வழங்கவென மக்களிடமிருந்து பெறப்பட்ட இப்பெருந்தொகையான நிதிக்கு என்ன நடந்தது? நிதியினை வழங்கியவர்கள் எவருமே அதற்கான வினாவினை விடுக்க முன்வரவில்லை. இந்நிலையில் பொதுமக்களால் வழங்கப்பட்ட நிதியில் (5%) வீதமான நிதிகூட அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு குறிப்பிட்ட தொகையேனும் வழங்கியதற்கான சான்றுகள் எதுவும் இன்றுவரை வெளியிடப்படவில்லை.

இந்நிலையிலேயே சர்வதேச நாடுகளினால் சுனாமி உதவியாக இலங்கை அரசின்மூலமாக வழங்கப்பட்ட நிதியின் பெரும்பகுதியினை (வடகிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கு) விடுதலைப் புலிகளின் வன்னி நிர்வாகத்தினால் P.Tom என்னும் அமைப்பினூடாக (Post Tsunami Operational Management Structure) தங்களிடம் ஒப்படைக்குமாறு அன்றைய ஜனாதிபதியான திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களிடம் கோரிக்கையினை முன்வைத்தனர். அக்கால கட்டத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகாரணமாகவும், இதுபோன்ற பணிகளை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் அவர்களை ஜனநாயக வழிக்குக் கொண்டுவரமுடியுமெனக் கருதிய ஜனாதிபதி அதற்கு சம்மதம் தெரிவித்த நிலையில் அதற்கான உடன்படிக்கை ஒன்றும் (24.06.2005ல்) ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையில் அதனை நிர்வகிப்பதற்கான தலைமைக் காரியாலயத்தினை புலிகள் வன்னியில் அமைப்பதாகத் தெரிவித்தனர்.

பாதிப்புற்ற மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அரசுக்கு வழங்கப்படும் நிதி அரசின் கட்டுப்பாடற்ற பகுதிக்கு செல்வதானால் அந்நிதி



படிப்பகம்

www.padippakam.com

அரசின் கைகளைவிட்டு நழுவுவதாக பல அரசியல் கட்சிகளும், பொது அமைப்புக்களும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டினர். அத்துடன் நிறுத்திவிடாது அவ்விடயம் தொடர்பில் நீதிமன்றத்தின் தீர்ப்பிற்காக வழக்குத் தாக்கல் செய்தனர். நீதிமன்றத் தீர்ப்பின்படி விடுதலைப் புலிகளிடம் அந்நிதி கையளிப்பது அரசியல் சாசனங்களுக்கு முரணானது என தீர்ப்பு வழங்கப்பட்டது. அதற்கமைய சுனாமியில் பாதிக்கப்பட்ட மக்களின் நிதியினை அரசாங்கமே பொறுப்பேற்று மக்களுக்கு வழங்கியது. மேற்படி வழக்கிற்கான தீர்ப்பினையும் திரு. சரத் என்.டி சில்வா அவர்களே வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

எது எவ்வாறாயினும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்தது. அந்நிதி தனியாரால் சூறையாடப்பட்டதா, அன்றி ஆயுதக் கொள்வனவிற்கு பயன்படுத்தப்பட்டதா பதில் வழங்க இருப்பவர்கள் யார்?

## சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமசேவகர் பிரிவு வடக்கு கிழக்கு மொத்தம் - 319

கிராமசேவகர் பிரிவு வடக்கு கிழக்கு மொத்தம் – *319*

| | |
|---|---|
| விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் | 39 |
| அரச கட்டுப்பாட்டில் | 280 |
| சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசம் | 1.124 ச.கி.மீற்றர் |
| விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் | 49 – 7% |

•



படிப்பகம்

www.padippakam.com

## ஸ்ரீலங்கா வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீது விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் (12.08.2005ல்) சினைப்பர் தாக்குதல்.



இலங்கையின் வெளியுறவு அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் (73) மீது விடுதலைப் புலிகள் சினைப்பர் தாக்குதல் நடாத்தினர். இரவு 10 மணிக்கும் 11 இடையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டப பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் தலையில் காயமடைந்துள்ள கதிர்காமர் அவர்கள் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் ஆபத்தான நிலையில் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை மேற் கொள்ளப்பட்டது.

அமைச்சர் கதிர்காமரின் கொலையை அடுத்து, வடக்கு - கிழக்கில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் அனைத்துப் பாதைகளும் மூடப்பட்டன. யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான ஏ-9 பாதைகூட சனிக்கிழமை நண்பகல் வரை திறக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளே இந்தக் கொலையைச் செய்ததாகக் கருதிய அரசு கதிர்காமரைச் சுட்டவர்கள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்வதைத் தடுக்கும் நோக்கிலேயே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கான பாதைகளை மூடினர்.

அமைச்சர் கதிர்காமருக்கு கொழும்பு - 7 இல் இரு வாசஸ்தலங்களுள்ளன. புல்லர்ஸ் வீதியில் தனிப்பட்ட வாசஸ்தலமும், விஜயராம மாவத்தையில் உத்தியோகபூர்வ வாசஸ்தலமும் உள்ளது. புல்லர்ஸ் வீதியிலுள்ள தனிப்பட்ட வாசஸ்தலத்திலேயே வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. இங்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளிருந்தும் அதையும் தாண்டி தாக்குதல் நடத்தப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை மாலை அமைச்சர் கதிர்காமரின் நூல் வெளியீடு நடைபெற்றது. நூலின் முதற் பிரதியை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமா ராவ் பெற்றார். இந்த விழா முடிவடைந்த பின்னர் விஜயராம மாவத்தையிலுள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திற்குப் புறப்பட்ட அவர் அதற்கு முன்னர் புல்லர்ஸ் வீதியிலமைந்திருந்த வீட்டிலுள்ள நீச்சல் தடாகத்திற்கு மனைவியுடன் சென்றுள்ளார்.



படிப்பகம்

www.padippakam.com

இங்கு நீச்சலை முடித்துக்கொண்டு விஜயராம மாவத்தை வீட்டிற்குச் செல்வதற்காக அமைச்சர் கதிர்காமர் மனைவியுடன் புறப்பட்டு காரில் ஏறுவதற்காக நடந்து வந்துகொண்டிருந்த போதே அடுத்தடுத்து இரு குண்டுகள் கதிர்காமரின் தலையிலும், மார்பிலும் ஏவப்பட்டன. தலையில் ஒரு குண்டும் மார்பில் ஒரு குண்டும் பாய்ந்ததாக கூறப்பட்டது.

தன்னுடன் ஒன்றாக (அருகே) நடந்து வந்த தனது கணவர் திரு. கதிர்காமர் அவர்கள் திடீரென பின்புறமாகச் சரிந்து வீழ்வதை உடன் வந்த மனைவி அவதானித்துள்ளார். எந்தவிதச் சத்தமும் கேட்காததால் மயக்கமடைந்துதான் அவர் வீழ்ந்ததாக நினைத்த மனைவி ஓடிச்சென்று பார்த்தபோது தலையிலிருந்தும், மார்பிலிருந்தும் இரத்தம் பாய்வதை அவதானித்து அலறவே படையினர் விரைந்து வந்து தூக்கி அவரை உடனடியாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றபோதும் சில மணிநேரத்தில் அங்கு அவர் மரணமானார்.

அமைச்சர் கதிர்காமர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதைப் படையினர் உணர்ந்து கொண்டாலும் சினைப்பர்' தாக்குதல்தான் அது என்பதை கண்டுபிடிக்க சிலநிமிட நேரங்கள் பிடித்துள்ளது. சைலன்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கியால் அவர் சுடப்பட்டிருந்தால் கூட சுட்டவர்கள் அந்த வீட்டு வளவினுள் இருந்திருக்க வேண்டும். ஆனால் உடனடித் தேடுதலில் எவரும் சிக்காததாலும், தாக்குதலின் பாணியும் சினைப்பர் தாக்குதலே நடத்தப்பட்டுள்ள தென்பது தெரிய வந்தது.

ஆனாலும் எங்கிருந்து எவ்வாறு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதென்பதை உடனடியாக அவர்களால் அறிய முடியாதபோதும், கதிர்காமரின் வீட்டின் நான்கு புறத்திலுமுள்ள ஏதாவதொரு வீட்டிலிருந்தே தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவேண்டுமென படையினர் உணர்ந்தனர். கதிர்காமரின் வீட்டைச் சுற்றியுள்ள வீடுகள் மேல்வீடுகளென்பதால் உடனடியாகவே சகல வீடுகளுக்குள்ளும் தேடுதலுக்கான பெருமளவு படையினர் சென்றனர்.

குண்டுத் தாக்குதலுக்கிலக்கானவரோ அல்லது கதிர்காமரின் மனைவியோ அல்லது கதிர்காமரின் வீட்டின் நான்கு புறங்களிலும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த படையினருக்கோ குண்டு எங்கிருந்து வந்ததெனத் தெரிந்திருக்கவில்லை. இதனால் கதிர்காமரின் வீட்டைச் சுற்றியிருந்த மாடிவீடுகளில் படையினர் தீவிர தேடுதல்களை நடத்தினர்.



படிப்பகம்

www.padippakam.com

அவ்வேளையில் கதிர்காமரது வீட்டின் வலது புறமாக உள்ள இரு மாடிகளைக் கொண்ட வீட்டின் குளியல் அறையினுள் சினைப்பரை பொருத்தி தாக்குதல் நடத்துவதற்கு வசதியாக மேடையொன்றும் ஸ்ரான்ட் ஒன்றுமிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதுடன் தாக்குதலை நடத்தியவர்கள் பயன்படுத்திய சில பொருட்களும் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக் கப்பட்டன.

அந்த வீட்டில் வயோதிப தமிழ்த் தம்பதியர் இருவரே இருந்துள்ளனர். படையினர் அவர்களது வீட்டைத் தட்டித் திறந்து உள்ளே சென்றபின்னர்தான் என்ன நடந்ததென அவர்கள் அறிந்துகொண்டனர். அவர்களது வீட்டின் மேல் மாடியில் குளியலறையில் ஸ்ரான்ட்டும் வேறுபொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்த அவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாகவே தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர்.

வீட்டின் 2ஆவது மாடியில் குளியலறையில் ஜன்னலுக்கு மேலேயுள்ள கிறில் கல்லு உடைக்கப்பட்டு சிறு ஓட்டையொன்றை ஏற்படுத்தி அந்தத் துவாரத்தினூடாக சினைப்பரை ஸ்ரான்டில் பொருத்தியே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. குளியலறைக்குள் இரும்புக் கம்பிகளைப் பொருத்தி சுமார் ஏழு அடி உயரத்திற்கு மேடையொன்று அமைக்கப்பட்டு அதன் நடுவில் மெல்லிய இரு இரும்புக் கேடர்கள் அமைத்து அதன் குறுக்கே ஒரு கேடரை பொருத்தி அதில் ஒருவர் சைக்கிள் சீற்றில் இருப்பது போன்று வசதியாக இருக்கும் வகையில் சீற் ஒன்றும் பொருத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னால் ஜன்னல் கிறிலினூடாக சினைப்பரை வெளியே நீட்டி வைப்பதற்கு வசதியாக ஸ்ரான்ட் ஒன்றும் பொருத்தப்பட்டு அதில் சினைப்பரைப் பொருத்தி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அடுத்தடுத்து இரு குண்டுகள் கதிர்காமரின் தலையிலும், மார்பிலும் பாய்ந்துள்ளன. சினைப்பரைப் பொறுத்தவரை ஒரு நேரத்தில் ஒரு தடவையே சுடமுடியும். இயந்திரத் துப்பாக்கிகள் போன்று பல சுற்றுக்கள் சுடமுடியாது. ஒரு தடவை சினைப்பர் குண்டு பாய்ந்தால் மீண்டும் அதில் குண்டை நிரப்பி விட்டே மறுமுறை சுடமுடியும். இவ்வாறான வேளைகளில் குண்டை மீண்டும் சினைப்பரில் நிரப்பி சுடுவதென்பது சாத்தியப்படாததொன்றென்பதால் சினைப்பரை கையாள்வதில் மிகவும் தேர்ச்சியுள்ள இருவர் இத்தாக்குதலை நடத்தியுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின்மூலம் தெரியவந்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால் குளியலறை ஜன்னலின் மேலுள்ள கிறிலில் ஒரு சினைப்பரை நுழைத்துச் சுடுவதற்கேற்பவே துவாரம் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அந்தச் சினைப்பரின் இலக்கு குறிதவறாமல் கதிர்காமரைத் தாக்க வேண்டு மென்பதற்காக வசதியாக ஸ்ரான்ட் ஒன்றும் அங்கு வைக்கப்பட்டு அதில் பொருத்தப்பட்ட சினைப்பர் மூலம் முதல் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலா மெனவும் கருதப்பட்டது.

அதேநேரம் இந்தத் தாக்குதலில் குறிப்பினால் இலக்கை உடனடியாகத் தாக்குவதற்காக அந்தக் கட்டிடத்தில் இன்னொரு பகுதியில் இன்னொருவர் சினைப்பருடன் நின்று அவரும் கதிர்காமர் மீது ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்தியிருப்பதாகவும் விசாரணையாளர்கள் கருதினர். இதனால் இந்தத் தாக்குதலிலிருந்து (இரு சினைப்பர்காரர்களினதும்) கதிர்காமர் தப்பிவிடக் கூடாதென்பதில் தாக்குதலைத் திட்டமிட்டவர்கள் மிகக் கவனமாயி ருந்துள்ளனர்.

தற்செயலாக இந்தத் தாக்குதலில் குறிதவறியிருந்தால் தாக்குதலை நடத்தியவர்களைப் படையினர் உடனடியாகப் பிடித்திருக்க முடியும் ஏனெனில் தாக்குதலிலிருந்து தப்புபவருக்கு குண்டுகள் எங்கிருந்து பாய்ந்து வருகின்றன என்ற திசை தெரியும். ஆனால் இந்தத் தாக்குதலில் இரு குண்டுகளும் கதிர்காமரை உடனடியாகவே மிக மோசமாகத் தாக்கிவிட்டதால் அவர் அவ்விடத்திலேயே சுயநினைவின்றி வீழ்ந்து விட்டார். அதேநேரம் கதிர்காமரின் அருகில் வந்த மனைவிக்கே என்ன நடந்ததெனத் தெரியாதளவிற்கு தாக்குதல் நன்கு திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுள்ளது.

கதிர்காமர் மயங்கி வீழ்வதாகவே முதலில் மனைவி நினைத்துள்ளார். அருகில் சென்று பார்த்த போதுதான் அவரது தலையிலும் மார்பிலும் குண்டு துளைத்தது தெரியவந்தது. இத்தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட சினைப்பர்கள் மிக நவீனமானவையாகவும், குண்டு புறப்படும்போது மிகக் குறைந்த சத்தத்தையே வெளியிடுபவையாகவும் இருக்கலாமென்றும் கருதப்பட்டது.

இரவு நேர பார்வைக் கண்ணாடியும் (நைற் விஷன்) சூம் லென்ஸும் பொருத்தப்பட்ட சினைப்பரே பயன்படுத் தப்பட்டது. சுட்டவர்களுக்கும் கதிர்காமருக்குமிடையே 300 மீற்றர் தூர இடைவெளி இருந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

கதிர்காமரின் இல்லம் இருக்குமிடம் மிகவும் அமைதியான சூழலில் இருப்பதால் சிறு சத்தம் கூட அவரது மெய்ப்பாதுகாவலர்களுக்கும் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் துல்லியமாகக் கேட்டிருக்கும். ஆனால் இது எவருக்குமே கேட்கவில்லை.

அதேநேரம் கதிர்காமர் குண்டுகள் துளைத்து வீழ்ந்த நிலையில் அவரைக் காப்பாற்ற வேண்டும், ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லவேண்டுமென்ற முனைப்பிலேயே அவரது மெய்ப்பாதுகாவலர்களும், படையினரும் இருந்ததால் இந்த இடைவெளியைப் பயன்படுத்தி துப்பாக்கிதாரிகள் இருவரும் விரைந்து தப்பிச் சென்றுள்ளதாக விசாரணையாளர்கள் கருதினர்.

அத்துடன் அவ்வாறான சந்தர்ப்பத்திலும் அவர்கள் எப்படி அந்தச் சினைப்பர்களைக் கொண்டு சென்றார்களென்ற பெரும் கேள்வியும் எழுந்துள்ளது. தாக்குதலை இருந்து நடத்திய வீட்டின் மேல்மாடியிலிருந்து இறங்கி நீண்ட சினைப்பரை பாகம் பாகமாகக் கழற்றி எவரது கண்களிலும் சிக்காமல் அவர்கள் எப்படித் தப்பிச் சென்றார்கள் என்ற கேள்வியும் எழுந்தது. சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டு துப்பாக்கி நபர்களை ஹெலிகொப்டரின் உதவியுடன் தேடும் முயற்சியும் நடந்தது. சக்திமிக்க வெளிச்சத்தை வெளிப்படுத்தும் விளக்குகள் பொருத்தி ஹெலிகொப்டர்கள் தேடுதல் நடத்தியும் துப்பாக்கி நபர்களைப் பிடிக்க முடியாததாலேயே அவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்வதைத் தடுப்பதற்காக வடக்கு – கிழக்கில் புலிகளின் பகுதிகளுக்குச் செல்லும் பாதைகள் மூடப்பட்டன.

இதேநேரம் இந்தத் தாக்குதலை புலிகள்தான் நடத்தினார்களென்றால் கொழும்பில் அவர்கள் அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்படும் மிக முக்கிய தலைவர் ஒருவருக்காக முதல் தடவையாக சினைப்பர் தாக்குதல் நடத்தியுள்ளரெனலாம். இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப். பின் (வரதர் அணி) முக்கியஸ்தரான ரி. சுபத்திரன் அவரது அலுவலகத்தின் மேல் மாடியில் உடற்பயிற்சியில் ஈடுபட்டிருந்வேளை சினைப்பர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

ஆனாலும் துல்லியமான உளவுத் தகவல்கள்தான் வெள்ளிக்கிழமை இரவு கதிர்காமர் அங்கு வருவாரென்பதை உறுதிப்படுத்தி துப்பாக்கி நபர்கள் அடுத்த வீட்டின் மேல்மாடியில் நீண்ட நேரம் காத்திருந்து தங்கள் காரியத்தை நிறைவேற்றி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com

கதிர்காமரின் புல்லர்ஸ் லேன் வாசஸ்தலத்தில் நீச்சல் தடாகமிருப்பதும் அவர் இரவு நேரத்தில் அங்கு வருவதும் உளவுத் தகவல்கள் மூலம் தெளிவாகியுள்ளது. பகல் வேளைகளில் கூட சிலநேரம் நீச்சல் தடாகத்திற்கு அவர் வந்து செல்வதை உளவுத் தகவல்கள் மூலம் துப்பாக்கிதாரிகள் அறிந்திருந்தாலும் தாங்கள் தப்பிச் செல்வதற்கு இரவு நேரமே பொருத்தமென்பதால் இரவுப் பொழுதிற்காக காத்திருந்திருக்கலாம்.

அதேநேரம் வெள்ளிக்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் புத்தக வெளியீட்டிற்குச் செல்வதும் பின்னர் கதிர்காமர் நீச்சல் தடாகத்திற்கு வரப்போவதும் உளவுத் தகவல்கள் மூலம் அறியப்பட்டு துப்பாக்கிதாரிகள் காத்திருந்தனர். இந்த வாசஸ்தலத்தின் பாதுகாப்பைவிட விஜயராம மாவத்தையிலுள்ள கதிர்காமரின் நிரந்தர வாசஸ்தலத்தின் பாதுகாப்பு மிகவும் அதிகம். அதனால் கதிர்காமரை அங்கு வைத்து இலக்கு வைப்பதென்பது மிக மிகக் கடினமென்பதாலேயே பாதுகாப்பு குறைந்த இந்த இடம் அவர்களுக்கு வசதியாகப் போனது.

மேற்படி வீட்டின் பின்புறத்தில் வெற்றுக் காணியுள்ளது. அங்கு சிறு பற்றைகளுமுள்ளன. அதனூடாகவே தாக்குதல்காரர்கள் உளவு பார்க்க வந்தும் தாக்குதல் நடத்த வந்துமுள்ளதாக விசாரணையாளர்கள் தெரிவித்தனர். தாக்குதலின் பின் அதனூடாகவே தப்பிச் சென்றுமுள்ளனர். மறுநாள் காலை அந்தக் காணிக்குள் தேடுதல் நடத்தப்பட்டபோது கிரனைட் லோஞ்சர் ஒன்றும் அதற்கான குண்டுகளும் புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டதால் சினைப்பர் தாக்குதலுக்கு வாய்ப்பில்லாது போனால் கதிர்காமரின் கார் மீது கிரனைட் லோஞ்சர் மூலம் தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டிருக்கலாமெனவும் கருதப்பட்டது.

இவ்வாறு நாட்டின் முக்கிய தலைவரொருவர் மிக இலகுவாக இலக்கு வைக்கப்பட்டமை படைத் தரப்புக்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கதிர்காமரைப் புலிகள் தாக்குவதாயின் தற்கொலைக் குண்டுதாரிகளையே பயன்படுத்துவார்களென்ற மிகுந்த முன்னெச்சரிக்கையால் கதிர்காமருக்கு அருகே எவரும் நெருங்காமல் படையினர் பாதுகாக்க கதிர்காமருக்கு மிகவும் தூரத்திலிருந்தே தாக்குதல்காரர்கள் அவரைத் தாக்கிவிட்டுச் சென்று விட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

## அமைச்சர் கதிர்காமரின் பூதவுடல் அடக்கம் செய்யப்பட்டது.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரின் பூதவுடல் பூரண அரச மரியாதையுடன் கொழும்பு சுதந்திரச் சதுக்கத்தில் தகனம் செய்யப்பட்டது. மிகவும் இறுக்கமான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடந்த இந்தத் தகனக் கிரியைகளின்போது இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் வந்து கலந்து கொண்டார். பிற்பகல் சுமார் 4.30 மணியளவில் அமைச்சர் கதிர்காமரின் பூதவுடல் அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இருந்து பூரண இராணுவ மரியாதையுடன் கொழும்பு சுதந்திர சதுக்கத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு அவரது மகனும், மருமகனும் அவரது பூதவுடலுக்கு தீ மூட்டினார்கள். இந்த இறுதிக்கிரியைகளில் இலங்கை, இந்தியா மற்றும் பல நாடுகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்களும், உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் மற்றும் நோர்வே வெளியுறவு அமைச்சர் யான் பீற்றர்சன், நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்ஹிசன் மற்றும் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்சித் கசூரி ஆகியோரும் இதில் அடங்குவார்கள். இலங்கை அரசின் சார்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ அஞ்சலியுரையை நிகழ்த்தினார்.

## கதிர்காமரின் சுயவாழ்க்கை தொடர்பான சில தகவல்கள்.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக பதவி வகித்த அமரர் லக்ஷ்மன் கதிர்காமர் 1932 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி பிறந்தார்.

கண்டி திருத்துவக் கல்லூரியில் கல்வி பயின்ற இவர் அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கியமைக்கான கல்லூரியின் 'ரைத்' தங்கப் பதக்கத்தையும் பெற்றவர்.

1953ல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டமானிப் பரீட்சையில் திறமையாகச்



படிப்பகம்

www.padippakam.com

சித்தியடைந்தார். இதே ஆண்டில் அதியுயர் சட்டக் கல்விப் பரீட்சையின் இடைநிலைப் பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியடைந்தார்.

1954ல் இலங்கைச் சட்டக் கல்லூரியில் அதியுயர் சட்ட இறுதிப் பரீட்சையில் முதல் தரத்தில் முதலாவதாக தேர்ச்சியடைந்தார். சாட்சிய சட்டம், தனி நபர், சொத்துக்கள் தொடர்பான சட்டம் என்பவற்றுக்கும் பரிசில்களையும் பெற்றார்.

1955ல் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் அங்கத்துவம் பெற்றார்.

சட்டத்துறையில் பரிஸ்டர் என்ற வகையில் இவர் 1958 இல் ஐக்கிய ராச்சிய சட்டமன்றத்திலும் உறுப்பினரானார்.

1959ல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக யூனியனின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

1960ல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் (M.I.T) பி.லிற் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது.

1955, 1960, 1971, 1974 காலப் பகுதியில் லண்டன் பிரிவுக்கவுன்சிலின் சட்டக் குழுவில் பணி புரிந்தார்.

1960, 1971, 1989, 1994 வரையிலும் இலங்கை சட்டக் கழகத்திலும் பணியாற்றினார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பில் ஆலோசகராகவும் பணியாற்றிய இவர் அபிவிருத்தியடைந்து வரும் ஆசிய பசுபிக் அரசாங்கங்களின் அறிவு சொத்து தொடர்பான ஆலோசனை வழங்கும் ஆசியப் பசுபிக் பிராந்திய பணிப்பாளராகவும் (1983–1988) வரை பணியாற்றியுள்ளார்.

1963ல் வியட்நாமில் கத்தோலிக்கர்களுக்கும், பௌத்தர்களுக்கும் இடையே இடம்பெற்ற பிரச்சினையை ஆராய்வதற்கென சர்வதேச மன்னிப்புச் சபையினால் ஆணையாளராக இவர் நியமிக்கப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

1990ல் இலங்கை ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வெளிவிவகார ஆய்வுக் குழுவுக்கும் புலமைச் சொத்து சம்பந்தமான ஆலோசனைக் குழு உறுப்பினர் என்ற வகையிலும் இலங்கை அரசுக்கு பல ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார். 1991 ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்றார்.

இலங்கையின் சட்டச் சீர்திருத்தம் தொடர்பான ஆலோசனைக் குழுவிலும் அங்கம் வகித்து சேவையாற்றி வந்த இவர் இலங்கையின் நிர்மாணத் தொழில் சேவைகளுக்கான ஆலோசனைச் சேவைகளை மேல்நிலைப் படுத்துவதற்கான கமிட்டிக்கும் தலைமை தாங்கினார்.

பல்வேறு சர்வதேச சட்டச் சஞ்சிகைகளிலும் பல கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்.

வெளிவிவகாரங்கள் பற்றிய சட்டம் சம்பந்தமாகவும், ஜோர்ஜ் வொஷிங்டன், ஹாவார்ட், ஒக்ஸ்போர்ட், பிரின்ஸ்டன் நியூயோர்க் உட்பட பல்வேறு பல்கலைக்கழகங்களிலும், இங்கிலாந்து, ஜெர்மனி, சீனா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலுள்ள நிறுவனங்களிலும் விரிவுரையாற்றியுள்ளார்.

கொள்கைகள் திட்டமிடல் ஆலோசனைச் சபையில் ஒரு உறுப்பினராகவும் இவர் நியமனம் பெற்றிருந்தார். 1997 இல் பிராந்திய ஒத்துழைப்புக்கான இந்து சமுத்திரக் கரையோரச் சங்கத்தின் உப தலைவராகவும் இவர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1994 ஆம் ஆண்டு பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அரசியலில் பிரவேசித்த இவர் அந்த அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

1998 1999 இல் சார்க் நாடுகளது அமைச்சர் குழுவின் தலைவராக தெரிந்தெடுக்கப்பட்டார்.

●



படிப்பகம்

# விடுதலைப் புலிகளினால் படுகொலைசெய்யப்பட்ட ரேலங்கி செல்வராசா, அவரின் கணவர் செல்வராஜா மற்றும் 8 மாதக் குழந்தை. (12.08.2005)

ரேலங்கி செல்வராஜா யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தவராவார். இவரோடு சேர்த்துக் கொலை செய்யப்பட்ட அவரின் கணவரான சின்னதுரை செல்வராஜாவை அவர் மணந்தார். ரேலங்கி கொல்லப்பட்டபோது இத்தம்பதியினருக்கு பெண் குழந்தை ஒன்று உள்ளது. அக்குழந்தை பெற்றோர்களின் இறப்பின் போது (9) மாதங்கள் மட்டுமே அடைந்திருந்தது. 1978 இல் இலங்கையில் தயாரிக்கப்பட்ட்ட தெய்வம் தந்த வீடு என்ற திரைப்படத்தில் இவர் முதன்மை வேடம் ஏற்று நடித்தார். இதற்காக இவர் சிறந்த நடிகை விருதுக்கு முன்மொழியப்பட்டார். இவர் 1979 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒலிபரப்பான மணிக்குரல் வானொலியில் தனது ஊடக வாழ்க்கையை தொடங்கிய ரேலங்கி 1983 வரை அதில் பணியாற்றினார் 1987 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந்த இவர் 2000 ஆம் ஆண்டு முதல் முதுநிலை அறிவிப்பாளராக பணியாற்றி வந்தார். பின்னர் இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளாராகவும் செய்தி வாசிப்பவராகவும் இணைந்தார். இறப்பின் போது இவர் ரூபாவாஹினியில் கட்டற்ற பணியாளராக இருந்தார்.

ரேலங்கியும் அவரது கணவரும் அவர்களின் (8) மாதக் குழந்தையும் வணிக நிலையத்தில் விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் துப்பாக்கியால் சுடப்பட்டு கொலை செய்யப்பட்டனர். இலங்கையின் முன்னாள் வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை செய்யப்பட்ட அதே நாளில் இக்கொலைகளும் நடைபெற்றன. இம்மூன்று கொலைகளுக்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பாளிகள் என தெரிவிக்கப்பட்டது.

ரேலங்கி செல்வராஜா அவர்களின் வானொலி– தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தவிர மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குவதிலும் திறமைசாலியாக செயற்பட்டார். எந்தவொரு அவசர மேடை நிகழ்ச்சியானாலும் அவற்றை கையில் குறிப்புகளேதும் இல்லாமல் சொல்லவேண்டியவற்றை முன்னமே நன்கு கிரகித்துக் கொண்டு தொகுத்து வழங்குவதில் ரேலங்கிக்கு நிகர் ரேலங்கிதான். தனது ஒலி(ளி)பரப்புத் துறை வாழ்க்கையிலும் தனிப்பட்ட

www.padippakam.com

வாழ்க்கையிலும் எத்தகைய சவால்களை இவர் எதிர்கொண்டாலும் அவற்றை எல்லாம் துணிச்சலுடன் எதிர்கொண்டு தனது இறுதி உயிர்மூச்சு வரை அஞ்சாநெஞ்சத்துடன் போராடி அமரத்துவம் எய்தியவர் ரேலங்கி செல்வராஜா என்பது முக்கிய விடயமாகும்.

## ஸ்ரீ.ல.சு கட்சியின் பொறுப்புக்களை மஹிந்த ராஜபக்ஸ அவர்களிடம் கையளித்தல். (09.09.2005)

திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை அடுத்துவரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்சியின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கான (ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில்) கலந்துரையாடல் இடம்பெற்றபோது (09.09.2005) வடகிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி அமைப்பு முறையின் கீழ் அதிகாரப் பகிர்வினை வழங்குவதற்கு தாம் தயாரில்லையென முன்னாள் ஜனாதிபதியான திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களிடம் திரு. ராஜபக்ஸ அவர்கள் உறுதியாக அன்று தெரிவித்திருந்தார். அச்சம்பவம் ராஜபக்ஸவிற்கும், சந்திரிகாவிற்குமிடையில் கருத்துரீதியான முரண்பாட்டிற்கு அடிகோலியமை குறிப்பிடத்தக்கது. காரணம் சந்திரிகா அவர்களின் அரசியல் தீர்வாக வடகிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி அமைப்பினையொத்த ஓர் தீர்வுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில் அவர் உறுதியாக இருந்தார். எதுஎவ்வாறாயினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எந்தவொரு தீர்வுத் திட்டத்தினையும் ஏற்றுக்கொள்ள தயாரில்லை என அவர்களின் செயற்பாடு அமைந்திருந்தது. தமிழீழம் என்னும் மாய மானை தமிழ் மக்களுக்கு பிடித்துக் கொடுப்பதே அவர்களின் அரசியல் சித்தாந்தமாகும்.

இடம்பெற்ற தேர்தல் முடிவுகளின்படி அமைக்கப்பட்ட அரசாங்கம் போதிய பெரும்பான்மையினை கொண்டிராத நிலையில் (18.05.2004ல்) ஸ்ரீ.ல.மு. காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப். ஹசன் அகமட் பைலா என்பவர் அரசுடன் இணைந்தார். அவரைத் தொடர்ந்து (09.08.2004ல்) மேலும் எம்.என். அப்துல் மஜீத், ஜனாப். ரிசாட் பதியுதீன், (03.09.2004ல்) இ.தொ.காவின் (09) பாராளுமன்ற உறுப்பினர்களும், (16.06.2005ல்) ஜே.வி.பியின் (39) பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்தனர்.

பின்னர் (17.11.2005ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. மஹிந்த



படிப்பகம்

www.padippakam.com

ராஜபக்ஸ அவர்கள் வெற்றியீட்டியதும் பின்வருவோரும் அரசாங்கத்தில் இணைந்தனர். (14.12.2005ல்) வடிவேல் சுரேஸ், (25.01.2006ல்) ஐ.தே கட்சியின் உறுப்பினர்களான திரு. ஹெகலிய ரம்புக்வெல, மஹிந்த சமரசிங்க, அவர்களைத் தொடர்ந்து ஐ.தே.கட்சியின் பின்வரும் (18) உறுப்பினர்களும் அரசுடன் (28.01.2007ல்) இணைந்தனர். திரு. லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, திரு. ரோஹித போகொல்லாகம, திரு.பி. தயாரத்ன, திரு. ஆர்.எம். தர்மதாச பண்டா, திரு. நவின் திசாநாயக்க, திரு. எட்வட் குணசேகர, திரு. பந்துல குணவர்தன, திரு. கரு ஜெயசூரிய, திரு. காமினி லொக்குகே, ஜனாப் எம்.எச். முகமட், திரு. மிலிந்த மொரகொட, ஜனாப். எம். முகமட் முஸ்தபா, திரு. ஹேமகுமார நாணயக்கார, திரு. நியோமல் பெரேரா, திரு. ஜி.எல் பீரிஸ், திரு. ராஜித சேனரத்ன, திரு. சி.ஏ. சூரியாராச்சி, திரு. மனோ விஜேரத்ன, திரு. மஹிந்த விஜேசேகர, மற்றும் (30.01.2007ல்) ஜாதிக ஹெல உறுமயவின் (08) உறுப்பினர்களும் அரசுடன் இணைந்தனர். அதனைத் தொடர்ந்து ஜே.வி.பியிலிருந்து (12) உறுப்பினர்கள் வெளியேறி தேசிய சுதந்திர முன்னணி என்னும் புதிய அமைப்பினை உருவாக்கிய நிலையில் அவர்களும் அரசுடன் இணைந்தனர்.

மேற்படி மாற்றுக் கட்சிகளில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.ம.சு.முன்னணியில் இணைந்தமை திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் கைகளை வலுவடையச் செய்தது.


●



படிப்பகம்

www.padippakam.com

# பிரபாகரனது 16வது மாவீரர் உரை.



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திருவேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் நிகழ்த்திய 16 வது மாவீரர் உரையில் பொல்லைக் கொடுத்து அடிவாங்குவதற்கான தமது முதலாவது உரையினை (17.09.2005ந்) திகதியன்று நிகழ்த்துகின்றார். அவரின் உரையில் தமிழ் மக்கள் சுதந்திரமாக சுயநிர்ணய உரிமையுடன் வாழக்கூடியதான தீர்வுத் தீட்டம் ஒன்றினை திரு. ராஜபக்ஸ தலைமையிலான புதிய அரசாங்கம் முன்வைக்கத் தவறும் பட்சத்தில் எதிர்வரும் ஆண்டில் தமிழீழத்தினை அடைவதற்கான தமது நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுமென அறைகூவல் விடுத்தார். அதேவேளை அவரால் திகதி எதுவும் முன்வைக்கப்படவில்லை. அத்துடன் ஜனாதிபதி அவர்களால் முன்வைக்கப்படும் தீர்வுத்திட்டம் 3.2 மில்லியன் தமிழர்களினதும் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியதாக அமைய வேண்டுமெனவும் தெரிவித்தார். அவர்தெரிவித்த அந்த 3.2 மில்லியன் தமிழ் மக்கள் யாரென்பதுகூட அவருக்குத் தெரியாத விடயமே! வடமாகாணத்தில் வாழ்ந்த 102867 முஸ்லிம் மக்களை 48 மணிநேர கால அவகாசத்தில் அவர்கள் அனைவரினதும் சொத்துக்களை பறிமுதல் செய்துவிட்டு துரத்திய அம்மக்களுக்கான விடுதலையை இவர் கூறுவதற்கு இவருக்கு இருந்த தகைமை என்ன? வடகிழக்கில் அதாவது இரு மாகாணங்களிலும் வாழ்ந்த மொத்த இலங்கை தமிழ் மக்களின் எண்ணிக்கை 1981ம் ஆண்டின் சனத் தொகைக புள்ளிவிபரங்களுக்கமைய (1,359,203) ஆகவும் வடகிழக்கிற்கு



படிப்பகம்

www.padippakam.com

அப்பால் வாழ்ந்த இலங்கைத் தமிழ் மக்களின் எண்ணிக்கை (527,669) ஆகவும் மொத்த எண்ணிக்கை(1,886,872) ஆகும். இம்மக்களில் ஏறக்குறைய (1,000,000) பத்து லட்சம் மக்கள்வரை இவர் உரையாற்றிய காலப்பகுதியில் நாட்டைவிட்டு மேற்குலக நாடுகளுக்கு நிரந்தரமாக இடம்பெயர்ந்திருந்தனர். அவரின் உரையின்போது தமது அமைப்பினர் அன்றுவரை (17,903) போராளிகளை இழந்துவிட்டதாகவும் குறிப்பிடத் தவறவில்லை. பிரபாகரனின் மேற்கூறிய அறிக்கைகள் அன்றைய ஜனாதிபதியான திரு மகிந்த ராஜபக்ஸவை உசாரடையத் தூண்டியது.

●



படிப்பகம்

www.padippakam.com

# ஜனாதிபதித் தேர்தல். (17.11.2005)

| வேட்பாளர்கள் | அரசியல் கட்சிகள் | வாக்களித்தவர்கள் | விகிதம் |
|---|---|---|---|
| திரு. மஹிந்த ராஜபக்ஸ | ஐ.ம.சு.கூட்டமைப்பு | 4,887,152 | 50.29% |
| திரு.ரணில் விக்கிரமசிங்கா | ஐ.தே.கட்சி | 4,706,366 | 48.43% |
| திரு.ஸ்ரீதுங்க ஜயசூரிய | ஐ. சோ. கட்சி | 35,425 | 0.36% |
| திரு.ஏ.ஏ சுரவீர | தே.அ.அணி | 31,128 | 0.32% |
| திரு. விக்ர ஹரிகாட | ஐ.ல.ம.கட்சி | 14,458 | 0.15% |
| செல்லுபடியான வாக்குகள் | | 9,717,039 | |

அதற்கமைய (17.11.2005ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே ஜனாதிபதிகளாக பதவிவகித்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாக்குகளை கொள்வனவு செய்யும் பணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும் ஈடுபட்டனர். ஏற்கனவே பிரதமராவதற்காக நிதி வழங்கிய திரு. ரணில் விக்கிரமசிங்கா போன்றோரால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய நிதியினைவிட பலமடங்கு அதிகமான நிதியினை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஐ.ம.சு முன்னணியினரும் வழங்கியதாக செய்திகள் வெளியாகின. அக்காலப்பகுதியில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் அரசாங்கத்தில் ஜே.வி.பியினரும், ஜாதிஹ ஹெல உறுமயவினரும் இணைந்திருந்தமையால் தமிழ் தேசியவாதிகளால் இனவாதிகளென அழைக்கப்படும் மேற்கூறியவர்களுடனான திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் கூட்டு அரசாங்கம் நிலைத்து நிற்கமாட்டாதென தமிழ் தேசிய வாதிகளும், விடுதலைப் புலிகளும் கற்பனை செய்தமையால் மேற்படி தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்னும் கருத்துக்கள் எதனையும் தமிழ் மக்களிடம் இரு சாராரும் வலியுறுத்த முன்வரவில்லை.

இதன் பின்னணியில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் (226,009) வாக்குகளைப் பெற்ற நிலையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தெற்கில் அவரின் செல்வாக்கு சற்று அதிகரித்திருந்தமையால் நாடு தழுவியரீதியில் மொத்தமாக (4,887,152) வாக்குகளைப் பெற்று அவரின் போட்டியாளரான திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் (4,706,366) வாக்குகளையும் பெற்றதற்கமைய திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் (50.29%) வாக்குகளையும் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் (48.43%) வீதமான வாக்குகளையும் பெற்றமையால் மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிரச்சாரம் திரு. மஹிந்த அவர்களுக்கு எதிராக



படிப்பகம்

www.padippakam.com

மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவருக்கு வடக்கு, கிழக்கில் கிடைத்த (226009) வாக்குகளில் ஒரு பகுதியேனும் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பின் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக வருவது சாத்தியமற்ற நிலையாகவே இருந்திருக்கும். தேர்தல் முடிவுகளின்படி (180786) வாக்குகள் மட்டுமே இரு வேட்பாளர்களுக்குமிடையில் வெற்றி, தோல்வியினை தீர்மானித்த வாக்குகளாக அமைந்தன.

மேற்படி சம்பவம் தமிழ் தேசியவாதிகளினதும், விடுதலைப் புலிகளினதும் வரலாற்றுரீதியான தவறுகளிலும், கபட நாடகங்களிலும் முக்கியமானதாக அமைந்தது. இதற்கான ஆதாரம் ஏற்கனவே இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அவதானித்தால் விளங்கிக் கொள்ளமுடியும்.

| | | |
|---|---|---|
| 20.11.1982 | திரு. ஜே.ஆர் ஜயவர்தனா<br>திரு. ஹெக்டர் கொபேகடுவ<br>மேலதிக வாக்குகள் | 3,450,811<br>2,548,438<br>902,373 |
| 19.12.1988 | திரு. ஆர். பிரேமதாசா<br>திருமதி ஸ்ரீமாவோ<br>மேலதிக வாக்குகள் | 2,569,199<br>2,289,960<br>279,239 |
| 09.11.1994 | திருமதி சந்திரிகா குமாரணதுங்க<br>திருமதி வஜீரா ஸ்ரீமதி திசாயாயக்க<br>மேலதிக வாக்குகள் | 4,709,205<br>2,715,285<br>1,993,920 |
| 21.12.1999 | திருமதி. சந்திரிகா குமாரணதுங்க<br>திரு. ரணில் விக்கிரமசிங்க<br>மேலதிக வாக்குகள் | 4,312,157<br>3,602,748<br>709,409 |
| 17.11.2005 | திரு. மஹிந்த ராஜபக்ஸ<br>திரு. ரணில் விக்கிரமசிங்க<br>மேலதிக வாக்குகள் | 4,887,152<br>4,706,366<br>180,786 |
| 26.01.2010 | திரு. மஹிந்த ராஜபக்ஸ<br>திரு. சரத் பொன்சேகா<br>மேலதிக வாக்குகள் | 6,015,934<br>4,173,185<br>1,842,749 |

தமிழ் தேசியவாதிகளின் இனவாத கோஷத்தினால் பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரு தேர்தல்களிலும் வெற்றிபெற்ற திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தையை மேற்கொள்வதற்கு பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றினை காண்பதற்கு விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. அதற்கான பிரதான காரணம் புலம்பெயர்



படிப்பகம்

www.padippakam.com

நாடுகளில் விடுதலைப் புலிகளின் பெயரால் நிதிசேகரிக்கும் கனவான்களின் வருவாயில் பாரிய வீழ்ச்சி வீழ்ந்துவிடுமென்பதற்காக இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அவர்கள் எப்போதும் தடையாகவே செயற்பட்டார்கள்.

## வடகிழக்கு மாகாண இணைப்பு செல்லுபடியற்றது - உயர் நீதிமன்றம் தீர்ப்பு

1987ம் ஆண்டு யூலை மாதம் 29ந் திகதிய இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கு அமைய தற்காலிகமாக இணைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான தேர்தல் 1988ம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ந் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலின்போது வடமாகாணத்தைச் சேர்ந்த வாக்காளர்கள் எவரையும் வாக்களிக்கவிடாது விடுதலைப் புலிகள் தடைசெய்தனர். இருந்தும் கிழக்கு மாகாணத்தில் அதற்கான வாக்கெடுப்பு இடம்பெற்றது. இத்தேர்தலில் மூன்று அரசியல் கட்சிகள் பங்குகொண்டு (17,17.01) என்னும் அடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்,) சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி போன்றவை முறையே, 17, 17, 01 என்னும் அடிப்படையில் பிரதிநிதிகளைப் பெற்று மாகாணசபையின் தலைமைச் செயலகத்தினை திருகோணமலையில் அமைத்து செயற்பட்டனர்.

மேற்படி மாகாண சபையினை எவ்வகையிலேனும் இல்லாதொழிக்க வேண்டுமென கங்கணங்கட்டி விடுதலைப் புலிகள் செயற்பட்டனர். அதற்கமைய இலங்கை – இந்திய உடன்படிக்கைக்கு எதிராக செயற்பட்ட அன்றைய பிரதமரான திரு. பிரேமதாசா அவர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உடன்படிக்கை அதனைச செயலிழக்க வழிகோலியது.

அதற்கமைய (16) வருடங்கள் செயற்படாதிருந்த வடகிழக்கு மாகாணங்களின் இணைப்பினை இரத்துச்செய்யவெண்டுமென ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்களான திரு. ஜயந்த விஜேசேகர, எல்.கே வசந்த மற்றும் ஏ.எல் முஹமட் வுஹாரி ஆகியோரினால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கின் விசாரணைகள் உயர் நீதிமன்ற நீதிபதி சரத் என் சில்வா அவர்களின் தலைமையில் ஏனைய நீதிபதிகளான திரு. நிஹால் ஜயசிங்க, திரு என்.ரே உதலகம, திரு. ராஜ பெர்னாண்டோ மற்றும்



படிப்பகம்

www.padippakam.com

திரு. அமரதுங்க ஆகியோரை உள்ளடக்கிய நீதிமன்றில் விசாரணை இடம்பெற்று வழக்கு விசாரணைகளுக்கு அமைய வடகிழக்கு மாகாணத்தின் இணைப்பு செல்லுபடியாகாதென உயர் நீதிமன்ற நீதிபதி திரு. சரத். என் சில்வா அவர்களின் தலைமையிலான நீதிமன்றம் (16.10.2006ம்) திகதி தீர்ப்பு வழங்கியது. இலங்கை தலைமை நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான 5 நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்ற அமர்வு இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

வடக்கு கிழக்கின் இணைப்பானது கிழக்கு மாகாண மக்களின் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் கிழக்கு மாகாணத்துக்கு தனியானதொரு தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேற்படி வழக்கு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சட்டமேதைகள் எவரும் கண்டுகொள்ளாதவர்கள் போன்று தலைமறைவாகினர். ஆனால் வழக்கிற்கான தீர்ப்பு வெளியாகியதன் பின்னர் அவர்களின் மக்களை ஏமாற்றும் தந்திரோபாயமான பத்திரிகை அறிக்கைகளை மட்டும் வெளியிட்டனர்.

## தியாகராசா மகேஸ்வரன் படுகொலை. (01.01.2008)



ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் இந்து கலாசார அமைச்சரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய தியாகராஜா மகேஸ்வரன் (01.01.2008) அன்று காலை கொழும்பில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டார். புது வருடப் பிறப்பை முன்னிட்டு அன்று காலை 9.15 மணியளவில் கொழும்பு-13, கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தில் விசேட வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போதே அவர் மீது புலிகளின் ஆயுததாரிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் படுகாயமடைந்ததோடு, அவரது மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார்.மேலும் சம்பவத்தின் போது கோயிலில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த பொது மக்கள் ஆறு பேரும் படுகாயமடைந்தனர்.



படிப்பகம்

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் படுகாயமடைந்த மகேஸ்வரன் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சையளிக்கப்பட்ட போதும், மருத்துவர்களின் தீவிர போராட்டம் பலனின்றிப்போய் முற்பகல் 10.30 மணியளவில் உயிரிழந்துள்ளார். தியாகராஜா மகேஸ்வரன் கடந்த 2001ம் ஆண்டு பொதுத் தேர்தலில் யாழ் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன் முதலாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். அப்போதைய தேர்தலில் அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இந்துக் கலாசார அமைச்சராகவும் பதவி வகித்தார். அவர் இந்துக் கலாசார அமைச்சராகப் பதவி வகித்த காலத்தில் அன்றைய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அவருக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவிய நெருங்கிய நட்பின் காரணமாக பல சந்தர்ப்பங்களில் அவர் நாடாளுமன்றத்தில் உள்ளேயே தான் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சியின் கட்டுப்பாட்டை மீறி நடந்து கொண்டிருந்தார். தனது கட்சித் தலைவர் ரணில் விக்கிரசிங்கவையே பல தடவைகள் பகிரங்கமாக விமர்சித்திருந்தார்.

2004ம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது புலிகள் அமைப்பினர் எதிர்ப்புக் காட்டியதன் காரணமாக யாழ். மாவட்டத்தை விட்டு கொழும்பில் போட்டியிட முன்வந்தார். எனினும் ஏற்கெனவே கொழும்பு தமிழர்களின் வாக்குப் பலத்தை தன் வசம் வைத்திருந்த மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் மகேஸ்வரனுக்கும் இடையில் பகிரங்க மோதல் வலுப்பெற்றது. அதன் காரணமாக தேர்தல் காலத்தில் மனோ கணேசன் எம்.பி.யின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் கொட்டாஞ்சேனையின் ஜிந்துப்பிட்டிப் பகுதியில் வைத்து மகேஸ்வரன் மீது கொலை முயற்சியொன்று மேற்கொள்ளப் பட்டிருந்தது. அச்சம்பவத்தில் கழுத்துப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து, ஒருவாறு தப்பிப் பிழைத்தார்.

மேலக மக்கள் முன்னணியே தம்மைக் கொலை செய்ய முயற்சித்தாக மகேஸ்வரன் குற்றம் சாட்டியிருந்த போதும், அக்கட்சியின் தலைவர் மனோ கணேசன் அதனை மறுத்திருந்ததுடன், மகேஸ்வரனைக் கண்டபடி தாக்கி அறிக்கையும் விட்டிருந்தார். அது முதலே அவர்கள் இருவரும் அரசியலில்

www.padippakam.com

எதிர்த் துருவங்களாகவே விளங்கியிருந்தனர். இம்முறை அவர் படுகொலை செய்யப்படக் காரணமாக அமைந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்ற கோவிலும் கொட்டாஞ்சேனைப் பகுதியிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கட்சி தாவி அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவிகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னணியில் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும் அரசாங்கத் தரப்புக்குத் தாவப் போவதாக பல சந்தர்ப்பங்களில் பலமான ஊகங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன. முன்னைய வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பின் போதும் கூட அவர் அரசாங்கத் தரப்புக்கு மாறப் போவதாக பலமான கதை அடிபட்டது. அதே போல இந்த ஜனவரியில் அரசாங்கத் தரப்புக்கு கட்சி மாறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் மகேஸ்வரனும் உள்ளடங்கியிருப்பதாக அரசியல் வட்டாரங்களிலிருந்து தெரிய வந்திருந்தது. ஜனாதிபதிக்கும் மகேஸ்வரனுக்கும் இடையில் நிலவும் நெருங்கிய நட்பின் அடிப்படையிலேயே அவர் கட்சி தாவ தீர்மானித்திருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறான சம்பவங்களின் பின்புலத்திலேயே அவர் புலிகளின் ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக மிலேச்சத்தனமான முறையில் படுகொலை செய்யப்பட்டார்.

## கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சி முடிவு பெற்றதற்கமைய இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்.

கிழக்கு மகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் முழுமையாக ஒழிக்கப்பட்டதற்கிணங்க அங்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் (10.03.2008ல்) இடம்பெற்றது. இந்நிலைமையில் கீரியும் பாம்புமாக ஏற்கனவே அரசியல் நடாத்திக்கொண்டிடிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி மற்றும் புளொட் ஆகிய வடமாகாண மேலாதிக்க அரசியல் கட்சிகள் அவசர அவசரமாக ஒன்றிணைந்து ஈழவர் ஐக்கிய முன்னணி என்னும் பெயரில் புதிய கூட்ட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி அங்கு தேர்தலில் களமிறங்கினர். அவர்கள் தவிர ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினரும் களமிறங்கினர். அதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அக்கட்சியின் தலைவரான



படிப்பகம்

www.padippakam.com

திரு. சந்திரகாந்தன் அவர்களின் தலைமையில் முதல் தடவையாக களமிறங்கினர்.

## கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் 1072 வாக்குச் சாவடிகள். (10.03.2008)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கேற்ற விதத்தில் 10 தொகுதிகளிலும் 1072 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படன. அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் 982,721 வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு ஏற்ற வகையில் 10 தொகுதிகளிலும் 1072 வாக்குச் சாவடிகள் அமைக்கப்படன. மட்டக்களப்பு மாவட்டத்தில் 330950 வாக்காளர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 242463 வாக்காளர்களும், அம்பாறை மாவட்டத்தில் 409308 வாக்காளர்களும் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருந்தனர்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் மூன்று மாவட்டங்களிலுமுள்ள 10 தேர்தல் தொகுதிகளிலும் 43 பேரை வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும் என்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 14 பேரையும், திருகோணமலை மாவட்டத்தில் 13 பேரையும், அம்பாறை மாவட்டத்தில் 17 பேரையும் வேட்பாளர்களாக நியமிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## மட்டு. உள்ளூராட்சி தேர்தல் ஈ.பி.டி.பி. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். கூட்டணி சுயேச்சைக் குழு என்னும் பெயரில் வேட்பு மனு தாக்கல். (21.01.2008)

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப். (பத்மநாபா அணி) ஆகிய கட்சிகள் இணைந்த சுயேட்சைக்குழு தாக்கல் செய்தன. ஆரையம்பதி, செங்கலடி, வாகரை, வாழைச்சேனை ஆகிய பிரதேச சபைகளுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவித்தாட்சி அதிகாரியுமான சுந்தரம் அருமைநாயகம் வேட்பு மனுக்களை கையேற்றார். ஆரையம்பதி பிரதேச சபைக்கு பி.சுரேந்திரன், செங்கலடி சபைக்கு வீரக்குட்டி சேகர், வாழைச்சேனை சபைக்கு அந்துணன் கந்தசாமி, வாகரை பிரதேச சபைக்கு கணபதிப்பிள்ளை யோகநாதன் தலைமையில் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டது. ஈ.பி.டி.பி.பிரமுகர்களான, கே.அருமைலிங்கம் சிவாமாமா, புளொட் பிரமுகர் பகீரதன் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

## மட்டுநகர் உள்ளூராட்சித் தேர்தல்பற்றி த.வி. கூட்டணியின் தலைவர் திரு ஆனந்தசங்கரி அவர்கள் வெளியிட்ட அறிக்கைக்கான பதில் - ஸ்ராலின்

திரு. ஆனந்தசங்கரி அவர்களுக்கு. தாங்கள் மட்டக்களப்பு உள்ளூராட்சி மன்ற தேர்தலையொட்டி மட்டகளப்பு மக்களுக்கு என விழித்து வெளியிட்டிருந்த பகிரங்க வேண்டுகோளை செவிமடுத்ததன் பலனாகவே இப்பதிலுரையை தங்களுக்கு எழுதவினைகிறேன். ஒருதேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது அவரவருக்குரிய ஜனநாயக உரிமையாகும். ஆனால் உங்களைப் போன்ற முதிர்ந்த அரசியல்வாதி ஒருவர் குறைந்த பட்சம் நீங்கள் ஆதரிக்கின்ற கட்சிகளை அவர்களது கொள்கைகளை, அவற்றினை நிறைவேற்ற அவர்கள் கைக்கொள்ளும் வழிமுறைகளை பற்றி விளக்கி கூறியிருக்கவேண்டும். அப்படி கூறி இருந்தால் அது மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்ய பயனுடையதாயிருந்திருக்கும்.

ஆனால் துரதிஷ்டவசமாக தங்களுடைய வேண்டுகோள் அவ்வாறு அமைந்திருக்கவில்லை. மாறாக தங்களது பிரசுரத்தில் சுருக்கமாக இரு விடயங்கள் மட்டுமே அடங்கிருந்தத. 1. மக்களது அவலங்களுக்கும், கஷ்டங்களுக்கும் காரணம் தமிழர்களிடையே ஒற்றுமை இன்மைதான் எனக்கூறி மீண்டும் கிழக்கில் தமிழ் இன உணர்வுகளை கிளறிவிடும் முனைப்பாகவே இது தெரிவாகியுள்ளது. அத்துடன் மூன்று இயக்கங்கள் கூடி அப்பிள் சின்னத்தில் ரி.எம்.வி.பிக்கு எதிராக போட்டியிடுவதை தமிழர் ஒற்றுமையின் அடையாளமாக சித்தரித்து அவர்களுக்கு வாக்கு சேகரிப்பது. இவற்றினை கருத்தில் கொண்டு பார்க்கையில் கிழக்குமாகணத்தின் அரசியல் போக்கில் ஏற்பட்டு வருகின்ற காலமாற்றத்தை சீர்குலைப்பதே உங்கள் குறி எனத்தெரிகிறது.



படிப்பகம்

www.padippakam.com

அது மட்டுமன்றி கிழக்குமாகாண மக்களிடம் ஏற்பட்டிருகின்ற விழிப்புணர்வையும் அரசியல் வேட்கையையும் கண்டு பயம் கொள்ளுகின்ற தொனி தங்களது எழுத்துக்களில் விரவிகிடப்பதனை அவதானிக்க முடிகின்றது. ஆகவே கிழகுமக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற இந்த சமூக அசைவியக்கத்தை கட்டிபோடமுயலுகின்ற எத்தனத்தில் நீங்களும் இறங்கியிருக்கின்றீர்கள். அதற்காக நிறைந்த பொய்களையும், புரட்டுகளையுமே உங்கள் பேனா துணைக்களைத்திருக்கின்றது. உங்களது வேண்டுகோளில் உள்ள அதிகமான வரிகள் யாழ்மேலாதிக்கம் என்கின்ற ஒரு அதிகாரப்போக்கு அறவே இல்லையென்று அடித்து சத்தியம் செய்ய முயல்கின்றன. அதற்கு துணையாக வரலாற்றை திரித்து பொய்சாட்சி சொல்கின்றீர்கள். யாதும் ஊரே யாவரும் கேளீர் என்று கிழக்குமாகணமக்களுக்கு பள்ளிபாடம் நடாத்தமுனைகிறீர்கள் யாழ்பாணத்தில் ஒழுங்கைக்கு ஒரு சாதிபிரிவுகளையும் ஒடுக்குமுறைகளையும் வைத்துக்கொண்டு மட்டகளப்பிற்கு வந்து யாதும் ஊரே யாவரும் கேளீர் என்றுசொல்ல உங்களுக்கு தார்மீக தகுதி இல்லை.

கடந்த காலங்களில் தமிழ் கட்சிகளின் தலைமைப் பொறுப்பு கிழக்குமாகாண மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டிருக்கின்றது 'என்றும்' தந்தைசெல்வா, சிவசிதம்பரம், அமிர்தலிங்கம். போன்றோரின் தலைமைகளை கிழக்குமாகண மக்களும் மதித்து வந்திருக்கிறார்கள்' 'இராஜதுரை அவர்களின் பேச்சாற்றலை வடபகுதி மக்கள் மதித்து வந்திருக்கிறார்கள்' என்று பலவரிகள் உங்கள் கடிதத்தில் காணப்படுகின்றது. சுமார் ஐம்பதுவருட தமிழ் அரசியல் வரலாற்றில் ஒரேஒரு வருடத்திற்கு மட்டும் தமிழரசுக் கட்சிக்குரிய தலைமைப் பொறுப்பு. பட்டிருப்புத் தொகுதி எம்பியான இராசமாணிக்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. அதுகூட வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுச் கட்சியினரால் முன்னெடுக்கப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தினை தலைமைதாங்கி நடத்துவதற்காகவே அவரிடம் கட்சியின் தலைமைப் பதவியை தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்டமை முக்கியமானதாகும். அந்த புறநடையை மட்டும் வைத்துக்கொண்டு யாழ்பாண அரசியல்வாதிகளின் மேலாதிக்க அணுகு முறையை மறைக்க முயலுகிறீர்கள். கிழக்குமாகாணத்தை மட்டுமல்ல வன்னியை, மலையகத்தை, முஸ்லிம்களை கொச்சைபடுத்தி மடையரென்றும், காட்டான்கள் என்றும், தோட்டகாட்டான்கள் என்றும், தொப்பி பிரட்டிகள் என்றும் நடத்திவந்த கேவலமான உண்மைகள் அனைத்தையும் மறைத்துவிட நீங்கள் நினைப்பது சிறுபிள்ளைத்தனமாக மட்டுமே இருக்க முடியும். த.வி.கூட்டணிக்கு தலைவராக வரவேண்டிய இராஜதுரை அவர்களை ஒதுக்கிய வரலாறுகள் ஒன்றும் கண்டி இராசன் காலத்தில் நடந்த கதையல்ல நாம் கண்ணால் கண்டுவந்த வரலாறு.



படிப்பகம்

இராஜதுரைக்கு எதிராக காசிஆனந்தனை நிறுத்தி எதிர்பிரச்சரத்திற்காக கோவை மகேசனும், மாவை சேனாதிராஜாவும் மட்டகளப்பில் தங்கிநின்று பிரச்சாரம் செய்த சம்பவங்களை எல்லாம் நீங்கள் மறந்துபோனதுபோல் நடிக்கலாம் ஆனால் மட்டகளப்பு வாழ் மக்கள் மறக்கப் போவதில்லை. ஏனென்றால் 30 வருடங்கள் கழித்து இன்றும் அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. எந்த தலைமைகன் உருவாகிவிடக்கூடாதென்று அன்று அமிர்தலிங்கமும், பரிவாரங்களும் கங்கணம்கட்டி நின்றார்களோ அதேபோல்தான் இன்றும். கிழக்குமாகணத்திலிருந்து உருவாகியுள்ள ஒரு புதிய அரசியல் கட்சிக்கு எதிராகவும், கிழக்குமக்கள் தமது சொந்த தலைமைகளை உருவாக்கிவிடக் கூடாது என்பதற்காகவும். சித்தாத்தனும், சிறிதரனும், டக்ளசும், சங்கரியும் கைகோர்த்திருக்கின்றீர்கள். யு.என்.பி.ஆட்சிக்கு வருகின்ற ஒவ்வொரு காலகட்டத்திலும் கூட்டுச்சேர்ந்து அமைச்சராகிக்கெண்ட தமிழ்காங்கிரசும், தமிழ்ரசுக் கட்சியும் பெற்றுக்கொண்ட அமைச்சர் பதவிகள் எப்போதாவது கிழக்குமாகண தலைவர்களுக்கு வழங்கப்பட்டதா?

இவையனைத்தும் நடந்துமுடிந்த வரலாறுகள். சங்கரி ஐயா அவர்களே இதுவரை நீங்கள் எத்தனை கடிதங்களை எழுதியிருக்கிறீர்கள்? இந்தியத் தலைவர்கள், இலங்கைத் தலைவர்கள், ஏன் உங்கள் அன்புத் தம்பி பிரபாகரனுக்குத்தான் எத்தனை கடிதங்கள். ஆனால் நீங்கள் இதுவரை கடிதம் எழுதாத ஒரேஒருவர் இருக்கின்றார் என்றால் அது கருணாதான். பிணங்களை தூக்கி தூக்கியே சலிக்காத வேதாளம் மீண்டும் மீண்டும் பிணங்களை தூக்கிதோளில் போட்டுகொண்டு முருங்கைமரத்தில் ஏறுவது போல் பிணம் தின்னி பிரபாகரனை திருத்த நீங்கள் எடுக்கும் அயராத முயச்சி பாராட்டத்தக்கது. ஆனால் அந்த பிரபாகரனுக்கு எழுதக்கூடிய கடிதங்களில் ஒன்று கூட உங்களால் கருணாவுக்கு எழுதப்படாதது ஏன்?. புலிகளையும், ஜே.வி.பி.ஐயும், ஏன் சிஹல உருமயயையும் கூட கடிதமெழுதி திருத்தமுடியும்மென்றால் கருணாவை திருத்தமுடியாதா? என்ன காரணம் ஏன் இதுவரை அப்படியொரு கடிதத்தை கருணாவுக்கோ, ரி.எம்.வி.பி.க்கோ எழுதமுடியவில்லை. திரு.வீ.ஆனந்தசங்கரி, தலைவர். த.வி.கூட்டணி இடமிருந்து கடிதம் பெறும் தகுதியைகூட கருணா பெற்றுவிடக்கூடாது, அதனுடாக அரசியலில் கருணா ஒரு அரசியல் முக்கியஸ்தர் எனும் தகுதியை பெற்றுவிடக்கூடாது, என்பதில் நீங்கள் எவ்வளவு கவனமாயிருக்கின்றீர்கள் பாத்தீர்களா? இந்த கவனத்துக்கு என்னபெயர்? வன்முறையாளனுக்கு கடிதம்

www.padippakam.com

எழுதமாட்டன் என்கிறீர்களா? பிரபாகரனை விடவா? கருணா வன் முறையாளன்? கருணாவின் குருநாதனே பிரபாகரன்தானே. பிரதேசவாதிக்கு கடிதம் எழுதமாட்டேன் என்கிறீர்களா? சகல உருமையவின் பேரினவாதத்தை விடவா கருணாவின் பிரதேசவாதம் கொடியது.

| பிரதேச சபைகள் | பெற்ற வாக்குகள் | உறுப்பினர்கள் |
|---|---|---|
| **கோறளைப்பற்று வடக்கு** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7,331 | 10 |
| பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி | 528 | 01 |
| சுயேச்சை குழு | 454 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 335 | 0 |
| ஜாதிக சங்வர்தன பெரமுன | 52 | 0 |
| செல்லுபடியானவை | 8,716 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1,165 | |
| அளிககப்பட்ட மொ.வாக்குகள | 8,68 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள | 12,419 | |
| **போரதீவுப்பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள விடுதலைப் புலிகள் | 7,089 | 07 |
| சுயேச்சை குழு | 3,051 | 02 |
| செல்லுபடியானவை | 10,140 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,660 | |
| அளிககப்பட்ட மொ.வாக்குகள் | 2,800 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 28,116 | |
| **மன்முனை தெற்கு எருவில்பற்று பி.சபை** | | |
| தமிழ் மக்கள விடுதலைப் புலிகள் | 10,017 | 07 |
| சுயேச்சை குழு | 5,613 | 03 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 194 | 0 |
| ஜாதிக சங்விதான பெரமுன | 193 | 0 |
| செல்லுபடியானவை | 16,048 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,454 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 18,502 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 38,386 | |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| **மண்முனை தென் மேற்கு பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6,371 | 08 |
| சுயேச்சை குழு | 1,401 | 01 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 88 | 0 |
| செல்லுபடியானவை | 7,860 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1,852 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள | 9,712 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள | 14,880 | |
| **மண்முனை பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 9,373 | 07 |
| சிறீ.ல.மு காங்கிரஸ் | 2,816 | 02 |
| சுயேச்சை குழு 1 | 510 | 0 |
| பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி | 336 | 0 |
| தேசிய காஙகிரஸ் | 70 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 29 | 0 |
| சுயேச்சை குழு 3 | 8 | 0 |
| சுயேச்சை குழு 2 | 6 | 0 |
| செல்லுபடியானவை | 13,158 | |
| நிராகரிக்கப்பட்டவை | 856 | |
| அளிககப்பட்ட மொ.வாக்குகள் | 14,014 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 18,759 | |
| **ஏறாவுர் பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 15,851 | 10 |
| சிறீ.ல.மு காஙகிரஸ் | 3,479 | 02 |
| சுயேச்சை குழு 1 | 2,483 | 01 |
| பொதுஜன ஐக்கிய சுதந்திர முன்னணி | | 01 |
| சுயேச்சை குழு 5 | 281 | 0 |
| ஜாதிக சங்விதான பெரமுன | 154 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 106 | 0 |
| சுயேச்சை குழு 2 | 31 | 0 |
| சுயேச்சை குழு 3 | 24 | 0 |
| சுயேச்சை குழு 4 | 15 | 0 |
| செல்லுபடியானவை | 24,904 | |
| நிராகரிக்கப்பட்டவை | | |



படிப்பகம்

# கிழக்கு மாகாண சபைத் தேர்தல் முடிவுகள். (10.05.2008)

| அரசியல் கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 308,886 | 52.21 | 20 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 250,732 | 42.38 | 15 |
| மக்கள் விடுதலை முன்னணி | 9,390 | 1.59 | 01 |
| தமிழ் ஜனநாயகக் தேசியக் கூட்டணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) | 7,714 | 1.30 | 01 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | 5,418 | 0.92 | 00 |
| தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் அணி | 383 | 0.06 | 00 |

மேற்படி மாகாண சபைக்கான தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் மூன்றும் ஒன்றிணைந்து ஐ.தே.கட்சியின் சின்னத்தில் களமிறங்கினர். மேற்படி தேர்தல் பிரச்சார நிகழ்வுகளில் கிழக்கு மாகாணத்திற்கான தனியான நிர்வாகத்தினை தாம் ஒருபோதும் ஏற்பதற்கு தயாரில்லை எனவும் வடமாகாணமும், கிழக்கு மாகாணமும் இணைந்ததான மாகாண சபையில் மட்டுமே தமது அணியினர் தனித்துவமாக போட்டியிடுவரென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் அவர்கள் தமிழ் மக்களுக்கு தெரிவித்தார். எவ்வகையிலேனும் கிழக்கு மாகாண நிர்வாகத்தினை கைப்பற்றிவிட வேண்டுமென்னும் நோக்குடன் ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான திரு. ரவூப் ஹக்கீம் அவர்கள் தமது பாராளுமன்ற உறுப்பினர் பதவியினை இராஜினாமாச் செய்துவிட்டு தமது மனைவியார் சகிதம் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டார். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த வெற்றியினை அடையமுடியாது போனமையால் மீண்டும் பாராளுமன்ற அரசியலுக்குள் அவர் நுழைந்தார்.

இந்நிலையில் கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியினை எவ்வாறேனும் தமதாக்கிக் கொள்வதற்காக ஏ.எம் ஹிஸ்புல்லா அவர்கள் ஒரு வாரகாலமாக முயற்சிகளை மேற்கொண்டார். இந்நிலையில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் ஆகக்கூடிய வாக்குகளைப் (41936) பெற்ற திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களை அம்மாகாண சபையின் முதல் முதலமைச்சராக

www.padippakam.com

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் தெரிவுசெய்ததற்கமைய பதவியேற்பு வைபவம் 16.05.2008 ந் திகதியன்று அலரி மாளிகையில் இடம்பெற்றது.

திரு. சம்பந்தன் அவர்களின் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு அரசியல் பாடம் கற்றுக் கொடுக்குமளவிற்கு இலங்கையிலுள்ள ஏனைய (7) மாகாண சபைகளின் நிர்வாகத்தில் இடம்பெறும் போட்டி அரசியல் முற்றிலுமற்ற ஒரு மாகாண சபை செயற்படுகின்றதெனில் அது கிழக்கு மாகாண சபை மட்டுமே என்பதனை திரு. சம்பந்தன் தெரிந்து கொள்வது பயனுள்ளதாக அமையும்.

## திரு மஹிந்த ராஜபக்ஸ அவர்களுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டமையால் தீர்ப்பு வழங்கியவரே தீர்ப்புக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டமை.



வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் இணைந்திருக்க வேண்டுமா? அல்லது பிரிந்திருக்க வேண்டுமா? என்ற பிரச்சினை ஜனாதிபதி தேர்தல் நேரத்தில் மீண்டும் அரங்கிற்கு வந்தது. அதை அரங்கிற்கு கொண்டு வந்தவர் வேறு யாருமல்ல. வடக்கு – கிழக்கு இணைப்பு சட்டப்படி செல்லுபடியற்றதென தீர்ப்பு வழங்கிய முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவே அதை கொண்டுவந்தார்.

(26.01.2010ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யாழ் குடாநாட்டிற்கு பிரச்சார சுற்றுப்பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுடன் இணைந்து கொண்ட சரத் என் சில்வா 'யாராவது வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என நோக்கம் கொண்டிருந்தால் அதற்கான மக்கள் கருத்து கணிப்பு நடாத்தும் நேரம் இதுவாகும்' என குட்டிக்கரணமொன்றினை யாழ்ப்பாணத்தில் அடித்தார்.

அவரது கூற்றுப்படி இந்த நேரத்தில் இணைப்பு பற்றி வாக்கெடுப்பு நடாத்த வேண்டுமென்றால் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பா? அல்லது பின்பா? இல்லாதுவிடின் ஜனாதிபதி தேர்தலுடன் இணைத்தா? என்பதுபற்றிய கருத்து



படிப்பகம்

www.padippakam.com

எதனையும் கூறாது வடமாகாண மக்களின் வாக்குகளை அவர்சார்ந்த வேட்பாளரான சரத் பொன்சேகா அவர்களுக்கு வழங்குங்கள் என்பதனையே நாசூக்காக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வடக்கு கிழக்கு இணைப்பை பிரிக்க கோரி வழக்கு தாக்கல் செய்த திரு. சோமவன்ஸ அமரசிங்க தலைமையிலான ஜே.வி.பியும் அதை பிரிக்கும்படி தீர்ப்பு வழங்கிய முன்னாள் பிரதம நீதியரசரும், 'இலங்கை சிங்களவர்களுக்கு மட்டுமே உரிய நாடு' என பச்சை இனவாதம் பேசிய சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்காக ஒரே அணியில இணைந்திருந்தனர். அப்படி இணைந்திருப்பது மட்டுமின்றி இந்த இனவாத கூட்டு துணிச்சலுடன் யாழ்ப்பாணம் சென்று தமிழ் மக்களுக்கு அது செய்வோம், இது செய்வோம் என அங்குள்ள மக்களுக்கு காதில் பூச்சூடினர்

அவர்களை சொல்லி குற்றமில்லை' என்று யாரோ சொன்னது போல 'வீடு கொளுத்துகிற ராசாவுக்கு கொள்ளி எடுத்து கொடுத்த மந்திரி கணக்காக' தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சம்பந்தன் கோஷ்டியினர் யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை எமது ஆதரவு பொன்சேகாவுக்கே' என்று வாங்கிய பல மில்லியன் டொலர்களுக்காக ஒரு மோசமான இனவாதியை ஆதரித்து ஒற்றை காலில் நின்றனர்.

அதற்கமைய வடமாகாண மக்களும் (184244) வாக்குகளை சரத் பொன்சேகா அவர்களுக்கு வழங்கியதன் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் கூலிக்கு வெட்டப்பட்ட குழியில் அவர்கள் வீழ்ந்தனர். மேற்படி எண்ணிக்கையான வாக்குகள் ஒருபோதும் ஜனாதிபதியாக போட்டியிட்ட பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வடமாகாண மக்கள் வழங்கியதாக வரலாறு கிடையாது. இச்சம்பவம் வன்னி மீட்பின்போது கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் கொலைகளை நிராகரித்து, அங்கு மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை அப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்கான முயற்சியே என்பதனை உறுதிப்படுத்தியது.

●



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அரசியலில் தடம்பதித்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள்.



கருணா அம்மானும் பிள்ளையானும் இணைந்திருந்த காலப் பகுதி



சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் முதற்தடவையாக தமக்கான வாக்குச்சீட்டை பயன்படுத்திவிட்டு வாக்குச் சாவடியை விட்டு வெளியேறும் காட்சி.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டு அமுலாக்கப்பட்டிருந்தது. இந்த கால கட்டத்தில்தான் 2004 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் தமிமீழ விடுதலைப் புலிகளுக்குள் கேணல் கருணா தலைமையிலான கிழக்குப் பிளவு நடந்தது. இப்பிளவுக்கான அடிப்படைக் காரணம் யாழ் மேலாதிக்கத்தின் கிழக்கு மாகாணம் மீதான ஒருதலைப்பட்சமான ஓரவஞ்சனையே ஆகும் என்று இப்பிளவிற்கு தலைமையேற்றிருந்த கேணல் கருணா அறிவித்தார். இப்பிளவு ஏற்பட்டவுடன் இந்த பிரிவினர் தம்மை கிழக்கு புலிகள் என அழைத்துக் கொண்டனர். பிரபாகரன் தலைமையிலான புலிகள் அவர்கள் களம் அமைத்திருந்த வன்னிப் பிரதேசத்தை குறிக்கும் முகமாக வன்னிப் புலிகள் என பரவலாக அழைக்கப்படலாயினர்.

இப்பிளவினை முடிந்தவரை சர்வதேசத்திற்கு மறைக்க முயன்ற வன்னிப் புலிகள் அது முடியாமல் போகவே இப்பிளவானது கருணா எனும் தனிமனிதனது பிரச்சினையென்று அறிவித்தனர். அதன் அடிப்படையில் கிழக்கு புலிகளுடன் எவ்வித உரையாடலையும் மேற்கொள்ள வன்னிப் புலிகள் மறுத்தனர். கிழக்கு மாகாணத்தின் மீது படையெடுத்து கிழக்குப் போராளிகளை அழித்தொழிக்கும்



படிப்பகம்

www.padippakam.com

நடவடிக்கையூடாக இப்பிளவினை சரிசெய்துகொள்ள வன்னிப் புலிகள் முயன்றனர். வெருகல் ஆற்றில் வன்னிப் புலிகள் நிகழ்த்திய 315 கிழக்குப் போராளிகள் மீதான படுகொலை கிழக்கு மக்களிடையே மிகப்பெரிய அதிர்வலையை ஏற்படுத்தியது. வெருகல் படுகொலையை அடுத்து கிழக்குப் புலிகள் முழுமையாக பின்வாங்கும் நகர்வுகளை மேற்கொண்டனர். படையணிகள் அனைத்தையும் கலைத்துவிட்டு கேணல் கருணா கொழும்புக்கு தப்பிச்சென்றார்.

கிழக்கு மாகாணத்தை ஆக்கிரமித்த வன்னிப் புலிகளால் தம் சொந்தவீடுகளுக்கு திரும்பியிருந்த பலநூறு கிழக்கு போராளிகளை அவரவர் வீடுகளுக்குச் சென்று பலாத்காரமாக கைதுசெய்து கொன்று குவித்தனர். இதன்காரணமாக பல கிழக்கு மாகாணப் போராளிகள் சிங்கள பிரதேசங்களுக்கும், கொழும்புக்கும் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்குமாக நாலாபுறமும் சிதறி ஓடினர். கேணல் கருணாவும் நாட்டைவிட்டு வெளியேறினார்.

சுமார் 6000 பேரைக்கொண்ட கிழக்குப் போராளிகளின் கலைக்கப்பட்ட படையணிகளில் இருந்து சில நூறு பேர்களை வன்னிப் புலிகள் தம்முடன் மீள இணைத்துக் கொள்வதும் நடந்தது. இவையனைத்துக்கும் மத்தியில் கிழக்கு மாகாணத்தின் முக்கிய தளபதிகளாய் இருந்த துரை, விசு, றொபேட், ஜிம்கலி தாத்தா, நிலாவினி போன்றோர் வன்னிப் புலிகளிடம் சரணடைந்தனர். சரணடைந்த அவர்களையும் பிரபாகரன் தலைமையிலான வன்னிப் புலிகள் கொன்றொழித்தனர்.


இதுவிடயம் தவிர வன்னிப் புலிகளின் கொலைவெறி ஆயுதத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்காக மத்திய கிழக்கிற்கு தப்பிச்செல்வதற்கென கொழும்பின் புறநகர் பகுதியான கொட்டாவ என்னுமிடத்தில் தங்கியிருந்த எட்டு இளைஞர்களை நண்பர்கள் போன்று பாசாங்குகாட்டி அவர்களுடன் இணைந்து அவர்களின் உணவில் நஞ்சூட்டி அவர்கள் மயக்க நிலை அடைந்ததும் கூரிய ஆயுதங்களால் வெட்டியும், துப்பாக்கியால் சுட்டும் (25.07.2004ல்) படுகொலை செய்தனர்.

இச்சம்பவம் எற்கனவே சிங்களக் காடையர்களால் (25.07.1983ல்) மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் மறுவடிவமாக அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com



பிரபாகரன் கருணா பிரிவைத் தொடர்ந்து கிழக்கின் வன்னிப் புலிகள் மேற்கொண்ட அடாவடித் தனங்களுக்கு அஞ்சி மத்திய கிழக்குக்குச் சென்று தமது உயிரைப் பாதுகாப்பதற்காக கொழும்பில் தங்கியிருந்த கருணா ஆதரவுப் போராளிகள் பிரபாகரனின் கட்டளைக்கமைய உணவில் நஞ்சூட்டப்பட்டு மயக்கநிலை அடைந்ததும் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டார்கள். இச் சம்பவம் 25.07.1983 இல் வெலிக்கடையில் சிங்கள வன்முறையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளுக்கு எவ்விதத்திலும் குறைந்ததல்ல. இப்படுகொலை அதே தினமான 25.07.2004 இல் இடம்பெற்றமை முக்கியமானதாகும்.

இவையனைத்துக்கும் மத்தியில் கிழக்கு மாகாணத்தில் தாம் மீண்டும் நிலைகொள்ள வேண்டும், வன்னிப் புலிகளது வெறியாட்டத்திற்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும் என்கின்ற நிலையோடு ஒருசில கிழக்குப்போராளிகள் கருத்தொருமித்தனர். இதில் றெஜி, பிள்ளையான், குகனேசன் போன்றோர் முக்கிய பாத்திரம் ஏற்றனர். அதனடிப்படையில் கொழும்பில் இருந்து மீண்டும் கிழக்கு நோக்கிய அவர்களது பயணம் ஆரம்பித்தது. மெது மெதுவாக கிழக்கு மாகாணத்தில் எல்லைப் பிரதேசக் காடுகளில் முகாமிட்டுக்கொண்டு தமது செயற்பாடுகளை அவர்கள் ஆரம்பித்தனர். கிழக்கு மாகாணத்து மக்களிடம் காணப்பட்ட அவர்களை நோக்கிய வரவேற்பு காலப்போக்கில் வெகு விரைவாகவே கிழக்கு மாகணம் எங்கும் அவர்களை அகலக்கால் பதிக்க உதவியது.

வன்னிப் புலிகளிடம் இருந்து கிழக்கு மாகாணத்தை மீட்டெடுப்பதில் கிழக்கு



படிப்பகம்

www.padippakam.com

புலிகள் வெற்றி கண்டனர். கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் வன்னிப் புலிகள் தமது தற்பாதுகாப்பு நிலைகளில் பதுங்கிக்கொண்டனர். இதேவேளை யுத்த நிறுத்த மீறல்களை அரசபடைகளும், வன்னிப் புலிகளும் ஒருவர் மீது ஒருவர் அதிகரிக்கத் தொடங்கினர். பேச்சுவார்த்தைகள் ஸ்தம்பிதம் அடைந்தன. வன்னிப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் நடைபெறத் தொடங்கியது. இதன்காரணமாக (22.07.2006 – 24.02.2007 ) திகதியில் கிழக்கு மாகாணத்தை வன்னிப் புலிகளிடம் இருந்து முற்றாக மீட்டெடுப்பதில் அரச படைகள் வெற்றிகண்டன. வன்னிப் புலிகள் அற்ற கிழக்கு மாகாணத்தில் சகல இடங்களிலும் கிழக்கு புலிகளின் முகாம்கள் வியாபித்திருந்தன. எனினும் இவர்களுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறவில்லை. இந்தநிலையில் கிழக்கு புலிகள் தங்களை தாம் ஜனநாயக வழிக்குத் திரும்புவதாக பகிரங்கமாக அறிவித்ததோடு தம்மை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் என்று புதிய பெயரிட்டுக்கொண்டனர்.

இந்த கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட தற்காலிக அமைதி நிலையை பயன்படுத்தி அரசாங்கம் நீண்டகாலமாக நடாத்தபடாமல் இருந்த உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதில் கவனம் எடுத்தது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் கட்டமாக இவ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்த அரசு முன்வந்தது. ஜனநாயக வழிக்கு திரும்பியிருந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தம்மை இலங்கை அரசியல் சட்டத்தின் அடிப்படையில் புதிய அரசியல் கட்சியாக பதிவு செய்துகொண்டனர். இக்கட்சியின் உத்தியயோக பூர்வ தலைவராக ரகு என்று அழைக்கப்பட்ட நந்தகோபன் பொறுப்பேற்றார். கிழக்கு மாகாணத்தின் வரலாற்றில், தமிழ் மக்களின் கடந்தகால போராட்டங்களின் தொடர்ச்சியில், யாழ் மேலாதிக்கத்திற்கு எதிராக முஸ்டி உயர்த்தி புதியதொரு அரசியல் வரலாற்றை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தொடங்கி வைத்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் மேற்படி உள்ளூராட்சித் தேர்தலில் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தமதாக்கிக்கொண்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாநகர சபைக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் – ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணைந்த கூட்டணியினர் ஆட்சிப் பொறுப்பேற்றனர். இதனடிப்படையில் தமிழ் மக்கள்



படிப்பகம்

விடுதலைப் புலிகள் கட்சி வேட்பாளராகிய பத்மினி என்றழைக்கப்பட்ட சிவகீதா பிரபாகரன் அவர்கள் மட்டக்களப்பு மாநகர முதல்வராக பதவியேற்றார். இவர் 2004 ஆம் ஆண்டில் கிழக்கு பிளவு இடம்பெற்ற போது கிழக்கு மாகாண மக்களின் சார்பில் குரல்கொடுத்தமைக்காக வன்னிப் புலிகளால் (30.03.2004ல்) கொலைசெய்யப்பட்ட ராஜன் சத்தியமூர்த்தி அவர்களின் புதல்வியாவார். இத்தேர்தலில் மிகப்பெரும்பான்மையான ஆதரவை வழங்கியதன் ஊடாக மட்டக்களப்பு வாழ் பொதுமக்கள் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் ஜனநாயக வரவுக்கு பெரும் அங்கீகாரம் அளித்தனர்.



மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஏற்படுத்திய ஜனநாயகச் சூழலை பயன்படுத்தி தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணம் எங்கும் தமது அரசியல் செயற்பாடுகளை அகலித்தனர். பல இடங்களிலும் கட்சிக் காரியாலயங்கள் திறக்கப்பட்டன. 2004 இல் கிழக்கின் அரசியல் வானில் உதித்த தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் இலங்கையின் அரசியல் சூழலில் நிராகரிக்கப்பட முடியாத ஒரு சக்தியாக தம்மை வரித்துக்கொண்டனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருடன் இணைந்து முதன்முதலாக தேர்தல் களத்தில் இறங்கிய த.ம.வி.புலிகள் மாநகர சபையின் நிர்வாகத்தினை கைப்பற்றினர். (2008)

| அரசியல் கட்சிகள் | கட்சிகள் பெற்ற வாக்குகள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| ஐ.ம.சு கூட்டமைப்பு | 14,158 | 53.77 | 11 |
| சுயேச்சை | 9,601 | 36.46 | 06 |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 1,788 | 6.79 | 01 |
| ஈழவர் ஜனநாயகக் கட்சி | 427 | 1.62 | 01 |
| ஜாதிக சங்வர்தன பெரமுன | 291 | 1.11 | 00 |
| சுயேச்சை (3) | 43 | 0.16 | 00 |
| சுயேச்சை (2) | 23 | 0.09 | 00 |

மட்டுநகர் மாநகரசபையின் மேயராக தேர்தலில் அதிகப்படியான விருப்பு வாக்குகளைப் பெற்ற சிவகீதா பிரபாகரன் (பத்மினி) தேர்வு. கடந்த 10.03.2008ந் திகதி இடம்பெற்ற மட்டு மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கருணா அம்மான் மற்றும் பிள்ளையான் ஆகியோரின் தலைமையிலான

www.padippakam.com

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அபார வெற்றியீட்டியுள்ளனர். அதற்கமைய மட்டுநகர் மாநகர சபைப் பிரதேசத்தில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற (4722) முன்னைநாள் மட்டு மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளரும் (2004) பிரபாகரன் தலைமையிலான புலிப் பயங்கரவாதிகளின் ஆயுத வெறிக்கு பலியாக்கப் பட்டவருமான திரு. ராஜன் சத்தியமூர்த்தி அவர்களின் புதல்வியான சிவகீதா பிரபாகரன் மேயராக தெரிவு செய்யப் பட்டுள்ளார். துணை மேயராக பிரதீப் மாஸ்ரர் என்பவர் தெரிவானார்.

இந்நிலையில் தேர்தல் முடிவுற்று எட்டு மாத கால இடைவெளியில் (17.11.2005 – 21.04.2006ல்) விடுதலைப் புலிகள் மூதூர் பிரதேச மக்களின் ஏறக்குறைய 30,000 முப்பதினாயிரம் ஏக்கர் விவசாய தேவைக்கு நீர் வழங்கும் பிரதான நீர்நிலையான (மாவில் ஆறு) மாவில் ஆற்றின் மதகுகளை விவசாயக் காணிகளுக்கு நீர் பெறமுடியாதவாறு மூடிவிட்டு ஆயுதம் தாங்கிய நூற்றுக்கணக்கான தமது அணியினரை அங்கு நிறுத்தினர். அதனால் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி சமாதான முறையில் அதற்கான தீர்வொன்றைக் காண்பது தொடர்பில் சில பொது அமைப்புக்களின் உதவியுடன் பல தரப்பட்ட பேச்சுவார்த்தைகளை அரசாங்கம் மேற்கொண்ட போதும் அவ்விடயம் வெற்றியளிக்கவில்லை. மாற்று வழி எதுவுமற்ற நிலையில் அரசாங்கம் படையினரின் அளவை அங்கு அதிகரித்து விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை (26.07.2006ல்) மேற்கொண்டனர். இந்நிலையில் விடுதலைப் புலிகள் மூதூர், கட்டைபறிச்சான், செல்வநகர், மஹிந்தபுரம் மற்றும் பாலத்தோப்பூர் போன்ற இடங்களிலும் தமது தாக்குதல்களை முடக்கி விட்டதற்கமைய அப்பிரதேசங்களில் வாழ்ந்த ஏறக்குறைய நான்காயிரம் மக்கள் அகதிகளாக பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்தனர். இந்நிலையிலும் மாவிலாறு மீட்பில் அதிக கவனம் செலுத்திய பாதுகாப்புப் படையினர் (15.08.2006ல்) புலிகளைத் தோற்கடித்து மாவில் ஆறு முழுமையாக மீட்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் (30) ஆண்டுகால வரலாற்றில் அவர்களின் அழிவிற்கு அத்திவாரமிட்ட சம்பவமாக அவ்விடயம் நிகழ்ந்தது. இச்சம்பவத்தில் அரச படைகள் வெற்றியடைந்ததும் ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் (மீசைக்காரச் சிங்களவனுடன் இப்போதுதான்



படிப்பகம்

பிரபாகரன் மோதிமிருக்கின்றார் என) ஒரு பேட்டியின்போது குறிப்பிட்டிருந்தார். அதன் அர்த்தம் என்னவெனில் ஏற்கனவே ஜனாதிபதிகளாக பதவிவகித்த எவரும் மீசை வைத்திருக்கவில்லை காரணம் அவர்கள் விடுதலைப் புலிகளைக்கண்டு அஞ்சினார்களே தவிர துணிவுடன் செயற்பட முன் வரவில்லை என்பதனை சுட்டிக்காட்டினார். தொடர்ந்து உசாரடைந்த படையினர் விடுதலைப் புலிகளை தோற்கடிக்க முடியுமென்னும் தன்நம்பிக் கைக்கு ஆளாகினர்.

விடுதலைப் புலிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் யாழ் மாநகர பிதாவான திரு. அல்பிரட் துரையப்பா அவர்களின் கொலையில் (27.07.1975ல்) ஆரம்பமாகி (18.05.2009ல்) முடிவுறுகின்றது.

## இலங்கை அரச படைகளுக்கு எதிரான தமிழீழ விடுதலைப் புலிகளின் இலகுரக விமானத் தாக்குதல்கள்.

11.08.2006ல் பலாலி இராணுவ முகாம் பிரதேசத்தில் றொக்கற் தாக்குதல்.

18.10.2006ல் காலி துறைமுகத்தில் விடுதலைப் புலிகளால் தாக்குதல். 15 கரும்புலிகள் கொல்லப்பட்டனர்.

26.03.2007ல் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது தாக்குதல் (3) மூன்று விமானப் படையினர் பலி, (16) பதினாறுபேர் படுகாயம்.

23.04.2007ல் பலாலி இராணுவத் தலைமையகம் மீது தாக்குதல் (6) இராணுவத்தினர் பலி 13பேர் காயம்.

22.10.2007 அநுராதபுரம் விமானப் படைத் தளம் மீது தாக்குதல் (14) விமானப் படையினரும், 20 கரும்புலிகளும் பலி. அத்துடன் கீழே விபரிக்கப்படும் விமானங்கள் நாசமாக்கப்பட்டது.

One K8 trainer. two Mil Mi 17 helicopters, one 206 Bell Jet Ranger, one Beechcraft, one Mi-24 Helicopter Gunship and two Chinese built PT 8 Trainers were damaged. Two brand new Blue Horizon II UAVs were also damaged.

www.padippakam.com

27.04.2008ல் வெலி ஓயா இராணுவ முகாம் மீது மூன்று குண்டுகள் வீசப்பட்டு இடம்பெற்ற தாக்குதல் எவ்வித சேதத்தினையும் ஏற்படுத்தவில்லை.

26.08.2008ல் திருகோணமலை (டொக்கியாட்) என்னும் இ! த்தில் அமைந்துள்ள கடற்படை தளம் மீது தாக்குதல் நடாத்தியதில் (4) நான்கு கடற்படையினர் கொல்லப்பட்டு 35 கடற்படையினர் படுகாயமுற்றனர். அத்துடன் கடற்படைக்குச் சொந்தமான கப்பல் ஒன்றும் சேதமாக்கப்பட்டது.

09.09.2008ல் வவுனியாவில் அமைந்துள்ள இராணுவ முகாம் மீது தாக்குதல் நடாத்தப்பட்டதில் (11) இராணுவத்தினர் கொல்லப்பட்டு (15) இராணுவத்தினர் காயமடைந்தனர். மேலும் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டு (8) பொலிஸார் காயமுற்றனர். அதேவேளை விடுதலைப் புலிகளின் தரப்பில் (10) ஆயுதாரிகள் கொல்லப்பட்டனர்.

28.10.2008ல் தள்ளாடி, மற்றும் மன்னார் இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஒரு விமானப் படையினரும், இரு இராணுவத்தினரும் காயமுற்றனர்.

20.02.2009ல் கொழும்பு விமானப்படையின் தலைமையகத்தில் (சிற்றம்பலம் மாவத்தை) விடுதலைப் புலிகளினால் தாக்குதல் நடாத்தப்பட்டபோது இரு விமானங்களும் இலங்கை பாதுகாப்புப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது. விடுதலைப் புலிகளின் இலகுரக விமானத்தின் இரு விமானிகளும் கொல்லப்பட்டதுடன், பொதுமக்கள் (58) பேர் காயமுற்றனர். இச்சம்பவமே விடுதலைப் புலிகளின் ஒட்டுமொத்தமான அழிவிற்கான வரலாறாக அமைந்தது.

20.02.2009ல் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட விமான ஓடு பாதைகளான முல்லைத்தீவில் அமைந்திருந்த இரணைமடு ஓடு பாதை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

## மேலதிக விடயங்கள்

07.10.2007ல் விடுதலைப் புலிகளுக்கு சொந்தமான மாபெரும் ஆயுதக் கட த்தல் கப்பல் (Matsusima) 3000 தொன் நிறையும், 75 மீற்றர் நீளமுமான கப்பல்



படிப்பகம்

www.padippakam.com

பெருந்தொகையான ஆயுதங்களுடன் இலங்கையின் தென்கிழக்கு கடற் பிராந்தியத்தில் 1700 கிலோ மீற்றருக்கு அப்பால் வைத்து இலங்கைக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்டது. மேற்படி கப்பலில் பலநூறு மில்லியன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களும், கப்பலின் சிப்பந்திகளாக கடமையாற்றிய விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளும் கொல்லப்பட்டனர்.

## மாவில் ஆறு முதல் முல்லைத்தீவு வரை.

21.07.2006ல் விடுதலைப்புலிகளால் மாவில் ஆறு மூடப்பட்டது.

15.08.2006ல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டு மாவில் ஆற்று மதகினை இராணுவத்தினர் கைப்பற்றினர்.

06.08.2006ல் ஒரு மாதகாலமாக புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த மூதூர் மீட்கப்பட்டது.

24.08.2006ல் ஏ 9 பாதை விடுதலைப் புலிகளினால் மூடப்பட்டது.

04.09.2006ல் விடுதலைப் பலிகளின் திருமலை மாவட்ட கோட்டையாக விளங்கிய சம்பூர் மீட்பு.

25.09.2006ல் ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுதலைப் புலிகள் தடை.

மாவில் ஆற்றில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டமையைத் தொடர்ந்து உசாரடைந்த பாதுகாப்புப் படையினரும், அரசாங்கமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை முழுமையாக மீட்பதற்கான நடவடிக்கைகளை (11.08.2006ல்) முடுக்கிவிட்டனர்.

26.08.2006ல் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண பிரதான கோட்டைகளில் ஒன்றாக விளங்கிய மூதூரின் கிழக்கு பிரதேசமான சம்பூர் பிரதேசத்தினை விடுவிப்பதற்கான இராணுவ நடவடிக்கை (26.08.2006ல்) ஆரம்பிக்கப்பட்டு (04.09.2006ல்) அப்பிரதேசம் முழுமையாக விடுவிக்கப்பட்டது. மேற்படி இராணுவ நடவடிக்கையின்போது 6000 பொதுமக்கள்வரை அங்கிருந்து வெளியேறி மட்டக்களப்பு மாவட்டத்தில் தஞ்சமடைந்தனர்.



படிப்பகம்

26.10.2006ல் விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாணக் கோட்டையாக கருதப்பட்ட வாகரை என்னும் பிரதேசத்தினை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கை (26.10.2006ல்) ஆரம்பிக்கப்பட்டு 19.01.2007ல் முழுமையாக விடுவிக்கப்பட்டது.

24.02.2007ல் பிரபல்யம்வாய்ந்த விடுதலைப் புலிகளின் கஞ்சாப் பயிர்ச்செய்கையை மேற்கொண்ட குடும்பிமலை என அழைக்கப்படும் தொப்பிக்கலை பிரதேசத்தினை மீட்கும் நடவடிக்கைகள் இராணுவத்தினரால் முன்னெடுக் கப்பட்டு (25.04.2007ல்) தொப்பிக்கலை பிரதேசம் முழுமையாக விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டது. கிழக்கு மாகாணத்தினை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கும்பணி (11.07.2007ல்) முழுமை பெற்றது.

25.05.2007ல் ஸ்ரீலங்காவின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராக பணியாற்றிய நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகளைக் கொண்ட குழுவினர் வெளியிட்ட அறிக்கையில் விடுதலைப் புலிகள் 3830 யுத்த மீறல்களையும், அரச தரப்பினர் 351 யுத்த மீறல்களையும் மேற்கொண்டுள்ளதாக அறிக்கை வெளியிட்டனர்.

குறிப்பு – விடுதலைப் புலிகளினால் தற்கொலைத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட (05.07.1987) முதல் (20.11.2008) வரை 378 தற்கொலைத் தாக்குதல்கள் இடம்பெற்றன. இவற்றில் 274 ஆண் தற்கொலைதாரிகளும் 104 பெண் தற்கொலைதாரிகளும் பல அரசியல் தலைவர்களும், பல நூற்றுக்கணக்கான அப்பாவிப் பொதுமக்களும் பலியாகியுள்ளனர்.

28.11.2007ல் ஈ.பி.டி.பியின் செயலாளர் திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களை படுகொலைசெய்வதற்காக சுஜாதா என்னும் பெண் தற்கொலையாளி தனது மார்புக் கச்சையில் (brassiere)ல் குண்டு ஒன்றினைக்கட்டி அவரின் அலுவலகத்திற்குள் நுழைய முற்பட்டபோது பாதுகாப்பு அதிகாரிகளால் தடுக்கப்பட்டவேளை குண்டினை வெடிக்கவைத்து பலியானார்.

## வடமாகாணத்தினை மீட்கும் பணி.

02.09.2007ல் சிலாபத்துறை, வவுனியா, மன்னார், உயிலங்குளம் ஆகிய பிரதேசங்களை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்

www.padippakam.com

நிலையில் (29.06.2008ல்) அப்பிரதேசங்கள் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

02.11.2007ல் தமிழ்செல்வன் விமானப்படையினரின் விமானத் தாக்குதலில் பலி.

22.12.2007ல் தம்பளை, சின்னப் பண்டிவிரிச்சான், அதனைத் தொடர்ந்து மடுக்கோவில் பிரதேசம் (25.04.2008ல் மீட்கப்பட்டது தொடர்ந்து பாலமோட்டை, பெரியமடு போன்ற பிரதேசங்கள் (26.05.2008ல்) மீட்கப்பட்டது.

16.07.2008ல் பூநகரி றோட் மற்றும் மன்னார் பிரதேசங்கள் முழுமையாக இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன.

02.08.2008ல் அரசாங்கம் யுத்த நிறுத்தத்திலிருந்து வெளியேறியது.

22.08.2008ல் துணுக்காய், மல்லாவி, கல்விளான் ஆகிய பிரதேசங்கள் மீட்கப்பட்டன.

02.09.2008ல் மல்லாவிப் பிரதேசத்தில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் இரண்டாவது தலைமையகம் முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டவரப்பட்டது.

11.11.2008ல் புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய பிரதேசங்கள் (எஸ்.ரீ.எப்) அணியினரால் கைப்பற்றப்பட்டது.

15.11.2008ல் விடத்தல்தீவு, இலுப்பக்கடவை, வெல்லான்குளம், முழங்காவில், நாச்சிக்குடா, அக்கராஜன் ஏ 32 றோட் விடுவிக்கப்பட்டு யாழ்ப்பாணத்திற்கான வீதி திறக்கப்பட்டது.

02.01.2009ல் கிளிநொச்சி நகரம் கைப்பற்றப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி அறிவிப்பு. அதே தினத்தில் ஆயுதங்களை கீழே வைத்து படையினரிடம் சரணடையுமாறு ஜனாதிபதி புலிகளிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆனால் எஞ்சியிருந்த ஆயுததாரிகள் முல்லைத்தீவு காட்டிற்குள் தஞ்சம் புகுந்தனர். 09.01.2009ல் முறிகண்டி, ஆனையிறவு, முகமாலை ஆகிய பிரதேசங்கள் முழுமையாக மீட்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

14.01.2009ல் ஆனையிறவு, முகமாலை, சுண்டிக்குளம், மற்றும் யாழ்ப்பாணம் முழுமையாக விடுவிப்பு

25.01.2009ல் முல்லைத்தீவு தெற்கு, தண்ணிமுறிப்புக்குளம், நாயாறு, அலம்பில் மற்றும் முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் முக்கிய தளமாக கருதப்பட்ட பகுதிகள் முழுமையாக இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன.

## குறுகிய கால இடைவெளியில் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள்.

| | |
|---|---|
| சிலாவத்துறை | 02.09.2007 |
| அடம்பன் | 09.05.2008 |
| உமிலங்குளம் | 26.09.2008 |
| விடத்தல்தீவு | 16.07.2008 |
| இலுப்பக்கடவை | 20.07.2008 |
| வெள்ளாங்குளம் | 02.08.2008 |
| முழங்காவில் | 12.08.2008 |
| நாச்சிக்குடா | 21.08.2008 |
| கிரான்சி | 10.11.2008 |
| பாலாவி | 11.11.2008 |
| பூநகரி | 15.11.2008 |
| மாங்குளம் | 17.11.2008 |
| ஒலுமடு | |
| கொக்காவில் | |
| அலம்பில் | |
| நெடுங்கேணி | 17.11.2008 |
| இரணைமடு | 31.12.2008 |
| பரந்தன் | 31.12.2008 |
| கிளிநொச்சி | 02.01.2009 |



படிப்பகம்

13.05.2009ல் விடுதலைப் புலிகளைக் கண்டித்து ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை வெளியிட்டது. அவ்வறிக்கையில் பொதுமக்களையும், சிறுவயதினரையும் விடுதலைப் புலிகள் பாதுகாப்பு அரணாக பயன்படுத்துவதாகவும், உடனடியாக அம்மக்கள் அனைவரையும் விடுதலைசெய்வதுடன் ஆயுதங்களை கீழே போடுமாறும் தெரிவிக்கப் பட்டிருந்தது.

16.05.2009ல் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டதாக ஜனாதிபதி திரு. மகிந்த ராஜபக்ஸ அறிவிப்பு.



17.05.2009ல் மஹிந்த ராஜபக்ஸ சொல்வதுபோல் போரில் தோற்றுப்போகவில்லை என விடுதலைப் புலிகள் அறிவிப்பு.

17.05.2009ல் செல்வராசா பத்மநாதன் (கே.பி) வெளியிட்ட அறிக்கையில் யுத்தம் முடிவுற்றதாகவும், பல ஆயுததாரிகள் தற்கொலை செய்துவிட்டதாகவும் தெரிவித்ததுடன், ஏனைய அனைவரும் இராணுவத்திடம் சரணடைந்து விட்டதாகவும் தமது சர்வதேச பிரிவின் பெயரால் செய்தி வெளியிட்டிருந்தார்.

18.05.2009ல் திரு. பிரபாகரன், அவரது மகன் சார்லஸ் அந்தோனி உள்பட புலிகள் அமைப்பைச் சேர்ந்த முக்கிய ஏழு தலைவர்கள் கொல்லப்பட்டதாக ராணுவம் அறிவிப்பு.

www.padippakam.com

யுத்த முடிவில் 11,664 விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் இராணுவத்தினரிடம் சரணடைந்ததுடன், 595 சிறுவர் போராளிகளும் சரணடைந்தனர். இந்நிலையில் 150 முக்கிய ஆயுததாரிகளும், 1000 வரையான நடுத்தர ஆயுததாரிகளும் இந்தியாவிற்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும் அரசாங்கம் அறிவித்தது.

பிரபாகரனின் மரணத்தினை அடுத்து (21.07.2009ல்) விடுதலைப் புலிகளின் புதிய தலைவர் தாமே என (கே.பி) அறிக்கை வெளியிட்டார். ஆனால் அவரின் அறிக்கை வெளியாகி இரு வாரகாலத்தில் (05.08.2009ல்) மலேசியாவின் கோலாலம்பூரில் அமைந்துள்ள (Tune Hotel Downtown) என்னுமிடத்தில் வைத்து அவர் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார்.

## 18.05.2009ல் கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள்.

| | | |
|---|---|---|
| பொட்டு அம்மான் | வி.புலிகளின் | உளவுப் பிரிவுத் தலைவர் |
| பானு | வி.புலிகளின் | இராணுவப் பிரிவுத் தலைவர் |
| ஜெயம் | வி.புலிகளின் | இராணுவப் பிரிவுத் தலைவர் |
| பி.நடேசன் | வி.புலிகளின் | அரசியல் பிரிவுத் தலைவர் |
| புலித்தேவன் | வி.புலிகளின் | சமாதானச் செயலக தலைவர் |
| ரமேஸ் | வி.புலிகளின் | விசேட இராணுவத் தலைவர் |
| இளங்கோ | வி.புலிகளின் | பொலிஸ் அதிபர் |
| சாள்ஸ் அந்தோனி | பிரபாகரனின் | மூத்த மகன் |
| சுதர்மன் | சாள்ஸின் | பாதுகாவலர் |
| தோமஸ் | வி.புலிகளின் | மேலதிக உளவுப்பிரிவுத்தலைவர் |
| லக்ஸ்மன் | வி.புலிகளின் | அரசியல் பிரிவுத் தலைவர் |
| சிறீராம் | வி.புலிகளின் | சிரேஸ்ட உளவுப்பிரிவுத் தலைவர் |
| இசை அருவி | வி.புலிகளின் | பெண்கள் அணி இராணுவத்தளபதி |
| கபில் அம்மான் | வி.புலிகளின் | துணை உளவுப்பிரிவு தலைவர் |
| அஜந்தி | வி.புலிகளின் | பெண்கள்பிரிவு பயிற்சியாளர் |
| வரதா | வி.புலிகளின் | படகிற்கான உதவியாளர் |
| புதியவன் | தலைவரின் | செயலாளர் |
| ஜெனதன் | வி.புலிகளின் | படைப்பிரிவின் விசேட தலைவர் |

மேற்குறிப்பிட்டுள்ளவர்கள் தவிர இருநூறுக்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் முக்கிய ஆயுததாரிகளின் உடல்களும் மீட்கப்பட்டதாக.



படிப்பகம்

www.padippakam.com

தெரிவிக்கப்பட்டிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி பெரும்பான்மையின மக்களான சிங்களமக்கள் மத்தியில் அளவற்ற மகிழ்ச்சியையும், நிம்மதியையும் ஏற்படுத்தியது. அதேவேளை எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியினருக்கும், ஜே.வி.பியினருக்கும் அவர்களின் ஆதரவாளர்களான சிறு கட்சிகள் சிலவற்றிற்கும் மேற்படி விடயம் அரசியல் ரீதியான வீழ்ச்சிக்கு அடிகோலிவிட்டதான உணர்வுகள் வெளியாகின.

இந்நிலையில் ஆறு வருடங்களை உள்ளடக்கிய ஜனாதிபதியின் பதவிக்காலம் 4வருடம் 2 மாதம் 09 நாட்களில் முடிவுறப்பெற்று (17.11.2005–26.01.2010) அடுத்த பதவிக்காலத்திற்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து தெற்கில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கான செல்வாக்கு அதிகரித்திருந்தமையால் தேர்தலுக்கான காலஎல்லை விரைவாக மேற்கொள்ளப்பட்டது. இதுவிடயத்திற்கு திரு. ஜே. ஆர் ஜயவர்தனா அவர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பே வழிவகுத்தது.

விடுதலைப் புலிகளின் வீழ்ச்சி தேசியரீதியாக இலங்கை மக்கள் அனைவருக்கும் ஓர் வரப்பிரசாதமாக அமைந்தபோதும் (பிச்சைக்காரன் தனது புண்ணுக்கு மருந்து கட்ட விரும்புவதில்லை) என்னும் முதுமொழிக் கமைய இனப்பிரச்சினையினை மூலதனமாகவைத்து அரசியல் நடாத்தும் சிலருக்கு அவ்விடயம் அரசியல் அஸ்தமனத்திற்கு அடித்தளமிட்டதாக அமைந்தது. இந்நிலையிலேயே எதிரும், புதிருமாக, கீரியும், பாம்புமாக (1965முதல்) செயற்பட்ட ஜே.வி.பியினரும், ஐ.தே.கட்சியினரும் கைகோர்த்தனர். இவர்களுடன் காலத்திற்கு ஏற்றவாறு இனவாதத்தினை மூலதனமாக வைத்து அரசியல் நடாத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், (ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸதாபகரான ஜனாப். அஸ்ரப் அவர்களின் அகால மரணத்தின் பின்னர்) அக்கட்சியினை வழிநடாத்த முன்வந்தவர்களும் இணைந்து இனவாத அரசியலை முன்னெடுத்தனர்.

அதற்கமைய மேற்படி தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் முன்னாள் இராணுவத் தளபதியும் புதிய ஜனநாயக முன்னணியின் (ஐ.தே.கட்சி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் தேசியக் கூட்டமைப்பு) ஜனாதிபதி வேட்பாளருமான திரு. சரத் பொன்சேகா



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கான ஆதரவுப் பிரச்சாரங்களை மேற்குறிப்பிட்ட இரு சாராரும் இணைந்து மேற்கொண்டனர். இவர்களின் பிரச்சாரத்திற்கு வடக்கு, கிழக்கு மக்கள் ஆதரவு தெரிவித்து பெரும்பாலான தமிழர்கள் புதிய ஜனநாயக முன்னணிக்கு New Democratic Front வாக்களித்தனர்.

கிழக்கு மாகாண சபையின் ஆளுனராக முன்னாள் இராணுவ அதிகரியான திரு. மொகான் விஜே விக்ரம அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளமையால் கிழக்கு மாகாண நிர்வாகம் செயற்படமுடியாது எனவும் அப்பதவி அரசியல் பின்னணியினைக் கொண்ட ஒருவருக்கே வழங்கப்படவேண்டுமெனவும் பல தடவைகள் தமது ஆட்சேபனையினை பாராளுமன்றத்திலும், பத்திரிகை அறிக்கைகளிலும் வெளியிட்ட த.தே.கூட்டமைப்பின் தலைவர் திரு. சம்பந்தன் அவர்களின் தலைமையிலான த.தே.கூட்டமைப்பினர் இலங்கையின் அனைத்து அரசியல் அதிகாரங்களையும் தம்வசம் கொண்டுள்ள நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதிப் பதவிக்கு எவ்வாறு (40) வருடகாலமாக இராணுவத்தில் பணியாற்றிய ஒருவரையும், விடுதலைப் புலிகளின் அழிவிற்கு பிரதான காரணகர்த்தாக்களாக செயற்பட்டவர்களில் ஒருவருமான இராணுவத் தளபதியான திரு. சரத் பொன்சேகா அவர்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவினை வழங்குமாறு பிரச்சார மேடைகளில் பவனி வந்தார்கள் என்பதன் மர்மமென்ன? இதற்கான பதிலை திரு. பொன்சேகா அவர்களுக்கு வாக்களித்தவர்களே சம்பந்தனிடம் கேட்க வேண்டும்.

இதன்பின்னணியில் (5 மில்லியன் அமெரிக்க) டொலர்கள் கையூட்டலாக வழங்கப்பட்டதாக சில பத்திரிகைகள் தகவல்களை வெளியிடத் தவறவில்லை. எது எவ்வாறாயினும் தேர்தல் முடிவுகள் (17.11.2005ல்) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினருக்கு கிடைத்த வாக்குகளைவிட கூடுதலான வாக்குகளே (26.01.2010ல்) கிடைத்துள்ளமையை புள்ளிவிபரங்கள் வெளிக்காட்டின.

•



படிப்பகம்

www.padippakam.com

## ஜனாதிபதித் தேர்தல்களும் ஒப்பீடும்.

| ஜனாதிபதித் தேர்தல் | ஐ.ம.சு.கூட்டணி 17.11.2005 | 26.01.2010 | ஐ.தே.முன்னணி 17.11.2005 | 26.01.2010 |
|---|---|---|---|---|
| அம்பாறை | 122,329 | 146,912 | 159,198 | 153,105 |
| மட்டுநகர் | 28,836 | 55,663 | 121,514 | 146,057 |
| திருமலை | 55,680 | 69,752 | 92,197 | 87,661 |
| வன்னி | 17,197 | 28,740 | 65,798 | 70,367 |
| யாழ்ப்பாணம் | 1967 | 44,154 | 5523 | 113,877 |
| நுவரெலியா | 99,550 | 151,604 | 250,428 | 180,604 |
| மொத்தம் | 325,559 | 496,825 | 694,658 | 751,671. |

தொடர்ச்சியாக இரு ஜனாதிபதித் தேர்தல்களில் தோல்வியுற்ற திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு எதிராக கட்சியிலுள்ள சிலர் போர்க்கொடி தூக்கினர். இந்நிலையில் ஏற்கனவே நாட்டின் ஜனாதிபதிகளாக பதவிவகித்த மூவரால் தீர்வு காணப்படமுடியாதிருந்த பயங்கரவாத நடவடிக்கைகளை முற்றுமுழுதாக இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் (18.05.2009ல்) வெற்றிகண்டார். இதுவிடயம் ஐ.தே.கட்சியினருக்கு நாடுதழுவியரீதியில் பாரிய வீழ்ச்சியினையும், ஐ.ம.சு.முன்னணியினருக்கு எதிர்பாராத செல்வாக்கினையும் உருவாக்கியது.

அந்நிகழ்விலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளவேண்டிய தேவை ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு மட்டுமன்றி ஜே.வி.பியினருக்கும் அவசியமானதாக நிலைமை உருவானது. இந்நிலையில் கீரியும், பாம்புமாக கடந்த (45) வருடகாலங்களாக செயற்பட்ட ஐ.தே.கட்சியினரும் ஜே.வி.பியினரும் ஒன்றிணைந்தார்கள். தமது பலமான அரசியல் எதிரியாக கருதப்பட்ட திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை தோற்கடிப்பதற்கு பொருத்தமான ஒருவரைத் தேடியவர்களுக்கு முன்னாள் இராணுவத் தளபதியாக பணியாற்றிய நிலையில் ஜனாதிபதி திரு. மஹிந்த ராபக்ஸ அவர்களுடன் கருத்து முரண்பாடு ஏற்பட்டமையால் பதவிகள் அனைத்தையும் உதறிவிட்டு ஜனாதிபதியுடன் முரண்பட்டுக்கொண்டிருந்த திரு. சரத் பொன்சேகா அவர்களை (26.01.2010ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் (ஐ.தே.மு D.N.A) என்னும் கூட்டு முன்னணியின் பெயரில் களமிறக்கினர்.



படிப்பகம்

www.padippakam.com

திரு. பிரபாகரன் அவர்கள் அழிக்கப்பட்ட இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற ஆயிரக்கணக்கான பொதுமக்களின் இழப்புகள் குறித்து [illegible] மனித உரிமைப் பிரச்சினைகள் தமிழ் தரப்பு அரசியல்வாதிகளிடமிருந்து எழுப்பப்பட்டது. புலம்பெயர் தமிழர்களும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் இலங்கை அரசை இவ்விடயத்தில் மிக நெருக்கடிக் குள்ளாக்கினர். இந்நிலையில் மேற்படி ஜனாதிபதித் தேர்தலில் யுத்தத்தினை முன்னின்று தலைமையேற்று நடாத்திய ஜெனரல் பொன்சேகா ஐ.தே. கட்சியினதும், மேற்குலக சக்திகளின் ஆதரவுடனும் போட்டியிட்டார். மேற்படி ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கிய திரு. சரத் பொன்சேகா அவர்களை வெற்றிபெறச் செய்வதற்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தீவிர பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

திரு. பிரபாகரன் அவர்கள் அழிக்கப்பட்ட இறுதி யுத்தத்தில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டதாக குரலெழுப்பிய ஸ்ரீ.ல.மு காங்கிரசினரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடன் இணைந்து செயற்பட்ட நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலும், மலையகத்திலும் வாழ்ந்த தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் திரு. சரத்பொன்சேகா அவர்களுக்கு வாக்களித்தனர். இருந்தும் பெரும்பான்மை இனத்தவர்களான சிங்கள மக்கள் வாழும் தெற்கில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கு பாரிய செல்வாக்கு இருந்தமையால் அவரே மீண்டும் வெற்றிபெற்றார். தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் பொன்சேகாவை ஆதரித்த வலதுசாரி நிலைப்பாடானது யுத்தக்குற்றம்பற்றி எழுந்த பாரிய கேள்வியினை நீர்த்துப் போகச் செய்தது.

## விடுதலைப் புலிகளின் ஆக்கிரமிப்பிலிருந்த கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதும் வன்னி மாவட்டம் விடுவிக்கப்பட்டதற்குமிடையிலான வேறுபாடு என்ன?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரன் அவர்களால் ஆட்சியில் அமர்ந்திருந்த அனைத்து அரசாங்கங்களுடனும் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கைகளும் கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளை முன்னெடுத்த நிலையிலேயே மீறப்பட்டன. இதனால் கிழக்கில் வாழ்ந்த பலநூறு அப்பாவி மக்களின் உயிர்கள் பலிகொள்ளப்பட்டதுடன் பொருளாதாரரீதியான



படிப்பகம்

www.padippakam.com

பாரிய இழப்புபுக்களும் அம்மக்களுக்கு உருவானது இதன் பின்னணியினை உற்று நோக்கும்போது விடுதலைப் போராட்டம் என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு கிழக்கு மக்களை பலியிடுவதன் மூலம் வடக்கு மக்களை பாதுகாக்க முடியுமென அவர் கண்ட கனவு கானல் நீராகியது.

1. பிரேமதாசா – புலிகள் உடன்படிக்கை (26.04.1989) 10.06.1990ல் மட்டுநகர் பொலிஸ் நிலைய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு கிழக்கில் 700 வரையான பொலிசாரும் திரு. வரதராசப்பெருமாள் அவர்களின் தலைமையிலான மாகாண சபை நிர்வாகத்தினரால் வலுக்கட்டாயமாக படையணியில் இணைக்கப்பட்ட 486 கிழக்கு மாகாண இளைஞர்களும் பல நூற்றுக்கணக்கான பொதுமக்களும் புலிகளினால் கொல்லப்பட்டார்கள்.
2. சந்திரிகா – புலிகள் உடன்படிக்கை (03.01.1995) 19.04.1995ந் திகதியன்று திருமலை துறைமுகத்தில் தரித்துநின்ற இலங்கை கடற்படைக்குச் சொந்தமான இரு கப்பல்கள் தாக்கப்பட்டு யுத்த நிறுத்தம் மீறப்பட்டது. இச்சம்பவத்தில் 11 கடற்படையினரும் 24 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.
3. ரணில் விக்கிரமசிங்கா – புலிகள் உடன்படிக்கை (22.02.2002) 25.06.2002 மூதூர் கலவரம் 5557 குடும்பங்கள் மூதூரிலிருந்து வெளியேற்றம். முஸ்லிம்களின் வீடுகள் 408 தமிழர்களின் வீடுகள் 113 சிங்களவர்களின் வீடுகள் 03 சேதப்படுத்தப்பட்டு. பல மில்லியன்ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளை இடப்பட்டன.
4. திரு. மஹிந்த ராஜப்பக்ஸ அவர்களின் தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதனைத் தொடர்ந்து புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. விடுதலைப் புலிகளாலும் அவர்களின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலும் இனவாதிகள் எனப் பட்டம் சூட்டப்பட்ட ஜே.வி.பி மற்றும் ஜாதிஹ ஹெல உறுமய போன்ற அமைப்புக்களுடன்கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்த ராஜபக்ஸவால் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் நடாத்தமுடியாதென கனவு கண்ட பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான அழைப்பு ஒற்றினை அவரது அரசாங்கம் விடுத்தது. அதனை நிராகரித்த பிரபாகரன் யுத்தத்திற்கான அறை கூவலை மஹிந்த ராஜபக்ஸவிற்கு விடுத்தார்.



படிப்பகம்

5. அதனைத் தொடர்ந்து (21.07.2006ல்) திருமலை மாவட்டத்தின் சேருவில தொகுதியில் அமைந்துள்ள மாபெரும் நீர்ப்பாசன நிலையான மாவில் ஆற்றின் நீர்பாயும் மதகுகளை முழுமையாக மூடிய பிரபாகரனின் ஆயுதாரிகள் ஏறக்குறைய (25,000) இருபத்தையாயிரம் ஏக்கர் விவசாய காணிகளில் பயிரிடப்பட்ட அனைத்து பயிர்களையும் நாசஞ்செய்தனர்.

இவ்விடயத்தினை சமாதான முறையில் பேச்சுவார்த்தை நடாத்தி முடிவிற்கு கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற் கொண்டது. அதற்கு சம்மதம் தெரிவிக்காத பிரபாகரனின் படையணிக்கு எதிராக அரசு தனது இராணுவ நடவடிக்கையினை முடுக்கிவிட்டது அதற்கமைய ஒரு வாரகாலப்பகுதியில் மாவில் ஆற்றின் அணை திறக்கப்பட்டு புலிகளின் ஏராளமான ஆயுதாரிகள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சியில் இடம்பெற்ற முதலாவது இராணுவ வெற்றியாக கருதப்பட்டது.

தொடர்ந்து கிழக்கு மாகாணத்தினை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் 24.02.2007ல் ஆரம்பிக்கப்பட்டு 11.07.2007ல் கிழக்கு மாகாணம் புலிகளின் ஆயுததாரிகள் அற்ற மாகாணமாக நிறைவுகண்டது.

கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது (35,537) குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து இருபத்தோராயிரத்து ஐநூற்றித் தொண்ணூற்றொன்பது பொதுமக்கள் (121,599) தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி அகதிகளாக நகர்ப் புறங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

அதேவேளை திருகோணமலை மாவட்டத்திலுள்ள. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து (7291) குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தோராயிரத்து எண்ணூற்றிப் பதினொரு பேர் (21,811) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர். இவர்களில் (6621) குடும்பங்களைச் சேர்ந்த பத்தொன்பதினாயிரத்து ஐநூற்றி எண்பத்தி நான்கு பேர் (19,584) மீளக் குடியேறிவிட்ட நிலையில் மூதூர் கிழக்கு உயர் பாதகாப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள (677) குடும்பங்களைச் சேர்ந்த பலரும் படிப்படியாக அங்கிருந்து தமது சொந்த இடங்களுக்கு இடம்பெயரும் அதேவேளை ஒரு சாரார் அங்கேயே நிரந்தரமாக தங்கியுள்ளனர்.

www.padippakam.com

ஏனையவர்களில் 135 குடும்பங்களைச் சேர்ந்த (469) பேர் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் தொடர்ந்தும் வாழ்கின்றனர்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது ஏறக்குறைய (213,000)பேர் இடம்பெயர்ந்தபோது எத்தனை பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்? ஐம்பது பேர்கூட கொல்லப்படாத நிலையில் வடக்கில் மட்டும் ஏன் பெருந்தொகையான மக்கள் கொல்லப் பட்டதாக புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் வடமாகாணத்தினைத் தலைமையாகக்கொண்ட ஏனைய உதிரிக் கட்சிகளும் கிறிஸ்தவ பாதிரியார்களும் ஓலமிடுவதன் பின்னணி என்ன?

பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகள் தமக்கான பாதுகாப்பு கேடயமாக பொதுமக்களை பயன்படுத்தாது அவர்களை சுதந்திரமாக வெளியேற அனுமதிந்திருந்தால் ஒரு ஐம்பது பொதுமக்கள் கூட மரணிக்கவேண்டிய நிலை உருவாகியிருக்காது என்பது உறுதியானதே!

அங்கு பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதனை எவரும் மறுக்க முடியாது. ஆனால் ஐம்பதினாயிரம் பேர் நாற்பதினாயிரம் பேர் எனக் கூறுபவர்களால் ஒரு நாலாயிரம் பேரினுடைய பெபயர்களைக்கூட வெளியிட முடியாது போனமைக்கான காரணமென்ன?

புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு மக்களின் மரணம் என்பது ஒரு தீனி. அத்துடன் மக்களின் மரணம்தான் அவர்களின் அரசியலுக்கான முதலீடு.

மேலே எம்மால் குறிப்பிடப்பட்டவர்கள் எவரேனும் கொல்லப்பட்ட மக்களின் பெயர்களை வெளியிட முன்வருவார்களா? அவ்வாறான செயல்களை மக்கள் மத்தியில் வெளிக்காட்டுபவர்கள் மட்டுமே மக்களுக்காக குரல் கொடுப்பவர் களாகும். ஏனைய அனைவரும் வெந்த வீட்டில் திருடுகின்ற திருட்டுக் கனவான்கள் என்பதே யதார்த்தமாகும்.

இலங்கையில் இடம்பெற்ற இனமுரண்பாட்டின் வெளிப்பாடாக அரச படைகளாலும், ஆயுத வன்முறையாளர்களாலும் பல்லாயிரம் மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

கொல்லப்பட்டார்கள் என்பது உண்மையே! ஆனால் வடக்கில் கொல்லப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் பெயர்களை விபரமாக வெளியிட்டவர்கள் யாரேனும் உண்டா? மாறாக அங்கு 80 பேர் கொல்லப்பட்டார்கள், இங்கு இருநூறு பேர் கொல்லப்பட்டார்கள் என பலநூறு தகவல்கள் பெயர்கள் எதுவும் குறிப்பிடாதவகையில் அனாமதேயிகளால் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக 50பேர் கொல்லப்பட்டார்கள் என்னும் புள்ளிவிபரத்தினை வெளியிடுபவர்களுக்கு அவர்களால் குறிப்பிட்ட அந்த ஐம்பது பேரின் பெயர்கள் தெரியாது போனமைக்கான மர்மமென்ன? அவ்வாறாயின் அங்கு ஐம்பதுபேர் கொல்லப்பட்டார்கள் என்பதனை அவர்கள் அறிந்தது எவ்வாறு? பதில்கூற முன்வருபவர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

## கிழக்கு மாகாணத்திற்கான தனியான நிர்வாகம்.

மேற்படி நூலின் ஆசிரியரான குமாரதுரை ஆகிய நான் தாயகத்திலிருந்து வெளியேறிய நிலையில் (24) வருடங்களின் பின்னர் (13.01.1984 – 17.03.2008) எனது தாய் மண்ணில் காலடிபதிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இந்த இடைக்காலப்பகுதியில் எனது அன்புத் தந்தையார் காலமானார். எனது உயிருக்கு உயிராக நேசித்த அன்புச் சகோதரர் திரு. தங்கத்துரை அவர்கள் விடுதலைப் புலிகளின் கைக்குண்டுக்குப் பலியாகி மரணமாகின்றார். அதனைத் தொடர்ந்து எனது அன்புத் தாய் காலமானார் இவர்கள் எவரினதும் மரணச்சடங்குகளில் பங்கு கொள்ள முடியாத நிலையில் இருந்த நான் வேதனை நிறைந்ததான பயணத்தினை மேற்கொண்டபோதும் மனதிற்குள் ஒரு விதமான வெற்றியுணர்வின் வெளிப்பாடு என்னை மகிழவைக்கின்றது. இந்நிலையில் அடுத்த நடவடிக்கையாக கிழக்கு மாகாணத்திற்கான தனியான நிர்வாகத்தினை உருவாக்குவதற்காக (T.M.V.P) திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களின் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் வெற்றிக்காக முழுமையாக செயற்படவேண்டுமென்னும் ஆர்வம் எனது மனதுள் ஏற்படுகின்றது.

இந்நிலையில் பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் ஞானம் என்பவரையும் பிரித்தானியாவில் வசிக்கும் சட்டத்தரணியான ஜனாப் எஸ்.எம்.எம் பஷீர் அவர்களையும் எம்முடன் இணைத்துக்கொண்டு ஊடகரீதியான பிரச்சாரங்களை மும்முரமாக முன்னெடுத்தோம். அதேவேளை திரு. சந்திர காந்தனுடனான தொடர்புகளையும் ஏற்படுத்தியிருந்தோம்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என பட்டமளிப்புச் செய்திருந்த திரு.சம்பந்தன் அவர்களும், விடுதலைப் புலிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் இரா சம்பந்தன் அவர்களின் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியினரும், ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸினரும் இணைந்து கிழக்கிற்கு தனியான நிர்வாகம் அமையவிடக்கூடாது என்பதற்காக கைகோர்த்தனர். அதற்கமைய கிழக்கு மாகாணத்தினை பிறப்பிடமாகக்கொண்ட சில புல்லுருவிகளும் கிழக்கின் தனிநிர்வாகத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் களமிறங்கினர்.

பலமான சிங்கள, தமிழ் எதிரணியினருடன் தேர்தல் களத்தில் (அரசாங்கத்தின் ஆதரவுடன் வெற்றிலைச் சின்னத்தில்) களமிறங்கிய தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின் முதன்மை வேட்பாளரான திரு. சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் கிழக்கில் களமிறங்கிய அனைத்து வேட்பாளர்களையும்விட ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்று (10.05.2008) ந் திகதியன்று இடம்பெற்ற தேர்தலில் (41,936) வாக்குகளால் வெற்றிவாகைசூடினார். இந்நிலையில் தேர்தலில் முஸ்லிம் சமூகத்தினைச் சார்ந்த உறுப்பினர்கள் கூடுதலான அளவு தெரிவாகியிருந்தமையை காரணங்காட்டி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா என்பவர் தமக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படவேண்டுமென வலியுறுத்தி அதற்கான நடவடிக்கைகளிலும் இறங்கியிருந்தார்.

| அரசியல் கட்சிகள் | பெற்ற வாக்குகள் | விகிதம் | உறுப்பினர்கள் |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு | 308.886 | 52.21 | 20 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 250.732 | 42.38 | 15 |
| மக்கள் விடுதலை முன்னணி | 9.390 | 1.59 | 01 |
| தமிழ் ஜனநாயக தேசிய அணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) | 7.714 | 1.30 | 01 |

மேற்படி தேர்தலில் மேலும் (14) அரசியல் கட்சிகள் போட்டியிட்டபோதும் எவரும் உறுப்பினர்களைப் பெறவில்லை.

இக்காலப்பகுதியில் உத்தியோகபூர்வ விடயமாக பிரித்தானியாவிற்கு சென்றிருந்த ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் நாடு திரும்பியதும் முதலமைச்சரை தேர்வுசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இந்நிலையிலும் ஹிஸ்புல்லா அவர்கள் ஜனாதிபதியின் கருத்துக்களை ஏற்பதற்கு தயாரானவராக மாறவில்லை. எதுஎவ்வாறாயினும் சந்திரகாந்தன்

www.padippakam.com

அவர்களையே முதலமைச்சராக நியமிப்பது என்னும் விடயத்தில் ஜனாதிபதி அவர்களின் உறுதியான நிலைப்பாட்டிற்கமைய தேர்தல் இடம்பெற்று ஆறு நாட்களின் பின்னர் (16.05.2008)ல் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்கள் ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் முன்னிலையில் கிழக்கின் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்து பதவியேற்றார். இந்நிகழ்வு வெறும் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் மட்டுமல்ல மாறாக இலங்கை அரசியல் வரலாற்றில் காலங்காலமாக வடமாகாண மேலாதிக்க சிந்தனைகொண்ட அரசியல்வாதிகளின் ஆதிக்கத்திற்கு முற்றுப் புள்ளியிட்டு கிழக்கு மக்களின் சுயநிர்ணய உரிமையினை நிலைநாட்டிய பொன்னான நாள் என்றால் மிகையாகாது!.



**கிழக்கு மாகாண முதலமைச்சர் கௌரவ சிவநேசதுரை சந்திர காந்தன் அவர்களின் அலரி மாளிகையில் இடம்பெற்ற பதவியேற்பு வைபவம்**

கிழக்கு மாகாணத்திற்கு தனியான நிர்வாகம் ஏற்படுத்தப்பட்டதற்கமைய அதற்காக இரவு, பகலாக ஊடகரீதியாக செயலாற்றிய நாங்கள் சிலரும் சின்னாமாஸ்ரர் என அழைக்கப்படும் ஞானம் அவர்கள் தவிர்ந்த அதற்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் ஐவரும் இணைந்து மீண்டும் இலங்கைக்கான எமது பயணத்தினை (21.06.2008)ந் திகதியன்று மேற்கொண்டோம். அப்பயணத்தின்போது ஜனாதிபதி திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களையும் ஏனைய சில அமைச்சர்களையும் சந்தித்த நாங்கள் கிழக்கு மாகாணத்திற்கு சென்று முதலமைச்சர் திரு. சந்திரகாந்தன் அவர்களையும் சந்தித்து



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கு எமது வாழ்த்துக்களை நேரடியாக தெரிவித்தோம். அங்கு சென்ற எமக்கு தங்குமிட வசதிகள் அனைத்தும் திருமலையிலும், மட்டுநகரிலும் ஹொட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் முழுமையாக தோற்கடிக்கப்படாது இருந்தமையால் எமக்கான பாதுகாப்பும் முதலமைச்சரின் பணிப்பின்பேரில் வழங்கப்பட்டிருந்தது. (21.06.2008)ல் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட நாங்கள் (28.06.2008)ல் பிரித்தானியாவிற்கு திரும்பிப் பயணமானோம்.

## தனியான கிழக்கு மாகாணத்திற்கான பிரதான காரணிகள்

1. 1970ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வவுனியால் தோல்வியடைந்த திரு. ரீ. சிவசிதம்பரம் அவர்களின் நலனுக்காக மூதூர் தொகுதியினை துண்டாடுவதற்கும், அங்கு சிங்கள மக்களுக்கென ஒரு தொகுதியினை உருவாக்குவதற்கும் காரணகர்த்தாக்களாக செயற்பட்ட வடமாகாண அரசியல்வாதிகள் தமக்கென தனியான முல்லைத்தீவு தொகுதி ஒன்றினை புதிதாக உருவாக்கியதன்மூலம் மூதூர் தமிழ் மக்களின் கண்களில் மண்ணைத்தூவினார்கள். அவர்களினால் முன்வைக்கப்பட்ட முல்லைத்தீவிற்கான தேர்தல் தொகுதி விடயம் ஒரு தனிமனிதனுடைய அபிலாசைகளை நிறைவுசெய்வதற்காக அமைந்ததென்பதே இங்கு முக்கியமானதாகும்.

2. 1977ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இரு தொகுதிகளிலும் முறையே திரு. செ. இராசதுரை, திரு. அ. தங்கத்துரை ஆகிய இருவரையும் அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கான திட்டத்திற்கமைய வடமாகாண அரசியல் தலைமையினால் அவர்கள் இருவரும் பழிவாங்கப்பட்டமை.

3. 15.02.1989ல் முதன்முதலாக இடம்பெற்ற மாவட்டரீதியான விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் நடைமுறையின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசியப் பட்டியலுக்கான பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படவேண்டிய திரு. சம்பந்தமூர்த்தி அவர்களின் பதவி திரு.



படிப்பகம்

www.padippakam.com

அமிர்தலிங்கம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அவரின் படுகொலையினைத் தொடர்ந்து அப்பதவி கிழக்கிலுள்ள ஒருவருக்கு வழங்கப்படவேண்டியதற்குப் பதிலாக மாவை சேனாதிராசாவிற்கு ஏன் வழங்கப்பட்டது?. இச்சம்பவம் யாழ் மேலாதிக்கத்தின் உச்சநிலை என்பதனை மறுப்பதற்கு யாராலும் முடியுமா?.

4. பிரேமதாசா – விடுதலைப் புலிகள் ஆகிய இருசாராருக்குமிடையிலான உடன்படிக்கை, கிழக்கு மாகாணமான மட்டக்களப்பினை மையமாக வைத்தே (10.05.1990ல்) மீறப்பட்டது. இச்சம்பவத்தின் மூலம் பல நூற்றுக்கணக்கான தமிழ் மக்களும் 750ற்கும் மேலான தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் அங்கு கொல்லப்பட்டு 600 அறுநூறு வரையிலான பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் படுகொலை செய்யப்பட்டனர்.

5. ஜனாதிபதி சந்திரிகா – புலிகளுக்கிடையிலான உடன்படிக்கை திருகோணமலை கடற்படைத்தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த கடற் படைக்குச் சொந்தமான கப்பல்கள் மீது (19.04.1995ல்) தாக்குதல் நடாத்தியதற்கமையவே மீறப்பட்டது. இதனால் திருமலையில் 29 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

6. திரு. ரணில் விக்கிரமசிங்கா – பிரபாகரன் ஆகியோருக்கிடையிலான உடன்படிக்கையைத் தொடர்ந்து 25.06.2002ல் மூதூரிலும், 27.06.2002ல் வாழைச்சேனையிலும் 19.08.2002ல் திருமலையில் இடம்பெற்ற கண்காட்சி நிகழ்விலும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ஆயுத வன்முறையின் மூலமே புரிந்துணர்வு உடன்படிக்கை செயலிழக்க காரணமாக அமைந்தது.

7. கேணல் கருணா அவர்களின் பிரிவின்பின்னர் (03.04.2004) பிரபாகரனின் ஆயுதப்போராட்டத்திற்கு முதுகெலும்பாக செயற்பட்ட பல நூற்றுக் கணக்கான கிழக்கு மாகாண இளைஞர்களையும், யுவதிகளையும் ஈவிரக்கமின்றி பிரபாகரனின் தலைமையிலான வன்னிப் புலிகள் சுட்டுக் கொன்றனர்.

8. திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் ஆட்சியின்போது திருமலை



படிப்பகம்

www.padippakam.com

மாவட்டத்திலமைந்துள்ள (30,000) முப்பதினாயிரம் ஏக்கர் விவசாயக் காணிகளுக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கமான (மாவில் ஆறு) புலிகளினால் தடைசெய்யப்பட்டமையின் மூலமே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமானது. இந்நடவடிக்கையினால் எமது பிரதேச விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு பலநூறு கோடி ரூபாவாக அமைந்தது. இதன் காரணமாகவே (02.04.2004) முதல் அமைதிகாத்த திரு. மஹிந்தராஜபக்ஸ அவர்களின் தலைமையிலான அரசு (16.01.2008ல்) யுத்தநிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறியது.

●



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் - 26.01.2010

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

## ஆறாவது ஜனாதிபதித் தேர்தலும் (26.01.2010) தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் நாடகமும்.

ஆறாவது ஜனாதிபதித் தேர்தலில் யுத்தவெற்றியே பலவகைகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருவதை அவதானிக்கக்கூடியதாக அமைந்திருந்தது. திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் பிரசாரத்தில் பிரதான இடத்தைப் பிடித்த கருப்பொருளாக விளங்கிய விடயம், "தான் 2005ஆம் ஆண்டு பதவிக்கு வரும்போது யுத்தத்தை முடித்துத் தர வேண்டுமென்றே மக்கள் தனக்கு ஆணை தந்தனர் எனவும், அதற்கமைய தனது பதவிக்காலத்தில் உலகிலே பயங்கரவாத இயக்கங்களில் முதலாமிடத்தை வகித்த விடுதலைப் புலிகளை ஆயுத நடவடிக்கையின் மூலம் எவராலும் வெற்றிகொள்ள முடியாதென மேற்குலக நாடுகள் அனைத்தும் கருத்து வெளியிட்டிருந்த நிலையில் பயங்கரவாதத்தினை முழுமையாக ஒழித்து யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டுக்கு அமைதியை ஏற்படுத்தியுள்ளேன்" என தனது பதவிக்கால சாதனையாகவே கூறிவந்தார்.

மறுபுறமாக சரத் பொன்சேகா இராணுவத் தளபதி என்ற வகையில் மாவிலாறு பிரதேசத்தில் விடுதலைப் புலிகளை அடக்க மேற்கொண்ட நடவடிக்கையை இறுதிவரை தொடர்ந்து முழுமையான வெற்றிக்கு தானே காரணம் என்பதை கூறிவந்தார்.

23 ஆம் திகதி செப்டம்பர் மாதம் 2008 இல் கனடாவின் "நெசனல் போஸ்ட்" இதழுக்கு சரத் பொன்சேகா வழங்கிய பேட்டியில் "சிறுபான்மை யினராக இருக்கின்றோம் என்ற காரணத்துக்காக மிதமிஞ்சிய விடயங்களுக்கு அவர்கள் கோரிக்கை விடுக்கக் கூடாது" என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். "இந்த நாடு சிங்களவர்களுக்கு மட்டுமே உரியது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். சிறுபான்மையினர் இங்கு விருந்தாளிகள் மட்டுமே" என்று அவர் ஏற்கனவே தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துக்களை அறிந்திருந்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் திரு. சரத் பொன்சேகாவின் வெற்றிக்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து நகரங்களிலும் மேடை அமைத்து பிரச்சாரம் செய்தனர். இதன் பின்னணியில் பல மில்லியன் அமெரிக்கடாலர்கள் கையாளப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.



படிப்பகம்

www.padippakam.com

இச்சந்தர்ப்பத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான கே. துரைரட்ண சிங்கம் அவர்கள் இலங்கையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் சரத் பொன்சேகா பதவிக்கு வருமிடத்து உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்படுமெனவும், கைதிகளாக்கப்பட்ட விடுதலைப் புலிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் வடக்கு கிழக்கு மீண்டும் இணைக்கப்படும் எனவும் இதன் மூலம் சுயாட்சி, சுயநிர்ணய உரிமைக்கான வழி திறக்கப்படுமெனவும் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் சரத் பொன்சேகா கையொப்பமிட்டு ஒப்பந்தத்துக்கு இணங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. இக்கருத்து தமிழ் வாக்காளர்களைக் கவர்வதற்காக கூறப்பட்ட பொய் என பின்னர் வெளியாகியபோதும், சிங்களமக்கள் மத்தியில் பொன்சேகா பற்றிய சந்தேகங்கள் வலுவடைந்த அதேநேரத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தனது தேர்தல் பிரசாரங்களின் போது சம்பந்தன் தன்னுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய நேரத்தில் உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட வேண்டும், விடுதலைப் புலிக் கைதிகள் விடுவிக்கப்படவேண்டும், வடக்கு கிழக்கு இணைக்கப்பட வேண்டும், வடக்கிலுள்ள இராணுவ முகாம்கள் நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்ததாகவும் அக்கோரிக் கைகளை தான் தேசத்தின் நலன்கருதி நிராகரித்ததாகவும் தேர்தல் என்பதைவிட தனக்கு நாடுதான் முக்கியம் என பகிரங்கமாக அறிவித்தார். இக்கருத்தும் ஊடகங்களில் முக்கியத்துவப் படுத்தப்பட்டன.

## ஜனாதிபதித் தேர்தல் (26.01.2010)

| மாவட்டம் | மாகாணம் | ராஜபக்ஸ | விகிதம் | பொன்சேகா | விகிதம் | ஏனையோர் | மு.விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | மேல் மாகாணம் | 614,740 | 52.93% | 533,062 | 45.90% | 13,620 | 77.06 |
| கம்பஹா | | 718,716 | 61.66% | 434,506 | 37.28% | 12,426 | 79.66 |
| களுத்துறை | | 412,562 | 63.06% | 231,807 | 35.43% | 9,880 | 81.01 |
| கண்டி | மத்திய மாகாணம் | 406,636 | 53.16% | 329,492 | 43.89% | 14,658 | 78.26 |
| மாத்தளை | | 157,963 | 59.74% | 100,513 | 38.01% | 5,953 | 77.94 |
| நுவரெலியா | | 151,604 | 43.77% | 180,604 | 52.14% | 14,174 | 77.19 |
| காலி | தென் மாகாணம் | 386,971 | 63.69% | 211,633 | 34.83% | 9,017 | 80.25 |
| மாத்தறை | | 296,155 | 65.53% | 148,510 | 33.86% | 7,264 | 78.60 |
| ஹம்பாந்தோட்டை | | 226,887 | 67.21% | 105,336 | 31.20% | 5,341 | 80.67 |
| யாழ் | வடக்கு | 44,154 | 24.75% | 113,877 | 63.84% | 20,338 | 25.66 |
| வன்னி | | 38,740 | 37.31% | 70,367 | 66.86% | 6,145 | 40.33 |



படிப்பகம்

www.padippakam.com

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மட்டுநகர் | கிழக்கு | 55,663 | 26.27% | 146,057 | 68.93% | 10,171 | 64.81 |
| அம்பாறை | | 146,912 | 47.92% | 153,105 | 49.94% | 10,171 | 73.54 |
| திருமலை | | 69,752 | 43.04% | 87,661 | 54.09% | 4,659 | 68.22 |
| குருநாகல் | வட.மேற்கு | 582,784 | 63.08% | 327,594 | 35.46% | 13,515 | 78.62 |
| புத்தளம் | | 201,981 | 58.70% | 136,233 | 39.59% | 5,899 | 70.02 |
| அநுராதபுரம் | வடக்கு | 298,448 | 66.32% | 143,761 | 31.94% | 7,829 | 78.35 |
| பொலன்னறுவ | வட மத்தி | 144,889 | 64.92% | 75,026 | 33.62% | 3,260 | 80.13 |
| பதுளை | ஊவா | 237,579 | 53.23% | 198,835 | 44.55% | 9,880 | 78.70 |
| மொனராகலை | | 158,435 | 69.01% | 66,803 | 29.10% | 4,346 | 77.12 |
| ரத்னபுரி | சப்ரகமுவ | 377,734 | 63.76% | 203,566 | 34.36% | 11,126 | 81.24 |
| கேகாலை | | 296,639 | 61.80% | 174,877 | 36.44% | 8,448 | 78.76 |
| மொத்தம் | | 6,015,934 | 57.83% | 4,173,185 | 40.15% | | 74.50 |

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டிய திரு. ராஜபக்ஸ அவர்கள் (09.02.2010ல்) பாராளுமன்றத்தினைக் கலைத்தார். அடுத்த தேர்தலுக்கான திகதி (08.04.2010) என அறிவிக்கப்பட்டு (19.02.2010 முதல் 26.02.2010வரை) வேட்பாளர்கள் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்யும் திகதி என அறிவிக்கப்பட்டது. அன்றைய புள்ளி விபரங்களுக்கமைய வாக்காளர்களின் எண்ணிக்கை (14,088,500)ஆக இருந்தது. அதற்கமைய இடம்பெற்ற தேர்தலின் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

இலங்கையில் இடம்பெற்ற சகல ஜனாதிபதித் தேர்தல்களும், வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளும், அத்துடன் வன்னிப் பிரதேச மீட்பின்போது தலைமை தாங்கிய இராணுவத்தளபதியான திரு. சரத் பொன்சேகாவிற்கு வடமாகாண மக்கள் அளித்த வாக்குகளும் பின்வருமாறு அமைந்துள்ளது.

## இலங்கையில் இடம்பெற்ற அனைத்து ஜனாதிபதித் தேர் தல்களும், இராணுவத் தளபதிக்கு வழங்கப்பட்ட வட மாகாண வாக்காளர்களின் விசேடமான வாக்குப் பலமும்.

| வேட்பாளர்கள் | மாவட்டம் | பெற்ற வாக்குகள் | ஆண்டு |
|---|---|---|---|
| ஜே.ஆர் ஜயவர்தன | யாழ்ப்பாணம் | 44,780 | 20.10.1982 |
| ஹெக்டர் கொபேகடு | | 77,300 | |
| ஜே.ஆர் ஜயவர்தன | வன்னி | 32,834 | |
| ஹெக்டர் கொபேகடுவ | | 23,221 | |
| ஆர்.பிரேமதாச | யாழ்ப்பாணம் | 33,650 | 19.12.1988 |

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா<br>ஆர்.பிரேமதாச<br>ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | வன்னி | 44,197<br>10,580<br>4,889 | |
| சந்திரிகா குமாரணதுங்க<br>வசீரா சிறீமதி திசாநாயக்க<br>சந்திரிகா குமாரணதுங்க<br>வசீரா சிறீம திசாநாயக்க | யாழ்ப்பாணம்<br><br>வன்னி | 16,934<br>223<br>33,585<br>4,493 | 09.11.1994 |
| சந்திரிகா குமாரணதுங்க<br>ரணில் விக்கிரமசிங்கா<br>சந்திரிகா குமாரணதுங்க<br>ரணில் விக்கிரமசிங்கா | யாழ்ப்பாணம்<br><br>வன்னி | 52,043<br>48,005<br>16,302<br>43,803 | 21.12.1999 |
| மஹிந்த ராஜபக்ஸ<br>ரணில் விக்கிரமசிங்கா<br>மஹிந்த ராஜபக்ஸ<br>ரணில் விக்கிரமசிங்கா | யாழ்ப்பாணம்<br><br>வன்னி | 1,997<br>5,523<br>17,197<br>65,798 | 17.11.2005 |
| மஹிந்த ராஜபக்ஸ<br>சரத் பொன்சேகா<br>மஹிந்த ராஜபக்ஸ<br>சரத் பொன்சேகா | யாழ்ப்பாணம்<br><br>வன்னி | 44,154<br>113,877<br>28,740<br>70,367 | 26.01.2010<br><br><br>257,138 |

இலங்கையில் ஜனாதிபதி ஆட்சிமுறை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிட்ட எந்தவொரு வேட்பாளருக்கும் அளிக்கப்படாத வாக்குகளை வடமாகாண வாக்காளர்கள் திரு. சரத் பொன்சேகா அவர்களுக்கு வழங்கியதன் மூலம் வன்னி மீட்பின்போது பாதுகாப்புப் படையினருக்கு தலைமை தாங்கிய சரத் பொன்சேகா அவர்களோ அன்றி அவரின் வழிநடத்தலில் வன்னிப் பிரதேச மீட்பில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரோ எந்தவித மனித உரிமை மீறல்களையும் மேற்கொள்ள வில்லை என்பதனை நிரூபித்துள்ளனரா? அன்றி விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பாட்டின்கீழ் அவர்கள் அனுபவித்த துன்பங்களிலிருந்து விடுபட்டமைக்கு நன்றிக்கடனாக மேற்படி வாக்குகளை வழங்கினார்களா? இருவிடயங்களுமற்ற நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் கூலிக்கு வெட்டிய புதைகுழியில் அவர்கள் வீழ்த்தப்பட்டார்களா? மேற்படி வடமாகாண தமிழ் வாக்காளர்கள் வழங்கிய தீர்ப்பினை மறுக்க முன்வருபவர்கள் அதற்கான பதில்களை முன்வைக்க முன்வருவார்களா?

தமிழீழக் கோரிக்கையினை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணியினர் களமிறங்கியபோது வடமாகாணத்தில் வாழ்ந்த (408,178) வாக்காளர்களில்



படிப்பகம்

www.padippakam.com

அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் ஆக மொத்தம் (278,293) மட்டுமே. இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரு வேட்பாளர்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (257,138) இந்நிலையில் தனித் தமிழீழம் அமைப்பதற்காக வடமாகாண வாக்காளர்கள் தமது இனத்தவர்களுக்கு அளித்த வாக்குகளைவிட (21,155) வாக்குகளை மட்டும் குறைவாக பெற்றமை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டவர்கள்மீது தமிழ்மக்கள் காட்டிய ஆதரவு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சம்பவமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் (26.01.2010ல்) இடம்பெற்று இரண்டரை மாதகால இடைவெளியில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் (08.04.2010) தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் யாழ் மாவட்டத்தில் (121,391) வாக்குகளையும், வன்னியில் (75,467) வாக்குகளையும் மட்டுமே பெற்றனர். அதேவேளை திரு. சரத் பொன்சேகா அவர்களும், திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களும் யாழ் மாவட்டத்தில் (158,031) வாக்குகளையும், வன்னி மாவட்டத்தில் (99,107) வாக்குகளையும் பெற்றுள்ளனர். இதற்கான அடிப்படைக் காரணமென்ன என தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் கூறமுடியுமா?

அத்துடன் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் ஒருவர் தாம் விரும்பிய ஒரே கட்சியினைச் சார்ந்த மூவருக்கு வாக்களிக்க முடியும். ஆனால் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வாக்காளர் ஒருவருக்கு மட்டுமே வாக்களிக்க முடியும் இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஜனாதிபதித் தேர்தலின்போது வாங்கிய பணத்திற்காக பணியாற்றியுள்ளார்கள் என்பது தெளிவாகவில்லையா?

இராணுவத் தளபதியான சரத் பொன்சேகாவின் பதவிக்காலம் பின்னால் விபரிக்கப்பட்டுள்ளது. திரு. சரத் பொன்சேகா அவர்கள் திரு. ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் 06.12.2005 முதல் 15.07.2009வரை இராணுவத் தளபதியாக கடமையாற்றினார்.

●



படிப்பகம்

www.padippakam.com

# பொதுத் தேர்தல் (08.04.2010)

| அரசியல் கட்சிகள் | வாக்களித்தோர் | விகிதம் | உறுப்பினர்கள் | தேசியப் பட்டியல் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஐ.ம.சு.கூட்டணி<br>அ.இ.மு.காங்கிரஸ்<br>இ.தொ.காங்கிரஸ்<br>ஈ.பி.டி.பி<br>ஜாதிக ஹெல உறுமய<br>ல.ச.ச கட்சி<br>ம.ஐ.முன்னணி<br>தேசிய காங்கிரஸ்<br>தேசிய.சு முன்னணி<br>ம.ம.முன்னணி | 4,846,388 | 60.33% | 127 | 17 | 144 |
| ஐ.தே.முன்னணி<br>ஐ.ம அணி | 2,357,057 | 29.34% | 51 | 09 | 60 |
| த.தே.கூட்டமைப்பு<br>ஈ.பி.ஆர்.எல்.எப் சுரேஸ் அணி<br>ரெலோ | 253,190 | 2.90% | 13 | 01 | 14 |
| ஐ.தே.கூட்டணி<br>(சரத்)<br>ஜே.வி.பி | 441,251 | | 05 | 02 | 07 |
| சுயேச்சை | 38,947 | 0.48 | 0 | 0 | 0 |
| மொத்தம் | | | | | 225 |

ஜனாதிபதித்தேர்தல் இடம்பெற்று இரண்டரை மாதகால இடைவெளியில். டொலருக்காகவும், ஸ்ரேலின் பவுணுக்காகவும் ஏற்கனவே இணைந்திருந்த கூட்டணி இரண்டாகப் பிளவுபட்டு பொதுத் தேர்தலில் தனித்தனியாக களமிறங்கினர் அதற்கமைய மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதிநிதிகளை இரு சாராரும் வேறு, வேறாக பெற்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

# 14 வது பாராளுமன்றத் தேர்தல் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் (08.04.2010)

| மாவட்டம் | த.தே.கூ பெற்ற வாக்குகள் | விகிதம் | உறுப்பினர் | மொத்தமாக வாக்களித்தவர்கள் விகிதம் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 65,119 | 43.85% | | 23.33% | 721.350 |
| சுரேஸ் பிரேமச்சந்திரன் | 18,425 | | | | |
| ஈஸ்வரபாதம் சரவணபவான் | 14,961 | | | | |
| மாவை சேனாதிராசா | 20,501 | | | | |
| சிவஞானம் சிறீதரன் | 10,057 | | | | |
| அப்பாத்துரை விநாயகமூர்த்தி | 15,311 | | | | |
| செல்லுபடியற்றவை | 14,136 | | 05 | | |
| மொ.வாக்களித்தவர்கள் | 93,390 | | | | |

| மாவட்டம் | த.தே.கூ பெற்ற வாக்குகள் | விகிதம் | உறுப்பினர் | மொத்தமாக வாக்களித்தவர்கள் | மொத்த வாக்காளர்கள் |
|---|---|---|---|---|---|
| வன்னி | 41,673 | | | 117,185 | 266,975 |
| ஏ.அடைக்கலநாதன் | 17,366 | | | | |
| என் நோகாதரலிங்கம் | 12,120 | | | | |
| ஏ.என் சிவசக்தி | 11,674 | | | | |
| மொ.வாக்களித்தவர்கள் | | | | | |
| மொத்தம் | | | 03 | | |
| திருமலை | 33,268 | | | 149,982 | 241,133 |
| இரா சம்பந்தன் | 24,488 | | 01 | | |
| மட்டுநகர் | 66,235 | | | 196,367 | 333,644 |
| எஸ்.யோகேஸ்வரன் | 20,569 | | | | |
| பி.செல்வராசா | 18,485 | | | | |
| பி அரியநேந்திரன் | 16,504 | | | | |
| மொத்தம் | | | 03 | | |
| அம்பாறை | 28,895 | | | | 420,838 |
| பி.எச்.பியசேன | 11,139 | | 01 | | |
| மொத்தம் | 13+01= 14 | | | | |



படிப்பகம்

www.padippakam.com

வடமாகாணத்தில் 08.04.2010ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 988,334 வாக்காளர்கள் வாக்களிக்கும் தகைமையைக் கொண்டிருந்தனர் இவர்களில் (106,792) வாக்காளர்கள் மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்திருந்தனர் இத்தொகை மொத்த வாக்காளர்களில் 10.8% வீதத்தினர் மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு வாக்களித்திருந்தமையை உறுதிப்படுத்தியுள்ளது.

## இலங்கை அரசியல் வரலாற்றில் என்றுமே நடைமுறைப் படுத்தாத புதுமை மிகு தேர்தல் திருமலை மாவட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் அறிமுகப் படுத்தப் பட்டது.

இலங்கையின் 14வது பாராளுமன்றத் தேர்தல் (08.04.2010) இல் இடம்பெற்றது. அதற்கமைமய திருமலை மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைமப்பினரால் வெளியிடப்பட்ட வேட்பாளர் பட்டிய்யல் பின்வருமாறு அமைந்திருந்த்து.

| வேட்பாளின் இலக்கம் | பெயர் |
|---|---|
| இல.1 | இராஜவரோதயம் சம்பந்தன் |
| இல.2 | கதிரவேலிப்பிள்ளைள திருச்செல்வம் |
| இல..3 | கந்தசாமி செல்வராசா |
| இல.4 | குமாரசாமி நாகேஸ்வான் |
| இல.5 | முருகையா நேமிநாதன் |
| இல.6 | சி. கந்தையா நடேசபிள்ளை |
| இல.7 | சீவரெத்தினம் மதியழகன் |

மேற்குறிப்பிட்டுள்ள வேட்பாளர்களில் இரு வேட்பாளர்கள் தவிர்ந்த ஏனைய ஐவரும் தேர்தலில் களத்திலிறங்கி தமக்கு ஆதரவு தேடினர். மேற்படி வேட்பாளர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோது தேர்தலில் பங்கு கொள்ளும் வேட்பாளர்கள் அனைவரும் தத்தமது தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளில் தலைவரின் புகைப்படங்களும் அவரது குறியீட்டு



படிப்பகம்

www.padippakam.com

இலக்கமும் கட்டாயமாக இணைத்தே வெளியிட வேட்டுமென்னும் நிபந்தனை கட்டாயமாக்கப்பட்டது. அதற்கமைய திருமலை மாவட்டத்தில் த.தே.கூட்டமைப்பின் வேட்பாளர்களாக களமிறங்கிய அனைவரும் தத்தமது தேர்தல் பிரச்சார சுவரொட்டிகளில் தத்தமது புகைப்படத்துடன் திரு. சம்பந்தன் அவர்களின் புகைப்படத்தினையும் இணைத்து இரு சாராரினதும் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்களுடனேயே அனைவரினதும் தேர்தல் விளம்பரங்கள் அச்சிட்டு ஒட்டப்பட்டன. அதன்மூலம் ஏனைய வேட்பாளர்களின் முயற்சியின் பயனாகவும், நிதியின் பயனாகவும் சம்பந்தன் அவர்கள் வெற்றிவாகை சூடினார். சம்பந்தன் ஏற்கனவே நடந்து முடிந்த இரு தேர்தல்களிலும் விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகளால் அளிக்கப்பட்ட வாக்குகளினாலேயே வெற்றியீட்டியமையை நன்கு அறிந்திருந்தார். அதனால் இடம்பெறப்போகும் தேர்தலில் தமக்கு மக்கள் வாக்களிப்பார்களா என்னும் சந்தேகம் அவரை உறுத்தியது. அதனை நிவர்த்தி செய்வதற்காக திருமலை தமிழ் தேசியக் கூட்டணியின் ஏனைய வேட்பாளர்களுடன் இணைந்தே அவர் தமக்கான வெற்றிவாகையினை உருவாக்கிக் கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு உள்ளாக்கப்பட்டார்.

உதாரணம்:

15.02.1989ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் போட்டியிட்டு அவர் தோல்வியுற்றார்.

16.08.1994ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தம்மை திருமலை மாவட்டத்தின் முதன்மை வேட்பாளராக நிறுத்தியபோதும் அத்தேர்தலிலும் தோல்வியினையே தழுவினார்.

10.10.2000ல் இடம்பெற்ற தேர்தலில் திருமலையில் களமிறங்க முடியாதநிலையில் பிரித்தானியாவில் வசித்துக்கொண்டிருந்த தனது மருமகன் முறையான சிவபாலன் என்பவரை வரவழைத்து தேர்தலில் களமிறக்கி அம்முயற்சியும் தோல்வியிலேயே முடிவுற்றது.

இவை அனைத்தும் திருமலை மாவட்ட மக்களால் சம்பந்தனுக்கு கற்பித்த பாடங்களாக அமைமந்தது. இந்நிலையிலேயே சர்வதேசப் பயங்கரவாத அமைப்பாக உலகின் முன்னணி நாடுகளில் (36) நாடுகளால் பட்டியலிடப் பட்டிருந்த விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரிடம் சரணாகதி அடைந்து திரு. பிரபாகரன் அவர்களே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதி



படிப்பகம்

www.padippakam.com

என மக்கள் மத்தியில் தெரிவித்த நிலையிலேயே (05.12.2001ல்) இடம்பெற்ற தேர்தலில் களமிறங்கி 40,610) வாக்குகளைப் பெற்று மீண்டும் பாராளுமன்ற ஆசனத்தினை அலங்கரிப்பதற்கான வாய்ப்பினை தமதாக்கினார்.

தேர்தல் முடிவுகளுக்கமைய கிழக்கில் (128,398) வாக்குகளையும், வடக்கில் (120,415) வாக்குகளையும் பெற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கூடுதலான வாக்குகளை அளித்த கிழக்கு மாகாண மக்களின் தேவைகளை கவனிப்பதற்காக கிழக்கிலிருந்து ஒரு உறுப்பினரைத் தெரிவு செய்வதற்கு விரும்பாது தமது மேலாதிக்க அரசியலை நடைமுறைப்படுத்துவதற்காக யாழ்ப்பாணத்தவரும் கொழும்பில் நிரந்தரமாக வசிப்பவருமான எம்.ஏ. சுமந்திரன் என்பவரை தெரிவு செய்தனர். மேற்படி யாழ் மேலாதிக்கம்பற்றி பகிரங்கமாக அறிக்கை ஒன்றினை வெளியிட்ட அம்பாறை மாவட்ட த.தே.கூட்டமைப்பின் பிரதிநிதியான திரு. பியசேன அவர்கள் த.தே.கூட்டமைப்பிலிருந்து வெளியேறி அரசாங்கத்தில் இணைந்தார்.

(02.04.2004ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் இரு மாகாணங்களிலும் 633,654 வாக்குகளைப் பெற்ற த.தே.கூட்டமைப்பினர் (08.04.2010ல்) இடம்பெற்ற பொதுத் தேர்தலில் 233,190 வாக்குகளை மட்டும் பெற்றதன் மர்மமென்ன என்பதனை வாசகர்களே தீர்மானிக்கலாம்.

மேற்படி பாராளுமன்றத் தேர்தலில் மேலும் (9) கட்சிகள் தேர்தலில் களமிறங்கியபோதும் எவையும் பிரதிநிதிகளைப் பெறவில்லை. தொடர்ந்து (22.04.2010ல்) தேசிய தொழிலாளர் சங்க பிரதிநிதியான திரு. பழனி திகாம்பரம் ஐக்கிய தேசிய முன்னணியிலிருந்து (சரத்) விலகி சுயேச்சையாக செயற்பட்டார். பின்னர் (05.08.2010ல்) பழனி திகாம்பரம், மற்றும் பிரபா கணேசன் ஆகிய இருவரும் அரசுடன் இணைந்தனர். அதனைத் தொடர்ந்து (08.09.2010ல்) ஐ.தே.கட்சியைச் சேர்ந்த (6) பிரதிநிதிகளான ஜனாப். ஏ.ஆர்.எம் அப்துல் காதர், திரு. ஏயால் குணரேகர, திரு. மனுசா நாணயக்கார, திரு. லக்ஸ்மன் செனவிரத்ன, திருமதி. உபெக்ஸா சுவர்ணமாலி, திரு. நிமால் செனரத் விஜேசிங்க ஆகியோரும் அரசுடன் இணைந்தனர். மேலும் (11.09.2010ல்) இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினரான கட்சியிலிருந்து வெளியேறி சுயேச்சையாக அரசுக்கு ஆதரவளித்தார். பின்னர் (22.09.2010ல்) ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் உறுப்பினர்கள் (8) பேர் அரசுடன் இணைந்தனர். இந்நிலையில் அரசாங்கத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை (161) ஆக



படிப்பகம்

www.padippakam.com

அதிகரித்ததற்கமைய அரசாங்கத்திற்குத் தேவையான(2/3) பெரும்பான்மையான (150) உறுப்பினர்களுக்கு மேலாக 11 உறுப்பினர்கள் அரசின் நடவடிக் கைகளுக்கு ஆதரவளிக்க முன்வந்தனர். இச்சம்பவம் திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பினை எவராலும் மாற்றமுடியாதென கருத்துக்களை வெளியிட்ட அரசியல் ஆய்வாளர்கள் அனைவரையும் திகைக்க வைத்தது.

திரு. ஜே.ஆர். ஜயவர்தனா அவர்களால் (07.09.1978ல்) புதிய அரசியல மைப்பினை அறிமுகப்படுத்திவிட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது என்னால் முடியாதது ஒன்றே ஒன்றுதான் எனக்கூறியவர் (என்னால் பெண்ணை ஆணாக்கமுடியாது, ஆணைப் பெண்ணாக்க முடியாது) ஏனைய அனைத்தையும் நிறைவேற்றும் அதிகாரம் என்னிடமுண்டு என முழக்கமிட்டமை இங்கு முக்கியமானதாகும். ஆனால் அவரால் மட்டுமன்றி அவரின் கட்சி சார்ந்தவர்களால்கூட எதனையுமே சாதிக்கமுடியாத நிலை ஏற்பட்டது.

## பிரபாகரனின் மறைவிற்கு முன்னும் அதன் பின்னும் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தல்களும் த.தே. கூட்டமைப்பினரின் தில்லு, முல்லுகளும்.

02.04.2010ந் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அதிகப்படியான வாக்குகளைப் பெற்ற நால்வர் பிரபாகரனின் மறைவிற்குப் பின்னர் இடம்பெற்ற (08.04.2010ல்) பொதுத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரினதும் தமிழரசுக் கட்சியின் செயலாளரினதும் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்கள் நான்கு பேருக்கு வேட்பாளருக்கான நியமனங்கள் வழங்கப்படவில்லை. காரணம் ஏற்கனவே நடைபெற்ற தேர்தலில் (02.04.2004) யாழ் மாவட்டத்தில் மாவை சேனாதிராசா தோல்வியுற்றிருந்தார். இந்நிலையில் அன்றைய யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளராகவிருந்த இளந்திரையன் என்பவரால் சேனாதியைவிட கூடிய வாக்குகளைப் பெற்றிருந்த சின்னத்தம்பி சிவமகாராசா என்பவரை திருட்டுத்தனமாக நீக்கிவிட்டு அவரின் இடத்திற்கு மாவை சேனாதிராசா தெரிவுசெய்யப்பட்டார் என தகவல்கள் வெளியாகின. இவ்விடயம் தொடர்பாக



படிப்பகம்

www.padippakam.com

அவர் ஆட்சேபனை தெரிவித்து இளந்திரையனிடம் முறையீடு செய்தமையினால் (20.08.2006ல்) அவர் புலிகளினாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்.

(08.04.2010ல்) பின்வருவோர் பழிவாங்கப்பட்டனர்.

| | |
|---|---|
| சிறில் சொலமன் | 31,177 |
| கஜேந்திரன் செல்வராசா | 112,077 |
| பொன்.கஜேந்திரகுமார் | 60,770 |
| சுரேஸ் பிரேமச்சந்திரன் | 45,786 |
| எம்.கே சிவாஜிலிங்கம் | 42,193 |
| மாவை சேனாதிராசா | 38,783 |
| பத்மினி சிதம்பரநாதன் | 68,240 |
| சிவநேசன் கிட்ணன் | 43,770 |
| ரவிராஜ் நடராஜா | 42.965 |

## ஆயுதப் போராட்டம் முடிவுபெற்றதும் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்.

ஆயுதப் போராட்டம் முறியடிக்கப்பட்டு ஒரு வாரகால இடைவெளியில் வட மாகாணத்தின் யாழ் மாநகர சபைக்கான தேர்தல் நடாத்தப்படுமென 25.05.2009ல் அரசாங்கம் அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. அதற்கமைய (18.06.2009 முதல் 25.06.2009 வரை நியமனப் பத்திரங்கள் ஏற்கப்பட்டு (08.08.2009ல்) தேர்தல் இடம்பெற்றது. இடம்பெற்ற தேர்தலில் மாநகர எல்லைக்குள் வாழ்ந்த வாக்காளர்களில் (22%) வாக்காளர்கள் மட்டுமே வாக்களித்தனர். 23 உறுப்பினர்களை உள்ளடக்கிய மாநகர சபையின் நிர்வாகத்தில் (13) உறுப்பினர்களை ஆளும் கட்சியான ஐ.ம.சு.கூட்டமைப்பினரும், (8) உறுப்பினர்களை த.தே. கூட்டமைப்பினரும், (01) உறுப்பினரை ஸ்ரீ.ல.முஸ்லிம் காங்கிரஸினரும். எஞ்சிய (01) உறுப்பினரை சுயேச்சையில் போட்டியிட்டவர்களும் பெற்றனர். தேர்தல் முடிவுகளுக்கமைய ஐ.ம.சு கூட்டமைப்பின் உறுப்பினரான (1250) வாக்குகளைப் பெற்ற நற்குணம் யோகேஸ்வரி என்னும் பெண் வேட்பாளர் யாழ் மாநகர சபையின் மேயராக தெரிவு செய்யப்பட்டார். (29.01.1998)ன் பின்னர் பதினொரு வருடகாலத்தின் பின்னர் மேற்படி மாநகர சபைக்கான தேர்தல் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



படிப்பகம்

அதே தினத்தில் வவுனியா நகரசபைக்கான நிர்வாகத்தினரை தேர்வு செய்வதற்கான தேர்தலும் இடம்பெற்றது. மேற்படி நகரசபைக்கான தேர்தல் முடிவுகளின்படி (11) உறுப்பினர்களை உள்ளடக்கிய நிர்வாகத்தில் (5) உறுப்பினர்களை த.தே.கூட்டமைப்பினரும், (3) உறுப்பினர்களை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினரும் (PLOTE, EPRLF, TULF) (2) உறுப்பினர்களை ஐ.ம.சு.கூட்டணியினரும், (1) உறுப்பினரை ஸ்ரீ.ல.மு. காங்கிரஸினரும் பெற்றதற்கமைய (1099) வாக்குகளைப் பெற்ற த.தே.கூட்டமைப்பின் உறுப்பினரான எஸ்.என்.ஜி. நாதன் என்பவர் நகர சபையின் தலைவராகவும், உப தலைவராக எம்.எஸ். முகுந்தரதன் என்பவரும் நியமிக்கப்பட்டனர்.

பின்னர் (26.01.2010ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து மீண்டும் வெற்றிபெற்ற திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் எஞ்சியுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதற்கமைய தேர்தல் ஆணையாளரின் அறிவித்தலுக்கமைய (301) உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை 17.03.2011ல் நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதற்கான நியமனப் பத்திரங்கள் (20.01.2011முதல் 27.01.2011வரை) ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி நியமனப் பத்திரங்களில் தவறுகள் இடம்பெற்றிருப்பதாக சில அரசியல் கட்சிகள் ஆட்சேபனை தெரிவித்ததற்கமைய 148 நியமனப் பத்திரங்கள் நிராகரிக்கப்பட்டன. அவையாவன முறையே (ஐ.ம.சு.கூட்டணி(36) ஐ.தே.கட்சி (08) ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் (06) த.தே.கூட்டணி (02) ஜே.வி.பி (02) ஏனையவை சுயேச்சைகள் இந்நிலையில் 301 சபைகளுக்கு இடம்பெறவிருந்த தேர்தலில் (234) சபைகளுக்கான தேர்தல் ஏற்கனவே திட்டமிட்டபடி (17.03.2011ல்) இடம்பெற்றது. அதற்கமைய தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

| அரசியல் கட்சிகள் | பெற்ற வாக்குகள் | உறுப்பினர்கள் | கைப்பற்றிய சபைகள் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூட்டமைப்பு | 3,352,483 | 1854 | 205 |
| ஐ.தே.கட்சி | 2,031,891 | 889 | 09 |
| த.தே.கூட்டமைப்பு | 70,171 | 76 | 12 |
| ஜே.வி.பி | 181,285 | 56 | 00 |
| ஏனையார் | 361,977 | 158 | 08 |
| மொத்தம் | | | 234 |

எஞ்சிய சபைகளுக்கான நியமனப்பத்திரங்கள் தொடர்பான வழக்கு அப்பீல்

www.padippakam.com

நீதிமன்றத்தில் (12.05.2011ல்) விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது அவற்றில் 47 மனுக்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் அவற்றினை ஏற்றுக்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளருக்கு நீதி மன்றம் ஆணை வழங்கியது. அதற்கமைய பின்வரும் கட்சிகளினது விண்ணப்பங்கள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன. (ஐ.ம.சு.கூட்டமைப்பு (35) ஐ.தே.கட்சி (04) ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் (03) சுயேச்சைகள் (04) ஏனைய கட்சிகள் (01) என்பன உள்ளடக்கப்பட்டிருந்தன. பின்னர் முல்லைத்தீவு மாவட்டத்திலமைந்துள்ள மாரியம்பத்து மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய இரு பிரதேச சபைகளுக்குமான தேர்தலை ஒத்திவைக்குமாறு தேர்தல் ஆணையாளரின் அறிக்கை வெளியிடப்பட்டது. அதற்கமைய (23.07.2011ல்) 65 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடாத்தப்பட்டது. அதற்கமைய இடம்பெற்ற தேர்தலுக்கான முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

| அரசியல் கட்சிகள் | பெற்ற வாக்குகள் | உறுப்பினர்கள் | கைப்பற்றிய சபைகள் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.கூட்டணி | 943,724 | 512 | 44 |
| த.தே.கூட்டணி, த.வி.கூ | 174,996 | 195 | 20 |
| ஐ.தே.கட்சி | 329,031 | 137 | 00 |
| ஜே.வி.பி | 42,190 | 13 | 00 |
| சுயேச்சை | | | 01 |
| மொத்தம் | | | 65 |

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் கிழக்கு மாகாணம்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் (17.03.2011 – 23.07.2011) மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை கிழக்கு மாகாணத்தில் பிரதான அரசியல் கட்சிகள் எனக்கூறப்படும் கட்சியினர் பெற்ற வாக்குகளும், அவர்களுக்கான உறுப்பினர்களின் விபரங்களும் பின்வருமாறு அமைந்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட திகதிகளில் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் (1) மாநகர சபை, (3) நகர சபைகள், (29) பிரதேச சபைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் கிழக்கில் மொத்தமாக வாக்களித்த மக்களின் எண்ணிக்கையான (394.293) வாக்குகளில் அங்கு



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் களமிறங்கிய ஒவ்வொரு கட்சிகளும் பெற்ற வாக்குகளும், அவர்களுக்கான உறுப்பினர்கள் மற்றும் கைப்பற்றிய சபைகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

| அரசியல் கட்சிகள் | வாக்களித்தவர்கள் | உறுப்பினர்கள் | கைப்பற்றிய சபைகள் | விகிதம் |
|---|---|---|---|---|
| ஐ.ம.சு கூட்டணி | 176,921 | 127 | 17 | 43.22% |
| ஐ.தே.கட்சி | 65,507 | 48 | 01 | 16.00% |
| ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் | 53,988 | 33 | 04 | 13.20% |
| த.தே.கூட்டணி | 54,542 | 45 | 07 | 13.32% |
| தேசிய காங்கிரஸ் | 14,082 | 14 | 02 | 3.44% |
| சுயேச்சைகள் | 18,612 | 06 | | 4.54% |
| ஜே.வி.பி | 4,734 | 02 | | 1.15% |
| த.ம.வி.புலிகள் | 4,667 | 03 | | 1.14% |
| அ.இ.த.ஒ.முன்னணி | 463 | 0.11 | | |
| தாராளவாதக் கட்சி | 746 | 0.18 | | |
| ந.ச.சமாஜ கட்சி | 31 | | | |
| மொ.வாக்காளர்கள்<br>மொ.வாக்களித்தவர்கள்<br>நிராகரிக்கப்பட்டவை<br>செல்லுபடியானவை | | | | 533,108<br>394,293<br>233,34<br>370,959 |

கிழக்கு மாகாணத்தில் மேற்குறிப்பிட்ட திகதிகளில் இடம்பெற்ற உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் (1) மாநகரசபை, (3) நகரசபைகள், (29) பிரதேச சபைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இவற்றில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் (45) உறுப்பினர்களைப் பெற்று (1) நகர சபையினையும் (6) பிரதேச சபைகளையும் கைப்பற்றியுள்ளனர். அதேவேளை கிழக்கில் மொத்தமாக வாக்களித்த வாக்காளர்களின் எண்ணிக்கையான (394,293) வாக்குகளில் (54,542) வாக்குகளை மட்டுமே த.தே.கூட்டமைப்பினர் பெற்ற நிலையில் இத்தொகை அளிக்கப்பட்ட வாக்குகளில் (13.82%)மான வாக்குகளை மட்டுமே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெற்றுள்ளனர்



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அரசக்கு எதிரான போர்க்குற்ற விசாரணையும், வடமாகாண மக்கள் வழங்கிய தீர்ப்பும்

இலங்கை அரசுக்கு எதிரான போர்க்குற்ற விசாரணை சர்வதேச தடைகள் போன்ற கோசங்கள் எல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வுக்கான காத்திரமான பங்களிப்பை வழங்கப்போவது இல்லை. இலங்கை அரசுக்கெதிரான போர்குற்ற விசாரணை கோசத்தை பலவீனப்படுத்தியது தமிழ் தேசிய கூட்டமைப்பு தான். எவ்வாறு எனில் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகாவை ஆதரித்ததன் மூலம் யுத்த கால இராணுவத் தளபதியும், இராணுவமும் போர்குற்றம் புரியவில்லை என்பதை அவருக்கு பெற்றுக்கொடுத்த வாக்குகளின் ஊடாக (ரீ.என்.ஏ) தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டது, இராணுவதளபதியும், இராணுவமும் போர்குற்றம் புரியவில்லை என்றால் போர் குற்றம் புரிந்தது யார்? பாதுகாப்பு அமைச்சருமான ஜனாதிபதியும், பாதுகாப்பு செயலாளருமா? இவ்விடயத்திற்கு கூட்டணியினர் கூறும் பதில் என்ன? இலங்கைக்கு எதிரான போர் குற்ற விசாரனை கோசமானது இலங்கையில் மேற்கத்திய நாடுகளின் சுரண்டலுக்கு ஒத்துழைப்பு நல்கி அவர்கள் போடும் பிச்சையில் இலங்கை மக்களை வாழவைப்பதற்கான முயற்சியே தவிர தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கான முயற்சி அல்ல.

அமெரிக்க, மற்றும் பிரித்தானியா போன்ற மேற்கத்திய நாடுகளின் கேந்திர நலனுக்கான களமாக இலங்கை மாறி விட்டால் போர்குற்ற கோசமானது புஸ்வாணம் ஆகிவிடும். முதலாளித்துவ மேலாதிக்க, பிராந்திய ஏகாதிபத்திய போட்டியில் இலங்கைக்குள் அமெரிக்கா நுழைவதற்காகவே போர்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல் கோஸங்களெல்லாம் எழுப்பப்படுகின்றது. இஸ்ரேல் மேற்கொள்ளாத மனித உரிமை மீறலா? அமெரிக்கா தனது நலனுக்காக இன்று வரை அதனை பாதுகாத்து வருகின்றதே அது ஏன்?. உலகின் எந்தவொரு நாட்டிலேனும் அமெரிக்காவை நுழையாவிட்டால் நாடு அழிவுப்பாதைக்குச் சென்றதாக வரலாறு உண்டே தவிர அபிவிருத்தி அடைந்ததாக வரலாறு கிடையாது.

வியாபார ரீதியிலான ஒரு போராட்டத்தின் கருத்துக்களோ, செயற்பாடுகளோ மக்களின் இன்றைய தேவை அல்ல. புலிகளின் ஆயுத ரீதியான



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமானது இறுதிக்கட்டத்தில் வணிகமயப்படுத்தப்பட்டதுதான் உண்மை. புலிகளின் போராட்ட சித்தாந்தங்களான தனி ஈழம், தியாகம், அர்ப்பணிப்பு போன்ற கோட்பாடுகள் புலிகளுக்குள்ளேயே தோற்கடிக்கப்பட்டது. இறுதிக் கட்டத்தில் புலிகளின் முக்கிய தலைவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான புலி உறுப்பினர்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தமை, முள்ளிவாய்க்காலுக்கு பின்னர் இதுவரை ஒரு துப்பாக்கி சன்னமாவது வெடிக்காமை போன்றன புலிகளின் போராட்டம் உணர்வு ரீதியானது அல்ல என்பதை கட்டியம் கூறுகின்றது.

மக்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளை நன்கு உணர்ந்து வணிக ரீதியிலான போராட்டத்தின் குரல்களாக ஒலிப்பதை விட குறைந்த பட்ச தீர்வுக்காகவேனும் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒன்று படவேண்டிய காலம் இது. அவ்வாறு நோக்கின் காணி, நிர்வாக அதிகாரங்களுடனான மாகாண சபை முறைமை குறைந்தபட்ச தீர்வுக்கான சிறந்த தெரிவாகும். அண்மைய டெல்லி மாநாடு போலவும், அமெரிக்க, கனடிய மற்றும் ஐரோப்பிய பயணங்கள் போலவும் தமிழ் கட்சிகள் மீண்டும் வார்த்தை ஜாலங்களுக்காகவோ, தென்னிலங்கை ஐயப்படும் சொற்பதங்களுக்காகவோ தங்களுக்குள் முரண்படுவதை தவிர்க்க வேண்டும். அத்துடன் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இலங்கை அரசாங்கத்துடன் பேசித்தீர்க்கப்பட வேண்டிய ஒன்றென்பதையும், இதில் இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தின் பங்கு தங்களின் பிராந்திய நலனை தாண்டி உதவாது என்பதையும் அரசியல் கட்சிகளை தாண்டி மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காக ஊடகங்கள் நடுநிலையானவர்களின் கருத்துகளுக்கும் விமர்சனங்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

## வடமாகாணத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெற்ற வாக்குகளும் (17.03.2011)

| சபைகளின் பெயர் | பெ.வாக்குகள் | வாக்களித்தவர்கள் | மொ.வாக்காளர்கள் |
|---|---|---|---|
| வவுனியா வடக்கு பி.சபை | 2253 | 4878 | 10,955 |
| செ.செட்டிகுளம் பி.சபை | 3587 | 8068 | 18,925 |
| வவுனியா தெற்கு பி.சபை தமிழ் | 11,878 | 21,428 | 48,477 |
| வவுனியா தெற்கு சிங்களம் | 00 | | 9,633 |
| முல்லைத்தீவு மாந்தை கிழக்கு | 1223 | 2,348 | 5,578 |
| | 18,941 | 36,722 | 93,568 |



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெற்ற வாக்குகளும் (23.07.2011)

| சபைகளின் பெயர் | பெ.வாக்குகள் | வாக்களித்தவர்கள் | மொ.வாக்காளர்கள் |
|---|---|---|---|
| வல்வெட்டித்துறை ந.சபை | 2416 | 3394 | 5,550 |
| பருத்தித்துறை | 3263 | 4763 | 7,376 |
| சாவகச்சேரி | 4307 | 5952 | 10,987 |
| காரைநகர் | 1781 | 4705 | 8,140 |
| ஊர்காவற்றுறை | 805 | 3998 | 6,349 |
| நெடுந்தீவு | 216 | 2010 | 3,085 |
| வேலணை | 3,973 | 6947 | 12,028 |
| வலிகாமம் மேற்கு | 12,117 | 17,636 | 30,214 |
| வலி வடக்கு | 12,065 | 18,705 | 63,224 |
| வலி தென் மேற்கு | 11,954 | 18,369 | 31,022 |
| வலி தெற்கு | 12,895 | 19,031 | 32,857 |
| வலி கிழக்கு | 16,763 | 25,840 | 46,570 |
| வடமராச்சி தென் மேற்கு | 12,454 | 16,674 | 32,539 |
| பருத்தித்துறை பி.சபை | 8,938 | 13,181 | 25,375 |
| சாவகச்சேரி பி.சபை | 12,565 | 18,232 | 37,015 |
| நல்லூர் பி.சபை | 10,207 | 13,257 | 22,012 |
| கரச்சி பி.சபை | 18,609 | 28,068 | 42,800 |
| மொத்த வாக்குகள் | 186,940 | 220,764 | 417,143 |
| 17.03.2011–23.07.2011 | | | |
| மொத்தம் | 205,881 | | |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | | | |
| கிளிநொச்சி பி.சபை | 1650 | 3,291 | |
| பூநகரி பி.சபை | 3827 | 8,469 | |
| மொத்தம் | 5477 | 11,760 | |

26.01.2010ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களான திரு.மஹிந்த ராஜபக்ஸ மற்றும் திரு.சரத் பொன்சேகா ஆகிய இரு பெரும்பான்மை இனத்தவர்களும் பெற்ற வாக்குகளைவிட குறைவான வாக்குகளையே தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பெற்றுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதி வேட்பாளர்கள் இருவரும் 357,138 வாக்குகளையும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 205,881 வாக்குகளையும் பெற்ற நிலையில் மக்கள் மத்தியில் அரசியல் மாற்றம் என்ன என்பதனை



படிப்பகம்

www.padippakam.com

வாசகர்களே தீர்மானிக்கலாம். அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் முன்வைக்கப்படும் யுத்தமீறல்கள் தொடர்பில் மக்களின் மன நிலை எதனை தீர்மானித்துள்ளது.

## விடுதலைப் போராட்டம் என்னும் பெயரில் பலிகொள் ளப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரின் மாவட்டரீதியான எண்ணிக்கை

| மாவட்டம் | மக்கள் தொகை | பலியானோர் | விகிதம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 812,247 | 6,533 | 0.8% |
| வன்னி | 73,133 | 2,535 | 3.46% |
| முல்லைத்தீவு | 93,510 | 1,300 | 1.39% |
| மன்னார் | 69,710 | 1,042 | 1.49% |
| திருகோணமலை | 93,500 | 1,489 | 1.59% |
| மட்டக்களப்பு | 238,216 | | |
| | | 4,582+1,269 | 2.45% |
| அம்பாறை | 78,315 | 298 | 1.43% |
| | | 1,117 | |

அம்பாறை மாவட்டத்தில் 298 போராளிகள் மட்டுமே கொல்லப்பட்டதாக விடுதலைப் புலிகள் தமது அறிக்கையில் தெரிவித்திருந்தனர். அதேவேளை 1,117 போராளிகள் கொல்லப்பட்டமையை உறுதிப்படுத்தியதற்கமைய அவர்களுக்கான தீபங்கள் கஞ்சிக்குடியாற்று மாவீரர் கல்லறையில் 29.11.2002ல் ஏற்றப்பட்டது. இச்செய்தியினை வீரகேசரி தனது 30.11.2002 இதழில் வெளியிட்டிருந்தது.

1981 ம் ஆண்டு இடம்பெற்ற குடிசனமதிப்பீட்டின்போது கிளிநொச்சி மாவட்டம் உருவாக்கப்படாத நிலையில் அப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்களின் எண்ணிக்கை யாழ் மாவட்டத்துடனேயே இணைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் வன்னியில் பலியானவர்களில் பெரும்பாலானவர்கள் மலையக தமிழ்மக்களின் வாரிசுகள் என்பது முக்கியமானதாகும்.

| வடக்கு | மொத்தம் | தமிழர் | சிங்களவர் | முஸ்லிம்கள் | இந்-தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 831,112 | 792,246 | 4,615 | 13,757 | 20,001 | 493 |
| மன்னார் | 109,940 | 54,106 | 8,710 | 28,464 | 14,072 | 1.588 |
| வவுனியா | 95,904 | 54,541 | 15,876 | 6,640 | 18,592 | 255 |
| முல்லைத்தீவு | 77,512 | 58,904 | 3,948 | 3,777 | 10,766 | 117 |
| மொத்தம் | 1,111,468 | 969,797 | 33,149 | 52,638 | 63,431 | 2,453 |
| விகிதம் | 100% | 86.35% | 2.98% | 4.73% | 5,71% | 0.23% |



படிப்பகம்

www.padippakam.com

| கிழக்கு | மொத்தம் | தமிழர் | சிங்களவர் | முஸ்லிம்கள் | இந்–தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| திருமலை | 256,790 | 86,743 | 86,341 | 74,304 | 6,767 | 2.536 |
| மட்டுநகர் | 330,899 | 234,348 | 10,646 | 79,317 | 3,868 | 2,720 |
| அம்பாறை | 388,786 | 78,315 | 146,371 | 161,481 | 1,410 | 1,209 |
| மொத்தம் | 976,475 | 399,406 | 243,358 | 315,201 | 12,045 | 6,465 |
| | 100% | 40.90% | 24.92% | 32.28% | 1.24% | 0.66% |

கருணா அம்மானின் பிரிவிற்குப் பின்னர் (2004.03.04) பிரபாகரனின் கட்டளைக்கமைய வாகரையில் 10.04.2004ல் ஆரம்பிக்கப்பட்ட படுகொலை 10.03.2008 வரை 315+272= 587 கிழக்கு போராளிகளை பலிகொண்டது. அத்துடன் வன்னியில் தொடரும் ஆயுத நடவடிக்கையில் பலியான கிழக்கு மாகாண இளைஞர்கள், யுவதிகளின் எண்ணிக்கை 2004.03.04 முதல் 01.04.2008 வரை 632 பேர் இந்நிலையில் 04.03.2004 முதல் 01.04.2008 வரை பிரபாகரனின் கட்டளைக்கமையவும், வன்னியைக் காப்பாற்றவும் பலியான கிழக்கு மைந்தர்களின் எண்ணிக்கை 1219.

1982 நவம்பர் 27 முதல் 01.04.2008 வரை பலியான கிழக்கு மாகாண இளைஞர்களினதும், யுவதிகளினதும் எண்ணிக்கை 8457 கிழக்கு மாகாண மொத்த தமிழ் மக்களின் எண்ணிக்கை 410,031 (2.06%).

1982 நவம்பர் 27 முதல் 10.11.2004 வரை பலியான வட மாகாண இளைஞர்களினதும், யுவதிகளினதும் எண்ணிக்கை 11,410 வடமாகாண மக்களின் எண்ணிக்கை 1,048,600 (1.08%).

மேற்படி புள்ளிவிபரங்களுக்கமைய ஒவ்வொரு மாகாணங்களிலும் வாழும் மக்கள் தொகை கணக்கீட்டிற்கமைய வட மாகாணத்தில் வாழ்ந்த 1,048,600 மக்களில் ஆயுதப் போராட்டத்திற்கு 1.08% மானவர்கள் பங்களித்துள்ள அதேவேளை கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த மக்களில் (410.031) 2.06% மானவர்கள் தமது பங்களிப்பினை வழங்கி உயிர்களை பலிகொடுத்துள்ளனர்.

இந்நிலையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டதன் பின்னரும் (22.02.2002) தொடர்ந்து சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்பாத பிரபாகரன் படையணியில் இளைஞர்களை சேர்ப்பதிலும், ஆயுத இறக்குமதியிலுமே தனது முழுமையான நடவடிக்கைகளையும் முன்னெடுத்தார். படையணியில் இளைஞர்களை இணைப்பதில்



படிப்பகம்

www.padippakam.com

வடமாகாணத்தில் வாழ்ந்த தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் இளைய தலைமுறையினர் உட்பட மேற்குலக நாடுகளுக்கு ஏற்கனவேயே புலம் பெயர்ந்துவிட்டமையால் கிழக்கு மாகாண இளைஞர்களையும், யுவதிகளையுமே பலிகொள்வதற்கான நிலைக்கு அவர்கள் உள்ளாக்கப் பட்டார்கள். அதற்கமைய புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான பின்னர் கிழக்கிலிருந்து குறைந்தபட்சம் 1000 இளைஞர்களை படையணியில் இணைப்பதற்கு வன்னிக்கு அழைத்துவருமாறு கருணா அம்மானுக்கு பிரபாகரன் கட்டளையிட்டார். இதுவிடயம் கருணா அம்மானுக்கும், பிரபாகரனுக்குமிடையிலான முரண்பாடு உருவானதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைந்தது.

அடுத்து வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தினை மேற்கொள் வதற்கென அமைக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் 32 பேர் நியமிக்கப்பட்டார்கள். இதுவிடயம் பிரபாகரன் தலைமையிலான புலிகள் அமைப்பின் முழுமையான யாழ் மேலாதிக்க அதிகார ஆளுமையை வெளிக்காட்டியது. இதுவிடயமும் புலிகள் அமைப்பில் 21 வருடகாலமாக பணியாற்றி பலதரப்பட்ட ராணுவ தாக்குதல் தொடர்பான வெற்றிகளை உருவாக்கிய கருணா அம்மானின் பிரிவிற்கு வழிகோலியது.

கீழே விபரிக்கப்பட்டுள்ள அறிக்கை புலிகளினால் ஈழம் வெப் என்னும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

Since 1982 November 27 to 2004 November 10: 17,780
[Jeyasikurui: 2,146; Unceasing Wave .Three.: 1,336]

| THAMIZH EEZHAM | TOTAL | | BLACK TIGERS | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | Land | | Sea | |
| | Male | Female | Male | Female | Male | Female |
| Jaffna . [6533] | 4,802 | 1,731 | 19 | 12 | 68 | 41 |
| Batti.-Amparai [4,582] | 4,142 | 440 | 25 | 2 | 22 | - |
| Vanni - [2,535] | 1,766 | 769 | 6 | 2 | 14 | 3 |
| Trincomalee [1,489] | 1,328 | 161 | 4 | - | 10 | 3 |
| Mullaithivu [1,300] | 910 | 390 | - | 1 | 8 | 2 |
| Mannar [1,042] | 811 | 231 | 4 | 1 | 9 | 1 |
| Others[299] | 235 | 64 | 3 | - | 2 | 1 |



படிப்பகம்

www.padippakam.com

## விடுதலைப் புலிகளின் ஆக்கிரமிப்பிலிருந்த கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டதும் வன்னி மாவட்டம் விடுவிக்கப்பட்டதற்குமிடையிலான வேறுபாடு என்ன?

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு.பிரபாகரன் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆட்சியில் அமர்ந்திருந்த அனைத்து அரசாங்கங் களுடனான போர் நிறுத்த உடன்படிக்கைகளும். கிழக்கு மாகாணத்தில் வன்முறைகளை முன்னெடுத்த நிலையிலேயே மீறப்பட்டன. இதனால் கிழக்கில் வாழ்ந்த பலநூறு அப்பாவி மக்களின் உயிர்கள் பலிகொள்ளப்பட்டதுடன் பொருளாதார ரீதியான பாரிய இழப்புக்களும் அம்மக்களுக்கு உருவானது. இதன் பின்னணியினை உற்று நோக்கும்போது விடுதலைப் போராட்டம் என்னும் பெயரில் ஆரம்பிக்கப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு கிழக்கு மக்களை பலியிடுவதன் மூலம் வடக்கு மக்களை பாதுகாக்க முடியுமென அவர் கண்ட கனவு கானல் நீராகியது.

1. பிரேமதாசா – புலிகள் உடன்படிக்கை (26.04.1989) 10.06.1990ல் மட்டுநகர் பொலீஸ்நிலைய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு கிழக்கில் 700 வரையான பொலிசாரும் திரு. வரதராசப்பெருமாள் அவர்களின் தலைமையிலான மாகாண சபை நிர்வாகத்தினரால் வலுக்கட்டாயமாக படையணியில் இணைக்கப்பட்ட 486 கிழக்கு மாகாண இளைஞர்களும் பல நூற்றுக்கணக்கான பொது மக்களும் புலிகளினால் கொல்லப்பட்டார்கள்.

2. சந்திரிகா – புலிகள் உடன்படிக்கை (03.01.1995) 19.04.1995ந் திகதியன்று திருமலை துறைமுகத்தில் தரித்துநின்ற இலங்கை கடற்படைக்குச் சொந்தமான இரு கப்பல்கள் தாக்கப்பட்டு யுத்தநிறுத்தம் மீறப்பட்டது. இச்சம்பவத்தில் 11 கடற்படையினரும் 24 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

3. ரணில் விக்கிரமசிங்கா – புலிகள் உடன்படிக்கை (22.02.2002) 25.06.2002 மூதூர் கலவரம் 5,557 குடும்பங்கள் மூதூரிலிருந்து வெளியேற்றம். முஸ்லிம்களின் விடுகள் 408 தமிழர்களின் வீடுகள் 113 சிங்களவர்களின் வீடுகள் 03 சேதப்படுத்தப்பட்டு. பல மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.



படிப்பகம்

4. திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதனைத் தொடர்ந்து புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. விடுதலைப் புலிகளாலும் அவர்களின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலும் இனவாதிகள் எனப் பட்டம் சூட்டப்பட்ட ஜே.வி.பி மற்றும் ஜாதிஹ ஹெல உறுமய போன்ற அமைப்புக்களுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்த ராஜபக்ஸவால் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் நடாத்தமுடியாதென கனவு கண்ட பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கான அழைப்பு ஒன்றினை அவரது அரசாங்கம் விடுத்தது. அதனை நிராகரித்த பிரபாகரன் யுத்தத்திற்கான அறைகூவலை மஹிந்த ராஜபக்ஸ பதவியேற்று (19.11.2005 – 27.11.2005ல்) அதாவது எட்டு நாட்களில் தமது மாவீரர் உரையின்போது விடுத்தார். இச்சம்பவம் பிரபாகரனின் ஆயுதப் போராட்ட வரலாற்றில் பொல்லைக் கொடுத்து அடி வாங்கும் அறை கூவலாக அமைந்தது.

5. அதனைத் தொடர்ந்து (21.07.2006ல்) திருமலை மாவட்டத்தின் சேருவில தொகுதியில் அமைந்துள்ள மாபெரும் நீர்ப்பாசன நிலையான மாவில் ஆற்றின் நீர்பாயும் மதகுகளை முழுமையாக மூடிய பிரபாகரனின் ஆயுதாரிகள் ஏறக்குறைய இருபத்தையாயிரம் ஏக்கர் விவசாய காணிகளில் பயிரிடப்பட்ட அனைத்து பயிர்களையும் நாசஞ்செய்தனர். இவ் விடயத்தினை சமாதான முறையில் பேச்சுவார்த்தை நடாத்தி முடிவிற்கு கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டது. அதற்கு சம்மதம் தெரிவிக்காத பிரபாகரனின் படையணிக்கு எதிராக அரசு தனது இராணுவ நடவடிக்கையினை முடுக்கிவிட்டது. அதற்கமைய ஒரு வாரகாலப்பகுதியில் மாவில் ஆற்றின் அணை திறக்கப்பட்டு புலிகளின் ஏராளமான ஆயுதாரிகள் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சியில் இடம்பெற்ற முதலாவது இராணுவ வெற்றியாக கருதப்பட்டது.

தொடர்ந்து கிழக்கு மாகாணத்தினை மீட்பதற்கான இராணுவ நடவடிக்கைகள் 24.02.2007ல் ஆரம்பிக்கப்பட்டு 11.07.2007ல் கிழக்கு மாகாணம் புலிகளின் ஆயுததாரிகள் அற்ற மாகாணமாக நிறைவுகண்டது.

கிழக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது (35,537) குடும்ப

www.padippakam.com

ங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து இருபத்தோராயிரத்து ஐநூற்றித் தொண்ணூற்றொன்பது பொது மக்கள் (121,599) தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறி அகதிகளாக நகர்ப் புறங்களுக்கு இடம்பெயர்ந்தனர். அதேவேளை திருகோணமலை மாவட்டத்திலுள்ள புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலிருந்து (7291) குடும்பங்களைச் சேர்ந்த இருபத்தோராயிரத்து எண்ணூற்றிப் பதினொரு பேர் (21,811) மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர். இவர்களில் (6,621) குடும்பங்களைச் சேர்ந்த பத்தொன்பதினாயிரத்து ஐநூற்றி எண்பத்தி நான்கு பேர் (19,584) மீளக் குடியேறிவிட்ட நிலையில் மூதூர் கிழக்கு உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள (677) குடும்பங்களைச் சேர்ந்த பலரும் படிப்படியாக அங்கிருந்து தமது சொந்த இடங்களுக்கு இடம்பெயரும் அதேவேளை ஒரு சாரார் அங்கேயே நிரந்தரமாக தங்கியுள்ளனர். ஏனையவர்களில் 135 குடும்பங்களைச் சேர்ந்த (469) பேர் கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமில் தொடர்ந்தும் வாழ்கின்றனர்.



அன்பு, கருணை, மனித நேயம் போன்ற மகத்தான போதனைகளைப் போதிக்க வேண்டிய கிறஸ்தவ மத குருமார்கள் இலங்கையில் பயங்கரவாதத்தினை ஊக்குவிப்பதற்காக தமக்கு வழங்கப்பட்ட பணிகளைப் பாவித்துள்ளமையை இங்கு வாசகர்கள் அறியலாம். இவர்களைப் போன்றவர்களினால் தான் மேற்குலக நாடுகளின் பொலரும், ஸ்ரேலிங் பவுண்களும் இலங்கைக்குள் நுழைந்து பயங்கரவாதத்தினை வளர்த்தமைக்கான சான்றுகள் இவையாகும்.

கிழக்கு மாகாணத்தில் புலிகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது ஏறக்குறைய (213,000) பேர் இடம்பெயர்ந்தபோது எத்தனை பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். நூறு பேர்கூட கொல்லப்படாத நிலையில் வடக்கில் மட்டும் ஏன் பெருந்தொகையான மக்கள் கொல்லப்பட்டதாக புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினரும் வடமாகாணத்தினைத் தலைமையாகக் கொண்ட ஏனைய உதிரிக் கட்சிகளும் கிறிஸ்தவ பாதிரியார்களும் ஓலமிடுவதன் பின்னணி என்ன?



படிப்பகம்

பயங்கரவாதிகளான விடுதலைப் புலிகள் தமக்கான பாதுகாப்பு கேடயமாக பொதுமக்களை பயன்படுத்தாது அவர்களை சுதந்திரமாக வெளியேற அனுமதித்திருந்தால் ஒரு நூறு பேர் கூட மரணிக்க வேண்டிய நிலை உருவாகியிருக்காது என்பது உறுதியானதே!.

அங்கு பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள் என்பதனை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் ஐம்பதினாயிரம் பேர் நாற்பதினாயிரம் பேர் எனக் கூறுபவர்களால் ஒரு நாலாயிரம் பேரினுடைய பெயர்களைக்கூட வெளியிட முடியாது போனமைக்கான காரணமென்ன? புலிகளின் பினாமி அமைப்பான தமிழ் தேசியக் கூட்டமைப்பினருக்கு மக்களின் மரணம் என்பது ஒரு தீனி. அத்துடன் மக்களின் மரணம்தான் அவர்களின் அரசியலுக்கான முதலீடு. மேலே எம்மால் குறிப்பிடப்பட்டவர்கள் எவரேனும் கொல்லப்பட்ட மக்களின் பெயர்களை வெளியிட முன்வருவார்களா? அவ்வாறான செயல்களை மக்கள் மத்தியில் வெவளிக்காட்டுபவர்கள் மட்டுமே மக்களுக்காக குரல் கொடுப்பவர்களாகும். ஏனைய அனைவரும் வெந்த வீட்டில் திருடுகின்ற திருட்டுக் கனவான்கள் என்பதே யதார்த்தமாகும்.

●

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கிழக்கின் சுயாட்சி தனித்துவம் அரசியல் அதிகாரம்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

## கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆட்சி அதிகாரம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இடம் பெற்ற உள்ளூராட்சித் தேர்தல்.

கிழக்கு மாகாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் முழுமையாக ஒழிக்கப்பட்டதற்கிணங்க அங்கு உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் (10.03.2008ல்) இடம்பெற்றது. இந்நிலையில் கீரியும் பாம்புமாக ஏற்கனவே அரசியல் நடாத்திக்கொண்டிடிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி மற்றும் புளொட் ஆகிய வடமாகாண மேலாதிக்க அரசியல் கட்சிகள் அவசர அவசரமாக ஒன்றிணைந்து ஈழவர் ஐக்கிய முன்னணி என்னும் புதிய கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கி அங்கு தேர்தலில் களமிறங்கினர். அவர்கள் தவிர ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினரும் களமிறங்கினர். அதேவேளை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அக்கட்சியின் தலைவரான திரு.சந்திரகாந்தன் அவர்களின் தலைமையில் முதல் தடவையாக களமிறங்கினர். இந்நிலையில் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்தது.

| பி.சபைகள் | பெற்ற வாக்குகள் | உறுப்பினர்கள் |
|---|---|---|
| **கோறளைப்பற்று வடக்கு** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7331 | 10 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 528 | 01 |
| சுயேச்சை குழு | 454 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 335 | 0 |
| ஜாதிக சங்வர்தன பெரமுன | 52 | 0 |
| செல்லுபடியானவை | 8716 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1165 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 868 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 12,419 | |
| **போரதீவுப்பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 7089 | 07 |
| சுயேச்சை குழு | 3051 | 02 |
| செல்லுபடியானவை | 10,140 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2,660 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 2,800 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 28,116 | |

www.padippakam.com

| | | |
|---|---|---|
| **மண்முனை தெற்கு எருவில்பற்று பி.சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 10,017 | 07 |
| சுயேச்சை குழு | 5013 | 03 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 194 | 0 |
| ஜாதிக சங்விதான பெரமுன | 193 | 0 |
| செல்லுபடியானவை | 16,048 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2454 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 18,502 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 38,386 | |
| **மண்முனை தென் மேற்கு பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 6371 | 08 |
| சுயேச்சை குழு | 1401 | 01 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 88 | 0 |
| செல்லுபடியானவை | 7860 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1852 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 9712 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 14,880 | |
| **மண்முனை பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 9373 | 07 |
| ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் | 2816 | 02 |
| சுயேச்சை குழு 1 | 510 | 0 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 336 | 0 |
| தேசிய காஙகிரஸ் | 70 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 29 | 0 |
| சுயேச்சை குழு 3 | 8 | 0 |
| சுயேச்சை குழு 2 | 6 | 0 |
| செல்லுபடியானவை | 13,158 | |
| நிராகரிக்கப்பட்டவை | 856 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 14,014 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 18,759 | |
| **ஏறாவூர் பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 15,851 | 10 |
| ஸ்ரீ.ல.மு காஙகிரஸ் | 3479 | 02 |
| சுயேச்சை குழு 1 | 2483 | 01 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | | 01 |
| சுயேச்சை குழு 5 | 281 | 0 |
| ஜாதிக சங்விதான பொமுன | 154 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 100 | 0 |
| சுயேச்சை குழு 2 | 31 | 0 |



படிப்பகம்

| | | |
|---|---|---|
| சுயேச்சை குழு 3 | 24 | 0 |
| சுயேச்சை குழு 4 | 15 | 0 |
| செல்லுபடியானவை | 24,904 | |
| நிராகரிக்கப்பட்டவை | 3,245 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 28,149 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 45,336 | |
| **கோறளைப்பற்று பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 12,299 | 06 |
| ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் | 5218 | 02 |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 4549 | 03 |
| சுயேச்சை குழு 1 | 2820 | 01 |
| சுயேச்சை குழு 3 | 948 | 0 |
| சுயேச்சை குழு 2 | 213 | 0 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 125 | 0 |
| சுயேச்சை குழு 5 | 35 | 0 |
| சுயேச்சை குழு 4 | 27 | 0 |
| செல்லுபடியானவை | 25,934 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2922 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 28,856 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 41,856 | |
| **மண்முனை மேற்கு பிரதேச சபை** | | |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் | 4644 | 06 |
| சுயேச்சை குழு 1 | 3981 | 03 |
| சுயேச்சை குழு 2 | 163 | 0 |
| இழவர் ஐக்கிய முன்னணி | 98 | 0 |
| செல்லுபடியானவை | 8886 | |
| நிராகரிக்கப்பட்டவை | 1796 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 10,682 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 15,771 | |
| **மட்டக்களப்பு மா நகர சபை** | | |
| பொதுஜன ஐக்கிய முன்னணி | 14,158 | 11 |
| சுயேச்சை குழு 1 | 9602 | 06 |
| ஸ்ரீ.ல.மு காங்கிரஸ் | 1788 | 01 |
| ஈழவர் ஐக்கிய முன்னணி | 437 | 01 |
| ஜாதிக சங்விதான பெரமுன | 291 | 0 |
| சுயேச்சை குழு 3 | 43 | 0 |
| சுயேச்சை குழு 2 | 23 | 0 |
| செல்லுபடியானவை | 26,331 | |
| நிராகரிக்கப்பட்டவை | 2822 | |
| அளிக்கப்பட்ட மொ.வாக்குகள் | 29,153 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் | 54,948 | |

www.padippakam.com

இங்கு தமிழீழ விடுதலைப் புலிகளினால் படுகொலை செய்யப்பட்ட அரசியல்வாதிகளினதும், அரசாங்க உத்தியோகஸ்தர்களினதும். மதகுருமார்களினதும் பெயர்கள் மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தவிர சர்வதேசப் புகழ்பெற்ற ஆங்கில மொழியிலான இலத்திரனியல் ஊடகங்களில் ஒன்றான (wikipedia.org) வெளியிட்டுள்ள அறிக்கைகளுக்கமைய 6796 அப்பாவி தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பொதுமக்கள் விடுதலைப் புலிகளினால் கொல்லப்பட்டுள்ளமைய திகதி, இடம் எவ்வாறு கொல்லப்பட்டார்கள் என்பது போன்ற சகல விபரங்களுடனும் தெளிவான அறிக்கையினை பிரசுரித்துள்ளனர். அவை தவிர மேலும் பல நூறு பொது மக்கள் கொல்லப்பட்டதற்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. அவை அனைத்தையும் வெளியிடுவதானால் அதற்காக நாம் மேலும் பல நூறு பக்கங்களை எழுதவேண்டியமையால் அவற்றினை தவிர்த்துள்ளோம். இவை தவிர அரச படைகளினால் கொல்லப்பட்டவர்களின் பட்டியலுக்கமைய ஐ.தே.கட்சியினரின் ஆட்சிக்காலமான 1977 முதல் 1993 வரை 1668 பொதுமக்களும் பொ.ஐ.ஐக்கிய முன்னணியினரின் ஆட்சிக்காலத்தில் 245 பேரும் ஐ.ம.சு கூட்டமைப்பின் ஆட்சியில் மே மாதம் 19ந் 2009திகதி வரை 534 பேரும் வன்னி மீட்பின்போது புலிகளின் ஆயுததாரிகள் உட்பட 8998 பெரும் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப் புலிகளினால் படுகாலைசெய்யப்பட்ட அரசியல்வாதிகள்.

| பெயர் | அரசியல் கட்சி | பதவி | கொல்லப்பட்ட திகதி |
|---|---|---|---|
| திரு.ராஜீவ் காந்தி | இந்தியப் பிரதமர் | | 21.05.1991 |
| திரு.ஆர்.பிரேமதாசா | ஜனாதிபதி | ஸ்ரீ லங்கா | 01.05.1993 |
| திரு.பொன் சிவபாலன் | மேயர் | யாழ்ப்பாணம் | 11.09.1998 |
| திருமதி. யோகேவரன் | மேயர் | யாழ்ப்பாணம் | 17.05..1998 |
| திரு.ஏ.ரீ துரையப்பா | ஸ்ரீ.ல.சு.கட்சி | யாழ் மேயர் | 27.05.1975 |
| திரு.லக்ஸ்மன் கதிர்காமர் | பொ.ஐ.முன்னணி | அமைச்சர் | 12.08.2005 |
| திரு.ஏ.தியாகராஜா | அ.இ.த.காங்கிரஸ் | பா.உ | 24.01.1981 |
| திரு.மாலா இராமச்சந்திரன் | ஐ.தே.கட்சி | மட்டு மாநகர உறுப்பினர் | 01.09.1983 |
| திரு.எஸ். சம்பந்தமூர்த்தி | த.வி.கூட்டணி | மட்டுநகர் வேட்பாளர் | 07.03.1989 |
| திரு.ஏ. அமிர்தலிங்கம் | பா.உ | த.வி.கூட்டணி | 13.07.1989 |



படிப்பகம்

| | | | |
|---|---|---|---|
| திரு.வி.யோகேஸ்வரன் | பா.உ (முன்னாள்) | த.வி.கூட்டணி | 13.07.1989 |
| திரு.சாம் தம்பிமுத்து | பா.உ | ஈ.பி.ஆர்.எல்.எப் | 11.05.1990 |
| திருமதி.கலா தம்பிமுத்து | மனைவி | 11.05.1990 | |
| திரு.ஜி.யோகசங்கரி | பா.உ | ஈ.பி.ஆர்.எல்.எப் | 19.06.1990 |
| திரு.ஏ.தங்கத்துரை | பா.உ | த.வி.கூட்டணி | 05.07.1997 |
| திருமதி.ராஜேஸ்வரி தனபாலசிங்கம் | பாடசாலை அதிபர் | | 05.07.1997 |
| திரு.சீவரெத்தினம் | ஆசிரியர் | | 05.07.1997 |
| திரு.யோசப் | ஆசிரியர் | | 05.07.1997 |
| திரு.பி.எ.கணேசலிங்கம் | சமூகசேவை உத்தியோகஸ்தர் | | 05.07.1997 |
| திரு.வி.ரத்தினராசா | தொழில் நுட்பவியலாளர் | | 05.07.1997 |
| திரு.சி.கனகரெத்தினம் | த.அ.கட்சி | | 27.01.1978 |
| திரு.எ.சண்முகநாதன் | பா.உ | புளொட் | 15.07.1998 |
| ஜனாப்.ஏ.எல் அப்துல் மஜீத் | அமைச்சர் | ஸ்ரீ.ல.சு.கட்சி | 13.11.1987 |
| ஜனாப்.எம்.எச்.எம் அஸ்ரப் | அமைச்சர் | பொ.ச.ஐ.முன்னணி | 16.10.2000 |
| ஜனாப்.எம்.ஈ.எச் மஹ்ரூப் | பா.உ | ஐ.தே.கட்சி | 20.07.1997 |
| ஜனாப்.ஏ.எல்.எம் பலீல் | உ.அ.அதிபர் | காத்தான்குடி | 04.12.2005 |
| ஜனாப் ஹபீப் முகம்மது | உ.அ அதிபர் | மூதூர் | 03.09.1987 |
| திரு.சிறி சபாரெத்தினம் | ரெலோ தலைவர் | யாழ்ப்பாணம் | 05..05.1986 |
| திரு.ரீ.மகேஸ்வரன் | பா.உ | ஐ.தே.முன்னணி | 01.01.2008 |
| திரு.கே.ரீ புலேந்திரன் | அமைப்பாளர் | ஐ.தே.கட்சி | 19.001..1983 |
| திரு.ஏ. ராஜூரியர் | அமைப்பாளர் | ஐ.தே.கட்சி | 12..08.1983 |
| திரு.கே.பத்மநாபா கோடம்பாக்கம் சென்னை | தலைவர் 19.06..1990 | பி.ஆர்.எல்.எப் | |
| திரு.மாணிக்கம் தாசன் | இராணுவ கமாண்டர் | புளொட் | 02.09.1999 |
| திரு. மனோ மாஸ்ரர் | பொதுச் செயலாளர் | ஈ.என்.டி.எல்.எப் | 21.11.2004 |
| திரு.கே.யோகராசா | புளொட் மோகன் | | 31.07.2004 |
| திரு.சகாதேவன்.நிலக்சன் | பத்திரிகை ஆசிரியர் | சோளராம் கொக்குவில் | 06.08.2007 |
| செல்வி. தியாகராசா | தோளி சஞ்சிகை | யாழ்ப்பாணம் | 1997 |
| திரு.ஆர்.பிரேமதாசா | ஜனாதிபதி | ஐ.தே.கட்சி | 01.05.1991 |
| திரு.லலித் அத்துலத்முதலி | பா.உ | ஜ.ஐ.தே.முன்னணி | 23.04.1993 |
| திரு.காமினி திசாநாயக்கா | பா.உ | ஐ.தே.கட்சி | 24.10.1994 |
| திரு.ஓசி.அபேகுணசேகர | பா.உ | ஐ.தே.கட்சி | 24.10.1994 |
| திரு.என்.எஸ்.எல்லாவெல | பா.உ | பொ.ஐ.ஐ.முன்னணி | 11.02.1997 |
| திரு.சி.வி.குணரத்ன | பா.உ | பா.ஐ.ஐ.முன்னணி | 07.6.2000 |
| திரு.ஜெயராஜ் பெர்னாண்டாபுள்ளே | பா.உ | ஐ.ம.சு.கூட்டமைப்பு | 06.04.2008 |
| திரு.டி.எம் திசாநாயக்க | அமைச்சர் | ஐ.ம.சு கூட்டமைப்பு | 08.01.2008 |

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| திரு.காமினி திசாநாயக | அமைச்சர் | ஐ.தே.கட்சி | 24.10.1994 |
| திரு.வீரசிங்க மல்லிமாராச்சி | அமைச்சர் | ஐ.தே.கட்சி | 24.10.11004 |
| திரு.எம் பிரேமச்சந்திர | அமைச்ச்சர் | ஐ.தே.கட்சி | 24.10.1994 |
| திரு.ரஞ்சன் விஜேரத்ன | பாதுகாப்பு அமைச்சர் | ஐ.தே.கட்சி | 02.003.1991 |
| திரு.மிகால்.டி.சில்வா | ஆசிரியர் | | 27.05.2006 |
| பௌத்த மதகுருமார | | | |
| வண வகமூன | | | |
| சுபதாலங்கார தேரர் | பௌத்த மதகுரு | ஆண்டாங்குளம் | 04.06.1986 |
| வண.கடுங்கமுவ.நந்தாரத்ன | பௌத்த மதகுரு | மொரவெவ | 14.05.2007 |
| சிறீ.சீலங்கார நாயகதோரோ | பௌத்த மத்குரு | திம்புலாகல | 26.05.1995 |
| வண.சுபத்தாலங்கார.தேரர் | பௌத்த மதகுரு | ஆண்டாங்குளம் | 04.06.1986 |
| வண கீதலகம சிறீ | | | |
| சீலலங்கார நாயக் தேரர் | பௌத்த மதகுரு | திம்முலாகல | 26..05.1995 |
| வண பிதா நிகொலாஸ் பிள்ளே | கத்தோலிக்க மதகுரு | கல்விளான் மன்னார் | 26.09.2007 |
| திரு.கே.அபேசேகர | தலைமைச்செயலாளர் | கிழ. மாகாண சபை | 16.07.2007 |
| திரு.சுனில் திசாநாயக்க | மா.சபை.உறுப்பினர் | ஐ.தே.கட்சி | |
| | | அநுராதபுரம் | 06.10.2008 |
| திரு.சாந்தகுமார புஞ்சிகேவா | மு.பா.உ (வன்னி) | ஐ.தே.கட்சி | 06.10.2008 |
| திரு.ஞானச்சந்திரன் | அரசாங்க அதிபர் | முல்லைத்தீவு | 24.02.1985 |
| திரு.விக்னராசா | உ.அ..அதிபர் | சம்மாந்துறை | 15.09..1987 |
| திரு.அந்தோனிமுத்து | அரசாங்க அதிபர் | மட்டக்களப்பு | 08.10.1987 |
| திரு.சின்னத்துரை | உ.அ.அதிபர் | திருகோணமலை | 31..01.1988 |
| திரு.வி.எம் பஞ்சலிங்கம் | அ.அதிபர் | யாழ்ப்பாணம் | 01.05.1989 |
| திரு.ஏ.ஏ.ஜெகநாதன | உ.அ.அதிபர் | மட்டுநகர் | |
| திரு.என் நந்தகுமார் | உ.அ.அதிபர் | முல்லைத்தீவு | 29..06..2008 |
| திரு.சி..ஆனந்தராசா | அதிபர் | சென்ற் ஜோன் | |
| | | கல்லூரி | |
| | | யாழ்ப்பாணம் | 26.06.1985 |
| திரு.எம்.கந்தசாமி | அதிபர் | பழுகாமம், | |
| | | ம.வித்யாலயம் | 14.12.1987 |
| திரு.ஏ.சிதம்பரநாதன் | அதிபர் | வி.வித்தியாலயம், | |
| | | திருமலை | 31.01.1988 |
| திரு.பி.கே தம்பிப்பிள்ளை | தலைவர் மனித | | |
| | உரிமைகள்அமைப்பு | ஒட்டிசுட்டான் | 22.08.1985 |
| திரு.கதிரமலை | சர்வோதய தலைவர் | | 26.09.1986 |
| திரு.எ..வியநாத்தன் | மாவட்ட செயலாளர் | இ.கம்யூனிச் கட்சி | 08.03.1988 |
| திரு.வேல்முருகு மாஸ்ரர் | த.வி. அமைப்பாளர் | கல்முனை | 20.03.1988 |
| வண பிதா சந்திரா | | | |
| பெர்னாண்டோ | மட்டுநகர் | | 06.06.1988 |

www.padippakam.com

| | | | |
|---|---|---|---|
| சிவசிறீ குணராச குருக்கள் | கோணேசர் கோவில் குருக்கள் | திருமலை | 21.09.2008 |
| செல்லையா.பரமேவர | குருக்கள் பிள்ளையார் கோவில் | சந்திவெளி | 11.02.2007 |
| திரு.மா.ஈஸ்வரன் | முதன்மை தொழில்நுட்பவியலாளர் | நல்லூர் யாழ்ப்பாணம் | 11.09.1998 |
| திரு.பொன் கணேசமூர்த்தி | முகாமையாளர் மக்கள் வங்கி | காங்கேசன்துறை | 04.08.2006 |
| திரு.கேதீஸ் லோகநாதன் | அரசாங்க சமாதானச் செயலர் | கொழும்பு | 12.08.2006 |
| திரு.பி.கிருபாகரன் | நீதிபதி | | 11.03.1986 |
| திருமதி.ரேலங்கி செல்வராசா | தொலைக்காட்சி அறிவிப்பாளர் | கொழும்பு | 12.08.2005 |
| திரு.ஐ.சண்முகலிங்கம் | ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் | யாழ்ப்பாணம் | 06.11.1989 |
| திருமதி.மகேஸ்வரி வேலாயுதம் | சட்டத்தரணி | நவிண்டில் யாழ்ப்பாணம் | 13.05.2008 |
| திரு.சி.நவரெத்தினராசா | ராசிக்குரூப் | மட்டுநகர் | 14.09.2005 |
| திரு.ஏ.ராஜரெத்தினம் | ஐ.தே.கட்சி வேட்பாளர் | வல்வெட்டித் துறை | 29.04.1983 |
| திரு.கே.பி ரத்னசிங்கம் | ஐ.தே.கட்சி அமைப்பாளர் | பருத்தித்துறை | 29.04.1983 |
| திரு.அன்ரன் சிவலிங்கம் | ஈ.பீ.டி.பி | யாழ்ப்பாணம் | 01.03.2000 |
| திரு.கே. வினோதன் | ஸ்ரீ.ல.சு.கட்சி அமைப்பாளர் | யாழ்ப்பாணம் | 28.04.1995 |

| கொலை முயற்சியில்தப்பியவர்கள் | தற்கொலை | திகதி |
|---|---|---|
| திருமதி.சந்திரிகா குமாரணதுங்க | ஜனாதிபதி கொழும்பு | 18.12.1999 |
| திரு.மகிந்த யாப்பா | அமைச்சர் அக்குரஸ்ஸ | 11.03.2009 |
| ஜனாப்.அலி அமீர் | அமைச்சர் அக்குரஸ்ஸ | 11.03.2009 |
| திரு.பண்டு பண்டாரநாயக்க | அமைச்சர் அக்குரஸ்ஸ | 11.03.2009 |
| திரு.நிகால் சிறீபால டி.சில்வா | அமைச்சர் யாழ்ப்பாணம் | 04.07.1996 |
| ஜனாப்.ஏ.எச்.எம் பௌசி | அமைச்சர் அக்குகுரஸ்ஸ | 11.03.2009 |
| திரு.சந்ரசீறி சுயதீர | அமைச்சர் அக்குரசஸ்ஸ | 11.03.2009 |
| திரு.மதிரிபால சிறிசேன | அமைமச்சர் பிலியந்தல | 08.10.2008 |
| திரு.மகிந்த வியேசேகர | அமைச்சர் அகுரஸ்ஸ | 11.03.2009 |
| திரு.கோதபாய ராசபக்ச | பாதுகாப்பு அமைச்சர் கொள்ளுபிட்டிய | 01.12.2006 |
| திரு.சரத் பொன்சேகா | இராணுவ கொமாண்டர் இராணுவ தலைமையகம் | 25.04.2006 |
| திரு.யோன் புள்ளே | ஐ.தே.கட்சி அமைப்பாளர் அநுராதபுரம் | 06.10.2008 |
| டக்ளஸ் தேவானந்தா | அமைச்சர் | 5 தடவைகள் |
| அக்குரஸ்ஸ தாக்குதலில் | 14 பொதுமக்கள் படுகொலை | |



படிப்பகம்

www.padippakam.com

## சமாதானமும் துயரமும்.

இலங்கையில் நடைபெற்ற ஆயுதப் போராட்டம் பற்றி திருமதி. ராதிகா குமாரசாமி அவர்களால் எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் சிறு பகுதியை மட்டும் இங்கு தருகின்றேன்.

1980களில் இந்நாட்டில் தமிழ் எழுத்துக்களிலும் கட்டுரைகளிலும் மையக்கருத்தாக தமிழ் தேசம் என்னும் எண்ணக்கரு விளங்கியது ஒரு தமிழின இளைஞர் சமுதாயமே இக்கருத்தை உள்வாங்கி வாழ்ந்தனர். தமிழர் வரலாற்றில் இன்னுமொரு தீர்க்கமான கட்டம் 1983யூலை மாதமாகும் 1983ஐ கி.மு – கி. பின் இடைப்பட்ட எல்லைக்கோடாக நீங்கள் கருதுகிறீர்கள் போலத் தெரிகிறது என தன்னைச்சந்தித்த தமிழ்த் தலைவர்களிடம் ஒரு முறை திரு. ஜே.ஆர். ஜயவர்தனா கூறினார். உண்மையில் அது ஒரு எல்லைக்கோடுதான் 1983ற்கு முன்னர் தமிழ் தேசியம் பற்றி குரல் கொடுத்தவர்கள் பெரும்பாலும் பாராளுமன்ற அங்கத்தவர்களும் ஜனநாயக அரசியல் தலைவர்களும் மட்டும்தான் இவர்கள் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்பு கொண்டிருந்திருக்கலாம் ஆனால் பொதுவாக அவர்கள் அகிம்சை வழிக்கிளர்ச்சிகளில் நம்பிக்கையுள்ளவர்களாகவே இருந்தனர்.

ஆனால் 1983 இவை அனைத்தையும் தலைகீழாக மாற்றி அமைத்துவிட்டது 1983 யூன் மாதத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எழுநூறைத் தாண்டியிருக்கவில்லை ஆனால் 1984 ஜனவரி மாதத்தில் அது பல ஆயிரங்களைத் தாண்டிவிட்டது. ஏனைய தமிழ்த் தீவிரவாதக் குழுக்களையும் சேர்த்தால் வடகிழக்கில் வாழ்ந்த இளைஞர்களில் பெரும்பாலானோர் ஆயுதப் போராட்டத்தில் இணைந்துகொண்டார்கள். ஒரு தமிழ் இளைஞர் பரம்பரையாகவே ஆயுதக்கிளர்ச்சி என்னும் அழைப்பிற்கு முன்னால் கட்டுண்டு நின்றனர். சமாதானம் குறித்து அவர்கள் பல்வேறு கருத்துக்களைக் கொண்டிருக்கலாம் ஆனால் ஆயுதப்போராட்டம் என்னும் சொல்வீச்சு அதன் விதிமுறைகள் அவர்களைக் கவர்ந்தன. 1983 யூலைக்குப்பின்னர் வன்முறையின் ஊடாக தேசத்தை முன்னெடுப்பதே தமிழ்த் தேசியவாதத்தின் முதன்மையான உத்தியாக இருந்தது அது இலங்கைத் தமிழர்களின் வாழ்வியலில் நாசகார விளைவுகளை ஏற்படுத்தியது.



படிப்பகம்

1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டை தீர்மானத்தின் பின்னர் இலங்கையில் தமிழ் மக்களின் அரசியல் தமிழ் தேசியம் என்னும் எண்ணக்கருவுடன் பின்னிப்பிணைந்துவிட்டது. இக்கருத்துத்தான் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் விரும்பியோ விரும்பாமலோ உயிர்த்தியாகம் செய்யத்தூண்டியது. தமது தியாகத்தை அவர்கள் வீரமரணமாக எண்ணினர். ஒரு கனவுலகத்துள் வாழ்ந்த அவர்கள் சகோதரத்துவம், வீரத்தியாகம் போன்ற கதைகளினால் உந்தப்பட்டனர். தேசியவாதம் என்னும் கருத்தியலின் அடிப்படைத் தூண்களான வீரம், உயிர்த்தியாகம் என்னும் இரண்டு வெறியூட்டும் கருத்துக்களினால் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் நம்பவே முடியாத பயங்கரமான வன்முறைச் செயற்பாடுகளை மேற்கொள்ள உந்தப்பட்டனர். இத்தகைய வாழ்க்கை முறையோடு இரண்டறக்கலந்துவிட்ட அந்த உணர்வுகளை அணைத்துவிடுவதுதான் எத்தகைய சமாதான முனைப்புகளுக்கும் சவாலாக இருக்கும். அதுமாத்திரமல்லாது இலங்கை அரசாங்கத்துடன் ஒரு கௌரவமான சமாதானத்தை செய்துகொள்ள தமிழ் அரசியல் மற்றும் இராணுவ தலைமைகளுக்கு தடையாக விளங்கப்போவது இதே தேசியவாதக் கருத்துத்தான்.

தமிழ் சமூகமும், தமிழ் தலைவர்களும் தேசம் என்னும் எண்ணக்கருவை திரும்பவும் வரையறைப்படுத்தாவிடில் வித்தியாசமாக சிந்திக்காவிடில் நடைமுறைக்குகந்த பன்மைவாத மாற்றீடுகளை மதிப்பிடாவிடில் ஐக்கிய இலங்கை என்னும் எல்லைக்குள் சமாதானச் செயன்முறை அசையவே முடியாது. கடந்த முப்பது ஆண்டுகளாக தணியாத தாகத்துடன் வன்முறை மூலம் தேசத்தையும் தேசியத்தையும் தேடிக்கொண்டிருந்ததன் விளைவாக தமிழ் சமூகம் இன்று எங்கே நிற்கிறது? சாதாரண தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு ஏற்பட்டதென்ன? வன்முறைக்கு ஆளான தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு ஏற்பட்டதென்ன? வன்முறைக்கு ஆளான பல தமிழ் மக்களின் அனுபவங்களை பேராசிரியர் Val Dannel என்பவர் தனது நூலில் தந்துள்ளார். இம்மக்களிடம் அவர்கள் மேற்கொண்ட நேர்காணல்களில் மௌனத்தின் குரல்கள் ஒலிக்கின்றன. அவைகள் காணும் கதைகள் வித்தியாசமானவை நெஞ்சை அறுக்கும் வேதனைகளின் வெளிப்பாடுகள் அவை. சமாதானத்தின் தேவையை வற்புறுத்தும் அடிநாதங்கள் அவை. சமாதானம் என்பது விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் மாத்திரம் சம்பந்தப்பட்டிருக்கும் ஒன்றல்ல அது இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு குடிமகனதும் நாளாந்த வாழ்க்கையுடன்

www.padippakam.com

சம்பந்தப்பட்டுள்ளது. இன்றைய உலகத்தின் பின்னணியில் தமிழ் தேசியவாதம்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என பேராசிரியர் Val Dannel என்பவர் ஐக்கியராஜ்யத்தில் அகதியாக வாழும் ஒரு தமிழ் இளைஞனிடம் வினவியபோது அவன் பின்வருமாறு கூறினான்.

"நீங்கள் தமிழ் தேசியவாதம் குறித்து விசாரிக்கின்றீர்கள் என்னைப் பொறுத்தமட்டில் தமிழ் தேசியவாதம் என்று ஒன்றில்லை. தமிழ் சர்வதேச வாதம்தான் உள்ளது. தமிழ் தேசியவாதம் முன்பும் இருக்கவில்லை இனியும் இருக்கப்போவதில்லை. எனக்குத் தெரிந்தது எல்லாம் தமிழ் சர்வதேசிய வாதம்தான் அது ஜன்னலே இல்லாத ஒரு தாய்லாந்து அறையில் உள்ளது. நய்ரோபியில் அல்லது அக்ராவில், லாகோசில், கெய்ரோவில் உள்ளது. சிங்கப்பூரில் மலேசியாவில் ஒரு பணக்கார சொந்தக்காரன் வீட்டில் வேலைக்காரனாக உள்ளது. அல்லது லண்டனில் ஒரு கிரடிக்கார்ட மோசடியில் நயாக்கரா நீர்வீழ்ச்சியைக்கடந்து கனடாவிற்கு கள்ளத்தனமாக நுழைவதில் உள்ளது. வடதுருவத்திற்கு அருகில் ஏதோவொரு நோர்வேஜியத்தீவில் தமிழன் ஒருவன் மீன்பிடித்து சீவியம் நடத்துகிறான் என்றுகூட நான் கேள்விப்பட்டுள்ளேன் நாங்கள் எல்லோரும் சர்வதேசவாதிகள் அதுமட்டுமல்ல சாரிங் குரோஸ் அருகில் யாராவது இளிச்சவாயன் கிடைக்கும்போது தான் குடிவரவு விடயங்களில் நிபுணனென்று சரடுவிடுகிறானே அவன்கூடத் தமிழன்தான்."

தமிழ்த் தேசத்துக்காகவும், தமிழ்த் தேசியத்துக்காகவும் இடையறாது நடக்கும் போரும் வன்முறையும் இன்று இலங்கையிலிருந்து தமிழர்களை சுத்தப்படுத்துவதில் முடிந்துள்ளது. என்.யூ. ஜயவர்தனா என்பவர் இவ்வாறு கூறினாராம் போர் தொடர்ந்து நடக்கவேண்டும் ஏனெனில் தமிழர்கள் நாட்டைவிட்டு ஓடுவது இதே விகிதத்தில் தொடர்ந்தால் சீக்கிரமே தமிழர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து சமாளிக்கக்கூடிய சிறுபான்மையினர் ஆகிவிடுவார்கள். இவ்வாறு நடந்தால் வரலாறு நமக்கு ஒரு முரண் நகைச்சுவையை வழங்கும் அதாவது தமிழ் தேசத்தை கட்டியெழுப்ப புறப்பட்ட தமிழ் மக்கள் கூண்டோடு அழிந்த கதையாக அது அமையும். சர்வதேச ரீதியாக தமிழனின் அடையாளமும்கூட இன்று வெருவாக மாறிவிட்டது ஒரு காலத்தில் இந்நாட்டில் அரசாங்க ஊழியர்களாகவும், கணக்காளர்களாகவும் உயர்தொழில் புரிபவர்களாகவும் இனங்காணப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

தமிழர்கள் இன்று சர்வதேச ரீதியாக கடத்தல் காரர்களாகவும், போதைப் பொருள்காரர்களாகவும், ஆயுத வியாபாரிகளாகவும் குற்றம் புரிவோராகவும் பெயர்பெற்றுள்ளனர். இத்தகைய சர்வதேசியத்தின் காரணமாகவே மேற்கத்திய நாடுகள் பயங்கரவாத தடுப்புச் சட்டங்களை தமது நாடுகளில் மேற்கொண்டன. தமிழ் சர்வதேசியத்துவம் தமிழ் தேசியத்தின் ஒரு வெளியரும்பு என்றபோதிலும் இன்று அது ஒரு தனித்துவமான தோற்றப்பாடாக முகிழ்ந்துள்ளது தமிழ் சர்வதேசியத்துவம் மேற்கத்திய பாதாள உலகினூடாக தமிழ் தேசியத்துடனும் முரண்படும்போது அங்கு மானிடப் பண்பு மறைந்து வெறுப்பு ஊற்றெடுக்கின்றது. உள்நாட்டின் வீரமரணங்கள் வெளிநாடுகளில் நிகழும் மனிதக்கடத்தலுடன் இயைவதாக இல்லை இப்படி அவர் எழுதியுள்ளார்.

## ஜனநாயக ஆட்சியின் வளர்ச்சிப்படிகள்.

1931ம் ஆண்டு நடைபெற்ற முதலாவது அரசாங்கசபைத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களில் வழக்கறிஞர்கள் 22 பேரும் நிலப்பிரபுக்கள் 13 பேரும் வர்த்தகர்கள் 7 பேர் என்றவகையில் தெரிவாகியதுடன் திருவாளர்கள் டி.எஸ் சேனநாயக்கா டி.பி. ஜயதிலகா, எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஈ.டபிள்யூ கன்னங்கரா, ஏ.ஈ. ராஜபக்ஸ ஆகியோர் போட்டியின்றி ஏகமனதாக தெரிவாகினர்.

சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சட்டசபை என்பது செனட்சபை, அல்லது மேல்சபை, பிரதிநிதிகள் சபை என்பவற்றை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. முன்னையது 50+8+3=61 அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகவும் பின்னையது ஆரம்பத்தில் (1947) 95+6=101 அங்கத்தவர்களை தொகுதிவாரியாகவும், தேசாதிபதியின் சிபார்சின் மூலமும் தெரிவுசெய்யும் நடைமுறையைக் கொண்டிருந்தது பின்னர் சனத்தொகை அதிகரிப்பிற்கேற்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கையில் மாற்றம் செய்யப்பட்டு கூடுதலான அங்கத்தவர்கள் தெரிவாகுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. அதற்கமைய 1959ம் ஆண்டு நியமிக்கப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணயக்குழுயினரின் சிபார்சுக்கமைய அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1960ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது 151 ஆக உயர்வடைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

பின்னர் 1975ம் ஆண்டு பெப்ருவரி மாதம் தேசிய அரசுப்பேரவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கமைய முழு இலங்கையையும் 160 தேர்தல் தொகுதிகளாக உருவாக்கி அவைகளிலிருந்து 168 பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கான நடைமுறை ஏற்படுத்தப்பட்டது. அதற்கமைய 154 தனி அங்கத்தவர் தொகுதியும் கொழும்பு மத்தி, நுவரெலியா–மஸ்கெலியா ஆகிய இருதொகுதிகளையும் மூன்று அங்கத்தவர் தொகுதிகளாகவும் மட்டக்களப்பு, பொத்துவில், பேருவளை, ஹரிஸ்பத்துவ ஆகியவற்றை இரட்டை அங்கத்தவர்கள் தொகுதிகளாகவும் வரையறுத்து மொத்தமாக 168 பிரதிநிதிகள் தெரிவுசெய்யக்கூடியவாறு ஏற்பாடு செய்தனர்

1970ம் ஆண்டுவரை பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் 5வருடங்களுக்கு மேற்படாதவாறு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது 1970ம் ஆண்டு ஆட்சியமைத்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கியதும் பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை மேலும் இரண்டுவருடங்கள் நீடித்ததைத் தொடர்ந்து 7 ஆண்டுகாலம் தமது ஆட்சியை நடாத்தினர். பின்னர் 1978ம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட புதிய அரசியலமைப்பில் பாராளுமறத் தேர்தல் முறையில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்பட்டதுடன் பாராளுமன்றத்தின் ஆயுட்காலம் ஆறுவருடங்களாகவும், தொகுதிவாரித் தேர்தல்முறை நீக்கப்பட்டு மாவட்டரீதியான தேர்தல்முறையும் அறிமுகப்படுத்தப் பட்டது. அதற்கமைய 25 நிர்வாக மாவட்டங்களும் 22 தேர்தல் மாவட்டங்களாக அமைக்கப்பட்டு பிரதிநிதிகளின் எண்ணிக்கை 225 ஆக உயர்த்தப்பட்டது. இத்தேர்தல் முறையின் முக்கிய அம்சமாக கருதப்படும் விடயம் நாட்டின் சனத்தொகையும், வாக்காளர்களின் எண்ணிக்கையும் எத்தனை மடங்குகள் அதிகரித்தாலும் பாராளுமன்றத்திற்கு தெரிவாகும் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கமாட்டாது என்பது முக்கியமானதாகும். அது விடயத்தில் மாற்றமோ அன்றி திருத்தமோ ஏற்படுத்தவேண்டுமாயின் அதற்கான திருத்தப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பாராளுமன்றப் பிரதிநிதிகளின் 2/3 பெரும்பான்மை சம்மதம் பெற்றால் மட்டுமே மாற்றம் கொண்டுவரமுடியு மென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாவட்டரீதியான பிரதிநிதிகள் தெரிவுமுறையின் ஒதுக்கீடு

| | |
|---|---|
| மாகாணரீதியாக 9 மாகாணங்களுக்கும் தலா 9 X 4 | 36 |
| தொகுதிவாரியாக 160 தேர்தல் தொகுதி | 160 |



படிப்பகம்

www.padippakam.com

| | |
|---|---|
| தேசியப்பட்டியல்மூலம் | 29 |
| மொத்தம் | 225 |

பிரதிநிதிகளின் மாவட்டரீதியான எண்ணிக்கையை நிர்ணயிக்கும் வழிமுறை

உதாரணம்

இலங்கையின் மொத்தவாக்காளர்களின் எண்ணிக்கை 9,375,412என வைத்துக்கொள்வோம்.

9,375,412 வாக்காளர்களின் எண்ணிக்கையை 160 ல் பங்கிடும்போது வரும் விடை 58,596 ஆகும்.

ஒரு பிரதிநிதியைத் தெரிவுசெய்வதற்கான தகுதிகாண் எண் இதுவாகும் – 58,596.

இதனடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கமைய அம்மாவட்டத்திற்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். உதாரணமாக 1994ம் ஆண்டு பொதுத்தேர்தலில் 10 பிரதிநிதிகளைக் கொண்டிருந்த யாழ்மாவம்டம் 2000 ஆண்டு நடைபெற்ற தேர்தலின்போது பிரதிநிதிகளின் எண்ணிக்கை 9 ஆக குறைக்கப்பட்டது அதேவேளை அம்பாறை மாவட்டத்தின் பிதநிதிகள் எண்ணிக்கை ஒன்றினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பிரதிநிதிகளை தெரிவுசெய்வதற்கான நடைமுறை மாவட்டரீதியாக அமுல்படுத்தப்பட்டமை தெரிவாகும் பிரதிநிதிகளின் சேவையை விரிவுபடுத்தியதுடன் தத்தமது மாவட்டங்களில் வாழும் மக்களின் தேவைகளில் அதிக அக்கறை செலுத்துபவர்கள் மட்டுமே அடுத்துவரும் தேர்தலில் தமது பதவியை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய நிலைக்கு உள்ளாக்கப்படுவர்.

தேசியப்பட்டியல்மூலமான பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்யும்முறை பின்வருமாறு அமைந்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

தேர்தலில் பங்குகொள்ளும் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும், சுயேச்சைக்குழுக்களும் பெறும் வாக்குகள் நாடளாவிய ரீதியாக கணக்கிடப் பட்டு ஒவ்வொரு சாராரும் பெற்றவாக்குகள் 160ஆல் பிரிக்கப்பட்டு அவரவர் பெற்ற வாக்குகளின் அடிப்படையில் அவர்களுக்கான தேசியப்பட்டியல் பிரதிநிதித்துவம் பகிர்ந்தளிக்கப்படும்.

ஒவவொரு தேர்தல் மாவட்டத்திலும் வாக்காளர்களால் அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 1/8 ஐப் பெறாத அரசியல் கட்சி அல்லது சுயேச்சை சார்ந்த பட்டியல் நிராகரிக்கப்படுவதுடன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குகளும் மொத்த வாக்குகளிலிருந்து செல்லுபடியற்றவையாக கணிக்கப்படும். எஞ்சிய வாக்குகளின் எண்ணிக்கையை மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களில் ஒன்றைக்கழித்து எஞ்சிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக்கொண்டு பிரிக்கப்பட்டு விடையாக கிடைக்கும் வாக்குகளுக்கமைய கட்சிகள், அல்லது சுயேச்சைக் குழுக்கள் பெற்ற வாக்குகளுக்கு அமைவாக ஆசனங்கள் பகிர்ந்தளிக்கப்படும். பிரித்துவரும் வாக்காளர் தொகையில் ஒன்றைக்கூட ஒருகட்சி பெறும் பட்சத்தில் போனஸ் ஆசனம் அவர்களுக்கே வழங்கப்படும்

## செனட்சபை நீக்கப்பட்டமை.

1978ம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய அரசியலமைப்புச் சட்டம் ஏற்கனவே இலங்கை சுதந்திரம்பெற்ற காலம் முதல் அமுலிலிருந்து ஸ்ரீமாவோ அவர்களின் குடியரசு அமைப்பிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த (செனட்சபை) முறை நீக்கப்பட்டு தனிமனித அதிகாரம் வலுப்பெறக்கூடியவாறு ஜனாதிபதி முறைமை அமுல்செய்யப்பட்டது. ஏற்கனவே நடை முறைப்படுத்தப்பட்ட 1972ம் ஆண்டின் அரசியலமைப்பில் முன்னர் நடைமுறையிலிருந்த ஆளுநர் முறை நீக்கப்பட்டு சம்பிரதாயபூர்வ ஜனாதிபதி முறை ஏற்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆனால் இந்த ஜனாதிபதி தொடர்ந்தும் பாராளுமன்றத்திற்கு கட்டுப்பட்டவராகவே இருந்தார். ஜே.ஆரின் புதிய ஜனாதிபதிமுறை மக்களால் தெரிவுசெய்யப்படும் பிரதிநிதிகளின் அதிகாரத்தை மட்டுப்படுத்தி ஜனாதிபதியிடம் முழு அதிகாரத்தையும் வழங்கியது. இச்செயலானது 1948ம் ஆண்டு முதலிருந்த பாராளுமன்ற ஜனநாயக முறையை முற்றிலும் மாற்றியது.



படிப்பகம்

www.padippakam.com

**இலங்கையின் மாகாணங்களும், அவற்றின் தலை நகரங்களும், விஸ்தீரணமும்**

| மாகாணம் | மாகாணங்களுக்கான தலைநகரம் | விஸ்தீரணம் (ச.கி.மீற்றர்) |
|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | 3,684 |
| தென் மாகாணம் | காலி | 5,544 |
| மத்திய மாகாணம் | கண்டி | 5,674 |
| வடமேல் மாகாணம் | அநுராதபுரம் | 7,888 |
| சப்ரகமுவ மாகாணம் | நுவரெலியா | 4,968 |
| வட மாகாணம் | யாழ்ப்பாணம் | 8,884 |
| கீழ் மாகாணம் | திருகோணமலை | 9,996 |
| ஊவா மாகாணம் | பதுளை | 8,500 |
| வடமத்திய மாகாணம் | குருநாகல் | 10,472 |

இலங்கையின் மொத்த நிலப்பரப்பு சதுர கிலோமீற்றர் 65,610

**மாவட்டரீதியான விஸ்தீரணம் - (982 ச.கிமீ) நீர்ப்பரப்பு நிலைகளைத் தவிர்ந்தது.**

| | | |
|---|---|---|
| கொழும்பு - 657 | கம்பஹா - 1387 | களுத்துறை - 1589 |
| கண்டி - 1916 | மாத்தளை - 1993 | நுவரெலியா - 1741 |
| காலி - 1636 | மாத்தறை - 1283 | அம்பாந்தோட்டை - 2579 |
| யாழ்ப்பாணம் - 983 | மன்னார் - 1985 | வவுனியா - 1967 |
| முல்லைத்தீவு - 2517 | கிளிநொச்சி 1235 | திருகோணமலை - 2631 |
| குருநாகலை - 4813 | புத்தளம் - 3013 | அநுராதபுரம் 7034 |
| பொலனறுவை - 3248 | பதுளை - 2857 | மொனறாகலை - 5560 |
| இரத்தினபுரி - 3275 | கேகாலை - 1693 | அம்பாறை - 4350 |
| மட்டக்களப்பு - 2686 | மொத்த நிலப்பரப்பு - 64628 | நீர்நிலைகள் - 982 |

31.01.1996 கொழும்பு மத்திய வங்கி (500) கிலோ வெடிமருந்து நிரப்பப்பட்ட லொறி ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதில் (91) பொதுமக்கள் பலி 1400 பேர் காயமடைந்தனர். மேற்படி தாக்குதலில் மேற்குலக நாட்டவர்கள் பலரும் மோசமான காயங்களுக்கு உள்ளாகினர்.

மேற்படி வங்கி குண்டுத் தாக்குதலுக்கு திரு. பிரபாகரன் அவர்களே சூத்திரதாரி என இலங்கை உளவுப்பிரிவினரின் விசாரணைகளிலிருந்து உறுதிப்படுத்தப் பட்டது. அதற்கமைய குண்டுத் தாக்குதல் தொடர்பான வழக்கு விடுதலைப்



படிப்பகம்

www.padippakam.com

புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், இலங்கையின் பிரதமரான திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்குமிடையிலான பரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் கொழும்பு நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கு தீர்ப்பிற்கமைய பிரபாகரனுக்கு 200 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் அவருக்குச் சொந்தமான இலங்கையிலுள்ள அனைத்துச் சொத்துக்களையும் பறிமுதல் செய்வதெனவும் (31.10.2002ல்) தீர்ப்பு வழங்கப்பட்டது.

## சிறுபான்மையான அரசாங்கத்தினை அமைத்த ராஜபக்ஸவின் அரசியல் காய்நகர்த்தலால் 2/3 பெரும்பான்மை உருவானதன் வரலாறு.



**திரு.மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் முதற்தடவையாக 17.11.2005இல் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதற்கமைய 19.11.2005 இல் அன்றைய பிரதம நீதியரசரின் முன்னால் தமது ஜனாதிபதிப் பதவியை தமது குடும்பத்தவர்கள் சகிதம் சமூகம் கொடுத்து ஏற்றுக் கொள்ளும் வைபவம்.**

மேற்படி தேர்தலில் ஏற்கனவே பொதுஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகித்த (07) அரசியல் கட்சிகளுடன் ஜே.வி.பியினரையும் இணைத்து தொகுதிப் பங்கீட்டின்மூலம் ஜே.வி.பியினருடன் ஓர் உடன்படிக்கையினை ஐ.ம.சு கூட்டமைப்பினர் ஏற்படுத்தியிருந்தனர். அதற்கமைய ஏற்கனவே (16 உறுப்பினர்களை மட்டும் பெற்றிருந்த ஜே.வி.பியினர் இத்தேர்தலில்



படிப்பகம்

www.padippakam.com

(ஒன்றிணைத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு என்னும் பெயரில் களமிறங்கி (39 உறுப்பினர்களை வென்றனர். இந்நிலையில் (105) உறுப்பினர்களை மட்டும் பெற்ற நிலையில் (06.04.2004ல்) திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை பிரதமராகக் கொண்ட அரசாங்கம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து (06.04.2004ல்) திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவராக திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் நியமித்தார். காரணம் அடுத்து இடம்பெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் திருமதி. சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் போட்டியிட முடியாதநிலை அரசியலமைப்பில் உள்ளமையே அதற்கான காரணமாக அமைந்தது.

திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களை அடுத்துவரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்சியின் அங்கீகாரத்தினை வழங்குவதற்கான (ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சியின் மகாநாட்டில்) கலந்துரையாடல் இடம்பெற்றபோது (09.09.2005) வடகிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி அமைப்பு முறையின் கீழ் அதிகாரப்பகிர்வினை வழங்குவதற்கு தாம் தயாரில்லையென முன்னாள் ஜனாதிபதியான திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களிடம் திரு. ராஜபக்ஸ அவர்கள் உறுதியாக அன்று தெரிவித்திருந்தார். அச்சம்பவம் ராஜபக்ஸவிற்கும், சந்திரிகாவிற்குமிடையில் கருத்துரீதியான முரண்பாட்டிற்கு அடிகோலியமை குறிப்பிடத்தக்கது. காரணம் சந்திரிகா அவர்களின் அரசியல் தீர்வாக வடகிழக்கு மாகாணங்களுக்கு சமஸ்டி அமைப்பினையொத்த ஓர் தீர்வுத் திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதில் அவர் உறுதியாக இருந்தார். எதுஎவ்வாறாயினும் விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எந்தவொரு தீர்வுத் திட்டத்தினையும் ஏற்றுக்கொள்ள தயாரில்லை என அவர்களின் செயற்பாடு அமைந்திருந்தது. தமிழீழம் என்னும் மாய மானை தமிழ்மக்களுக்கு பிடித்துக் கொடுப்பதே அவர்களின் அரசியல் சித்தாந்தமாகும்.

அமைக்கப்பட்ட அரசாங்கம் போதிய பெரும்பான்மையினை கொண்டிராத நிலையில் (18.05.2004ல்) ஸ்ரீ.ல.மு.காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினரான ஜனாப். ஹசன் அகமட் பைலா என்பவர் அரசுடன் இணைந்தார். அவரைத் தொடர்ந்து (09.08.2004ல்) மேலும் எம்.என் அப்துல் மஜீத், ஜனாப். ரிசாட் பதியுதீன், (03.09.2004ல்) இ.தொ.காவின் (09) பாராளுமன்ற உறுப்பினர்களும், (16.06.2005ல்) ஜே.வி.பியின் (39) பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணைந்தனர்.



படிப்பகம்

பின்னர் (17.11.2005ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் வெற்றியீட்டியதும் பின்வருவோரும் அரசாங்கத்தில் இணைந்தனர். (14.12.2005ல்) வடிவேல் சுரேஸ், (25.01.2006ல்) ஐ.தே கட்சியின் உறுப்பினர்களான திரு. கெஹலிய ரம்புக்வெல, மஹிந்த சமரசிங்க, அவர்களைத் தொடர்ந்து ஐ.தே.கட்சியின் பின்வரும் (18) உறுப்பினர்களும் அரசுடன் (28.01.2007ல்) இணைந்தனர். திரு. லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன, திரு. ரோஹித போகொல்லாகம, திரு. பி. தயாரத்ன, திரு. ஆர்.எம். தர்மதாச பண்டா, திரு. நவின் திசாநாயக்க, திரு. எட்வட் குணசேகர, திரு. பந்துல குணவர்தன, திரு. கரு ஜெயசூரிய, திரு. காமினி லொக்குகே, ஜனாப். எம்.எச் முகமட், திரு மிலிந்த மொரகொட, ஜனாப் எம். முகமட் முஸ்தபா, திரு. ஹேமகுமார நாணயக்கார, திரு. நியோமல் பெரேரா, திரு ஜி.எல் பீரிஸ், திரு. ராஜித சேனரத்ன, திரு. சி.ஏ. சூரியாராச்சி, திரு. மனோ விஜேரத்ன, திரு. மஹிந்த விஜேசேகர, மற்றும் (30.01.2007ல்) ஜாதிக ஹெல உறுமயவின் (04) உறுப்பினர்களும் அரசுடன் இணைந்தனர். அதனைத் தொடர்ந்து ஜே.வி. பியிலிருந்து (12) உறுப்பினர்கள் வெளியேறி தேசிய சுதந்திர முன்னணி என்னும் புதிய அமைப்பினை உருவாக்கிய நிலையில் அவர்களும் அரசுடன் இணைந்தனர்.

மேற்படி மாற்றுக் கட்சிகளில் அங்கம் வகித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐ.ம.சு.முன்னணியில் இணைந்தமை திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் கைகளை வலுவடையச் செய்தது.

அதற்கமைய (17.11.2005ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே ஜனாதிபதிகளாக பதவிவகித்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் வாக்குகளை கொள்வனவு செய்யும் பணியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரும் ஈடுபட்டனர். ஏற்கனவே பிரதமராவதற்காக நிதி வழங்கிய திரு. ரணில் விக்கிரமசிங்கா போன்றோரால் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கிய நிதியினைவிட குறைவான நிதியினை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஐ.ம.சு முன்னணியினரும் வழங்கியதாக செய்திகள் வெளியாகின. அக்காலப்பகுதியில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் அரசாங்கத்தில் ஜே.வி.பியினரும் இணைந்திருந் தமையால் தமிழ் தேசியவாதிகளால் இனவாதிகளென அழைக்கப்படும் ஜே.வி.பி யினருடனான திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களின் கூட்டு அரசாங்கம்

www.padippakam.com

நிலைத்து நிற்கமாட்டாதென தமிழ் தேசிய வாதிகளும், விடுதலைப் புலிகளும் கற்பனை செய்தமையால் மேற்படி தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்னும் கருத்துக்கள் எதனையும் தமிழ் மக்களிடம் இரு சாராரும் வலியுறுத்த முன்வரவில்லை. அதனால் (கலக்கிய குளத்தில் மீன்பிடிக்கலாமென கனவு கண்டவர்களின் கற்பனை கானல் நீராகியது).

இதன்பின்னணி திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் (226,009) வாக்குகளைப் பெற்ற நிலையில் சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் தெற்கில் அவரின் செல்வாக்கு சற்று அதிகரித்திருந்தமையால் நாடுதழுவிய ரீதியில் மொத்தமாக (4,887,152) வாக்குகளைப் பெற்றநிலையில் அவரின் போட்டியாளரான திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் (406,366) வாக்குகளையும் பெற்றதற்கமைய திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் (50.29%) வாக்குகளையும் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் (48.43%) வீதமான வாக்குகளையும் பெற்றமையால் மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளின் பிரச்சாரம் திரு. மஹிந்த அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவருக்கு வடக்கு, கிழக்கில் கிடைத்த (226,009) வாக்குகளில் ஒரு பகுதியேனும் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களுக்கு அளிக்கப்பட்டிருப்பின் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக வருவது சாத்தியமற்ற நிலையாகவே இருந்திருக்கும். தேர்தல் முடிவுகளின்படி (180,786) வாக்குகள் மட்டுமே இரு வேட்பாளர்களுக்கு மிடையில் வெற்றி, தோல்வியினை தீர்மானித்த வாக்குகளாக அமைந்தன.

மேற்படி சம்பவம் தமிழ் தேசியவாதிகளினதும், விடுதலைப் புலிகளினதும் வரலாற்றுரீதியான தவறுகளில் முக்கியமானதாக அமைந்தது. (இதற்கான ஆதாரம் (2010ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை அவதானித்தால் விளங்கிக் கொள்ளமுடியும்.)

பாராளுமன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகிய இரு தேர்தல்களிலும் வெற்றிபெற்ற திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்தையை மேற்கொள்வதற்கு பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டபோதும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றினை காண்பதற்கு விடுதலைப் புலிகள் விரும்பவில்லை. அதற்கான பிரதான



படிப்பகம்

www.padippakam.com

காரணம் புலம்பெயர் நாடுகளில் விடுதலைப் புலிகளின் பெயரால் நிதிசேகரிக்கும் கனவான்களின் வருவாயில் பாரிய வீழ்ச்சி வீழ்ந்துவிடுமென்பதற்காக இலங்கையில் சமாதானம் ஏற்படுவதற்கு அவர்கள் எப்போதும் தடையாகவே செயற்பட்டார்கள்.

இந்நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினராலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினராலும் முன்னெடுக்கப்பட்ட இனவாதம் அங்கு எடுபடவில்லை என்பது தெளிவாகின்றது. இந்நிலைமையினை ஆய்வுசெய்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினர் தமது எதிர்கால அரசியலை தக்கவைத்துக் கொள்வதற்கான வழிவகைகளை கையாண்டதன் பிரதிபலிப்பே யாரை மேடைக்கு மேடை இனவாதியென திட்டித் தீர்த்தார்களோ அவர்களின் காலடியில் (22.11.2010ல்) 08 உறுப்பினர்களும் சங்கமமாகினர்.

2010ல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் பின்னர் பின்வருவோரும் அரசாங்கத்தில் இணைந்தனர். திரு. ரணில் விக்கிரமசிங்காவின் தலைமை யிலான ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினரான திரு. பழனி திகாம்பரம், மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் அணியின் உறுப்பினரான பிரபா கணேசன் ஆகியார் (05.08.2010) லும் (08.09.2010ல்) ஐ.தே.கட்சியின் உறுப்பினர்களான ஏ.ஆர்.எம் அப்துல் காதர், ஏயால் குணசேகர, மனுசா நாணயக்கார, லக்ஸ்மன் செனவிரத்ன, உபெக்ஸா சுவர்ணமாலி மற்றும் நிமால் செனரத் விஜேசிங்க ஆகியாரும் அரசுடன் இணைந்தனர்.

●



படிப்பகம்

www.padippakam.com

## கிழக்கு மாகாணத்தில் அன்று வாழ்ந்த மக்களின் இனரீதியான புள்ளிவிபரம்.

| கிழக்கு மாகாணம் | மொத்த வாக்காளர்கள் | சிங்களவர் | தமிழர் | முஸ்லிம் | இந்திய தமிழர் | ஏனையோர் |
|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு | 330,899 | 10,646 | 234,348 | 79,317 | 3,868 | 2,720 |
| அம்பாறை | 388,786 | 146,371 | 78,315 | 161,481 | 1,410 | 1,209 |
| திருகோணமலை | 256,790 | 86,341 | 86,743 | 74,304 | 6,767 | 2,536 |
| கிழக்கு மாகாணம் இன அடிப்படையான மொத்தம் | 976,475 | 243,358 | 399,406 | 315,102 | 12,045 | 6,465 |
| விகிதாசாரம் | 24.92% | 40.90% | 32.28% | 1.24% | 0.66% | |
| மூன்று மாவட்டங்களினதும் இன அடிப்படையான | | | | | | |
| மொத்தம் | 2,087,943 | 276,507 | 135,920 | 3367,839 | 75,476 | 8,918 |
| விகிதாசாரம் | 13.24% | 65.10% | 17.62% | 3.61% | 0.43% | |

## 2004 முதல் 2010 வரை தமிழ் தேசியக் கூட்டமைப் பிற்குள் இடம்பெற்ற நிகழ்வுகள்.

தேர்தல் முடிவுகளுக்கமைய த.தே.கூட்டமைப்பினருக்கு வழங்கப்பட்ட தேசியப் பட்டியலுக்கான உறுப்பினராக நியமிக்கப்பட்ட எம்.கே ஈழவேந்தன், பாராளுமன்றத்தில் 3 மாதகாலப்பகுதிக்கு மேலாக சமூகமளிக்காமையால் அவரின் பதவி (14.12.2007ல்) இழக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஜனாப் ரஸீம் முகமட் இமாம் என்பவர் (08.01.2008ல்) நியமிக்கப்பட்டார். மட்டு மாவட்டத்தில் தேசியப் பட்டியலுக்கான பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட திரு. யோசப் பரராஜசிங்கம் அவர்கள் (25.12.2005ல்) படுகொலை செய்யப்பட்டமையால் அவரின் வெற்றிடத்திற்கு திரு. சந்திரநேரு சந்திரகாந்தன் என்பவர் நியமிக்கப்பட்டார். திரு. கிங்ஸ்லி ராஜநாயகம் (மட்டுநகர்) தேர்தல் முடிவுகள் வெளியாகி 16 வது நாள் பாராளுமன்றம் செல்லுமுன் (18.04.2004ல்) விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் கொலைக்கான காரணமாக அவர் கருணா அம்மானின் ஆதரவாளர் என்பதே குற்றச்சாட்டாகும். இவரின் வெற்றிடத்திற்கு பா. அரியநேந்திரன் என்பவர் நியமிக்கப்பட்டார். இச்சம்பவமே தொடர்ந்தும் யாழ் மேலாதிக்க அரசியலுக்கு அவர் ஆதரவு தெரிவிப்பதற்கான தேவை உருவானது. என். ரவிராஜ் என்பவர் (11.10.2006ல்) படுகொலை செய்யப்பட்டதனைத் தொடர்ந்து அவரின் வெற்றிடத்திற்கு (30.11.2006ல்)



படிப்பகம்

www.padippakam.com

என். சிறிகாந்தா என்பவர் நியமிக்கப்பட்டார். சிவநேசன், கிட்ணன் என்பவர் கிளைமோர் வெடித்தாக்குதலில் (06.03.2008ல்) கொல்லப்பட்ட நிலையில் அவரின் வெற்றிடத்திற்கு சொலமன் சிறில் என்பவர் நியமிக்கப்பட்டார். கே. பத்மநாதன் (அம்பாறை) (21.05.2009ல்) மரணமானதைத் தொடர்ந்து அவரின் வெற்றிடத்திற்கு தோமஸ் தங்கத்துரை வில்லியம் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர்களில் மூவருக்கு திரு. பிரபாகரன் அவர்களால் மாமனிதர் பட்டங்கள் வழங்கப்பட்டன.

2001ஆண்டு டிசம்பர் மாதம் 5 ந் திகதி முதல் 08.04.2010 வரையான (9 வருடங்கள் 5 மாதங்கள் வரையான காலப்பகுதியில் ஏறக்குறைய மாத மொன்றிற்கு (100,000) ஒரு லட்சம் ரூபாவரை திரு. பிரபாகரன் அவர்களின் தயவினால் வருமானமாகப் பெற்றவர்கள் திரு. பிரபாகரன் அவர்களின் அகால மரணத்தைத் தொடர்ந்து தாம் எவரும் பிரபாகரன் தலைமையிலான பயங்கரவாதத்தினை ஆதரிக்கவில்லை என (18.05.2009ந்) திகதியுடன் குட்டிக்கரணமடித்து தாம் எப்போதும் ஜனநாயகத்தினையே ஆதரிப்பவர்களென அறிக்கைகளை முண்டியடித்துக் கொண்டு வெளியிட்டனர்.

அதேவேளை (26.01.2010ல்) இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 30 வருடகாலமாக இராணுவத்தில் பணியாற்றி பின்னர் இராணுவத் தளபதியாக பதவி உயர்வுபெற்ற திரு. சரத் பொன்சேகா அவர்களை ஜனாதிபதிக்கான ஆசனத்தில் அமர்த்துவதற்காக வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அனைத்து பிரதான நகரங்களிலும் மேடையமைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். தமிழ் மக்களில் பெரும்பாலானவர்களும் இவர்களின் பிரச்சாரங்களில் எடுபட்டு வடக்கு, கிழக்கில் சரத் பொன்சேகா அவர்களுக்கு தமது வாக்குகளை வழங்கினர். எது எவ்வாறாயினும் ஏற்கனவே இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் வடக்கு, கிழக்கில் பெற்ற வாக்குகளைவிட அதிகமான வாக்குகளையே (26.01.2010ல்) இடம்பெற்ற தேர்தலில் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் தெற்கில் வாழும் மக்களின் செல்வாக்கு திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களுக்கு பலமாக அமைந்திருந் தமையால் (6,015,934 ) (4,173,185) (57.88%) (40.15%) விகிதாசார அடிப்படையில் வாக்குகளை முறையே திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களும், திரு. சரத் பொன்சேகா அவர்களும் பெற்றதற்கமைய திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

## இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்.

சுதந்திர இலங்கையின் பெயர் இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு எனப்பெயர் மாற்றம் செய்யப்பட்ட பின்னர் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்கள்.

17வது அரசியலமைப்பு சீர்திருத்தம் 2001 செப்டம்பர் மாதம் 24ந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது 1978 முதல் நடைமுறையில் இருந்துவருகின்ற அரசியலமைப்பின் 17வது சீர்திருத்தம் ஏழு சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது

(அ) தேர்தல் ஆணைக்குழு.
(ஆ) பகிரங்க சேவை ஆணைக்குழு.
(இ) தேசிய பொலிஸ் ஆணைக்குழு.
(ஈ) இலங்கை மனிதர்கள் ஆணைக்குழு.
(உ) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச் சாட்டுகளை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
(ஊ) நிதி ஆணைக்குழு
(எ) எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இச்சீர்திருத்தங்களுக்கான பிரேரணை விவாதிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது த.வி.கூட்டணி, ரெலோ, தமிழ்க் காங்கிரஸ், சிஹல உறுமய போன்ற கட்சிகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை அதேவேளை எவ்வித எதிர்ப்பினையும் தெரிவிக்கவுமில்லை அதனால் சீர்திருத்தம் ஏகமனதாக நிறைவேறியதாகவே கருதப்பட்டது

1978முதல் இதுகாலவரையில் அரசியலமைப்பிற்கு 18சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் இதில் 15 சீர்திருத்தங்கள் மட்டுமே பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது ஏனைய 3 சீர்திருத்தப் பிரேரணை களும் நிறைவேற்றிக்கொள்ள முடியாது நிராகரிக்கப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

இந்த அரசியலமைப்பிற்கான முதலாவது சீர்திருத்தம் 1978 நவம்பர் மாதம் 20ந் திகதி சபாநாயகர் மூலம் உறுதிசெய்யப்பட்டு பின்னர் 1978 செப்டம்பர் மாதம் 7ந்திகதி முதல் அதனை நடைமுறைப்படுத்த அச்சீர்திருத்தத்தின் மூலமே வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது (ரிட்) கட்டளையை (அதனை மாற்றியமைக்கும்) விடுக்கும் அதிகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கன்றி உயர் நீதிமன்றத்திற்கே உரியதென அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இரண்டாவது அரசியலமைப்பு சீர்திருத்தமானது 1979 பெப்ருவரி மாதம் 26ந் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது இதன்மூலம் 161 யாப்பு சீர்திருத்தஞ் செய்யப்பட்டது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தான் பிரதிநிதித்துவம் செய்கின்ற அரசியற் கட்சியின் தீர்மானத்தின் பிரகாரம் கட்சியின் உறுப்புரிமையை இழக்கும்பட்சத்தில் அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை முடிவுக்கு கொண்டுவருவதற்கும் அவரது அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கும் கட்சியின் செயலாளர் வேறொரு நபரை தெரிவுசெய்வதற்கும் அதிகாரமும் வழங்கப்பட்டிருந்தது.

மூன்றாவது அரசியலமைப்பு சீர்திருத்தம் 1982 ஆகஸ்ட் மாதம் 27ந் திகதி கொண்டுவரப்பட்டது இதன்மூலம் மக்கள் அபிப்பிராஜ வாக்கெடுப்பொன்றின் மூலமாக ஜனாதிபதி ஒருவருக்கு தனது பதவிக்காலத்தை நீடித்துக் கொள்வதற்கான சட்டதிட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதனடிப்படையில் நடத்தப்பட்ட மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின்பின்னர் அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தின் பதவிக்காலம் 1989 ஆகஸ்ட் 4ந் திகதிவரை நீடிக்கப்பட்டதுடன் இதனை உள்ளடக்கிய நான்காவது சீர்திருத்தம் 1982 டிசம்பர் மாதம் 23ந் திகதி முதல் நடைமுறைக்கு வரலாயிற்று.

1983 பெப்ருவரி மாதம் 25ந் திகதி உறுதி செய்யப்பட்டுக்கொண்ட 5வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடமொன்று ஏற்படும்தறுவாயில் அவ்வுறுப்பினர் சார்ந்த கட்சியின் செயலாளரது யோசனையின் அடிப்படையில் ஒரு நபர் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்படாதவிடத்து முன்னைய தேர்தல்தொகுதி அடிப்படையில் தேர்தலொன்றை நடத்தும் வாய்ப்பு கிடைத்தது.

1983 ஆகஸ்ட் 8ந் திகதி முதல் நடைமுறைக்குவந்த 6வது சீர்திருத்தத்தின்படி



படிப்பகம்

www.padippakam.com

இலங்கையினுள் வேறொரு அரசினை நிறுவுவதோடன்றி நிறுவக் கோருவதற்கோ ஒத்துழைப்பு வழங்காதவகையில் அரசாங்க ஊதியம் மற்றும் கொடுப்பனவுகள் பெறுகின்ற அனைவரும் ஒன்றுகூடி தீர்மானம் மேற்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது இதன்பிரகாரம் அதனை நிராகரித்த காரணத்தால் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. அமிர்தலிங்கம் அவர்கள் உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவி பறிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர் இச்சீர்திருத்தம் தமிழ் மக்களிடையே பெரும் குழப்பத்தை உண்டுபண்ணியது.

1983 ஒக்டோபர் மாதம் நான்காம் திகதி நிறைவேற்றப்பட்ட 7வது சீர்திருத்தத்தின்படி இலங்கையின் நிர்வாக மாவட்டங்களாக இருந்துவந்த 24 மாவட்டங்கள் 25 ஆக ஆக்கப்பட்டன இவ்வாறு அரசியலமைப்பில் புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாவட்டம் கிளிநொச்சி மாவட்டமாகும்.

எட்டாவது சீர்திருத்தமானது 1984ம் ஆண்டு மார்ச் மாதம் 6ந் திகதி கொண்டுவரப்பட்டதுடன் இதன்மூலம் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு கிடைத்தது அதனைத் தொடர்ந்து 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24ந் திகதி நிறைவேற்றப்பட்ட 9வது அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மூலம் தேர்தலில் போட்டியிட முன்வரும் அரச ஊழியர்களது ஊதியங்கள் தொடர்பாக இருந்துவந்த வரையறைகள் குறித்த அரசியலமைப்பு சிக்கல்கள் தீர்க்கப்படுமுகமாக புதிய ஊதிய முறைமையொன்று அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டது.

1986 ஆகஸ்ட்டு மாதம் 6ந் திகதி 10வது அரசியலமைப்பு சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டது இதில் மக்கள் பாதுகாப்பு தொடர்பான அரசியலமைப்பு இலக்கம் 115இன் கீழான பிரிவுகள் திருத்தி அமைக்கப்பட்டன இதன்படி மாதத்திற்கு ஒருமுறை அவசரகாலச் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்வதற்கும் பாராளுமன்றத்தை கலைக்கும் சந்தர்ப்பத்தின் போது அவசரகாலச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சட்டங்களை உண்டுபண்ணிக்கொள்வதற்கும் வாய்ப்புகள் கிடைத்தன.

11.வது சீர்திருத்தமானது 1987 மே மாதம் 6ந் திகதி நிறைவேற்றப்பட்டது இதன்பிரகாரம் 111, 112, 113 மற்றும் 114வது அரசியல் யாப்புப் பிரிவுகள்



படிப்பகம்

www.padippakam.com

திருத்தஞ் செய்யப்பட்டன இதில் நீதிமன்றம் தொடர்பு பட்டிருந்ததுடன் குறிப்பாக உயர் நீதிமன்றத்தின் மூலம் அறிவிக்கப்படுகின்ற வழக்குகளின் தீர்ப்புகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்கும்பொழுது மேல்முறையீட்டு நீதிபதிகளின் எண்ணிக்கை இருவருக்கும் குறைந்தபட்சமாக வரையறுக் கப்பட்டது.

ஒரு தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரது யோசனை என்றரீதியில் 12வது அரசியலமைப்பு சீர்திருத்தம் பாராளுமன்ற உறுப்பினர் திரு. தினேஸ் குணவர்தனா அவர்களினால் 1987 செப்டம்பர் மாதம் 4ந் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது இதன்மூலம் 35வது அரசியல்யாப்பின் பிரிவை திருத்தி ஜனாதிபதி அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரமுடியாத படியிலான யோசனை முன்வைக்கப்பட்டது. எனினும் இது பலதரப்பட்ட விவாதங்கள், குழப்பங்களுக்கு மத்தியில் பாராளுமன்ற விவாதமின்றி தள்ளுபடியாகியது எனினும் இந்தப் பன்னிரண்டாவது சீர்திருத்தம் வேறொரு சந்தர்ப்பத்தில் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் மிகவும் குழப்பமான கருத்துமோதல்களுக்கு வழிவகுத்த 13வது சீர்திருத்தம் 1987 செப்டம்பர் மாதம் 14ந் திகதி நிறைவேற்றப்பட்டது இதன்படி மாகாணசபைகள் உருவாகின இச்சீர்திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பளித்து இரகசியமாக பாராளுமன்றம் அழைத்துவர நேரிட்டது இதற்கெதிராக பல்வேறு தரப்பினர் எழுந்து நின்று கூக்குரலிட்டனரென்பது குறிப்பிடத்தக்கது. மாகாணசபை முறைமைக்கு எதிரான அரச கட்சியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து நீக்கஞ்செய்யப்பட்டனர் அன்று அத்திட்டத்தை எதிர்த்தவர்களில் கம்புறுபிட்டிய பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு. சந்திரகுமார் விஜயகுணவர்தன தவிர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர் உட்பட இன்னும்பலர் இன்று மாகாணசபைகளில் பதவிவகித்து வருகின்றனர்.

1988மே மாதம் 24ந் திகதி நிறைவேற்றப்பட்ட 14வது சீர்திருத்தத்தின் மூலம் விகிதாசார தேர்தல் முறை அறிமுகஞ் செய்யப்பட்டதுடன் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 168 இல் இருந்து 225 ஆக உயர்த்தப்பட்டது தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் முறைமையும் இதன்போது ஏற்படுத்தப்பட்டது. 15வது மற்றும் 16 வது சீர்திருத்தங்கள் 1988 டிசம்பர்



படிப்பகம்

www.padippakam.com

17ந் திகதி நிறைவேற்றப்பட்டது. 14வது சீர்திருத்தத்திலுள்ளவாறு விகிதாசார தேர்தல் முறையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர் பதவி ஒன்றைப் பெற மொத்த வாக்குகளில் எட்டில் ஒரு வீதவாக்குகள் தேவையென்பது 15வது சீர்திருத்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

16வது சீர்திருத்தத்தில் உள்ளூராட்சி திணைக்களம் என்ற வார்த்தைக்குப் பதிலாக உள்ளூராட்சி மாகாணசபைகள் என்னும் வார்த்தைப் பிரயோகம் அறிமுகஞ் செய்யப்பட்டிருந்தது மேற்கூறிய இரு திருத்தங்களையும் நிறைவேற்றிக்கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்ததுடன் இச்சீர்திருத்தம் நிறைவேற்றப்பட்டவுடன் பாராளுமன்றம் உடனடியாக கலைக்கப்பட்டது.

அதன்பின்னர் 1994 நவம்பர் மாதம் 22 ந் திகதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. பெட்டி வீரக்கோனின் தனிப்பட்ட பிரேரணையாக 17வது சீர்திருத்தம் கொண்டுவரப்பட்டது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு ஜனாதிபதி தேர்தலொன்றை நடாத்துவதற்கப்பதிலாக பாராளுமன்ற பெரும்பான்மை விருப்பின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர்களுள் ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுக்கும் விதத்தில் நடவடிக்கை எடுக்குமாறு இதன் மூலம் கோரப்பட்டிருந்தது இது பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுக்காமலேயே ஒதுக்கப்பட்டது.

2000 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8ந் திகதி 18வது சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இது அரசின் மூலம் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் இதில் தேர்தல் முறையில் வேறுபாடு குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது இப்பிரேரணை 2000 ஆண்டு ஆகஸ்ட 30ந் திகதி பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டதோடு இரத்தாகிவிட்டது இப்பிரேரணையில் தெரிவிக்கப் பட்டிருந்த விடயம் விகிதாசார அடிப்படையில் 100 உறுப்பினர்களும் பழைய தேர்தல் முறையின் கீழ் 168 தொகுதிகளுக்கு 168 உறுப்பினர்களும் தேசியப் பட்டியலில் 30 பேருமாக மொத்தம் 298 பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.

●



படிப்பகம்

www.padippakam.com

# விடுதலைப்புலிகளின் புரிந்துணர்வு உடன்படிக்கை (22-02-2002.) முழு விபரம்.

புலிகள் (U.N.P) Until Next Parliment ஒப்பந்தம் விடுதலைப்புலிகளின் தலைவர் திருபிரபாகரனுக்கும் இலங்கையில் அமைக்கப்பட்ட (2001 டிசம்பர்) ரணில் விக்கிரமசிங்கா அவர்களை தலைமையாகக்கொண்ட புதிய அரசாங்கத்திற்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் (22.2.2002ல்) கைச்சாத்தானது இந்த ஒப்பந்தம் இலங்கை அரசியலமைப்பின்படி நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தினை தம்மகத்தே கொண்டிருக்கும் (நாட்டின் தலைவர் பாராளுமன்றத்தின் தலைவர் பாதுகாப்புப்படைகளின் தலைவர் நிதி நிர்வாகம் போன்றவற்றின் தலைவராகவும் செயற்படும் ஜனாதிபதியின் அங்கீகாரமும் அவரின் கலந்தாலோசனையுமின்றி தன்னிச்சையாக திரு ரணில் விக்கிரமசிங்கா அவர்கள் புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் அவர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தமாகவே அமைந்தது புலிகள் தரப்பில் கடந்த 20 வருடகாலப்பகுதியில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் ஆளணிபற்றாக்குறை (வடகிழக்கில் வாழ்ந்த தமிழ்மக்களில் ஏறக்குறைய பத்து லட்சம் மக்கள் நிரந்தரமாக மேற்கு நாடுகளுக்கு புலம் பெயர்ந்தமை) புலம் பெயர்ந்தவர்களில் பெரும்பாலானவர்கள் அவர்கள் வசிக்கும் நாட்டிலேயே குடியுரிமையையும் வாக்குரிமையையும் பெற்று தாய்நாட்டின் குடியுரிமைக்கு தாமாகவே முழுக்குப்போட்டநிலையில் எஞ்சியோரும் அந்தநாள் எப்போது தமக்குவரும் என ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதால் அவர்களும் தாயகம் திரும்புவதற்கு தயாரில்லை என்பது புலிகளுக்கு புலப்பட்டநிலையில்

சர்வதேசரீதியாக விடுதலைப்புலிகளுக்கு ஏற்பட்ட சங்கடங்களும் நெருக்கடிநிலைகளும் போராட்டத்தை தொடரமுடியாது பேச்சுவார்த்தை ஒன்றிற்கு செல்வதற்கான நெருக்கடி நிலையை தோற்றுவித்தது இந்நிலையில் பேச்சுவார்த்தை ஒன்றின்மூலம் தீர்வுகாண்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசாங்கத்துடன் பேசுவதற்கான நடுநிலையாளராக தமக்கு உதவுமாறு புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் அவர்கள் நோர்வே அரசாங்கத்தை 2.1.2002ந் திகதியிட்ட கடிதத்தின்மூலம் வேண்டுகோள் விடுத்தார் அரசதரப்பில் பாதுகாப்பு நிலையை சீர்செய்வதற்கு படையணி பற்றாக்குறை நாட்டின் பொருளாதாரவீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட நெருக்கடிநிலை இவைகளுடன் ஐ.தே கட்சியினருக்கு கடந்த நான்கு தேர்தல்களிலும் ஏற்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

படுதோல்வி. சர்வதேச உதவி வழங்கும் நாடுகளின் நெருக்குதல் போன்றவை அரசின் யுத்த நிறுத்தத்திற்கும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதற்கும் நிர்ப்பந்தித்த காரணிகளாக அமைந்தது.

ஏறக்குறைய கடந்த 20 ஆண்டுகாலமாக நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் ஆயுதப் போராட்டத்தின் மூலம் முழு இலங்கையினதும் பொருளாதாரம் அதிபாதாளத்திற்கு தள்ளப்பட்டதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பூகோளரீதியான வடிவமைப்பே மாற்றமடைந்தது ஆயுதத்தின் மூலம்தான் ஆட்சியைப் பிடிப்போமென ஆட்டம் போட்டவர்களின் ஆயுதங்கள் வலுவிழந்ததுடன் போராட்டத்தின் பெறுபேறுகள் பின்வருமாறு அமைந்தன

| | | |
|---|---|---|
| 1. | பலிக்களத்திற்கு அனுப்பப்பட்ட இளைஞர்கள் ஏறக்குறைய | 19,000 |
| 2. | கொலைசெய்யப்பட்ட இளைஞர்கள் (புலிகளினால்) | 4,000 |
| 3. | ராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமிழர்கள் | 12,000 |
| 4. | விதவைகள் | 22,000 |
| 5. | பெற்றோரை இழந்த அநாதைக் குழந்தைகள் | 20,000 |
| 6. | வடகிழக்கில் நாசமாக்கப்பட்ட (வீடுகள்) குடியிருப்புக்கள் | 80,000 |
| 7. | நிரந்தரமாக புலம்பெயர்ந்த தமிழர்கள் (மேற்கு நாடுகளுக்கு) | 1,000,000 |
| 8. | புலிகளினால் கொல்லப்பட்ட தமிழ் மக்களும் அரசியல்வாதிகளும் | 6,000 |
| 9. | புலிகளினால் கொல்லப்பட்ட முஸ்லிம்கள் | 2,100 |
| 10. | புலிகளால் கொல்லப்பட்ட சிங்களவர்கள் | 1,800 |

இந்நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதாகக் கூறி விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை வடகிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் பேசும் மக்களின் வாய்களுக்கு பூட்டும் கைகளுக்கு நிரந்தரமாக விலங்கும் இடப்பட்ட ஓர் ஒப்பந்தமாகவே அமைந்தது. சிங்கள வன்முறை ராணுவத்தினரின் ஆட்சியின்போது தமிழ் பேசும் மக்கள் அனுபவிக்க எஞ்சியிருந்த பேச்சு எழுத்து கருத்து வாக்குரிமை போன்ற சுதந்திரங்களும் முற்றாக பறிக்கப்பட்ட நிலையில் தமிழ் மக்களை இன்று சிங்கள அரசு ஒரு ஆயுத வன்முறையாளரிடம் அடகு வைத்துவிட்டு தம்மையும் தமது மக்களையும் காப்பாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

விடுதலைப் புலிகளின் கடந்தகால ஆயுதப் போராட்டத்தை நடுநிலைநின்று ஆய்வுசெய்தவர்களில் சிலர் கீழ்காணும் தகவல்களையும் விபரங்களையும் வெளியிட்டுள்ளனர்

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தின்போது 1982 முதல் 1994 வரையான காலப்பகுதியில் புலிகள் தமது உறுப்பினர்களில் 6.331 போராளிகளை இழந்துள்ளனர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஏறக்குறைய ஏழுவருடகால ஆட்சியில் 11,337 போராளிகளை இழந்தனர். அதிலும் ஐ.தே.கட்சியின் ஆட்சியின்போது 1990 ஆண்டிலேயே கூடுதலான போராளிகள் கொல்லப்பட்டதாகவும் 1613 பேரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலமான 1997ல் 2146 போராளிகளை இழந்ததாகவும் அதன்பின் 1999 நவம்பர் வரை 1147 போராளிகளையும் பலிகொடுத்ததாக செய்திகள் வெளியாகின இந்நிலையில் அரசாங்கதரப்பில் ஏற்பட்ட ராணுவத்தினரின் எண்ணிக்கையும் சந்திரிகா அவர்களின் ஆட்சியின்போதே கிட்டத்தட்ட 10,000 படையினர் கொல்லப்பட்டனர் ஐ.தே. கட்சியின் ஆட்சியின்போது ராணுவ உயரதிகாரிகள் பலர் கொல்லப்பட்ட அதேவேளை சந்திரிகாவின் ஆட்சியில் உயரதிகாரிகள் சிலர்மட்டுமே கொல்லப்பட்டனர் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகும் வரை 17,648 இளந் தலைமுறையினரை பலிக்களத்திற்கு அனுப்பியதாக புலிகள் தரப்பு புள்ளிவிபரங்கள் வெளிக்காட்டுகின்றன ஆனால் இத்தொகை மேலும் பல ஆயிரம் அதிகமென புலிகளினால் அம்பாறை மாவட்டம் பற்றி தெரிவித்த கணக்கீடுகளிலிருந்து தெளிவாகின்றது.

குறிப்பு – 1987ம் ஆண்டு யூலை மாதம் 29ந் திகதி இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடும்வரை புலிகள் தரப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 631 எனபுள்ளிவிபரங்கள் வெளிக்காட்டின.

அத்துடன் ஐ.தே.கட்சியின் 17வருடகால ஆட்சிக்காலத்தின்போது உலகளாவிய ரீதியில் உதாரணமாக ஐரோப்பிய நாடுகளிலோ அன்றி அமெரிக்கா அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலோ விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கான செயற்பாடுகளை அன்றைய வெளிவிவகார அமைச்சர்களாக செயற்பட்டவர்களால் மேற்கொள்ள முடியாதுபோய்விட்டது அவர்களால் அனைவரையும் (பொதுமக்கள் உட்பட) பாதிக்கக்கூடியதான பயங்கரவாதச் தடைச் சட்டத்தினை மட்டும்மே அமுல்படுத்த முடிந்தது திருமதி. சந்திரிகா



படிப்பகம்

www.padippakam.com

அவர்களின் ஆட்சியின்போது நிலைமை முற்றிலும் மாறுபட்டதாகவே அமைந்தது. பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்ட திரு. லக்ஸ்மன் கதிர்காமர் அவர்கள் காலத்திற் கேற்றவாறு அரசியல் சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவதில் அதி திறமைவாய்ந்தவராக செயலாற்றினார் அவரின் திறமையான அரசியல் நடவடிக்கைகள் மேற்குலக நாடுகளில் விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு வழிகோலியதற்கமைய அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சட்டரீதியாக தடைசெய்ததுடன் ஐரோப்பிய யூனியனிலும் புலிகளின் நடவடிக்கைகளை பலமாக கண்டிக்க வழிகோலியது இவை அனைத்தையும்விட முக்கியமாக அண்டைய நாடான இந்தியாவிலும் புலிகளுக்கு எதிரான தடைவிதிக்கப்பட்டதுடன் திரு. ராஜிவ் காந்தி அவர்களின் படுகொலை தொடர்பாக பிரபாகரன் அவர்களை கைதுசெய்வதற்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எத்தனையோ தற்கொலைத் தாக்குதல்களை புலிகள் மேற்கொண்டபோதும் பேச்சுவார்த்தையின் மூலம் விடுதலைப் புலிகளை சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து இனப் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியுமெனும் நம்பிக்கையுடன் சந்திரிகாவின் அரசு தடைவிதிக்காது அமைதிபேணியது அதன்பின்பு 1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ந் திகதி பௌத்த மக்களின் அதிமுக்கிய புனிதஸ்தலமான கண்டி நகரிலுள்ள தலதா மாளிகைக்கு விடுதலைப்புலிகள் குண்டுத்தாக்குதல் நடாத்தியதைத்தொடர்ந்தே புலிகள்மீதான தடைவிதிக்கப்பட்டது.

சந்திரிகா அரசாங்கத்தின் வெளியுறவுத் தொடர்புகள் அவருக்கு பலவகையிலும் சாதகமான நிலையிலேயே அமைந்திருந்தது அத்துடன் சந்திரிகாவை கொலைசெய்ய புலிகளினால் மேற்கொண்ட நடவடிக்கையும் தோல்வியுற்று இருதடவை நடைபெற்ற பொதுத் தேர்தல்களிலும் ஜனாதிபதித் தேர்தல்களிலும் சந்திரிகா அவர்கள் வெற்றியீட்டியமை புலிகளுக்கு பாதகமான நிலைமையையே ஏற்படுத்தியது இவைகளுக்குமேலாக சந்திரிகாவை புலிகள் படுகொலை செய்தாலும் புலிகளுக்கு எதிரான தீவிரபோக்கினை கடைப்பிடிக்க திருவாளர்கள் ரத்னசிறி விக்கிரமநாயக்க அநுராபண்டாரநாயக்கா போன்றோர் அடுத்த நடவடிக்கைகளை முடுக்கிவிடுவதற்கு தயார்நிலையில் இருப்பதால் கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி எந்தவகையிலாகுதல் ரணில் விக்கிரமசிங்கா அவர்களுடன் ஒப்பந்தமொன்றினை மேற்கொள்ள வேண்டிய கட்டாய நிலைக்கு புலிகள் உட்படுத்தப்பட்டனர் இந்நிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம்தான் புலிகளின் புரிந்துணர்வு ஒப்பந்தமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்த அதேவேளை 21.2.2002 ந் திகதியன்று பருத்தித்துறை கடற்பரப்பில் விடுதலைப் புலிகளுக்கும் கடற் படையினருக்குமிடையில் மோதல் நடைபெற்றதில் ஒரு கடற்படை சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மூவர் படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட அதேவேளை புலிகளின் தரப்பிலும் ஒருவர் கொல்லப்பட்டு அறுவர் காயமடைந்ததாக தகவல்கள் வெளியாகின அவ்விடயத்தை இருசாராரும் பெரிதுபடுத்த விரும்பாத நிலையில் உடன்படிக்கை முதலில் திரு. பிரபாகரன் அவர்களால் கைச்சாத்திடப்பட்டு அப்பிரதிகள் சமாதானத் தூதுவராக செயலாற்றிய நோர்வேயின் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டு அதன்பின்னர் அப்பிரதிகள் நோர்வேயில் வைத்து வெளியிடப்பட்டது அரசாங்கத்தின் புரிந்துணர்வு ஒப்பந்த நகல்கள் வவுனியாவில் வைத்து பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அவர்களால் கைச்சாத்திடப்பட்டது.

ஏற்கனவே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்பாக கைச்சாத்திடவிருக்கும் உடன்படிக்கையில் நாட்டின் தலைவர் என்றவகையில் திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா அவர்களும் கட்டாயம் கைச்சாத்திட வேண்டுமெனும் நிபந்தனை விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இறுதியில் அவ்விடயம் பிரச்சினைக்கு உள்ளாக்கப்படவில்லை.

கொழும்பிற்கும் பிரித்தானியாவிற்குமிடையிலான பேச்சுவார்த்தைகளை அரசாங்கத்திற்கும் அன்ரன் பாலசிங்கத்திற்குமிடையில் நடாத்திய நோர்வே நாட்டின் தூதுக்குழுவினர் 6.3.2002ல் வன்னிக்குச்சென்று திரு. பிரபாகரன் அவர்களையும் புலிகளின் எனைய முக்கியஸ்தர்கள் சிலரையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர் அதனைத்தொடர்ந்து 25.3.2002ல் திரு. அன்ரன் பாலசிங்கம் அவரின் மனைவியார் அடெல் பாலசிங்கம் ஆகிய இருவரும் நோர்வே பிரதிநிதிகளின் உதவியுடன் மாலைதீவிற்கு வந்து அங்கிருந்து ஆகாயமார்க்கமாகவும் கடல்வழியாகவும் பயணம் செய்யக்கூடிய நோர்வே அரசுக்குச் சொந்தமான சிறிய (சீ பிளேன்) விமானமொன்றின்மூலம் வன்னிப் பகுதியிலுள்ள இரணைமடுக்குளத்தில் வந்து இறங்கினர். அவர்களை திரு. பிரபாகரன் அவர்கள் மனைவியார் சகிதம்சென்று வரவேற்று வன்னிக்கு அழைத்துச்சென்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

அதன்பின்னர் 2002ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ந் திகதி திரு. பிரபாகரன் அவர்களின் ஏற்பாட்டில் சர்வதேச பத்திரிகையாளர் மாநாடு ஒன்று வன்னியில் கூட்டப்பட்டது இப்பத்திரிகையாளர் மாநாட்டிற்கு உலகின் பல பாகங்களிலிருந்தும் ஊடகவியலாளர்கள் தொலைக்காட்சி நிறுவனங்கள் போன்றவை வன்னிக்கு படையெடுத்தன இந்நிலையில் ஏற்கனவே பத்திரிகையாளர் மாநாடு நடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த இடம் திடீரென வேறு இடத்திற்கு மாற்றப்பட்டதுடன் மாநாட்டிற்கு சென்ற அனைவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை ஏறக்குறைய 500ற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் சென்றிருந்தபோதும் சிலருக்கு மாநாட்டில் பங்குபற்றக்கூடிய வாய்ப்புகள் கிடைக்கவில்லை அத்துடன் சுயவிருப்பத்துடன் அழைப்புவிடுக்கப்பட்டு கூட்டப்பட்ட மாநாட்டில் திரு. பிரபாகரன் அவர்களின் சுயபாதுபாப்புகாரணமாக அனுமதி மறுக்கப்பட்டதாக காரணம் கூறப்பட்டது. மாநாட்டிற்குச்சென்ற ஊடகவியலாளர்களை கூட்ட மண்டபத்திற்கு அனுப்புவதற்கு முதல் 7 மணித்தியாலங்கள் அவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார்கள் ஊடகவியலாளர்களால் ஆங்கிலமொழியில் முன்வைக்கப்பட்ட பலதரப்பட்ட வினாக்களுக்கும் திரு. அன்ரன் பாலசிங்கத்தினூடாகவே விடையளிக்கப்பட்டமை மாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது மாநாட்டில் உரையாற்றிய திரு. பிரபாகரன் அவர்கள் கூறும்போது இந்திய அரசாங்கத்தின் உதவியை நாம் நாடுகின்றோம் எமது மக்கள் இந்தியாவையும் அதன் மக்களையும் நேசிக்கின்றார்கள் நாங்கள் இந்திய உபகண்டத்துடன் இனரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் பிணைக்கப்பட்டுள்ளோம் இந்தியா எங்கள் தாய்நாடு அத்துடன் சமாதானப் பேச்சுக்களும் இந்தியாவிலேயே நடைபெறவேண்டுமென விரும்புகின்றோம். இப்படி வேண்டுகோள் விடுத்தார்.

சர்வதேச பத்திரிகையாளர்களுடனான மாநாடு நடந்து முடிந்தபின்னர் 12.4.2002ல் தமிழத் தேசிய ஒற்றுமை முன்னணியினருடனும் 13 ந் திகதி ஸ்ரீ.ல. முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் சந்திப்பு நடாத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது கிழக்குமாகாணத்தில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக புலிகளினால் மேற்கொள்ளப்படும் வன்முறைகள் பற்றிக் கலந்துரையாடியதுடன் 1991ம் ஆண்டு காலப்பகுதியில் வடமாகாணத்திலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு அரசாங்கமும் தாங்களும் மேற்கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலாக்கப்பட்டதும் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாக நல்லதோர் தீர்வினை



படிப்பகம்

www.padippakam.com

இருசாராரும் இணைந்து செயற்படுத்துவதாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸின் தலைவர் திரு. ரவூப் ஹக்கீம் அவர்களுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்குமிடையில் ஓர் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

அடுத்த நாளான 14ந் திகதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகளுடனும் மலையக மக்கள் முன்னணியின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டது. இச்சந்திப்பின்போது வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுகள் முன்வைக்கப்படும்போது மலையக மக்களின் பிரச்சினையும் உள்ளடக்கப்பட்டு ஒரே நேரத்தில் அனைவரினதும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென மலையகப் பிரதிநிதிகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை புலிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் அத்துடன் வடக்கு கிழக்கிற்கு அப்பால் தமிழ் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளான மலையகம், கொழும்பு போன்ற பகுதிகளில் விடுதலைப் புலிகளின் அரசியல் அலுவலகங்களை ஆரம்பிப்பது பற்றியும் ஆராயப்பட்டதாக செய்திகள் வெளியாகின.

## இணக்க அரசியலின் மூலம் கிழக்கின் அபிவிருத்தியில் சாதனை படைத்த சந்திரகாந்தன்.



**உதாரணத்திற்காக இப் படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல அபிவிருத்திப் பணிகள் கிழக்கில் முன்னெடுக்கப்பட்டமையை நேரில் விஜயம் செய்து பார்ப்பதன் மூலம் அனைவரும் விளங்கிக் கொள்ளலாம்.**

இன்று தமிழ் மக்களின் தலைவர்கள் தாமே என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் முன்னாள் பயங்கரவாதியான பிரபாகரனால் உருவாக்கப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கு ஆற்றும் பணி ஏதேனும் உண்டா? 27.01.2001 முதல் 18.05.2009 வரை திரு. பிரபாகரன் அவர்களினால் இடப்படும் கட்டளைகளை சிரம்மேல் சுமந்ததன் மூலம் பாராளுமன்ற பதவிகளை தமது சொந்த நலனுக்காக பயன்படுத்தியவர்கள் பிரபாகரன் அவர்களின் மறைவினையடுத்து திடீரென தமது கடந்தகால அரசியல் நடவடிக்கைகளுக்கு புதிய மூலாம் பூசினர். பிரபாகரன் அவர்களின் மரணம் அவர்களின் எதிர்கால அரசியலுக்கு மேலுமொரு புதிய ஆளுமைக்கு அரணமைத்தது. பிரபாகரனின் 30 ஆண்டுகால ஆயுத வன்முறையின் செயற்பாடுகள் இலங்கை வாழ் மக்களின் பொருளாதாரத்தில் (29ரில்லியன்) ரூபாய்களை இழப்பதற்கான வழிவகைகளை உருவாக்கியது. மேற் குறிப்பிடப்பட்டுள்ள தொகை இலங்கை மக்களுக்குச் சொந்தமான சொத்துக்களின் அழிவின் மூலம்மட்டுமே இழக்கப்பட்ட தொகையாகும். மேற்படி முப்பது ஆண்டுகாலப் பகுதியில் இலங்கையின் உற்பத்தித் துறைகளில் ஏற்பட்ட பாதிப்புக்களினால் இழக்கப்பட்ட பொருளாதாரம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகையினைவிட பல மடங்கு அதிகம் என்பது வரலாற்றுரீதியான அரச திணைக்கள புள்ளி விபரங்கள் வெளிக்காட்டியுள்ளன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சிக்கு ஆட்சியில் அமர்ந்திருந்த அரசாங்கங்கள் எவ்வாறு பங்களித்தார்களோ அதேபோன்ற சமமான பங்களிப்பினை மேற்கொண்டவர்களில் பெரும்பங்கு தமிழீழ விடுதலைப புலிகளுக்கும், ஏனைய ஆயுத அமைப்புக்களுக்குமே உரியதாகும். தமிழ் மக்கள் மத்தியில் தவறான தகவல்களை வெளிக்காட்டும் ஊடகங்களின் செல்வாக்கு புலிகளின் அதிகாரம வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைத்திருந்த காலம் முதல் இன்றுவரை அவ் ஊடகங்களின பொய்யுரைகள் தொடர்வதனாலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் இனவாத அரசியல் தொடர்வதனாலுமே பெரும்பான்மை இனத்தவர்களின் அச்சம் காரணமாக நாட்டில் நிலையான சமாதானம் உருவாவதற்கு தடையேற்பட்டுள்ளது.

சமாதானம், இன ஒற்றுமை என்பன தனியாக ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசாங்கத்தினால் மட்டும் நடைமுறைப்படுத்தும் விடயமல்ல. அதேவேளை ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசாங்கமும், தமிழர் தரப்பினரும் ஒன்றிணைந்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் ஐயப்பாட்டினை அகற்றுவதற்கான நடவடிக்கைகளை இதய சுத்தியுடன் முன்னெடுப்பதன் மூலமே இலங்கையில்



படிப்பகம்

www.padippakam.com

நிரந்தர சமாதானம், சமத்துவம் போன்ற மனிதப் பண்புகளும், அமைதியான வாழ்க்கையும் உருவாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரையில இன்று கிழக்கில் இன இணக்கப்பாடுகள் தொடர்பான செயற்பாடுகள் பாரிய அபிவிருத்தியினை அடைந்துள்ளமையை மேற்படி மாகாணத்தில் மூவின மக்களும் வாழும் பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொண்டு அவதானித்தால் விளங்கிக்கொள்ள முடியும். அத்துடன் இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியான (1948ம்) ஆண்டு முதல். கிழக்கில் இடம்பெறாத அபிவிருத்திப் பணிகள் கடந்த நான்கு ஆண்டுகாலப்பகுதியில் பாரிய அபிவிருத்தியினை அடைந்துள்ளது. இந்நிலையில் இன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் ஒவ்வொரு அரசியல் நகர்வுகளும் கிழக்கிலிருந்து கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சரையும் வடக்கிலிருந்து திரு. டக்ளஸ் தேவானந்தா அவர்களையும் அரசியலில் இருந்து எவ்வாறு அகற்றுவது என்பதே அவர்களின் அன்றாட முயற்சியாக முன்னுரிமை பெற்றுள்ளது.

அதற்கான கூட்டணி ஒன்றினை ஐக்கிய தேசியக் கட்சியினருடன ஏற்படுத்திக் கொள்வதன் மூலமே அதனை அடையலாமென கனவு காண்கின்றனர். இதுபோன்ற நடவடிக்கை ஒன்றின்மூலமே ஏற்கனவே இணைந்திருந்த (1987ல்) வடக்கு கிழக்கு மாகாண சபைகள் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சியினரின் ஜனாதிபதியான திரு. பிரேமதாசா அவர்களால் கலைக்கப்பட்டமை வரலாறாகும்.

மேற்படி சம்பவங்களுக்கமைய கடந்த (10.05.2008ல்) இடம்பெற்ற கிழக்கு மாகாண சபையின் முதலாவது தேர்தலில ஐ.தே.கட்சியினருடனும், ஸ்ரீ.ல. முஸ்லிம் காக்கிரஸினருடனும் இணைந்து கிழக்கு மாகாண சபையின் நிர்வாகத்தினை ஐக்கிய தேசியக் கட்சியினரிடம் கையளிப்பதற்கான முயற்சியில் திரு. இரா சம்பந்தன் அவர்கள் தீவிரமாக முயன்றபோதும் அம்முயற்சி தோல்வியிலேயே முடிவுற்றது. இச்சம்பங்களின் மூலம் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அரசியல் பிரவேசம் தமிழ் மக்களின் நலன்சார்ந்தது அல்ல என்பதனை தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. இலங்கையில தமிழ் பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளின் தலைவர்களான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் மற்றும் எம்.எச்.எம். அஷ்ரப் போன்ற



படிப்பகம்

www.padippakam.com

தலைவர்கள் மக்கள் மத்தியிலும், ஏனைய அரசியல்வாதிகளின் மத்தியிலும் (கிங் மேக்கர்கள்) என்னும் பெருமைக்குரியவர்களாக வாழ்ந்த நிலையில் தமிழ் தேசியக கூட்டமைப்பின் தலைவரான திரு. சம்பந்தன் அவர்களுக்கு மட்டும் (Money Maker) என்னும் பட்டம் வழங்கப்பட்டுள்ளமைக்கான காரணம் அவரின் மக்கள் நலன்சாராத அரசியலின் வெளிப்பாடே!

மேற்கூறப்பட்டுள்ள உண்மைச் சம்பவங்கள் அனைத்தும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் அறிதலுக்கு கொண்டு செல்லப்படும் பட்சத்திலேயே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் நாடக அரசியலுக்கு முற்றுப் புள்ளிவைத்து தமிழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வகைசெய்ய முடியமென்பதே எமது கருத்தாகும்.

## அமரர் தொண்டமானின் அரசியல் சாதனைகள்.



இலங்கை அரசியல் வரலாற்றில் தமது 87 வயதுவரை இந்திய வம்சாவளியினரான மலையக மக்களுக்குமன்றி தேசிய அரசியலிலும் தம்மை இணைத்து அனைத்து இன மக்களுடனும் இணைந்து அரசியலில் பணியாற்றிய பெருமை திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களையே சாரும். கடந்த நூற்றாண்டின் மிக முக்கிய அரசியல்வாதிகளில் ஒருவராகவும், தோட்ட உரிமையாளராகவும், நாட்டில் இடம்பெற்றுக் கொண்டிருந்த இன வன்மறையினை முடிவிற்கு கொண்டுவரும் நோக்குடன் சமாதானத்திற்கு உழைப்பவராகவும் பல துறைகளிலும் அவர் பங்காற்றினார். அரசியலிலும், சமூக வாழ்விலும் முக்கிய பங்கை இவர் வகித்துள்ளார். இவரின் 60 வருட அரசியல் வாழ்வில் பெரும் சாதனைகளை அவர் சாதித்திருக்கின்றார். வருங்கால சரித்திர வியலாளர்கள் அமரர் தொண்டமான் அவர்கள் இந்நாட்டு அரசியல் அபிவிருத்தியில் ஆற்றிய பங்கினை ஒரு போதும் மறந்துவிடமாட்டார்கள்.

1940ம் ஆண்டு முதல் அரசியல் அரங்கில் அவர் சக்திவாய்ந்த முக்கியஸ்தராக விளங்கி வந்துள்ளார். இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் 1950ம் ஆண்டளவில் தீவிர தேசியவாதக் கொள்கைகள் ஆரம்பிக்கத் தொடங்கின.



படிப்பகம்

www.padippakam.com

இதனால் இனவாத நெருப்பு கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியதுடன் அரசியல் கலாச்சாரத்தில் இனவாத நெருப்பை இன்றும் அணைக்கமுடியாத நிலை உருவாகியுள்ளது. இனவாத நெருப்பு எரிவதற்கு தயாரானபோது அதற்கு எரிபொருளை ஊற்றி விசாலமாக எரிவதற்கு துணைபோனவர்கள் வடமாகாணத்தைச் சேர்ந்த அதிமேதகு சட்ட வல்லுனர்களில் ஒரு சாராரும் ஏனைய சிறுபான்மையினத்தவர்களும் என்பதே வரலாறாகும். அன்று மலையக மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினை பாராளுமன்றத்தில் சிறுபான்மையினர் ஏகோபித்த ஆதரவுடன் எதிர்த்து வாக்களித்திருப்பின் அதனைத் தொடர்ந்து சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சிங்கள அரச கரும மொழிச் சட்டம் மற்றும் தரப்படுத்தல் போன்ற எந்தவொரு சட்டமூலமும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்க மாட்டாது.

அன்று மலையக மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட (6) தமிழ் பிரதிநிதிகளும் மலையக மக்களின் ஆதரவுடன் தெரிவான இடதுசாரிக் கட்சிகளின் (10) பத்து உறுப்பினர்களினதும் ஆதரவினை தமிழர் தரப்பினர் தொடர்ந்தும் தமது பக்க ஆதரவாளர்களாக தக்கவைத்து இணக்கப் பாட்டுடனான அரசியலை தொடர்ந்திருப்பின் வரலாறு பெரும்பான்மை இனத்தவர்களின் மத்தியில் முளைவிட்ட இனவாதம் பூண்டோடு கருகியிருக்கும். உதாரணமாக அன்றைய வெலிமட தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான கே.எம்.பி ராஜரத்னா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது தோட்டக்காட்டானின தோலை உரித்து செருப்புத் தைத்து அணிவேன் என முழக்கமிட்டார் அவரின் அரசியல் வரலாறு எவ்வாறு அற்றுப்போனது அதேபோன்ற இனவாதியான ஆர்.ஜி சேனநாயக்கா போன்றோரெல்லாம் அரசியலிலிருந்து அஸ்த்தமனமானதாக வரலாறுகள வெளிக்காட்டியுள்ளன.

நாடற்றவர்கள் என்னும் நிலைக்கு இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் தள்ளப்பட்டனர் 1948ம் ஆண்டு ஆட்சியில் அமர்ந்திருந்த ஐக்கிய தேசியக் கட்சியினராலேயே அம்மக்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள் ஆனாலும் பின்னர் அதே ஐக்கிய தேசியக் கட்சி மூலமாகவே இந்திய வம்சாவளியினரின் நாடற்றவர் என்னும் நிலை நீங்கி அனைவருக்கும் பிரஜாவுரிமை பெறமுடிந்தது. இச்சாதனையினை திரு. தொண்டமான் அவர்களே அவரது அரசியல் சாணக்கியத்தின்மூலம் செய்து முடித்தார்.



படிப்பகம்

www.padippakam.com

ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனாக இலங்கைக்குள் காலடிபதித்த திரு. தொண்டமான் அவர்கள் இலங்கைத் தமிழ் மக்களின் முக்கிய தலைவர்களௌன கருதப்பட்ட திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் திரு. எஸ்.ஜே.வி செல்வநாயகம் போன்றோரின் வரிசையில் மூன்றாவது தலைவராக இடம்பிடித்த போதும் அவரால் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சாதனையாளர்கள் பட்டியலில் திரு. தொண்டமான் அவர்களே முதன்மை பெற்றார். அவரால் அவரது மக்களுக்கு அரசியல் ரீதியாக ஆற்றிய ஒரு படியையேனும் தாண்டுவதற்கு தமிழ் தலைவர்களால் முடியவில்லை என்பதே யதார்த்தமாகும்.

இதனடிப்படையிலேயே பழைய பாராளுமன்றக் கட்டிடத்தின் முன்னால் பெரும்பான்மை இன மக்களின் அரசியல் தலைவர்களௌன கருதப்பட்டு சிலை அமைக்கப்பட்டுள்ள அதே இடத்தில் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் உருவச் சிலையும் கம்பீரமாக இன்று காட்சியளிக்கின்றது.

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முதலாவது தலைவர் திரு. குமாரசாமி நந்தகோபன் அவர்களின் அரசியல் செயற்பாடுகள்.

திரு. குமாரசாமி நந்தகோபன் அவர்கள் 12.02.1970 ல் திருகோணமலையில்



பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியினை திருமலை புனித சூசையப்பர் கல்லூரியில் கற்றதன் பினனர் தமது இடைநிலைக் கல்வியினை யாழ் இந்துக்கல்லூரியில் தொடர்ந்தார். அதனைத் தொடர்ந்து தமது உயர் நிலைக் கல்வியினை மட்டக்களப்பு சிவானந்தா கல்லூரியில் தொடர்ந்த நிலையில் மொரட்டுவ பல்கலைக் கழகத்தில் (Nautical Engineering) தொடர்பான கல்வியினை நிறைவு செய்துவிட்டு அவுஸ்திரேலியாவிற்கு இடம்பெயர்ந்த நிலையில் இலங்கையில் கிழக்கு மாகாணத்திற்கென தனியான நிர்வாகம் ஒன்று ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை உருவானதற்கமைய மீண்டும் தமது தாய் நாட்டின் முன்னேற்றத்திற்காக உழைக்கும் நோக்குடன் தாயகம் திரும்பினார்.



படிப்பகம்

www.padippakam.com

இந்நிலையில் திரு. சந்திரகாந்தன் அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி கிழக்கின் தனித்துவத்தினை முன்வைத்து உருவாக்கப்பட்ட முதன்முதல் அரசியல் கட்சியான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவராக தனது அரசியல் பணியில் காலடி பதித்த அவர் மூதூர் கிழக்கில் அமைந்துள்ள கட்டைபறிச்சான் என்னும் கிராமத்திலிருந்து இராணுவ நடவடிக்கையின்போது வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களின் மீள் குடியேற்றத் திற்கான முயற்சியில் களமிறங்கி அதில் பாரிய வெற்றியினை தமதாக்கினார்.

இந்நிலையிலேயே 14.11.2008ந் திகதியன்று கொழும்பு அத்துருகிரிய என்னுமிடத்தில் வைத்து அன்னாரை இனவாதி ஒருவன் சுட்டுக் கொலை செய்தான். அவர் மரணித்தாலும்கூட அன்னாரின் மனிதநேய செயற்பாடுகள் மக்களின் மனதிலிருந்து நீங்கமாட்டாது என்பதே யதார்த்தமாகும்.



படிப்பகம்

www.padippakam.com

## 1947ம் ஆண்டு முதல் இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதமர்களாக பதவிவகித்த பிரதமர்களின் பதவிக்காலம்

| | முதல் | வரை |
|---|---|---|
| **முதலாவது பாராளுமன்றம்** | 24.09.1947 | 08.04.1952 |
| திரு. டி.எஸ் சேனநாயகா | 24.09.1947 | 22.03.1952 |
| திரு. டட்லி சேனநாயக்கா | 26.03.1952 | |
| **இரண்டாவது பாராளுமன்றம்** | 09.06.1952 | 18.02.1956 |
| திரு. டட்லி சேனநாயகா | 09.06.1952 | 12.10.1953 |
| சேர் ஜோன் கொத்தலாவல | 12.10.1953 | 12.04.1956 |
| **மூன்றாவது பாராளுமன்றம்** | 16.04.1956 | 05.12.1959 |
| எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயகா | 12.04.1956 | 26.09.1959 |
| திரு.டபிள்யு தகாநாயக | 26.09.1959 | 20.03.1960 |
| **நான்காவது பாராளுமன்றம்** | 30.03.1960 | 23.04.1960 |
| திரு. டட்லி சேனநாயகா | 21.03.1960 | 21.04.1960 |
| **ஐந்தாவது பாராளுமன்றம்** | 05.08.1960 | 17.12.1964 |
| திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | 21.07.1960 | 25.03.1965 |
| **ஆறாவது பாராளுமன்றம்** | 05.04.1965 | 25.03.1970 |
| திரு டட்லி சேனநாயக்கா | 25.05.1965 | 25.03.1970 |
| **ஏழாவது பாராளுமன்றம்** | 07.06.1970 | 22.05.1972 |
| முதலாவது தேசிய அரசுப்பேரவை | 22.05.1972 | 18.05.1977 |
| திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | 22.05.1972 | 18.05.1977 |
| இரண்டாவது தேசிய அரசுப்பேரவை | 04.08.1977 | 07.09.1978 |
| ஜே.ஆர் ஜனாதிபதியாக பதவி ஏற்பு | 04.02.1978 | 02.08.1989 |
| பிரதமராக பிரேமதாசா பதவி ஏற்பு | 07.09.1978 | 02.09.1989 |

### மாவட்ட அடிப்படையிலான விகிதாசார பிரதிநிதித்துவ நடை முறையின்கீழ்

| | | |
|---|---|---|
| **முதலாவது பாராளுமன்றம்** | 09.03.1989 | 24.06.1994 |
| திரு. டி.பி விஜயதுங்க | 09.03.1989 | 07.05.1993 |
| திரு. ரணில் விக்கிரமசிங்கா | 07.05.1993 | 24.06.1994 |
| **இரண்டாவது பாராளுமன்றம்** | 19.08.1994 | 09.08.2000 |
| திருமதி. சந்திரிகா குமாரணதுங்க | 19.08.1994 | 14.11.1994 |
| திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா | 14.11.1994 | 09.08.2000 |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா | 10.08.2000 | 07.12.2000 |
| | | |
| மூன்றாவது பாராளுமன்றம் | 09.12.2001 | 07.02.2004 |
| திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா | | |
| | | |
| நான்காவது பாராளுமன்றம் | 04.04.2004. | 19.11.2005 |
| திரு. மஹிந்த ராஜபக்ஸ | 04.04.2004 | 19.11.2005 |
| திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் ஜனாதிபதியாக தெரிவானார் | 19.11.2005 | |
| திரு. ரத்னசிறி விக்கிரமநாயக்கா | 19.11.2005 | 20.04.2010 |
| | | |
| ஐந்தாவது பாராளுமன்றம் | 09.04.2010 | |
| திரு. டீ.எம். ஜயரத்ன | | |

பாராளுமன்ற பெரும்பான்மையின் மூலம் தெரிவான முதலாவது ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனா

| | | |
|---|---|---|
| முதலாவது ஜனாதிபதி தேர்தல் | 17.09.1982 | |
| ஜே.ஆர். ஜயவர்தனா | 04.02.1978 | 02.01.1989 |
| | | |
| இரண்டாவது ஜனாதிபதித் தேர்தல் | | |
| ஆர். பிரேமதாசா | | |
| | | |
| மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் | 09.11.1994 | |
| திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா | 12.11.1994 | 19.11.2005 |
| | | |
| நான்காவது ஜனாதிபதித் தேர்தல் | 21.12.1999 | |
| திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா | | |
| | | |
| ஐந்தாவது ஜனாதிபதித் தேர்தல் | 17.11.2005 | |
| திரு. மஹிந்த ராஜபக்ஸ | | |
| | | |
| ஆறாவது ஜனாதிபதித் தேர்தல் | 26.01.2010 | |
| திரு. மஹிந்த ராஜபக்ஸ | | |



படிப்பகம்

www.padippakam.com

# நிகழ்வுகளின் நினைவுகள்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை திரு. மஹிந்த ராஜபக்ஸ அவர்களிடம் முன்னாள் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க அவர்கள் கையளித்த நிகழ்வு.



திருமதி சந்திரிகா குமார துங்க அவர்களின் அரசாங்கத்தில் பிரதமராக பதவியேற்கும் திரு. மஹிந்த ராஜபக்ஸ.



26.01.2010இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மீண்டும் வெற்றியீட்டிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அவர்கள் தமது இரண்டாவது பதவிக்கான சத்தி யப்பிரமாணத்தை மேற்கொள்ளும் நிகழ்வு.




படிப்பகம்

www.padippakam.com



1970ம் ஆண்டு முதல் 1977ம் ஆண்டு வரை மூதூர் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலப் பகுதியில் சட்டத் தரணிக்குரிய பகுதி நேரக் கல்வியை தொடர்ந்த திரு. தங்கத்துறை அவர்கள் 1980ம் ஆண்டு ஜனவரி மாதம் அதற்கான பரீட்சையில் சித்தியடைந்து தமது நெருங்கிய நண்பர்கள் சிலருடன் சட்டத்தரணிக் கான சத்தியப் பிரமாணத்தினை மேற் கொண்ட நிகழ்வு.



1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ந் திகதி முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடி நகரில் அமைந்துள்ள இரு பள்ளி வாசல்களில் ஆயுதங்களுடன் நுழைந்த விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சுட்டுக் கொள்ளப்பட்ட இளம் வயதினரும் குழந்தை களும் உட்பட 103 சுஹதாக் களின் மையத்துக்கள்.



1990ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03ந் திகதி முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் காத்தான்குடி நகரில் அமைந்துள்ள இரு பள்ளி வாசல்களில் ஆயுதங் களுடன் நுழைந்த விடுதலைப் புலிகளின் ஆயுததாரிகள் தொழுகையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை சுட்டுக் கொள்ளப்பட்டவர்களின் சடலங்கள்.



படிப்பகம்

www.padippakam.com



தென்கிழக்காசியாவிற்கான அமெரிக்க வெளியுரவு இராஜாங்க உதவி அமைச்சர் திரு. ரொபட் ஓ பிளக் அவர்களை சந்தித்து கிழக்கின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலை மேற்கொண்ட நிகழ்வு.



மூதூர் கிழக்குப் பிரதேசமான சம்பூர், கட்டைபறிச்சான் போன்ற பகுதிகளில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தும் நிகழ்வு தொடர்பாக அம்மக்களை நேரடியாகச் சென்று சந்தித்து ஒருமாதகால இடைவெளியில் கட்டைபறிச்சானைச் சேர்ந்த அனைவரும் அங்கு குடியேற்றப்பட்டனர். அந் நிகழ்வின் போது பொதுமக்களுடன் முதலமைச்சர் சந்திரகாந்தனும் ரகு என்று அழைக் கப்படும் நந்தகோபனும் இணைந்த காட்சி.



மேற்படி கட்டைபறிச்சானில் இடம்பெற்ற குடியேற்ற நிகழ்வைத் தொடர்ந்து குறுகிய கால இடைவெளியில் கொழும்பு அத்துருகிரியவில் வைத்து அடையாளந் தெரியாத ஆயுததாரிகளால் 14.11.2008ந் திகதி சுட்டுக்கொல்லப்பட்ட நந்தகோபனின் உடலை முதலமைச்சர் சந்திரகாந்தன் நேரில் சென்று பார்வையிடும் காட்சி.



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை அரசியல் வரலாறு - இழப்புகளும் பதிவுகளும்

வாசகர்களின் அறிதலுக்கு.

இன்றுவரை வெளியான இலங்கை அரசியல் வரலாறு தொடர்பான நூல் வெளியீடுகளில் நாம் புதியதோர் நடைமுறையினை இங்கே அறிமுகப்படுத்தியுள்ளோம். எம்மால் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள "இலங்கை அரசியல் வரலாறு – இழப்புகளும் பதிவுகளும்" என்னும் நூல் தொடர்பான வாசகர்களின் விமர்சனங்கள், வினாக்கள், மேலதிகமாக அறிந்துகொள்ள விரும்பும் அரசியல் பற்றிய தகவல்கள் போன்றவற்றினை வழங்குவதற்கும் நாம் தயாராகவுள்ளோம்.

குறிப்பு: மேற்கூறிய விடயங்களை தெரிவிப்பவர்களும் அறிந்துகொள்ள விரும்புபவர்களும் பின்வரும் நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டியது கட்டாயமாகும்.

1. வாசகரின் முழுப்பெயர்.

2. வாசகர் வசிக்கும் நாடு மற்றும் நகரம்.

3. மின்னஞ்சல் முகவரி போன்ற அனைத்து தகவல்களையும் தெளிவாக தெரிவிப்பவர்களின் கருத்துக்களுக்கு மட்டுமே விடையளிக்கப்படும். அனாம தேகிகளால் விடுக்கப்படும் எந்தவித தகவல்களுக்கும் பதிலளிக்கப்பட மாட்டாது என்பதனை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்.

வினாக்களை விடுக்க விரும்புபவர்கள் kumarathurai@kumarathurai.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு தங்களின் தேவைகள் அனைத்தையும் தெரிவிக்கலாம் என்பதனையும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

ஆசிரியர்
இலங்கை அரசியல் வரலாறு – இழப்புகளும் பதிவுகளும்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

திருகோணமலை மாவட்டம் கிளிவெட்டி கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்ட குமாரதுரை அவர்கள் 25.05.1939 பிறந்தவர். தனது சிறுவயது முதற் கொண்டே தமிழரசுக் கட்சி அரசியல் சூழலில் வளர்ந்த இவர் கிழக்கிலங்கையின் முதுபெரும் அரசியல்வாதியான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்களின் உடன்பிறந்த சகோதரர் ஆவார்.

ஆயுதப்போராட்டம் உருக்கொண்ட காலங்களில் இலங்கை இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இவர் பல சித்திரவதைகளை அனுபவிக்க நேர்ந்தது. 1975–1976 ஆம் ஆண்டுகளில் சுமார் 11 மாதங்கள் மட்டக்களப்பு சிறையிலும் 1984 – 1986 ஆம் ஆண்டு காலகட்டத்தில் சுமார் இரண்டுவருடங்கள் வெலிக்கடைச் சிறையிலும் அடைக்கப்பட்டிருந்தார்.

1986 ஆம் ஆண்டு இலங்கையைவிட்டு வெளியேறி டென்மார்க்கில் அரசியல் தஞ்சம்கோர நேர்ந்த வேளையிலும் பொது அரசியல் வாழ்வில் இருந்து தன்னை விலக்கிக்கொள்ள அவரால் முடியவில்லை. மிதவாத, ஆயுதப்போராட்ட தலைமைகளாக இருந்த பல தமிழ் தலைவர்களுடன் நெருங்கி பழகிய, செயற்பாட்ட அனுபவங்கள் நிறைந்த இவர் இன்றுவரை தமிழ் பேசும் மக்களின் விடிவிற்காக ஓயாது உழைத்து வருபவர். ஐரோப்பிய வானொலிகளில் இடம்பெறும் அரசியற் கருத்தாடல்களில் இவரது சிம்மக்குரல் புகலிடத் தமிழர்களிடையே மிகவும் பரிச்சயமானது. முகவரி இல்லாத பலநூறு இணையத்தளங்களுக்குள்ளும் சொந்தப் பெயருடன் எழுதிவரும் வெகு சிலரில் இவரும் ஒருவர். அதுமட்டுமன்றி கடந்த சில வருடங்களாக இலங்கையின் அரசியல் களசெயற்பாடுகளில் நேரடியாக தமது பங்களிப்பையும் செலுத்திவரும் குமாரதுரை அவர்கள் எழுதி வெளியிடும் முதலாவது நூல் இதுவாகும்.

எம்.ஆர். ஸ்ராலின்



ISBN:978-955-54357-0-3

படிப்பகம்